
# அக்னி திரவம்

தேவகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

561871

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்னி திரவம்

தேவகாந்தன்

561871

பல்கலைப் பதிப்பகம்
25, தெற்குச் சிவன்கோவில் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AGNI THIRAVAM

*a novel by*

DEVAKANTHAN


| | | |
|---|---|---|
| நூல் | : | அக்னி திரவம் (கனவுச் சிறையின் 3ம் பாகம்) |
| ஆசிரியர் | : | தேவகாந்தன் |
| பொருள் | : | புதினம் |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : | ஆக. 2000 |
| வெளியீடு | : | பல்கலைப் பதிப்பகம் 25, தெற்குச் சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024. |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அளவு | : | 1 x 8 டெம்மி |
| பக்கங்கள் | : | 312 |
| விலை | : | ரூ. 100.00 |
| தாள் | : | 16 கிலோ வெள்ளைத் தாள் |
| கட்டு | : | செக்ஷன் பைண்டிங் |
| அச்சு | : | அலைகள் அச்சகம் சென்னை - 600 024. |
| முகப்போவியம் | : | மார்க் சகால் (ரஷ்யா) |
| பின் ஓவியம் | : | மாக்ஸ் எர்ண்ஸ்ற் (ஜேர்மனி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

# என்னுரை

ஒரு மகா நாவலுக்கு அதன் மூன்றாம் பாகத்திலும்கூட சொல்லவேண்டியவையாய் நிறைய விஷயங்கள் இருந்து கொண்டிருக்குமென்று இப்போது கருதத் தோன்றுகிறது. அது, விஷயங்களின் கொள்கலனாகக்கூடிய என்னுரையின் முக்கியத்துவத்தை முன்னிலும் ஆழமாய் இப்போது என்னைப் புரிந்துகொள்ள வைப்பதாகச் சொல்ல முடியும்.

நாவலின் விமர்சனப் படக்கூடிய அம்சங்களுக்கான சமாதான விளக்கமாகவோ, நாவலில் துல்லியப்படாத / அறவே இல்லாத அம்சங்களை இருப்பதாகச் சாதிக்கும் களமாகவோ முன்னுரையைக் கொண்டுவிடக்கூடாதென்று எனக்குள் ஒரு புரிதல் இருக்கிறது. இந்த வரையறை கடந்துவிடாத அவதானத்தோடு வாசகர்களுடன் பகிர சில விஷயங்கள் உண்டு.

O

ஈழத்து இலக்கியத்தின் தன்மை செல்நெறிகள் அதன்அயலக இலக்கியங்களுடன் சமமாய் ஒப்பிட இயலாத அளவுக்கு தனித்துவமானவை. இது நாவல்களைப் பொறுத்தவரையும்கூட சரியானதுதான். தமிழிலக்கியத்தின் உந்நதம் என்கிற இலக்குநோக்கிய நகர்வே வேண்டப்படுவது என ஏற்கனவே நான் சொல்லியிருப்பினும் இத்தகைய பேதமற்ற கூறுகள் வளர்சிதை மாற்றங்களைத் துல்லியமாய்க் கணக்கிட மிக்க வசதிகளை ஏற்படுத்தக்கூடியனதான். இந்த வகையில் இத் தனித்துவ அடையாளங்களை ஒரு ஞாபக மீட்புப்போல இங்கே ஒருமுறை சொல்லிவைப்பது நல்லதெனவே படுகிறது.

தமிழில் யதார்த்தவகை நாவல்களின் தோற்றம் வளர்ச்சி பற்றிய விசாரிப்பை ஒதுக்கிவைத்துவிட்டு, அதற்கான பங்களிப்புக்களைக் கவனத்தில்கொண்டு பார்த்தால் ஈழத்து நாவல்களுக்கு முக்கியத்துவமான ஓர் இடமிருப்பதை எவராலுமே சுலபத்தில் கண்டுகொள்ள முடியும். வியாபாரார்த்தமான நாவல்களின் தோற்றத்தை முற்றிலுமாய் அது நிராகரித்தது. வாசக பரவலை முக்கிய நோக்கமாகக் கொண்டு நிறுவன வழியில் சில நாவல்கள் வெளிவந்த போதும், அவைகூட சொல்லும்தரமான இலக்கியதாம்சம் பெற்றிருந்தன.

ஆயினும் அதன் தொடர்ந்த வளர்ச்சி ஒரு கட்டுக்குள்ளேயே இருக்கவேண்டியதாயிற்று. படிமுறை வளர்ச்சியை அடைய முடியாததாயிற்று ஏன் அப்படி? அதன் முன்னகர்வைத் தடுத்ததெது? சிலரால் சொல்லப்பட்டதுபோல் யதார்த்தவகையானது ஒரு தடுப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவராகவே இருந்து அதன்மீது பாதிப்பை ஏற்படுத்தியதா? யதார்த்தவகைக் கோட்பாட்டை உடைப்பதின் மூலமாகவேதான் ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் பொற்காலம் கண்டடையப்படுதல் கூடுமா? இவ்வாறு பல்வேறு கேள்விகள் என்னுள் சுழித்துக் கிளம்புகின்றன.

இலக்கிய வரலாற்றுப் போக்குப்பற்றிய நிர்ணயங்களையும், விமர்சன நெறிகளையும் முன்னெடுத்த அளவுக்கு படைப்பிலக்கிய முயற்சிகள் ஈழத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்ற உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். தோற்றம் பெற்றவையும் கலாநேர்த்தி குறித்த விஷயங்களில் பின்னடைவு கண்டுவிட்டன. நம் மனத்தை ஆக்கிரமிப்புச் செய்திருந்த விமர்சன அக்கறை படைப்பிலக்கியத்தின்மேல் ஒரு வரட்சியையும் சிருஷ்டித்தனத்தின் போதாமையையும் உருவாக்கியது என்பதை அதற்கான ஒரு காரணமாகச் சொல்லலாமென்று இப்போது நான் நினைக்கிறேன்.

நம் அனுபவங்களும் அறிவுத் தளங்களும் மிக்க வளமானவை. வணிக மயப்படாத படைப்பிலக்கிய முயற்சியொன்று என்றும் நம் உரிமையாக இருந்து வந்திருக்கிறது. தீவாம் தன்மையால் ஏற்பட்ட நம் அடையாளங்கள் மிக்க அற்புதமானவை. நம் நாட்டார் வழக்காறும் உரையாடல்களும் மொழிகளுக்கான உச்சவளம் பெற்றிருக்கின்றன. இவை படைப்பின் வீச்சுக்கு மிக்க உறுதுணை செய்பவை. இருந்தும் வீச்சான படைப்புகளுக்காக இன்னும் நம் காத்திருப்பு நீள்கிறது. ஈழத்து தமிழ்ப் படைப்பின் விமர்சனம் பல்கலைக் கழக மட்டங்களுள் அடங்கிவிட்டமையை இக் காத்திருப்பின் காரணமாகக் கொள்ளமுடியுமா? மு. த. போன்ற சிந்தனை வளமும் சிருஷ்டித் திறனும் மிக்கவர்களதும் க. கை. போன்ற அறிவு வளம் மிக்கவர்களதும் நடுத்தர வயதுக்கு முன்பான மறைவுகளை இதன் இன்னொரு காரணமாகச் சொல்ல முடியுமா? இவைபற்றி நாம் சிந்தித்தாக வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம்.

வல்லபம் வாய்ந்த சிருஷ்டிகளும் அற்புதமான பிரதியாக்கங்களும் புதிய தசாப்தத்தில் உருவாகக்கூடிய நம்பிக்கைகள் வெகுத்துள்ளன. விமர்சகர் மத்தியிலும் வாசகர் மத்தியிலும் பெருவரவேற்புப் பெற்ற ஆசிரியர் பெயர் இல்லாது வெளிவந்த ***போர்உலா*** போன்ற நூல்கள்... செறிவும் சிருஷ்டிபர முயற்சிகளும் உள்ளடங்கி வெளிவந்துள்ள ***நோயுற்றிருத்தல்*** போன்ற நாவல்கள்... நம் நம்பிக்கையின் ஆதாரங்களாக நிற்கின்றன. இன்னும் புலம்பெயர்ந்தோர் மத்தியிலும் நிறைய படைப்புக்கள். நாம் நம் முகங்கள் நோக்கித் திரும்பவேண்டிய தருணம் இது. நம் முகங்களையே நாம் புறக்கணித்துக்கொண்டு நமக்கான அடையாளத்தைத் தாபித்துவிட முடியாது.

தனக்கென ஒரு வாசகனின்றி ஒரு படைப்பு என்றும் உருவாவதில்லை. வாசகர்களைக் கவனம் கொள்ளாத படைப்புகள் என்பது மாதிரியான பிரஸ்தாபம் இனி வேண்டாம். அரசியல் தளங்களூடாக இலக்கியத்தை நோக்குதல் தக்க செயற்பாடு அல்ல. அதை அதுவாகவே பாவித்துவிடவேண்டும். இலக்கியம் அதற்கான நோக்கத்தைச் சாதித்தால் போதுமென்பதே என் கருத்தாக என்றும் இருந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் யாதார்த்தவாதம்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். வெளியுலகின் சிருஷ்டிபர முயற்சிகள் முழுதாகத் தெரியாது போய்விட்டது. நவீனயதார்த்தம்பற்றிய பிரஸ்தாபம் ஒன்று தமிழிலக்கியச் சூழலில் இப்போது தலைகாட்டியுள்ளது. யதார்த்தத்தை அதன் உச்சபட்ச தளத்துக்கு சில புதிய வகை எழுத்துகளின்மூலமும் உத்திகளின் கண்டடைவு மூலமும் எடுத்துச் செல்லக்கூடிய சாத்தியப்பாட்டை இது கருத்தில் கொண்டுள்ளதாக நாம் விளக்கம் கொள்ளலாம். இதை (Post - Realism) பின் யதார்த்தவாதம் என்று சொன்னாலும் தப்பில்லை. எதையும் சட்டங்களினூடாக அல்ல, வரைவுகளினூடாக அணுகுதலே தக்கது. இலக்கியம் நிச்சயமாக இவ்வாறே அணுகப்படவேண்டும்.

O

***கனவுச் சிறை*** நகரும் காலத்தைப் பிரதானப்படுத்தி ஐந்து பாகங்களில் எழுதி முடிக்கப்பட்ட நாவல். அதன் இரண்டு பாகங்களே இதுவரை வெளிவந்துள்ளன. இலக்கு வெளியீடாக இவை வெளிவர உதவியவர்கள் வாசகர்களும் நண்பர்களுமேயாவர். முக்கியமான சிலரை நான் அந்தந்த பாகங்களிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனாலும் மொத்தமான இந்த நாவல் முயற்சிக்கு உறுதுணையாயிருந்த இரண்டொருவரை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். நண்பர்கள் திருப்பூர் கிருஷ்ணன், எஸ். சங்கரநாராயணன் ஆகியோரை இன்றி இப்பகுதி பூரணப்பட்டுவிடாது.

***கனவுச் சிறை*** 1998ம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசு பெற்றதையும், பல்கலைக் கழகத்தில் பாடநூலாக ஏற்புடைமை பெற்றதையும் இங்கே நான் என் வாசகர்களுக்குச் சொல்லவேண்டும்.

பாகங்கள் ஐந்தும் இதுவரையில் வெளிவந்திருக்க வேண்டியவை. இரண்டு பாகங்களையே வெளியிடுதல் சாத்தியமாகியுள்ளது இந்த இரண்டாண்டுக் காலப்பகுதியிலும். இச்சிரமத்தைத் தெரிந்துகொண்டு தொடர்ந்த பாகங்களை தன் ***பல்கலைப் பதிப்பகம்*** மூலமாக வெளியிட முன்வந்த நண்பர் ‘அலைகள்’ சிவம் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குறுகிய காலத்திலே அதை வெளிக்கொணரும் அவரின் முயற்சி சந்தோஷமாக இருக்கிறது. மீதிப் பாகங்களின் விரைந்த வெளியீட்டை வாசகர்களால் சாத்தியப்படவைக்க முடியும்.

பிரதியை வாசித்து ஒரு கலந்துரையாடல்மூலம் என் சில குழப்பங்களைத் தீர்த்த நண்பர்கள் லதா ராமகிருஷ்ணன், கவிஞர் பாரதிராமன் ஆகியோருக்கும் நன்றிகூறல் என் கடன்.

*தேவகாந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரையில்.....

1989, 91, 93 ஆகிய காலகட்டங்களின் கதையைச் சொல்கிறது 'கனவுச் சிறையின்' மூன்றாம் பாகமான ***அக்னி திரவம்*** என்கிற இந்த நாவல். 1981 தொடங்கி 2001 வரையான கதையைச் சொல்லத் தொடங்கியிருந்தாலும் இந்த இருபத்தோராண்டுப் பின்புலத்தில் இலங்கையின் இருபத்தொரு நூற்றாண்டுகளின் சரித்திரக் களம் இதன் ஐந்து பாகங்களிலும் விரிகிறது. முந்திய பாகங்களை வாசித்திராத புதிய வாசகர்களுக்காக அவற்றின் முக்கிய கதைக் களனையும் பாத்திர நலன்களையும் சொல்வது நல்லது எனப் படுவதால் சுருக்கமாக அவற்றை இங்கே பார்க்கலாம்.

1981, 83 ஆகிய காலகட்டங்களின் கதையைக் கூறுகிற பகுதியே, கனவுச் சிறையின் முதல் பாகமான ***திருப்படையாட்சி***. கொழும்பில் நடக்கவிருந்த ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தன் தோழியோடு செல்லவிருக்கிறாள் ராஜலட்சுமி. ஆனால் இறுதிநேரத்தில் தோழியால் கூடிச் செல்லமுடியாது போகவே, அதேநாளில் கொழும்பு செல்லவிருந்த பல்கலைக் கழக மாணவனான சுதந்திரனுடன் ராஜலட்சுமி கூடிச் செல்கிறாள். இது அவர்களது சின்னஞ்சிறு தீவான நயினாதீவிலே பழியாக அவர்கள்மீது படிந்துவிடுகிறது. பின்னால் இதே காரணத்தால், நடக்கவிருந்த ராஜலட்சுமியின் கல்யாணமும் தடைப்படுகிறது. இவளின் தாய் தற்கொலை செய்யவும் முயல்கிறாள். சுதந்திரனின் நண்பர்களான திரவியத்தினதும் உதயகுமாரினதும் சிவாவினதும் வற்புறுத்துகையில், கூடிச்சென்றதால் ராஜிமேல் ஏற்பட்ட பழிச்சொல்லைத் துடைக்க ஏது செய்யவும் தயாராகிறான் சுதன். ராஜிக்கும் அதுவே தீர்மானமாகவே பெரியவர்கள் மூலமான ஏற்பாட்டில் அவர்களுக்கு கல்யாண நிச்சயமும் கல்யாணப் பதிவும் நடைபெறுகின்றன.

இந்நிலையில் 1983ன் ஆடி இனக் கலவரம் இலங்கையைச் சுடுகாடாக்கி விடுகிறது. சுதன் எவரிடமும் கூறாமல் இயக்கத்தில் சேர்ந்துகொண்டு இந்தியா செல்கிறான். ராஜியும் தாயாரும் இதைத் தாங்கிக் கொண்டாலும், சுதனின் தந்தையான சுந்தரலிங்கத்தால் தாங்க முடியாது போய்விடுகிறது. அவர் மனமுடைந்து போகிறார்.

ஒரு சின்னஞ் சிறு தீவிலுள்ள ஒரு சிறிய குடும்பம் எவ்வாறு இந்த இனப் பிரச்னைகளால் சீரழிகிறதென்பதையும் காலத்தின் நேர்த்தியில் எவ்வாறு அரசியலானது தன் கொடு நகங்களைப் பதித்து சகலரையுமே பாதிக்கிறதென்பதையும் ஜெஸ்மின், ராஜேந்திரன், சங்கரப்பிள்ளை ஆசிரியர், சங்கரானந்த தேரர் ஆகிய பாத்திரங்கள் மூலம் விளக்கிச் சென்று அதனளவில் பூரணத்துவமான நாவலாக இது முற்றுப்பெறுகிறது.

1985, 87 ஆகிய காலக் களங்களினூடாக கதையை பல தளங்களுக்கும் விரித்துச் செல்கிறது. இரண்டாம் பாகமான ***வினாக்காலம்***.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மண்ணைவிட்டு இந்தியா போய் சுதனோடு சேர மறுக்கிற ராஜி, பின்னால் சில நிர்ப்பந்தங்கள் காரணமாய் இந்தியா செல்கிறாள். சில நாட்களில் சுதன் வெளிநாடு போய்விடுகிறான். இந்த நிலையில் சுதன் மேற்கொண்டும் தான் சேர்ந்த இயக்கத்தில் இல்லையென்பதும், அவன் சட்டவிரோதமான போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வசதிபெற்றான் என்பதும் நம்பத் தகுந்த ஒருவர் மூலம் தெரியவருகிறது ராஜிக்கு. அவள் சுதன் மீதுள்ள ஆதர்ஷத்தை இழக்க ஆரம்பிக்கிறாள். நயினா தீவினைச் சேர்ந்த விசுவலிங்கம் குடும்பத்தோடு தங்கியிருக்கும் ராஜி, எதிர்பாராத விதமாக தன் மாமன் மகனும் முதலில் திருமணம் செய்யவிருந்த மாப்பிள்ளையின் தம்பியுமான யோகேஸ்வரனைச் சந்திக்கிறாள். அவன் படகோட்டி வந்து இலங்கைக் கடற்படையின் தாக்குதலால் படகையும் இழந்து, கூட்டி வந்த அகதிகளையும் காவுகொடுத்தவன். அவனுமே பலத்த காயத்துக்குள்ளாகியிருந்தான்

ராஜி தன் அழைப்புகளுக்கு சாக்குச் சொல்லி தட்டிக் கழிப்பதாக உணர்ந்த சுதன், அவளை நேரிலே வந்து கூட்டிச் செல்லும் உத்தேசத்தோடு ஜேர்மனியிலிருந்து இந்தியா வருகிறான். ஏற்கனவே கப்பலெடுக்கவென இந்தியா வந்து பம்பாயில் தங்கியிருக்கும் ராஜியின் தம்பி ராஜேந்திரனையும் அழைத்துக்கொண்டு சென்னை சேர்கிறான். சுதன் வேறூர் சென்றிருந்த சமயத்தில் ஒப்பறேஷன் லிபறேஷன் என்ற பெயர் கொண்ட யுத்தத்தை இலங்கை அரசு துவக்குகிறது. தன் தாயிலும், தாய் மண்ணிலும் அளப்பரிய பாசம் வைத்திருக்கும் ராஜி, யோகேஸை உதவிக்கு அழைத்துக்கொண்டு நாடு திரும்புவதற்காக இராமேஸ்வரம் செல்கிறாள். அங்கே தாயாரும், மாமனும் படகில் வந்திருப்பது தெரியவருகிறது அவளுக்கு. பின் சில நிகழ்வுகளால் அவளால் ஊர் செல்ல முடியாமல் போகிறது.

வேறூர் சென்றிருந்த சுதன் திரும்பிவந்து ராஜி நாடு செல்ல ஓடிவிட்டமையறிந்து கோபம் கொள்கிறான். விசுவலிங்கத்தின் இரண்டாவது மகள் ஷீலாவையும் அழைத்துக்கொண்டு ஜேர்மன் திரும்புகிறான்.

இந்திய அமைதிப்படை இலங்கை செல்கிறது. ராஜி ஆசுவாசம் பெறுகிறாள். அவளைச் சந்திக்கவென்று வந்த அவளது தாயாரதும் மாமனாரதும் முடிவுகள்கூட மாற்றம் பெறுகின்றன. தாயார் கனடாவிலிருக்கும் தன் மகளிடம் போக முடிவெடுக்கிறாள். சுந்தரலிங்கமும் அங்கிருந்துகொண்டே அகதிகளின் நலனுக்கு உழைக்கத் தீர்மானிக்கிறார்.

ஒரு குழம்பிய காலகட்டத்தில் மனிதர்கள் எவ்வாறெல்லாம் தடுமாறுவார்களோ, அவ்வாறே நாவலின் பாத்திரங்களும் தடுமாறுகின்றன. இது ஒரு வினாக்காலமென்று சொல்லாமலே தெரிகிறது. காலம் தனி மனிதர்களைப் பாதிக்கிறது. சமூகத்தைப் பாதிக்கிறது. விடியலுக்காகக் காத்திருக்கிறவர்கள்மீது மேலும் துன்பங்களும் துயரங்களுமே விழுகின்றன.

பாகங்கள் ஒவ்வொன்றுமே முழுமை பெறும்படியாக அமைந்த நாவல் இது. இருந்தும் முன்கதைச் சுருக்கம், வாசகர் வசதி கருதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாம் வாழவே எழுந்தோம்*
*சாவை உதைத்து*
*மண்ணிலெம் காலை ஆழப் பதித்து...*

*- வ. ஐ. ச. ஜெயபாலன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்னி திரவம்

( 1989 - 1991 - 1993 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

கறுத்த மேகம்
திரண்டு வந்து
மெல்லக் கவிந்தது
இடியும் மின்னலும், கூட
ஆர்க்கத் துவங்கின

ஒவ்வொரு இடியிலும்
மாதிரம் குலுங்கிற்று
பெருமழைக் குறிகளை
மின்னல் காட்டிற்று

சிப்பி வாய் விரித்தது
விடாய் பெருத்த மண்
கரும் சின்னம் கண்டதும்
புழுதியைக் கிளப்பிற்று
காற்றுகொண் டோடிற்று

பச்சைகள் சிலிர்த்தன
சுழன்றடித்தன மரம் செடி
மானுட நெஞ்சங்கள்
துக்கம் உதிர்த்தன
முகங்களில் விகாசம்
நாளை ஓர் போதுக்குள்
நல்மழை வருமென்ற
நம்பிக்கை விரிந்தது
அடங்கிக் கிடந்த வேட்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகைச் சிலிர்த்தது
சுகத்தினின் சங்கீதம்
காற்றிலும் இழைந்தது

திடீரென
அகண்ட வெளியில்
பொல பொல.... ஓசைகள்
மக்கள் எழுந்தனர்
மழை.... எனக் கூவினர்
ஓடினர்
வெளியினை அண்ணாந்து பார்த்தனர்
வானக் கூரையில்
கறுத்த மேகம் அசைவது நின்று
கரையத் துவங்கியிருப்பது
தெற்றெனத் தெரிந்தது

ஆரவாரங்கள் நொடியினில் அடங்கி
ஒவ்வொரு துளியிலும்
அவர்
அதிர்ந்து குலைந்தனர்
'தூமி... ஏன் இப்பிடி
தணலாய்ச் சுடுகுது
மழை.... ஏன் தசையினை
தீயாய் எரிக்குது'

மரண ஓலம் எங்கும் எழுந்தது
மனித நாசம் காட்சி விரித்தது
சிப்பிகள் நீரிலே செத்தழிந்தன
நிமிர்ந்த நம்பிக்கைகள்
உடைந்து சிதறின
நாளையென்பது பாலையாய்
நீண்டு கிடந்தது

வானக் கூரையில்
கறுத்த மேகம்
அசைந்து கொண்டிருந்தது

- ராகினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

## 2

நயினாதீவின் வடமேற்புறக் கடற்கரை. அலைகளின் மெல்லிய அடிப்பும் காற்றின் மெலிதான மூச்சும் கிளர்ந்துகொண்டிருந்தன. கடல்வெளியின் இருளின் மரும வெளிச்சப் புள்ளிகளில் பார்வையை எறிந்துவிட்டு, குமுறிக் குமுறி மனத்துள் திரண்டெழுந்த நினைவலைகளில் மூழ்கிப்போயிருந்தான் யோகேஸ்வரன்.

கரையில் நன்கு ஏற்றிவிடப்பட்டிருந்த ஒரு பழைய மரத்தோணியில், இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்து சாய்ந்தமர்ந்தவன் இன்னும் எழும்பவில்லை. நினைவுகளுள் அழுந்தியுள்ள மூர்த்தண்யம், அது விடியல்வரை நீளும்போலக் காட்டிற்று.

மாயங்கள் நடந்தனபோல்தான் எல்லாம் நடந்து முடிந்திருந்தன. உயிர்த்தளமே அதில் அசைந்திருந்தது. பாழ்வெளியாய்க் கிடந்தது யாழ்நகர். எப்படி நடந்தது அது? போராளி இயக்கத்தின் அரசியல் நடைமுறைப் பிழையின் பெறுபேறா அத்தனை அழிவும்? ஒரு லட்சம் ராணுவமும் கனரக ஆயுதங்களும் மண்ணில் இறங்கியிருந்த வேளையில், சிறீலங்கா ராணுவத்தின் ஒப்பறேஷன் லிபறேஷன் தாக்குதலைத் தடுக்க வல்லமையற்றிருந்த இயக்கம், அதை எதிர்க்கத் துணிந்தமை எப்படி நிகழ்ந்தது? அவன் எதையும் யோசிக்க விரும்பவில்லை. நாட்டின் அவலம் ஒரு பக்கம் போக, சுய இழப்புகள்வேறு அவனை நிர்க்கதியில் நிறுத்தியிருந்தன. அவனால் ஏதேனும் செய்திருக்க முடியுமா? முடியாதென்றே தெரிந்திருப்பினும் உள்நின்று உடற்றிக் கொண்டிருந்தது அத்துயர்.

அவன் அலுப்போடு சிகரெட் எடுத்துப் பற்றவைத்தான். மண்ணுள் வலது முழங்கை புதைய சரிந்திருந்துகொண்டு ஏகாங்கியாய்ச் சிறிதுநேரம் புகைத்தான். பின் அதை வீசியெறிந்தான். ஒன்றரை வருஷத்துக்கு முன்பு சென்னையிலிருந்து இராமேஸ்வரம் சென்றதும், பின் தஞ்சாவூர் போனதும், அங்கிருந்து பாண்டிச்சேரி சேர்ந்து தெரிந்த ஒரு இலங்கைக் குடும்பத்தோடு அவளை தங்கவைத்துவிட்டு தனியே தொண்டமானாறு வந்ததுமான நிகழ்வுகள் அவன் நினைப்பில் வரிசைப்பட்டன.

அவன் தொண்டமானாறு வந்தபோது அவர்களுடைய வீடு கல்கல்லாய்ச் சிதறிப்போயிருந்தது. அம்மாவும் ஐயாவும் எங்கே? என்ன நடந்ததோ அவர்களுக்கென எண்ணி இடிந்துபோகவிருந்த தருணத்தில் அயல் மனிதர் ஒருவர் வந்து தகவல் சொன்னார், குண்டு வீசப்படுமுன்னரே அவர்கள் நயினாதீவு ஓடிவிட்டதாக. சூழலின் களேபரத்தைத் துளைத்துக்கொண்டு அவன் தீவு வந்துசேர்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவு பெரும்பாலும் வெறித்திருந்ததாய்த் தோன்றிற்று. அது உற்சாகத்தில் உச்சமடைந்திருந்த வேளைகளில், மீதுயர் அடைந்திருந்த பொழுதுகளில், சாதாரண சமயங்களிலென்று அதன் பலபட்ட உணர்வு நிலைகளில் தீவை அவன் அறிவான். அது அவனது இடமில்லை. ஆனாலும் அந்த அற்புதமான படகோட்டிக்கு எந்தத் தீவிலும் உள்வெளியான அத்யந்தம் இருந்தது. அதனால் தீவில் விழுந்திருந்த வெறுமையின் அந்தகாரத்தை அவன் நன்றாகவே உணர்ந்து கொண்டான்.

உண்மையில் அந்தத் தீவுக்கு வருவதற்கும் மாமியார் வீட்டிலே தங்குவதற்கும் அவர்களுக்கு 'தோலங்கெட்டதனம்' நிறைய இருந்திருக்கவேண்டுமென்று தோன்றியது அவன் மனத்தில். இன்னொரு கோணமும் தெரிந்தது. அவர்களே அங்கு வரக்கூடிய அளவுக்கு வடமராட்சியின் அந்தப் படை நகர்வு மகா பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. உயிர்க்குலை நடுங்குகிறபோதுதான் மனிதருக்கு உறவுகளின் ஞாபகம் வருமோ? அந்த நிலைமையை ஏற்படுத்திய மகாவிதியின் வலிய கரங்களை அப்போது அவன் வியப்போடு நினைத்தான்.

தன்னைக் கண்டதும் பெற்றோர் பட்ட ஆனந்தம் மனத்தை நெகிழ்த்தியது. அவனுக்கும் அவர்களைப் பார்த்ததில் பெரிய திருப்தி. அவர்கள் பாசத்தினதும் அந்தத் தீவின் அமைதியினதும் மத்தியில் இடையூறுகள் தாண்டிய வாழ்வு அற்புதமாயிருக்கும். ஆனாலும் அவனால் அங்கே தங்கிவிட இயலாது. ஏதோ ஒருவகையில் ஏதோ ஓர் அளவில் அவனுக்கு பாதிப்புகளும் சேதங்களும் சோகங்களும் இருந்திருக்கின்றன. அண்ணனை இழந்து, பாக்கு நீரிணையில் பதினெட்டு பயணிகளைப் பறிகொடுத்து, தன் வீட்டைச் சிதறக் கொடுத்து... இன்னும் பல்வேறு அழிவுகளை அவன் அடைந்திருக்கிறான். அவனுக்கு அந்த யுத்தத்தில் பங்கு உண்டு. அவன் தன் இயல்வுகளைக் கொடுப்பதைத் சுதர்மமாகக் கருதினான்.

இரண்டு மூன்று நாட்களின் பின் தன் தீர்மானகரமான வழித்திசைக்குச் செல்ல அவன் ஆயத்தப்பட, தாயார் ஓடிவந்து கட்டிக்கொண்டுவிடுகிறாள். பெற்றவளின் பாசப் பிணிப்பை நெகிழ்த்த முடியாது போய்விடுகிறது. 'விடம்மா.... நான் இஞ்ச நிக்க ஏலாது. உங்களைப் பாக்கவெண்டு வந்தன்; பாத்திட்டன். இனி நான் போகவேணும்.'

'மாட்டன். நீ எங்க வேணுமெண்டாலும் போ, ராசா. ஆனால் எனக்குக் கொள்ளி வைச்சிட்டுப் போ. ரண்டு ஆம்பிளைப் பிள்ளையனைப் பெத்தும் கொள்ளிவைக்க ஒரு பிள்ளையில்லாமல் நான் சாக ஏலாது.'

'உங்களுக்கென்னம்மா? நீங்கள் இன்னும் கனகாலத்துக்கு இருப்பியள்.'

'அந்த நம்பிக்கை எனக்கில்லை.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் விடுவித்துக்கொள்ள முடியவில்லை. பிடி, அத்தனை வலிதாயிருந்தது. கரையாம் பொம்பிளைகளின் பலத்தை அவன் கண்டிருக்கிறான். ஆனாலும் அவன் பலத்தைப் பிரயோகித்து தள்ள அம்மா தடுமாறி விழுந்துவிடுகிறாள். இருந்தும் அப்படியே பாய்ந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டு விடுகிறாள். அவன் கீழே அமர்ந்து அவளை இழுத்து மடியில் போட்டுக்கொண்டு வெகுநேரமாய் உள்ளம் கசிந்து அழுதுகொண்டிருந்தான். அவள் ஆணையை மீற முடியாது போய்விடுகிறது. அந்தத் தீவிலேயே சுமார் ஒரு வருஷத்துக்கு மேலாக சுற்றி அலைந்து கொண்டிருக்க நேர்ந்தது. கடலை அளப்பதே பொழுதைக் கழிக்கவுள்ள ஒரே வழியாயிற்று. அந்த நேரத்தில் அவனோடு தானாய் வந்து ஒட்டிப் பழகியது தியாகு ஒருவன்தான். 'ராஜியைப் பாத்தியா? சுதனைப் பாத்தியா? இந்தியாவிலதானே நிண்டு வாறாய், அவையைப் பாக்கேல்லையோ?' என்று காணும் நேரமெல்லாம் துளைப்பான். அவனும் ஏதேதோ பதில்கள் சொல்லி அவனைச் சமாளிப்பான். மனப்பாரம் அதிகரித்துள்ள சமயங்களில் அவனைக் காணப் பயந்து ஒழித்திருந்ததும் உண்டு. ஒரு மாதத்துள் வருவேனென்று ராஜிக்குக் கூறிவந்தபடி சென்று சந்திக்க முடியாமல் அவன் பட்ட வேதனை! அவளை நட்டாற்றில் கைவிட்டு வந்ததுபோல் ஒரு கலக்கம். உண்மையும் ஏறக்குறைய அதுதான். எந்தத் தடையாயினும் அவன் நொறுக்கியிருப்பான். தாயின் ஆணை ஒன்றே அடக்கி வைத்தது.

போன வருஷத்தில் தீபாவளிக்கு சற்று முன்னோ பின்னோவான ஒரு நாளில் தாயாரின் மரணம் சம்பவித்தது. அதற்கு மேலும் தடுத்து வைத்து அவன் படும் இம்சையைப் பார்க்க சகிக்க முடியாதது போலத்தான் அவளது மரணம் ஏற்பட்டது. அவனுக்குப் பொறுக்க முடியாதிருந்தது. அவள் செத்துத் தொலைகிறாளில்லையே என்று ஓரோரு பொழுதுகளில் அவன் ரகசியமாய் விரும்பியிருந்தமை மனத்துள் அம்மணமாய் எழுந்து நின்று நர்த்தித்தது. கண்ணீர் கொட்டோ கொட்டென்று கொட்டியது. இதயத்தைப் பிறாண்டி நெரிப்பதுபோல அதுபற்றிய நினைவு இருந்தது. ஒருவாறு கண்ணீரோடு கொள்ளிவைத்து காரியங்கள் யாவையும் ஒப்பேற்றிய பின் அவசரமாய்ப் படகெடுத்தான். கடலே புளகித்தது போல் அலையடித்தது; நீர் தெறித்தது. அவன் வேதனையை அதிகரிக்கும் சம்பவங்களின் காலத் தொடர்ச்சி இன்னும் முடியாததுபோல விட்டு வந்திருந்த வீட்டில் ராஜி இருக்கவில்லை. தெரிந்தவர்களைப் பார்க்க சென்னை போனதாகவும் பின் திரும்பி வரவில்லையென்றும் வீட்டில் சொன்னார்கள். இன்னும் அங்கே ஒரு பயணப் பை இருப்பதைத் தெரிவித்தார்கள். இரண்டொரு இடங்களுக்கு தானே சென்று தேடினான். இன்னும் சில இடங்களில் விசாரித்தான். மேலும் அலைந்து திரிவதற்கு தமிழகச் சூழல் இடம் கொடுக்கவில்லை. இலங்கை அகதிகள்மீது பொலிஸ் கண்காணிப்பு இருந்தது. அகதிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்யப்பெற்று அகதி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. அதனால் விசாரிப்பு நேர்கையில் விடுதலைப் புலியெனச் சந்தேகிக்கப்படக்கூடிய சாத்தியப்பாட்டைத் தவிர்க்க, நண்பர்களையே தேடி விபரமறிந்து வைக்கச் சொல்லிவிட்டு தீவுக்குத் திரும்பினான்.

மனைவியின் மரணம் வேலுப்பிள்ளையை மிகவும்தான் உடைத்து விட்டிருந்தது. தனித்திருக்க விரும்பியதுபோல் எப்போதும் எதையாவது வளவில் தலைகுனிந்தபடி செய்துகொண்டிருந்தார். இல்லையேல் புட்டுவத்தைக் கொண்டுவந்து வாசலோர தேமாவின் கீழே போட்டுவிட்டு எதிலோ சிந்தையை லயிக்கவிட்டு அமர்ந்திருந்தார். தேமா தன் வெண்பூக்களை அவர்மேலும் சொரிந்தது. பார்க்கச் சகிக்காமல் யோகேஸ்வரன் உழன்றான். அவரை எப்படி அங்கே தனியவிட்டு மறுபடி இந்தியா போவது என்பதும் பெரிய பிரச்னையாய் அவன் முன் எழுந்து நின்றது. அது ஒரு மனப்பாதிப்பாக இருக்கமுடியுமென்றும், முடிந்தவரை அவரோடு பேசி கலகலப்பான மூட்டத்தில் வைத்திருக்க முயற்சிக்கும் படியும் தெரிவித்தாள் தங்கம்மாவின் மூத்த மருமகள் பராசக்தி. அவர்கள்மேல் விழுந்திருந்த வளையங்கள் விலகி வெகுகாலம். துன்பமும் துயரமும் முண்டி முண்டி வந்து சூழ்கிறபோது, போலியான தளங்களின் எல்லைகள் தகர்வது இயல்பில் நிகழும்தான்.

அந்த வாரம் அவன் இந்தியா போகவிருந்தான். அது மாரிகால தொடக்கமென்று தெரிந்தும்தான் அவ்வாறு தீர்மானித்தான். அவளின் அழகு ஒரு லட்சணப் பிசாசாய் வந்து கனவுத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த ஆசைக்கு மழையென்ன காற்றென்ன தடைபோடத் தயங்கும். வழக்கமாய்க் குறுக்கீடு காட்டாத வேலுப்பிள்ளை அன்றைக்கு ஊமை வாய் திறந்து, 'திரும்பவும் இந்தியாவுக்குப் போகப்போறாய்போல? கொஞ்சம் பொறுத்து... பாத்துப் போ. உது புயலாய் மாறக்கூடிய காத்து' என்றார், வானத்தில் மேகம் திரளும் கலையும் மறுபடி கூடும் நுட்பத்தைக் கவனித்துக்கொண்டிருந்துவிட்டு.

'சரி, ஐயா.'

ஒரு வாரமாய்க் கொம்பு சுற்றிக் காற்றடித்தது. கேணி நீர்ப் பட்ட சொறித் தவளை கூப்பிட்டு மழை வரும் குறி சொல்லிற்று. மலையாளக் கரையிலிருந்து ஈழமண்டலக் கரைவரை வெட்டியெறிந்தது மின்னல். அது கண்டு அலையெழுந்து பேய்க்கூத்து ஆடிற்று.

ஆனால் அன்றைக்கு மாலைக்கு மேல் சொல்லி வைத்தாற்போல எல்லாம் ஒடுங்கின.

அந்தப் பருவநிலை தொடர்ந்தால் அவன் நாளைக்குப் படகு எடுப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணம் முழுவதும் இந்திய அமைதிப் படையின் கண்காணிப்பில் வந்திருந்தாலும், வன்னிக் காடு இன்னும் ஆயுதப் போராட்ட இயக்கத்தின் வல்லாண்மையிலேயே இருந்தது. தன்னை அடைக்கலமடைந்தவரை வன்னிப் பூமி என்றும் கைவிட்டதில்லை. அதற்கான சாட்சியங்கள் சரித்திரத்தில் நிறையவுண்டு. பெரும் பெரும் காடுகள் போலல்லாவிடினும், அது ஒருவகை ரகசிய பூட்டினை தன்னகம் கொண்டிருந்தது. சரணடைந்தோரைக் காக்கின்ற வல்லபம் அது காரணமாய் அதற்கு நிறையவே இருந்தது. இலங்கைத் தீவின் கீழ்ப்புறத்திலிருந்து ஒரு கடல்வழி திறந்து மிக்க இரகசியமாய்ச் செயல்பட்டுக் கொண்டிருந்ததென்றும், கடல் மறவர் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு தக்க பயிற்சி கொடுக்கப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்றும் அவன் போனமுறை இந்தியா போனபோது கேள்விப்பட்டிருந்தான். கடல் மறவரின் அந்தக் குழுவுக்கு அவன் மிகவும் பயன்பட முடியுமென்று வேதாரணியத்தில் அவனிடம் சொல்லப்பட்டது. தன் சுய இழப்புகளைக் கூறி அவற்றிலிருந்து மீண்ட பிறகே மற்றவையென அவன் சொல்லிவந்திருந்தான். அவன்மீது வற்புறுத்தலேதும் பிரயோகிக்கப்படவில்லை. ஒருவேளை அவர்கள், அவன் உள்ளேயிருப்பதிலும் வெளியிலிருந்து உதவுவதையே விரும்பியிருக்கவும் கூடும். அவனது நம்பகத்தன்மையில் அவர்களுக்கு ஐயமில்லை என்பது தெரிந்தது. அவனது ஒழுக்கம் கட்டுப்பாடுகளில்தான் அது. அவை விஷயத்தில் அவர்களது கண்டிப்பு மிகவும் பிரசித்தம்.

மிக்க அவசியத்தில் அவனுக்கு அவளே தேவையாக இருந்தது. பின்னர்தான் ஏதுவும்.

அவன் மேனி விறைத்துவிட்டிருந்தது கடற்காற்றில்.

இனி வீடு செல்லவேண்டியதுதான்.

அவன் எழுந்தான்.

கிழக்குநோக்கித் திரும்பினான்.

நயினை அம்மனின் கோபுரப் புறவுரு மெலிதாய்த் தெரிந்தது.

அதன் பின்னால் வெளிச்சக் கதிர் ஒன்றாய் இரண்டாய் பலவாய் படரத் துவங்கிற்று.

இயல்பான சூழ்நிலையானால் அது உதயபூஜைக் காலம். கண்டாமணி அதிபேரோசை கிளர்த்தி நாற்றிசைத் தீவையும் அதிரவைத்திருக்கும். அப்போதோ அடங்கிக் கிடந்தது. அர்ச்சகரின் கைமணிக் கிணுகிணுப்பை, கர்ப்பூர ஆரத்தியின் ஒளிக் கொளுந்துத் துண்டை மானசீகத்தில் தரிசித்தான் அவன்.

தூரத்தில் யாரோ வந்துகொண்டிருப்பது தெரிந்தது. இனம்புரிய சிரமம் இருக்கவில்லை. வேலுப்பிள்ளைதான்.

'யோகேஷ்! என்ன இது? விடியிற நேரமாச்சு, இன்னும் இஞ்சயிருந்து என்ன செய்யிறாய்?' என்றார்.

'யோசிச்சுக்கொண்டு இருந்தாப்போல அப்பிடியே நித்திரையாய்ப் போனன், ஐயா. நடவுங்கோ போகலாம்.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

அம்மா வெகுநேரத்துக்கு முன்பே விழித்துவிட்டிருந்தது தமிழரசிக்குத் தெரியும். அவள் தூங்கி விழித்திருந்தாள். இவள் தூங்காமலேயே இருந்தாள் என்பதுதான் வித்தியாசம்.

விறாந்தையில் பக்கச் சுவரொன்றின் ஓரம் படுப்பாள் தமிழரசி. வேலாயுதத்தின் மறைவுக்குப் பின் அப்படித்தான். முன்புதான் பாதுகாப்புக் கருதி அறைக்குள்ளே படுத்துப் பூட்டிக்கொள்வது. இப்போது வெளியேதான் பாதுகாப்பு. கதவு, பூட்டு ஆகிய மனித சிந்தனையில் உதித்த பாதுகாப்பு அம்சங்கள் அர்த்தமிழந்து கிடந்தன. மனிதன், வாழ்க்கை, வாழ்க்கையின் அற விழுமியங்கள் கூட அர்த்தமிழந்துள்ள காலம் அது. அப்போ... அர்த்தம் பட்டிருந்தது எது? போர். போர்மட்டும்தான்.

பதினொரு மணிபோல் தேநீர் வைத்துக் குடிக்கும் போதே அவளுக்குச் சந்தேகம்தான், அன்றிரவு தூக்கக் குறைவைக்கும் ராத்திரியாய்க் கழியப்போகிறதோவென்று. அப்படியே ஆகிவிட்டது. அதில் வருத்தமேதும் இருக்கவில்லை. யோசிக்க நிறைய விஷயங்கள் மனத்துள் விடைத்து நின்றிருந்தன.

மகேஸ்வரியின் கடிதம் போனமாதம் வந்திருந்தது. ஆறாம் மாதம் கனடாவிலிருந்து அனுப்பியது. ஆறு மாதங்கள் கழித்துத்தான் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. கடிதத்தை ஆவலோடு வாசித்துவிட்டுத்தான் திகதியைப் பார்த்தாள். எக்கேடும் கெட்டுப்போகட்டுமென்று ராஜியைப்பற்றி கடைசியில் குறிப்பிட்டிருந்தாள். சுதன் மீது குற்றம் சொல்லாவிட்டாலும், விசுவலிங்கத்தின் இரண்டாவது பெட்டையைக் கூட்டிக்கொண்டு போகாமல் விட்டிருக்கலாம் என்று குறைமட்டும் பட்டிருந்தாள். மேலே, அரசியினதும் தாயாரினதும் சுகம் விசாரித்தும் சுந்தரலிங்கம் திரும்பிவிட்டாரா என்று கேட்டும் எழுதியிருந்தாள். அதிலே, தான் கச்சாய் வந்திருந்தபொழுதில் கதிர்காமச் சாமியார் சொன்னவை எப்படி நிதர்சனமாகிவிட்டன என்பதைக் குறிப்பிடவும் மறக்கவில்லை. வானக் கூரை கிழிந்து நெருப்பு மழை பெய்யப்போகிறதென்று சொன்னது நிஜமாகிவிட்டது; காளி சிதறினாளா, ஆலமரம் எரிந்ததா என்று தெரியவில்லை; பாதிப்புகளைக் கேள்விப்படுகிறபோது அதுவும் சாத்தியமாகியிருக்குமென்றே தான் நம்புவதாய் எழுதியிருந்தாள். மெய்தான். ஒரு இரவில் வீடே இடிவதுபோன்று எழுந்த நிலவதிர்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலறியடித்து எழுந்து பார்க்க மிஜ் ரக விமானமொன்று இரைந்தபடி பறந்துசென்று மறைந்துகொண்டிருந்தது. திரும்பினால் நெருப்பின் கொழுந்து சொக்கப்பனைபோல் உயரே தாவிக்கொண்டிருக்கிறது. மறுநாள்தான் கோயிலடி ஆலமரத்தில் குண்டு விழுந்த விபரம் தெரிந்தது. கோவிலும் பெருஞ்சேதமானது. காளியம்மா சிலை பெயர்ந்து சரிந்திருந்தது. அன்றே சிலையை நிமிர்த்தி அபிஷேகம் நடத்தியானது. அடுத்தடுத்த நாளில் கோவில் செப்பமிடும் பணி நடந்தது. எரிந்த ஆல் இப்போது துளிர்விட்டு மீந்த உடலில் பாதி சடைத்து நிற்கிறது. அம்மனும் எரிந்த ஆலடி அம்மன் ஆகிவிட்டாள்.

ஒரு புல்லரிப்போடு அந்த இரவை நினைவுகூர்ந்தாள் அரசி.

அது முடிய ராஜிபற்றி நினைத்தாள்.

ராஜியும் கடிதம் எழுதியிருந்தாள். அது மகேஸ்வரியின் கடிதத்துக்கு முன்பாகவே வந்து சேர்ந்தது. இத்தனைக்கு பத்தாம் மாசம் எழுதிய கடிதம் அது. தாயார் கனடா போய்விட்டமை பற்றியும், தான் அகதி முகாமொன்றில் தஞ்சம் பெற்றிருப்பதாகவும் எழுதியிருந்தாள். ராஜன்பற்றி யாருமே குறிப்பிட்டிருக்கவில்லை என்பதை மெல்லிய வருத்தத்தோடு அப்போது ஞாபகமானாள் அரசி. தன் எண்ணம், நிலைப்பாடு, எதிர்காலம்பற்றி அவள் நிறைய எழுதாவிட்டாலும் எழுதியிருந்தவை, பலவற்றின் அனுமானத்தைக் கொள்ளப் போதுமானவையாயிருந்தன. ஒவ்வொரு எழுத்தும் சொல் கடந்து பொருள் பொதிந்திருந்தது. எழுத்தும் சொல்லும் சுட்டும் பொருளைவிட கடிதத்திலுள்ள பாவனை துல்லியமாய் ஒரு விஷயத்தைச் சொன்னது. இனி அவளுக்கு மறுஜென்மம் இல்லை.

அப்பாலே ராகினி பற்றிய நினைப்பு வந்தது.

ராகினிக்கு பல்கலைக் கழக இறுதிப் பரீட்சை முடிந்திருந்தது. முன்னைவிட தீவிரமாக கவிதா உலகில் பிரவேசித்திருந்தாள். நிறைய வாசிப்பதும் விவாதிப்பதுமாய் அவள் பொழுது கழிந்து கொண்டிருந்தது. அவளைப் புரிய பலரும் தடுமாறினர். அரசிக்கும் புரிதல் சிரமமாகவே இருந்தது. வெளிப்படையைவிட அவள் கவிதைகளில் பூடகம் அதிகம். சொல் வந்து அவள் கவிதைகளில் அற்புதமாய் இறங்கும். அதைக் குறிப்பாய் ரசிப்பதற்கு அவளுக்கென்று சில வாசகர்களே இருந்தார்கள். அவள் கவிதைகள் சில சிங்களத்திலும் 'பொயற்' என்ற இதழில் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருந்தன. படிமங்களை அடுக்கி அடுக்கிச் சென்று சொற்களின் இறுகிய பிணைப்பில் சொற்களின் அர்த்தம் மாரீசத் தேடலாய் முடிந்துகொண்டிருந்ததென கவிதை விமர்சகர் ஒருவர் விமர்சித்திருந்தாராம் தமிழகப் பத்திரிகையொன்றிலே. அதற்கு காட்டமான பதிலெழுதியிருப்பதாக ஒருநாள் வந்து சொன்னாள் ராகினி. வளர்ச்சியின் கீழ்ப்படிகளில் நிற்கிற அவள் விமர்சன வேறுபாடுகளில் இறங்கி தன் படைப்புத் தளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடாதென்று அரசி சொன்னதற்கு ராகினி சிரித்துவிட்டுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமலிருந்தாள். 'நீ விடுதலைப் புலிகளையும் தாக்குகிறாய்; மாற்று இயக்கங்களையும், கூட அமைதிப் படையையும் தாக்குகிறாய். அப்ப.. நீ யார் பக்கம்?' என்று அரசி ஒருபோது கேட்டதற்கு அவள் சிறிதுநேரம் மௌனமாயிருந்து யோசித்துவிட்டுச் சொன்ன பதில் எளிதில் மறக்கக்கூடியதல்ல. 'மக்களுக்காக நான் எழுதுவதில்லையென்று ஒரு குறை இருக்கு. ஆனாலும் நான் மக்கள் பக்கம்தான். அதாலதான் நான் மற்ற சக்திகளை எதிர்க்கிறன். அது ஆபத்தானது எண்டது எனக்குத் தெரியும். தங்குதடையில்லாத பறத்தலுக்கு விரிந்த வானத்தின் என் இச்சிப்பை இவர்கள் புரிந்துகொள்ளமாட்டினம் எண்டதும் எனக்குத் தெரியும். ஆனாலும் வேறமாதிரி எழுத என்னால முடியேல்லையே!'

ஒருநாள் வந்து, 'என்ர பேர் பெரிய விலாசமாகிக் கொண்டிருக்குப்போல, அரசி. தமிழ்நாட்டுப் பத்திரிகையொண்டில என்ர கவிதை வந்ததாய் சிநேகிதர் ஒருத்தர் எழுதிய கடிதம் வந்தது. ஆனால் கூட அனுப்பியிருந்த அந்த சஞ்சிகை மட்டும் கிடைக்கேல்லை. இப்பிடி நடக்கிறது இது ரண்டாவது முறை. என்ர கவிதைகளை ஆரோ கவனமாய்ப் படிக்கினம்போல இருக்கு' என்று விட்டுப் போனாள்.

மறுநாள் வந்து, 'பொறு அரசி, எப்பிடியும் அந்த ரண்டு கவிதைகளையும் எடுத்துத் தாறன்' என்றாள்.

அவளது தம்பி புவனேந்திரனுக்கு பல்கலைக் கழகத்திலே இரண்டாமாண்டு தொடங்கியிருந்தது. அரியாலையில் இன்னொரு பல்கலைக் கழக மாணவன் வீட்டில் தங்கி நின்று சைக்கிளில் வகுப்புகளுக்குப் போய்வந்து கொண்டிருந்தான். சைக்கிளே சகலமும் ஆகிவிட்டிருந்தது. ராகினியும் சைக்கிளில்தான் கோப்பாய், கச்சேரி, வரணி, நல்லூர், திருநெல்வேலி என்று போய் வந்தாள். அவளுக்கு ஒன்றுவிட்ட அண்ணா ஒருவர் பிரான்சில் இருந்தார். பணம் அனுப்புவதாகத் தெரிவித்து, கொழும்பிலே வந்து தங்கிக்கொள்ளும்படியும், வேலை ஏதாவது செய்வதற்குக்கூட ஒழுங்கு செய்து கொள்ளலாமென்றும், தகுந்த சமயத்தில் அவளைப் பிரான்ஸ் கூப்பிடுவதாகவும் சொல்லி கடிதம் எழுதியிருந்தார். ராகினி இதைச் சொன்னபோது அவள் என்ன செய்யப்போகிறாளென்று அரசி கேட்டாள். அதற்கு, மேலே கையைக் காட்டி விஷயத்தை அப்படியே தொங்கலில் விட்டுவிட்டுப் போய்விட்டாள் ராகினி. அதற்கு என்ன அர்த்தம் என்று இன்றுவரை அரசிக்குத் தெரியாது.

விகுவமடு சித்தப்பாதான் செலவுக்குப் பணம் கொடுப்பது. மீதியை வளவு வரும்படியில் சமாளித்தாள். இப்படிக் கஷ்டப்படாமல் பேசாமல் அண்ணன் பேச்சைக் கேட்பது நல்லதென அரசி கூறியதற்கு, அப்போ.... அவள் ஏன் ஜெர்மனி போகவில்லையென்று கேட்டு மடக்கினாள் ராகினி.

அவளை நினைத்து அக்கறையான அச்சம் கொண்டாள் அரசி. வாலாம்பிகைக்குமே அது இருந்தது. அந்த அவசரம், அந்த அமிழ்ந்த அழகு, அந்த விசுக் விசுக்.... கென்று பாயும் கூரிய கேள்விகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கும் பதில்களுக்குமான கூர்த்த மதி யாவும் எடுகட்ட முடியாதவை என்கிற எண்ணம் எப்போதும் அரசியிடம் இருந்தது.

தகப்பனார் அப்படித்தான் சொல்வது அவளுக்கு ஞாபகமாயிற்று. அவர் அதிகம் படிப்பில்லாதவர். அதை அவர் மறைத்ததில்லை எப்போதும். அதற்கு அவர் வெட்கப்படாத காரணம் அவர் கேள்வி ஞானமும் அனுபவ ஞானமும் அதிகமாய்ப் பெற்றிருந்ததேயென்று அரசி பின்னால் யோசித்துத் தெளிந்திருக்கிறாள். அவர் கல்வியைக் கடவுளாக மதித்தவர். பலரும் அதை உத்தியோகத்தின் உபகரணமாய்க் கணித்திருந்தபோது அவளறிந்தவரை அவர் மட்டும்தான் அதை அறிவின் அம்சமாய் மதிக்கத் தெரிந்திருந்தார். அவர் குணம் அவளுக்கும் கூவறும்தான். அறிவின் அம்சங்களை அவள் போற்றினாள். பாதுகாக்கத் துடித்தாள். அவளின் ராகினி மீதான ஆகக்கூடுதல் அக்கறைக்கும் அதுதான் காரணம். அவள் பெண் என்பது அடுத்த பட்சமானது.

இவ்வாறு பலவற்றையும் நினைத்துக்கொண்டு சூரிய ஒளிக் கீறு கிழக்கில் வெடிக்கும்வரை இருந்துவிட்டாள்.

விடியல் ஒரு சாந்தியைக் கொண்டுவருகிறது.

இரவு... அச்சங்களுக்கானதென தீர்மானமாகியிருந்தது.

அரசியும் விழித்துவிட்டிருப்பதை அசைவில் தெரிந்து, "அரசி, தேத்தண்ணி வைப்பமா?" என்றாள் தாய்.

"வைப்பம், அம்மா."

அவள் சோர்வோடு எழுந்தாள்.

பசி தெரிந்தது.

அப்போதுதான் அம்மாவும் பசித்திருக்கிறாளோ என்ற யோசனை எழுந்தது. அவசரமாய்ப் போய் அடுப்பை மூட்டினாள்.

## 4

விழித்து வெகுநேரமாகியும் எழும்ப மனமின்றி திண்ணையில் கிடந்து புரண்டு கொண்டிருந்தாள் ராகினி.

தானும் தன் வீட்டில் தனிய என்பதால் இரவுக்கு ராகினி வீட்டில் வந்து படுப்பாள் சிவநாயகி. வந்து படுப்பது, போவது அடுத்த வீட்டுக்குத் தெரியாது; இரவு சாப்பிட்டுவிட்டு எட்டு மணிபோல் வந்து படுத்தால் அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் எழும்பிப் போய்விடுவாள். ஒன்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணிவரை தோட்ட நிலத்திலே வேலைசெய்வாள். அவள்போல இருந்துவிட்டால் மன அவதி, இன்னும் சொல்லப்போனால் பசி பட்டினியான உடல் உபாதைகள் கூட, இல்லாமல் இருந்துவிடலாமேயென்று பலவேளைகளில் ராகினி நினைத்திருக்கிறாள். நினைத்தால் இசைந்து விடுகிறமாதிரியா மனத்தின் தன்மை இருக்கிறது? நினைப்பை நழுவவிட்டுவிட்டு வாழ்க்கையை இழுத்துக்கொண்டு போகப் பார்க்கிறது அது. அவள் முயற்சித்துத் தோற்ற விஷயம்.

சிமெந்தில் கட்டி மேலே கூரைபோட்ட வீடு அவளுடையது. இரண்டு மாரிகள் கண்டுவிட்டது கூரை. பொத்தல்கள் நிறையத் தெரிந்தன. அந்த மாரிக்கு முன்னம் வேய்ந்தாக வேண்டுமென்று எண்ணிக்கொண்டாள். வெளியே சூழ்நிலைமையிலுள்ள பொத்தல்களைக் கண்டு அதற்காக மன இம்சைப் படுபவள், கூரையிலுள்ள பொத்தல்களை, வரப் போகும் மாரியை எண்ணிப் பெரிதாக என்ன செய்துவிடப் போகிறாள்?

அப்போதும் திண்ணையில் கிடந்து கூரைப் பொத்தல்கள் வழியே வான வெளிச்சத்தைப் பார்த்தாள் ராகினி.

தனக்கான வானம் தடுக்கப்பட்டதுபோல் அப்போதும் மனத்துள் கிடந்து முறுகியது ஒரு வசதியீனம். அரசி அவளை எச்சரிக்கிறாள். ஆனாலும் அந்த எரிச்சல் வந்து மறுபடியும் மறுபடியும் மனத்துள் படுத்துக்கொள்கிறது. அவளுக்கே தான் எச்சரிக்கையாய் நடந்துகொள்ளவேண்டிய அவசியம் தெரிகிறது. அது தன் பாதுகாப்புடன், புவனேந்தியின் பாதுகாப்பும் சார்ந்தது என்பதையும் அவள் அறிவாள். ஆனால் அவளால் முடியாமலிருக்கிறது. எண்ணம் ஒரு திசையில் இழுக்க, இன்னொரு திசையில் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போகிற வித்தை அவள் அறியாததாய் இருக்கிறது.

அரசிக்கு ராகினியின் இந்தப் பலமின்மை தெரியும். அதனால்தான் இவள் அவளது சொல்லை மீறமீறவும் அவள் சோர்வடைகிறாளில்லை. அவள் தன்மீது காட்டும் அக்கறையின் தீவிரம் நினைக்கும்போதெல்லாம் கண்களில் நீர் கசியும் ராகினிக்கு.

அப்பா முதலிலும்
பின்னர் அம்மாவும்
போனது தெரியும்
போன திசைதான் தெரியாது
அக்கா
நீ வந்தது
அந்தத் திசையிலிருந்துதானே

சிலநாட்களுக்கு முன்னர் நெஞ்சுருகி கவிதையாய் வெடித்துவந்த வார்த்தைகளை அப்போது அவள் நினைத்துக்கொண்டாள்.

அன்புகள், சிலவேளை எவ்வளவு மலிவாய்க் கிடைத்து விடுகின்றன!

ராகினி கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கையில் அரசியும் தாயாரும் தோட்டத்திலிருந்து வீடு போய்க்கொண்டிருப்பது தெரிந்தது.

இனி வீட்டு வேலைகள் பார்த்து குளித்து வெளிக்கிட ஒரு மணியாகிவிடும். கைதடியில், செல்லக்கிளியின் தென்னந்தோப்பு வளவில் சிநேகிதிகள் அன்று சந்திப்பதாக இருந்தது. அந்த நேரத்தில் புறப்பட்டால்தான் அந்தளவு தூரம் போய்வர சரியாக இருக்கும். மணியிடம் அல்லது பத்மாவிடம் சைக்கிள் இரவல் வாங்கவேண்டிவேறு இருந்தது. ராகினி அலுவல்களில் கவனமானாள்.

செல்லக்கிளியின் தென்னந்தோட்டத்தில் அன்று நான்கு பேர் சந்தித்தார்கள். ஓராண்டு முன் பின்னாக பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கும்போது ஆன அறிமுகம்தான் எல்லாம். கலாராணி தான் காலையிலேயே வந்துவிட்டதாகச் சொன்னாள். அந்த வயதில் இயல்பாகவுள்ள சுறுசுறுப்பும் வேடிக்கைத்தனமும் அவர்களிடம் ஓரளவு அடங்கிக்கிடப்பதாகவே தோன்றிற்று. அவர்கள் யோசிக்க நிறைய விஷயங்களை வைத்திருந்தார்கள். மேற்படிப்பு, வேலை வசதி, வெளிநாட்டுப் பயணம், திருமணம், போராட்டம், போராட்டத்தில் இணைந்த நண்பர்கள், அதில் இறந்தவர்களின் துக்கம், வெளிநாடு போய்விட்டவர்களின் அதிர்ஷ்டம் / துரோகம் என்று பலவும் அவர்கள் பேச்சில் அடிபடும். அது ஒருவகை ஆர்வ வெளிப்பாடு மட்டுமில்லை, தங்களை அமைதிப்படுத்தவும் தெளிவிக்கவுமென அவர்கள் கொண்ட உத்தியாகவும் இருந்தது. அதனால்தான் அவ்வளவு சிரமங்களையும் தாண்டி அவர்கள் வந்துபோயினர். அந்தளவு தூர பயணம் எவருக்குமே சிரமமானது. வீதிகள் வெறித்துக் கிடக்கும். கழுதை கெட்ட கதைதான் எல்லா வீதிகளுக்கும். குண்டும் குழியுமாய்.... கற்கள் கிளம்பி.... வீதியின் தடங்கள் மட்டுமே காணக்கூடியவையாய் இருக்கும்.

அதில் நடுத்தர வயதுப் பெண்கள்கூட, அனாயாசமாக சைக்கிள் மிதித்துக்கொண்டு போவார்கள். இரண்டு பேராய்ப் போவதே அதிகம். ஒருவருக்கொருவர் துணையாக இருக்கும் வீடு வந்துசேர அல்லது அழிந்துபோக.

அஞ்சி அஞ்சி வாழ்ந்து பலரிடத்தில் அச்சமே தேய்மானமாகிப் போனது. அவர்கள் புதிய யுகத்தின் பிரதிநிதிகளாய் நெருப்புக் குஞ்சுகளைப் பிறப்பித்தனர். பலர் நெருப்புக் கவிதைகள் எழுதினர்.

ஆனாலும் வனித்தா அன்று அச்சப்படும் நிலைமைகள் குறித்தே பேச ஆரம்பித்திருந்தாள்.

"சும்மா கொழகொழவெண்டு கத்திக்கொண்டு இருக்காதையுங்கோ அப்பா. எனக்கு சத்தமெண்டாலே அலேர்ஜியாயிருக்கு. அம்மா வேற ஊரில அங்கங்க நடக்கிற கதையளைச் சொல்லி பயமுறுத்தியிட்டா. எடுத்ததுக்கெல்லாம் பயமாயே வருகுது. எந்தச் சத்தத்தைக் கேட்டாலும் மனம் திக்கெண்டு அடிக்குது" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... வனித்தாவுக்கு உயிராசை வந்திட்டுது" என்றாள் கலாராணி.

எல்லோரும் சிரித்தனர்.

அதைக் கேட்டு வனித்தா கோபத்தோடு சொன்னாள்: "ஓம், எனக்கு பயம் வந்தது மெய்தான். ஆனால் அது உயிர் காரணமாய் வரேல்லை."

"பின்னை...?"

"உடம்பு காரணமாய் வந்தது. அது மான அச்சமோ, கற்பு பறிபோயிடும் - பெண்மை அழிஞ்சிடுமெண்ட - அச்சமோகூட இல்லை. பாலியல் வல்லுறவில பெண் வதைக்கப்படுகிற, சிதைக்கப்படுகிற அச்சத்தைத்தான் நான் சொன்னது."

யாரும் எதிர்ப்பேச்சுக் காட்டவில்லை. சிரிப்பு அடங்கி விட்டிருந்தது. வனித்தாவின் கருத்தினது அங்கீகாரமாய் மௌனம் அங்கே சுழன்றது.

அவர்கள் புதிய காலத்தினர். அச்சத்தையும் நாணத்தையும் நாய்களுக்காக்கினவர். புதிய பெண்ணறம் விதிப்பவர். ஆனாலும் கலவர சமயங்களிலும் போர்க் காலங்களிலும் எதிரியை அழித்தல் என்பதின் ஓர் அடையாளமாய் பாலியல் பலாத்காரமே பிரயோகிக்கப்படுகிற நிலையில் அவர்களின் அந்த அச்சத்தை நியாயமில்லையென்று சொல்ல முடியாதுதான்.

சிறிதுநேரத்தில் செல்லக்கிளி அந்த மௌனத்தைக் கலைத்து வேறு திசைக்கு உரையாடலை நகர்த்தினாள். "ராகினி, புதிதாய் என்ன எழுதியிருக்கிறாய்?"

தலையசைப்பில் பதில் தெரிவித்தாள் ராகினி.

"அதுசரி... தமிழ்நாட்டுப் பத்திரிகையில வந்த கவிதையைத் திரும்ப எடுத்திட்டியா?" என்று கேட்டாள் பரணி.

"இன்னுமில்லையப்பா. தெரிஞ்ச ஒரு ஆளுக்கு எழுதியிருக்கிறன். கெதியில கிடைச்சிடுமெண்டுதான் நினைக்கிறன்."

தொடர்ந்து சிறிதுநேரம் அவசியமற்ற பேச்சுக்களில் கழிந்தது.

கவிதை கிடைக்காத விஷயம் வனித்தாவுக்கும் தெரியும். "இந்த நிலைமையெல்லாம் எப்ப மாறப்போகுதோ? நாங்கள் எப்ப நிம்மதியாயிருந்து கதைச்சு... சிரிச்சு... படிச்சு... எழுதி... வாழுறதோ?" என்று சலிக்கத் துவங்கினாள் மறுபடியும்.

"என்ன இது.... நீ இண்டைக்கு வந்தநேரத்திலயிருந்து சலிச்சுக்கொண்டே இருக்கிறாய், வனித்தா?" என்றாள் செல்லக்கிளி.

அப்படியொரு கேள்விக்கு யார்தான் பதில்சொல்ல ஏலும்?

மௌனம் வழிய நின்ற வனித்தாவை தேற்றினாள் கலாராணி. "முடிஞ்சிடும், வனித்தா. கெதியில முடிஞ்சிடும். எங்கட வாழ்வு திரும்ப எங்களிட்ட வரும். நாங்கள் அதை விரும்பினபடி வாழத்தான் போறம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனித்தா அடங்கினமாதிரித் தெரிந்தது. ஆனால் ராகினி கிளர்ந்தாள்: "அமைதிப் படை இனி திரும்பலாமெண்டு தென்னிலங்கையில கேக்கத் துவங்கியிருக்கிற குரலை வைச்சுக்கொண்டு கலாராணி இப்பிடிச் சொல்லுறா போல இருக்கு. எனக்கு அதில நம்பிக்கை இல்லை. அதைவிட மோசமான நிலைமைகூட அவை போனபிறகு ஏற்படலாம். என்டாலும்.... அவை போகவேணுமெண்ட கருத்தில எனக்கு மாறுபாடு இல்லை."

"நாங்கள் நல்லதை நினைப்பம். சிறீலங்கா அரசு புலிகளோட கெதியில ஒரு இணக்கத்துக்கு வருமெண்டு நம்புவம்" என்று கூறி அதை விவாதமாய் வளர்த்தாமல் விட்டுவிட்டாள் கலாராணி.

இளநீர் குடிக்கலாமா என்று கேட்டு பேச்சைக் கலகலப்புக்குத் திருப்பினாள் பரணி.

"ஐயையோ....!" என்றாள் ராகினி.

"என்னடி.... வயித்தைப் பிடிக்கிறாய்?" என்றாள் செல்லக்கிளி.

"எனக்கு வேண்டாமடி. இண்டைக்கு மத்தியானச் சாப்பாடே எனக்கு முட்டுக்காய்த் தேங்காய்தான்."

கொக்கைத் தடியை எடுத்துவந்து கொடுத்து ஒரு பதிவான இளந்தென்னையைக் காட்டி இளநீர் பிடுங்கச் சொல்லிவிட்டு வீட்டுக்கு ஓடினாள் செல்லக்கிளி. பானையில் சிறிது சோறு இருந்தது. சோற்றை கறிச் சட்டியில் போட்டு புரட்டி எடுத்து கோப்பையில் வைத்துக்கொண்டு செம்புத் தண்ணீருடன் திரும்பிவந்தாள்.

"இந்தா.... ராகினி.... சாப்பிடு."

ராகினி சாப்பிட்டாள்.

அவர்கள் அடுத்த சந்திப்பை மறு பூரணைக்கு என்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாயினர்.

அவர்களது பயணங்கள் வெவ்வேறு திசையில்.

வழியும் தனித்தனி வழி.

பயணம் பகலில்கூட அங்கு அச்சமானது.

ராகினி சைக்கிளை எடுத்தாள்.

அடிமனத்தில், மேற்கில் சாயும் மஞ்சள் சூரியனைப் பார்க்க, ஒரு குடைவு.

உப்புக் காற்று சற்றுப் பலமாகவே வீசிற்று.

அதில் உவர்ப்பு மட்டுமில்லை, சிலவேளைகளில் பச்சை ரத்த வாடை, சிலவேளைகளில் உயிரைச் சில்லிட வைக்கும் அலறல், சிலவேளைகளில் மரண தருணங்களைக் காட்டும் ஹீனஸ்வரங்கள்கூட மிதந்து வருவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

கொழும்பிலிருந்து சாமான் லொறி ஓட்டிக்கொண்டு சிவா அன்று காலை வேலணை வந்திருந்தான்.

லொறிக்கு என்ஜினில் சிறிது பழுதுபார்க்க வேண்டியிருந்தது. தெரிந்த மெக்கானிக் ஒருவனை அழைத்து வந்து அதைத் திருத்தச்சொல்லி விட்டுவிட்டு, அந்த இடைவெளியில் தீவிலிருக்கும் தன் மாமன் வீட்டாரைப் பார்க்கிற எண்ணத்தில் படகெடுத்து நயினாதீவு வந்தான்.

கோயில் பாலத்தடியில் இறங்கி விறுவிறுவென நடக்கத் துவங்க, எங்கோ கோயில் பக்கமாய் நின்றிருந்த தியாகு அவனைக் கண்டுக்கொண்டு ஓடிவந்தான். "சிவா...! சிவா...!"

"என்ன?"

"திரவியம் வரேல்லை...?"

"இல்லை."

"எப்ப வரும்?"

"தெரியாது."

"நீ இந்தியாவுக்குப் போகேல்லை?"

"நான் ஏன் போகவேணும்?"

"சுதனைப் பாக்க"

"ஓ! போகேல்லை."

"போவியா?"

"இல்லை, போகமாட்டன். வேற வேலை இருக்கு."

"போறதாயிருந்தால் என்னைக் கூட்டிக்கொண்டு போவியா?"

"எதுக்கு? சுதனைப் பாக்கவா? அதுக்குத்தான் சரியான ஒரு ஆள் இஞ்ச இருக்கிறாரே... அவரைக் கேக்கிறதுக்கென்ன?"

"ஆரைச் சொல்லுறாய்...? ஓ... யோகேஷையோ?"

"அவர்தான். அவர்தானே இப்ப ரைகருக்கு ஆபத்துப் படகோட்டி!"

"அது இப்ப படகோடப் போறதில்ல. போனாக் கூட்டிக்கொண்டு போறனெண்டு ஒருநாள் நான் கேட்டதுக்குச் சொல்லிச்சுது. சொல்லி... கன நாளாச்சு. போற எண்ணம் இல்லைப்போல."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா ஒன்றும் பேசவில்லை.

"அதுசரி... திரவியத்தின்ர தேப்பனை நீ பாக்கப் போகேல்லையோ?"

"இல்லை."

"ஏன், முந்தியெல்லாம் ஓடியோடிப் போய்ப் பாப்பியே? ஏதாவது பிரச்சினையோ அவரோட? அவரும் மனிசரோட கதைக்கப் பேசத் தெரியாத ஆள்தான்..."

சிவாவுக்கு தியாகுவின் பேச்சு எரிச்சலை ஏற்படுத்தியது.

நடந்தபடியே பேசிக்கொண்டு வந்தவன் நின்றான். "உனக்கு இப்ப சுதனைப் பாக்கவேணும்?"

"ஓம், சிவா."

"அதுக்காக இந்தியா போகவேணும்?"

"ஓம்."

"சுலபமான வழியொண்டு சொல்லுறன் கேள். அதோ... மேற்காலை பார். அதுதான் கடல். குதிச்சியெண்டால் அடுத்த கரையில் போய் மிதக்கலாம். இதைவிட பேற வழியில்லை. ஆரும் உன்னைக் கூட்டிக்கொண்டு போவினமெண்டு காத்திராதை."

அவனுடைய எண்ணமும் அதுதான். தியாகு மேற்றிசை திரும்பி பார்வையை தரிசன விளிம்பில் நிலை குத்தினான்.

சிவா நடந்தான்.

அடுத்த முகரி தாண்ட எதிர்பாராதவிதமாக சங்கரப்பிள்ளை வாத்தியார் நின்றிருந்தார். அவனைக் கண்டதும் பேசிக்கொண்டிருந்தவரை அவசரமாய் அனுப்பிவிட்டு அவனை நோக்கித்திரும்பினார். 'எப்ப வந்தது? திரும்புறது எப்ப? வவுனியா நிலைமை எப்பிடி? திரவியம் என்ன செய்கிறான்?' என்பது மாதிரியான கேள்விகளோடு விடுவதாயில்லை அவர். குடும்பத்தை யாழ்ப்பாணத்துக்குப் போகவிட்டுவிட்டு அங்கேயே இருந்து கொண்டிருந்தவர் இப்போதெல்லாம் அக்கம் பக்கத்து வீட்டு மனிதர்களோடு அதிக சங்காத்தம் வைத்து போய்வந்து கொண்டிருந்தார்.

ஐந்து வருஷம் / பத்து வருஷத்துக்கு முந்திய தீவாக அது இல்லை. எவ்வளவோ மாறிப்போய் விட்டிருந்தது. மனிதர் பலபேர் இல்லை. ஒரு நாச்சியார் சந்தையடி ஏகாதிபத்தியத்தில்; ஒரு செல்லத்தம்பு வியாபார வியூகங்களுடன்; ஒரு சங்கரப்பிள்ளை கந்தபுராணத்தில் உறைந்து கொண்டு; ஒரு அபூபக்கர் வாழ்க்கைக்கான சாமான்ய யுத்தத்தில்; இவர்களது வாழ்க்கையின் களமாக அம்மண் இன்னும் விரிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரப்பிள்ளை வாத்தியாரிடம் அகப்பட்டிருக்கக் கூடாதென்று விரும்பினான் சிவா. அவரோடு நிறையப் பேசுவது சிரமமென்று தோன்றிற்று. போன தடவை சந்தித்த போதுவரைக்கும் திரவியத்தின் நண்பனாய் அவன் பதில் சொல்லி வந்தான். இனி அந்த மாதிரிச் சொல்ல முடியாது. அவருக்காக பழைய மாதிரி ஒரு பதிலைச் சொல்வது அவனுக்குக் கடினம். அவர், அவர்களது முரணை அறியாதவர். அறிய வைத்துவிட்டு விலகிப்போவது பெரிய காரியமில்லை. ஆனால் முடியாமலிருந்தது. மறுத்தும் விடாமல் வா, உன்னோடு நிறையப் பேசவேண்டுமென்று வீட்டுக்கு அழைத்துப் போனார்.

பெண் இல்லாத வீடு.

ஆனாலும் படுசுத்தமாக இருந்தது.

அடுப்பிலே கேத்திலில் நீர் சூடாக இருந்திருக்க வேண்டும். தாமதமின்றி தேநீர் போட்டு வந்தார்.

மகன் பற்றித்தான் முதலில் பேச்சைத் துவங்கினார்.

வீடுகளுக்குப் போய் பாடம் சொல்லிக்கொடுப்பதையும் அண்மையில் குழந்தை பிறந்திருப்பது பற்றியும் மணிமேகலை என்று பெயர் வைத்திருப்பதையும் சொன்னான்.

'ம்ச்!' என்று அலுத்தாற்போல் சொல்லிவிட்டு சிறிதுநேரம் பேசாமலிருந்தார்.

பிறகு வேறு விஷயத்துக்கு மாறினார். "எங்களைக் காப்பாத்தவெண்டு வந்த இந்திய அமைதிப்படை இப்பிடி நடந்துட்டுதே, தம்பி! எவ்வளவு சாவு.... எவ்வளவு பொருள் அழிவு....! இன்னும்தான் குழப்பம் தீரேல்லையே. ஆறு மாசமாய் என்ர பென்சன் காசு வரேல்லை. கொழும்புக்குப் போய்த்தான் எடுக்கவேணும்போல இருக்கு. கடைசிக் காலத்தில முருகனேயெண்டு விழுந்துகிடந்து சாகவும் ஏலாமல் போச்சு. எங்கட கஷ்ரத்தைப் பாத்தியே, சிவா" என்றார்.

அவனிடத்திலேயே அந்தக் கேள்விகள் உண்டு; முறைப்பாடுகளும் உண்டு.

நழுவும் பதில்களைச் சொன்னான்.

தொடர்ந்து, "இதுக்கெல்லாம் என்ன முடிவு, தம்பி? கூட நிக்கிற இயக்கங்களாவது கொஞ்சம் சனங்களை அனுசரிச்சுப் போனாலென்ன?" என்று பிரலாபித்தார்.

"அவ்வளவு தொந்தரவாயிருக்கா....?"

"தீவு ஏன் வெறுமையாய் இருக்கெண்டு நினைக்கிறாய்? தானாய்ப் போன சனம் பாதி; மீதிச் சனம் இந்தத் தொந்திரவுக்குப் பயந்துதானே ஓடிச்சுதுகள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் எதாவது செய்ய முடியுமா என்ற யோசனையின்றியே குறைகளை அடுக்கிக்கொண்டு போனார் வாத்தியார்.

கேட்டுவிட்டு சிவா எழுந்தான்.

தன் ஊர் என்ற தளத்தில் அக்குறைபாடுகளில் அவனுக்குப் பெரும் பாரமாய் இருந்தது மனது.

"நான் வரப்போறன், சேர். வேலணையில லொறி நிக்குது. பொழுதுபடுகிறதுக்குள்ள வவுனியா தாண்டவேணும். இல்லாட்டி பாஸ் முடிஞ்சிடும்...."

"இப்ப லொறியே ஓடுறாய்? கனகாலமாயோ?"

"இப்ப ஒரு அஞ்சாறு மாசமாய்த்தான்."

"அப்ப, லொறியிலயாச்சும் திரவியம் ஒருக்கா வந்து போகலாமே!"

சிவா உள்ளே சிரித்துக்கொண்டான். 'திரவியம் வரமாட்டான். நான் லொறி ஓடத் துவங்கினதிலயிருந்துதான் எங்களுக்குள்ள தகராறே வந்தது' என்று மனத்தில் நினைப்பு ஓடியது.

"சரி, அவசரத்தில நிக்கிறாய்; போயிட்டு வா. நான் சொன்னதுகளை மறந்திடாமல் அவனிட்டச் சொல்லு."

சிவா வெளியே வந்தான்.

தூரத்தில் பிக்கு ஒருவர் போய்க்கொண்டிருந்தார் விகாரை நோக்கி. சங்கரானந்தரில்லையென்று தெரிந்தது. அதே நேரத்தில் திரவியம் சங்கரானந்தரைச் சந்திக்கவேண்டுமென்று சொல்லியிருந்தது ஞாபகமாயிற்று. தொடர்ந்து.... அவன் அன்றொருநாள் முன்வைத்த விவாதக் கருத்து நினைவில் விரிந்தது.

அன்று சிறுபிள்ளைத்தனமாய் பிடிவாதம் பிடித்ததாய்ப் பட்டது அவனுக்கு.

'யுத்த நிலைமையைச் சாதகமாய் வைச்சு யாவாரிகள் கொள்ளை லாபம் அடிச்சுக்கொண்டிருக்கிறாங்கள். சின்னச்சின்ன இயக்கங்கள் சில யாவாரிகளுக்குத் துணை. ஒரு பேரத்திலதான் லொறிகள் யாழ்ப்பாணத்துக்குப் போய்க்கொண்டிருக்கு. இந்தக் கொள்ளையில நீ சம்பந்தப்பட்டிருக்கக் கூடாது, சிவா.' திரவியம் தன் முரணை இவ்வாறுதான் பிரசன்னப்படுத்தினான்.

'ஆர் இதில ஆதாயம் அடையினம், ஆர் கொள்ளலாபம் அடிக்கினம் எண்டதுபற்றி நான் யோசிக்கேல்லை. அங்க இருக்கிற சனத்துக்கு பால்மா, சீனி, மாவு, அரிசி, மிளகாய் சரக்கெல்லாம் தேவை. என்ர ஒரே அக்கறை அதுதான்' என்றான் இவன்.

இவனது நியாயத்தை அவன் ஏற்றுக்கொள்ளவேயில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இது ஒரு வலை, சிவா. இது எங்க காண விரிஞ்சிருக்கெண்டு எனக்குத் தெரியும். பின்னால நடக்கப்போற எத்தினையோ சம்பவங்களுக்கான மூலத்தை இதில நான் பாக்கிறன்.'

'என்னால எதையும் பாக்கமுடியேல்லை.'

'அது ஒவ்வொருதரின்ர சிந்தனை ஆழ்ச்சியையும் பொறுத்தது. கனக்க ஏன் கதைப்பான்? எங்கட சிநேகிதத்தை மதிக்கிறதாய் இருந்தால் நீ இந்தத் தொடர்பை விட்டிட வேணும்!'

இவனுக்குச் சிந்தனை போதுமான அளவு இல்லை என்பதாய்க்கூட அதில் அர்த்தமிருந்தது. இவனுக்கு அது பொருளில்லை. இவனுக்கு அவன் இப்போதும் நண்பன்தான். ஆனால் தொழில்ரீதியான விவகாரங்களில் இவனால் எவருக்காகவும் நெகிழ முடிவதில்லை.

சிவா விரைந்து நடந்தான்.

வெய்யில் உறைக்கத் தொடங்கியிருந்தது.

## 6

தன் ஆன்ம வியப்திக்கான எல்லைகள் குறுகிப்போய்விட்டதாய் அவனை ஒரு எண்ணம் பீடித்திருந்தது. ஒரு பிரமைபோல் அது அவனை அழுத்திக்கொண்டிருந்தது.

அது தவிர்க்கவியலாத நிலையென்றே பட்டது. எந்நேரமும் இன மத மொழி வேறுபாடுகள் பற்றியும், துவேஷங்கள்பற்றியும், கலவரங்கள் அழிவுகள் பற்றியும் யோசித்துக்கொண்டிருந்தால் மனம் அம்மாதிரி ஓர் அழுத்தத்துள் வீழ்வது உறுதிதான்.

இப்போதெல்லாம் முன்புபோல் அவன் வெளியே போவதில்லை. நிமால் பெரேரா வீடு மாறிக்கொண்டு போயிருந்தான். சிவாவோடு கொண்ட மனஸ்தாபத்தினால் அவனது அறைக்கும் போவதில்லை. அனில்'லை மட்டும் வீட்டுக்குப் போய்ச் சந்திப்பான். அதுவும் அருகிக்கொண்டு வந்தது. அனில் அடிக்கடி கொழும்பு போய்வந்துகொண்டிருந்தார்.

அன்றைக்கு பொழுதுபடுகிற நேரம்வரை எழுதிக் கொண்டேயிருந்தான். எழுதி முடியும்வரை காத்திருந்ததுபோல அவன் பேனையை மூடி வைக்கவும் சுவர்ணா குழந்தையோடு வந்தாள்.

"மேகலையைக் கொஞ்சம் வைச்சிருங்கோ, குளிச்சிட்டு வந்திடுறன்."

திரவியம் குழந்தையை வாங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கெதியில வா. நானும் குளிச்சிட்டு அனில் அய்யாவைப் பாக்கப் போகவேணும்" என்று கிணற்றடிக்குப் போய்க்கொண்டிருந்தவள் பின்னால் குரல் கொடுத்தாள்.

குழந்தையை வைத்துக்கொண்டு திண்ணையில் அமர்ந்தான்.

அனில் இன்னும் இரண்டு நாளில் கொழும்பு போகவிருந்தார்.

அவர் நியாயமாய்ப் பேசினார்; ஞானமாய்ப் பேசவில்லையென்ற சிறிய குறையொன்று அவனுள் மெல்ல தலை நீட்டத் தொடங்கியிருந்தது. அவரின் கருத்துக்களோடு அவ்வப்போது ஏற்பட்ட மோதல் அவன் வளர்ந்ததினால் அல்ல; அவர் தளர்ந்ததினாலேயே ஏற்பட்டது என்றொரு திண்ணம் எழுந்திருந்தது அவனிடத்தில்.

இருந்தாலும் வழமைபோல் சந்தித்தார்கள்.

இருவருமே தம்தம் கருத்துக்களில் ஒரு தளர்வு கண்டிருந்ததே மெய்.

குழந்தை அவனிடம் இருப்பதைவிட கீழே போய் விளையாட விரும்பித்தான் திமிறிக்கொண்டிருந்தது. அபயன் எதிர் வீட்டுப் பையனுடன் படலையடியில் விளையாடிக் கொண்டிருந்தான். குழந்தை அங்கேதான் பார்த்துக்கொண்டு உருவமுனைந்தது. குளிக்க வைத்து, சட்டை மாற்றி, பவுடர் பூசி, பொட்டு வைத்துக் கொடுத்திருந்தாள் சுவர்ணா. இந்தக் கோலத்தில் கீழே விடவேண்டாமென அதன் திமிறலை கைக்குள் அமுக்கி அடக்கி வைத்துக்கொண்டான். குழந்தை எரிச்சலடைந்து அவன் தாடியைப் பிடித்து இழுத்தது. முகத்தைப் பிறாண்டியது. பொக்கற்றிலிருந்து பேனையை சடுதியில் உருவி வீசியது. சில்லறைக் காசுகள் சிலவற்றை எடுத்துக் கொடுத்து அதன் பராக்கைத் திருப்பினான் திரவியம்.

குளித்து முடிந்து சுவர்ணா வந்தாள்.

குப்பென்று வாசனை வீசியது நெருங்கி வந்து குழந்தையைத் தூக்கினபோது.

குளித்த மேனியின் குளிர்ச்சி குப்பெனச் சூடேறிய அவனுடலில் பட்டு உணர்கையாகியது.

அவன் தேகம் எரிந்துகொண்டிருக்கிறதா?

வாழ்வுக் குதூகலிப்பின் விகாசம் அவள் முகத்தில் இருந்தது.

புறநிலை எதார்த்தமே வாழ்வை ஒரு தாபமாக்கி விட்டிருந்ததாய்ப் பட்டது. அன்றாடம் வேட்டுக்களும் மரணங்களும் அங்கச் சிதறல்களும் சரித்திரமாகிக் கொண்டிருந்த காலவெளி அது. மரணம் கண்ணிமைக்குமுன் வந்து எவரையென்றில்லாமல் கவர்ந்து சென்றது. குறி முதுமையா, இளமையா, பிஞ்சா என்று அக்கறைப்படாது மரணம். பெரும் அதிர்வுகளுடனும், பெரும்பெரும் சப்தங்களுடனும் வெடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுகளால் இதயங்கள் பலருக்கு நின்றன. சிலருக்கு மனச்செயலிழப்பு நிகழ்ந்தது. காயங்களுக்கான சித்திரசிகிச்சையில் தொடைத் தசை பலருக்கும் முகத் தசை ஆகியிருந்தது. சிலருக்கு கணுக்கால்வரை, சிலருக்கு முழங்கால்வரை, சிலருக்கு தொடைப் பொருத்துவரை கால்கள் அறுபட்டிருந்தன. கையிழந்தோர் பலர். கட்டைகளும் சக்கர நாற்காலிகளும் கால்களான மனிதர் மிக அதிகமாக அந்தக் காலப்பகுதிக்குச் சொந்தமாயிருந்தனர். கையின் பதிலிகள் பெருமளவு உதவியாயிருக்கவில்லை. அது ஒரு குறைகளின் யுகம். அது காரணமாகவே வாழ்வு அதிகம் விழைச்சலைப் பெற்றிருந்தது. எமது பூமி / எமது பொழுதுகள் / எதுவுமே எமக்கு / இல்லையென் றானபின் / இதுபோல் ஒருபொழுது / கிடைக்காமலும் போகலாம்.... என்றொரு அவதி. எனவே யசோதரா / நீ / இக்கணத்தில் வாழ்ந்துவிடு.... என்றொரு ஆக்ஞாபித்தல்.

அவன் குளித்துவிட்டு வந்தான்.

குழந்தை திண்ணையில் விரித்த பாயிலிருந்து விளையாடிக் கொண்டிருந்தது.

பசி தீர்ந்த அமைதி உடலெங்கும் தெரிந்தது.

சுவர்ணா ஏதோ யோசனையில் மூழ்கியபடி.

அவளுக்கு அவ்வப்போது அம்மா நினைவு வந்தது.

அம்மா அழிவின் சின்னமானது அம்மா விரும்பியல்லவே!

அவளால் அங்கேயெல்லாம் இனி செல்ல முடியாது. ஆனால் அவள் அம்மா அல்லது பெரியம்மா அண்ணன் யாரேனும் அங்கே வந்திருக்க முடியும். ஒருவேளை அவள்போல் பாசம் அவர்களில் யாருக்கும் இல்லையோ? தன் வருத்தத்தை அவள் அவனிடம் ஒருநாள் சொன்னபோது, அவன்தான் தெரிவித்தான் அவளது முகவரி தெரிந்தால்தானே அவர்கள் கடிதம் எழுதுவதும் வருவதும் என்று. அதன் பின்னர்தான் ஒரு அந்நியளாய் சிங்கள மொழி எடுத்து அவள் அம்மாவுக்கு கடிதம் எழுதினாள். இப்போது அவளது காத்திருப்பு குறைந்த பட்சம் அவர்களது கடிதத்துக்கானதுதான்.

"சுவர்ணா....!"

"ம்....!"

"என்ன யோசனை?"

அவள் சிரித்தாள்.

அவன் சொல்லிக்கொண்டு அனில் வீடு புறப்பட்டான்.

அவளின் வாசனையும் எழிலும் வெகுநேரம்வரை அவன் நெஞ்சில் அப்பியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

திரவியத்தைக் கண்டதும் அனில் பெரிதாக முகம் விகாசித்தார்.

அவனை எதிர்பார்த்திருந்திருப்பாரோ?

வீட்டில் தனிமை விழுந்து கிடந்தது.

ஹோலுக்குள் அனில் எதிரே அமர்ந்திருந்தபடி நேரே தெரிந்த குசினியை எட்டிப் பார்த்தான்.

"சோமா கடைக்குப் போயிருக்கிறாள். இப்ப வந்து விடுவாள். சரி. சொல்லியிருந்தபடி இந்தக் கிழமை நான் கொழும்புக்குப் போகவில்லை. அடுத்த வாரம்தான் சரிவரும்போலத் தெரிகிறது. அதற்குள் என் நூலை முடித்து, கையெழுத்துப் பிரதியை போகிறபோதே கொண்டுபோகிற எண்ணம்" என்றார் அனில்.

இலங்கையின் இன ஐக்கியம் : சாத்தியங்கள் மீதான ஒரு சமூக அரசியல் விசாரணை என்ற தலைப்பிலான ஒரு நூலை அவர் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கியிருந்தது அவனுக்குத் தெரியும்.

"நூல் இன்னும் முடியவில்லையா? முடித்திருப்பீர்கள் என்று நினைத்திருந்தேன்!" என்றான்.

"முடிந்தமாதிரித்தான். இறுதி அத்தியாயத்தில் நின்று கொண்டிருக்கிறேன். அது நூலின் அர்த்தங்களது தொகுப்பாக முடிவுரைபோல் அமையவேண்டியது. கொஞ்சம் கூடுதலான நிதானத்தோடு செய்துகொண்டிருக்கிறேன்."

அவர் தன்னை எதிர்பார்த்திருந்த ஆவலின் காரணத்தை விளங்க அவனால் முடிந்தது. எந்த விஷயத்திலும் ஒரு அலசலைத் துவக்கி, தனது கருதுகோள்களை எதிர்நிலைகளின் விவாததளமூடாகவும் வலிமைப்படுத்தும் உத்தியை முன்பும் அவர் கையாண்டிருக்கிறார்.

ஆங்கிலத்தில் எழுதும் அந்த நூலை சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்ப்பித்து வெளியிடுகிற எண்ணமும் அவருக்கிருந்தது. ஆங்கிலப் பதிப்பு எதிர்கொள்ளும் விமர்சனங்களிலிருந்து அதை அவர் தீர்மானிக்கவிருந்தார்.

"பிளாஸ்க்கிலே பிளெய்ன் ரீ இருக்கிறது. வார்த்துக்குடி. அப்படியே எனக்கும் ஒரு கோப்பை ஊற்றி வா. சிரமமாயிருந்தால் கொஞ்சம் பொறுத்திரு, சோமா வந்ததும் குடிப்போம்" என்றுவிட்டு தன் அறைக்குப் போய் ஒரு கோப்பினை எடுத்துவந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீரை ஊற்றி ஒரு கோப்பையை அவரிடம் கொடுத்துவிட்டு தானும் ஒரு கோப்பை தேநீரோடு வந்து உட்கார்ந்தான் திரவியம்.

தேநீரைக் குடித்தபடி அனில் சொன்னார். "இரண்டு மூன்று நாட்களுக்கு உன்னுடைய உதவி எனக்கு வேணும், திரவி. இவ்வளவு தூரம் உன்னை வரச் செய்யவும் எனக்கு விருப்பமில்லை. ஆனால் வேற வழி....? அதுக்கு முதல் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு: சிவாவுக்கும் உனக்கும் மனஸ்தாபம் இருக்கிறது எனக்கு முன்பே தெரியும். காரணம் தெரியாவிட்டாலும் வெகுவிரைவில் நீங்கள் சமாதானமாகிவிடுவீர்கள் என்றே எண்ணியிருந்தேன். இவ்வளவு காலமாகியும் யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்து இணங்கிப்போகவில்லை. உங்கள் இருவரையுமே நன்கு தெரிந்த நான், இனியும் இப்படியே போக விட்டுவிட்டு இருக்க முடியாது. அதனால் உங்கள் பிரச்னை குறித்த காரணத்தை உங்கள் சொந்த விஷயமென்று விட்டிருக்காமல், வெளிப்படையாய்க் கேட்கவேண்டிய அவசியம் எனக்கு வந்திருக்கிறது. சொல், உங்களுடைய பிரச்சினை என்ன? என்னிடம் சொல்லலாமா....? அல்லது...."

"உங்களுக்குச் சொல்லுறதுக்கென்ன....?" என்று நெளிந்தான் திரவியம். "அநேகமாக எங்கள் நண்பர்கள் எல்லாருக்குமே இது தெரியும். மறைக்கிறதுக்கும் இதில் எதுவுமில்லை. சிவா இப்பவெல்லாம் மாற்று இயக்கங்களோடு தீவிரமான தொடர்பு வைத்திருக்கிறான். கொழும்பிலயிருந்து யாழ்ப்பாணத்துக்கு சாமான் ஏற்றி வருகிற தனியார் நிறுவன லொறிகளை ஆமி பரியர் தாண்டி கொண்டுபோய் விட்டு தரகு வேலை செய்கிறான். தானே யாழ்ப்பாணத்துக்கு லொறிகளை ஓட்டிக்கொண்டும் போகிறான். அது எனக்குப் பிடிக்கேல்லை."

"ஏன்?"

"வியாபாரிகளிடம் அதற்காக நிறைய பணம் வாங்குகிறான். ஒரு பங்கு பணம் மாற்று இயக்கங்களுக்கும் போய்ச் சேருது. இதனால் தீப்பெட்டி, லக்ஸ்பிறே, அரிசி, சீனி, பருப்பு எல்லாம் நெருப்பு விலை விற்கிறதாம் வவுனியாவுக்கு அப்பாலே."

"சிவா செய்யாமல்விட்டால் என்ன? அதை வேறு ஒருவன் செய்வான்தானே! இந்தமாதிரி ஒருமுறை யோசித்துப் பார்.... வேறொருவனாவது செய்யத்தானே வேண்டும்! இல்லாவிட்டால் மக்களுக்கு சாமான்கள் கிடைப்பது எப்படி? அதைச் சிவா செய்கிறபொழுது உங்கள் நட்புக்குள் விரிசல் ஏன் வரவேண்டும்? இது எனக்கும் புரியவேயில்லை."

"அதனால் மாற்று இயக்கங்களோடு நிறையப் பழக வேண்டி நேர்கிறது...."

"இருக்கட்டுமேன்! நீ புலி ஆதரவாளனா?"

"இல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப... அவன் மற்ற இயக்கங்களோடு ஏன் தொடர்பு வைத்திருக்கக் கூடாது? நீ கூட மாற்று இயக்கங்கள் என்றுதானே குறிப்பிடுகிறாய்? மாற்று என்பது நல்ல பதம். நீ அறியாமலே உன் வாயிலிருந்து வந்திருக்கிறதுபோலும்! அதனால்தான் அதன் அருமையை நீ அறியாதிருக்கிறாய். அவ்வாறு... ஒன்றுக்கு மாற்றானதுடன் தொடர்பு ஏன் கூடாது?"

அவன் ஏதோ சொல்ல முனைந்தான். ஓர் அலுப்பில்போல் அதை வேண்டாமென ஒதுக்கினான். சிறிதுநேரம் மௌனமாயிருந்துவிட்டு பின் சொன்னான். "நான் என் மண்ணை நேசிக்கிறேன்.... என் மக்களை நேசிக்கிறேன்."

தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு அவனை நிமிர்ந்து நோக்கினார் அனில். "நாங்கள் வெறுக்கிறதாய்ச் சொல்கிறாயா?" என்றார்.

அவன் அச்சோர்விலிருந்து இன்னும் விடுபடாமலே, "உங்கள் நேசிப்பில்.... விசுவாசமில்லை.... அது.... நடிப்பு...." என்றான்.

"எங்கள் நேசிப்பில் விசுவாசமில்லையா?" அனில் உண்மையிலேயே திகைத்துப்போனார். "அது எப்படி, திரவி?"

"தன்னலங்களோடுமான நேசிப்பு. இதில் தன் நலத்துக்கும் தேசப்பிரியத்துக்கும் ஜன பிரேமிப்புக்கும் முரண் வருகிறபோது நேசிப்பை அடங்கிநிற்க வைக்க அல்லது அழித்துக் கொள்வதற்குச் சம்மதித்து நிற்பது. நேசமென்பது அதுவல்ல." அவனுக்கு கோபமேறத் துவங்கியிருந்தது.

அவர் தன்னுள் சிரித்தார்.

அவருக்கு அவனின் அதுமாதிரிக் கோபங்கள் பிடிக்கும்.

தான் கொள்ளவிருந்து கொள்ளமுடியாது போன கோபங்களென்ற உறுத்தல், அப்போதெல்லாம் சிறிய அளவிலாயினும் அவரிடம் தோன்றிச் சடைக்கும். அனுபவப் பக்குவத்தால் அது தன்னுள்ளே அழிக்கப்பட்டதென்ற சமாதான உணர்வு நீண்ட நேரத்துக்கு பலமாய் எதிர்நிற்காது.

அவரின் உள்ளடக்கிய சிரிப்பை தன்மேலான கேலியாக எண்ணிக்கொண்டவன் மேலும் சினமடைந்தான். "துரோகங்களுடனான சமரசத்தை எப்படி உங்களாலெல்லாம் மேற்கொள்ள இயல்கிறது?"

"பொறு.... பொறு.... திரவி! நீ எதைத் துரோகமென்கிறாய்? மாற்றினையா? இல்லை, திரவி. மாற்று என்பது அவசியமான ஒன்றுதான். ஜனநாயகரீதியில் பார்த்தால்கூட அதற்கு முக்கியமான ஒரு இடமிருக்கிறது. ஒற்றைப் பரிமாணத்தில் ஜனநாயகம் செழுமை பெறுவதில்லை. அது பல்முனைகள், பல இயங்கு தளங்கள், பல்வேறு தளச் சிந்தனைகள் உடையதாயிருக்கவேண்டும். வரலாற்றை எடுத்துப் பார். அது நடந்துவந்த பாதை நெடுகிலும் ஒரு மாற்றுச் சிந்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தே வந்திருப்பது தெரியும். தமிழிலக்கியத்திலே சித்தர் பாடல்கள் கூட ஒருவகையான மாற்றுச் சிந்தனையின் வடிவங்களே. அக்கலகக் குரல்கள் விளிம்பு நிலை மனிதர்களின் நியாயங்களைப் பேசியவை."

"சரிதான். ஆனால் நீங்கள் மாற்று என்று கருதுகிற கலகக்குரல்கள் விளிம்பு நிலை மனிதர்களுக்கு எதிரானவை என்பதை உங்களால் காணமுடியவில்லையா?"

"சரி, விடு. சிவா எங்கேயும் போகப்போவதில்லை. அவன் உன் சிநேகித எல்லையைவிட்டு வெகுகாலம் வெளியே தரித்து இருந்துவிடவும் முடியாது."

சிறிதுநேரம் பேசாமலிருந்த திரவியம், "எனக்கு ஒன்று தெரியவேண்டும்" என்றான்.

"என்ன?"

"அமைதிப்படையின் செயற்பாடுகள் உங்களுக்குச் சம்மதமானவையா?"

அனில் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார். பின் எழுந்துபோய் அறை மேசையில் சிகரெட் எடுத்துவந்து பற்றவைத்தார். ஒரு இறுக்கத்திலிருந்து மீள்வதுபோல் நெடுமூச்செறிந்தார். பின் சொன்னார். "இது கொஞ்சம் விரிந்த பார்வையோடு அணுக வேண்டிய விவகாரம், திரவி. அதற்கு இது பொருத்தமற்ற சூழ்நிலையும் பொருத்தமற்ற நேரமாயும் இருக்கும். இருந்தாலும்.... சில விஷயங்களின் சரி அல்லது பிழை அம்சங்களை வெளிவெளியாகவே சொல்லிவிடுவது நல்லதென்றே படுகிறது."

அனில் தேநீர் குடித்து சிகரெட் புகைத்தார். சிகரெட் அடிக்கட்டையை சுண்டி வாசலூடு முற்றத்தில் விழச் செய்தார்.

"நாம் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ உலகம் வெகுவேகமாக மாறிவருகிறது, திரவி. தூரங்கள் குறுகுகின்றன. வேற்றுமைகள் குறைகின்றன. இந்த நிலையில் இனி சர்வதேச அரசியலே பேசப்படும். தனிமனிதர்களுக்கான நியாயங்களை அரசியலில் பொருத்திப் பேசக்கூடாது. அது வேறு விஷயம். அரசியல்வாதிகள் சொல்வது நடப்பதையெல்லாம் நான் இங்கே அரசியலென்று சொல்லவில்லையென்பதை நீ முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசியலில் தேசியங்களின் வளர்ச்சிக்கான காலமாக இந்த இருபதாம் நூற்றாண்டைச் சொல்லவேண்டும். இன, மொழித் தேசியங்கள் சர்வதேச அளவிலுமே வெகுவாகப் பேசப்பட்டன. பல தேசியங்களைக் கட்டியதே சோவியத் யூனியனின் அரசியல். அவற்றுக்கிடையே குமைவு உண்டு. அதன் காரணம், அதிகாரத்தைக் கையகப்படுத்தலுக்காய் உள் கிளரும் சக்திகளே. உலகமே ஒரு அமைப்பாகக் குறுகிவருகிற வேளையில் சாதி, சமய, இன, மொழிக் கோஷங்களை நீ எவ்வாறு புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்போகிறாய்? இதனுடைய அர்த்தம், இவை அவசியமற்றவை என்பதல்ல. இவற்றின் தளம் வேறு என்பதே. அரசியலுக்கும் இவற்றுக்கும் சம்பந்தமே இல்லை. முழுக்க முழுக்க இது சமுதாயம் சார்ந்தது.

காற்று இழைந்து உள்ளே நுழைந்தது.

குட்டி மேசையிலிருந்த தாள்களை படபடக்க வைத்து பறத்தி வீழ்த்தியது.

அனிலே அவற்றை எடுத்து பாரம் வைத்தார்.

"சரி, இனி நேரடியாக விஷயத்துக்கு வருகிறேன். இந்தியாவின் தலையீடுகள் இனப்பிரச்னையில் தமிழ்த் தலைவர்களாலும், அரசியல் பிரச்சினையில் அரசினாலுமே அவ்வப்போது பெறப்பட்டிருக்கின்றன. ஜேவிபியின் முதற் கிளர்ச்சிக் காலகட்டத்தில் சிறிமா அம்மையார் இந்திய ராணுவ உதவியைத்தான் கோரிப் பெற்றார். இந்தத் தளத்தில், இந்தியாவின் தலையீடு வெகு இயற்கையானது. இது படையெடுப்பில்லை; வரவழைப்பு. இது என்னிடத்தில் எந்தப் பிரச்னையையும் கிளப்பவில்லை. ஆனால்... நான் கவனம் குவிப்பதெல்லாம், இது ஒருவகையான வர்த்தக உடன்படிக்கையாக எப்படி மாறியதென்பதும், வியவகாரத்தைத் தன் சொந்தக் கையில் எடுத்துக்கொண்டு அமைதிப்படை யுத்தத்தைத் துவக்கியது எப்படி என்பதிலும்தான். இதிலுள்ள ராஜதந்திரக் குறை மிகவும் முக்கியமான ஒன்று."

"அப்படியானால்.... இந்தியா யுத்தத்தில் வென்று ராஜதந்திரத்தில் தோற்றதென்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?"

"நிச்சயமாக."

"அப்போ.... அது யாருடைய வெற்றி?"

"சிறீலங்காவினது, குறிப்பாக ஐ.தே.க. வினுடையது. இன்னும் சுட்டிச் சொல்வதானால் ஜே. ஆரினுடையது. அந்தக் கிழட்டுச் சிங்கத்தினுடையது தான் அந்த வெற்றி."

'அந்த வெற்றியினாலேயே உங்களுக்கு ஒரு பிரியம் அவர்மீது வந்ததைக் காட்டுகின்றனவே உங்கள் செல்லமான திட்டுதல்கள்!' என்று சொல்ல நினைத்தான். ஆனால் சொல்லவில்லை. எண்பதளவு வயது அந்த மூத்த அரசியல்வாதியின் பிரஸ்தாபம், அவனுள் ஒரு அருவருப்பை ஏற்படுத்திற்று. கண்டி யாத்திரைக்கு காரணமான துவேஷத்தின் பிரத்தியட்சம் கண்டாற்போல ஒரு வெறுப்பு. சாணக்கியங்களினூடாகவே அரசியல் நடத்துவது என்றாகிவிட்ட பிறகு அரசியலுக்கு இனி எங்கே அவனிடத்தில் மதிப்பு இருக்கப்போகிறது? உணர்வு ரீதியாகவன்றி அறிவார்த்தமாய் அரசியலை அணுகவேண்டுமென்பது அவனுடைய சித்தமாகவும் இருந்தது. அதுநோக்கிய திசைப்படிகளில் அவனது அடிகள் பதிந்து கொண்டுமிருந்தன. தமிழுணர்ச்சியை இன மான வெறியை தமிழ்த் தேசியமாக அவனால் உருமாற்ற முடிந்திருந்தது. இன்னும் விரிந்ததொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளத்துக்கு அது மேலேறுகிற தருணம் இது. இந்த நேரத்தில் ஒரு அதீத தனிமை வலயத்துள்ளும், ஒரு நம்பிக்கையீன வலையினுள்ளும் அவன் விழுந்துபோகிறான். எதன்வசத்தில் அவன் அகப்பட்டிருக்கிறானென்று தேர்வது கடினம். அது சுலபமாகிறபோது அவனுள் உள்ள முரண்கள் தாமாய் அழியும்.

ஒருபோது திரவியம் கேட்டான்: "இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்தவிருக்கிறதைப்பற்றி என்ன நினைக்கிறீகள், அனில் அய்யா?"

"நல்லதுதான்" என்றார் அனில். உடனடியாகவே, "தேர்தலை நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்வசம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நாடு திரும்ப அமைதிப்படை அவசரப்படுவதாகத் தெரிகிறது. சர்வதேச அரசியல் அரங்கில் ஜனநாயகத்துக்காக உரத்துக் குரலெடுக்கும் இந்தியா தன் முகத்தை இழக்க ஒருபோதும் விரும்பாது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நிறைவேற்று அம்சமாகவும் அது இருக்குமென்பதால் தேர்தலை நடத்த அது ஊக்குவிப்பது இயல்பானதுதான். இலங்கை அரசினதும் இந்திய அரசினதும் தலைமை மாற்றங்களும் இதில் கணிசமான பங்கு வகிக்கின்றன. மற்றொரு காரணம், இந்தப் படை நகர்த்தலின்மூலம் இந்தியாவுக்கு ஏற்பட்ட கோடி கோடியான ரூபாய் செலவு."

அந்தளவில் வெளியே சென்றிருந்த அனில்'லின் மனைவி உள்ளே வந்தாள். "யார்...? திரவியமா...?" என்றாள். "அன்றைக்கு வந்ததுக்கு இனி எப்போது வருவாயோ என்று பார்த்துக்கொண்டிருந்தேன்" என்றவள், "சரி, போகும்போது என்னிடம் சொல்லாமல் போகாதே" என்றுவிட்டு உள்ளே நடந்தாள்.

"சரி" என்றான் திரவியம்.

சுவர்ணாவுக்குத் தந்துவிட வட்டிலப்பம் அல்லது ஊரிலிருந்து உறவினர் யாரும் அனுப்பிய அச்சாறு அல்லது றம்புட்டான் பழம் ஏதாவது எடுத்துவைத்திருப்பாள் என்று நினைத்துக்கொண்டான். இத்தனைக்கு சுவர்ணாவும் சோமாவும் நேரில் பார்த்ததே இல்லை.

சோமா வீடு திரும்பிய பிறகு அவர்களின் உரையாடல் இறுக்கம் பெறவில்லை.

திரவியமும் அனில்'லும் பேசிக்கொண்டிருந்த அதேவேளையில் யாழ்ப்பாணத்தில் மாற்று இயக்கத்தைச் சார்ந்த இளைஞன் ஒருவன் சிவாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான்: "முதலில் ஜே.ஆரும், பிறகு புலிகளும் செய்த தவறுகளால் விளைந்த அநர்த்தங்களை நாம் அமைதிப்படையோடு சேர்ந்து இயங்குவதின்மூலம் குறைத்துக் கொண்டிருக்கிறோம். சில பல மரணங்கள், சில மானபங்கங்கள், சில கைதுகள் நடக்கின்றனதான். ஆனால் நிலைமை கையிகந்து போய்விடவில்லை. அது முக்கியம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8

'ஒரு காலத்தில் தமிழ் நிலம் ஐந்து பெரும் மண்டலங்களாய்ப் பிரிந்திருந்தது. சேர சோழ பாண்டிய தொண்டை ஈழ மண்டலங்களே அவை. அவை முறையே வலிமைக்கும், உணவு வளத்துக்கும், முத்துக்கும், கல்விக்கும், புகழுக்கும் உரியவையென்று பழம் பாடலொன்று சொல்லியிருக்கிறது.'

'புகழுக்கு...?'

'ம்! திருவில் கல்வியில் இறைபக்தியில் புகழ்.'

அவர்களுக்குள் நடந்த உரையாடலொன்று அவளுக்கு ஞாபகமாயிற்று.

சொல்லும்போது அவன் கண்கள் மினுங்கின.

ஒரு அவாவின் வெளிப்பாடு அது.

ஆரம்பத்தில் அவனது எழுத்துக்களின் திசை அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. பின்னால்.... அவளை மடியில் கிடத்திவைத்து அல்லது மடியில் கிடந்து தன் அந்தரங்கங்களையும் அபிலாசைகளையும் அவன் அவளோடு பகிர்ந்துகொண்டிருக்கிறான்.

அது அவன் அபிலாசையின் பிரமாண்டம்.

ஆனாலும் அசாத்தியமென்ற மனச்சரிவு அவளிடத்தில் ஏற்பட்டதில்லை.

அது ஏற்படாதபடி சொல்லும் அளவுக்கு அந்த விஷயத்தில் அவனுக்கே நம்பிக்கையிருந்தது.

அதனால்தான் அதுபற்றிய அவன் பகிர்வு ஒரு சங்கீதமாய் அவளுக்கு இசைந்தது.

நினைவுகளின் ஜனிப்பில் அவள் தன்னுள் சிலிர்த்தாள்.

குழந்தையை ஏணையில் கிடத்திவிட்டு வந்து திண்ணையில் அமர்ந்தாள். அபயனை மடியில் படுக்க வைத்துக்கொண்டு நிமிர நிலா மேலே தெரிந்தது. வட்ட நிலா. சிறிது ஒறுவாய்ப் பட்டிருந்தது. இன்னும் இரண்டொரு நாளில் பௌர்ணமியாகலாம்.

நிலாவும் குளிரும்.... போதை மண்டலமாக்கிற்றுப் பூமியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று இழைந்து வந்து தவனங்களைக் கிளர்த்திற்று.

சரீரத்தில் மறுபடி இச்சைகள் துளிர்க்கத் துவங்கின.

அந்த முதலுறவு நாள் எதிர்பாராதது.

ஒரு அவாவோடு அதை நினைத்தாள்.

வெளியிலிருந்து வந்த அவன் எதுவும் பேசாமல் போய் குறுகிக்கொண்டு படுத்துவிடுகிறான். என்ன அவனுக்கு? அவள் மெல்லப் போய்த் தொட்டுப் பார்க்கிறாள். மேனி நெருப்பாய்க் கொதிக்கிறது. வெக்கை வீசுகிறது. அவனுக்கு காய்ச்சல். அவனுடல் நடுங்கவும் செய்கிறது. வலிப்பில்போல் கைகளைக் காற்றில் துளாவுகிறான். ஜன்னியில்போல் பிதற்றவேறு செய்கிறான். தன் எண்ணமெல்லாம் தோல்வி தோல்வியென்று புலம்புகிறான். 'இல்லை, நீ தோற்கமாட்டாய். ஏனெனில் உன்னிடத்தில் நிறைய ஆசீர்வாதங்கள் விழுந்திருக்கின்றன. உனக்கு தெய்வ அனுக்கிரகம் இருக்கிறது' என்று ஓர் ஆவேசத்தில்போல் அவள் அவனை அணைக்கிறாள். மெய்யிலும் மனத்திலுமாய் அந்த ஆறுதல் சுவறுகிறது. அந்த ஆறுதலுக்காகவே யுகந்தோறும் தான் காத்திருந்தாய்... அந்த உறவில் அவன் குளித்து எழுகிறான்.

அன்று அந்த ஆவேச நாளில்போல் ஒரு உக்கிரமான ஆறுதலுக்கு அவன் தேவையாகி நின்றான். ஆனால் அவள் வளரவில்லை. அவள் ஒரு மனைவியாய் இன்னொரு குழந்தைக்குத் தாயாய் க்ஷீணமானாள்.

அவன் தனியனாகிப் போனான்.

சமீபகாலமாய் பெரும் வதைகளுக்கு அவன் ஆளாகியிருப்பது அவளுக்குத் தெரியும்.

அது பெரும்பாலும் செயலடங்கிவிட்ட நிலைமையினாலேயும், தனித்துவிட்ட நிலைமையினாலேயும்தான் என்று அவளுக்கொரு யூகம் உண்டு.

கருத்து நிலைகளைப் பொறுத்தவரை அதிலுள்ள விசேஷ அம்சமே அதுதான். அது பயில்வாளர்ளையும் கொண்டிருக்கவேண்டும். அதை முக்கியமான விதியாய் அது வற்புறுத்தும். அது செயல்தளத்தில் நிறுவப்படுவதற்கு நடைமுறைப்படுத்துவோர் அதன் இன்னொரு அவசிய அம்சமாவர். இவை இல்லையேல் கருத்து தோல்வியென்று உணரப்படும். அந்நிலையில் கருத்தானது பிறப்பித்தவனையும் தின்று மடியும்.

பில்லி சூனியக் கதைகள்பற்றி அவள் அறிவாள். அவள் ஊரில் அவை அப்போதும் நிறைய. நிஜத்திலும் பல கண்டிருக்கிறாள். பில்லி சூனியக்காரனான ஆராய்ச்சி என்பவன் இறந்த கதையை நினைத்தால் எந்த இரவும் அவளை நடுங்கச் செய்யும்.

தன் தங்கை கணவனோடு ஏற்பட்ட ஒரு தகராறால் தங்கை குடும்பத்தையே அழித்துவிட வல்லமை வாய்ந்த பில்லிப்பேயை ஏவிவிடும்படி ஆராய்ச்சிக்குப் பணம் கொடுக்கிறான் பியசேன. அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியத்தில் தெரிந்து கொண்ட தங்கை கணவனான எக்கநாயக்க பியசேனவை அழிக்க விரும்பாமல் மிக்க வல்லபம் படைத்த பில்லிசூனியக் காரனான அப்புஹாமியை தூர கிராமமொன்றிலிருந்து வருவித்து கெட்டது ஏதும் நிகழ்ந்துவிடாதபடி தன் குடும்பத்துக்கு காவல் போடச் சொல்கிறான். ஒருநாள் இரவில் பூஜையைத் தொடக்கி, மந்திரங்கள் ஜெபித்து பில்லிப் பேயை வரவழைத்து எக்கநாயக்க குடும்பம்மேல் ஏவிவிடுகிறான் ஆராய்ச்சி. அப்புஹாமியோ தன் காவற் பேய்க் கணங்களை வருவித்து தன் மனிதர்களுக்கான காவல்அரணை எழுப்பிவிடுகிறான். உக்கிரமான போர் தொடுக்கிறது ஆராய்ச்சி ஏவிவிட்ட பில்லிப்பேய். அதேயளவு வன்மையோடும் தீவிரத்தோடும் அப்புஹாமியால் ஏவிவிடப்பட்ட காவற் கணங்கள். பஞ்ச பூதங்களின் போர்க்களம் போல் ஆகி நிற்கிறது ஸ்தூல வெளி. காற்று... பயங்கரமாய்ச் சுழன்றடிக்கிறது. பன்றியின் மரணாவஸ்தைக் கூச்சல்போல் மேகத்திலிருந்து சப்தங்கள். வீதியெலாம் நாய்களின் ஊளை. மரண திகலில் ஊர். ஒருகட்டத்தில் பலஹீனப்பட்டுப்போன பில்லிப்பேய் திரும்பிச் செல்கிறது. மாந்திரீகன் சாராய போதையில் தொடர் மந்திர ஜெபிப்பை மறந்து தூங்கிப்போயிருக்கிறான். தன் பலஹீனத்தினதும் தோல்வியினதும் காரணம் தெரிந்த பில்லிப்பேய் வெகுட்சி கொள்கிறது. ஆராய்ச்சியின் கழுத்தை முறித்து ரத்தம் குடித்துவிட்டு அவன் எழுப்பியிருந்த அக்னி குண்டத்திலே விழுந்து ஆவேசம் தணிகிறது.

சிந்தனை பில்லிப் பேய் போலத்தான்.

அது படைத்தவனைத் தின்கிறது.

திரவியத்தின் வதையில் நிரம்ப நியாயமிருந்தது.

தன் வாழ்வின் தளம் அசையாதவரை இவைகளையெல்லாம் சாதாரணமாய் அவளால் விளங்கிக்கொள்ள முடியும். அவள் கலங்குவதும் குழம்புவதும் அதில் ஆட்டம் காணும் போதுதான்.

அவ்வாறான ஒரு நிகழ்வின் சம்பவிப்பு சில மாதங்களின் முன் நடந்தது.

ஒருநாள் அவள் சந்தைக்குப் போயிருந்தாள். காய்கறிகள் வாங்கிக்கொண்டிருந்தபோது வெயிலற்ற அவ்வேளையில் வெய்யில்போல் முகத்தில் சுடும் உஷ்ணப் பிரக்ஞை அடைந்து திரும்ப, தூரத்தே சடாரென கூட்டத்தில் மறைந்துவிடுகிறது ஒரு முகம். அவள் அதில் மினுங்கிய இரண்டு கண்களைக் கண்டாளா? அல்லது அந்த நெருப்புத் துண்டுக் கண்கள் அவளது பிரமையா? அவை அவளுக்குத் தெரிந்த கண்கள்போலவே தென்பட்டன. சொல்லப்போனால் பிக்குவின் கண்கள். குணாநந்ததேரர் வவுனியா ஏன் வரவேண்டும்? நல்லதுக்காயிருக்க முடியாது என்று அவள் மனத்துள் ஏதோவொன்றிருந்து சொன்னது. எண்பத்து மூன்றில் ஒரு அவலத்தை தன்னில் விளைவித்த அந்தக் கண்கள், இப்போது என்ன கொடுமைக்குள்ளாக்க நினைத்திருக்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வீடு வந்தபோதும் தேகம் பதறிக்கொண்டிருந்தாள்.

திரவியம் கேட்டபின்தான் என்ன நடந்ததென்று.

அவள் சொல்லவில்லை.

பஸ் ஒன்று மோதப் பார்த்தது என்று சொல்லித் தவிர்ந்து கொண்டாள்.

நடந்து ஓராண்டாகியிருந்தது. இன்னும் குணாநந்தவை அவள் மறுபடி சந்திக்கவில்லை. அந்த நெருப்புக் கண்களும் தூரத்தில் நின்றும் சுடவில்லை.

சிவாவிடத்திலாவது சொல்லிவைக்கலாமா என்று நினைத்தாள்தான். ஆனால் எது காரணத்தாலோ பின்னர் செய்யவில்லை.

அவைபற்றியெல்லாம் நினைவு புரட்டிக்கொண்டிருந்த அக்கணத்தில் மனத்தில் சிவா தோன்றினான்.

சிவா அவளறிந்த அந்நிய மனிதரில் வித்தியாசமானவன். தங்கச்சியென்றால் வார்த்தையின் கனிவு அப்படியே நேராக இதயத்திலிருந்து வரும்.

ஆறேழு மாதங்களாக அந்த வீட்டுப் பக்கமே வராதிருக்கிறான். மேகலையைவிட அபயனில்தான் அவனுக்குப் பாசம் அதிகம். ஒன்றென்றால் துடித்துப் போவான். இருந்தும் வராமலிருக்க எப்படி முடிகிறது?

அவர்களது பிரச்னைபற்றி திரவியம் அவளுக்குச் சொல்லியிருக்கிறான். கேட்டபோது அவ்வளவு வலியதான பிரச்னையாக இருக்குமென்று அவளும் எண்ணவில்லை; அவனும் கருதிச் சொன்னமாதிரித் தெரியவில்லை. இப்போது....?

ஒருமுறை வெளியே போய்க்கொண்டிருப்பதைக் கண்டுகொண்டு லொறியை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கிவந்து கதைத்தான்.

'தங்கச்சீ....! எப்படி இருக்கிறாய்? பிள்ளையள் எப்படி?' என்று கேட்டான்.

'நல்லாயிருக்கிறம், அண்ணை. நீங்கள்....?'

'எனக்கென்ன! நல்லாய்த்தான் இருக்கிறன்.'

'எங்களோட கோபமோ?'

'சிச்சீ!'

'நீங்களில்லாமல் சரியாய் நொறுங்கிப்போனார்.'

'ஒப்புக்கொள்ளமாட்டானே! முடிஞ்சால் துணுக்காய்க்கு ஒருக்கால் போய்வரச் சொல்லு. கணபதிப்பிள்ளை மாமாவும் கேட்டார். போய்வந்தால் மனசுக்கும் ஆறுதலாயிருக்கும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

'சரியண்ணை.'

'எப்பிடியிருக்கிறான்?'

'இருக்கிறார்.'

'நல்லாய்ப் பாத்துக்கொள். சொந்தம் பந்தமெண்டு எல்லாத்தையும் விட்டிட்டு வந்து இஞ்ச கிடக்கிறான். தேவையெண்டால் தகவல் அனுப்ப தயங்காத. சரி... வரட்டே?'

அவனும் கண்கலங்கியிருப்பான். அதனால்தான் முகத்தை இந்தப் பக்கம் திருப்பாமலே போய்விட்டான். அவள் அழுதுகொண்டே வந்தாள்.

நட்பெனும் உயர்குணம் வெளிப்பட்ட உந்நதமான கணங்கள் அவை. எத்தனை அடைப்புக்குள் இருந்தாலும் அத்தனையையும் அடித்துடைத்துக்கொண்டு அது வெளிவரும். அப்போதும் அவளோடு அண்ணனாய். அவன் மன விரிசல் கண்டது திரவியத்தோடுதான். அப்போதும் அவன் நண்பனாயே.

அற்புதமான மனிதர்கள் ஒருசிலரேனும் நம்மிடையே எப்போதும் இருக்கிறார்கள்.

காட்சி மறைந்த பின்பும் வார்த்தை ஒலித்தது:

'நல்லாய்ப் பாத்துக்கொள். சொந்தம் பந்தமெண்டு எல்லாத்தையும் விட்டிட்டு வந்து இஞ்ச கிடக்கிறான்.'

அவள் மேனி உணர்வலைகளால் அதிர்ந்து ஓய்ந்தது.

திரவியம் படலையைத் திறந்துகொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தான். கையில் ஒரு சரை இருந்தது.

## 9

மேற்கு மூலையில் நெருப்புக் குடம் இறங்கிக்கொண்டிருந்தது. வானம் சிவப்புப் பாரித்தது. கீழ் மூலை இருண்டிருந்தது. பாலைக் குற்றியில் இன்னும் தம்பிரா சா அமர்ந்தபடியிருந்தார். பக்கத்தில் - குற்றியிலேயே - குடித்துவிட்டு வைத்த தேநீர்க் கோப்பை. அந்த வனவெளியில் காற்று அப்போது அடங்கிக் கிடந்தது.

நாலு மணியளவில் தேநீர் வைத்துக் கொடுத்துவிட்டு வெளியே போனவன் இந்திரன். அவன்கூட திரும்பிவந்தாகிவிட்டது. தம்பிராசா இன்னும் அந்த இடத்தைவிட்டு அசையக்கூடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு இருட்டடித்திருந்தது.

இந்திரன் உள்ளேபோய் விளக்கைக் கொளுத்தி வைத்தான்.

இன்னுமே அவர் யோசனையிலாழ்ந்தபடி.

அவர் பார்வைத் திசையெங்கும் வெளி. இடையிடையே உடல் பருத்தும் சடைக்காதிருந்த முதிர் உயர் பாலைகள் புற்றுத் திடல்களில். மற்றும்படி எல்லைப் பக்கம்வரை பத்து ஏக்கர் வெளி அது. அப்பால் பாலைபத்திக் கிடந்த காடு. அறுவடை முடிந்ததும் முதலடி கண்டிருந்த மண் காய்ந்து கல்பத்திக் கிடந்தது. மழை பெய்தால்தான் இனி உழவு. மேகம் தெற்கே திரண்டு மூட்டம் போடுவது கண்டு அவசர அவசரமாக வந்தார் தருமபுரம். இந்திரன் மட்டுமே கமவீட்டில் நின்றிருந்தான். வந்து வெகுநேரமாகியும் மகேஷ் கண்ணில் தட்டுப்படவில்லை. வெளியே சென்றிருக்கவும் வாய்ப்பில்லை. ஏனெனில் சைக்கிள் அங்கேதான் நின்றிருந்தது. தன் வரவில் திகைப்பும் தடுமாற்றமும் அடைந்ததுபோல் இந்திரன் கைபிசைந்து நின்றது ஞாபகமாக அவன் பக்கம் திரும்பி நேர்நேரே கண்களைத் தீக்ஷண்யமாய் ஊடறுத்தார். பிறகு கேட்டார்: 'அண்ணை எங்க, தம்பி? நான் வந்து இவ்வளவு நேரமாகுது, ஆளைக் காணம். வேட்டைக்குக் கிட்டைக்குப் போயிட்டானோ? வேட்டைக் காலம்தானே இப்ப? இந்த தண்ணிப் பஞ்ச காலத்தில மிருகங்கள் சொட்டுத் தண்ணிக்கு எங்கயெண்டு அலையும்கள். இஞ்சகூட ஆனை வந்து அலையுதுபோல. அங்க பார். வாழையடியில ஆனை அடிக்கு நிலம் பதிஞ்சு அப்பிடியே தெரியுது. ஆனைதானே?'

'ஓம், ஐயா.'

'ஆனால் வேட்டைக்குப் போறது இப்ப புத்திசாலித்தனமே? ஊர் உலகம் இருக்கிற நிலமையைத் தெரிஞ்சு நடக்கத் தெரியவேண்டாமோ இந்தப் பிள்ளைக்கு? ம்... எந்தப் பக்கம் போனவை வேட்டைக்கு?'

'அண்ணை....'

'ஆள் சரியான வெடிகாறனெல்லே! கூட்டாளியள் விட்டிருக்கமாட்டினம். எங்கயெங்க கூட்டிக்கொண்டு திரியிறாங்களோ? உனக்கெங்க தெரியப்போகுது அவங்கள் போற இடம்!'

'இல்லை, ஐயா.'

'என்ன இல்லை?'

'அண்ணை வேட்டைக்குப் போகேல்லை.'

'பிறகு...?'

'...'

'சொல்லன், தம்பி. அண்ணை எங்க அப்ப?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுள் அவருக்கு தாம்பாளம் விழுந்து கிளரும் ஒலியலைபோல் அதிர்வு பிறந்தது. அவர் பயந்தது நடந்துவிட்டதா? இத்தனை தொலைவில் விதைப்பு, அறுவடை, தோட்டம், வரும்படி தவிர வேறெண்ணம் இல்லாத மண்ணில், அன்றாடம் பத்திரிகைகூட படிக்கமுடியாத பிரதேசத்தில் அரசியல் வீசாது என்றிருந்த திண்ணம் பொய்த்துப் போய்விட்டதா?

'சொல்லு, இந்திரா!'

'அண்ணை....'

'ம்...?'

'இயக்கத்திலை.... சேந்திட்டுது.'

'ஆ.... கடவுளே!'

தலையிலே கைவைத்தபடி அப்படியே குந்திலே அமர்ந்துவிட்டார்.

இனி அவன் அவருக்குப் பிள்ளை இல்லை. காவு கொடுத்ததுபோலத்தான். இடையே எப்போதாவது ஓரிருமுறை காண முடியலாம். பலவேளை கேள்விப்பட முடிதலும்கூடும். அவன் மகேஷாக அங்கே இருக்க மாட்டான். அவனது இயக்கப் பெயர் தெரிந்தால் வீரதாபங்களைக் கேட்டு மகிழலாம். மறைந்து போனால் வீர அஞ்சலி போஸ்ரர் ஒட்டுவார்கள், தெரிந்துகொள்ளலாம். சிலவேளை வந்து சொல்லி, உடலைக் கேட்டால் கொடுத்து, மிகக் குறைந்த ஒரு இறுதிச் சடங்கை நடத்த ஆவன செய்துவிட்டும் போகக்கூடும்.

இதயத்துள் முறுக்குவதுபோல் ஒரு வலி.

'என்ன ஐயா செய்யுது?'

'நெஞ்சுக்குள்ள குத்துதடா.'

'சுடுதண்ணி வைச்சு வரட்டே?'

'வேண்டாம்.'

அவர் மனத்தை தானே ஆற்றித் தெளிந்தார். தானுமே சடுதியில் போய்விடக்கூடாது என்று ஒரு பயமிருந்து வெகு வலுவாய்த் தெளியப் போராடியது.

அவர் அதுமாதிரிச் சம்பவங்களைக் கேள்விப்படாதவரில்லை. அவர் உறவுகளுக்குள்ளேயே, நண்பர்கள் குடும்பங்களுக்குள்ளேயே நடந்திருக்கிறது. கணேசரத்தினம் வீட்டில் அவன் மகள் மலர்விழி கடிதம் எழுதி வைத்து விட்டுப் போய் இயக்கத்தில் சேர்ந்தாள். விநாயகமூர்த்தியின் இரண்டு மகன்களும்கூட அவ்வாறுதான் செய்தார்கள். இருந்தும் தன் மகனின் இயக்க இணைவை தாங்கிக்கொள்ளமுடியாதிருந்தது அவரால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலைமைகளில் சம்பவங்களின் பாதிப்பு வெவ்வேறு பரிமாணங்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தக்கூடும்தான். மரணம் எங்கேயும், ஜனனம் எங்கேயும், கல்யாணம் எங்கேயும் ஒரே பரிமாணத்தில் அர்த்தம் பெறுவதில்லை. அவர் நிலைமை வேறு. அவன், அவரது எல்லாமுமாக இருந்தவன். பிதுர்க்கடனைவிட கூடிய பொறுப்புக்களுக்கு அவனை அவர் நம்பியிருந்தார். அதனால்தான் ஏமாற்றம், தோல்வி, நம்பிக்கையீனம், துவள்ச்சி, விரக்தி... இப்படியாக.

இரண்டு தலைமுறைகளின் ஏக்கத்தை அவன் தணிப்பானென கனவு கண்டுகொண்டிருந்தவர் அவர். அவனுக்கு அம்மா, தங்கச்சிகள், தம்பி, இன்னும் ஐயா என்ற பாசம் அதிகம். குடும்பத்துக்கான பிள்ளையாக அவன் இயல்பிலேயே வளர்ந்திருந்தான். ஒருவேளை... ஒருவேளை மகேஷ் போகாமல் இந்திரன் இயக்கத்தில் சேர்ந்து கொண்டு போயிருந்தால், அவர் அவ்வளவு உணர்வு நிலைகளை அடைந்திருப்பார் என்று சொல்லமுடியாது. பருத்தித்துறையில் ஹாட்லி கல்லூரியில் அவர் சிரமம் பாராது அவனைப் படிக்கவைத்தார். அரசாங்க சாதாரண தரப் பரீட்சையில் ஐந்து பாடங்கள்தான் எழுதினான். மீதி மூன்று பாடங்களுக்குப் போக முடியாதபடிக்கு அவன் தங்கிநின்று படித்த ஊர்ப் பகுதியில் நிகழ்ந்த பொலீஸ் அக்கிரமத்தால் ஒரு வாரம் விசாரணைக் கைதியாய்ப் போனான். விடுபட்டு வந்தும் இரண்டு நாட்களாய் வீட்டிலே படுத்துக் கிடந்து கண்ணீர்விட்டபடி இருந்தவன் அவன். படிப்பில் மகாகெட்டிக்காரன். எழுதிய ஐந்து பாடங்களிலேயே இரண்டு ஏ சித்தியும், மூன்று பி சித்தியும். தம்பிராசா அவன் குறித்து என்னென்னவோ கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தவர். இருந்தும் தொடர்ந்து படிக்கவைக்க அவருக்கு இருந்த விருப்பம் போய்விட்டது. மேற்கொண்டும் அதுமாதிரியான ஒரு கைது நிகழ்வது அபாயகரமானது. அப்போதே அவன் விடுபட்டது அதிர்ஷ்டவசமாகத்தான். பேசாமல் அவனை தருமபுரம் குடியேற்றத் திட்டக் காணிக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்.

அது அவருக்கு அறுபதுகளின் ஆரம்பத்தில் கிடைத்த நிலம். விசுவமடு, முத்தையன் கட்டு, திருவையாறு, கனகராயன் குளமென்று பல படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்களில் தவறிப்போனபின், கிடைத்தது அது. போக்குவரத்துக் குறைந்த, வெகு சேய்மையான இடம். ஆனைப் பயம், விஷப் பாம்புப் பயம், மலேரியாக் காய்ச்சல் பயமென்று பல பயங்களையும் வென்றுதான் அங்கே செல்லவேண்டியிருந்தது. அந்த பத்து ஏக்கர் காட்டு நிலத்தையும் விளைச்சல் பூமியாக்கிது அசுர சாதனை. காணி கிடைத்த பலரும்தான் அதை விளைச்சல் பூமியாக்கினார்கள். அவருக்கு மட்டும்தான் அது சாதனை. அவர் கோடரியையும் மண்வெட்டியையும் தன்னிரு கைகளையும் துணைகொண்டு சிவலை என்கிற ஒற்றைக் கூலியோடு அந்நிலத்தை திருத்தி எடுத்தவர். ஆரம்பத்தில் நெல் விளைச்சல் பூமியாகவே வைத்திருந்தார். முதலிரண்டு ஆண் பிள்ளைகளுக்குப் பின் வந்தது இரண்டுமே பெண்களாகிவிட்டதால், பின்னால்தான் தோட்டச் செய்கையில் கவனம் செலுத்தினார். விசுவமடுபோல் அந்த மண்ணில் மிளகாய் விளைச்சல் கண்டார். மூத்தவன் மகேஷ் தருமபுரம் வந்தபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பெரும்பாலும் சுகவாசிதான். எல்லாப் பாரத்தையும் அவனே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்துகொண்டிருந்தான். இரண்டு வருஷங்களுக்கு முன்னர் இந்திரன் கமத்துக்கு வந்ததோடு அவருக்குள் மகேஷ் பற்றிய கனவுகள் பூக்கத் துவங்கின. சூழ்நிலைமை அந்தப் பொறி விருப்பத்தை ஊதி அனலாக்கிற்று. ஆனால் அதற்குள்....

அது பெரிய பாதிப்பு அவருக்கு.

மகன் மட்டுமேயல்ல இழப்பு; கனவுகளும்.

அதன் பிறகு அப்படித்தான் வெறித்த பார்வை, சுயமிழந்த சிந்தனையென்று அவருக்கு ஆகிவிடுகிறது.

போனவாரத்தில் ஒரு நாள் எல்லைக் கூடலுள் நின்று யானை என்று பிளிறிக் கொண்டு நின்றது. தம்பிராசாவின் பிரக்ஞை திரும்பவேயில்லை. வெளியே சென்றிருந்த இந்திரன் வந்து கண்டுகொண்டுதான் அக்கம்பக்கத்து கமக்காரரைச் சேர்த்து யானையை விட்டினான். தாக மேலீட்டில் வெறிபிடித்த ஒரு ஒற்றைக் கொம்பன் ஆனை அப்பகுதிக் காடுகளில் அலைவதாக அவர் அங்கு வந்த நாளிலிருந்தே பேச்சு இருந்தது. இருந்தும் தம்பிராசா கவனத்தோடிருக்கவில்லை. ஆபத்து ஏதும் நடக்காமல்போனது புண்ணியம்தானென்று எல்லோரும் சொன்னார்கள். தம்பிராசா அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

இந்திரன் சிறிதுசிறிதாய்ச் சினக்க ஆரம்பித்திருந்தான். 'இந்தமாதிரி நீங்கள் இஞ்ச இருக்கிறதவிட, வேலணைக்கே போயிடுறது நல்லது' என்று இரண்டு மூன்று தடவை சொல்லிவிட்டான்.

அவர் பாதிப்பு - கனவு - அவனுக்குத் தெரியுமா? இரண்டு தலைமுறைகளின் தகர்ந்த நம்பிக்கைகளை அவர் மகேஷில் வைத்திருந்ததை அவன் அறிவானா? படுபாவிப் பயல்! எப்படியான ஒரு தகுந்த தருணம் கனிந்து வந்துகொண்டிருந்த வேளையில் இயக்கத்தில் சேர்ந்துகொண்டோடி தன் வாழ்வையும் அவர் வாழ்வையும் இருண்ட கண்டமாக்கினான்! அது இவனுக்குத் தெரிவதெங்ஙனம்?

## 10

அது ஒரு முன்னிலாப்போது. முற்றத்தில் சாக்கு விரித்து அமர்ந்திருந்தார் தம்பிராசா.

மேலைமூலையில் மேக நர்த்தனம் நடந்துகொண்டிருந்தது. 'காத்து அடங்க மழைதான்!' என்று நினைத்துக்கொண்டார். இந்திரனைக் கூப்பிட்டார். வர, எதிரே உட்கார வைத்தார். வெற்றிலை போட்டார். இந்திரன் சற்று குழம்புகையின் அறிகுறி காட்டினான். ஆனால் ஏதோ ஒன்றில் அவர் பட்டிருந்த தீர்க்கமும் உறுதியும் அவனை அடங்கியிருக்கப் பண்ணின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நிதானமாக வெற்றிலை போட்டுக்கொண்டு நிமிர்ந்தார்.

அசாதாரண பொழுதுகள் அவை.

கம்பீரத்துடனான அவரது நிமிர்வு அவனைச் சற்று திகைப்பிலும் ஆழ்த்தியது.

"இப்ப நான் ஒரு கதை சொல்லப் போறன்."

"என்ன கதை, ஐயா?"

"உங்கட கதை. எங்கட கதையூடாய் வளர்ந்து வந்த உங்கட கதை"

மர்மமாய் ஒரு பகைப்புலன் விழுந்தது.

"இந்திரன், சாப்பாட்டுக்கு வசதியான குடும்பத்தில பிறந்தவர்தான் உன்ர அப்பர். தின்னக் குடிக்க வழியில்லாத மனிசரால நிறைஞ்ச ஊர் அது. அப்ப வேலணையும் தீவுதான். எங்கட குடும்பம் விவசாயக் குடும்பமெண்டாலும் ஊரில செல்வாக்கான குடும்பம். ஒரு நாளில மூண்டு நேரம் அவியல் நடத்தின ஒரே குடும்பம்கூட. அதால.... மம்பட்டி பிடிச்சு அறியாமல் வளர்ந்திருந்திட்டன். கொஞ்சம் படிச்ச திமிரும் இருந்தது. ஜே.எஸ்.சி பாஸ் பண்ணி எஸ்.எஸ்.சியும் ஒரு வருஷம் அந்தக் காலத்திலயே படிச்சிருந்தன்.

"உன்ர பாட்டாவுக்கு கலியாணம் கட்டின பொம்பிளையைவிட வேறொரு வேதக்காறப் பொம்பிளையோடயும் தொடுப்பினை இருந்தது. வேலணை மனிசனுக்கு உடுவில் பொம்பிளையோட எப்பிடி ஒரு தொடுப்பினை ஏற்பட்டதெண்டு எனக்குத் தெரியாது. எனக்கு பத்து அல்லது பன்ரண்டு வயசாயிருக்கும்போது அந்த உறவு தெறிச்சுப் போச்சு.

"பிறகு அவர் எப்பவுமே அந்தப் பக்கம் போகேல்லை. ஆனாலும் சூடுபட்டதுபோல ஒரு ஆக்ரோஷத்திலயும் வெக்கத்திலயும் அந்த மனிசன் பட்ட உத்தரிப்பு எனக்குத் தெரியும். கொஞ்சங்கொஞ்சமாய் முடங்கத் துவங்கியிட்டார். என்ன காரணத்தால அந்தளவு பாதிப்புக்கு ஆளானாரெண்டு எனக்குத் தெரியேல்லை. நான் கவலையற்று ஊர் சுற்றுறதும் முசுப்பாத்தியுமாய். இதொண்டும் என்ர மனசில எந்தப் பாதிப்பையும் செய்யேல்லை. இந்தக் காலத்திலதான் குமரகுருவை பண்ணைக் கடற்கரையில வைச்சு நான் சந்திச்சது."

அவர் பதத்துக்கு சுண்ணாம்பு சேர்த்தார். புகையிலை திருகிப் போட்டார். அப்போது அவர் கவனம் அவன்மீதிலில்லை. எதிரிலுள்ள எதன்மீதிலுமில்லை. புறவெளி கடந்த மனப்பார்வை அது. காலவெள்ளம் அடித்துப் புரண்ட தடங்களின் நிகழ்வுகளை மீட்டிக் கண்டு கொண்டிருந்தது.

"குமரகுரு நல்லாய்க் கள்ளு, சாராயமெல்லாம் குடிப்பான். திரிகோணமலைத் துறைமுகத்தில கூலியாய் வேலை செய்தான். ஒரு மாசத்துக்கொருக்கால் பண்ணை வந்தால்.... குடிதான். பனங்கள்ளு குடிக்கத்தான் சிலவைப் பாக்காமல் தான் வாறதெண்டு அவனே சொல்லியிருக்கிறான். ஒருமுறை திரிகோணமலைத் துறைமுகத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்த ஒரு ஜேர்மன் கப்பல் கப்ரனுக்கு சிறுகுரங்கு பிடிச்சுக் குடுத்து. கப்பல் திரும்பிப் போகும்போது தானும் தொத்திக்கொண்டு போயிட்டான். ரண்டு வருஷத்துக்குப் பிறகு திரும்பிவந்தான். எப்பிடி இருந்தான் தெரியுமே? ஓ...! பணம் பணமாய்க் கொண்டுவந்தான். உடுப்பு உடுப்பாய் போட்டுத் திரிஞ்சான். ஹிப்பி மாதிரி தலைமயிரும் வளத்து... நானறிய அவன்தான் முதல்முதலாய் இஞ்ச டெனிம் ட்றவுசர் போட்டுத் திரிஞ்சது. அவன் நடந்தா நிலம் அதிரும். சுருண்ட தலை மயிர் ஸ்பிறிங் மாதிரிக் குலுங்கும். சனம் பின்னால சிரிக்கத்தான் செய்தது. ஆனால் நேரில... வாய் பிளந்து ரசித்துப் பாத்தது. கப்பலால வந்தவுடன என்னை வந்து பாத்தான். அவனோட திரிஞ்சு திரிஞ்சு எனக்குமே கப்பலெடுக்கிற ஆசை வந்திட்டுது. குமரகுரு அதைத் தூண்டி விட்டான்.

"அந்த ஆசை.... சும்மா தலை வளத்துத் திரியிறதுக்கும் டெனிம் ட்றவுசர் போட்டுத் திரியிறதுக்கும் இல்லை. கவர்ண்மென்ற் ஏஜன்ரே வாங்க ஏலாத சம்பளம் எடுக்கலாம் கப்பலில. துவக்கமே மாசம் ஐயாயிரம் ரூபாய். குமரகுரு வந்தபோது அவனுக்குப் பத்தாயிரம் பதினோராயிரம் ரூபா சம்பளம். ரண்டு வருஷம் நிண்டு வந்தால் லட்சாதிபதியாயே ஆகியிடலாம். அப்பவெல்லாம் அப்பர் அடிக்கடி சொல்லுவார், தான் பிறக்கும்போதே உள்ளங்கால் சிவப்பாய்த்தான் இருந்ததெண்டு. பிறக்கும்போதே தோட்டக்காறனாய்ப் பிறந்தாரெண்டு அதுக்கு அர்த்தம். குமரகுருவே சொன்னான், கொழும்புக்குப் போனால் சுலபமாய்க் கப்பலேறலாமெண்டு. நான் வீட்டுக்குப் போய் அம்மாவிட்ட விஷயத்தைச் சொன்னன். அம்மா அப்பரிட்டச் சொல்லியிருப்பா. ஒரு ரகளை நடந்த பிறகுதான் பணம் கிடைக்குமெண்டு நினைச்சிருந்ததுக்கு மாறாய் பாஸ்போர்ட் எடுக்க, கொழும்புக்குப் போக, லொஜ்ஜில தங்கி நிற்க, சாப்பிட எல்லாத்துக்குமாய் எவ்வளவு வேணுமெண்டு அப்பரே அடுத்த நாள் என்னைக் கூப்பிட்டுக் கேட்டார். நான் திகைச்சுப்போனன். அப்பிடிக் கேட்டதால மட்டுமில்ல, அவர் முகத்திலயிருந்த தெளிவு.... கண்களிலயிருந்த பிரகாசம்.... பேச்சிலயிருந்த ஆதரவும் நிதானமும்.... என்னால நம்பவே முடியேல்லை. பத்துப் பன்ரண்டு வருஷ சோகத்தை ஒரேயடியாய் உரிச்செறிந்திருந்தார் அவர். நான் தேவையெண்டு குமரகுரு சொன்ன தொகையைச் சொன்னன். கொழும்புக்கு எப்ப போறாயெண்டு கேட்டார். அதையும் சொன்னன். 'சரி, எல்லாத்துக்கும் நீ வெளிக்கிடத் தயாராய் இரு. நான் பணத்துக்கு ஏற்பாடு பண்ணுறன், எண்டு சொன்னார். தாலிக் கொடியைத்தான் அடைவு வைச்சார்போல. காசைத் தரும்போதுமட்டும் சொன்னார், 'எல்லாச் சொத்தையும் அழிச்சிட்டு வெறுங்கையோட நிக்கிறன். உடுவில்த் தேவடியாள் எல்லாத்தையும் பிடுங்கியிட்டாள். நீதான் இந்தக் குடும்பத்தைக் கைதூக்கிவிட வேணும்' எண்டு. நான் தலையாட்டினன். அடுத்த நாள் கொழும்புக்கு ரயிலெடுத்தன் குமரகுருவோட."

வானம் புள்ளிபோடவில்லை அன்று.

நிலா வரும் அறிகுறியும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமின்னுமாய் கிழக்கிலிருந்து வடமேல் மூலைக்குள் மேகத் திரள்கள் ஓடிப்போய் அமிழ்ந்து கொண்டிருந்தன. ஒரு வளையச் சுழற்சியில் மீண்டும் அவைதான் கிழக்கில் பொங்கிப் பிரவாகிக்கின்றனவோ!

லாந்தர் வெளிச்சம் கப்பின் நிழலை நடுவில் விழுத்தி சிறகாய் முற்றத்தில் விரிந்திருந்தது.

கப்பின் நிழலில் தம்பிராசாவும் இந்திரனும் அசையும் நிழல்களாய்.

தம்பிராசாவின் குரல் தொடர்ந்துகொண்டிருந்தது: "ரண்டு வருஷமாய் குமரகுருவோட அலைஞ்சன். நகையளை வித்தும் அடைவு வைச்சும் மூண்டு தட்வையாய் கொழும்பில போய் நிண்டு சிலவழிச்சன். ஒரு பிரயோசனமும் இல்லை. ஒருநாள் ஒரு கொழும்பு லொட்ஜில நிக்க வைச்சிட்டுப்போன குமரகுரு திரும்பிவரவேயில்லை. ரண்டு மூண்டு நாள் நிண்டு பாத்திட்டு ஊர் வந்து சேந்தன். பத்தாயிரம் ரூபாய் சிலவழிச்சதுக்கு பாஸ்போர்ட் மட்டும்தான் மிச்சம். அப்பர், இன்னும் ரண்டாயிரம் மூண்டாயிரம் சிலவழிச்சு கடைசி முயற்சியொண்டு செய்யலாமெண்டு அங்க இங்க ஓடிப் பார்த்தார்தான். ஒண்டும் சரிவரேல்லை. அப்பிடியே உடைஞ்சுபோனார். நடந்தார். வளவு வேலை செய்தார். சாப்பிட்டார். உடம்பு ஆரோக்கியமாய்த்தான் இருந்தது. அவர் உடைஞ்சது மனத்தால. அதுக்குப் பிறகு ஓடியாடி வெளி அலுவல் பாத்தது அம்மாதான்."

மௌன கணங்கள் விரிந்து கொண்டிருந்தன.

அவர் அழுதிருக்க முடியாது. ஆனாலும் அந்த எல்லைவரை வந்துவிட்டிருந்தது தெரிந்தது.

"அப்பரைச் சுகவாளியாக்க.... அம்மா எவ்வளவோ முயற்சிபண்ணிப் பாத்தா. மந்திகை, நாயன்மார்கட்டு எல்லாம் கொண்டு அலைஞ்சா.... ஒண்டும் சுகப்படேல்லை."

எட்டி, எச்சில் துப்பினார்.

செருமி, குரலைச் சரிப்படுத்தினார்.

"அப்ப.... அப்பிடியொரு அலைதான் அடிச்சுக்கொண்டிருந்தது. ஏறக்குறைய பதினைஞ்சு வருஷமாய் அடிச்சது. ஏஜன்றுகளுக்கு பணம் கட்டிக்கூட பலநூறு பெடியள் கப்பல் வேலைக்குப் போனாங்கள். சிங்களப் பெடியளும் முஸ்லீம் பெடியளும்கூட முயற்சி செய்தினம்தான். ஆனால் வாய்ப்பு யாழ்ப்பாணத்தாக்களுக்குத்தான் கிடைச்சுது. சிங்கள சிப்பிங் ஏஜன்ற்மாரும் காசு வாங்கிக்கொண்டு தமிழ்ப் பெடியளைத்தான் அனுப்பினாங்கள். அப்பிடியான காலம். என்ர முயற்சி நல்லவேளையிலதான் நடந்தது. ஆனாலும் தோல்வியாய்ப் போச்சு. அதைத் தொடர்ந்து வந்த நட்டம்வேற. கடனுகள்.... அப்பரின்ர மரணம்.... எண்டு இப்பிடி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன், பெரும்பாலும் அரைகுறையாய்த் தெரிந்த விஷயமானாலும் புதிய விஷயம்போல் கேட்டுக் கொண்டிருந்தான். சொன்னவரின் ஆத்மார்த்தமான வெளிப்பாடு ஒரு ரசனையை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அறிவார்த்தமாய்ச் சொல்லப்படாததானாலும் சிலவேளைகளில் அப்படித்தான் பெருங்கவனத்தை அது ஈர்க்கிறது.

"இந்த நிலமையில எனக்கு கலியாணம் ஆச்சு. நல்ல சீதனத்தோடதான் கொம்மா வந்தா. எனக்கு அந்த நகையளைப் பாக்கப் பாக்க.... மனத்துக்குள்ள கிடந்த கப்பலாசை அருண்டு அனுங்கிச்சுது. கொம்மாவும் கொஞ்சம் அனுசரணையாய்ப் பேசினா. திரும்பவும் ஒரு அஞ்சாயிரத்தோட கொழும்புக்குப் போனன். அந்த ரண்டு வருஷத்தில.... நிலமை தலைகீழாய் மாறிப்போயிருந்தது அங்க. எங்களப்போல ஆக்கள் கப்பல் வேலையை நினைச்சுக்கூடப் பாக்க ஏலாதபடி இருந்தது. கப்பல்ல இருக்கிற கீழ்நிலை வேலையளுக்கே இருபதாயிரம் இருபத்தஞ்சாயிரம் கேட்டுக்கொண்டிருந்தாங்கள். என்ர கப்பலாசையை அந்தத் தொகைதான் முடிவுக்குக் கொண்டு வந்தது. இறுதியில. வீட்டுக்கு வந்தன் வெறுங்கையோட. கொம்மா ஒரு வார்த்தை புறுபுறுக்கேல்லை. எங்களுக்குப் பொசிப்பில்லைப்போல எண்டு சொல்லி விட்டிட்டா. நானும் சோர்ந்து போனன். கல்வீடு, மோட்டார்ச் சைக்கிள்க் கனவெல்லாம் விட்டுப்போச்சு. ஒரு மாதிரி காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தன்."

கருமேகம் கலைந்திருந்தது. ஆனால் புகார் படிந்திருந்தது வானத்தில். மங்கலாய்ப் பெரிய வட்டநிலா அப்போதுதான் கருவறை கிழித்து வெளிவந்திருந்தது. அந்த வன்னிப் பிரதேச வானத்தில் அம்புலி இரட்டிப்புப் பெரிதாய்த் தோன்றுமோ? மங்கலானாலும் அழகாய் இருந்தது. தொட்டுவிடும் தூரத்தில்போல் அகலமாக விரிந்து நின்றது. கையை நீட்டி உள்ளங்கையில் அதை ஏந்தும் ராம ஆசையொன்று விளைந்தது இந்திரனிடத்தில். அடக்கிக் கொண்டான்.

அவர்கள் கதை மிக்க சுவாரஸ்யமான இடத்தை அடைந்திருந்தது.

கல்வீடு, மோட்டார்ச் சைக்கிள்க் கனவு....

அவர் மனத்தைக் கீறியெடுத்து அந்த உண்மையைச் சொன்னது தெரிந்தது.

அந்த ஆசையில் அடிபட்ட வேறு பலர் இலங்கையில் கப்பல் ஏஜன்றுகளுக்கு பணம் கட்ட முடியாத நிலையில் அகப்பட்ட தொகையோடு இந்தியா போய் அங்குள்ள துறைமுகங்களில் நின்றிருந்த கப்பல்களில் வேலை தேடிப் பெற்றார்கள். வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்துறை, நெடுந்தீவு முதலிய இடங்களில் பல வீடுகளே கப்பல் வீடு என்று பெயர் பெற்றிருந்தன. பலர் திடீர்ப் பணக்காரர் ஆகிய விதமும் அதுதான். ஆக.... அவன் தந்தை ஒரு அலையில் மூழ்கி திணறித் திரும்பியவர். மண் வீட்டை மச்சு வீடாக்க.... மனைவிக்கு வெளிநாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடவையும் நகைகளும் வாங்க.... தாயாரின் அடைவு வைத்த நகைகளை மீட்டெடுக்க.... முயன்று, இயலாமல் பின்வாங்கியவர். அம்மாவும் வாசனை ஸ்பிறே, பொன்ட்ஸ் பவுடர், றேடியோ ரேப் ரிக்கோர்டர் ஆசைகள் கொண்டிருந்திருப்பாள். அப்போ.... அவளும் ஆசைகள் கருகியவள்.

அவனது யோசிப்பை இடையறுத்தது குரல். ஒரு இரண்டாம் கட்டத்துள் பிரவேசித்ததுபோல அது ஓரளவு தெளிந்திருந்தது.

"ஏறக்குறைய பத்து வருஷத்துக்குப் பிறகு.... இன்னுமொரு அலை அடிக்கத் துவங்கிச்சுது. அது முதலாம் அலைபோல் அவ்வளவு பெரிசாய் இல்லையெண்டாலும் முதலாம் அலையில அடிப்புண்டு போகாதவைக்கு பெரிய உபகாரமாய் வந்து சேர்ந்தது. அதுதான் அராபியா அலை. தச்சர், மேசன்மார், ட்றைவர்மார் கூட ரண்டாயிரம் மூண்டாயிரம் குடுத்து சவூதி, ஓமான், துபாய் எண்டு போகத் துவங்கிச்சினம். அவையும் ரண்டு வருஷத்துக்குப் பிறகு திரும்பி வரேக்கை சீக்கோ மணிக்கூடு, கமறா, பெரிய ரூ இன் வண் செற், வெளிநாட்டுத் துணிமணிகளோடதான் வந்து சேந்தினம். எல்லாரின்ர கண்ணும் மொய்க்க ஊரில அலைஞ்சு திரிஞ்சிட்டு, திரும்ப அராபியாவுக்குப் பிளேன் எடுத்திச்சினம். எனக்குள்ளயும் செத்துக் கிடந்த ஆசை திரும்ப உயிர்பெற்று வந்துது. என்ர எண்ணம் எதுக்குத்தான் கொம்மா மறுப்புச் சொல்லியிருக்கிறா? துபாய் ஆசைக்கும் மறுப்புச் சொல்லேல்லை. இந்தளவில மகேஷ், நீ, மாலதி மூண்டு பேரும் பிறந்திட்டியள். இந்த நிலையிலயும் புதிதாய்ப் பாஸ்போர்ட்டும் எடுத்துக்கொண்டு நல்ல சவூதி ஏஜன்றைத் தேடித் திரிஞ்சன். துரைராசாவெண்ட ஒரு ஏஜன்ற் நேர்மையாய் ஆக்களை அனுப்புறதாய்க் கேள்விப்பட்டு கச்சேரியில அவன்ர வீட்டில போய்ப் பாத்து.... மூவாயிரம் ரூபாயும் கட்டி பாஸ்போர்ட்டும் குடுத்து வைச்சன். ஆறுமாசமாச்சு. அலைஞ்சதுதான் மிச்சம். வேசைமகன்.... கொழும்புக்கு ரிக்கற் போட்டுவரப் போறன் எண்டு சொல்லியிட்டுப் போனான்; நானும் சந்தோஷத்தோட காத்துக்கொண்டிருந்தன்; அறுவான்.... வரவேயில்லை. கொழும்புக்குப் போய் அவனைத் தேடிப் பிடிச்சு கழுத்தைக் கடிச்சு குதறுகிற ஆத்திரம் எனக்கு. ஆனால் மனுஷி என்ன நினைச்சுதோ...."

"ஆர்?"

"கொம்மாதான். போகவேண்டாமெண்டு சொல்லியிட்டா. இஞ்சயே உழைச்சு சம்பாதிப்பம், வெளிநாட்டு ஆசை வேண்டாம் எண்டிட்டா. நானும் மேலை வற்புறுத்தேல்லை. தோல்வி மேல தோல்வியால நான் துவண்டு போயிருந்த காலம் அது. பிறகுதான்.... இந்த குடியேற்றத் திட்டக் காணியில நான் கவனம் வைச்சது."

முதுகில் நுளம்பு குத்திக்கொண்டிருந்த இடத்தில் சடாரென இடது கையை வீசி அடித்தார்.

செம்பை எடுத்துச் சென்று எட்டவாய் வாயை அலசிக் கொப்புளித்து தண்ணீர் குடித்தார். திரும்ப வந்து அதே இடத்தில் ஆசுறுதியாய் அமர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலா உயர்ந்து சிறிதாகிக் கொண்டிருந்தது. அவர் கனவுபோல் ஆகிக்கொண்டிருக்கிறதோ என்று பொறிபோல் ஒரு நினைவு தட்டியது இந்திரனுக்கு. தான் அதுவரை பார்க்காத அவரின் இன்னொரு முகமென்ற எண்ணம் ஊறி அவனை உதறவைத்துக் கொண்டிருந்தது. பெரிய பெரிய லட்சியங்களற்ற சின்ன மனிதர்களுக்கும் உள்ளே ஒரு முகம் இருக்குமென்ற மகா உண்மை அவனுக்குள் சுரக்க ஆரம்பித்திருந்தது.

"இந்திரன்!"

"சொல்லுங்கோ, ஐயா."

"எவ்வளவு மனவலிமை இருந்திருந்தால் நானும் உங்கட பாட்டாவைப்போல உடைஞ்சுபோகாமல் ஒரு மனிசனாய் இண்டைக்கும் உலாவிக்கொண்டு இருந்திருக்கேலுமெண்டு ஒருக்கா யோசிச்சுப்பார். எப்பிடி இது என்னால முடிஞ்சுது? என்ர ஒரே நம்பிக்கை... எனக்கு ரண்டு ஆம்பிளைப் பிள்ளையள் இருக்கு எண்ட எண்ணம்தான். அதுக்கேத்த மாதிரி கனிஞ்சு வந்தது ஒரு சூழ்நிலை."

வானம் வெளித்திருந்தது.

அன்றைக்கும் மழை பொய்த்துவிட்டது.

நட்சத்திரங்கள் சில மின்னின.

"முந்தியும் இனப் பிரச்சினை இருந்ததுதான். எண்பத்தி மூண்டு ஆடிதான் அதுகின்ர உச்சம். கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் இந்தியாவுக்கு ஓடிச்சினமாம். அங்கயிருந்து ஆயிரக்கணக்கில ஈரோப்புக்குப் போய்த் தஞ்சம் கேட்டினமாம். பத்தாயிரம் ரூபாயோட ஜேர்மனி போச்சினமாம் பலநூறு பேர். ஜேர்மனி, பிரான்சு, டென்மார்க், நோர்வே, சுவீடன் எண்டும், வசதியானவை இங்கிலாந்து, கனடா, ஒஸ்ரேலியா எண்டும் ஓட்டம். முந்தி அடிச்ச ரண்டாம் அலையில தவறியிருந்த மிச்சம் மீதியெல்லாம் அந்தப் புதிய அலையில இழுப்புண்டு நல்ல இடம் போய்ச் சேர்ந்துதுகள். ஒரு வீட்டுக்கு ஒரு ஆள் போனாப்போதும், அந்தக் குடும்பமே இந்த கலவர, யுத்த நெருக்கடியில தப்பின மாதிரித்தான். ஒவ்வொண்டாய் வெளிநாடு போய்ச் சேர்ந்திடுங்கள். சித்தப்பன் பெரியப்பன் குடும்பங்கள்கூட பல இடங்களில கரை சேர்ந்திருக்குது. அப்பிடி ஒரு பெரிய அலை இது. ஒருவேளை..... இதுவே கடைசி அலையாயும் இருக்கலாம்."

நெடு மூச்சுவிட்டார்.

இருந்த இடத்திலேயே அவதியோடு அசைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளைத் துளாவினார்.

லாம்பு கூடு பத்திக்கொண்டு போனது.

இருளில் அவர் குரல் எழுந்தது: "மகேஷூவை எப்பிடியாச்சும் வெளியில அனுப்பியிட வேணுமெண்டதுதான் ராப்பகலாய் இந்த நாள்க்களில நான் கண்ட கனவு. போன வருஷத்திலயிருந்து நாயாய் நான் அலைஞ்சது அதுக்காகத்தான். நயினாதீவு போய் செல்லத்தம்புவைப் பாத்தன். அவரின்ர மோனும் மருமோளும் இப்ப கனடாவிலயெல்லே! அவருக்கு நான் முதல் அலையடிச்ச காலத்தில... ரண்டாம் அலையடிச்ச காலத்திலயெல்லாம் ஏமாறின கதையள் தெரியும். அதோட.... பாட்டாவுக்கும் அவரின்ர தேப்பனுக்கும் இடையில அந்தக் காலத்திலயே பழக்கமும் குடுக்கல் வாங்கலும் இருந்தது. பழசை மறக்கிற மனிசரில்லை செல்லத்தம்பு. மகேஷூவை அனுப்புறதில பாதிப் பணத்துக்கு அவர் உதவி செய்யிறதாய்ச் சொன்னார். பாதிக்கு விசுவமடு தாமோதரியும், கண்டாவளை ராயப்புவும் உதவி செய்யிறதாய்ச் சொல்லிச்சினம். இந்த நிலைமையில... என்ர மனசு எப்பிடியிருக்கும், ராசா? யோசிச்சுப் பார். அண்ணை எங்கயெண்டு கேட்டதுக்கு அண்டைக்கு நீ சொன்ன பதிலில நான் எரிஞ்சுபோனன், அப்பு."

விம்மல்போல சத்தம் எதுவோ எழுந்தது.

அழுதாரா என்று பார்த்துத் தெரியமுடியாதபடிக்கு இருட்டு சூழ்ந்திருந்தது.

சொற்கள் வந்த மாதிரியிலும், தொடர்ந்து விழுந்த மௌனத்தின் கனதியிலும்தான் அவர் அழுதிருக்கக்கூடிய சாத்தியம் தெரிந்தது.

மூக்கை உறிஞ்சினார். ஒரு சுதாரிப்புக்காக இருக்கும். குரல் தெளிவாய் விரிந்தது: "இந்த அலையோட கரையேறினாச் சரி. இல்லாட்டி ஜென்ம ஜென்மத்துக்கும் இப்படியேதான் கிடந்து சீரழியவேணும். சண்டை இனி செயம்கொள்ளுமெண்டு நான் நினைக்கேல்லை. எல்லாம் ஒரு சமாதானத்தில வந்து முடிய வெகுகாலம் ஆகாது. அது இல்லையெண்டாலும் இந்த மூண்டாம் அலையாவது கெதியில ஓயும். அதுக்குள்ள ஏதாவது செய்தாத்தான் உண்டு. மகேஷ்தான் என்ர நம்பிக்கையில, ஆசையில, கனவில மண் அள்ளிப் போட்டுட்டு ஓடியிட்டான். அதனால என்ன? எனக்கு... இன்னும் நீ இருக்கிறாய். நீ வெளிநாட்டுக்குப் போ, இந்திரா. நான் உன்னை அனுப்பிவைக்கிறன்."

அந்த அதிர்ச்சி இந்திரனிடத்தில் நீங்க வெகு நேரம் பிடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

கண்டாவளைச் சந்தியில் ஓட்டுத் தொழிற்சாலைக்குக் கிட்ட அந்தக் கடை இருந்தது. சூழ உள்ள குடியேற்றப் பகுதிகளுக்கு ஓரளவு மத்தியஸ்தானம்போல அந்த இடம். அங்கிருந்து பஸ் எடுக்கிறது சுலபம். பஸ் இல்லாவிட்டால் அங்கிருந்து தட்டிவான் புறப்படும். அதுவுமில்லையேல் ஏதாவது ட்ராக்டரில் இடம்பிடித்துப் போகலாம். போகவென்று புறப்பட்டு வந்துவிட்டால் உபாயங்கள் அங்கே புறச் சூழ்நிலைக்குத் தக உருவாகும் என்பது எல்லாருக்கும் தெரிந்திருந்தது.

இரண்டு சிறிய கடைகளாகக் கட்டப்பட்ட கட்டிடம் அது. ஒரு அறையைக் கடையாக நடத்திக்கொண்டு, அடுத்த அறையை வீடாகப் பாவித்தார்கள். வீட்டு அறைக்குப் பின்புறம் ஒற்றைச் சிறகுக் கதவுபோட்ட வாசல் இருந்தது. வாசல் எதிரே மண் குசினி. அதன் பச்சைப் பெயின்ற் அடித்த முன்பக்க மடக்குக் கதவு எப்போதும் பூட்டியே இருக்கும். ஊர்வசியும் அவளிரு பிள்ளைகளும் மட்டுமே அப்போது அங்கே இருந்தார்கள். ஐந்து பேர் கொண்ட அக்குடும்பம் மூன்று பேராகச் சுருங்கியது அங்கே சராசரிக் குடும்பங்களின் சரித்திரம் போன்றது தான்.

ஊர்வசியின் கணவன் வேலையா பரந்தனில் ஐந்தாம் வாய்க்கால் பகுதியில் விதானை கமத்திலே கூலிக்கு ட்ராக்டர் ஓட்டிக்கொண்டிருந்தவன். தினசரியில்லாவிட்டாலும் இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை வீட்டுக்கு வருவான். ஒருமுறை வீட்டிலிருந்து வேலைக்கென்று சென்றவன் ஒரு வாரமாகியும் வராதுபோக, ஊர்வசி விசாரித்துச் சென்றதில்தான் தெரிந்தது அவன் கமத்துக்கே போகவில்லையென்பது. ஊரெல்லாம் தேடினாள். வேலையாபற்றித் தெரியாதுபோனாலும், வேலையா வேலைக்கென்று புறப்பட்டுச் சென்ற அன்று காலை விசுவமடுவுக்குக் கிட்ட வாகனங்களையெல்லாம் ராணுவம் சோதனையிட்டமை தெரிய வந்தது. ஊர்வசி விசுவமடுவில் விசாரித்து, ராணுவ சோதனை நடைபெற்ற இடத்துக்கு வந்து சேர்ந்தாள். அக்கம் பக்கத்து வீடுகளில் கேட்டதில் தெரிந்தது அவள் சொல்லும் அடையாளமுள்ள ஒரு மனிதனும் அன்று ராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட விபரம். வேலையாவின் கைகளைப் பிடித்து ட்ராக்டர் செலுத்திக் காய்த்துப் போயிருந்த அடையாளங்களைப் பார்த்துவிட்டு ஆயுதப் பயிற்சி பெற்ற புலியென்று ஒரு ராணுவத்தான் அவனைத் தள்ளிக்கொண்டு போனதாக, அவ்வீட்டு வாசலில் அந்நிகழ்வின் கண்கண்ட காட்சியாய் நின்றிருந்த ஒரு பள்ளிச் சிறுவன் விபரம் தெரிவித்த தாயாரோடு கூட நின்று கூறினான்.

அங்கிருந்து அழுகையும் கண்ணீரும் ஒப்பாரியுமாகத்தான் கண்டாவளை வந்து சேர்ந்தாள். நடந்த தூரமெல்லாம் அவள் வைத்த ஒப்பாரியில் வானமே சோகம் பூண்டது; காற்று நெஞ்சுடைந்தது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வனப் பிரதேசத்தின் பயிர் பச்சைகள் மரம் செடி கொடிகளெல்லாம்கூட தவிப்பில் ஆழ்ந்தன; பறவைகளும் துக்க மேலீட்டில் இசைக்க மறந்தன.

மேலே என்ன செய்ய? ஏதுமறியாள் ஊர்வசி. ஒரு காலத்தில் எம். பி. யிடம்தான் இதுமாதிரியான விஷயங்களுக்கு மக்கள் ஓடினார்கள். இப்போது எங்கே ஓட, அவர்களும் ஓடிவிட்ட நிலையில். அவளுக்குத் தெரியும். அவள் சிறுமியாக இருந்தபோது இப்படியெல்லாம் நடந்தது. ஒரு ஹர்த்தால் நாளில் மின் கம்பிகளில் சைக்கிள் செயின் எறிந்து கிளிநொச்சியில் பெருமிடங்களிலும், பரந்தனில் அங்கங்கேயும் மின்விநியோகத்தைத் தடுத்தார்கள் சில மாணவர் பேரவை உறுப்பினர்கள். இரவில் நகரமே இருளில் மூழ்கிப்போயிருந்தது. மறுநாள் காலை தகவலின் பேரிலோ சந்தேகத்தின் பேரிலோ கண்டாவளைச் சிவானந்தனை பொலிஸ் வந்து பிடித்துப்போனது. அந்த நேரத்தில் பெற்றாரும் உறவினரும் எம்.பி.யிடம்தான் ஓடிப்போய் முறையிட்டார்கள். மேலிடத்தில் தொடர்புகொண்டு மறுநாளே விடுதலையாகவைத்தார் எம்.பி.

எழுபத்தைந்தாம் ஆண்டளவில் நடந்தது இது. இப்போதோ எண்பத்தைந்து.

வீடு திரும்பிய ஊர்வசி இரண்டு நாட்கள் படுக்கையிலே கிடந்து அழுதுகொண்டிருந்தாள். கடைசியில் அவளது மூத்த மகன் வேந்தன் அவளைத் தெளிவித்து எழவைத்தான்.

வேலையா பிடித்துக்கொண்டு போகப்பட்ட பிறகு, ஊர்வசிதான் கடையைக் கவனித்தாள். வேந்தன் படித்தான். ஓய்ந்த நேரத்தில் அவனும் ஊர்வசியுமாக வெறுமையாய்க் கிடந்த பின்நிலத்தில் தோட்டம் செய்தார்கள்.

வேந்தனுக்குக் கீழே இரண்டு பிள்ளைகள். நிரம்பக் காலம் கழித்தே பிறந்தன. ஒன்று விஜயலட்சுமி; மற்றது நிரஞ்சன். நிரஞ்சனுக்கு அப்பாவை ஞாபகமில்லை. விஜயலட்சுமி அவ்வப்போது நினைவுகொண்டு கதைத்து வந்தாள். இப்போது அவளுக்கும் மறக்க ஆரம்பித்திருந்தது. வேலையா கைதுசெய்யப்பட்டு நான்கு வருஷங்கள் முடிந்திருந்தன.

வேலையா எங்கே கொண்டு செல்லப்பட்டானென்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஒருவேளை தென்னிலங்கையிலுள்ள பூசா முகாமுக்காயிருக்கலாம்; அல்லது பட்டலந்தையிலுள்ள வதை முகாமுக்காயிருக்கலாம். அவர்கள் பயங்கர வாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பிடிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு விசாரணை கூடக் கிடையாது. பெரும் பணவசதி இருந்தால் ஒரு வருஷத்திலாயினும் வழக்கை நீதிமன்றம் கொண்டு வரச்செய்து பிணையில் வெளிவரச் செய்யலாம். ஊர்வசிக்கு...? உயிருடன் இருப்பது இல்லாதது தெரியாது. ஒரு காலத்தில் திரும்பி வந்தால்தான் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலின் தேவைகளில் பலவற்றை உழைக்கப் பழகிவிட்ட பிறகு அவனில்லாமலேகூட சமாளிக்கப் பழகிவிட்டிருந்தாள் ஊர்வசி. இப்போது வேந்தனும் இல்லை. வேந்தன் இயக்கத்தில் சேர்ந்து இரண்டாண்டுகள். 'அம்மா, இயக்கத்தில் சேரப்போகிறேன்' என்றவுடன் சிறிது யோசித்துவிட்டு சரியென்றுவிட்டாள். அவள் மட்டுமேதான் உழைக்கவேண்டியிருந்தது மூன்று வயிறுகளை நிரப்ப.

இரவில் அவள் மனமும் தேகமும் வதைபடும். அதுவும் ஒருவகை மரப்புக்குள்ளாகிவிட்டது இப்போது. ஆனால் சமீப காலச் செய்திகள் ஒரு உணர்வுச் சுரணையை ஏற்படுத்தியிருந்தன. பயங்கர வாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவித்தலென்பதும் இந்தியாவின் ஒரு நிபந்தனையாக இருந்து, ஏற்கனவே பூசா முகாமிலிருந்து பலபேரை விடுதலை செய்வித்திருந்தது. செய்தியில் கேட்ட நாளிலிருந்து ஆசைகள் வெடித்து நித்திரை அழிந்தது. உடல் தேவை சார்ந்த உக்கிரத் தேடலொன்று இருப்பினும், அத்தேடலின் முதல் தேவை ஆன்மாவுக்கானதாயே இருந்தது. அவள் ஆன்மா காதலில் கனத்துக் கிடந்தது.

அன்று ஓரளவு தூங்கிய இரவு.

வழக்கத்துக்கு முன்னதாகவே எழுந்துவிட்டிருந்தாள் ஊர்வசி.

பொழுது வைகறை அடையும் எல்லை அது.

பூமி இன்னும் இருள் போர்த்தே இருந்தது.

விளக்கைக் கொளுத்திக்கொண்டுதான் வெளியே வந்தாள். காற்று அணைத்துவிடாதவாறு விளக்குக் கொழுந்தை கையால் அணைத்தபடி வந்து குசினிக் குந்தோடு வைத்தாள். வீதிக்குச் சென்று இருபுறமும் நெடுந்தொலைவுக்கு நீண்டு கிடந்த வீதியின் எதிரெதிர் முனைகளில் நெடுநேரமாய் மாறிமாறிப் பார்வையை வீசியபடி நின்றாள்.

இருள்தான். ஆனாலும் புறவுருவின் அசைவெதையும் காண பழக்கமும் கூர்மையும் பெற்றிருந்த கண்கள் அவை.

வெறிதைத் துளைத்து மீண்ட பார்வையுடன் குசினித் திண்ணையில் வந்தமர்ந்தாள். நாடிக்கு கையை முட்டுக்கொடுத்து, வேலி மேலால் தலையசைவு ஏதாவது தெரிகிறதா என்று கவனித்தபடி இருந்தாள். பார்வையை அப்பணியில் அமர்த்திவிட்டு சிறிதுநேரத்திலேயே சிந்தனை வேறிடம் தாவத் துவங்கிற்று.

வாழ்வு அவ்வளவு மோசமானதாக இருக்கமுடியுமென்று அவள் என்றுமே எண்ணியதில்லை. என்ன நடந்தது அவர்கள் வாழ்வுக்கு? காலவெள்ளம் அவ்வளவு விசையாக ஏதொன்றையும் பார்க்காமலா இழுத்துக்கொண்டு ஓடுகிறது? விதியென்று அதற்கு நாமகரணம் செய்யப்பட்டிருப்பது அவளுக்கும் தெரியும். அவர்கள் செய்வதற்கு எதுவுமில்லையென்பதான ஓட்டம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்ததெல்லாம் இலகுவாக இழுப்பட்டுச் செல்லக்கூடியதாய் இழுவைக்கு இணங்கிவிடுவதுதான்; எதிர்ப்பின்மைதான்.

எதிர்ப்புக் காட்டியவர்கள் நோவுதான் கண்டிருக்கிறார்கள். முரண்டு பிடித்து நின்று இழுப்புவிசைக்கு விலகி எங்கோ திசைமாறிச் சென்று சுழியில் அகப்பட்டு அழிந்தவர்கள் நிறையப் பேர்கள் அவளுக்குத் தெரியும்.

அவள் இரண்டு வகைகளிலும் - இணங்கியும் எதிர்த்தும் - வாழ்ந்து கொண்டிருந்தாள் என்பது முக்கியமான அம்சம். பெரும்பாலானவர்களால் அப்படித்தான் முடிந்திருக்கிறது.

விடிந்து வந்தது.

குழந்தைகள் எழுந்தன.

விஜயா வந்து விளக்கை அணைத்துவிட்டு ஓரமாக எடுத்து வைத்தாள்.

"பசிக்குதம்மா" என்று தாயாரெதிரில் குந்தினாள்.

ஊர்வசி பிரக்ஞையடைந்து நிமிர்ந்து பார்த்தாள்.

கோபமா? அல்லது சோகமா? ஒருவேளை இரண்டும் கலந்ததோ?

"என்ன விஜயா இது? வீட்டு நிலைமை தெரியாமல்..."

"இல்லையம்மா, பானையில தண்ணி ஊத்தி வைச்ச சோறு கொஞ்சம் இருக்கம்மா. மரவள்ளிக் கிழங்குக் கறியும் கிடக்கு. வாயில வைச்சுப் பாத்தன். பழுதாகேல்லை. அதுதான் கேட்டனம்மா."

"அண்ணை வருவான்."

"அண்ணை வருமா?"

"ம்! அது வந்தால் ஒரு வாய் சாப்பிடக் குடுக்கலாமெண்டு மத்தியானம் நான் சாப்பிடாமல் எடுத்துவைச்ச சோறு. மரவள்ளிக் கிழங்கும் பழஞ்சோறுமெண்டால் அண்ணைக்கு நல்ல விருப்பம்."

"ஓமம்மா. அதுவும் றால் போட்டுக் காய்ச்சின கிழங்குக் கறியெண்டால் அண்ணை சும்மாயே அள்ளி அள்ளித் தின்னும்."

"நாங்கள் வழக்கம்போல சோத்தைக் காய்ச்சி கஞ்சியை இப்ப குடிப்பம். மத்தியானத்துக்கு மேல, மரவள்ளித் தடியொண்டை இழுத்து கறிவைச்சு சாப்பிடலாம், என்ன?"

"சரியம்மா."

உள்ளே சாப்பாடு வைத்து மூடியிருந்த மூலையில் நிரஞ்சன் நின்று ஏதோ கடபுடா... செய்வது தெரிந்து எழுந்து ஓடினாள் விஜயா.

"என்ன, நிரஞ்சு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசிக்குதக்கா."

"பொறு, இப்ப தேத்தண்ணி வைச்சுக் குடிப்பம். பொறுத்து... சோறு காய்ச்சித் திம்பம்."

"அங்கயிருக்கு.... கிழங்குக் கறி..."

"அதுவோ....? அது பழுதாய்ப் போச்சு. திண்டால் வயித்துக்க குத்தும். அது வேண்டாம். எங்களிட்ட இன்னும் கொஞ்ச மரவள்ளித் தடியள் நிக்குதுதானே! புதிதாய்க் கறி வைச்சு திங்கலாம், என்னப்பு...!"

குழந்தைகளுக்குப் பசி.

கடந்த ஒரு வாரமாய் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாடுதான். அதுவும் அரை வயிறு கால் வயிறென்று.

கேட்டுக்கொண்டிருந்த ஊர்வசிக்கு கண்கலங்கிற்று.

மனத்தைத் தேற்றிக்கொண்டு மறுபடி வீதிக்கு வந்தாள். ஏன் வேந்தன் வரவில்லை? 'ராவில சென்றிக்கு வருவன் இந்தப் பக்கம். ஒவ்வொரு நாளும் வர ஏலாது. கிழமைக்கு ஒருக்கால் ரண்டுதரமெண்டு வந்து உன்னையும் தம்பி தங்கச்சியையும் பாத்திட்டுப் போகலாம். இனி அடுத்த சனிக்கிழமை வருவன்' என்று போனதடவை சொல்லிச் சென்றானே!

ஊர்வசியின் பார்வை உன்னித்தது.

தூர அசைவது.... சைக்கிள்தானா?

ஆம், பறந்து வந்து கொண்டிருந்தது ஒரு சைக்கிள்.

வாசலில் சைக்கிளை நிறுத்தி அவசரமாய் இறங்கிய வேந்தன் தாயாரிடம் சொன்னான்: "உள்ள வந்து நிண்டு பேசிப் போக ஏலாதம்மா. சென்றி மாறுறதுக்கு ஆள் இன்னும் வரேல்லை. சீனன் மட்டும்தான் இப்ப அங்க நிக்கிறான். நான் உடன போகவேணும். ஏதோ கரச்சல்போல இருக்கு. ஒண்டயும் நினைச்சு கவலைப்படாத, அம்மா. நிலமை நல்லாயிருந்தால் அடுத்த கிழமை வாறன், என்ன! தங்கச்சியிட்டயும் சொல்லு."

அவன் போகத் திரும்பினான்.

"வேந்தா!"

நின்றான். "என்னம்மா?"

"பழஞ்சோறு கொஞ்சம் இருக்கு. மரவள்ளிக் கிழங்குக் கறியும் வைச்சிருக்கிறன். ஒரு வாய் சாப்பிட்டிட்டுப் போ, அய்யா."

வேந்தன் சிரித்தான். மீசை அரும்பத் துவங்கியிருந்த அந்த முகத்துக்கு அந்தச் சிரிப்பு ஒரு முதிர்ச்சியைக் கொடுத்தது. "சாப்பிடுவமம்மா. எல்லாரும் ஒண்டாயிருந்து நிம்மதியாய்ச் சாப்பிடுற நாள் கெதியில வருமம்மா நான் வாறன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வழியே மறுபடி சைக்கிள் காற்றாய்ப் பறந்தது.

சைக்கிள் சத்தம் வாசல்புறத்தில் கேட்டு ஓடிவந்த விஜயாவும் நிரஞ்சனும் அண்ணன் வெகுதொலைவு சென்று விட்டிருந்ததில் முகத்தில் சோகத்தை வழிய விட்டனர்.

அவர்கள் வாழ ஆசைப்பட்டவர்கள்.

அது, அவர்கள் கேட்ட வாழ்க்கையல்ல.

அது வாழ்க்கையே அல்ல.

ஆனாலும் அந்தப் புரிதலும்.... அந்தப் பொறுதியும்..... அந்தப் பாசங்களும்....

நாம் வாழவே எழுந்தோம் என்று ஒரு கவிஞன் வெடிக்கவிருந்த கவி முழக்கம் அப்போதே காற்றில் மிதந்து கொண்டிருந்ததோ?

## 12

'அவசியம் போகவேண்டும், அம்மாவையும் ஐயாவையும் ஒருமுறை பார்த்துவிட்டு ஓடிவந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனவன் ஒரு மாதமாகி வரவில்லை; இரண்டு மாதங்களாகியும் வரவில்லை. ஏற்கனவே யோசனை மட்டும்தான் அவளிடத்தில் பிடித்திருந்தது. அதற்கு மேலே கவலையாகிவிட்டது. எதுவும்தான் நடந்திருக்கக்கூடும். அப்படியான சூழ்நிலை அது. இந்தியக் கடற்படை வெகு உஷாராக பாக்குத் தொடுவாயைக் கண்காணித்துக்கொண்டிருந்தது. கடல் எல்லைக் கோட்டைக் கடந்து வருதலோ போதலோ சாத்தியமே இல்லையென்ற நிலை. ஆனால் அவள் போகத் தீர்மானித்தாள்.

இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முரண் இணக்கம் ஒன்று தெரிந்தது. விடுதலைப் புலிகளும் மற்றைய இயக்கங்கள்போல் இந்திய - இலங்கை உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு ஆயுத ஒப்படைப்புக்குத் தயாராகவிருந்தது. தொடர்ந்து ஓரிரண்டு கேந்திரங்களில் ஆயுத ஒப்படைப்பும் நிகழ்ந்தது.

மகத்தான முற்றவெளிக் கூட்டம் வடமாகாணத்தைப் பெரும் புளகத்தில் ஆழ்த்தியிருந்தது. வாழ்வுத் தவன வெளிப்பாடு வழிபாடாய்ப் பெருக்கெடுத்தது. இறைவனுக்கு நன்றி சொல்லுதல் கடமை. கோயில்களில் அடங்கிக் கிடந்த கண்டா மணிகள் நாக்கசைத்தன. மணிநாத அதிர்வுகள் எங்கும் வியாபித்தன. மன அதிர்வுகளை அவை உற்பவித்து உள்ளேயே அடங்கின. மணி கிணுகிணுக்க சிறுசிறு கோவில்களில்கூட தீபாராதனைகள் காட்டப்பெற்றன. அரோகராக்கள் எழுந்தன. ஆனாலும் நாளடைவில் ஒரு ஏறுமாறான நிலைமை அரசியல் களத்தில் விரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கிற்று. வெளிப்படையான காரணம், வெளிப்படையான நிகழ்வுகள் ஏதுமில்லாவிட்டாலும் அதை உணரக்கூடியதாய் இருந்தது. இருந்தும்தான் அவள் தன் தீர்மானத்தைச் செயலாக்க முனைந்தாள்.

தங்கியிருந்த வீட்டுக்காரரிடம் தான் சென்னைக்குப் போகவேண்டியிருப்பதாகச் சொல்லிக்கொண்டு தஞ்சாவூர் ஓடினாள். யோகேஷின் நண்பர்கள் சிலரை அவளுக்கு அறிமுகமாகியிருந்தது. சந்தித்து ஊர் செல்ல ஏற்பாடுகள் செய்தாள்.

ஒரு அதிகாலை வேளையில் வள்ளம் புறப்பட்டது.

ஒரு பயம் உள்ளூர இழையோடியது அவளுக்கு.

வள்ளத்தில் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இல்லாமல் அவள்போல் அவசியத்திலும் அவசரத்திலும் ஊர் திரும்பும் பொதுமக்களே இருந்தமை ஓரளவு ஆறுதல் செய்தது.

சென்னை செல்லாதது தாயாரைச் சந்திக்கக் கூடாது என்பதனாலேதான். அவளின் சந்திப்பை அவள் முழுக்கவே மறுத்தாள். தாயாருக்கு இனி மறுப்பு / சாக்கு சொல்ல அவளால் முடியாது.

நாடு அமைதிக்கான பின்புலத்தை விரித்துவிட்டது. சுதன் சொன்னபடியேயான நிகழ்வுகளுக்கு சகுனங்கள் வெளிப்பாடடைந்துவிட்டன. அவன் தன்னிலையையாயினும் புத்திசாலித்தனமாக கணித்திருந்தான் என்று அவளுக்கே இப்போதுபட்டது. இந்தச் சமயத்தில் தாயார் நெருப்பெறிந்து வெடிப்பாள்; திட்டுவாள். அதைக் கூடத் தாங்கிவிட முடியும். அவள் விருப்பத்தை தான் செய்துவிட முடியாது. ஏனெனில் தனிநபர் குற்றங்களாய் அவனது ஒழுகலாறு இன்னும் அவளிடத்தில் இருந்து கொண்டிருந்தது. தனது அந்த முடிவுகளோடு அரசியையோ வாலாம்பிகையையோகூட அவளால் சுமுகமான மனநிலையுடன் சந்தித்துவிட முடியாது. அப்போதைக்கு தவிர்த்து தகுந்த சமயத்தில் அதை அவள் செய்வாள்.

மனம் ஊர்நோக்கிச் சிறகடித்தது.

நயினையின் கடற் பிராந்தியம்....

முத்தேர் அம்மன் கோவில்....

மேற்கின் பசுமை கொழித்த வயல்கள் தோட்டங்கள்....

அதன் கிழக்கு முனைகளின் கீழும் மேலுமான படகுத்துறைகள்....

அதற்கென்று வீசும் சுகந்த காற்று....

அதற்கென்று உள்ள பறவைக் கீதம்....

அதற்கென்றுள்ள உதய அஸ்தமனங்கள்....

அதற்கென்று ஒளிவீசும் அம்புலியும் நட்சத்திரங்களும்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடு மனிதர்க்கு ஓர் அத்யந்த பிணைப்பு இயல்பில் உருவாகிறதுதான். அது உருவாவதுகூட இல்லை. பிறப்போடு இணைந்திருப்பது. மண், அதன் பிள்ளைகள் எல்லோருக்கும் பொது. அதேநேரத்தில் தனதென்றும்படத்தக்கது. மண் மட்டுமில்லை, மொழியும் அத்தன்மையதே. அவை சுயம் விளங்கவைக்கும் ஆதாரங்களேதவிர வேறில்லை. ஆனால் வேறுபோலவும் தோற்றம் கொடுக்கும். அந்த பிம்பம் மயக்கும் ஆற்றலுடையது. அவள் தன் மண்ணில் காலடி வைக்கத் துடித்த கணங்கள் மிக்க கனதியானவை. அவள் அதற்காய்த் துறந்துவருவது தன் உறவை மட்டும் தான்; காதலை இல்லை. காதலையும் சிதறடித்துவிட்டு நிர்வாணியாக நிற்க வெகு உக்கிரமான எண்ணங்கள் கடந்த சில மாதங்களிலே அவளுக்குள் எழுந்தன. தசைகள் கனத்துத் தெரிந்தன. மேனி எப்போதும் உட்கனலில் வேகுவதுபோல் இளைத்து வந்தது. கஜுராஹோ சிற்பங்கள் மனத்தில் சரீரங்களாய் அசைந்தன. முயங்கி முயங்கி தீ பிறப்பித்தன! ஓ...! அவள் அக்கணங்களை வென்றாள் தற்காலிகமாயேனும். அதுமுக்கியம்.

காலை இளங்கதிர் இதம் செய்தது. பயம் மெல்லமெல்லவாய் அழிந்திருந்தது. விச்ராந்தி நிலையில் மனம். வெளியினில் அது. உடலைத் தூக்கிக்கொண்டு பறக்க முயன்றது.

மதியத்தில் அவர்கள் மன்னார்ப் பகுதியை அடைந்தனர்.

கரைப் பாதை வழியே இன்னும் கேரதீவையும் யாழ்ப்பாணத்தையும் அடையக்கூடிய சாத்தியம் இருந்தது. சிறீலங்கா ராணுவம் முகாங்களில் அடக்கிவிடப்பட்டிருந்ததால் வழி திறந்தேயிருந்தது. ஒரு காலத்தில் கதிகலங்க வைக்கும் கோர சம்பவங்களின் நிகழ்விடங்களாய் அப்பாதைகள் இருந்ததை அவள் அறிவாள். இப்போது சமாதானக் காற்று சுழலத் துவங்கியிருக்கிறது. பஸ் பயணம் இயலும்.

மாலையளவில் பஸ் நிலையம் வந்தனர்.

அங்கே.... ஒரே திமிலோகம்! பஸ்கள் நிறைய நிறைய சனங்களை அடைத்துக்கொண்டு பறந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே கூட்டமாய் மக்கள். அவர்கள் முகமெங்கும் கலவர நிழல்.

'என்ன நடந்து கொண்டிருக்கிறது?'

'சண்டை துவங்கியிட்டுது!'

'ஆருக்கும் ஆருக்கும்?'

'புலியளுக்கும் அமைதிப்படைக்கும்!'

'ஆ.... கடவுளே!' ஒரு நிர்க்கதி. தொடர்ந்து: 'சரி, யாழ்ப்பாணம் போக ஏலுமோ?'

'கொழும்பைத் தவிர வேற எங்கயும் போக ஏலாது!'

கை வளையலை விற்றுக்கொண்டு, அன்றிரவே இந்தியா திரும்பத் தீர்மானித்த பயணிகளோடு தானும் திரும்பக் காத்திருந்தாள். தங்காலையிலிருந்து வந்த ஒரு மீனவக் குடும்பத்தின் படகில் அவளுக்கு இடம் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமிழகத்தில் வந்து கரையிறங்கினார்கள். தங்கச்சி தங்கச்சியென்று வலு வாரப்பாடாய் அவளோடு பழகினாள் அந்தக் குடும்பத்துப் பெண்.

அவளது மறுவருகை மகாசோகமானது. அதிகாரிகளிடம் பதிவுசெய்யக் காத்திருந்த வேளையில் மேலே சோகப்படவும் முடியாமல் மனம் ஸ்தம்பித்து வந்தது. எங்கே அவள் எதிர்பார்த்த சமாதானம்? ஏன் யுத்தம் தொடங்கியது? எத்தரப்பு காரணம்? அவை தேவையற்ற கேள்விகள் அவளுக்கு. கனவுகள் பொய்த்துப் போயின. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல மீண்டும் மீண்டும் யுத்த அவலம்! மக்களால் முடியுமா? ஏன் மக்களை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை? பி.பி.சி. தமிழோசையிலும் ஆங்கிலச்செய்தி ஒலிபரப்பிலும் யுத்த நிலைமை சொல்லிற்று. அவள் நெஞ்சு முறுகிப் பிழிபட்டது. என்னவும் ஆகட்டும், எதுவும் எப்படியும் போகட்டுமென்று ரேடியோவை பாய்க்கிலே வைத்துப் பூட்டினாள். ஒரு இருண்மையுள் அவளது எதிர்காலமும், மொத்த ஈழத் தமிழர்களின் எதிர்காலமும். மரக்காணத்துக்கு அருகிலுள்ள புயற்கூட்டில் சில வாரங்கள் தங்கவைக்கப்பட்டார்கள். பின் கடற்கரையோர புதிய அகதி முகாமுக்கு மாற்றப்பட்டார்கள். ராஜி தான் கூடிவந்திருந்த குடும்பத்தைச் சேர்ந்தவளாகவே பதிந்து கொண்டாள். அகதி முகாம் வாழ்க்கை செத்துவிடலாமோ என்று யோசிக்க வைத்தது. ஒரு பெண்ணுக்குக்கூட இயற்கை உபாதை கழிக்க இடமில்லாத கடற்கரையில் .... மற்றவர்களும் அவ்வாறே எண்ணியிருக்க முடியும். பின்னால் பெண்களுக்கென்று தனியிடங்கள் அமைத்தார்கள். என்றாலுமென்ன? வேதனை நரகத்துக்குச் சமமாகவே இருந்தது. அத்தனை இம்சைப் பட்டது மனம். ஆனாலும் அவள் தன்னைச் சுதாரித்தாள். வாழு என்று இயல்பான அவளது போர்க்குணம் ஓங்கிச் சொன்னது.

வாழ்வதற்கு ஒரு அகதிக்கு அங்கேயும் பெரும்பலம் வேண்டியிருந்தது.

நாட்கள் கழிவது யுக நகர்ச்சியாய் இருந்தது.

காலநடையினிலே அவள் அதிலிருந்தும் மீண்டாள்.

அன்று ஒரு மாலைவேளை. தூரத்தில் நின்று கடலை ரசித்துக் கொண்டிருந்தாள் ராஜி. அங்கே கிட்டப் போய் கடலை அனுபவிக்க, ரசிக்க கரை அனுமதிக்காது.

அலை சுமந்திருந்தது கடல்.

அலைகளை அனுப்பி கரையில் அறைந்து கடல் அழுகிறதா?

அக்கரை யுத்தத்தில் ஆயுதப் புகைமூட்டம் போல் மேலே கறுத்த மேகம்.

நாளை அதற்கொரு சரித்திரம் எழுதப்படும். ஆனால் அவள்.... சரித்திரக் களன் விட்டு ஓடிவந்தவள். அவள் பங்குதாரியில்லை அச்சரித்திரத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தன்னை அநாதையென்று அங்கே சொல்லிக் கொண்டாள். சொந்தம்போலிருந்தது அன்ரனி - றோசமலரின் குடும்பம்மட்டும்தான். அங்கே நிகழ்கால உறவுகளின் ஊடாட்டம் சமதளத்தில் இருந்தது. எல்லா உறவுகளையுமே பேணிக்கொள்ள அது வசதி. அதில் நெகிழ்ந்து விலகிப்போக முடிவதில்லை. அதனால் அவளில் ஒரு இயல்பு நிலை மீளத் துவங்கியது. பெருமளவு நினைவுப் பாரங்களை இறக்கி வைத்தாயிற்று. சில மீந்திருந்தனதான். அவை சாசுவதமானவை. உயிர் தின்ன இருப்பவை. அவள் தன்னை அவர்களுக்கு ஒழித்தாள். அதுபோல் அவர்களுள்ளும் ஒழிந்தாள். இனி யாராலும் அவளிருப்பிடத்தைக் கண்டுபிடித்துவிட முடியாது. யோகேஷினால் கூட.

மேலே நாட்கள் கழிவதில் சிரமமிருக்கவில்லை.

ராஜகருணா அங்கே அவளுக்கு நல்ல நண்பனாயிருந்தான். அவன்தான் முகாமில் இயங்கிய சின்ன மருந்தகத்துக்குப் பொறுப்பாக இருந்தான். அவனோடு சேர்ந்து அவளும் மருந்துகள் நோய்கள் பற்றித் தெரிந்து கொண்டாள்.

சென்னையிலுள்ள ஈழ ஏதிலியர் கழகத்தின் ஆதரவில் அது இயங்கியது. மருந்துகள் மற்றும் செலவுகளுக்கு தலைமையகம் போய்வருவான் ராஜகருணா. ஒருமுறை, அந்த இரண்டு வருஷங்களில் முதல் முறையாக, கலெக்டர் அலுவலகம் போய் அனுமதி பெற்றுக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டாள் ராஜி, ராஜகருணாவுடன்.

## 13

கமலாவால் தன் காட்சியை ஒரு கணம் நம்பவே முடியவில்லை. பின்னர்தான் உறுதிப்பட்டுக்கொண்டு 'ராஜீ!' என்று கூவினாள். அவளது முகம் அப்படியே பூத்துப் பொலிந்து போயிற்று. வாராது வந்த மாமழைபோல் அவள். அவளை வரவேற்று உட்காரவைத்தாள். பக்கத்தில்அமர்ந்து தோளிலே கைபோட்டு மெல்லென அணைத்தபடி சொன்னாள்: "இப்பிடிச் செய்திட்டியே, ராஜி! எங்க இருக்கிறாயெண்டே தெரியேல்லை இருக்கிறியா இல்லையா எண்டதே சந்தேகமாப் போச்சு. எவ்வளவு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தம், தெரியுமே?"

கண் கலங்கியது கமலாவுக்கு, இத்தனைக்கு ராஜகருணா அங்கே வேற்றாளாய் இருந்துகொண்டிருந்தான்.

ராஜிக்கே கண் கனத்தது.

"யோகேஷ் ரண்டு தரம் உன்னைத் தேடிக்கொண்டு இஞ்ச வந்தது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேடியா? நான் ஒழிச்சுக்கொண்டிருந்தன், அக்கா. என்ர சொந்தம் பந்தமெண்டு எவரின்ர முகத்திலயும் முழிக்க எனக்குப் பிடிக்கேல்லை. அவ்வளவு சுலபமாய் என்னைக் கண்டு பிடிச்சிட ஏலுமோ? அது போகட்டும்... உங்களைப்பற்றிச் சொல்லுங்கோ. எப்பிடி இருக்கிறியள்?"

"எங்களுக்கென்ன, நல்லாய்த்தான் இருக்கிறம். ஆனால் நாட்டிலதான்....."

'ம்ச்!' தன் மனவருத்தத்தைக் காட்டினாள் ராஜியும். அது மனவருத்தம்கூட இல்லை. எங்களால் என்ன செய்ய முடியும் என்பது மாதிரியான ஒரு கையறு நிலையின் வெளிப்பாட்டுத் தொனி. எந்த இயங்குதலும் சாத்தியமற்ற நிலையில் அது ஒருவரிடத்தில் தோன்றும்.

"அது சரி, ஆர் இந்தத் தம்பி?" என்று கேட்டாள் கமலா.

அதற்கு ராஜி, "பேர் ராஜகருணா. பக்கத்து வீடு. இஞ்ச மெட்ராஸுக்கு அடிக்கடி வரும். துணையாய்க் கூட்டிக்கொண்டு வந்தன்" என்றாள்.

"அது என்ன, பேர் ஒரு மாதிரி இருக்கு? சிங்களப் பேரா?"

"தேப்பன் சிங்களம்."

அதற்கு மேலே எல்லாம் புரிய முடியும்.

தேநீர் குடித்து முடிய, மறுநாள் இரண்டு மணியளவில் தயாராய் இருக்கும்படியும், தான் வந்து கூட்டிப் போவதாகவும் சொல்லிக்கொண்டு ராஜகருணா புறப்பட்டான்.

"இப்ப சொல்லு தெளிவாய் எல்லாத்தையும். ஏன் இப்பிடிச் செய்தாய்?"

கமலாவின் சடுதித்தனம் அவளைத் திகைக்க வைத்தது. ஆனாலும் அப்படி ஒரு கேள்வியை அவள் எதிர்பார்த்தே வந்திருந்தாள். அதுபோல பல கேள்விகளுக்கும் பதில்கள் அவளிடம் தயாராய் இருந்தன ஒப்புவிக்கும் முறைகளைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது.

"எப்பிடிச் செய்தன்?"

இப்போது ஆச்சரியப்பட்டது கமலா. "தெரியாமல்தான் கேக்கிறன், நீ விளங்கிக் கேக்கிறியா? இல்லை, விளங்காமலே கேக்கிறியா?"

"விளங்காமல்தான் கேக்கிறன். எப்பிடிச் செய்தனெண்டு சொல்லுங்கோ...!"

"கூடப்பிறந்த சகோதரம் மாதிரியெல்லே பழகினன்? எனக்குக்கூட ஒரு வார்த்தை சொல்லாமல் ஓடியிட்டியே!" சொல்லும்போதே அவள் கண்கள் கலங்கி வருவதை ராஜி கண்டாள்.

"மனவருத்தப்படாதேயுங்கோ, அகா. உங்களுக்குக்கூட சொல்லாமல்தான் போகவேண்டியிருந்தது. சொல்லியிட்டுப் போயிருந்தால் என்ன செய்திருப்பியள்... அம்மா, சுந்தரம் மாமா, மாலா எல்லாரும் தேடின நேரத்தில சொல்லியிருப்பியள்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... சொல்லத்தானே வேணும்!"

"அதாலதான் சொல்லாமல் போனன். ஆரும் என்னைத் தேடக்கூடாது, ஆரும் பின்னால வரக்கூடாதெண்டு போன நான் அப்பிடியெல்லாம் செய்திட்டுப்போயிருக்க ஏலுமா?"

"அதால உனக்கு எவ்வளவு கெட்டபேர் வந்ததெண்டு தெரியுமே?"

"யோகேஷோட..... ஓடியிட்டதாய்....?"

"ம்!"

கொள கொளவென்று சிரித்தாள் ராஜி. பின் நிறுத்திக்கொண்டு, "நீங்கள் அப்பிடி நினைச்சியளா?" என்றாள் கமலாவைப் பார்த்து.

"நான் அப்பிடி நினைச்சிருப்பனெண்டு நீ எண்ணுகிறியா?"

"உங்களை எனக்குத் தெரியும், அக்கா. உங்களால அந்தமாதிரி நினைச்சிருக்கவே ஏலாது. ஆனால் அம்மா நினைச்சா.... சுதன் நினைச்சுது.... தம்பி நினைச்சான்.... அதாலதான் சுதன் ஷீலாவை இழுத்துக் கொண்டு போச்சுது. அதாலதான்.... எனக்கு இனிமேல் ஒரு பொம்பிளைப் பிள்ளைதானெண்டு இருந்திடுறன் எண்டு அம்மா சொன்னா."

கமலா அதிசயத்தோடு அவளைப் பார்த்தாள், இதெல்லாம் எப்படித் தெரிந்தது என்பதாக.

"தெரியும்.... அறிஞ்சன்....!"

"..."

"அதுக்காக நான் கோபப்பட்டிடேல்லை. வருத்தம் மட்டும்தான்பட்டன். ஏன் இந்த மனிசர் என்னைக் கொஞ்சங்கூடப் புரிஞ்சுகொள்ளுகினம் இல்லை? பேசவிட்டா, எவ்வளவு அழகாய் மண்.... விடுதலை.... போராட்டம்.... எண்டு சொல்லியிடுகினம்? ஆனா வாழ்க்கையை மட்டும் வேறமாதிரி வாழ்ந்திடுகினம். நானும் அவை மாதிரி இல்லாமலிருக்கிறதா மாறுபாடு? முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தது இந்த நாடு..... எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்...."

ராஜி அதற்குமேல் அடக்க முடியாமல் வெடித்து அழுதாள்.

"ராஜீ....!"

"ஆரும் எப்பிடியும் நடந்துகொள்ளட்டும். எனக்கொண்டுமில்லை. ஆரும் எப்பிடியும் என்னைப்பற்றி நினைக்கட்டும். எனக்குக் கவலையில்லை. அவைக்காக நான் மாறியிட ஏலாது. எனக்கு என் மண்.... என் தேசம் பெரிசு. நானும் என் மண்ணில இல்லைத்தான். ஆனாலும் என்ர தேசத்து மக்களோட இருக்கிறன். அவையின்ர கஷ்ரங்களோடயும் துயரங்களோடயும் இருக்கிறன்."

மேலே பேச்சு இல்லை.

பேச இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி மௌனமாய் விரிந்தது.

சில மணித் துளிகளின் பின், "அக்கா....!" என்றாள் ராஜி.

"என்ன?"

"என்ர வாழ்க்கை கடைசியில எப்பிடிப் போய் முடியுமோ எனக்குத் தெரியாது. நாட்டுக்குப் போவனா, இஞ்சயே கிடந்து அழிஞ்சு போவனா எண்டு சொல்ல ஏலாது. ஆனா.... நிம்மதியாய் மட்டும் நான் செத்திடமாட்டன், அக்கா. கடைசி மூச்சு விடுகிற நேரத்திலயும் ஒரு குறை என்னில இருந்து கொண்டிருக்கும். நான் அப்பவும் சுதனுக்கு எழுதப்பட்ட பொம்பிளையாய்தானே சாகவேண்டியிருக்கும்! இல்லையே, அக்கா? அந்தப் பாரவிலங்கை உடைச்சு விடுதலை பெறுகிறது எப்பிடி? இனம் விடுதலை அடைஞ்சாலும், இந்த விடுதலை மட்டும் எனக்கு எப்பவுமே கிடைச்சிடாது; இல்லையே, அக்கா?"

அவை ஓரளவு பதில்களையும் உள்ளடக்கியிருக்கிற கேள்விகளாகும்.

அவள்..... சுதனுக்கு எழுதப்பட்ட பொம்பிளையாய்தான் சாகவேண்டியிருக்கும்....

அவளுக்கு.... விடுதலைமட்டும் எப்பவும் கிடைச்சிடாது....

அவள் தன்னுள் பலம்கொண்டு எழுகிற ஒரு வேளை வரும். அப்போது பாரவிலங்குகள் சிதறும். அவள் காத்திருப்பாள்.

விசுவலிங்கம் பற்றி விசாரித்தாள்.

மாலா, சரஸ்வதி பற்றி விசாரித்தாள்.

ராஜநாயகம் பற்றி விசாரித்தாள்.

ராஜி அங்கேயே தங்கி நிற்க முடிவு செய்தாள்.

மாலா வீட்டில் தங்குவதற்கு ஷீலா காரணமாய் இன்னும் ஏதேனும் சிராய்முனை மனத்தில் கிடந்து உறுத்துகிறதோ?

## 14

பூச்சு மங்கியிருந்தாலும் தோட்டம் சூழ வீடு அழகாகவே இருந்தது. தோட்டத்தில் பூ மரங்கள் பெரிதாகியிருந்தன. குரோட்டன்கள்மட்டும் கவ்வாத்துக்குப் பயந்து வளர மறுத்தனபோல் அப்படியே நின்றிருந்தன. மல்லிகைக் கொடி போர்டிகோவை மறைப்பதுபோல் கிறீப்பையுடன் சேர்ந்து வளர்ந்திருந்தது. நந்தியாவெட்டை பூத்திருந்தது. அதன் வெண்மையின் பளீரில் கண்கள் சுற்றிச் சுற்றி வண்டுபோல் மொய்த்தன. நீதவானுக்கு ஓய்வுநேரம் பூந்தோட்டம் செய்வதுதான்போன்று முன்பக்க மூலையொன்றில் வெளிப் பிரக்ஞை மறந்து கூரிசனையோடு கிண்டியால் கிண்டி புல் அரித்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி அவரைக் கண்டுகொண்டு நேரே அவரிடம் சென்றாள்.

பார்த்து, திடுக்கிட்டதுபோல் எழுந்தார்.

"ராஜீ....! எங்கயடி போனாய் மகளே! இத்தனை வருஷமாய், ஒருதரிட்டயிருந்து ஒரு தகவல் அறியவும் முடியேல்லை. என்ன நடந்தது உனக்கு? எங்க போயிருந்தாய்?"

அவருக்கு அவைக்கெல்லாம் பதில் வேண்டியதில்லை. அது ஆச்சரியத்தின் கூவல். தகவல்கள் பல அவருக்குத் தெரியத்தான் வேண்டும். அதை இனிமேல் கேட்பார். ஆசுவாசத்துக்கு - அல்லது ஆசுவாசத்துடன் அப்போது ஒன்று கேட்டார்: "எப்ப மெட்ராஸ் வந்தனி?"

"காலமை."

மகளை அழைத்தார்.

வந்தாள். மிகவும் தேறியிருந்தாள். அவளைத் தெரிந்து/ தெரிந்திருக்கலாமென்று எண்ணிச் சிரித்தாள்.

உள்ளே கூட்டிப்போய் உட்காரவைத்து தேநீர் கொடுக்கச் சொல்லிவிட்டு, தான் மேல் கழுவிவர பின்புற வழியில் குளியலறை போனார்.

கூடத்தில் மேசையோரம் போய் அமர்ந்தாள் ராஜி.

லக்சோ எப்படி இருப்பாள், ஒருதரமேனும் வந்து பாட்டனாரையும் தாயையும் பார்த்துப் போனாளா, கடிதமாவது எழுதுகிறாளா என்று யோசனை பிறந்தது. மனம் கிலேசப்பட்டது ஒரு திடீர் ஞாபகத்தில். நீண்ட காலமாக அவள் லக்சோவைப்பற்றி நினைக்கவே இல்லை.

ராஜியின் பார்வை மேசையிலிருந்த சில தாள்களில் பதிந்தது. கடிதமாய் இல்லாதிருக்கவே எடுத்துப் பார்த்தாள்.

**தீவா** எனத் தலைப்பிடப்பட்டிருந்தது.

அர்த்தம் வெளிப்படாததாலேயே ஆகர்ஷம் அதிகரிக்க வாசித்தாள்.

*புஷிக்கக் கூடாதென்ற தடைச் சொல் பெற்றதாயிருந்தது அந்த மரத்தின் கனி. ஏடன் தோட்டத்து அப்பிள் மரமல்ல, அது அரண்மனை நந்தவனத்திலேயே மிகுதியாகவும் காணப்பட்டது.*

*அது அழகிய மரமாக இருந்தது. மற்ற மரங்களிலிருந்து இலகுவில் பிரித்த இனங்காணப்படக்கூடியது அம் மர இலைகள். வெகுமுதிர் இலைகள் லேசான நீலம் விரவியும், முதிர் இலைகள் பச்சையாகவும், இள இலைகள் மஞ்சள் செறிந்தும், குருத்திலைகள் மாந்தளிர்போல் செம்மை பாரித்தும் இருந்தன.*

*குருவிகள் ஏனோ அம் மரத்தைச் சென்றடைவதில்லை. அது ஒருவகை அச்சத்தைக் கிளப்பி தடைச் சொல்லை ஒரு மறைச் சொல்லாய் ஆக்கியிருந்தது அத் தேசத்தில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பூத்ததைப் பார்த்ததில்லை யாரும். ஆனாலும் திடீர் திடீரென அதில் காய்கள் தோன்றி விரைவு விரைவாய்க் கனியாகித் தொங்கிக்கொண்டிருக்கும். கனிகளின் வாழ்வும் அல்பாயுசு. வாழ்நாள் கூடியபட்சம் ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள். அதனால் அவை மறைந்துபோகும் கனிமரங்களென்றும் அறியப்பட்டிருந்தன.

ஆண்மரம் பெண் மரமாய் இருக்கும் அம் மரம். பால் பேதம் வெளித் தெரியாது. கனி தோன்றுவதைக் கொண்டே தெரியக் கூடியன வாய் இருந்தன. அம் மரங்களின் விஷேசித்த தன்மை, மண்ணுள் வேர்களை ஆழச் செலுத்தி, தம் இணை மரத்தை நோக்கித் துளாவிச் சென்று ஆண் பெண் மத்தியில் தாம்பத்யம் அடைதலென்று மூலிகை வைத்தியர் மத்தியில் பேச்சிருந்தது. அவை தம்முள் கிளைகளை அசைத்து சைகைப் பரிமாற்றமும், இலைகளின் ஓசையில் ரகசிய மொழிப் பரிமாற்றமும் செய்து கொள்ளுமெனவும் நம்பப்பட்டது.

அக்கனி அதீத புணர்ச்சி விழைச் சலை ஏற்படுத்துமென்றும், ராக்கதம், பைசாசம் போன்ற மணவகைக் கலவி முறைகளை இச்சிக்க வைக்குமென்றும் ரகசியத்தில் ஒரு பேச்சிருந்தது. வெகுநேரம் கனியை உற்றுப் பார்த்ததிலேயே உணர்ச்சி பெற்றவர்கள் இருந்தார்களாம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் மரம் விரும்பப்பட்டும் கனி ஒதுக்கப்பட்டும் வந்தது. அதனால் அதற்கென்று ஒரு பெயரும் இல்லாமலிருந்தது. கனிமரம் என்ற சொல்லின் உச்சரிப்பில் அம்மரம் அர்த்தம்பெற்று புரிதலாயிற்று எவர்க்கும்.

ஒருநாள், சிலகாலமாய் படுக்கையறைப் பலஹீனத்தில் இருந்த மன்னன் தன் இள ராணியைத் திருப்திப்படுத்த வேண்டி காமக் களிப்பூக்கமும் அபார தாதுபுஷ்டியும் அளிக்கும் எனக் கருதப்பட்ட அம் மரக்கனியொன்றை இரகசியத்தில் உண்டுவிடுகிறான்.

அன்று வான்வெளியில் சில உற்பாதங்கள் நிகழ்ந்தவனவாம். தேசத்தில் எங்கோ அமிலம் பொழிந்ததாம் மழையாய். பௌர்ணமியில் நிலா வர மறுத்து அமாவாசை செய்ததாம்.

ராஜி அடுத்த பக்கத்தைப் புரட்டினாள். மேலே இல்லை. இடை நின்றிருந்ததா முடிந்திருந்ததா என்று தெரியவில்லை. அது என்ன? கதையா? தேவதைக் கதையா? மர்மமாய் நிகழ்வுணர்த்திய உரைவீச்சா? இதைத்தான் புதிய பாணிக் கதைசொல்லல் என்று சிலர் கூறுகிறார்களோ? அவளுள் கேள்விகள் பிறந்தன.

தேநீர் கொண்டு வந்தாள் பூமணி.

சிறிதுநேரத்தில் குளித்துவிட்டு ராஜநாயகம் வந்தார்.

“படிச்சியா?” என்றார் தாள்களைத் தலையசைப்பில் சுட்டி.

சிரித்தாள்.

“எப்பிடி இருந்தது?”

“தொடர்ந்து படிக்கவேணும்போல ஆவலாய் இருந்தது. அது சரி. அது முடிஞ்சுதா? தொடர்ந்து எழுதவேணுமா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுதவேணும். முடிக்கிற மனநிலை வரேல்லை. சொல்லும் வீச்சாய் வரேல்லை. கதையாடலை ஒரு புதிய தளத்தில செய்ய நினைச்சு எழுதினது."

அவர் மொழியை வீச்சாய் எழுத மட்டுமில்லை, பேசவும் தொடங்கிருந்தார் என்பது புரிந்தது. பின்னர் அவள் கேட்டாள்: "அதென்ன, தீவா? தீவாவெண்டு ஒரு மரம் இருந்ததா? மரங்களைப்பற்றின புராண இதிகாசக் கதையா?"

"பொறு. மிச்சமும் எழுதி முடிச்ச பிறகு நீயாயே விளங்கிக்கொள்வாய். விளங்கிக்கொள்ளாட்டியும் பாதகமில்லை. தலைப்பைவிட அது சொல்லுற விசயம்தான் முக்கியம். விசயம் விளங்கினால் தலைப்பு விளங்கும்" என்றார் அவர்.

பின், "சரி, இனிச் சொல்லு, இவ்வளவு நாளும் எங்க துலைஞ்சுபோயிருந்தாய்?" என்று கேட்டார்.

அவள் சற்று இறுகினாள். சொல்லவேண்டும்தான். ஆனால் எவ்வளவு என்பது தீர்மானமில்லாமல் இருந்தது. அவர் அவளுக்குச் சார்பானவர். பெரிய இழப்புகளோடும் இருப்பவர். அவருக்குச் சொல்வதில் கமலாவுக்குச் சொல்லிக் கிடைக்காத ஆறுதல் கிடைக்கவும் கூடும். சொன்னாள்.

அவர் தூண்டி எதையும் கேட்கவில்லை. ம்.... ம்.... என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

முடிக்கும்போது, "தயவுசெய்து நான் இருக்கிற இடத்தைமட்டும் ஒருத்தரிட்டயும் சொல்லியிடாதேயுங்கோ. இன்னும் கொஞ்ச நாளைக்கு நான் சில மனிசரைச் சந்திக்க விரும்பேல்லை" என்றாள்.

"எனக்கு நேரமில்லையம்மா, இதெல்லாம் சொல்லிக் கொண்டு திரிய" என்றார் சிறிது கடுப்பாக.

"நான் அந்த அர்த்தத்தில சொல்லேல்லை, சேர். மாலாவுக்கு கமலா அக்காவுக்குக்கூட நான் சொல்லேல்லை. பேச்சில.... வாய் தவறி.... வந்திடக்கூடாதெண்டுதான்...."

அவர் கண்ணைச் சிமிட்டினார். "பயந்திட்டியா?" என்று கேட்டுச் சிரித்தார். "சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னன். லக்சோவோடயும் இப்பிடித்தான் பேசுவன்."

அவளுக்கு நெஞ்சு குழைந்தது.

"லக்சோ எப்பிடியிருக்கிறா? ஏதாவது தெரியுமா?" என்று கேட்டாள்.

அவர் மேலே பார்த்து கைவிரித்து பெருமூச்செறிந்தார்.

அது யுத்த காலம்; போராளிகளான உறவினர் பற்றிய விசாரிப்பு அனுசிதமானது. அவள் பேசாமலிருந்தாள்.

எந்த எண்ணத்தின் தொடர்ச்சியாகவோ அவர் சொன்னார்: "தொடக்கமிருந்தால் முடிவிருக்கும். துவங்கின சண்டையும் முடியத்தான் வேணும். எப்ப அது முடியுமெண்டு எங்களுக்குத் தெரியேல்லைத்தான். ஆனால் முடியும். இந்திய அரசியலில இப்ப நிறைய மாற்றம் வந்திருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னணியிலேயே இலங்கை அரசியல் விருத்தி இருக்கும். எல்லாத்தையும் கொஞ்சம் பொறுத்திருந்து பாப்பம். அதைத்தான் உன்ர மாமாவும் சொல்லுறார்"

"மாமா...?"

"சுந்தரத்தார்தான்."

"மாமா இஞ்ச வந்து நிக்கிறாரா?"

"போனாத்தானே வாறதுக்கு! மனிசன் ரண்டு வருஷமாய் திருச்சியிலதானே நிக்கிறார்! இருந்திட்டொருக்காச் சென்னைக்கு வருவார். அப்ப சந்திப்பம். ஏன்.... உனக்கு இது தெரியாதோ?"

"தெரியாது."

தாயாரோடு வந்த சுந்தரத்தார் மறுபடி நாட்டுக்குத் திரும்பவில்லையென்பது அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. ராஜகருணா மூலம் சில தகவல்களை அவள் அறிந்திருந்தாள்தான். ஆனால் இது விஷயம் அவள் அறியாதது.

சிறிதுநேரம் அதுபற்றி யோசித்துக்கொண்டிருக்க ஏழு மணி அடித்தது. எழுந்தாள்.

லக்சோவின் தாயார் குசினியில் இருந்தாள் ஏதோ அலுவலாக. போய்ச் சொல்லிக் கொண்டு வந்தாள்.

"தீவாவை எப்ப எழுதி முடிப்பியள்?" என்றாள் ராஜநாயகத்திடம்.

"கெதியில முடிப்பன்."

வாசல் வரை அவளோடு கூடவந்தார் அவர். நின்று நிதானமாகச் சொன்னார்: "உன்ர மனசில பெரிய சோகமொண்டு இருக்குது, மகள். அப்பப்ப அது உள்ளயிருந்து உன்ர கண்ணுக்குள்ளால வெளியில எட்டிப் பாக்குது. அதை நீ இப்பிடியே விட்டிக்கூடாது. ஆரிட்டயெண்டாலென்ன சொல்லி ஆறுதல் அடைஞ்சிடு. இல்லாட்டி அது உன்னைத் தின்டிடும். சரியே?"

"இன்னொரு ஆளுக்குச் சொல்லக்கூடியதெல்லாம் உங்களிட்டச் சொல்லியிட்டன். இப்ப இருக்கிறது எனக்கு மட்டுமானது. உரைச்சு உரைச்சு நானே அழிக்கவேண்டிய பாகம் அது. இல்லாட்டி.... அழிஞ்சே போறன். வேற என்ன செய்யிறது?"

"போறதுக்குள்ள ஒருக்கா வந்து போறியா?"

"முயற்சிக்கிறன்."

வெளிச்சத்தில் திட்டுத்திட்டான இருள்களுள்ளாய் அவள் நடந்துகொண்டிருந்தாள். கேற்றைச் சாத்திக் கொண்டு உள்ளே நின்றபடி அவளுருவம் ஜனங்களில் மறையும்வரை பார்த்து இரங்கிக்கொண்டிருந்தார் ராஜநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

அன்றிரவு ராஜிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மணலும் வெளியும் கடலுமான அவள் முகாம் உள்ள சூழ்நிலையின் திடீர் மாற்றம் ஒருபுறமாயும், சிந்தனை அலைகளைக் கிளர்த்திய கருத்துக் கல்லெறிவுகள் மறுபுறமாயும் அவள் தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தன.

மனம் சொற்களில் வெறிதாகியதுபோல் மௌனம் அடைந்துவிட படிமங்களாய் யோசனை பிறந்தது. நினைப்பில் சுதன் வந்தான்; ஷீலா வந்தாள்; யோகேஷும் வந்தான். யோகேஷ் நெடுங்காலம் வராதிருந்தான். அவன் தேடி வந்ததுபற்றிக் கமலா சொன்ன பிறகு அவன் யோசனையே அதிகம் வந்தது. அவளைத் தேடி இரண்டு தடவைகள் வந்திருக்கிறான். அதைக்கொண்டு பார்க்கிறபோது மிகப்பெரிய இடையூறுகளின் நிமித்தமாயில்லாமல் அவன் அப்படிச் செய்திருக்க மாட்டானென்று அப்போது எண்ணினாள். ஆனாலும் அவனது வரவை அவளால் புரிய முடியும். அதை ஒருவகையில் தன் தப்புகையை ஏற்படுத்தியதாகவே அவள் கொண்டாள். அவன் ஏற்கனவே தன் இதயத்தை இங்கிதமாய்க் காட்டியிருக்கிறான். 'அண்ணன் பெண்சாதியை மச்சாள் என்கிறதுதான் இலங்கையில வழக்கம். மச்சாள்.... நெருக்கமானவள், அந்தரங்கத்துக்குரியவள். அண்ணன் செத்தால் அண்ணன் பெண்சாதியை தம்பி கட்டுறது எங்கட ஊரில இருக்கு' என்று ஒருநாள் அவன் சொன்னபொழுதில் அவன் மனத்திலிருக்கிற ஆசைக் குறிகளை அவள் கண்டிருந்தாள். அதில் ஒரு மெய் இருந்தது ஒருபுறத்தில். அவள் அண்ணியாகாவிட்டாலும் மச்சாள்தான். ஒருவேளை அந்த நினைப்பே அவனது கூடுதலான அணுக்கத்துக்குக் காரணமாயும் இருக்கக்கூடும். அவளே அதை ஒப்புக்கொண்டு தானாய் வளைந்து போகிற சபல கணங்கள் உருவாகியிருக்கின்றன. பருவமடைந்த காலத்திலிருந்து அவா நிலையிலிருந்தது இப்போது தசை தின்னும் ஆசையாய் மூண்டு முளாசிக் கொண்டிருந்தது மெய். உக்கிரமான சோகங்களின் உத்தரிப்பில் அது அவ்வப்போது அடங்கிக்கிடந்திருக்கலாம். அதை வலுவிழந்ததின் அடையாளமாகக் கொள்ளமுடியாது.

ராஜநாயகத்துடனான பேச்சு எதிர்பார்த்த அளவுக்கு அவளின் மனத்தில் வெடித்துக் கிளம்பிய கேள்விகளுக்கான பதிலை அளிக்கவில்லை என்பதும் ஒரு சலிப்போடு ஞாபகமாயிற்று. ஏன், ஏன் அப்படி ஆயிற்று? விபரமுள்ளவர்தான் அவர். இருந்தும் பிரச்னையின் முடிவுகளை தீர்க்கமாயுரைக்காமல் மேம்போக்காகச் சொல்லி அடங்கிவிட்டார். யோசித்த வேளையில் அவர் அதுமாதிரித்தவிர வேறுமாதிரிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்க முடியாதென்று புரிந்தது. நடுநிலையான தீர்வுகள் / தீர்ப்புகள் சொல்ல சலனப்படாத மனம் வேண்டும். அவர் நியாயாதிபதியாய் இருந்தவர். நேர்மையானதும் கடுமையானதுமான தண்டனைகளை வழங்கியவர். முறை செய்வதற்கான வழக்கு அவர் சம்பந்தப்படாதது. வாதி பிரதிவாதிகளும் அந்நியராகவே இருந்தனர். நியாயம் செய்வதில் அந்த நிலையில் பெரிய சிரமம் ஏற்பட்டுவிடாது. ஆனால் இப்போதைய நிலைமை முன்னர்போல் இல்லை. அவர் பெண் புலியாய் இயக்கத்தில் சேர்ந்துவிட்ட லக்சோவை எப்போதும்போலவே அப்போதும் நினைத்துக் கொண்டிருந்தார். மட்டுமில்லை. நிகழ்வுகளும் அவர் மண் சார்ந்தவை. அவர் வீட்டின் கதவுகள், நிலைகள், ஜன்னல்கள், வளைகள், விட்டங்கள், எறிகால்கள் எல்லாம் பிடுங்கிக்கொண்டு போகப்பட்டுவிட்டனவென்பதை அவர் எப்படியோ அறிந்திருந்தார். பங்கர் கட்டப் பொதுமக்களாலும், தடைச் சுவர்கள் எழுப்ப இயக்கத்தினாலும் அது நடந்திருந்தது. அதனால் அவருக்குக் கோபம். யார்மீதென்று இல்லை, கோபம். அது பற்றின் விளைவு. இப்படி பல பற்றுக்கள் அவரிடத்தில். பற்றுள்ள இடத்தில் நடுநிலைமை சந்தேகிக்கத் தக்கதாகவே இருக்கும். அவர் தொழிலால்தான் நீதிபதி; இயல்பாலல்ல என்பது அவளுக்குத் தெளிவாயிற்று.

வெகுநேரம் கழித்து தூங்கினாள்.

தூக்கத்தில் கனவு வந்தது.

அவளும் சுதனும் மாலாவும் போய்க்கொண்டிருக்கிறார்கள்; நெருப்புத் தண்ணீர் தெளிபட்டதுபோல் அவளின் பிடரி எரிகிறது; ஆ... வென்றலறியபடி திரும்புகிறாள் சட்டென.

இரண்டு கண்கள்... சிவப்பாய்... குரோதத்தினதும் மாச்சரியத்தினதும் முழு உக்கிரத்துடன் ஜுவாலிக்கின்றன. அவையே அந்த நெருப்புத் தண்ணீர்த் துளிகளை எறிந்தவை என்பதைப் புரிகிறாள் ராஜி.

ஆனால்... யாருடைய கண்கள் அவை?

இல்லையில்லை... எதனுடைய கண்கள் அவை?

கனவில் அவளுக்குப் பதில் கிடைக்கவில்லை.

விடிந்த பிறகு அக்கனவு ஞாபகமானபொழுதில் அவை யாருடைய கண்களென அவளால் தெரியமுடிந்தது. அவை... ஷீலாவினுடையவை.

காலையில் மாலா வீடு போனாள்.

வீடு, நிறைந்த சனத்துடன்போல் ஒரே கலகலப்பாய் இருந்தது அந்தக் காலை வேளையிலும்.

மாலாவையும் சரஸ்வதியையும் தவிர மற்ற எல்லாருமே அரையடி வளர்ந்திருந்தார்கள். சேனன் ஓரடி வளர்ந்திருந்தான். விசுவலிங்கம் வீட்டில் இல்லை. எல்லோருமே - கடைசிக் குழந்தையைத் தவிர - அவளைக் கண்டு சந்தோஷமடைந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலா அழகாய் வந்திருந்தாள்.

சரஸ்வதியின் மனத்தினுள்ளே ஒரு சிற்று அச்சம் வெடித்துக் கிளம்பியது. மகேஸ்வரியைக் கண்டு தடுமாறியதுபோல்தான் அவளைக் கண்டும் கலங்கினாள். ஆனால் ராஜியின் முகத்தில் நட்பின் ரேகைகளே விரிந்திருப்பது கண்டு அச்சத்தை மெல்ல அகற்றினாள்.

அவள் அவ்வளவு காலமும் எங்கே இருந்தாள், என்ன செய்தாள் என்று விசாரித்தாள்.

அவள் லேசாய்ச் சிரித்தாள்.

அந்தக் கேள்விகளுக்குப் பதில்சொல்லஅவள் விரும்பவில்லையென்று தெரிந்து, வேறு கேள்வியை சரஸ்வதி கேட்டிருக்கலாம். ஆனால் அவளோ ஆவலோடு பதிலை எதிர்பார்ப்பதுபோல் இன்னும் அவள் முகம் பார்த்து நின்றிருந்தாள்.

ராஜி சொன்னாள்: "தயவுசெய்து அதைப்பற்றியெல்லாம் கேளாதயுங்கோ. எங்கயோ ஒரு இடத்தில கொஞ்ச நிம்மதியோடயாச்சும் இருக்கிறன்; அவ்வளவுதான். தெரிஞ்ச எந்த மனிசரோடயும் எனக்கு உறவு வேண்டாம் எண்டதுக்காகத்தான் நான் அப்பிடி இருந்ததே. இப்பபோய்.... எங்க இருக்கிறாய்.... என்ன செய்கிறாயெண்டால்.... நான் என்ன சொல்ல?"

சரஸ்வதியின் முகம் சுண்டிப்போனது.

மாலா, பூபதி ஆகியோரும் கேட்டு திகைத்துப் போயினர்.

யாரும் எதுவும் பேசவில்லை.

ஷீலாவின் தாயாக இருந்ததாலேயே அந்த வார்த்தைகள் சரஸ்வதியை அவ்வளவு பாதிப்புக்குள்ளாக்கியிருந்தன.

அவள் சொல்லிழந்த கணம் அது.

ஆனாலும் சுதாரித்துக்கொண்டு, "தாய் பிள்ளையாய்ப் பழகினம். அந்தளவு ஆவலோட நான் கேட்டது அதாலதான். மற்றப்படி.... உன்ர நிம்மதியைக் குலைக்கிறதோ, சந்தோஷத்தை அழிக்கிறதோ என்ர எண்ணமில்லை. நான்.... நான் உனக்கு ஒரு பாதகம் செய்வனெண்டு எப்பிடி ராஜி உன்னால நினைக்க முடிஞ்சுது?"

கண்ணீர் பொலபொலவென உதிர்ந்தது.

அது பாசாங்கில்லை. சரஸ்வதிக்கு பாசாங்கு தெரியாது.

"குறிப்பாய் உங்களையெண்டு நான் சொல்லேல்லை. பொதுவாய்த்தான் அப்பிடிச் சொன்னன். அம்மா, தம்பி எல்லாரிலயும்கூட எனக்கு வெறுப்புத்தான். எவரின்ர தொடர்பும் வேண்டாமெண்டுதான் நான் இப்பிடியே இருந்தது. இன்னும் கொஞ்சக் காலத்துக்கு இப்பிடித்தான் இருக்க விரும்புறன். அதுவரைக்கும்.... அப்பப்ப வந்து நானே உங்களைப் பாப்பன். உங்களைப் பாக்கிறது என்ர மனத்துக்கும் ஆறுதலாய்த் தான் இருக்கு" என்று கூறி அவளும் குரல் தழுதழுத்தாள். பிறகு, "ம்.... அதை விடுங்கோ. மாமா எங்க போயிருக்கிறார்?" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

"வெளியில."

"வெள்ளணவே போயிடுவாரோ?"

"நேற்றுப் போனவர். இன்னும் வரேல்லை."

"இன்னும் பிரச்சினையோ?"

"இப்ப இல்லை. ஆனால் படுக்கையெல்லாம் மொட்டை மாடியிலதான். அப்பப்பதான் வாறதும், வந்தாலும் சாப்பிடுகிறதில்லை. ஆனால்ஆரோடயும் சண்டையும் இல்லை."

அந்த மனிதர் சுடுபட்டுப் போனவர். ஒருகாலத்தில் தன் பெயருக்கு வீண் களங்கம் வந்தது என்றதாலேயே தீவைவிட்டு ஓடியவர். ராஜிக்கு அப்போது அது ஞாபகம் வந்தது.

பிறகு ஷீலா பற்றிக் கேட்டாள். "ஷீலா எப்படி இருக்கிறா?"

"நல்லாயிருக்கிறா."

"ம். குழந்தையொண்டும் இன்னும் பிறக்கேல்லைப் போல."

சரஸ்வதி பேசவில்லை.

அந்த உறவின் வகை அவளுக்கே தெரிந்திருக்கவில்லை.

குழந்தை பிறக்கவில்லையென்பது குழந்தை பிறக்கக்கூடிய உறவென்பதின் அர்த்தமுமாகும்.

அவளின் மௌனத்தை மதித்து அடுத்த கேள்வியைக் கேட்டாள்: "வீட்டுக்கு ஏதாவது உதவி செய்கிறாவோ?"

"அவதான் இப்ப வீட்டுச் செலவுக்கு காசு அனுப்புறது. சின்னதைத் தவிர மற்ற மூண்டும் படிக்கப் போகுதுகள். சேனன் படிப்பை விட்டுட்டான். ஏதோ இப்ப கொஞ்சம் அமைதியாய் குடும்பம் போய்க்கொண்டிருக்கு."

"சேனன் ஏன் படிக்கப் போறதில்லை?"

"அவனுக்கு ஊர் சுத்தவும் தெருச்சண்டை போடவும்தான் நேரம் சரியாயிருக்கு. பிறகு என்னத்தைப் படிக்கிறது?" என்றாள் மாலா.

தூர நின்று கண்ணை உருட்டினான் சேனன்.

ராஜி புறப்படத் தயாராவது கண்டு, நின்று மதியம் சாப்பிட்டுப் போகும்படி கேட்டாள் சரஸ்வதி.

"நான் வேளச்சேரிவரை போய்வரவேண்டியிருக்கு..."

"பின்னேரம் போகலாமே!"

"ரண்டு மணிக்கு பஸ் இருக்கு."

"நிண்டு சாப்பிட்டுப் போ, ராஜி. என்ர கையால சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு....!"

சரஸ்வதி நல்லாய்ச் சமைப்பாள். அம்மாவைவிடவும். அதிலும் மீன் குழம்பு விசேஷம்.

"சரி. ஆனால் மீன் காய்ச்ச வேணும்."

சரஸ்வதி அவசரமாய் மார்க்கட் புறப்பட்டாள்.

ராஜி, வீட்டை அப்போதுதான் கவனித்தாள். சைக்கிள் ஒன்று முன்பக்கம் நின்றிருந்தது. சேனனதாய் இருக்கும். சுவரில் குவாட்ஸ் மணிக்கூடு. ஒரு பக்கமாய் சின்ன ஒரு சாலிடேர் தொலைக்காட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டி. ஒரு றேடியோ ரேப் ரிக்கோர்டர். ஒரு ஷோ கேஸ் சுவரோடு. உள்ளே பீங்கான், கண்ணாடிப் பாத்திரங்கள், பொம்மைகள். முன்பு அவளிருந்த அறை வெளியே கொளுவியிருந்தது.

அவள் பார்வை அங்கே படர்வது தெரிந்து, "இப்ப அது என்ர அறை" என்றாள் மாலா.

"அதுசரி.... அம்மா ஊருக்குப் போகப்போறனெண்டு சொல்லிக்கொண்டிருந்தா. இப்ப கேக்கிறதில்லையோ?" என்றாள்.

"இப்ப இல்லை."

இனிமேல் ஏன்? ஒரு மகள் வெளிநாடு போய்விட்டாள். அடுத்து பூபதி அல்லது ராணி அல்லது மாலா அல்லது சேனன் போகக்கூடும். பிறகு.... ரவி... பிறகு.... சுந்தரி. சிலவேளை.... சரஸ்வதியுமே.

மனிதர்களின் மண் பற்றெல்லாம் வாழ்வாதாரமாய் அது இருக்கிறது என்பதினால்தானா?

நெஞ்சுள் ஒரு குடைவு எழுந்தது ராஜிக்கு.

ஏதோ ஒருவகையில் பெரும் அழிவுகளின் அடையாளமாக தான்மட்டுமே ஆகிநிற்பதான எண்ணமொன்று வேதனையோடு அவளிதயத்தில் ஓடியது.

## 16

ஈரத்துணி காற்றில் அசைய மறுத்துக் கிடப்பதுபோல ராஜிக்கு நேரம் நகர மறுத்துக் கிடந்தது.

யாரிலும் அவளுக்குக் கோபப்பட காரணமில்லை. எனினும் மனம் எரிச்சல்பட்டுக் கொண்டிருந்தது. ஷீலா இன்னும் அங்கே இருப்பதுபோலவும், அவள் கண்கள் எங்கோ ஒரு கதவிடையூடாக, ஜன்னல் துரைச்சீலை இடுக்கின் வழியாக தன்மீது நெருப்புத் தண்ணீரைத் தெளிப்பதுபோலும் உணர்விலாகிக் கொண்டிருந்தது.

வேளச்சேரி போய்வர இனி நேரமிருக்காது. நீதிபதி கேட்டிருந்தார் வந்துபோகும்படி. அங்கே போய் வந்தாலென்ன என்று எண்ணிக்கொண்டு குளித்து வந்த சேனனிடம் பஸ் நிலையம்வரை கொண்டுபோய்விடக் கேட்டாள். நீதவான் வீடு பஸ் நிலையத்துக்கு சமீபத்தில்தான் இருந்தது. சேனன் வெளிக்கிட்டுக்கொண்டு சைக்கிளை எடுத்தான்.

நீதவான் வீட்டு வாசலில் இறங்கிக்கொண்டு சேனனை அனுப்பிவிட்டு உள்ளே சென்றாள் ராஜி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வழக்கம்போல் மௌனத்தில் அந்த காலைப் பத்து மணியிலும்.

சொன்னதுபோல், அவள் சென்றபோது வாசித்துக் கொண்டிருந்தார். யதார்த்தத்திலிருந்து மறைந்துவிட அந்த ஆழ்ச்சி அவருக்குத் தேவையாயிருந்ததோ? அவளை ஓரளவு எதிர்பார்த்திருந்தார்போலும். ஆச்சரியமின்றி வரவேற்றார்.

அவள் வந்தது தெரிந்துகொண்டு வந்து சிரித்து விட்டுப்போன பூமணி, சிறிதுநேரத்தில் தேநீர் போட்டு வந்து கொடுத்துப் போனாள். அவள் நடவடிக்கைகளெல்லாம் யாந்திரீகப் பாங்கில் இருந்ததைக் கவனித்தாள் ராஜி.

கணவன், இரண்டு பிள்ளைகளென்று பெரிய குடும்பமாயிருந்து தனியனாய்ப் போன மகா அவலத்தின் சாட்சியாய் அவளிருப்பதை ராஜியால் உணரமுடிந்தது. அழிமானங்களுடனான வாழ்க்கையுடன் எத்தனை பேர்! மனத்தை அதைத்தது அந்த நினைப்பு.

அவள் கண்கண்டோரில் பூமணியளவு பாதிக்கப்பட்டோர் எவருமில்லை. தன் பெண்மையே சிதைக்கப்பட்டவள்; தன் மகளும் தன்போலவே அழிக்கப்படக் கண்டவள். கடைசியில் அவளையும் இயக்கத்துக்கு இழந்தவள். கணவன் கொலையும், மகன் தற்கொலையும் எத்தனை பெரிய சோகங்கள்! அவளோடு ஒப்பிடுகையில் இவள் பாதிக்கப்படவேயில்லையே!

எனினும் இவளது பாதிப்பில் சில நுண்மையான அம்சங்கள் இருந்தன. அவள்மீதான அனர்த்தங்கள் யாவும் சுமத்தப்பட்டவை. இவள், அவற்றைத் தானே சுமந்துகொண்டவள். குருசுச் சுமப்புப்போல இவள் சோகம். இப்போதும் இவளது அக்கறை அக்கரை சுற்றியே இருக்கிறது. பற்று மண்மீதானதாக இருக்கிறது. அதனால்தான் தன் உறவுகளைத் திட்டமாய்த் தொலையவிட்டாள்.

"என்ன மகள், வந்ததிலயிருந்து பேசாமலிருக்கிறாய்? தேத்தண்ணியும் ஆறுது" என்றார் ராஜநாயகம்.

அவள் தேநீர்க் கோப்பையை எடுத்தாள்

மௌனம் உடைய புயலின் கனம் குறைந்தது.

"வீட்டில மாமி, அரசிபற்றி மாமா ஏதாவது சொன்னவரோ உங்களிட்ட?" என்றாள்.

"மனிசியை மகள் வீட்டில விட்டிட்டு வந்திருக்கிறன் எண்டு சொன்னார்... மகளின்ர பேர்தான் அரசியோ?"

அவள் தலையசைத்தாள்.

கச்சாய், தீவைவிடப் பாதுகாப்பானது. ஒருவருக்கொருவர் உதவியாகவும் இருக்க ஏலும்.

நெஞ்சு ஆறுதலடையத் துவங்கிற்று.

"மாமா ஊருக்குப் போறது போகாததுபற்றி உங்களோட ஒண்டும் பேசேல்லையோ, சேர்?"

"போன மாசம் வந்தார். வந்ததிலயிருந்து... இப்ப நீ இருந்தமாதிரியே மூஞ்சையைத் தொங்கப்போட்டுக் கொண்டு இருந்தார். என்ன விஷயமெண்டு கேட்டன். சொன்னார். வடக்குக் கிழக்கு மாகாணத்தில எலக்ஷன் முடிஞ்சுது. இனி அமைதிப் படையும் திரும்பியிடுமெண்டு எதிர்பாக்கலாம். இப்பவே அகதிச் சனங்களை ஊருக்குத் திருப்பியனுப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கியாச்சுது. ஏற்கனவே சனத்தை நிறைச்சுக்கொண்டு ஒரு கப்பல் திருகோணமலைக்குப் போயிருக்கு!... எண்டார். போறதுதானே!... எண்டு சொன்னன். எப்பிடிப் போறது?... எண்டுட கேட்டார்."

"ஏனாம்?"

"அவர் சொன்னதிலயும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யுது, பிள்ளை. இலங்கைக்குத் திரும்பிப்போறதெண்டது கொம்மான்போல அரசியல் பேசின ஆக்களுக்கு சின்ன விஷயமில்லை... நல்லாய் யோசிச்சுப் பார், உனக்கே விளங்கும்."

"ஏன்... ஆலாலசுந்தரம், துரைரத்தினம்போல புலியள் இவரையும் குறிவைச்சிடுவினமெண்டோ?"

"இல்லை. அந்தளவு நிலைமை சுந்தரத்துக்கு வராது. அவ்வளவு பெரிய கூட்டணித் தலைவரில்லை அவர். அவர் சொன்ன காரணமென்ன வெண்டால்... கேட்டு நானே உடம்பு சிலிர்த்துப் போனன். சும்மா சாத்வீகம்... சாத்வீகம் எண்டு சொன்னவையால இப்பிடி உணர்ந்திருக்கவே ஏலாது. அதை இதய சுத்தியாய்க் கடைப்பிடிக்கிற ஆக்களாலதான் அந்தமாதிரி உணரவும் சொல்லவும் ஏலும்."

கூறிவிட்டு ஒருமுறை உடம்பைச் சிலிர்த்தடங்கினார்.

ராஜி கவனம் குவித்து அவரை நோக்கினாள்.

அவருக்கும் அந்த நிகழ்வினைப் பின்னகர்ந்து பார்த்துப் பிரமிக்க வெகு பிரியமாயிருந்தது.

அது ஐப்பசி முடிகிற காலம்.

வங்கக் கடலில் புயல் மையம் கொண்டிருந்தது.

கேரளா, ஆந்திரா மாநிலங்களில் பலத்த மழை. அத்தனை நாளிலும் தமிழ்நாட்டில் சூரியனே தெரியாதபடிக்கு மேக மூட்டம்.

அது விலகி சூரியப் பிரகாசம் மெல்லத் தொடங்கிய நாள் அது.

சுந்தரலிங்கம் வந்தபோது ராஜநாயகம் போர்டிகோவில் அமர்ந்திருந்தார்.

பக்கத்து நாற்காலியில் அமரச் சொன்னார்.

மிகவும் சோர்ந்து போயிருந்தார்.

என்ன சுந்தரம், சோர்ந்து போயிருக்கிறீர்?

'சனங்களைத் திருப்பியனுப்பத் துவங்கியாச்சு. போயிடலாமா எண்டு யோசனையாயிருக்கு.'

'போக விருப்பமெண்டால், போறது. அதில யோசிக்க என்ன இருக்கு? அமைதிப்படை கெதியில திரும்பி வந்திடுமெண்டு ஒரு கதை இருக்கு... கொழும்பில பிக்குமார் ஊர்வலம் போட்டு பெரிய அட்டகாசம் பண்ணியிருக்கினம். அல்ரிமேற்றம் கொடுத்த காலகட்டத்தோட, அடங்கிக் கிடந்த பிக்குமார் திரும்பவும் வெளிக்கிட்டிருக்கினம்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான்.... சண்டையில ஓடிவந்தவனில்லை. வந்த இடத்திலதான் பாதை தடுமாறி நிண்டிட்டன்.'

'அதால என்ன? ரண்டு வருஷம்தானே!'

'எண்டாலும்.... அந்த மனிசரை அங்கபோய் என்னால எப்பிடி முகங்கொள்ள ஏலும்?'

'எந்த மனிசரை...? மனிசி பிள்ளையையா?'

'மனிசி பிள்ளையளையும்தான். ஆனால் முக்கியமாய்.... என்ர அயல்வீட்டு மனிசனை.... தீவு மனிசனை.... வேலணை துவங்கி வவுனியா வரை விரிஞ்சிருக்கிற மண்ணில இன்னும் இருந்துகொண்டிருக்கிறவனை.... எப்பிடி என்னால நிமிர்ந்து பாக்கேலும்? அவன் பெண்சாதி செத்தவனாய்.... பிள்ளையைப் பறி குடுத்தவனாய்.... தன்னின் கையை காலை இழந்தவனாய் அங்கயிருக்க, எந்தப் பாதிப்புமில்லாமல் அவனுக்கு முன்னால போய் நிண்டால் எப்பிடியிருக்கும், நீதவானையா? அவனைப் பாத்து எப்பிடி இருக்கிறாயெண்டு எந்த வாயால நான் கேக்கிறது? இந்த மண் நற்றவ வானிலும் நனி சிறந்தது எண்டு அவனுக்கு முன்னால எத்தினை ஆயிரம் கூட்டங்களில பேசியிருப்பன்...? அப்பிடியான நான் ஒரு பேயிருள்க் காலத்தில இந்தியாவில இருந்திட்டுப் போய் எப்பிடி என்ர மண்ணில காலடி வைக்கிறது?'

சுந்தரத்தின் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவெனக் கொட்டியது.

தீவு மனிதருக்கு மண்பற்று அதிகமோ எவரையும்விட? சுந்தரம்.... ராஜி.... இப்படிப் பலர்! - ராஜநாயகம் யோசித்தார்.

அது மண்பற்றும் மனசாட்சியின் குரலும்.

அவரும் அன்று இப்படித்தான் ஆறுதல் சொல்லியிருந்தார் சுந்தரத்துக்கு: 'நீர் அகதிகளின்ர நலவாழ்வு சம்பந்தமாய் இன்னும் கூடுதலாய் உழைக்கலாம். சொல்லுறீரே தவிர, செயலிலதான் காட்டுறீரில்லை. அந்த வவுனியா அப்புக்காத்து திருச்சியில இன்னும் நிக்கிறாரோ?'

'அவர் அவுஸ்ரேலியா போயிட்டார்.'

'பிறகென்ன? சுதாரிச்சுக்கொண்டு காரியத்தில இறங்கும். உம்மட மனச்சாட்சியின்ர குரல் படிமானம் அடையும்.'

'மனம் சிதறிப் போச்சு; துன்பத்திலயும் தோல்வியிலயும் சாம்பிப் போச்சு. இனி அரசியல்பக்கம் என்னால தலைகூட வைச்சுப் படுக்கேலாது. கோயில் குளமெண்டு திரிஞ்சு.... செய்த பாவங்களைக் கரைக்க வேண்டியதுதான்.'

'தனிப்பட்ட பாவங்களெண்டால் நீர் சொல்லுறது சரி. இது அரசியல் பாவமெண்டு சொல்லுறீர். அதை செயலாலதான் கழுவ முடியும். கோயில் குளம் போய்க் கரைக்க ஏலாது?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மத்தியானம் அங்கே சாப்பிட்டு, மாலையில் புறப்பட்டார் சுந்தரம்.

வந்தது போலவேதான் சென்றார் ஒரு சோக மனிதனாக - தோற்ற மனிதனாக.

ராஜநாயகம் எல்லாம் விபரித்து, அவரது தோல்வி தனக்கு என்னவென்று புரியவில்லையென முடித்தார்.

சுந்தரம் சொன்னதுமட்டுமே அவர் தோல்வியில்லைதான்.

சுந்தரத்தையே முடக்கிநிற்கும் அந்தத் தோல்வி என்னவென்று நீதவான்போலவே அவளுக்கும் புரியவில்லை. ஆனாலும் அவரது மனநிலையை அறிந்த ஓரளவு திருப்தியிருந்தது அவளிடத்தில்.

மாலா வீடு போகவேண்டிய நினைவுவர நேரத்தைப் பார்த்தாள். பதினொன்றரை.

## 17

அந்நிய முகங்களின் பிரசன்னம் பெரும்பாலும் இலங்கை அகதியர் வீடுகளில் விரும்பப்படாததாய் இருந்து கொண்டிருந்த காலம் அது. இந்திய அமைதி காப்புப் படை இலங்கைத் தீவில் விடுதலைப் புலிகளுக்கெதிரான ஒரு பெரும் போரை நடத்தியிருந்ததால் இந்திய மண்ணில் அவர்களது ஊடுருவலைத் தடுக்கும் பாரிய பொறுப்பு எல்லைக் காவல் படையிலும் தமிழக அரசு காவல்துறையிலும் விழுந்திருந்தது. கியூ பிராஞ்ச் வெகுத்த கண்காணிப்புடன் இருந்து செயல்பட்டது. முகாங்களுக்கு வெளியே வசித்த அகதிகளுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்தது. புதியவர்களின் வருகை ஐயுறவுடன் பார்க்கப்பட்டது. அது காரணமாய்த்தான் யோகேஷ், தம்பிராசா, இந்திரன் ஆகியோரினது ஒரு காலை நேரத்துத் திடீர் வருகையை கொஞ்சம் மனப் பின்னடைவுடன் எதிர்கொண்டனர் மாலாவும் சரஸ்வதியும். யோகேஷ் ராஜிக்கு உறவினனாயும் நெருங்கிய நண்பனாயும் இருந்தானெனினும் அவன் சார்ந்துள்ள இடம்பற்றித் தெரிந்திருந்ததால் மனந்திறந்த வரவேற்புக்கு இயலாதிருந்தது. ஆனாலும் அவர்கள் ஊர் மனிதர்கள்; மேலும் உடனே திரும்பிவிடவும் இருந்தனர்; அதனால் வரவேற்று அமரவைத்தாள் சரஸ்வதி.

வீட்டுக்காரரின் தயக்கத்தை, எங்கேயும் தங்களுக்கு நேர்ந்த வரவேற்பின் விதங்களை அவர்கள் புரிந்துகொண்டிருந்தார்கள். அதனால் யோகேஷின் தொடக்கமே, "அவசரமான வேலையள் இருக்கு. இருந்தாலும் வந்த இடத்தில பாக்காமல் போகக்கூடாதெண்டுதான்...." என்பதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்காரரும் மனம் தெளிந்து கலகலப்படைந்தனர். இருந்தாலும் சரஸ்வதி ஒரு தயக்கத்தோடு கேட்டு வைத்தாள்: "எப்பிடி வந்தியள்? போர்ட்டிலயா, பிளேனிலயா?"

"போர்ட்டிலதான். நான்தான் கூட்டி வந்தது."

"காம்ப்பில பதியேல்லையோ?"

"பதிஞ்சிருக்கு. துண்டுகூட வாங்கி வந்திருக்கிறம்" என்று இடைமறித்துக் கூறினார் தம்பிராசா. பின், "என்னைத் தெரியுமெல்லோ? நயினாதீவுக்கு அடிக்கடி வருவன்" என்று அறிமுகமும் செய்துகொண்டார்.

சரஸ்வதியும் சிரிச்சுக்கொண்டே, "மகேஸ்வரியக்கா வீட்டுக்கு வாற நேரத்தில பாத்திருக்கிறன்" என்றாள்.

அதற்குள் யோகேஷுக்கும் மாலாவுக்குமிடையே சின்ன உரையாடலொன்று தொடங்கி நடந்துகொண்டிருந்தது.

"ரண்டு நாளைக்கு முந்தித்தான் ராஜி இஞ்சயிருந்து போறா."

"அப்பிடித்தான் கமலாக்கா சொன்னா."

"ராஜி தகவலேதும் விட்டிட்டுப் போகேல்லையோ அங்கயும்?"

இல்லையென்று தலையசைத்தான் யோகேஷ்.

யோகேஷின் அந்தளவு உடைவு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் ஒரு நெடுமூச்சு விட்டான்.

பிறகு சொன்னான்: "அவ ஆரிட்டயிருந்து ஒழிச்சுத் திரியிறாவெண்டு எனக்குத் தெரியும். உங்கள் ஒருத்தரிட்டயுமிருந்து இல்லை, என்னிட்டயிருந்துதான். அவ எங்க போயும் ஒழிச்சு இருந்திட ஏலாது. அவவின்ர பேச்சு, நடபடிக்கையள் எல்லாத்தையும் வைச்சுப் பாத்தா, ராஜி எங்கயாவது ஒரு அகதி முகாமில நிக்கலாமெண்டதுதான் என்ர ஊகம்."

"அகதி முகாமிலயோ....? ராஜியோ....?"

நேர்மறையில் தலையசைத்து யோகேஷ் சொன்னான்: "அவவின்ர பஸ் பயண நேரத்தை வைச்சு எந்த ஊர் அகதி முகாமெண்டதையும் அனுமானிச்சே வைச்சிருக்கிறன். தேடிப்பிடிக்கிறது எனக்குப் பெரிய விஷயமில்லை. ஆனால், அவ ஒழிஞ்சிருக்க வேணுமெண்டு நினைக்கிற நேரத்தில, நான் தேடிப் பிடிக்கிறதில அர்த்தமில்லை. அவவாய் வரவேணும். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறன்."

அவன் குரல் அவ்வப்போது தழுதழுத்தது.

ஆனால் அவன் அதை வெளியிட்ட தீவிரத்தனம் அதைக் கவனிக்க வைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மிடிப்பூண்டி அகதி முகாமிலும் புழல் அகதி முகாமிலும் குலசேகரம் வீட்டாருக்குத் தெரிந்த சிலர் இருக்கிறார்கள். மாலா, சரஸ்வதி ஆகியோராலும் கண்டு பேசி நிலபரங்கள் தெரிய முடிந்திருந்தது. சொந்த காணி, சொந்த வீடு வசதிகளுடன் இருந்த வடபகுதி மக்கள் கால நிர்ப்பந்தங்களால் அகதி முகாம் வாழ்க்கையை சகித்துக்கொண்டாலும் ஒத்துக்கொண்டு விட முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனால் ராஜி....? வெளியிலிருந்து ஓடிப்போய் தன் வாழ்க்கையை அதற்குள் அடக்கிக்கொண்டுவிட முடியுமா? அப்படித்தான் என்கிறான் யோகேஷ்.

கீழது மேலாய்.... மேலது கீழாய்.... காலமென்பது கறங்கு போல் திரிந்து....

திசைகெட்டு அழிந்துகிடந்தது ஈழத் தமிழ வாழ்க்கை அங்கேயும்.

தம்பிராசா பம்பாயில் நிற்கிற ராஜேந்திரனின் முகவரி கேட்டார்.

முகவரி கொடுக்க தயக்கமிருக்கவில்லை அவர்களுக்கு. காரணம் ஒன்று: பம்பாய் இன்னும் இலங்கைத் தமிழரின் சுயாதீனமான உலவுகைக்கு ஏற்ற இடமாக இருந்தது. காரணம் இரண்டு: ராஜேந்திரன் வெளிநாட்டுக்கு ஆள்கள் அனுப்புகிற ஒரு ஏஜன்ரோடு தொடர்பு கொண்டிருந்தான். அவனது முகவரியைக் கொடுப்பது அவனுக்கு உதவி செய்வதுபோலவே ஆகும்.

"எப்ப பம்பாய்க்கு வெளிக்கிடப் போறியள்?" மாலா முகவரியைக் கொடுத்து கேட்டாள்.

"நாளைக்கே ரயிலேறலாம் எண்டு இருக்கிறம்" என்று சொன்னார் தம்பிராசா.

"இப்ப எங்க தங்கி நிக்கிறியள்?"

"வளசரவாக்கத்தில ஒரு வீட்டில." பதில் சொன்னான் யோகேஷ். பின் தம்பிராசா பக்கம் திரும்பி, "முகவரியைக் கவனமாய் வைச்சிருங்கோ. இன்னொரு முகவரி தாறன்; இது என்ர சிநேகிதன்ர. அவனும் பம்பாயிலதான் நிக்கிறான். வீ.ரி. ரயில்வே ஸ்ரேஷன் பக்கமாய் இந்தக் கடை விலாசத்தில ஆளைச் சந்திக்கிறது சுலபமாயிருக்கும். நேராய் ராஜேந்திரனிட்ட போகச் சிரமமாயிருந்தால் அருளியைச் சந்தியுங்கோ. கூட்டிக்கொண்டு போய் விடுவான். நான் அனுப்புனதாய்ச் சொல்லுங்கோ, போதும்" என்று அருளியின் முகவரி எழுதிக் கொடுத்தான்.

புறப்படுகிற நேரத்தில் தம்பிராசா கேட்டார்: "நாளை வரைக்கும் நிண்டு எங்களை ரயிலேத்தி விட்டுட்டுப் போக ஏலும்தானே, தம்பி?"

"இவ்வளவு தூரம் வந்திட்டன். அதையும் செய்திட்டுப் போறனே!"

"அப்ப.... நாங்கள் திரும்பலாமோ?"

"ஓ.... திரும்பலாம். ஒரு அஞ்சு நிமிஷம் நிண்டு கொள்ளுங்கோ, கமலாக்கா வீட்டுக்கு போயிட்டு ஓடி வந்திடுறன் என எழுந்தான்" யோகேஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் யோகேஷ், எதையாவது விட்டிட்டு வந்திட்டியளோ?" மாலா கேட்டாள்.

"இல்லையில்லை, அவவிட்டை ராஜியைக் கேக்கச் சொல்லி ஒரு விஷயம் சொல்லவேணும்."

கமலாவிடம் இது பற்றிச் சொன்னபோது அவள் கேட்டாள்: "என்ன சொல்லவேணும், யோகேஷ்?"

"பெரிசாய் ஒண்டுமில்லை. அவ இந்தமாதிரி ஒழிச்சு நிக்கிறதுக்கான காரணம் எனக்குப் பயந்தா? இல்லை.... தனக்கேதான் பயந்தா எண்டு நான் கேக்கச் சொன்னதாய்த் தெரிவிக்க வேணும்."

கமலா ஆச்சரியத்தோடு யோகேஷில் பார்வை பதித்தாள்.

மர்மமாயிருந்த சில விஷயங்களில் வெளிச்சமடித்தன அவன் சொல்லுகள்.

## 18

'இவர்தான் ராஜேந்திரம்' என்று அருளியினால் காட்டப்பட்ட வாலிபன் முதல் பார்வையிலேயே அவ்வளவு விரும்பத் தகுந்தவனாய் தம்பிராசா, இந்திரன் இருவருக்குமே தோன்றவில்லை. அதீத சுக விழைச்சலால்போலும் மேனியெங்கும் வீக்கம்போன்ற ஒரு மினுமினுப்பு. சுயநலங்கள் கேள்வியாகிற தருணங்களில் தன் சொல், தன் நண்பர், தமர் என்று எவரையும் எதையும் தூக்கியெறிந்துவிட்டு ஓடிவிடக் கூடியவனென்று தம்பிராசாவின் மனத்தில் அவன் பற்றிய விம்பமொன்று விழுந்துவிட்டது.

அவர் விவசாயி. வியாபார விவசாயி. அதாவது தன் சரக்கை யாரிடம் விற்கலாம் யாரிடம் விற்கக்கூடாது என்று முகத் தோற்றத்திலேயே கண்டுகொண்டு தக நடந்து கொள்ளத் தெரிந்தவர். அவரது, பாமரத்தனமான எடைபோடல்களேயென்றாலும் பெரும்பாலும் பொய்த்ததில்லை. இவை வெறும் பட்டறிவின் வகைநுட்பம்.

ஊர்ப் பையன், தெரிந்த குடும்பத்துப் பிள்ளை என்ற தளங்களில் யோசித்து, வேறு வழிவகைகள் இல்லாத தன் பலஹீனத்தைப் புரிந்துகொண்டதால் அவர் தான் வந்த விபரத்தைத் தெரிவித்தார்.

மேலே ராஜேந்திரன் அந்த இடத்தில் தரித்து நிற்கவில்லை. அருளியை அனுப்பிவிட்டு தம்பிராசாவையும் இந்திரனையும் அழைத்துக்கொண்டு குட்டி என்கிற தனது நண்பன் ஒருவனுடன் அந்தத் தெருவில் உள்ளொதுங்கி சற்று ஆரவாரமின்றியிருந்த ஒரு பஞ்சாபி றெஸ்ரோறன்றுக்குச் சென்றான். ஓரமாயுள்ள ஒரு மேசையில் எல்லோரும் அமர்ந்ததும் கோப்பிக்கு ஓடர் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தம்பிராசாவிடம் சொன்னான்: "இந்த மாதிரி விஷயமெல்லாம் இப்ப வெளிவெளியாய் நிண்டு பேசுறது நல்லதில்லை. மட்ராஸ் சி.ஐ.டி.யளே இஞ்ச வந்து நிக்கிறாங்கள்."

"மெய்தான்" என்று அவனது ஜாக்கிரத புத்தியை தம்பிராசாவும் ஒப்புக்கொண்டார். உள்ளூர ஒருவித பயம் அவரிடையே ஏற்படலாயிற்று. வெளிநாட்டுக்கு ஒருவரை அனுப்புதல் என்பது ஒரு கடிதத்தை அல்லது ஒரு தபால் பொதியை அனுப்புவதுபோன்ற சுலபமானதாக எண்ணாத அளவுக்கு அவர் விபரமானவர்தான்.

சென்னையில் கமலாவுடன் பேசியதில் பெருமளவு தகவல்களை அவரால் அறிந்துகொள்ள முடிந்திருந்தது. அவள் சொன்ன மொழியைப் புரியவே முதலில் அவர் திண்டாடினார். பின்னர் புரிந்தது. புத்தகம், தலை மாற்றுதல், என்றி அடித்தல், எக்ஸிட் போடுதல் போன்ற பாவனை மொழி, மொழியின் நேரடி அர்த்தம் கடந்தவை.

"கனடாப் பாதை ஒரு நாலு அஞ்சு மாசமாய் ஓடாமலிருந்தது. இப்ப பழையபடி ஓடத் துவங்கியிருக்கு. ஆனால் இது இந்திரனுக்கு இங்கிலீஷ் தெரியாத நிலையில கஷ்ரம். சுவிஸுக்கு அனுப்பலாம். ஈரோப்பில சுவிஸ்தான் உழைப்புக்கான இடம். இப்ப எங்கட ஆக்கள் அங்கதான் விழுந்தடிச்சுக்கொண்டு ஓடுகினம்" என்றான் ராஜேந்திரன்.

பேசத் தொடங்கிய பிறகு அவனில் ஒரு நம்பகத்தன்மை வந்து விழுந்திருந்தது தம்பிராசாவுக்கு. ஆள் விஷயகாரன் போலவே தெரிந்தான். அவன் சர்வரை அழைத்து தண்ணி கொண்டு வா, தீப்பெட்டி குடு, கோப்பிக்குச் சீனி போதாது என்று கட்டளைகள் பிறப்பிக்க மராத்தி மொழியைப் பயன்படுத்திய விதம், பில் வர பணம் செலுத்திய மாதிரி எல்லாம் அவரை அசர வைத்திருந்தன.

தம்பிராசா கேட்டார்: "அப்ப... சுவிஸுக்கு என்ன போகுது, தம்பி?"

"ஒண்டரை."

"கனடாவுக்கும் ஒண்டரைதான்."

"அது முந்தி."

"அவ்வளவு வராது, தம்பி."

"அப்ப இந்தப் பேச்சை விட்டிடுவம். நான் தப்பாய் நினைக்கமாட்டன். நாங்கள் செய்யிறது யாபாரமில்லை, அங்கிள். குடுக்கிற இடத்தில குடுக்கிறதைக் குடுத்தாத்தான் எங்கயும் காரியம் ஆகுது. வாருங்கோ, வெளியில நிண்டு ஊர்க்கதை பேசுவம்" என்று எழுந்தான் ராஜேந்திரன்.

தம்பிராசா தடுத்து அவனை உட்காரவைத்தார்.

காரியகாரனாய்ப் பேசினான் ராஜேந்திரன்: "பணத்துக்கு நீங்கள் பயப்பிடத் தேவையில்லை. மொத்தக் காசும் தந்தால் ஒரு மாசத்துக்குள்ள ஆளை அனுப்பியிடுவம். பேந்து... பின்னை எண்ட கதை இருக்கக்கூடாது. இன்னுமொண்டு... அனுப்புற ஆள்மட்டும்தான் எங்களோட நிக்கலாம். வேற ஆரும் வந்து.... போக.... ரெலிபோன் பண்ணவும் விடமாட்டம். இதெல்லாம் இரகசியமாய்ச் செய்யிற விஷயங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு மாசத்துக்குள்ள சுவிஸ்....!' தம்பிராசாவால் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருக்க முடியும். மேலும் பணத்துக்கு அவர் அவநம்பிக்கைப்படவும் வேண்டியதில்லை. அதனால், "கையில அம்பதாயிரம் இருக்கு. அதை இப்பவே தந்திடுறன். நீங்கள் மற்ற விஷயங்களை ஆயத்தம் பண்ணுங்கோ. இன்னும் ஒரு கிழமை / பத்து நாளில மிச்சத்துக்கு ஒழுங்கு செய்யலாம். காசு வெளியிலயிருந்துதான் வரவேணும்" என்றார்.

"போன் பண்ணினால் சுணங்காமல் காசு வருமோ?"

"அதில சுணக்கம் இருக்காது. செல்லத்தம்பர் மூலமாய்த் தான் ஏற்பாடு பண்ணினது. பத்து நாளுக்குள்ள பணம் வரும்."

"ஓ....! அப்ப.... பயணக் களைப்பு மாற ரண்டுநாள் நிண்டிட்டுப் போங்கோவன். அதுக்கிடையில பணம் எடுக்கிற விஷயத்தையும் கவனிச்சிடலாம்."

"சரி."

அவர் பையில் தயாராய்ச் சுற்றி வைத்திருந்த அம்பதாயிரத்தையும் எடுத்துக் கொடுத்தார். வாங்கிக் கொண்ட ராஜேந்திரன் எதையோ நினைத்துக்கொண்டு, "உங்கட சிலவுக்கப் பணம்...." என்றான்.

"அதெல்லாம் தனியாய் எடுத்து வைச்சிருக்கிறன். ஊர் போய்ச் சேருகிறவரை வேணுமே!"

இரண்டு பேரையும் மாதுங்கா வீட்டில் சிங்காரியுடன் கொண்டுபோய் விடும்படி குட்டியிடம் கூறிவிட்டு புறப்படத் தயாரானான் ராஜேந்திரன்.

"தம்பி... சோர்வாய் விட்டிட்டு இருந்திடக் கூடாது..."

"இல்லையில்லை. இப்ப புத்தகம் பாக்கத்தான் போறன்" என்றுவிட்டு வெளியே நடந்தான் ராஜேந்திரன்.

## 19

'பம்பாயில் மழை ஆவணியில் துவங்கும். மழை முடிய, கார்த்திகை மாதத்திலிருந்து ஒருவகைக் குளிர் பரவத் துவங்கும். பகலில் தார் உருகுகிறமாதிரி வெய்யிலடிக்கும். ஆனால் உருகவும் மாட்டாது. அதனை, அதன் உருகுநிலை தவிர்த்துக் கொண்டிருக்கும் கடலிலிருந்து பனிக் குளிர் கலந்தெழும்பி வீசும் காற்று. தெற்கத்திக் குளிர்போலும் இருக்காது. இன்னும்.... இலங்கைப் பனியாகவும் இருப்பதில்லை. அராபியக் குளிராக இருக்கும். அது பட்ட இடமெல்லாம் சருமம் சுருங்கிவிடும். இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் படைபடையாய் வெடிக்கவாரம்பிக்கும். அரிப்பெடுக்கும் பயங்கரமாய். குளித்த பின் நன்றாகத் துடைத்தாலும் உப்புப் பூத்தாற்போல் சவர்க்கார வெள்ளைப் படை மேனியில் மிதந்து இருக்கும். முதலில் குளிர் தாக்குவது உதடுகளின் மென்மையைத்தான். பிறகு அடுத்த மென்பாகமான கன்னங்களை. மாசி பங்குனியிலிருந்து தூசிக் காற்றடிக்கும். பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கும் சரக்குகளை ஏற்றிச் செல்ல ஆயிரக் கணக்காய்க் குவியும் லொறிகளினதும் மற்றும் வாகனங்களினதும் எந்திரப் புகை தூசியோடு கலந்து வெளியெங்கும் வியாபித்திருக்கும். சித்திரைக்கு மேலே கோடை. கோடையும் இங்கே தனித்துவ மானது. இங்கே தப்பிப் பிழைப்பதற்கு ஒருவகை உடல்வாகு தேவை. இங்குள்ள மக்களுக்கு அது இயல்பில் உண்டு. எங்களுக்குத்தான் சிரமம்.'

பம்பாய்க் காலநிலைபற்றி சொல்லிக்கொண்டிருந்தான் சிங்காரி.

பார்வையை, மொட்டை மாடியிலிருந்து அடிவானம் வரை தெரிந்த வெளிச்சப் புள்ளிகளில் பதியவைத்தபடி கேட்டுக் கொண்டிருந்தார் தம்பிராசா.

உதடுகள் வெடித்தும் மேனியில் பொடுக்குகள் தோன்றியும் எரிச்சல் கொடுப்பதை அவர் தெரிவித்தபோதுதான் சிங்காரியின் காலநிலைபற்றிய விபரிப்பு பிறந்தது.

இருளத் தொடங்கி வெகுநேரம். எட்டு மணியாவது அப்போது இருக்கும். இனி கீழே இறங்க வேண்டியதுதான். ஆனாலும் நாளைக்கு அவர் சென்னைக்குப் புறப்படவிருப்பதால் அன்றைக்கு அவசரம் பிறக்கவில்லை. வீட்டில் தங்கியிருக்கும் அக்ரம், மதி ஆகியோருடன் இந்திரன் வெளியே போயிருந்தான். வந்த பிறகு இறங்கலாமென எண்ணி பேசாமலிருந்தார்.

இரண்டு நாட்கள் தங்கிப் புறப்படுவதாக இருந்தவர் பத்து நாட்களாக பம்பாயில் நின்றார். மாதுங்காவிலுள்ள ரயில்வே ஊழியர் குடியிருப்பு வீடு அது. சில இளைஞர்கள் வந்து போகிற, மதி சிங்காரி ஆகியோர் தங்குகிற இடமாக அது இருந்தது. ஹோல், ஒரு படுக்கையறை, சமையலறை, குளியலறை என நான்கு ஐந்து பேருக்குப் போதுமான வீடுதான். ஆனாலும் அங்கேயிருந்த பெரிய வசதி சமைத்துச் சாப்பிட முடிந்ததுதான்.

முதல்நாள்தான் தம்பிராசா எதிர்பார்த்திருந்த பணம் கிடைத்தது. பணத்தை ராஜேந்திரனை அழைப்பித்து கொடுக்கும்போதும், 'தம்பி.... எங்கட விஷயத்தை வைச்சு இழுத்தடிச்சிடப்படாது' என்று சொல்லித்தான் கொடுத்தார்.

அவர் அங்கே கிரகித்த அனுபவங்கள் அதிகம். புறப்படுகிற எண்ணம் வந்ததும் அவைகளெல்லாம் மனத்துள் கிடந்து புரண்டன. இரண்டு நாட்களுக்கு முன்னர் எல்லாரும் தமிழ்ப் படம் பார்க்கப் போனார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் காட்சிதான். பகலில் லட்சோப லட்சம் மக்கள் நடமாடிய, நூற்றுக் கணக்கான கடைகள் ஏறிக் குந்தியிருந்த நடைபாதையில் கூலிகளும் பிச்சைக்காரரும் நீட்டி நிமிர்ந்து வரிசையில் படுத்திருப்பதை திரும்பி வரும்போது கண்டு திடுக்கிட்டார். மூச்சுக்கூட விடமுடியாதபடி மூடிக்கொண்டு அவ்வாறு தூங்க எப்படி அவர்களால் முடிகிறதென்று ஆச்சரியப்பட்டு, அதை கூடவந்துகொண்டிருந்த அக்ரத்திடமும் சொன்னார். சிறிது காலத்துக்கு முந்தி வல்லைப் படுகொலையில் கண்டெடுக்கப்பட்ட பிணங்கள் அவ்வாறுதான் அடுக்கப்பட்டிருந்தனவென்று அவர் கேள்விப்பட்டிருந்தார். அதையும் சொல்ல அவர் மறக்கவில்லை.

அதற்கு அக்ரம் சிரித்துவிட்டுச் சொன்னான்: 'போர்வையால் முகத்தை மூடுகிறவரைதான் அது நடைபாதை. மூடிவிட்டால் அது அவர்களது வீடாகிவிடும் - தனியுலகமாகிவிடும். பார்க்கப்போனால்.... அந்தரங்கங்களுக்கு மட்டுமில்லை, நினைக்க யோசிக்க சிந்திக்கக்கூட அவரவருக்கென்று தனித்தனி உலகம் தேவைப்படுகிறதுதான்.

அவன் சொன்னதை தம்பிராசாவால் புரிய முடிந்திருந்தது எப்படியோ.

ஒரு இடத்தில் வந்ததும் அவரை நிறுத்தி, அதோ.... அந்த மரத்தடியில கிடக்கிற துணி நீட்டத்தை நல்லாய்ப் பாருங்கே.... என்றான்.

'ஏன், தம்பி? மெல்ல அசையிற மாதிரி தெரியுது. அவ்வளவுதான்.' .

'அவ்வளவில்லை. உள்ள தாம்பத்தியம் நடக்குது.'

கேட்டு விறைத்துப்போனார் அவர். பெருநகர்களின் லட்சணம் இதுதானா என்று அங்கலாய்த்தார்.

'நீயே இதை ஒருநாள் அனுபவிப்பாய்' என்று காலம் அப்போது சொல்லிச் சிரித்தது. அது தம்பிராசாவுக்குக் கேட்கவில்லை.

இந்திரன், அக்ரம் இருவரும் வந்ததும் சிங்காரியும், தம்பிராசாவும் கீழே இறங்கிச் சென்றனர்.

மறுநாள் அக்ரம் கூட்டிப்போய் அவரை சென்னை எக்ஸ்பிரஸில் ஏற்றி அனுப்பி வைத்தான்.

மேலும் இரண்டு நாட்களின் பின் பேச்சுவாக்கில் வெளிநாடு செல்ல வந்த ஒரு இளம் தம்பதியர் அடுத்த அடுக்கு மாடியிலுள்ள ராஜேந்திரனின் இன்னொரு வீட்டில் தங்க வைக்கப்பட்டிருப்பது சிங்காரியிடமிருந்து இந்திரனுக்குத் தெரிய வந்துவிடுகிறது. இந்திரன் உஷாரானான். அவர்கள் பேசுகிற இடங்களிலிருந்து முன்புபோல ஒதுங்காமலிருந்தான். என்ன பேசுகிறார்களென்பதை ஊன்றிக் கவனித்தான். மேலோட்டமாய் அல்லாமல், இப்போது அவர்களின் கண்களினூடு பார்த்துப் பேசினான். தெளிவில்லாவிட்டால் தெளிவாய்ச் சொல்லும்படி வற்புறுத்தினான். ராஜேந்திரன் ஒரு காலை அங்கு வந்தபோது, 'புதிசா வந்த ஆக்களின்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம்தான் செய்யப்போகினம்போல...' என்றிழுக்க, 'அவை கனடா போற ஆக்கள்' என்று பேச்சைச் சுருக்கமாய் முடித்துவிட்டான் அவன். சுவிஸுக்கு நீர்தான் முதல் என்று சொல்லாதது பெரிய மனத்தாங்கலாய்ப் போய்விட்டது இந்திரனுக்கு. வழக்கமான உற்சாகம் குறைந்துபோனான். புத்தகங்கள் இரண்டும் அவசரம் தயாராக வேண்டுமென்று ராஜேந்திரன் சொல்லிச் சென்ற பிறகு வீட்டறையிலிருந்து அன்று முழுக்க தீவிரமாய்க் கருமமாற்றிக் கொண்டிருந்தான் மதி.

இரண்டு குழல் விளக்குகளும் ஒரு குமிழ் விளக்குமாய் எல்லாமே எரிந்து அந்த அறையைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தன. பாய் விரித்து அமர்ந்திருந்தான் மதி. முன்னால் அழுக்கேதும் 'பிரண்டு' விடாத அவதானத்தில் பேப்பர் விரிக்கப்பட்டிருந்தது. மூட்டி வைத்த சிகரெட் ட்ரேயில் கிடந்து புகைந்துகொண்டிருந்தது.

ஒரு கடவுச்சீட்டை எடுத்து வெகு கவனமாய் அதன் பக்கங்களை அவதானித்துவிட்டு ஒரு பக்கத்தைத் தேர்ந்தெடுத்தான். பின் தை அப்படியே விரித்திருந்த பேப்பரில் கவிழ்த்து வைத்தான்.

சிகரெட் எடுத்துப் புகைத்தான்.

மேற்கொண்டு தன் பையிலிருந்து இன்னொரு கடவுச்சீட்டை எடுத்து ஒரு பக்கத்தைப் புரட்டி வைத்துக்கொண்டு வெகுநேரம் ஆய்ந்தான்.

"சிங்காரவேலண்ணை....!"

வெளியே தமிழ்ச் சஞ்சிகைகளுள் மூழ்கிப்போயிருந்த சிங்காரவேலன், "என்ன?" என்றபடி எழுந்து வந்தான்.

"என்றி கையாலதான் அண்ணை போடவேணும். நாங்கள் செய்து வைச்சிருக்கிற றபர் ஸ்ராம்ப் சரிவராது. பற்றேர்ண் மாத்தியிட்டாங்கள். நல்லாய்க் கவனிச்சால்தான் வித்தியாசம் தெரியும்."

"எனக்கென்ன ராசா தெரியும். நீ சொன்னால் சரிதான். அப்ப.... போட்டு வைச்சிடன். ராவைக்கு ராஜேந்திரம் வருமெல்லே!"

"ஓ.... போட்டு வைச்சிடலாமே. துவங்குறதுக்குள்ள ஒருக்கால் வெளியில போட்டு வந்திடுறன்."

"உன்னை வேலை முடியாமல் வெளியில விடவேண்டாமெண்டு ராசேந்திரம் சொல்லியிட்டுப் போயிருக்கு."

"போய் வந்தாத்தான் சரிவரும். பாருங்கோ.... இப்பவே கை நடுங்கத் துவங்கியிட்டுது."

"அது எல்லாம் சரியாய்ச் செய்திடலாம். குவாட்டர் வாங்கி வைச்சிருக்கு. அவ்வளவுதான், வேலை முடியிற வரை."

சிங்காரவேலன் சமையலறை போய் காய்கறிக் கூடையிலிருந்து ஒரு குவாட்டர் விஸ்கி போத்திலையும் ஒரு கோல்ட் ஸ்பொட்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தான். தட்டிலிருந்து ஒரு கிளாசையும் எடுத்துப்போய் மதிக்குப் பக்கத்தில் வைத்தான். "எழும்பாத.... எழும்பினால் காரியம் கெட்டுப் போகும். அவசரமான வேலை. ஞாபகம் வைச்சுக்கொள்."

மதி விஸ்கியையும் கோல்ட் ஸ்பொட்டையும் கலக்கி ஒரு கிளாஸ் குடித்தான். மறுபடி கலக்கி பக்கத்தில் கையெட்டும் தூரத்தில் வைத்துவிட்டு ஆஸ்ரேயிலிருந்த சிகரெட்டை எடுத்துப் புகைத்தான். நிதானம் வருவதுபோல் தன் நீண்ட தலைமுடியை கோதினான். சிலுப்பினான். காரியத்துக்குத் தயாரானான்.

எட்ட இருந்தபடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான் இந்திரன்.

விரித்திருந்த கடவுச் சீட்டில் சென்னை விமான நிலைய குடிநுழைவு அனுமதி முத்திரை வரைபட்டுக்கொண்டிருந்தது. பிளேடினால் தீக்குச்சியைச் சீவிச் சீவி முனையை றப்பர் ஸ்ராம்ப்மைப் பட்டையில் அழுத்தி அழுத்தி புதிய கடவுச் சீட்டு முத்திரையொன்றைப் பார்த்துப் பார்த்து பதித்துக் கொண்டிருந்தான் மதி. அரை அடி நீள கண்ணாடி அடிமட்டம், பாகைமானி ஆகிய உபகரணங்கள் மாறிமாறி உபயோகமாகிக்கொண்டிருந்தன.

விஸ்கி உள்ளே இறங்கி தொழிற்பட ஆரம்பித்ததும் ஆரம்பத்திலிருந்த பதட்டம் மறைந்து பெரு அவதான நிலை பெற்றுவிட்டாற்போலத் தோன்றினான். குளிர்க் கிடங்குபோல் இருந்த அந்த அறையில் அவனுக்கு மெல்ல வியர்த்திருந்தது. அந்தத் தொழிலில் அவன் வெகுகாலம் ஈடுபட்டிருந்தானென்பதை செய்நேர்த்தி தெரிவித்தது. தொழிலீடுபாட்டை அக்கம்பக்கம் திரும்பி பார்வையை அலையவிடாத மகா அவதானம் காட்டியது.

எட்டிப் பார்த்த இந்திரன் பிரமித்துப் போனான்.

றப்பர் ஸ்ராம்பினால்கூட அவ்வளவு தெளிவான முத்திரை பதித்துவிட முடியாது.

எழுந்து வெளியே வந்தான்.

நேரம் இரண்டரை ஆகியிருந்தது.

சிங்காரவேலன் சமைத்து முடித்திருந்தான். நோய்க் கோழிபோல் கதிரையில் அமர்ந்தபடி தூங்கிவழிந்து கொண்டிருந்தான். கையிடுக்கில் ஒரு சிகரெட் எரிந்து சாம்பர் வளர்த்துக்கொண்டிருந்தது. அதன் தோற்றம் விசித்திரமாயிருந்தது. தண்ணீரில் நனைந்ததுபோல் சாயம் ஊறி, உடம்பு சுருக்கமடைந்து.... திடுக்கிட்டு விழித்து அவசரமாய்ப் புகையை இழுத்து சிகரெட்டை முடித்துக்கொண்டு கட்டையை வீசினான். பின் தூங்கலைத் தொடர்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம்போல் இந்திரன் தானே போட்டுச் சாப்பிட்டான். ஹோலுக்குள் வந்து சிறிதுநேரம் பாயை விரித்துப் படுத்திருந்தான். நாலு நாலரை மணிபோல் எழும்பி அறைக்குள்ளே போனபோது மதியின் முக இறுக்கங்கள் தளர்ந்திருந்தன. வேலை முடிந்தது மாதிரி சாமான்களை ஒதுங்க வைத்திருந்தான். குவாட்டர் போத்தல் காலியாக சரிந்து கிடந்தது தள்ளி. கோல்ட் ஸ்பொட்டில் சிறிது மீதமிருந்தது.

மூன்று கடவுச் சீட்டுகளும் இப்போது விரித்துக் கிடந்தன மதி முன்னால். ஒரு தோல் பையை எடுத்து திறந்தான். உள்ளே நிறையப் பேனாக்கள். ஊற்றுப் பேனை, இறகுப் பேனை, கழிமைப் பேனா என்றும், பல வர்ணங்களிலும் அவை. அவற்றுள் பச்சை மை ஊற்றுப் பேனாக்களை எடுத்து வெளியே வைத்தான். ஒவ்வொன்றாக எடுத்து ஒரு வெள்ளைத் தாளில் கீறி ஏற்கனவே ஒரு கடவுச் சீட்டில் இடப்பட்டிருந்த குடி நுழைவு அனுமதி கொடுத்த அதிகாரியின் கையெழுத்தோடு ஒப்பிட்டு அவற்றின் தடிமன், அவற்றின் நிறச் செறிவு முதலியவற்றைக் கவனித்து ஒரு பேனையைத் தேர்ந்தெடுத்தான். பின் வெற்றுத் தாளில் கையெழுத்திட்டுச் சரிபார்த்தான். பின்அதைக் கிழித்தெறிந்தான். தான் முத்திரை வரைந்த ஒரு கடவுச் சீட்டை எடுத்தான். அந்தநேரம் அவன் முகம் என்ன மாதிரிச் சுடர்விட்டது! கையெழுத்துக்குரிய அதிகாரியாகவே ஆகிவிட்டதான பாவனை. பாவனைகூட இல்லை அது; அவதாரம். கையெழுத்திட்டான்; திகதி போட்டான்; ஒரு கடவுச் சீட்டின் வேலை முடிந்தது. அடுத்த கடவுச் சீட்டை எடுத்தான். கையெழுத்து தேதி போட்டு முடித்தான். அவற்றை எடுத்துக் கொண்டு ஹோல் ஜன்னலருகே வந்து மூன்றையும் பிரித்துப் பார்த்தான். பூரண திருப்தியின் மலர்ச்சியொன்று முகத்தில் விரிந்தது.

அந்தளவில் சாப்பிட்டு வந்த சிங்காரவேலன் வந்து கடவுச் சீட்டுகளை வாங்கிப் பார்த்து திருப்தியோடு சிரித்தான். மூன்று கடவுச் சீட்டுக்களையும் மேசை லாச்சியில் வைத்துப் பூட்டிவிட்டு வந்தான்.

அங்கே நிகழ்ந்தது என்ன? விமான நிலையத்திலிருந்து இறங்கியவரை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கான முத்திரையின் வரைவு மட்டுமில்லை; குடி நுழைவு அதிகாரியினதே போன்று வைக்கப்பட்ட கையெழுத்து மட்டுமில்லை; ஒரு மாய வலையின் வெளிப்பாடு. எந்த விமான நிலையத்தில் என்ன மாதிரியான குடிவரவு - குடியகல்வு முத்திரைகள் பாவிக்கிறார்கள், அது எப்போது மாற்றுவடிவம் பெறுகிறது, அந்தக் கடவுச் சீட்டுகளின்மூலம் எந்தெந்த நாடுகளுக்கு இலகுவாக விசா எடுக்கலாம் என்பதெல்லாம் தெரிந்த ஒரு தொழில்நுட்ப வலை அது. அது சட்டவிரோதமாகச் செயல்பட்டதே தவிர, அதன் அணுக்க ஆய்வுகள் செய்முறைகளெல்லாம் தொழில் நுட்பம் சார்ந்தவையே. அவற்றின் பிரமாண்டமான வளர்ச்சி அன்று அங்கே தெரிந்தது.

“ராஜேந்திரம் எப்ப வரும்?” மதி கேட்டான்.

“ஏழு எட்டு மணி ஆகும்.”

“நான் வெளிய போகவேணும்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சரி... 555 ஸ்ரீயிட்டப் போக நேரம் இன்னும் நிறைய இருக்கு. முதல்ல.... சாப்பிடு. பிறகு வெளிக்கிட்டுக் கொண்டு வா, காசு தாறன். ராசேந்திரம் சொல்லியிட்டுத்தான் போயிருக்கு."

குளித்து, சாப்பிட்டு, உடைமாற்றி ஓ-டி-கொலோன் வாசம் மூச்சை நிறைக்க மதி வர, சிங்காரவேலன் பணம் கொண்டுவந்து கொடுத்தான்.

உல்லாசமாய் வெளியே நடந்தான் மதி.

அந்த உல்லாசத்துக்கு 555 - ஸ்ரீ காரணமென்பதை லேசாக இந்திரனாலும் புரிய முடிந்தது. ஆனால் அவனுக்குத் தெரியாதது 555 - ஸ்ரீ என்ன / யார் என்பதுதான்.

மதி திரும்பி வந்ததும் கேட்கவேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

## 20

கனடா பயணிகளுக்கு அன்று பயணம். பம்பாய் - பாரிஸ் - மொன்றியல் செல்லும் விமானம் இரவு 11.20க்கு அங்கிருந்து புறப்படவிருந்தது. எட்டரை மணிக்கெல்லாம் விமான நிலையம் போய்விட வேண்டுமென்று காலையிலே ராஜேந்திரன் தொலைபேசியில் ஹோட்டலில் நின்றிருக்கும் பயணிகளிடம் சொல்லியிருந்தான். அதைக் கேட்ட இந்திரன் துடித்துப் போனான். முகம் கறுத்துப் போயிற்று.

அது மாதிரியான பொழுதுகள் மிகவும் வேதனையானவை. தான் வந்து ஒரு மாதமாகிவிட்டது என்ற நினைப்பு ஏற்கனவே அவன் மனத்தைச் சலனப்படுத்தத் துவங்கியிருந்தது. அவன் இன்னுமொரு மாதம் வேண்டுமானாலும் காத்திருப்பான். ஆனால் சூழ்நிலை காத்திருக்குமா? பெரிய தடையேதுமின்றி சுவிஸ் பாதை திறந்திருந்தது. அடைப்பட்டுப் போனால் மறுபடி திறக்க எத்தனை மாதங்கள் ஆகுமோ? இவ்வாறான பொறுதியின்மைகளில் ஏற்படும் சோகம், செலுத்த முடியாத அவதியுடன் சேர்ந்து அவனைத்தான் பேயாய் ஆட்டிக்கொண்டிருந்தது.

அன்று மாலையில், அவனையும் விமான நிலையம் கூட்டிவரும்படி ராஜேந்திரன் சொன்னதாய் சிங்காரவேலன் கூறினான்.

"ஏன்?" திகைப்போடு கேட்டான் இந்திரன்.

"அடுத்த கிழமையளவில் உமக்கு பிளையிற் இருக்கும். எதுக்கும் ஒருக்கா ஏர்போர்ட் போய் அங்கத்தைய நடவடிக்கைகளைக் கவனிச்சு வைச்சால் நல்லதுதானே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு மணியளவில் சிங்காரவேலன், மதி, இந்திரன், அக்ரம் ஆகியோர் விமான நிலையத்தைப் போய்ச் சேர்ந்த சிறிது நேரத்துள் குட்டியுடனும், இரு பயணிகளுடனும் ராஜேந்திரன் ஒட்டல் வாடகைக் காரில் வந்திறங்கினான்.

வெளிநாட்டுப் பயணிகள்போல் எடுப்பாக உடையணிந்திருந்தார்கள் இருவரும். ஆண் பயணி மிகவும் உற்சாகமாயிருந்தான். கடவுச் சீட்டின் உறவைக் காட்ட முனைபவன்போல் அவளை உரசிக்கொண்டு நின்றான். அவள் விலகினாள். முகங்கூட அந்தளவு அலங்கரிப்புக்களை மீறி ஒரு துக்கத்தை, ஒரு அழுகையை, ஒரு வெடுவெடுப்பான சினத்தைத் தாங்கியிருப்பதைக் காட்டிக்கொண்டிருந்தது. கண்களும் சிவந்து கலங்கிக் கிடந்தன. எந்தக் கணமும் அழுதுவிடலாம் போன்ற கனதியும் தெரிந்தது.

குட்டியினால் மெல்லிய குரலிலே அப்போதும் அதே உறுதிமொழி சொல்லப்பட்டது: அவர்கள் பதட்டமோ பயமோ அடையவேண்டியதில்லை; அதிகாரிகளுடன் விஷயங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன; அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் மிகவும் இயல்பாக இருந்து, குட்டி போய்வந்து குறிப்பில் அடையாளம் காட்டும் வரிசைகளில் நின்று விமான நுழைவு அட்டையை ஏர்லைன்ஸ் கவுண்டரிலும், குடியகல்வு முத்திரையை குடிவரவு - அகல்வுப் பகுதி அதிகாரியிடத்திலும் பெற்றுக் கொள்ளவேண்டியதுதான்.

அவர்கள் தங்கள் பைகளை எடுத்துக்கொண்டு விமான நிலையத்துள் நுழைந்தனர்.

குட்டி ஜனக் கூட்டத்தைத் துளைத்துக்கொண்டு முன்னே சென்று கொண்டிருந்தான்.

ராஜேந்திரனும் அக்ரமும் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றனர். மற்ற மூவரும் சற்றுத் தள்ளி, வேறுவேறு பேச்சுக்களைப் பேசியபடி. பார்வை கள்ளமாய் பயணிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

பயணிகள் ஏர்லைன்ஸ் கவுண்டருக்குச் செல்கிறார்கள்.... இருக்கை எண் பெற்றுக்கொண்டு, பொதிகளை எடை பார்த்து அனுப்புகிறார்கள்.... பின் தள்ளிவந்து இருக்கைகளில் அமர்ந்து குடியகல்வுப் படிவத்தை நிரப்புகிறார்கள்....

குட்டி எங்கும் தென்பட்டான்.

ஒரு விமான நிலைய அதிகாரியைப் பார்த்து சிரித்தான், ஒரு பாதுகாவல் பொலீஸுடன் பேசினான்.

இந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்போது அவர்களது பயணிகள் குடியகல்வுப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தனர்.... குட்டி குறிப்பில் காட்டிய வரிசையில் நின்றனர்....

இறுதித் தடைதாண்டுமிடம் அதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கடந்தால், அப்பால் விமான நுழைவுதான்; அப்பால் அவர்களது பயண எல்லைதான்!

வரிசை சுருங்கிக் கொண்டிருந்தது.

தமது இரண்டு கடவுச் சீட்டுகளையும் ஆண் பயணி கவுண்டரில் கொடுத்தான். பரிசீலனை மேலோட்டத்தில் முடிய குடியகல்வு முத்திரை குத்தப்படவிருக்கிற கடைசித் தருணம் அது.

சற்று எட்ட நின்றிருந்த குடியகல்வுப் பகுதியின் மேலதிகாரி ஒருவர் வந்து கடவுச் சீட்டுகளை வாங்கினார். பிரித்து ஆராய்ந்தார். இருவரையும் திரும்பி மாறிமாறிப் பார்த்தார். அவளை மட்டும் பின்னே வரச்சொல்லிவிட்டு சற்றுத் தள்ளிச் சென்றார்.

அவள் தொடர்ந்தாள்.

வாய் நிறைய வெற்றிலை போட்டிருந்தார். பான் கிறக்கம் கண்ணில் லேசாய் ஆடியது. அது புலக்கூர்மையாய் வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. கண்களின் வழியே அவளது இதயத்தைத் துளாவுபவர் போல ஒரு முழு நிமிட நேரம் அவளையே உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றார்.

பிரச்னையின் அடையாளத்தை தலையசைத்து தெரிவித்தான் அந்தக் கவுண்டரில் இருந்த குடியகல்வுப் பகுதி அதிகாரி.அவனது முகமே அடையாளம் காணும்படி கறுத்திருந்தது.

குட்டி அம்புபோல ராஜேந்திரன் நின்றிருந்த இடத்துக்குப் பாய்ந்து வந்தான்.

"என்ன, குட்டி?"

"மாட்டியிட்டுதுபோல இருக்கு..."

ராஜேந்திரனின் முகம் இருண்டது.

மெல்ல இருவரும் அப்பால் நழுவினர்.

சிறிதுநேரத்தில் ராஜேந்திரன் அக்ரத்தோடு மற்ற மூவரையும் நெருங்கினான்.

சிங்காரவேலன் முன்னே வந்து, "என்ன, ராஜேந்திரம்?" என்றான் நிலபரத்தை ஊகித்துக்கொண்டவன்போல.

"கஷ்ரம் வந்திட்டுதுபோல."

"புத்தகத்தில ஏதாவது நோண்டியாய்ப் போச்சோ...?" தன் கர்வம் பங்கப்பட்டதுபோல் கேட்டான் மதி.

தலையசைத்த ராஜேந்திரன், "அந்த நாய் அழுவாரைப்போல மூஞ்சையை வைச்சுக்கொண்டு நிக்கிறபோதே எனக்கு மனசுக்குள்ள தெரிஞ்சுட்டுது, இவள் இண்டைக்கு எல்லாத்தையும் கவிழ்த்துக்கொட்டப் போறாளெண்டு" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னவாம் அவளுக்கு? ஏன் அப்பிடி நிண்டவள்?" என்று சிங்காரவேலன் கேட்க, அதற்கு ராஜேந்திரம் தெரிவித்தான்: "ஆருக்குத் தெரியும்? ஏர்போர்ட்டுக்கு ஹோட்டல் காரில வாறதுதான் நல்லதெண்டு ரண்டு நாள் ஹோட்டல்லதான் தங்க வைச்சது. பாஸ்போர்ட்டில இருக்கிறமாதிரி புருஷன் பெண்சாதியாய்த்தான் பதிஞ்சிருக்கு; சந்தேகம் வந்திடாதமாதிரி நடந்துகொள்ளுங்கோ எண்டு சொல்லி விட்டது. அந்த மாடன் இதுதான் சந்தர்ப்பமெண்டு..."

"அமத்தியிருப்பானோ?"

"அப்பிடித்தான் தெரியுது"

"இப்ப... நாங்கள் என்ன செய்யிறது?" சிங்காரவேலன் கேட்டான். "இனி இதில நிக்கிறது நல்லதில்லை."

"குட்டி இப்ப வருவான், பொறுங்கோ."

ஐந்து பேரும் விமான நிலைய சிற்றுண்டிச் சாலையில் கோப்பி வாங்கிக் குடித்துக்கொண்டிருந்தனர்.

குடியகல்வுப் பகுதி மேலதிகாரி பெண் பயணியை விசாரித்துக் கொண்டிருந்த இடத்துக்கு வெகு சமீபமாய் வந்து நின்றிருந்தான் குட்டி.

"இளம்பெண்ணே! இதோ பார்! இந்த சிங்கப்பூர்ப் பாஸ்போர்ட் உன்னுடையதில்லை. நீ சிங்கப்பூர்ப் பிரஜையும் இல்லை. உண்மையில் நீ இலங்கைத் தமிழ்ப் பெண். கூட வந்தவன் உன் கணவனல்ல. அவனும் இலங்கைத் தமிழன். என்னை ஏமாற்ற நினைக்காதே. உண்மையைச் சொல்லு" என்றார் மேலதிகாரி.

அவள் குலைந்து போயிருந்தாள். மௌனமே பதிலாக வெளிவந்துகொண்டிருந்தது.

"சொல்லு! உன் கதையெல்லாம் உன் கண்களில், உன் முகத்தில் எழுதியிருக்கிறது."

பொலபொலவென்று கண்ணீர்த் துளிகள் சில விழுந்து சிதறின. அவள் தகர்வில் அவரே பச்சாத்தாபப்பட்டிருப்பாரோ?

"உண்மைதான் எனக்கு வேண்டியது. நீங்கள் இருவரும் கூட அல்ல. அதனால்... உண்மையைச் சொல்லு, விட்டு விடுகிறேன்."

தன் தப்புகையின் தருணம் அந்த ஒரு கணப் பொழுதில் நிகழ்ந்தால்தான் உண்டு என நம்பிய அந்தப் பெண் அவர் சொன்னது உண்மையென தலையசைத்துவிட்டாள்.

மேலதிகாரியின் முகம் சற்றுப் பிரகாசித்தது போலிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுநேரம் யோசித்து தனக்குள்ளே தலையசைத்துவிட்டு அவளிடம் சொன்னார்: "சரி, போ. கண்களைத் துடைத்துக்கொள். இனி இங்கே யார் கேட்டாலும் இந்த உண்மையைச் சொல்லி விடாதே."

அவரே வந்து கடவுச்சீட்டுகளைக் கவுண்டரில் கொடுத்து தலையசைத்தார்.

இரண்டு பயணிகளும் பயணிகள் காத்திருப்புக்கூடம் நடந்தனர்.

குட்டி சிரித்தபடியே வந்தான்.

"என்ன நடந்தது?" என்று அவசரமாய்க் கேட்டான் ராஜேந்திரன்.

"ஆக்கள் பிளேனில ஏறியிட்டினம்."

"அப்பாடா!"

"பெட்டை கடைசிவரை உண்மையைச் சொல்லேல்லைப் போல..."

"சொல்லியிட்டுது."

"என்ன!"

"நீ சிலோன்காரி.... உங்கட கஷ்ரம் எனக்குத் தெரியும்.... உண்மையைச் சொல்லு, விட்டுடுறன் எண்டு இமிகிறேஷன் ஓஃபீசர் கேட்க பெட்டை உண்மையைச் சொல்லியிட்டுது."

"விசர்ப்பெட்டை...."

"பெட்டை செய்ததுதான் சரி. கொஞ்சமும் நோண்டி இல்லாமல் தலைமாத்தி, என்றி அடிச்சு, விசா அடிச்சு எல்லாம் நல்லமாதிரிச் செய்தாலும் பரிச்சயமான கண்ணுக்கு உண்மையும் போலியும் தெரிஞ்சிடும், மச்சான். அனுபவசாலியின்ர கண்ணுக்கு சந்தேகம் வராமல் இருக்கிறவரைதான் எங்கட நுட்பங்கள் வேலை செய்யும். சந்தேகம் வந்து பாத்தால் போலியைக் கண்டுபிடிக்கிறது கஷ்ரமில்லை. ஆயிரம் ஆயிரமாய் எங்கட சனங்கள் இப்ப வெளிநாடுகளுக்குப் போயிருக்கு. எப்பிடியெண்டு நினைக்கிறாய்? பாதி, மதிபோல ஆக்களின்ர கைநுட்பம்; பாதி, இண்டைக்கு வந்த இமிக்கிறேஷன் ஓஃபீசர் மாதிரி ஆக்களின்ர தயை."

"என்னது...?" என்றான் சிங்காரவேலன்.

"தயை... கருணை... இரக்கம்....!"

அவர்கள் ராக்ஸியில் ஏறினார்கள்.

தயை....!

வெகுநேரம் அவர்களை மௌனிக்க வைத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

முதல் நாளைய சந்தோஷத்தின் கொண்டாட்டம் அன்றிரவு எட்டு மணியளவில் ராஜேந்திரன் வர தொடங்கியது. பங்குபற்றியவர்கள் பலபேர்கள் இல்லை. ராஜேந்திரன், சிங்காரவேலன், குட்டி, அக்ரம், மதி ஆகியோரே. இந்திரன் பார்வையாளனாக மட்டும். பார்வையாளனுக்கு கோல்ட் ஸ்பொட் கொடுத்தார்கள். தாங்கள் விஸ்கி குடித்தார்கள். சிலருக்கு பியர்.

ஒன்பது மணியளவில் சாப்பிட்டுவிட்டு அறைக்குள் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான் இந்திரன்.

அறை இருட்டுள் படுத்திருந்தவனுக்கு கதவிடுக்கினூடாக கூடத்துள் நடப்பதெல்லாம் தெரிந்துகொண்டிருந்தது. பேச்சுக்களும் தெளிவாகக் கேட்டன. ஆனால் பார்த்த எதுவும், கேட்ட எதுவும் அவனுக்குத் தேவையானதாக இருக்கவில்லை.

அவன் கண்களை மூடித் தூங்க முயன்றான்.

அந்த இளம் பெண்ணின் முகம் முதல் நாளிரவுபோல் மறுபடியும் ஞாபகமாகி அவனைப் புரட்டியெடுத்துக் கொண்டிருந்தது.

அவள் கூடநின்றவனின் மனைவிபோல் வெளிநாடு போகவிருந்தாள் என்பதை அவர்கள் பேச்சில் புரிந்திருந்தான் இந்திரன். அந்த நடிப்பு வெளியே தெரிந்துவிடக்கூடாத ஒரு இறுக்கமான தறுவாயினை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டவன், அவளை உண்மையிலேயே பெண்டாண்டு விட்டாற்போலவே தோன்றிற்று. இல்லாவிட்டால் அவளின் அத்தனை உடைவுக்குக் காரணமில்லை.

தன் நாட்டில் அம்மாதிரிக் கொடுமைக்கு அவள் தப்பிவந்தவளாய் இருக்கக்கூடும். வேறு மண்ணில் அவளது மனிதர்களாலேயே அவள் சேறாக்கப்படுவது எவ்வளவு கொடுமை! அப்படியில்லாமல், அந்த மாடன், ஒரு முயற்சியை மட்டுமே மேற்கொண்டிருந்தாலும் அது ஒரு உயிரைச் சிறுமைப்படுத்துதல் ஆகுமல்லவா? அதை அவன் - ஓடிப்போகும் அவனே- செய்திருக்கக் கூடாது.

தன்னின் வேறொரு பிரதிபோலும் அவள் தோன்றிக் கொண்டிருந்தாள் அவனுக்கு.

அந்த மூன்றாம் அலையிலாவது வெளிநாடு சென்று கடந்த இரண்டு தலைமுறைத் தோல்விகளை ஈடுகட்டும் பொறுப்பு தன் தோள்மீது சுமத்தப்பட்டிருப்பதுபோல், வேறு வேறு தலைமுறைக் கனவுகளை நிறைவேற்றும் சில கட்டாயங்கள் அவள்மீது ஏற்றப்பட்டிருந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, அவள்மீது ஒரு மனிதர் காட்டிய தயையினால்தான் அன்று அந்த இருவரும் தப்ப முடிந்திருந்தது. இல்லாவிட்டால் அவளும் அவனும் இப்போது சிறையில் இருந்திருப்பார்கள். அந்தளவுக்கு ஒரு இனத்தின் சோகம் முழுவதும் அவள் முகத்தில் இறுக்கமாய்ப் படிந்திருக்கிறது. அது அவள் முகத்தில் சாசுவதம் ஆகிவிடுகிற அபாயமும் உண்டு. அவள் சேரக்கூடிய உலகத்தின் லௌகீக பெறுமானங்கள் ஒருகாலத்தில் அவளின் சோகம் முழுவதையும் மாற்றிவிடவும் கூடும்தான்.

தூக்கம் இன்னும் வெகுதொலைவிலேயே இருந்தது.

இருந்தாற்போல மதியின் குரல் கூடத்திலிருந்து பெரிதாகக் கேட்டது: "இந்தக் கையின்ர திறமையால நூறு பேரை வெளிநாட்டுக்கு அனுப்பிவைச்சிருப்பன், சிங்காரவேலண்ணை. சிம்பிளாய் நினைச்சிடாதயுங்கோ. இதுவும் எங்கட சனத்துக்குச் செய்யிற ஒருவகை உதவி தானே!"

"அந்தளவு புத்தக வேலை செய்திருப்பியா?"

"பின்னை....? எண்பத்தஞ்சிலயிருந்து இந்த வேலை செய்யிறன்."

"மதி.... கனக்கக் கதைக்காத. உன்ர கதை எனக்குத் தெரியும். நீ எண்பத்தஞ்சில இயக்கத்திலயிருந்து ஓடிவந்தவன். நிச்சயமாய்.... தவிக்கிற எங்கட சனங்களைக் கரையேத்தவெண்டு நீ ஓடிவரேல்லை. நீயும் வெளிநாடு போகத்தான் வந்தனி. கொண்டு வந்த காசையெல்லாம் தண்ணியிலயும் சரக்கிலயும் அழிச்சிட்டு அப்பிடியே இஞ்ச அங்கர் போட்டு நிக்கிறாய்" என்று சொன்னான் சிங்காரவேலன்.

இந்திரன் இடுக்கினூடு பார்வையைக் குவித்தான்.

சிங்காரவேலன் அவர்களோடு சேர்ந்து குடிக்கவில்லையென்று தெரிந்தது. தூள் அடிக்கிறவனுக்கு தண்ணியும் பொம்பிளையும் பிடிக்காது என்று அங்கே வந்தபிறகு அவன் கேள்விப்பட்டிருக்கிறான். அப்போதும் சிங்காரவேலனின் கையிலிருந்து புகையிலைத் தூளை உதிர்ப்பதற்காய் மெதுவாய் தன்னை ஐதாக்கிக் கொண்டிருந்தது ஒரு வில்ஸ் கிங்.

சிங்காரவேலன் தொடர்ந்தான்: "நீ எண்பத்தஞ்சில வந்து நூறு பேருக்குமேல அனுப்பினதாய்ச் சொல்லுறாய்; எழுபத்தஞ்சில வந்த நான் எத்தினை பேரை அனுப்பியிருப்பனெண்டு நினைக்கிறாய்?"

ராஜேந்திரன் சிரித்துக்கொண்டே, "மதிதான் பாஸ்போர்ட் வேலை செய்து ஆக்களை அனுப்பினானெண்டு சொல்லலாம். நீ என்ன செய்தாய், சிங்காரி? என்ன மாதிரி அனுப்பினாய்?" என்று கேட்டான்.

"என்ன செய்தனோ?" சிங்காரி ரோஷங்கொண்டு நிமிர்ந்தது. "இலங்கைப் புத்தகமெண்டால் இலங்கைப் புத்தகம்.... இந்தியப் புத்தகமெண்டால் இந்தியப் புத்தகம்.... பிரிட்டிஷ் பாஸ்போர்ட்டா, சிங்கப்பூர் மலேஷியா மொரிஷியஸ் பாஸ்போர்ட்டா.... கேட்ட கேட்ட புத்தகம் கொண்டுவந்து தாறனே.... அது போதாது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி விடு, உணர்ச்சிவசப்படாத" என்று விஷயத்தைத் தணித்தான் குட்டி.

சிங்காரி ஓரளவு தணிந்து சிகரெட்டில் கவனம் செலுத்தியது.

மதி கேட்டான்: "எண்பத்தஞ்சில வந்த என்னை அங்கர் போட்டு நிக்கிறதாய்ச் சொல்லுறியளே, எழுபத்தஞ்சில வந்து இண்டளவும் இஞ்ச நிக்கிற உங்களை என்னெண்டு சொல்லுறது, சிங்கார வேலண்ணை? கரைதட்டி நிக்கிற கப்பலெண்டு சொல்லலாமோ?"

குபீரென்று சிரித்தது சிங்காரி.

பழக்கமிருந்தால் மட்டும்தான் அது பயங்கரமில்லாமல் இருக்கும். மற்றும்படி வாய் இருண்ட குகையாய்க் கிடந்ததிலும், பற்கள் அனைத்தும் மிளிரி பாழ்படக் கிடந்ததிலும், அதிர்வொலியிலும் கிலி பிடித்திருக்கும்.

சிங்காரி சிரித்து ஓய சிறிதுநேரமாயிற்று. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அது அடங்கியது.

சிங்காரி நகைச்சுவையிலும் சிரிக்கும். பேச முடியாத நிலை ஏற்படுகிற தருணங்களிலும் சிரிக்கும். அது மாதிரிச் சிரிப்பின் உச்சத்தில் சிங்காரிக்கு சோகத்தின் துவக்கம் இருப்பதைத் தெரிந்திருந்த குட்டி முன் நடவடிக்கை போல் சிங்காரியின் உதவிக்கு வந்தான். "சிங்காரி முதன்முதல்ல வந்திறங்கியது கல்கத்தாவிலதான். கப்பலெடுக்கவெண்டு வந்தது. அங்கயிருந்து கூட்டாளி சகிதம் மங்களூர், கண்டிலா, எர்ணாகுளம், பம்பாய் பிறகு விசாகப்பட்டினமெண்டு இப்பிடியே அலைஞ்சு கடைசியில போய்ச்சேர்ந்த இடம் சென்னை. சென்னையில ரண்டு மூண்டு மாசம் நிண்டிட்டு கையில இருந்த மோதிரத்தை வித்துக்கொண்டு எம்.வி. சிதம்பரத்தில ஏறி ஊர் போயிருக்கு. கேந்தியும் கிரந்தமுமாய்ப் போச்சு ஊரில. போன மச்சான் திரும்பிவந்தான் கோமணத்தோட எண்டு சின்னஞ்சிறிசுகள்கூட பாடத் துவங்கியிட்டுதுகள். சிங்காரிக்கு கஷ்ரமாய்த்தான் இருந்தது. இருந்தாலும் லவ்வுக்காக அங்கயே நிண்டுது. கொஞ்ச நாளில பெட்டை வேற ஆரோடயோ கூடிக்கொண்டு ஓடியிட்டுது. சிங்காரியால அதைத்தான் தாங்க ஏலாமல் போச்சு. முடிஞ்ச காசைப் புரட்டியெடுத்துக்கொண்டு திரும்ப கப்பலேறியிட்டுது. மூண்டு மாசமாய் சென்னை, தூத்துக்குடி எண்டு அலைஞ்சு பாத்து ஒண்டும் சரிவரேல்லை. அந்தளவில சென்னையிலயும் இயக்கப் பிரச்சினையள். செய்யக்கூடியதாய் இருந்தது பம்பாய்க்கு ரயில் எடுக்கிறதுதான். கையில இருந்த காசுக்கு ரிக்கற் எடுத்துக்கொண்டு சிங்காரி வெறுங்கையோட பம்பாய் வந்து சேர்ந்துது. மணிக்கூட்டை வித்து.... பாஸ்போர்ட்டை அடைவு வைச்சு.... காலம் இப்பிடியே ஓடிக்கொண்டிருந்தது...."

"அது சரி.... சிங்காரவேலனெண்டதுதான் இவரின்ர உண்மையான பேரோ?"

சரியான கேள்வி. யார் கேட்டது? இந்திரன் உஷாரானான். அவனே கேட்கவிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சும் சலங்கையில வாற சிங்காரவேலனே தேவா எண்ட பாட்டுத்தான் அண்டைக்கு மட்டுமில்லை எண்டைக்கும் பிடிச்ச பாட்டு இவருக்கு. இப்ப இந்தப் பாட்டைக் கேட்டாலும் சிங்காரிக்கு அழுகைவரும். இவரின்ர பெட்டை இந்தப் பாட்டை அந்தக் காலத்தில வாசிகசாலை ஆண்டுவிழாவில ஒருமுறை பாடிச்சுதாம். அண்டைக்குத்தானாம் இவைக்குள்ளையும் தொடுப்பினை விழுந்தது. இவர் அந்தப் பாட்டை முணுமுணுக்க.... பெட்டை சிரிக்க.... இப்பிடி!"

"தொடுப்பினை என்ன.... காதலெண்டு சொல்லு."

"மயிர்க்காதல். காதலெண்டால் கப்பல் வேலை கிடைக்கேல்லை எண்டவுடன வேறொருத்தனோட கூடிக் கொண்டு ஓடுவாளே?"

ஒரு ஆள் : சிங்கார வேலனே தேவா....

இரண்டாம் ஆள் : பாடு சாந்தா.... பாடு. உன் இசையென்ற இன்ப வெள்ளத்திலே நீந்துவதற்கு ஓடோடி வந்த என்னை ஏமாற்றிவிடாதே சாந்தா.

மூன்றாம் ஆள் : என் இசை உங்கள் நாதஸ்வரத்துக்கு முன்னால்....

முதலாம் ஆள் : தேனோடு கலந்த தெள்ளமுதம்....

இரண்டாம் ஆள் : கோடை நிலவோடு சேர்ந்த குளிர்தென்றல்....

"தம்பி, நக்கல் இருக்கலாம், நளினம் இருக்கக்கூடாது" என்றது சிங்காரி சற்று அதட்டலாய்.

"உண்மையைத்தானே சொல்லுறம்; ஏன் குழம்புறாய்?" என்றான் அக்ரம்.

ராஜேந்திரன் இடையிட்டான் : "கொஞ்சும் சலங்கை படம் வந்து இருபத்தஞ்சு வருஷமாவது இருக்கும். இருந்தும் பாட்டை வரிவரியாய்த் தெரிஞ்சு வைச்சிருக்கிறியளே!"

குட்டி சொன்னான் : "சிங்காரியைப் பகிடி பண்ணிப் பண்ணி பாடமாயே போச்சு."

சிங்காரி தன் லயத்தில்.

'தூள்' போட்ட சிகரெட்டை பற்றவைத்து உன்னி உன்னி இழுத்துக் கொண்டிருந்தது.

சிங்காரிக்கு ஐம்பதளவு வயது. தலையில் அவ்வளவாய் நரையில்லாவிட்டாலும் உடம்பும் முகமும் காட்டின. குடியும், கஞ்சாவும், ஹசிஸும், தேவடியாள்ச் சேர்க்கையும் பிறகு ஹெரோயினுமாய் உடம்பு கோறை பத்திப் போய்விட்டது. ஹெரோயினை நிறுத்துவதற்கான வாய்ப்பு இனி இல்லை. நிறுத்தும்படி யாரும் கேட்டதுமில்லை. அதற்கெல்லாம் பணம் ராஜேந்திரன்தான் கொடுத்ததாய்த் தெரிந்தது. சாப்பாடு தங்குமிடமெல்லாம்கூட அவன்தான். அத்தனைக்கு அவன் தேவை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழெட்டுப் பேர் அவனுக்காக வேலை செய்துகொண்டிருந்தார்கள் என முன்பே கணித்திருந்தான் இந்திரன். அவர்களையும் ராஜேந்திரனே பராமரித்தான். ஏஜன்ஸி வேலையால் நிறையவே வந்தது. அந்த இரண்டு பேரையும் அன்றைக்கு அனுப்பியதில் நிகர லாபமே இரண்டு லட்சமென்று ஒரு பேச்சில் மதி குறிப்பிட்டிருந்தான். பொறாமை போட்டிகள் எழுந்து காட்டிக் கொடுப்புகள் மூலம் அவனைச் சரிக்கப் பார்த்தனர் சிலர். போலிகள் கண்டு பிடிக்கப்பட்டு லட்சக்கணக்கில் நஷ்டங்கள் ஏற்பட்டுமுள்ளது. ஆனால் முற்றாக அவனைச் சரிக்க யாராலும் முடியவில்லை. இயக்கங்களைவிட்டு ஓடிவந்த சில இளைஞர்கள் சேர்ந்த ஆயுதக் கும்பலொன்றுக்கு ராஜேந்திரன் பணம்கொடுத்து வந்ததில், அது சாத்தியமாகவில்லை. அங்கே நிலைநிற்பதற்கான முக்கிய அம்சங்களில் பணத்துடன் சண்டித்தனமும் ஒன்று என்பதை அத்தனை நாட்களில் இந்திரன் புரிந்தே வைத்திருந்தான். இவையெல்லாம் ஒருவித கதாநாயகத் தன்மையை ராஜேந்திரன் மேல் ஏற்றியிருந்தன இந்திரனிடத்தில். அது, முதல்நாள் ராக்ஸியில் வந்துகொண்டிருந்தபோது 'அடுத்தது எங்கட இந்திரன்ர பயணம்தான்' என்று அவன் சொல்லியிருந்ததோடு வெகுத்திருந்தது. கண்களை மூடிக்கொண்டு வெளிநாட்டுப் பயண சுகத்தில் ஆழ மனம் விழைந்தது. ஆனால் எதிரே நிகழ்வனவும் ஒருவகைச் சுகத்தைத் தந்ததில் அப்போது தலையைத் தொங்கிக்கொண்டு பேசத் துவங்கியிருந்த சிங்காரியின் குரலில் கவனம் குவித்தான்.

"கப்பலெடுக்கவெண்டு வந்த அந்த முதல்கூட்டம்தான் இண்டைக்கு இந்தியாவிலயிருந்து நடக்கிற பயணம் சம்பந்தமான சகல தில்லு முல்லு வேலைகளுக்கும் மூலாதாரமாய் இருந்தது. கள்ள எக்ஸிற் அடிக்கிறதிலதான் அது முதலில துவங்கினது. பிறகு.... கள்ளச் சீமன்புத்தகம் அடிக்கிறதில, கப்பல்ல வேலை செய்த போலி சேர்டிபிகேற் தயாரிக்கிறதிலயெண்டு பரவிச்சுது. கடைசியாய்... கள்ளப் பாஸ்போர்ட்டே அடிச்சு இஞ்ச வித்தாங்கள். இப்ப கப்பலுக்கு ஆர் போகினம்? எல்லாருக்கும் அகதியாய் வெளிநாடு போகத்தான் ஆசை. கப்பல் ஏற அப்ப பயன்பட்ட தந்திரம், இப்பஅகதியாய் விமானம் ஏற பயன்படுகுது. உனக்குத் தெரியுமோ குட்டி.... அப்ப... கப்பல் ஏஜன்றுக்கு கட்ட பணம் சேர்க்கிறதுக்காக கராச்சி பிஸினஸ்கூட செய்தம்!"

"கராச்சி பிஸினஸா?"

"ம்!"

சிங்காரி பாதி படுத்த நிலைக்கு வந்தாகிவிட்டது. இருந்தும் புள்ளியிற்போல் கவனம் குவிந்திருந்தது. மற்றவர்கள் விஸ்கி குடித்தனர்; சிகரெட் மூட்டினர்.

"சொல்லு சிங்காரி, கராச்சியில என்ன பிஸினஸ்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தரைவழிப் பாதைதான். சிலோன் பாஸ்போர்ட்டுக்கு அப்ப - இப்பவும் அப்படித்தான்போல - பாகிஸ்தான் போக விசா தேவையிருக்கேல்லை. இஞ்சயிருந்து வெத்திலை கொண்டு போவாங்கள். நல்ல விலைக்கு விக்கும். அங்கயிருந்து வெள்ளி கொண்டு வருவாங்கள். இந்தியாவில வெள்ளி விலை. ஒருமுறை போய் வந்தால் செலவு தள்ளி ஆயிரம் ரூபாய்வரை லாபம் கிடைக்கும். கராச்சியிலயும் கன தமிழ்ப் பெடியள் நிண்டாங்கள். கப்பலேறத்தான். எண்டாலும் சிங்களப் பெடியள் அதிகம். தமிழ்ப் பெடியளுக்கும் சிங்களப் பெடியளுக்கும் சண்டைகூட நடந்திருக்கு."

"நாட்டுக்கு வெளியில வந்துமா பிரச்சினை? தமிழருக்கு எங்க போனாலும் துன்பந்தானா?" என்று வருத்தப்பட்டான் மதி.

"வெளியில மயிர வாங்கினாங்கள் அடி. சிங்களப் பெடியளுக்கு சாம்பலடி குடுப்பாங்கள். அவங்களுக்கிருக்கிற ஒரே வசதி என்னெண்டால், எது நடந்தாலும் ஓடிப்போய் சிலோன் எம்பஸியில முறையிட்டுவிடுவாங்கள். எம்பஸியில இருக்கிறவை சிங்களவர்தானே? அவை உடன பாகிஸ்தான் பொலிசுக்கு ரெலிபோன் பண்ணுவினம். எம்பஸியிலயிருந்து முறைப்பாடு வந்தவுடன பாகிஸ்தான் பொலிஸ் உஷாராயிடும். எண்டாலும் காசைக் குடுத்து பாகிஸ்தான் பொலிசை கையில வைச்சுக்கொண்டு எங்கட பெடியள் செய்யிறதெல்லாம் செய்துகொண்டுதான் இருந்தாங்கள். இன்னொண்டு...."

"என்ன?"

சிகரெட் ஒன்று பற்றவைத்து தரக் கேட்க அக்ரம் ஒரு சிகரெட்டை மூட்டிக்கொடுத்தான். புகையை உறிஞ்சி தெம்படைந்துகொண்டு சிங்காரி தொடர்ந்தது: "தேவன், கிருபா, உமாபோல ஆக்களிட்ட ரிவால்வர் இருந்தது. பாகிஸ்தானில, கடையில சாமான் வாங்கிறமாதிரி துவக்கு வாங்கலாம். எங்கட ஊரில கத்தி, சத்தகம் விக்கிற மாதிரி அங்க துவக்குகளை சிலவேளை பேமன்ரில போட்டுக்கூட விப்பாங்களாம். எங்கட பெடியள் அங்கயிருந்து ஆயுதம் வாங்கி இஞ்ச கொண்டு வந்து சேர்ப்பாங்கள். இஞ்சயிருந்து போர்ட்டில அது யாழ்ப்பாணம் போய்ச் சேரும். யாழ்ப்பாணத்தில இருந்த குழுக்களுக்கு நமோ எண்டு ஆரம்பத்தில ஆயுதம் போய்ச் சேர்ந்தது இந்த மாதிரித்தான். வங்கிக் கொள்ளை, பெற்றோல் நிலைய கொள்ளையெல்லாம் அதை வைச்சுத்தானே நடந்தது!"

"அப்பிடியா சங்கதி?" என்று அதிசயித்தான் அக்ரம்.

"அக்ரம்.... என்ன குரல் ஒருமாதிரி இருக்கு? நீயும் கொழும்பு முஸ்லீம்தானே! அந்தப் பக்கத்தில வாரப்பாடு அதிகமாய்த் தான் இருக்கும். அதால.... வங்கிக் கொள்ளையெல்லாம் நடந்தது எண்டவுடன சந்தோஷப்படுகிறாய் போல? நீ குழுக்களையும் இயக்கங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டாய்ப் போட்டு குழப்பியிடாத. ஸ்ரீசபாரத்தினம், உமாமகேஸ்வரன், பத்மநாபா, பிரபாகரன் மேலயெல்லாம் அப்பழுக்குச் சொல்லேலாது. விளங்கிச்சுதா....?"

தம் இழுத்ததும் சிங்காரி தொடர்ந்தது: "விளங்கிச்சுதா....? குழுக்களையும் சேர்த்துத்தா ன் இலங்கையில அம்பது அறுபது போராட்ட இயக்கம் இருக்குமெண்ட பேச்சு ஒரு காலத்தில வந்தது. சரி.... அதுபோகட்டும். இப்பிடி ஒரு இருபத்தஞ்சு வருஷ கால தொழிற்திறமையிலதான் இப்ப கனடா.... ஈரோப் எல்லாம் ஓடுது. சும்மா சொல்லக்கூடாது, எங்கட மதி கைவைச்சா.... ஒறிஜினல் பொய்யாய்ப் போயிடும்.... அப்பிடி ஒரு நேர்த்தி இருக்கு அவன்ர வேலையில."

பெரிய தரிசனம் அது.

நதிமூலம் தெரிவதில்லை.

தெரிந்தால் அப்படியொரு மலைப்பு வரும்.

எல்லாம் முடிவுக்கு வந்திருந்தன.

இந்திரன் நேரத்தைப் பார்த்தான்.

பன்னிரண்டு ஆகிக்கொண்டிருந்தது.

அமைதி சூழ்ந்தது வீட்டில்.

"நாறுவதே எங்கள் விதியாகிப் போனாலும் / மனித இறப்புக்கு / ஏதேனுமோர் அர்த்தம் இருக்கட்டும்!"

மதியின் குரல்தான்.

போதையிலும் ஒரு ஆழ்மனப் பிதற்றல்.

சன்னமாய் தெளிவாய் அது தொடர்ந்தது: "பேரானந்தா! உன்ர கடைசிக் கடிதத்தில.... இருந்ததடா இந்தக் கவிதை. ஞாபகத்தில வைச்சிருக்கிறன்... மறக்கமாட்டன். ஆர் எழுதினது இதை? ம்.... விடு.... ஆரோ எழுதிச்சினம். ஆனா சத்தியமான எழுத்து.... சாவுக்கு ஏதாவது ஒரு அர்த்தம் இருக்கவேணும்.... அருமை! போறன் போறனெண்டு என்ர பிடியிலயிருந்து தப்பிப்போய் அங்க நீ செத்துப் போனாய்; நான் அங்கயிருந்து செத்து இஞ்சவந்து தப்பிக் கிடக்கிறன்டா. என்ர பேரானந்தா....! உன்னைப்போல ஒரு சிநேகிதனை இனி எங்கயடா போய்த் தேடுவன்....!"

பேரானந்தன்....! யாரது? இவனின் நண்பனா?

இவனது அழிவிலும் நாடு சம்பந்தப்பட்ட பாதிப்பு இருக்கிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22

ஜேர்மனியிலுள்ள ரெய்னி நகரில் அப்போது நின்றிருந்தாள் ஷீலா. அமலன் வந்து போனபோது சிலநாட்கள் அவன் குடும்பத்தாரோடு நின்றுவரும்படி சுதனே அனுப்பி வைத்திருந்தான். போய் இரண்டு வாரங்கள் ஆகின்றன. இருந்தும் மாதக்கணக்காகி விட்டதுபோல் சதிரம் கொதிப்பெடுக்கத் தொடங்கியிருந்தது. அதை மறக்கவென்று குடிக்க, அது மேலும்மேலுமான தசை விழைச்சல்ச் சுணைப்பைத் தூண்டி விட்டுவிடுகிறது.

அங்கே அவளை அத்தனை நாளாய் விட்டிருந்ததே, எத்தனை நாள் அவளில்லாமல் தன்னால் இருக்கமுடியும் என்பதை தனக்கே அறியவைப்பதற்காகத்தான். அவர்கள் உறவின் தன்மையை ஆழத்தை அறிவதற்கான உபாயமாகவும் அது பிரயோகமாகியிருந்தது. அவள்கூட அந்த உறவிலுள்ள நிலைப்பாட்டை அறிய அந்தப் பிரிவு உதவக்கூடும். அவளே அவள் நிலையை அறிவதும் முக்கியம்.

அவள் இல்லாத இரவை அவன் உணர்ந்தது அவள் போய் ஒரு வாரத்திலேயே நிகழ்ந்தது. அது ஒரு தேடலாய், மனம்வரை வியாபிக்கிற வெறுமையாய் உணர்வது பத்து பன்னிரண்டு நாட்கள்வரையிலும் இல்லை. அது ஒரு இரண்டுங்கெட்டான் உறவாய் வளர்ந்திருந்தமையை அவன் அப்போது தெரிந்தான். அது அவனை ஆச்சரியப்படவைத்தது.

கடந்துபோன நாட்கள் குமைவாய்க் கிடந்தன. ஏறக்குறைய இரண்டரை வருஷங்களின் நாட்கள் அவை. தன்னை, சந்திரமோகனை, மரியை உள்ளடக்கிய ஒரு நினைவு வட்டத்தைப் போட்டு நாட்களை ஒழுங்குபடுத்தினான் அவன்.

ஜேர்மனியிலிருந்து நிகழ்வுகள் விரிந்தன.

தெரிந்த நிகழ்வுகளின் பின்னணியாயிருந்த தெரியாத உணர்வுகளுக்காக அவன் அவ்வளவுதூரம் செல்லவேண்டியே இருந்தது.

ஜேர்மனியிலிருந்து இந்தியாவுக்கு அவன் புறப்பட்டபோது தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை அழைத்துவரவே என்பது அவன் நண்பர்கள் எல்லோருக்குமே தெரிந்திருந்தது. மறுநாள் பகலில் அவனது பயணம் இருந்ததெனில், அன்றிரவு வெகு நேரம்வரையில் பிரபு வீட்டில் பார்ட்டி நடந்தது. ராஜி - அதுதான் உன் வருங்கால மனைவி - எனக்கு தங்கச்சியா, அக்காவா என்று ஒரு ஆள்; அண்ணியென்று சொல்ல வேணுமா? இல்லை.... மச்சாளென்று சொல்லலாமா? - இப்படி ஒருவர்; கிண்டல்கள் கேலிகளாய் அன்றைய இரவு களைகட்டியிருந்தது. பிரபுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி தன் சின்னம்மாவின் மூத்த மகளுக்கும் ராஜலட்சுமிதான் பெயர் என்றும், ராஜாத்தி என்று வீட்டிலே கூப்பிடுவார்களென்றும்வேறு கதை சொல்லிக்கொண்டிருந்தாள். அக்காவைப் பார்த்த மாதிரி இருக்குமென்று அமலன் ஆவல் காட்டினான். இவ்வாறு ஒரு ராஜியை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு முன்னால் ஷீலாவைக் கொண்டுபோய் எப்படி நிறுத்துவதென்ற எண்ணம் அவளையும் அழைத்துக்கொண்டு பம்பாய் வந்தபிறகுதான் சுதனிடத்தில் எழுந்தது. ராஜேந்திரனோடு யோசித்துவிட்டு அங்கேதான் தன் பயண இலக்கை பிரான்ஸ் என மாற்றினான்.

ராஜியை இழந்தாகிவிட்டது என்று நிச்சயமான நிலை ஏற்பட்ட பிறகு அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. நல்ல சில நண்பர்கள் அவனுக்குண்டு ஜேர்மனியில். சிரமங்களில் தேடியெடுத்த நண்பர்கள்... அமலன், தயாளன், கதிர், பிரபு என்று இப்படி. அவர்களின் சூழலில்தான் அவன் வாழ விரும்பினான். அது அயலாக இல்லாது போகிறபட்சத்திலும் ஒரே நாடாகவாவது இருப்பது அவசியம். பிரான்ஸ் சென்றால் அவன் விருப்பங்கள் சிதறும். திரும்பி ஜேர்மனிபோனால் வேறு நகரே போய்விடலாம். அவனுக்குத்தான் விருப்பமில்லை. ஜேர்மனி இனி வேண்டாம் என்கிற மாதிரியான ஒரு வைரம் நெஞ்சுள் விழுந்திருந்தது. எண்ணம் தீர்மானமாகியதும் பிரபுவுக்கு தொலைபேசி எடுத்துச் சொன்னான். பிரபுவுக்கு வருத்தம்தான். ஆனாலும் அவன் பிடிவாதத்துக்காய் இணங்கிவிட்டான். அங்கேயுள்ள தன் உறவினன் சந்திரமோகனின் தொலைபேசி எண்ணும் முகவரியும் கொடுத்து தேவையானால் தொடர்பு கொள்ளும்படியும் தான் அவர்கள் வரவைச் சொல்லி வைப்பதாகவும் தெரிவித்தான்.

ராஜேந்திரன் தில்லையைவிட்டு விலகி தானே ஏஜன்ஸியாய்த் தொழிற்படத் துவங்கிய தருணம் அதுதான். குட்டி, மதி, சிங்காரி ஆகியோருடன் சேர்ந்து அவன்தான் ஷீலாவையும் சுதனையும் பிரான்ஸ் அனுப்பினது.

பிரான்ஸ் வந்ததும் அகதிகளுக்கான இயக்ககத்தில் பதிவு செய்துகொண்டு சந்திரமோகனுடைய இடமான நாந்து நகருக்கு வந்துவிட்டார்கள் இருவரும். அங்கே நல்ல வேலையொன்றும் அதிர்ஷ்டவசமாய் விரைவில் கிடைத்தது சுதனுக்கு.

சந்திரமோகன் இரவிலே வேலைக்குப் போவான். காலையிலே திரும்பி மதியம்வரை ஹோலுக்குள் கிடந்து தூங்குவான். காலையில் வேலைக்குப் போய் மாலையில் திரும்புவான் சுதன்.

சுதனுக்கு நல்ல ஞாபகம்.

அது வெண்பனி தூவிய ஒரு ராத்திரி.

சந்திரமோகன் வழக்கம்போல் வேலைக்குப் போயிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போதே குடித்தது வெறிக்கத் தொடங்கியிருந்தது சுதனுக்கு.

எடுத்து வந்திருந்த புதுப்பட கசெற்றை போட்டு.... நிறுத்தி.... றிவைண்ட் பண்ணி.... பாஸ்ற் போர்வேர்ட் செய்து.... பெரிய தகராறே நடந்துகொண்டிருந்தது கூடத்துள்.

ஷீலா காலை ஆறுமணியிலிருந்து மதியம் இரண்டு மணிவரையான ஒரு பகுதி நேர வேலைக்கு அப்போது போய் வரத் துவங்கியிருந்தாள். அவளும் அப்போது ஹோலுக்குள் நின்றிருந்தாள். அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த எதுவுமேயில்லாத உறவு வட்டத்துள் நின்று எதை அவளால் செய்திட முடியும்? அவளுக்கு அந்த வட்டத்தை இன்னும் இறுக்கும் உருவுதட எண்ணமுண்டு. அதற்கு தன்னை இழக்கிறதும் அவளுக்குப் பொருளில்லை. ராஜி எழுத்துரிமையுள்ளவள். அவளுக்கு, கூட்டி வரப்பட்டவள் என்ற உறவைத் தவிர வேறென்ன உண்டு? இவ்வாறான நினைப்புகள் அடிக்கடி தோன்றி அதைவிடக் கூடுதலான ஒரு உறவுக்காய் அவளை அவசரப்படுத்திற்று. அது அன்றைக்கேயானாலும் அவளுக்குச் சம்மதம்.

சாம்பிராணிக் குச்சியின் புகை அடைப்புண்ட அறையில் சுழன்று சுழன்று மேலே கிளர்வதுபோல் போதை ஏறிக்கொண்டிருந்த அந்த மம்மர் வேளையிலும் அந்த சற்றே கட்டையான உருவமும், மாநிறமும், சிறிது முன்வளைந்த நடையும், கனத்த முலைகளும் உடைய தீவுப் பெண்ணே மனத்தில் ஞாபகம் வந்துகொண்டிருந்தாள் அவனிடத்தில். தேகத்தில் எங்கெங்கோ ரத்த ஓட்டம் புடைத்த வேளையிலும் அவனால் அவளையே எண்ண முடிந்திருந்தது.

நாட்கள் இப்படியே அனுங்கியபடி கழிந்து கொண்டிருந்தன.

பகலில் வேலை, மாலையில் குடி, இரவில் அவளின் நினைப்பும் என்றாகியிருந்த நிலையில் அவனுக்கு அறிமுகமே இல்லாத, முகமே தெரியாத யோகேஷின் நினைப்பு அடிக்கடி வந்துவிடும். அவன் வெகு சிரமத்தோடு அதை அடக்கிக் கொள்வான். போதையிலும் அவளையே நினைத்திருக்கிற எனக்கு இப்படியொரு துரோகத்தைச் செய்ய அவளால் எப்படி முடிந்தது என்றெண்ணிக் குமைவான். படுக்கையில் கிடந்து குமுறுவான்.

அன்று தொலைக் காட்சியில் பிரெஞ்சுப் படமொன்று போய்க்கொண்டிருந்தது. ஒருத்தியின் கணவனும் ஒருத்தனின் மனைவியும் களவில் சந்தித்து சேர்க்கையில் ஈடுபட்டிருக்கிற காட்சி. அவனுள் யோகேஷ் ஞாபகமாகிறான். ஒரு தோல்வி.... ஒரு பொறாமை.... ஒரு ஆற்றாமை.... ஒரு கோபம்.... வெடித்து விரிகிறது. மனத்தின் அடியும் நாற் கோணங்களும் அதிர்ந்து தகர்கின்றன.

நிமிர்ந்து பார்க்க.... படுக்கையைத் தட்டி விரித்து விட்டுக் கொண்டிருந்தாள் ஷீலா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து ஆறேழு மாதங்களில் ஜிகு ஜிகுவென்று ஒரு வளர்த்தி. அப்பிள் பழம் அவளுக்கு வெகுவாய்ப் பிடிக்கும். பொழுதுபோக்கே அப்பிள் சாப்பிடுவதுதான். கன்னங்கள்கூட அப்பிளின் மினுமினுப்பாய். இன்னும் மார்பிலும் திரட்சிகளாய் அவையே. ஆகுதியின் மதர்ப்பில் இரண்டு ராஜிகள் செய்யலாம்.

எழுந்துபோய் கிட்ட நின்றான்.

கழுத்து தோளாய் இறக்கும் வளைவின் வாளிப்பில் கை போட்டு மெல்ல நெருடினான்.

அவள் நடப்பதெல்லாம் கவனித்துக்கொண்டுதான் இருந்தாள்.

ஏற்கனவே அவள் மனத்தில் தீர்மானமிருந்தது.

அப்படியொரு உறவுக்குமேலே அவர்களுக்கிடையில் என்ன இருந்தது?

அதுதான் தெரியவேண்டியிருந்தது அவனுக்கு.

வெளியே நடுக்குகிற குளிர்.

உள்ளே வெதுவெதுப்புக் கிளர்த்த மின் கணப்பு போராடியது.

சதிரத்துக்கு தசைச் சூடே வேண்டியிருந்தது.

அந்த வேட்பு ஷீலாவின் உடம்பா? அவளில்லாதது ஒரு கூட்டாளியின் பிரிவுமட்டுமான வெறுமையாகவா இருக்கிறது?

ஷீலா அவ்வளவுதானா?

ஆனால் அவன் அவளுக்கு எல்லாமுமாக இருந்தானென்றே தெரிந்தது. அந்தப் பதினைந்து நாட்களில் இருபத்தைந்து தடவையாவது அவள் போன் எடுத்திருப்பாள். அதில் அவன் ஒரு கிளர்ச்சியும் அடைந்தான். ஆனாலும் அவள் அவனுக்கு குறிப்பிடக்கூடிய உறவில் இல்லை. அவன்அதை விரும்பாவிடினும் அது பரிசோதனையில் கண்டடைந்த உண்மையாக இருந்தது.

தான் அவள்மீது பிரியம் கட்டாயமாகக் கொண்டிருக்கவேண்டும் என்று அவன் கருதினான்.

அதுதான் தன்னுள் இருந்துகொண்டிருக்கும் அந்த எரிதழல் நினைவை அழிக்குமென்பது அவனது திண்ணமாயிருந்தது.

உறவு நிகழ்ந்துவிட்டது உடல்களின் சேர்க்கையால்.

ஆனால் மனப் புணர்ப்பு...?

பெரிய ஆலமரத்தின் கீழே வேறு தாவரங்கள் வளர்வதில்லைப்போல, வேறு உறவுகள் நினைவுகள் ராஜியின் உறவுக்கும் நினைவுக்கும் கீழ் முளைக்க மாட்டாவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரமோகனுடனான பழக்கம் வரவர இறுகி நட்பாய் முகிழ்த்து வந்தது.

அவளோடில்லாத அந்நியோன்யம் அவனோடியிருப்பதாய்த் தோன்றியது ஒரொரு பொழுதில்.

நாந்து நகரம் வசீகரமானது. பாரிஸிலிருந்து சுமார் நானூறு ஐந்நூறு கிலோமீட்டர் தூரமிருக்கும். லுவார் ஆறு சுற்றி வளைத்து ஓடியது அந்நகரத்தை. மறுபுறத்தில் - மேற்காய் - அத்திலாந்திக் சமுத்திரம். சுதனுக்கு அந்த இடம் வெகுவாய்ப் பிடித்திருந்தது. அந்தப் பிரமாண்டத்தின் பகுதிதான் அவன் மண். சமுத்திரக் கரங்கள் சீராட்டுகிற பூமி. லுவார் நதியின் தகதகப்பு பேரழகு செய்தது. அங்கே, ஏனோ, எல்லாம் அழகாய் இருந்தன. வானம், பறவை, மரம், செடி, கொடி, காற்று, நிலவு, மேகம், நட்சத்திரம் என்று எதுவும்தான்.

அங்கே வீடு தேடிக்கொண்டதே சந்திரமோகனின் அழகுணர்வின் வெளிப்பாடாய் ஆயிற்று.

பிரெஞ்சு மொழியில் சந்திரமோகனுக்கு ஆழமான புலமையிருந்தது. எண்பத்தொன்றில் அங்கே வந்ததிலிருந்து விருப்பத்தோடு அம்மொழியைக் கற்றதாய்ச் சொன்னான். பாரிஸில் இயக்கங்களது நடைமுறைகளின் வெறுப்பால் எல்லாவற்றையும் நீங்கி அவ்வளவு தூரம் வந்ததாய்த் தெரிவித்தான்.

நல்லதுதான் என்றிருந்தான் சுதனும்.

அதில் சுய பாதுகாப்பின் திருப்தியது சேர்மானமும் இருந்தது.

ஆனாலும் பகைமைகளும் எதிர்ப்புகளும் பெருமளவு அடங்கியிருந்தன தொடர்ந்து அவனது இயக்க ஈடுபாடின்மை தெரிந்து.

சில விடுமுறைகளின் கோடை மாலைகளில் பக்கத்து ஊர்வரை பஸ்ஸில் சென்று, பின் லுவார் நதிக்கரைப் பாதையில் இருவரும் நடந்து வருவார்கள். அந்த வெகுதூரம் முழுவதும் பேச்சும் இயற்கை ரசிப்பும் தான்.

சந்திரமோகனுக்கு படைப்பிலக்கிய ஆற்றல் இருந்தது. எனினும் ஆழமாய் விமர்சனத் துறைக்குள் இறங்கிக்கொண்டிருந்தான். பின் நவீனத்துவ, மேலைநாட்டு இலக்கியங்களோடு நல்ல பரிச்சயமிருந்தது அவனுக்கு. இத்தனைக்கு அவன் க.பொ.த. உயர்தரம் மட்டுமே கற்றிருந்தான். தாய்மொழிவழிக் கல்வியானதால் ஆங்கிலமும் வெகுவாய்த் தெரியாதிருந்தான். தன் பட்டப்படிப்பு அவன் அறிவு விஸ்தீரணத்தின் முன் குள்ளமடைந்துவிட்டதாய் சுதன் உணர்ந்தான்.

ஆனாலும் தகவல்கள் தவிர்ந்த கருத்தியல் ரீதியான விஷயங்களையும்கூட இருவரும் அந்த நடைகளின்போது உரையாடி அனுபவித்திருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ஒரு கோடையின் உச்சநாளில் எதிர்பாராத விதமாக சைக்கிளோட்டி ஒருத்தியின் அறிமுகம் பாதையில் சம்பவித்தது. அவர்களை இந்திய இளைஞர்களென நினைத்து அணுகிய அவள், அவர்கள் இலங்கையர்களெனத் தெரிந்து விலக முயன்றபோது, சந்திரமோகனின் சரளமான பிரெஞ்சுதான் அவளை அவர்கள் வசம் ஈர்த்து நட்பாக்கியது. அந்த மாதிரி இருவர் வெகுதூரம் நடப்பதை, சூழ்நிலை மறந்து உரையாடுவதை தான் தன் தோட்டத்து வீட்டிலிருந்து பலமுறை பார்த்ததாகச் சொன்னாள் மரி என்கிற அந்தப் பெண்.

அவள் ஆங்கிலம் சிறிது பேசினாள்.

நட்பான சிலநாளில் வீட்டுக்கு அழைத்துப்போய் தாய்க்கு அறிமுகப்படுத்திவைத்தாள். தாயார் சமையற்காரியாக வேலை செய்கிறாளென்றபோது அவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த வசதி சுதனை மலைக்கவைத்தது. அதை அவன் வெளிப்படையாய்த் தெரிவித்தபோது, 'அம்மா, அதோ... தூரத்தில் தெரிகிறதே அந்த அருட் சகோதரர்களின் ஓய்வில்லத்தில்தான் வேலை செய்கிறாள். நகரத்திலானால் சம்பளம் இன்னும் அதிகமாயிருக்கும். பெரிய ஹோட்டலென்றால்.... சொல்லவேவேண்டாம்; நாங்கள் ஆளுக்கொரு கார் வைத்துக்கொள்ள முடியும்' என்றாள் மரி.

தான் காட்டிய அந்த ஓய்வில்லத்தைப் பற்றி பிறிதொரு சமயத்தில் மரி விளக்கினாள்: 'அந்த கிறித்தவ அருட் .சகோதரர்களின் ஓய்வில்லம் உண்மையில் பதினெட்டாம் நூற்றாண்டில் அப்பகுதி சிற்றரசன் ஒருவனால் கட்டப்பட்ட ஒரு கோட்டையாகும். அதைக் கோட்டை என்பதைவிட மாளிகை எனவே தகும். மேலும்.... அது அவனது காதற்கிழத்தி யாருக்காவது கட்டிக்கொடுத்ததாயும்தான் இருக்க முடியும். உரிமை கைமாறிக் கைமாறி கடந்த பத்தாண்டாக கிறித்துவ அருட்சகோதரர்களின் ஓய்வில்லமாக இருக்கிறது. இப்போது சிறிது நவீனம் செய்திருக்கிறார்களெனினும் அதன் பழைமைத் தன்மையை அது அகற்றிவிடவில்லை. செய்ததெல்லாம் அதன் அழிமானத்தைத் தடுப்பதற்காகவே. நான் அம்மாவோடு பலமுறை அங்கே போயிருக்கிறேன். அங்கே பல தொழுகையிடங்களோடு ஒரு சர்ச்கூட உண்டு. கிறிஸ்துமஸ், புது வருடம், பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு போன்ற விசேட பண்டிகைக் காலங்களில் பூஜைக்குப் போவேன். பிரான்சிலுள்ள பல நவீன கட்டிடங்களைவிடவும் பழைமையான அல்லது பழைமையும் புதுமையும் கலந்த அந்த லா இல்லியேர் கட்டிடமே அழகானதாக எனக்கு இன்னமும் தெரிகிறது. ஓய்வில்லமாகவே அது திகழ்ந்தாலும் பயணிகள் தங்குமிடமாகவும்கூட இருந்து வருகிறது. மிகக் கணிசமான ஒரு வாடகையில் நாள், வார, மாதக் கணக்கில் அங்கே அறைகள் கிடைக்கின்றன. இந்திய கிறித்தவ ஊழியகாரராயும், இன்னும் இலங்கை, ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் மிஷனரிகளாயும் ஊழியம் செய்த பலர் இப்போது தம் தள்ளாமையை அங்கே கழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பராமரிப்பு, அப்படியானவொரு அமைதியான சூழலில் வெகு அற்புதமாகக் கவனிக்கப்படுகிறது. இன்னுமொன்று.... அங்கே லாரன்ஸ் என்கிற இலங்கைத் தமிழ் அருட் சகோதரர் ஒருவர் ஓராண்டு வரையில் தங்கியிருந்தார். கத்தோலிக்க திருச்சபையிலிருந்து அவருக்கு உதவி கிடைத்து வந்தது. அவரோடு சிலவேளை பேசியிருக்கிறேன். தோற்றத்தில் இளையவராக இருந்தாலும் அறிவு நிதானம் அன்பில் அவர் உயர்ந்தவர். அவருக்கும் எனக்கும் கிறித்துவம் பற்றிய நவீன கருத்துக்களில் ஒற்றுமையுண்டு நிறைய.'

அந்தப் பெயர் தெரிந்த பெயராய் சில ஞாபகங்களைக் கிளறவே அவரது தற்போதை இருப்பிடம் பற்றி விசாரித்தான் சுதன்.

அங்கேயிருந்து பாரிஸ் போனாரென்றும், இருப்பிடம் பற்றி எதுவும் தெரியாதென்றும் சொல்லிவிட்டாள் மரி.

சிலகாலம் குப்பன் - குப்பின் எல்லைக்கு அப்பால் சிறிது தூரத்துக்கு மரியும் சந்திரமோகனும் பழகிக்கொண்டிருந்தார்கள். அதற்குமேலே சுதனுக்குத் தெரியாது. பின்னால் மரி எங்கோ வேலை நிமித்தம் போய்விட்டதாகச் சந்திரமோகன் சொன்னான்.

பிறகு நேரமின்மை காரணமாக அவர்களும் நடைப்பயிற்சியை நிறுத்திவிட்டதால் மரி பற்றித் தகவல் தெரியாதிருந்தது. நினைவும் மனத்துள் அமிழ்ந்து போய்விட்டது.

அண்மையில் மரியைக் கண்டிருந்தான் கார்க்பூர் சொப்பிங் சென்ரரில்.

வேலையையே விட்டுவிட்டு ஊர்வந்திருந்தாளாம்.

சந்திரமோகனை விசாரித்தாள்.

வேலை விபரம்பற்றி சொன்னான். தற்சமயத்தில் அவன் பாரிஸில் நிற்பதாகவும் அந்த வாரத்தில் வருவானென்றும் தெரிவித்தான்.

நிரந்தர வதிவிட உரிமை பெறாதவர்கள் திருப்பி ஊருக்கு அனுப்பப்படக்கூடும் என்ற நம்பகமான வதந்தியில் பல இலங்கைத் தமிழர் கலங்கித் தவித்துக்கொண்டிருந்தனர். அவர்களின் அவதியையும் ஆசங்கையையும் சந்திரமோகன் வெறுத்தான். தன் வெறுப்பை மறைக்க அவன் எதுவித பிரயாசையும் செய்யவில்லை.

அவனது வெறுப்பை சுதனால் புரிய முடிந்திருந்தது.

அது ஏறக்குறைய ராஜியின் மனநிலையை ஒத்ததென்பதையும் அவன் உணர்ந்தான்.

அவர்களின் ஓட்டம் எது காரணமானதாய் இருந்தாலும் அந்தக் குறியை அடைய அவர்கள் அடைந்த இன்னல்கள்.... பாரியவை! அதற்காகவே அவனாயின் இரக்கப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாந்து நகரிலும் பல இலங்கைக் குடிகள் இருந்தன. அவற்றில் சில சிங்களக் குடிகள். 1972 சேகுவாரா புரட்சிக் காலத்தில் ஓடிவந்து அரசியல் தஞ்சம் பெற்றவை அவை. பாண்டிச்சேரித் தமிழர்களும் நிறையப் பேர் இருந்தனர்.

ஒருவரோடொருவரின் தொடர்பு வெகு அரிது.

தொடர்புறுத்த மொழி தவிர்ந்த, கலாச்சாரம் தவிர்ந்த வேறு அம்சங்கள் இருக்கவில்லை. இந்த அம்சங்களில் அவர்களுக்கு பெரிய பாந்தம் இருந்ததாயும் சொல்வது சிரமம்.

மனிதாபிமான தளத்திலான தொண்டு அடிப்படையில்... சுற்றுச் சூழல் பராமரிப்பு, பசுமை இயக்க முயற்சிகளில்.... வேறு வேறு நாடுகளில் நடைபெறும் சுதந்திரப்போராட்டங்களுக்கான தார்மீக ஆதரவைச் செலுத்துவதில்... உள்நாட்டிலேயே இயங்கும் புரட்சிகரச் சக்திகளுடன் அணிசேர்வதில்.... இவர்கள் இம்மியளவு ஆர்வம் காட்டவில்லை பிரக்ஞைகூட இருக்கவில்லையென்பது தான் சோகம். உதிரிகளாய் ஆகி ஆகி மொழியையும் அவர்கள் மறந்து கொண்டிருந்தார்கள்.

தன் வெறுப்பின் காரணத்தை சந்திரமோகன் தெளிவாகவே தெரிவித்திருந்தான்.

இந்த மனப் போராட்டங்களுள் அவனது சொந்த வாழ்வு பற்றிய சிந்தனை வதை.

அவன் தன் வாழ்வுபற்றிய பிரச்னையைத் தீர்க்க முடிவு செய்தான். பின்னால் அவன் தன் மனப்போராட்டத்தை திராணியுடன் எதிர்கொள்ளலாம்.

ஏறக்குறைய அது நள்ளிரவு.

சுதன் ரெய்னிக்கு போனெடுத்தான்.

"ஷீலாவா? நான் வாற சனிக்கிழமை காலமை ஜேர்மனி வாறன்."

அது நவம்பர் ஆறாம் திகதி.

## 23

ஒரு சனிக்கிழமை காலை ரெய்னியில் பிரபு வீட்டை தன் நண்பன் நாதனின் காரில் சென்றடைந்தான் சுதன். கூட நடா, மார்க்கண்டு, ரூபன்.

பிரபுவின் கடைசிப் பெண் குழந்தை பிரவீணாவை, மறக்காமலிருக்கிறாளா என்று பார்க்க அழைத்தான். சுணங்காமல் வந்து ஒட்டிக்கொண்டுவிட்டாள். ஏறக்குறைய ஒரு வருஷமாகிறது அவனைப் பார்த்து. இருந்தும் தன் சிறிய மனத்திரையில் இன்னும் அவனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்திருக்க முடிந்தது அவளால். அம்மா அப்பா அண்ணா தாத்தா அப்பம்மா மாமாமட்டும் சொல்லுவாள். மற்றதெல்லாம் டொச்தான்.

எட்டு மணியளவில் ஷீலாவின் போன் வந்தது.

"என்ன, ஷீலா?"

"எப்ப இஞ்ச வருவியள்? இஞ்ச வருவியளா, இல்லை நான் அண்ணையோட சேர்ந்து அங்க வரட்டுமா?"

"நாதன், நடா ஆக்கள் வந்திருக்கிறாங்கள். நாதன்ர காரிலதான் வந்தது. அவங்கட வேலை ஒண்டு ரண்டு இருக்கு. முடிஞ்சவுடன அப்பிடியே நானே அங்க வாறன். நீ ஏன் வீணாய் அலையிறாய்?"

"வீண் அலைச்சலில்லை. அண்ணைக்கு மத்தியானத்துக்கு மேலதான்வேலையாம். வெளிக்கிடுகுது அங்க வாறதுதுக்கு.

"சரி, வா. அவன் போகும்போதே திரும்பிப் போயிடு. அவன் வேற எங்கயாலும் போக, பிறகு என்னைக் கரைச்சல் குடுக்கக்கூடாது."

"...சரி!"

"தயாளன்ரயும் கதிரின்ரயும் நம்பர் உன்னிட்ட இருக்கா? இல்லாட்டி அமலனிட்ட இருக்கும். வாங்கி, அடிச்சுச் சொல்லிவிடு நான் வந்திருக்கிற விஷயத்தை."

"ம்!"

இன்னும் தூக்கக் கிறக்கத்தில் இருந்தான் பிரபு.

"ஏன் பிரபு, ராத்திரி சரியாய் நித்திரை கொள்ளேல்லையோ நீயும்?" சுதன் கேட்டான்.

"எங்க நித்திரை கொண்டது? பேர்லின் சுவர் இடிச்சாச்சு, தெரியுமோ? ராப்பூரா சுவரில ஏறி நிண்டு டொச்சுக்காறர் ஒரே கூத்தும் கும்மாளமும்தான். எங்களுக்கே மெய் சிலிர்ப்பாய்ப் போச்சு. மூண்டு மணிக்கு மேலதான் படுத்தது." பதில் சொன்னான் பிரபு.

இரவு, வரும் பாதையிலிருந்த வாகனங்களின் இயக்கத்தில் தெரிந்த ஒரு இயல்பின்மையை சுதன் ஞாபகம் கொண்டான்.

அவனால் நம்பவே முடியவில்லை.

பேர்லின் சுவரென்பது, ஒரு பௌதீக அம்சம் மட்டுமா என்ன? அது இம்சை, அடக்குமுறை, அநீதி, இயைபின்மை போன்ற வேறு குணாம்சங்களும் கொண்டது.

'பேர்லின் சுவரா?... தகர்ந்து போச்சா...?' அவனால் தன் பிரமிப்பைத் தவிர்க்கவே முடியவில்லை.

கூட வந்த நண்பர்களும்கூட அதே நிலையில்.

தயாளனும் கதிரும் வந்து சேர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகவிசாரிப்பின் பின் பேச்சு சுழன்று உலகையே பூகம்பம்போல் குலுக்கிக்கொண்டிருக்கும் பேர்லின் சுவர்த் தகர்ப்புக்கு வந்தது.

தயாளன் சொன்னான்: "கொஞ்சக் காலமாய் கிழக்கு - மேற்கு இணைப்புப்பற்றி ஒரு பேச்சு அரசு உயர்மட்டங்களில் நடந்ததுதான். அதுபற்றி ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பும் முந்தி இஞ்ச ஜேர்மனியில நடந்தது. மேற்கு ஜேர்மன் சனம் கிழக்கைச் சேர்த்துக்கொள்ள சம்மதிச்சுத்தான் வாக்களிச்சதுகள். ஆனாலும்... சுவர்த் தகர்ப்பைப்பற்றி ஆரும் கனவுகூடக் கண்டிருக்கேல்லை."

உள்ளேயிருந்த பிரபுவின் தந்தை.... ஹோலுக்கு வந்தார். ஓரமாய் அமர்ந்து அந்த இளைஞர்களின் பேச்சுக்களைச் சிரத்தையோடு கவனித்துக்கொண்டிருந்தார்.

கதிர் சொன்னான்: "மெய்தான். ஒரு மர்மத்தில் போலத்தானாம் பேர்லின் சுவர் எழும்பினதும். அதுபோல ஒரு மர்மத்தில்தான் அதன் அழிவும் நிகழ்ந்திருக்கு. ஐயா, பேர்லின் சுவரைப் பற்றி ஞாபகமிருந்தால் கொஞ்சம் சொல்லுங்கோவன்."

அவர் சொன்னார்: "வருஷம் மாதம் திகதியெல்லாம் பெரும்பாலும் மறந்து போச்சு. ஏதோ ஞாபகத்தில இருக்கிறத வைச்சுக்கொண்டு சொல்லுறன். 1944ம் ஆண்டு ஏப்ரல் மாசத்தில ஒருநாள் பேர்லின் நகரை ரஷ்யப்படை கைப்பற்றிச்சுது. அண்டைக்குத்தான் கிழக்கு - மேற்கு எண்ட ரண்டு ஜேர்மனிக்கான முதல் அடிக்கல் நாட்டு விழா நடந்தது."

அதற்குமேல் இராமலிங்கத்தின் பேச்சாயன்றி சரித்திரமாய் அனைவரின் செவிகளிலும் பாய்ந்து கொண்டிருந்தது நிகழ்வு.

அன்றைய நாள் உலகமே குதூகலமடைந்த நாள். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மரணத்தினாலான சோகத்தை மேவியும் அக்குதூகலிப்பு அமெரிக்க மக்களை எழுச்சிகொள்ளச் செய்திருந்தது. 1945 மே 7ம் தேதி நேசதேசப் படைகளிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது நாஜிஜேர்மனி. ரைம் என்ற இடத்தில் இச்சரணாகதி கைச்சாத்தானதை ஜேர்மானிய நாட்டு வானொலி அன்று காலை 0809 மணிக்கு தேசமெங்கும் அறிவித்தது. சுமார் இருபத்தெட்டரை லட்சம் நாஜி போர் வீரரையும் ஐந்து லட்சம் ஜேர்மன் பொதுமக்களையும் காவுகொண்ட ஜேர்மானிய முனைப் போர் இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்தது. ஆனாலும் தூரகிழக்கில் இன்னும் யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. நாகசாகி, ஹிரோசிமா நகர்கள் மீது ஓகஸ்டு 15-ம் தேதிய அணுகுண்டு வீச்சோடு ஜப்பான் சரணாகதியாக 5 கோடி உலக மக்களைப் பலிகொண்ட மகாயுத்தம் -II முடிவுக்கு வந்தது. உலக மக்கள் அனைவருமே ஒரு பேரானந்தத்தில் மூழ்கியிருந்த வேளையில் உலகத் தலைவர்கள் முரண்கொண்டு இருந்தனர். ஜேர்மனி துண்டாடப்படவேண்டுமென வற்புறுத்தியது ரஷ்யா. அதன்படி தான் கைப்பற்றிய ஜேர்மன் பகுதியை தன்னிடம் தக்கவைத்துக்கொண்டு அதை தனியரசாக்கும் முயற்சியிலீடுபட்டது. இதைத் தவிர்க்க முடியாது போன நேசதேச அரசுகள் ஜேர்மானிய ஜனநாயகக் குடியரசை தாபிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் சோஷலிச ஜனநாயக ஜேர்மன் குடியரசு ரஷ்யாவினால் தாபிக்கப்ப்டுகிறது. கம்யூனிஸ ஆதிக்கத்தில் வாழ்வதை விரும்பாத பேர்லின் வாசிகள் லட்சம் லட்சமாய் குடியெர்ந்தனர் மேற்கு நோக்கி. இம்மகா புலப் பெயர்வை தடுக்க திட்டமிடப்பட்ட உபாயம்தான் சுவர். சுதந்திரத்தின் வீறு தடுக்கப்பட முடியாததாய் இருந்தது. 1953ல் கிழக்கு ஜேர்மனியில் பெரும் வேலைநிறுத்தம் வெடிக்கிறது. பேர்லின் பொலீஸினால் அதை அடக்க இயலாமல் போகவே ரஷ்யப் படை வரவழைக்கப்படுகிறது. ஈவிரக்கமில்லாமல் அது அடக்கப்பட்டதும் உடனடி நடவடிக்கையாய் சுவர்க் கட்டுமானம் துவங்குகிறது. ஒரு தேசத்தை பௌதீகார்த்தமாய் செயற்கையில் பிளவுபடுத்த எழுப்பப்பட்ட சுவர்தான் புகழ்பெற்ற பேர்லின் சுவர். இற்றைக்கு 33 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அந்தச் சுவர்தான் மக்களின் ஒன்றிணைந்த சக்தியின் முன்னால் தகர்ந்து கிடக்கிறது. எழும்பியது சரித்திரம்; உடைந்தது மகாசரித்திரம்.

அவர்கள்அந்த வலயத்திலிருந்து மீள சிறிதுநேரமாச்சு.

"சுதன், ரீவியைப் பார்..." என்றான் பிரபு.

எல்லோரும் ரீவிநோக்கித் திரும்பினர்.

இரவு நடந்த நிகழ்ச்சிகளின் செய்தித் தொகுப்பு...

சுவரின் மேல் மக்கள் நின்று கூத்தாடிக்கொண்டிருந்தார்கள். சுவரை அணுகுவதற்குத் தடையாய் கிழக்கிலிருந்த முட்கம்பி வலைத் தடுப்பு அழிக்கப்பட்டிருந்தது. அப்போது அழிபட்டுக்கொண்டிருந்தது சுவர். கடப்பாரைகளால், சுத்திகளால் ஆயிரமாயிரம் மக்கள் சுவரை இடித்துக்கொண்டிருந்தனர். சம்பெய்ன்கள் பொங்கி வழிந்தன. சிலர் பியர்... இன்னும் சிலர் விஸ்கி. பலர் சிதறிக் கிடந்த பேர்லின் சுவர்த் துண்டுகளினை ஞாபகச் சின்னங்களாய் பாதுகாக்க கடதாசிகளில் சுற்றி எடுத்துப்போய்க்கொண்டிருந்தனர். ஆங்காங்கே நடனங்கள்... இசைக் கோஷ்டிகளின் முழக்கம்... சில ஆண்களும் பெண்களும் உதட்டு முத்தங்களிட்டுக் களித்தனர். ராட்ஸத ஒளிவிளக்குகள் ஒளியைச் சுவர்மீது பாய்ச்சிக்கொண்டிருந்தன. வீடியோ கமராக்கள் சுழன்றன. உலகெங்கிலுமிருந்து நிருபர்கள் குவிந்துகொண்டிருந்தனர். பிளாஷ் பல்ப்புகள் மின்னின. டெலிவிஷன் கமராக்கள் சுவரில் மக்களில் சுழன்று சுழன்று பதிந்து கொண்டிருந்தன. அது ஒரு உலகம் கண்டு களிக்கும் பெருவிழா.

பார்க்கப்போனால்... உடைந்து கிடக்கும் அந்தக் கணத்தில்தான் நிமிர்ந்து நின்றிருந்ததைவிட அச்சுவர் அழகாய் இருந்ததாய்ப் பட்டது சுதனுக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷீலாவும் அமலனும் வந்தனர்.

ஏதோ ஒரு தடுப்புச் சுவர் விழுந்ததுபோல் அவனை நெருங்க முடியாதிருந்தாள் ஷீலா.

அவன் உன்மத்தம் பிடித்தவனாய் இன்னும் தொலைக்காட்சியில் பார்வை பதித்தபடி.

பெரும் தடைச் சுவர்களெல்லாம் தகர்கிற காலம் அது.

கிழக்கைரோப்பிய கம்யூனிஸ மகா மண்டலங்கள் தகர்ந்ததுபோல் இனி சோவியத்தின் தகர்வும் தவிர்க்கவியலாததாய் இருக்கும். அதுவெல்லாம் அவர்கள் கவனத்தில் பெரிதாயில்லை. பேர்லின் சுவர்த் தகர்ச்சியின் பின்னால், ஜேர்மனி ஒன்றாயிருக்கிற அந்நிலைமை அகதியாக அங்கு குடியேறியவர்களை எவ்வகையில் பாதிப்பதாக இருக்கும் என்பதே அவர்கள் அக்கறையாய் இருந்தது.

கதிர் அதை வெளிவெளியாகவே கேட்டான்.

அதற்கு நண்பனொருவன் தக்க பதிலொன்றைச் சொன்னான்: 'மண்ணீர்ப்பு என்பது எந்தச் சமூகத்துக்கும் இருக்கும். அது ஜேர்மானிய சமூகத்துக்கும் இருக்கிறது. அதன் நுட்ப காரணங்கள் பொருளாதாரம் வரை செறிந்திருக்கின்றன. ஜேர்மானியரின் மண்பற்று சற்று தீவிரமானது. அதனால்தான் யூத இனத்தின்மீதான ஒரு வெறுப்பாக அது வளர்வது அங்கே சாத்தியமாக இருந்தது. எல்லா நாடுகளுமே தாய்நாடு என்று உணர்வு ரீதியில் கொண்டிருந்த வேளையில் தந்தை நாடு என்று சொன்னது ஜேர்மனி. 'எங்கள் தந்தையர் நாடு' என்று பாரதி சொன்னது அதை அடியொட்டித்தான். இப்படி தந்தையர் நாடாய் தம் தேசத்தைப் போற்றிய ஒரு இனம் அதில் பிற இனத்தாரைக் கலக்கவிட்டு பேசாமலிருந்துவிடாது. அதன் அச்சம் பிற வளங்குறைந்த ஐரோப்பிய நாடுகளின் மக்கள்தான். ஆபிரிக்க கறுப்பின மக்கள்மீதும் அவர்களுக்கு துவேஷம் உண்டு. இந்தியர் பாகிஸ்தானியர் இலங்கையர்மீது அந்தளவு இல்லை. ஆனாலும் அவர்கள் தாக்குதலுக்காளான தருணங்களும் இருக்கின்றன. அதைப் பொருட்படுத்தாவிட்டால், இலங்கையர் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இல்லையென்றே படுகிறது."

ஒரு சுமுகமான சூழ்நிலை நிலவுவதுபோல் தெரிய ஷீலா சுதனை நெருங்கினாள். "சுதன், நாங்கள் எப்ப வீட்டுக்குப் போறம்?" என்றாள்.

"நாளைக்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

இந்திய அமைதி காப்புப் படை அடுத்தடுத்த மாதங்களில் இந்தியா திரும்புவது ஊர்ஜிதமாகியிருந்தது. இந்த நிலையில் கண்மூடித்தனமாய் கைது செய்யப்பட்ட இளைஞர்களையும் யுவதிகளையும் இலங்கைப் படையினரிடமின்றி தங்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்று அமைதிப் படையைக் கேட்பதென்ற பொது அபிப்பிராயம் பிறந்திருந்தது.

அன்று மழையில்லாத 1989 மார்கழியின் ஒரு காலை நேரம்.

**எங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்!**

**உங்களை உங்கள் தாயார் போலத்தான், அவர்களை நாங்களும்!**

**ஒவ்வொரு குழந்தையும் வயிற்றில் பத்து மாதங்கள் சுமக்கப்படுகின்றன!**

முத்திரைச் சந்தியிலிருந்து பெண்கள் மட்டுமே கலந்துகொண்ட உணர்ச்சிகரமான ஊர்வலமொன்று கச்சேரி நோக்கி தெளிந்த அக்காலையின் மவுனத்தோடு மெல்ல நகரத் துவங்கிற்று.

சில இளம்பெண்களும் கல்யாணமாகாதவர்களும் இருந்தார்களென்றாலும் அதில் இடம்பெற்றிருந்தவர்களில் பெரும்பான்மையினரும் தாய்மாரும் பாட்டியருமே. சிலர் கைகளில் அவர்களது காணாதுபோன / கைதுசெய்யப்பட்ட பிள்ளைகளினதும் பேரர்களினதும் புகைப்படங்கள் இருந்தன. சிறிய படங்களை பெரிய அட்டையில் ஒட்டி பிடித்திருந்தார்கள்.

ஒரு கூன் விழுந்த பாட்டி தன் பேரனின் போட்டோவொன்றைக் கையில் தூக்கிப்பிடித்து எல்லோருக்கும் காட்டியபடியும் புலம்பியபடியும் சென்று கொண்டிருந்தாள்.

ஆங்காங்கே ட்றக்குகள் ஜீப்கள் சகிதம் இந்திய அமைதிப்படை அமைதியாக நின்று பார்த்துக்கொண்டிருந்தது. வடமாநில யுத்தப் பொறுப்பு ராணுவ அதிகாரியும் இந்தியத் தூதரும் அன்று கோட்டைக்கு வருவதாக இருந்தது. அவர்களைச் சந்தித்து மொத்தமான பேர்களும் கையெழுத்திட்டு காணாதுபோனவரின்/ கைதுசெய்யப்பட்டோரின் பட்டியலுடன் அவர்களின் விடுதலைக் கோரிக்கையையும் நேரில் கையளிப்பதற்காக அந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மையின் அஞ்சாமைக்கு அடையாளமானது அந்த ஊர்வலம்.

சில அழுகைகளும் புலம்பல்களும் மவுனத்தின் வீற்றை இன்னும் ஆழப்படுத்தவும், சோகத்தின் வீச்சை துல்லியப்படுத்திக் காட்டவுமே உதவின.

வாசலில் ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு மாது திடீரென வயிற்றிலும் மாரிலும் அடித்துக் கொண்டு கீழே விழுந்து புலம்பினாள்: "ஈசா.... நீ காணாமலாவது போயிருக்கலாமேயடா! எங்கயாவது உயிரோட இருக்கிறாயெண்டு இருந்திருப்பனே! எண்டைக்காவது உன்னைக் காணுவமெண்ட கனவோட வாழ்ந்திருப்பனே! வேலைக்கெண்டு போன நீ செத்து வந்தியேடா! எங்கட பிள்ளையள.... கடவுளே.... நல்லூரரானே.... ஏன் இப்பிடி காவு வாங்குறாய்?"

அவளைப் பார்த்துக்கொண்டு அதிர்வலைகளை எழுப்பியபடி பேரணி கச்சேரி நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

இருப்புப் பாதை தாண்டியதும் கண்டி வீதியில் ஏறி கச்சேரி கடந்து சுண்டிக்குளி பெண்கள் கல்லூரிச் சந்தியில் ஊர்வலத்தின் நடுவு அமையும் படி சிறகுவிரித்தாற்போல் விரிந்து நின்றது.

பத்து மணிபோல் இந்தியத் தூதுவரும் ராணுவ பொறுப்பதிகாரியும் கச்சேரிக்கு வந்தனர்.

இந்திய தூதுவரிடம் விண்ணப்பம் கையளிக்கப்பட்டது.

"இந்திய அமைதிப்படை அதிகாரிகளுடன் நிச்சயமாக இதுபற்றி பேசி ஆவன செய்வேன். உங்கள் தவிப்பை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. நம்பிக்கையோடு கலைந்து செல்லுங்கள். விரைவில் உங்கள் பிள்ளைகள் உங்களுடன் சேருவார்கள். இந்திய நாட்டின் தூதுவராக இருப்பதால் என் அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிப்பதும் எனது கடமையாகும். நாம் நடத்திய யுத்தம் எம்மை எதிர்த்து ஆயுதமேந்திய குழுவுக்கெதிரானதேயன்றி தமிழ் மக்களுக்கெதிரானதல்ல. இதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்" என்றார் அவர்.

பேரணியில் கலந்துகொண்ட மக்கள் கலையத் துவங்கினர்.

மாதர் ஊர்வலம் தலைநகரில் பெரும் உணர்ச்சிப் பரம்பலை ஏற்படுத்தியிருந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட ராகினியும் குமாரியும் செல்லக்கிளியும் சைக்கிளில் விரைந்து புறப்பட்டனர் வீடுகளுக்கு.

அன்று மாலை அரியாலையிலிருந்து புவனேந்திரன் வீடு வந்தபோது, நடந்த ஊர்வலம்பற்றி விரிசாகச் சொல்லி சிலிர்ப்படைந்தாள் ராகினி.

அவளின் நுட்பமான கவிமனத்தின் ஏதோ ஒரு மூலையை அது பாதித்திருந்ததுபோலும்.

தம்பியாருக்குச் சொல்லி அடங்காமல் அரசியிடம் போய் அங்கும் சொல்லிப் புளகித்தாள். "அந்தப் பேரணியில நான் எதையுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கேல்லை, அரசி. அச்சமில்லை... அச்சமில்லை... அச்சமில்லை... யெண்டு பாரதி சொன்னானே அந்த அச்சமின்மையின்ர நிஜ வடிவத்தைத்தான் பாத்தன். எந்தத் தாய் பயந்தாள்? பேரளவிலதான் அது மௌன ஊர்வலம்... அமைதிப் பேரணி. ஆனால் ஒவ்வொரு தாயின்ர வாயும் கொஞ்சம் அழுதது.... கொஞ்சம் புலம்பிச்சுது.... மிச்சத்துக்கு குமுறிச்சுது. நீ பாத்திருக்கவேணும் அரசி அந்தக் காட்சியை! தாய்மைக்கு முன்னால படை, ஆயுதமெல்லாம் அடங்கிக் கிடந்தது. ஒரு ரஷ்யக் கதை, சொல்லக் கேட்டிருக்கிறன்..."

பாவனையோடு அவள் கதையைச் சொன்னாள்.

வாலாம்பிகையும் அரசியும் வியந்தபடி கவனித்தனர்.

அது இது: ஒருநாள் வீட்டில் தனியாய்க் கிடந்த பச்சைத் தவ்வலொன்றைக் கொத்திக்கொண்ட ஒரு கழுகு, கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு மலை முகட்டிலே கொண்டுபோய் வைத்துவிடுகிறது. அது தெரிந்துகொண்ட தாய் அலற, ஊர் கூடுகிறது. மலை ஏறுவதற்கு அரியதாயிருந்ததால் எவர் முயற்சியும் கைகூடவில்லை. கழுகும் அப்பால் பறந்துவிடுகிறது. நேரம் மாலையாகிறது. இன்னும் சிறிது நேரத்தில் இருட்டிவிடும். இரவுக் குளிரும் பசியும் குழந்தையைக் கொன்றுவிடுமென்று ஊர் பதைக்கிறது தாயினோடு சேர்ந்து. ஆனாலும் மலையேறுபவர்களால்கூட அந்த மலையில் ஏறமுடியாது போய்விடுகிறது. அந்த இறுதி வேளையில் ஒருவர் தன் முயற்சியைத் தொடங்குகிறார். கீழே நிற்பவர்கள் ஆரவாரிக்கின்றனர். உச்சியை அடைந்தவர் குழந்தையோடு பக்குவமாய்க் கீழே இறங்கிவருகிறார். யாரந்த அதிதீரமுள்ளவர் என்றறிய சகலரும் சூழ்கின்றனர். அப்போதுதான் தெரிகிறது அது வேறு யாருமல்ல, அந்தக் குழந்தையின் தாய்தான் என்பது.

போதனை: தாய்ப்பாசம் எதனையும் சாதிக்கும்.

கதையைச் சொல்லி, "அப்படிப்பட்ட தாய்மையின் தீரத்தை இன்று என் கண்ணால் பார்த்தேன், அரசி" என்று பரவசம் பட்டாள்.

அரசி சிரித்தாள். பின், "கல்யாணமே ஆகவில்லை. உனக்கென்ன தாய்மையைப்பற்றித் தெரியும்?" என்று கிண்டலடித்தாள். கூட நின்று கெக்கலி கொட்டிச் சிரித்தான் புவனேந்தி.

"போடா....! தாய்மையைப் பற்றிப் புரிந்துகொள்ள பெண்ணாயிருந்தாலே போதும். அதுகூட அவசியமில்லை, மனிசனாயிருந்தாலே போதும்" என்றாள் ராகினி.

மறுநாள் ராகினி வீட்டுக்கு வருவதாக வரணியிலுள்ள தன் சிநேகிதி ஒருத்திக்குக் கூறியிருந்தாள். புவனேந்தி சும்மாதான் வீட்டிலே இருக்கப் போகிறானென்று அவனையும் வருகிறாயா என்று கேட்டாள்.

ஏற்றி ஓடுவதானால் வருகிறேனென்றான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள், சரி வா என்ன, தன்னை ஏற்றி அவளால் ஓடமுடியாதென்று பின்னடித்தான்.

"பேபியக்காவையே ஏத்தி ஓடியிருக்கிறன். நீயென்ன, கொசு!" என்று அவனையும் கூட்டிக்கொண்டு சைக்கிளோடு ஒழுங்கையில் இறங்கினாள்.

மணல் ஒழுங்கை தாண்டி வந்ததும் புவனேந்தியை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு மிதிக்கத் துவங்கினாள்.

குண்டு குழிகளுக்கு விலகி சீரான வேகத்தில் லாவகமாய் அவள் சைக்கிள் ஓட்டியதை பின்னால் கரியர்'ரிலிருந்த புவனேந்தி நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான்.

கச்சாய் கொடிகாமம் வீதியில் பெரும்பங்கு தாண்டியாகிவிட்டது.

இப்போது நேரே பஸ் நிலையம் தெரிந்துகொண்டிருந்தது.

சற்று நெருங்கிய பிறகுதான் சந்தியில் உள் ஒதுங்கி நிற்கும் ட்றக்கின் கடும் பச்சை வண்ணம் தெரிந்தது. வேகமாய்ச் சென்று கொண்டிருந்ததில் அதைத் தூரத்திலேயே கவனிக்கவில்லை. தெரிந்திருந்தால் ஒழுங்கை எதனுள்ளாவது திரும்பி கவனமீர்க்காமல் சென்றிருக்க முடியும். இனி திரும்ப முடியாத ஒரு எல்லைக்குச் சென்ற பிறகுதான் ஒரு திடுக்காட்டத்தோடு அக்காட்சி அவள் கண்ணில்பட்டது. சுமார் நாற்பது ஐம்பது பேர் கொண்ட கூட்டமும் பஸ் நிலைய வெளியில் நின்றிருந்தது. அந்த வட்டாரத்தைச் சுற்றி வளைத்து திரட்டப்பட்ட தொகை அது என்பது சுலபமாய்ப் புரிந்தது.

"புவனேந்தி!"

"என்ன?"

"முன்னால ஆமி..."

எட்டிப் பார்த்து திகைத்துப் போனான். பல்கலைக் கழக மாணவனாய் புத்தகங்களோடு நிற்கும்போதே அவனுக்கு நெஞ்சு இடிக்கும். அப்போதோ அந்த அடையாளம் ஏதுமின்றி சாரத்தோடுமட்டும். கிளர்ந்தெழுந்த பதற்றத்தில், "இப்ப என்னக்கா செய்யிறது?" என்றான்.

"இனி நிப்பாட்டி திரும்பினால் சந்தேகம்வரும். நிக்காமல் ஓடி புத்தூர்ச் சந்திப் பக்கம் திரும்பப் போறன்" என்றாள் அவள்.

ஒரு ராணுவ ஆள் சைக்கிளை மறித்து கூட்டத்தில் போய் நிற்க கை காட்டினான். தான் பல்கலைக் கழக மாணவனென்று ஏதேதோ பேச முயன்றான் புவனேந்தி. சொன்னால் புரியுமென்ற நிலையுமில்லை. இருவரும் சைக்கிளை ஓரமாய் நிறுத்திவிட்டு கூட்டத்தில் இணைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமாதிரியான நிகழ்வுகள் இயல்பாய் ஆகியிருந்த நிலையிலும் ராகினியின் நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. எதுவோ திரண்டு வந்து தொண்டைக்குழிக்குள் நின்று மூச்சு வாங்கலைத் தடுப்பதுபோல் ஒரு திணறல்.

'முன்னொரு காலத்திலே' அதற்கு கண்டி வீதியென்று பெயர். கொடிகாமம், வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் ஒரு மைய ஸ்தானமாய் அமைந்திருந்தது. அங்கே அக்காலத்தில் புகையிரத நிலையமும் ஒன்று இருந்தது. அப்புராதன கட்டிடத்தின் முன்னால் இன்னும் சில ட்றக்குகள், ஜீப்கள் நின்றிருந்தன. அருகே, இயக்க வாலிபர்களாய்த் தென்பட்ட சில வாலிபர்கள்.

ஏதோ அசம்பாவிதம் அந்தப் பகுதியில் நடந்திருக்கிறது. இல்லையேல் அசம்பாவிதத்துக்கான நிலைமைகள் சந்தேகிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறான நிலைமைகள் ஜோடனையில் உருவாக்கப்படுதலும் உண்டு. வெறும் காட்டிக்கொடுப்பின் விளைவாகவும் அது இடம்பெறுதல் நிகழ்ந்திருக்கிறது.

திடீரென ஒரு குரல் எல்லோரையும் வரிசையில் நிற்கக் கட்டளையிடுகிறது. சிறிதுநேரத்தில் தூர நின்ற ட்றக் ஒன்றிலிருந்து சாக்கினால் மூடப்பட்ட ஒரு உருவத்தை இறக்கி கூட்டிக்கொண்டு வருகிறார்கள் இரண்டு ஆமிக்காரர்.

வரிசையின் நின்றிருந்தவர்களின் நெஞ்சுகள் பம்.... பம்....மென அதிரத் துவங்குகின்றன. ராகினி அந்த மார்கழி மாத மழைநாள்க் குளிர் வியாபகம் கலையாத அந்தச் சூழலிலும் வியர்த்தாள். பலரும்தான் வியர்த்தனர். தலையாட்டியென்றால், ஒருவர் சரித்திரத்தை அந்த வரிசை நிலையில் வைத்து முற்றுப்புள்ளி / தொடர்புள்ளி இடுவதற்குத் தத்துவம் பெற்ற ஆளென்று அங்கே எல்லாருக்கும் தெரிந்திருந்தது.

தலையாட்டி..... ஒரு அதீத சொப்பனத்தின் அடையாளம். சாக்கினால் மூடப்பட்டிருக்கும்; ஆணா பெண்ணா என தெரிவதும் இயலாதது அந்நிலையில்; ஆள் கறுப்பு / சிவப்பு தெரியாது; தெரிவதெல்லாம் மனித உரு என்பதுதான். அதுவும் உச்தேச நிச்சயம்தான். அந்தப் பகுதி ஆளாயிருக்கும் அல்லது அவர்கள் குறிப்பாய்த் தேடும் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தின் சூத்ரதாரி / பங்காளியைத் தெரிந்த ஆளாய் இருக்கும். சாக்கினால் மூடப்பட்டு அடையாளம் முழுவதும் மறைக்கப்படுவதில் மிகுந்த மனோரீதியான அனுகூலம் உண்டு. தனக்கு வேண்டாதவரைப்போலவே வேண்டியவரையும், தான் பெருநன்றி பட்டிருக்கும் ஒருவரையும், ஏன், பெற்ற தாயைக்கூட அந்த நிலையில் மனசாட்சியின் பதற்றமின்றி காட்டிக்கொடுத்துவிடலாம். மூடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கில். முகப் பகுதியில் இரண்டு துவாரங்கள்மட்டும் இடப்பட்டிருக்கும். அதனூடு பார்த்துக்கொண்டே நிற்கவேண்டியதுதான். முன்னாலுள்ள வரிசை மெல்ல... மெல்லவாய்... முன்னகர்ந்து கொண்டிருக்கும். எதிரே நிற்பவருக்கான அந்தச் சில கணங்களில் ஒரு தலையசைவுமட்டும் செய்தால்போதும், அந்த நபரின் சரித்திரத்தின் முற்றுப் புள்ளியாகிவிடும் அது. அதில் எந்தப் பிசகும் நிகழாது

தலையாட்டியைக் கொண்டுவருவது மிக்க அபூர்வமான சமயங்களிலேயே.

தலையாட்டியின் பிரசன்னத்தில் நிரபராதிகள்கூட நிம்மதியாக இருந்துவிட முடியாது. மாற்று இயக்கத்தினர் அல்லது அவர்களின் உற்றார் உறவினர் மட்டுமே அந்த இடத்தில் தப்புதல் நிச்சயம்.

வரிசை நகர கூறப்பட்டது.

இரண்டு ஆமிகள் தலையாட்டியையே பார்த்தபடி. கையில் இயந்திரத் துப்பாக்கி தயார் நிலையில். அதை ஏ.கே. 47 என்று சின்னக் குழந்தையும் தெரிந்திருந்தது.

இனி... நடைமுறை அவர்களுக்குத் தெரியும்.

நில் -

வரிசை நின்றது.

போ -

வரிசை நகர்ந்தது.

தலையாட்டியின் தலையில் இம்மி அசைவில்லை.

பத்துப் பேர்வரையில் மரணக்கோடு தாண்டியாகிவிட்டது.

திடீரென - தலையாட்டியின் தலை அசைகிறது. மறுகணம் பாய்ந்து தலையாட்டியின் எதிரே நின்ற வாலிபனைப் பிடித்து தரதரவென இழுத்துச் சென்று தூர உள்ள ட்றக் ஒன்றில் ஏற்றுகிறார்கள். வரிசை அதிர்ந்து நடுங்குகிறது.

பிடிபட்ட வாலிபன் தான் ஒரு தோட்டக்காரனென்றும் திருமணமானவனென்றும் குழந்தைகூட ஒன்று உளதென்றும் தாய்மீது தெய்வங்கள்மீது சத்தியமிட்டுக் கதறிய கதறல் யார் காதிலும் ஏறாமல் போய்விடுகிறது. அவர்களுக்கு அவன் மொழியைப் புரியும் காதுகள் இல்லையோ?

வரிசை தொடர்ந்து நகர்ந்தது - நின்றது - நகர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முருகா.... முருகா.... அம்மாளாச்சி!'

தலையாட்டியை நெருங்க உச்சாடனம் பெருகியது புவனேந்தியின் மனத்து உள்ளேயாக.

அவன் தலையாட்டியின் சாக்குத் துவாரத்தினூடு உற்றுநோக்குகிறான். இரங்குதலுக்கு இசைகிற கண்களாய், அப்பாவித்தனங்களைப் புரியும் கண்களாய் இருக்கலாமோ அவை? தீக்ஷண்யம் இருள் துளைத்துப் பாய்கிறது. இரண்டு வெண் கோளங்கள் ஒன்றுக்கொன்று மாறுதிசைகளில் உருள்கின்றன. கருமணிகள் மினுங்குகின்றன.

சட்டென ஆகர்ஷப்பட்டதுபோல் தலையாட்டியின் கண் அவன் விழியில் நேருக்குநேராய் மோதுகின்றது. மறுகணம் பிய்த்துக்கொண்டு வேறு திசை ஓடுகிறது. பொறிபட்டதுபோல ஒரு ஞாபகத் துடிப்பு. ஆம், அவனேதான், வாக்கன் நடராஜா!

'அடப் பாவி! தலையை ஆட்டியிடாதேயடா. உன்ர அம்மா பசிச்சு ஓடிவந்த நேரத்திலயெல்லாம் என்ர அம்மா சோறு போட்டு ஆதரிச்சிருக்கிறாவாமடா. அப்ப நீ வயித்தில இருந்துகூட இருக்கலாமடா. தலையாட்டியிடாதயடா. உன்ர நடையால - போக்கால - உன்னை எங்களுக்குப் பிடிக்காமல் போனது. அதுக்காக எங்களை அழிக்க நினைச்சிடாதயடா.'

நில்!

கணங்களின் நகர்வு

போ!

அப்பாடா என ஒரு மெல்லிய ஆசுவாசம் புவனேந்தியின் மனசில்.

'அடுத்தது அக்கா, அக்காவும் இடையூறில்லாமல்...'

நில்!

'அக்காவைத்தான், ஒண்டு..... ரண்டு..... மூண்டு....'

ஏன் இன்னும் போ பிறக்கவில்லை? தலையாட்டியின் தலை அசைந்துவிட்டதா? எச்சரிக்கையெல்லாம் குலைந்து புவனேந்தி திரும்பிப் பார்க்கிறான். தலையாட்டியின் தலை.... அசைகிறது.

'இல்லை.... இல்லை..... எந்த இயக்கத்தோடயும் எனக்குத் தொடர்பில்லை....' ராகினி அவலத்தோடு வழக்குரைக்கிறாள். 'நான் பல்கலைக் கழக மாணவி. இந்த ஆண்டுதான் இறுதிப் பரீட்சை எழுதி வெளியே வந்தேன். நான் உங்களது அதிகாரியோடு பேச வேண்டும்!'

ராகினி தன் கம்பீரம், தன் கர்வம், தன் லட்சணமெல்லாம் குலைந்த ஒரு உயிராக நின்று அதில் துடிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேந்தி சிதறிப்போனான்.

"அக்கா...!"

இடுப்பிலே சப்பாத்து காலொன்று இடியாய் இறங்குகிறது. எற்றுண்டு போய் விழுகிறான், பத்து பதினைந்து அடிகள் தாண்டி.

அவன் பிரக்ஞை தெளிந்து எழும்பியபோது.... சூழ வெறுமை.

புவனேந்தி திசை தெரியாது நிற்கிறான்.

அவனுக்கு அம்மா இல்லை, அப்பா இல்லை, அண்ணன் இல்லை, அக்கா மட்டும்தான். இனி..... அக்காவும் இல்லை.

'எல்லாப் பெண்ணுக்குள்ளும், எல்லா மனிதருக்குள்ளும் தாய்மை இருப்பதாய்ச் சொன்னாயே, அக்கா. உன்னைப் பிடித்துச் சென்றவர்களும் மனிதர்கள்தானே! தலையாட்டி உன்னைக் காட்டிக் கொடுத்தவனும் மனிதன் தானே! ஏன் அவர்களுக்கு இரக்கம் இல்லாது போனது?'

அவள் இயக்கம் எதனோடும் பேச்சுவார்த்தைகூட வைத்திருந்ததில்லையே! பின் எப்படி.....? ஒருவேளை.... அவள் கவிதைகள்.....? அவை மூலமாயே அவள் அடையாளம் காணப்பட்டிருக்கிறாள் தங்கள் பக்கலில் அவள் இல்லையென.

'நீ ஒருமுறை எழுதியிருந்தாய் ஒரு கவிதை. நான் அதைப் பிரசுரிக்கவேண்டாமென்று அப்போதே சொன்னேன். இப்போது பார்த்தாயா? உன் முடிவு விதி... மதி.... சதி... என எதன் வயப்பட்டது?'

புவனேந்தி கவிதையை நினைவு பூண்டான்:

நாய்
எவர்கள் காரணமாய்
மனித இறைச்சி தின்றது
காகம் ஒரு நாள்
மனிதன் தசை
கவ்விப் பறந்தது
மனிதத்தை
ஒரு வல்லூறு
கொத்திச் சாப்பிட்டதை
கண்டதாய்ச் சொன்ன என் தோழி
பின்
யோனி கிழிந்த கிழிந்து
செத்தாள்
எங்கள் மண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வளமும்
எங்களுக்கே என்றவன்
போனதிசை தெரியாது
செம்மணிப் பக்கமாய்ச்
சிலன்
கொண்டு போகப்பட்டிருப்பதை
நரிகளின் ஊளை
ஒரு நள்ளிரவில்
ருசுப்பித்தது
விடியல் தேடும்
விடுதலைக் குருவி நான்
இருளின் உறுமல்
எத்தனை நாளுக்கு?

கவிதையை நினைவு கொள்கையிலேயே அவன் நெஞ்சு கரைந்தது. கண்களின் துளிகள் வெப்புடன் உதிர்ந்தன.

1991
UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25

சூரியன் மஞ்சளாகி, செந்நிறமடைந்து கடற்பரப்பையும் செம்மை செய்திருந்தான். கீழ்த் திசையிலிருந்து கறுத்து வந்து கொண்டிருந்தது. அந்தக் கறுப்பில் அல்லது அது தாண்டிய வேறொரு புள்ளியில் பார்வை நிலைத்திருக்க வெகுநேரம் கடல் முகம் நோக்கி நின்றிருந்தாள் ராஜி.

சேலைத் தலைப்பை தன் வளத்தில் பிய்த்தெடுத்துப் போக முயன்றது வன்காற்று.

கடல் தன் முதுகில் அலை சுமந்திருந்தது. அலைகளென்ற குழந்தைகளுக்காய் 'அம்பாரி ஆனை விளையாட்டு' விளையாடுகிறதா கடல்? 'ஆனை வருகுது ஆனை வருகுது / என்னானை இது? பொன்னானை / எங்கட ராசாவுக்காக வந்த அம்பாரி ஆனை.' மனக் கிடங்கிலிருந்து என்றோ ஒரு காலத்தின் நினைவுக் குரல் சுழித்துக் கிளர்கின்றது. அப்பாவின் குரலாய் அது. கடல்போல், தவழ்ந்துள்ள அவர் முதுகில் ராஜேந்திரன் அலைபோல். காலம் இறப்புக் கணுவில் அறுந்து விடுவதில்லையென்று தெரிந்தது. அது புதைந்து கிடக்கிறது அவ்வளவுதான்.

சொல்லும்படிக்கான உறவுகள் அவளுக்கு இன்னும் அவள் மண்ணில் இருந்தன. மாமி வாலாம்பிகை இருந்தாள், அரசி இருந்தாள், நெருங்கிப் பழகியறியாத அப்பாவழிச் சொந்தங்களும், விஜியின் கல்யாணத்தால் சொந்தமான செல்லத்தம்பு வழி உறவுகளும் இருந்தன. அவர்களுக்கான பயங்களை துன்பங்களை அவள் அறிவாள். அவற்றிலிருந்து அவள் விடுபட்டுப் போனாள். அவளுக்கானவை வேறுவகைச் சோகங்கள். அவளது குணநலன்களும் ஒருவகையான துயர வரிப்புடையவை. வேக சாரதியம் விபத்து வரிப்புடையது போல இது. மேலும், மண்ணை நீங்கி இருந்தாலும் அதன் துன்ப துயரங்கள் அவளை முற்றாக அணுகாதிருந்தன என்றும் சொல்வதற்கில்லை. உணர்வு பூர்வமாய் அனுபவிக்கிற ஒரு வதைபாடு இருந்தது. அந்த மனத்தை என்ன செய்ய? பொன்னானைப் பாட்டு நினைவில் மறைய, இன்னும் அவளுக்குள்ளவை சோகங்களே என்று உருகி கடலலைகளெல்லாம் குவிந்து வந்து கரையில் அறைந்து அழுவனபோல் மோதிக் கொண்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராஜி அக்கா.....!"

அழைப்புக் குரல்கேட்டுத் திரும்பிப் பார்க்க, நேரே பின்னால் தொலைவிலே கனகா நின்றிருந்தாள்.

மெல்ல தாண்டித்தாண்டி அடியெடுத்துச் சென்றாள்.

முகாமிலிருந்து ஆயிரத்து முந்நூற்று ஐம்பது பேரில் இருநூற்றுப் பதின்மூன்று பேர் திரும்பிப் போயிருந்தனர். அது போன வருஷத்தின் முன் பகுதியில் நிகழ்ந்தது. அவர்களோடான அளவளாவுகைகள் அந்தரங்கப் பகிர்வுகள் ஆலோசனைகள் பற்றிய நினைவு எழுந்து மனத்தை ஒரு கணம் வறுத்தெடுத்தது. அவர்கள் போல் இன்னும் பலர் திரும்பியிருக்கக் கூடும். ஆனால் சில இயக்கங்கள் வந்து நாடு போகவேண்டாமெனத் தடுத்துவிட்டிருந்தன. அமைதிப் படை, திரும்பிவிட்டிருந்ததனால் புலிகள் இயக்கம் யாழ் குடாநாட்டின் பெரும் பகுதியையும் பிடித்துவிட்டதாகவும், சிறீலங்கா ராணுவத்துக்கும் அவர்களுக்கும் யுத்த மூலம் தீர்வு என்பதே திட்டமாயிருந்ததால் திரும்பிச் செல்லும் இளைஞர்களையும் யுவதிகளையும் ஆயுதப் போராளிகளாக ஆக்கிவிடுகிற சாத்தியம் உண்டெனவும் காரணம் கூறினர். ஒருசிலர் போகாதிருக்கச் சம்மதித்தனர். சிலர் 'இப்படியே இஞ்சை இருந்திடுறதோ? எங்கட நாட்டுக்குப் போகத்தானே வேணும்!' என்றனர். சிலர் அதுவே வசதிபோல் மௌனமாய் அமைந்து கொண்டனர். இப்போது யோசிக்க அவளுக்குத் தெரிந்தது, அவர்கள் அவ்வாறு தடுக்கப்பட்டது அதே காரணத்துக்காக அல்லாவிடினும், நல்லதேயென்று. வடக்குகிழக்கு மாகாண முதல் அமைச்சர் தமிழீழ பிரகடனத்தை நிறைவேற்றினாலும், அமைதிப் படை இந்தியா திரும்புகையில் கூடவே வந்துவிட்டமை வலுத்த பிரச்னை அங்கு எழக் கூடிய சாத்தியத்தையே காட்டிற்று. இன்னும் பல மாற்று இயக்கத்தினரும், தேர்தலில் போட்டியிட்டு வடக்கு கிழக்கு மாகாண கவுன்ஸிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் கூட மறுபடி இந்திய மண்ணைத் தஞ்சமடைந்திருந்தனர். இவையெல்லாம் நிகழவிருக்கும் பயங்கரங்களுக்கான அறிகுறியெனில் பொதுமக்கள் திரும்பி நாடு சென்று, பின்னர் ஒரு அவதியில் இந்தியா ஓடிவருவது அவசியமில்லையென்று அவள் கருதினாள். அக் கருத்தைக் கொண்டதற்காய் அவள் வருந்தும்படி சூழ்நிலையும் மாறிவிடவில்லை அங்கே.

இன்றும் பல குடிசைகள் வெறுமையாய்க் கிடந்தன. சில அழிநிலையில்.

அவற்றையெல்லாம் தாண்டி முன் பகுதிக்கு வந்தாள் ராஜி.

"என்ன, கப்பல் கவிழ்ந்துபோனமாதிரி யோசனை...?" என்றாள் கனகா.

'கப்பல் கவிழ்ந்த நிலைதான்....' என்று எண்ணிக் கொண்டாள். சொல்லவில்லை. பதிலைச் சிரித்துவைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா வயித்துக்குள்ள குத்துதெண்டு பழையபடி கிடந்து கத்துறா."

ராஜி கனகா வீட்டுக்குச் சென்றாள்.

கனகாவின் தாய் பாயில் கிடந்து உழன்றுகொண்டிருந்தாள், "ஐயோ.... ங்ஆ.... அம்மா...."

குனிந்து ஆதரவாய் அவளைத் தொட்டபடி, "என்னருங்கோ செய்யுது?" என்றாள் ராஜி.

"குத்துது.... ஐயோ.... முந்தி வாறதுதான்.... இந்த முறை தாங்கேலாமல் இருக்கு..... அம்மா....!"

"நான் முந்தியே சொல்லியிருக்கிறன், நான் தாற குளிசை வருத்தத்துக்கான மருந்தில்லை, வலியைக் குறைக்கிறதுக்கானது மட்டும்தானெண்டு. இதுக்கு கட்டாயம் ஆஸ்பத்திரிக்குத்தான் போகவேணும். என்ன வருத்தமெண்டே தெரியேல்லை... காட்டாமல் இருக்கக் கூடாது பாருங்கோ."

"போவம்.... நாளை நாளையிண்டைக்குப் போல. முதல்ல இந்தக் குத்து நிக்கட்டும்.... இப்ப இவளைக் கூட்டிக் கொண்டு போய் முந்தித் தாற குளிசையில ரண்டு குடுத்துவிடும்.... போடி.... போய் வாங்கிக் கொண்டு வா...."

ராஜி கனகாவைக் கூட்டிப்போய் அவளைத் தூங்கப்பண்ணி சற்று ஆறுதல் செய்விக்கக் கூடியதான இரண்டு வலிகுறைப்பு மாத்திரைகளைக் கொடுத்தனுப்பினாள். போனவுடன் ஒரு மாத்திரை... படுக்கிற நேரத்தில் ஒரு மாத்திரை... சோறு சாப்பிட வேண்டாம்... பசிச்சா கஞ்சி காய்ச்சி குடிக்கலாம் அல்லது வறுத்த விசுக்கோத்து.... என்பவைகளை விளக்கமாகச் சொல்லியும்விட்டாள்.

எல்லாம் அவளுக்குப் பழக்கத்தில் வந்திருந்தது. ராஜகருணாதான் சொல்லிக்கொடுத்தான். ஆங்கிலம் தெரிந்திருந்ததால் உபயோகிக்கும் முறைகளைப் பார்த்தும் சில மருந்துகளைக் கொடுக்கத் தெரிந்திருந்தாள். மருத்துவ விதிமுறைகளை மீறாதவகையில், சில மருத்துவ உதவிகள் அந்த இடத்துக்கு அவசியம். மரக்காணம் - பாண்டிச்சேரி நெடும்பாதையில் கீழபுதுப்பட்டில் இருந்தது அந்த முகாம். கடற்கரையோரக் கிராமமாதலால் வீடுகள் தொலைவுக் கொன்றாய், வீதியில் இரண்டு தேநீர்க் கடைகள், ஒரு மளிகைக் கடை, சற்றுத் தள்ளி ஒரு இறைச்சிக் கடை, புதிதாக வந்த ஒரு எஸ்.ரி.டி. பூத், இதுதான் கீழபுதுக்காடு. சுற்றுவட்டாரத்தில் மருத்துவமனையேதும் இல்லை. வைத்திய அவசர உதவிக்கு பாண்டிச்சேரி போகவேண்டும். அதற்கும் ஓட்டோ ரிக்ஷா, கார் என்று எதுவும் சுலபத்தில் கிடைத்துவிடாது. முகாமிலேயே இரண்டொருவர் ரீ.வி.எஸ்-50 வைத்திருந்தார்கள், ஏழெட்டுப் பேர் சைக்கிள் வைத்திருந்தார்கள். அவை ஏதாவதொன்றில் போனால்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இல்லையேல் காலையில் நிறைந்து வழிய வழிய வரும் பஸ்ஸுக்காக காத்திருக்கவேண்டும். இதனால் முகாமிலேயே உடல் வெப்ப நிலையைப் பார்க்க..... இரத்த அழுத்தத்தை அறிய தேவையான உபகரணங்கள் வாங்கி வைத்திருந்தார்கள். காயம், காய்ச்சல், இருமல், தலைவலி, வயிற்றுப் போக்கு, வாந்தி போன்ற வருத்தங்களுக்குத் தேவையான மருத்துகளும் அங்கே இருந்தன. ராஜகருணா போன ஆண்டு ஒரு சித்திரை மாதத்தில் இங்கிலாந்து போய்ச் சேர்ந்துவிட்டான். அதனால் அப்பொறுப்பை அவனுக்கு உதவியாக இருந்த ராஜி ஏற்கும்படியாயிற்று. ஈழ ஏதிலியர் கழகத்திலிருந்து அவளிடம் அப் பொறுப்பைக் கொடுப்பதற்கு முன் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றே ஒன்றுதான். அவளுக்கு வெளிநாடு செல்கிற உத்தேசம் உண்டா? உடனடியாக நாடு திரும்புகிற எண்ணம் இருக்கிறதா? - என்பதே அது. பதில் கூற அவளுக்கு ஒரு வார காலம் அவகாசம் அளிக்கப்பட்டது. அப்பொறுப்பை அவள் ஏற்க சித்தமென்றால் சென்னை வரலாமென்றும், பதிலை தலைமை அலுவலக பொறுப்பாளரிடம் கூறிவிட்டு தேவையான மருந்து வகைகளை வாங்கிச் செல்லலாமென்றும் சொல்லப்பட்டது.

அவள் கமலாவைச் சந்தித்து அதுபற்றி யோசிக்க அவசர அவசரமாக இரண்டாம் நாளே சென்னை சென்றாள்.

கமலா முடிவெடுக்கும் பொறுப்பை அவள் மீதே விட்டுவிட்டு, சில வழிகளை ஒதுக்கிக் காட்டினாள்.

அவளுக்கு அந்தப் பொறுப்பு திருப்தியளிக்கிறதா என்று யோசிக்கச் சொன்னாள் முதலில்.

ஆம், அதில் அவளுக்குத் திருப்தி இருந்தது.

அவள் எப்போதுமே சுதனோடு போகப்போவதில்லையா என்று இரண்டாவதாய்த் தீர்மானிக்கச் சொன்னாள்.

அதுபற்றி யோசித்துக்கொண்டிருந்த வேளையில் திடீரென அங்கு வந்து சேர்ந்தான் யோகேஷ். அவள் அதிகம் அவனோடு பேசவில்லை. மறுநாள் வரும்படியும் அவனோடு நிறையப் பேச இருப்பதாகவும் மட்டும் சொல்லியனுப்பினாள்.

அன்றிரவு அவள் யோகேஷ் பற்றி முடிவு எடுத்தாக வேண்டும். அது, சுதன் பற்றி எடுக்கும் முடிவுக்கு பலம் சேர்ப்பதாய் இருக்கவேண்டும்.

அவள் எரிந்து சாம்பராகி, அதிலிருந்து போனிக்ஸாய் மீண்ட கதை அது.

அதற்குமேல் அதுபற்றி யோசிக்க முடியாதபடி மறுபடி கனகா வந்தாள். "அம்மாவுக்கு மருந்தும் சத்தியோட போயிட்டுது. இப்ப என்ன செய்ய?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

கனகாவின் தாயார் உறங்கத் துவங்கியதும் ராஜி வீடு திரும்பினாள். அப்போது நேரம் பத்தரை மணி.

அவளுடைய அறையாகவும் மருந்து வைக்கிற இடமாகவும் ஒரு பகுதி தடுத்து அடைக்கப்பட்டிருந்தது. உள்ளே ஒரு சாக்குக் கட்டில். அரவமின்றிப் போய்ப் படுத்துக்கொண்டாள்.

அந்த நேரத்தில் உறங்கிவிட அவள் தன்னைப் பழக்கப்படுத்தி இருந்தாள். ஆனால் அன்று தூக்கம் வர மறுத்தது; வந்தபோது நிலைக்க மறுத்தது. இடையே கனவொன்று கண்டிருந்தாள். அசிங்கமான கனவுதான். அது மாதிரியான கனவுகள் முன்பும் அவளிடத்தில் தோற்றம் காட்டியிருக்கின்றன. அவை பெரும்பாலும் இடம் நபர் பற்றிய விஷயங்களில் தெளிவின்மையுடன் இருக்கும். இப்போதைய கனவுகள் மிக்க தெளிவோடிருந்தன. இவையெல்லாம் ஒன்றைத் தெளிவுபடுத்தின: அவள் வாழ்வின் ஒரு பகுதியாக யோகேஷ் ஆகிக்கொண்டிருந்தான் என்பதே அது.

அந்தப் புரிதல் அவளுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது; அதிர்ச்சியாயிருந்தது. அதை நினைக்கும் அந்த மனது தன்னதில்லையென்று நம்ப முனைந்தாள். அது சாதாரணமானதில்லை. தனக்கே தன்னை ஒழித்துக்கொள்வது சிரமம். ஆகவே அதை தன்னில் புதிதாய் விளையும் ஒரு அங்கமாக கற்பனை செய்ய முயன்றாள்.

அது சாத்தியமானது.

ஆனாலும் அவளளவில் அது அருவருப்பானதாக, அவலட்சணமானதாக, விரும்பத் தகாததாகவே ஆகிக் கொண்டிருந்தது. அப்போதும் அவளுள் ஒரு திருப்தி, அது கழித்துவிடப்படக்கூடிய நகம்போலவே வளர்ந்து கொண்டிருக்கிறதென்று. வெட்ட முயன்றபோதுதான் தெரிந்தது, அது மெய்யில் சேர்ந்து வளர்ந்துவிடும் கழலையாக ஆகியிருந்ததென்பது.

வலியில்லாமல் அதை நீக்குவது கடினம்.

அப்போதெல்லாம் அவளுக்கு அதுதான் விசாரமாயிருந்தது.

அவளுக்கு வலிக்கும் சரி; கழலைக்கு வலிக்குமா?

கழலைக்கு வலிக்கும் / வலிக்காததுபற்றிய கரிசனம் அவளுக்கு ஏன்?

சின்ன வயதிலே விளையாட்டுதனம் பண்ணியிருக்கிறாள் பல்லி பிடித்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்தில் சுவரோரமாக மேசை. அப்போது அவர்கள் வீட்டுக்கு மின்சாரம் இருக்கவில்லை. பெற்றோமாக்ஸ் விளக்கு கொளுத்துவார்கள். குமிழ் போன்ற பட்டுச் சாம்பரில் மோதும் மண்ணெண்ணெய் ஆவியில் பளீரென்று பால் போல் வெளிச்சம் வெண்சுவரெங்கும் விசிறும். அதற்காகவேதான் ஆரம்பத்தில் இளம்பச்சை நிறத்தில் இருந்த சுவர் வர்ணத்தை வெள்ளை நிறத்துக்கு, இல்லை இளநீல வர்ணத்துக்கு அப்பா மாற்றுவித்தார். மழை காலத்தில் அந்தப் பளீர் வெளிச்சத்தில் ஆகர்ஷமாகி நூறு நூறாய்ப் புற்றீசல் பறந்து வந்து தீக் கொழுந்துப் பழம் உண்ண விளக்கை மோதும். கொதி கண்ணாடியில் சுடுபட்டு பொசுங்கி மாயும். சுவரில் மோதி சிறகை உதிர்த்துவிட்டு மீண்டும் கறையான் அவதாரம் எடுத்து நிலத்தில் விழுந்து ஊர்வதுமுண்டு. அவை உடனடியாகச் செத்திருக்காது; ஆனாலும் விரைவில் செத்துவிடும் என்று தோன்ற அவள் நெஞ்சு வதையும். கறையானுக்கு மறுபடி பூ இறக்கைகள் முளைக்குமா? அது ஈசலாக சுழல் அவதாரம் எடுக்குமா? அவள் அக்கேள்விகளில் மூழ்கி பதிலுக்குத் தவமிருக்கையில் அவள் தவம் கலைக்கும் எத்தனத்தில் சுவரின் ஒரு கோணத்திலிருந்து முயற்சியொன்று பிறந்து கொண்டிருக்கும். அவளும் தவம் கலைந்து போவாள், தன் நினைவை வேறொன்றுக்கு இழந்து.

பல்லி ஒரு விசித்திர வடிவம். முதலையின் குறுவடிவம் கூட அதுதான். சுவரின் பளீர் வெளிச்சத்தில் ஆகர்ஷமாகி வந்து மோதி தமையிழக்காமல் சுவரில் பிடிமானமாகி ஒட்டிக் கொண்டு இருக்கும் பூச்சியை நோக்கிய திசையில் மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து உறைந்துபோய் நின்றிருக்கும் கிட்ட.

தூரத்தில் அது இரையைக் குறிவைத்துப் பதுங்கும்போதே ஒரு தற்சுதாரிப்புக்குப்போல வால் பாம்பாய் வளைந்து வளைந்து அசைந்து ஓயும். ஈசலை அல்லது வேறு பூச்சியை பாய்ச்சலெல்லைக்கு நெருங்கியதும் அது சுவராகவே உறைந்து போகும் ஒரு சில கணங்களுக்கு. இரை தரிசன வெளியின் பிரக்யோதத்தில். அது அப்போது அதன் சாபமாகியிருக்கும். மறுகணத்தில் பல்லி குபீரென்று பாய்ந்து ஒரே கவ்வாகக் கவ்விவிடும் சிறகுகளினோடு. மனத்துள் அவளுக்கு தும் மென்னும்.

அது ஒருவகைக் குரூர ரசனைதான்.

அதை அவள் விருப்பமின்றியெனினும் செய்யத்தான் செய்தாள்.

பல்லியின் சலனமற்ற உறைவு, அதன் பொப்பி நிற்கும் வட்டக் கண்கள், குறைப் பிரசவத்தின் முழுவளர்ச்சி பெறாத சருமத் திசுக்களால் ஆனதாய் வழுவழுப்பான மேற்றோல் யாவும் அருவருப்பாகவே ஆரம்பத்தில் இருந்திருக்கின்றன. அந்த அவதானம் பல்லிமீதுகூட இல்லை. பல்லியினது இரைமீதான குறியின் உக்கிரமும், அது தோற்கிறபோது அடுத்த இரையைத் தேடும் வேட்கையின் தீவிரமும், தன்னைச் சுதாரித்து இயக்கும் முறைமையுமென எல்லாம்தான் பிடித்திருந்ததென இப்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. சைவ உணவுப் பிராணிபோல் அத்தனை சாத்வீகப் பார்வையோடு இருக்கிற நிலை அவளுக்கு சகிக்கக்கூடியதாகவே இருக்கும். ஆனால் அது உஷாரடைந்து பதுங்கி மெத்தென்ற தன் கால்களினால் அதிர்வலையேதும் கிளம்பிவிடாத ஜாக்கிரதத்துடன் நடந்து வரும்போது அச்சகிப்புத் தன்மை விடைபெற்றுவிடும். மேல் நிகழ்வுகளால் வெறுப்புப் பிறந்துவிடும். அதன் இயல்பே அதுதான், படைப்பே அப்படித்தான் என்று தெரிந்திருந்தும் அந்தக் கணங்களில் வெறுப்பு கிளம்பிவிடுவதை அவளால் தடுக்க முடிவதில்லை.

அந்த ஜந்துவைத் தெரிவதன் முன் கெவுளியென்ற பெயரில் சப்த உருவாய் அவள் அறிந்திருக்கிறாள். கிக் கிக் கிக்.... கென்று சப்தமெழுகிற பொழுதில் அம்மா அதுபோல் எதனிலாயினும் டொக் டொக் டொக்.... கென்று தட்டி ஒலியெழுப்புவாள். அது எப்போது சத்தமெழுப்புமென்று யார் சொல்லமுடியும்? அதுபோல் ஏன் அது சப்திக்கிறதென்றும் சொல்லிவிட முடியாது. ஆனால் அதன் சப்தம் கவனம்படும் பல பொழுதுகளிலும் அம்மா திசையை அனுமானித்துக்கொண்டு பஞ்சாங்கமெடுத்துப் பலன் பார்த்திருக்கிறாள். அதன் பின்னால் அவள் வருத்தத்தோடேயே பெரும்பாலும் இருந்திருக்கிறாள். அது நல்ல பலன் சொல்லவில்லையென எண்ணிக் கொள்வாள் ராஜி. அதனால் கெவுளிச் சத்தம் பெரும்பாலும் அங்கே விரும்பப்பட்டிருந்ததில்லை. அவளின் தீவிர வெறுப்புக்கு அதன் சப்த வெறுப்பு ஊற்றுக்கண்ணாய் இருந்திருக்கலாம்.

அதனோடு ஒரு வன்விளையாட்டுக்கு அவளுக்கு ஆசை வரும். அதுபோலவே மெதுமெதுவாக, அதுபோல சலனக் கீற்றேதும் அதன் பெந்துக் கண்ணில் பட்டுவிடாத அவதானத்துடன் கையை நீட்டிச் சென்று அதை குபீரென்ற ஒரு அசைப்பில் தொட்டுவிடும் தூரத்தில் அசலனமாய் வைத்திருப்பாள். மிகுந்த எச்சரிக்கைத்தனத்தை அது தன் இரையில் கொண்டிருக்கும் தருணத்தில், அதைவிடவும் கூடிய ஜாக்கிரதத்துடன் அதை வெல்லும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறாள். பல சமயங்களிலும் அது தோல்வியைத்தான் விளைத்திருக்கிறது. ஆமைபோல் பொத்திய வெறும் கைதான் சுவற்றில் பொத்.... தென மோதி நிற்கும். ஒரு கணத்தின் பின்னப் பொழுதில் அது கையின் விரற் கூடு கவிவதன் முன்னம் தப்பியோடிவிட்டிருக்கும். தூரப் போயிருந்து தன்னை விரற் கூட்டில் அகப்படுத்த முனைந்த ராட்சத உருவத்தைப் பார்க்கும். அந்தப் பார்வையில் வேக வெற்றியினாலான ஜெய பிரகாசம் அடித்ததா அல்லது இரை தப்பிவிட்ட ஏமாற்றத்தின் வலி இருந்ததா என்று அவளால் என்றுமே புரிந்துகொள்ள முடிந்ததில்லை.

ஆனால் ஒன்றிரண்டு சமயங்களில் பல்லியை தன் விரற் கூட்டில் அகப்படுத்தியுமிருக்கிறாள். ஆனால் அடைத்தே வைத்துவிடமாட்டாள். ஜெயத்தின் உறுதி பெற்றதும் ஏதாவதொரு விரல் இடுக்கினூடாய் அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்தோட விட்டுவிடுவாள். சிலவேளைகளில் கைக்குள் அதன் துண்டொன்று கழன்று விழுந்து விடும். பார்த்தால்.... அது.... பல்லியின் வால்லாய் இருக்கும். அது துள்ளித் துடித்து கதி கலங்க அடித்துவிடும். அவளும் துள்ளித் துடித்து கதி கலங்கிப் போவாள். எந்த துணிப்புண்ட அங்கத்தின் உயிர் வீச்சையும் அவள் எக்காலத்தும் பார்த்ததில்லை. பாவம் பாவம் பாவம்.... என்று வெகுநேரத்துக்குப் பதைத்து நிற்பாள். தன் ஆபத்துக் கணத்தில் பல்லி தன் வாலைக் கழற்றிவிட்டு தப்பியோடிவிடுமென்பது வெகுவாய் வளர்ந்த பிறகுதான் தெரிந்தாள். அதுவரையில் தான் ஒரு பல்லியின் வாலை அறுத்து இம்சை புரிந்துவிட்டதாய் நினைத்து அவள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். எந்தவொரு வாலறுந்த பல்லியையாவது காணும்போதும் அதுதான் தன்னால் வாலறுக்கப்பட்ட பல்லியோவென இரக்கத்தோடு பார்த்திருக்கிறாள். அதனால் ஒரு பூச்சி எங்கிருந்தாவது வந்து இலகுவில் அதற்கு இரையாக அகப்பட்டுக்கொள்ளக் கூடாதாவென்று எண்ணிய நாட்கள் அவளுக்குண்டு. அப்போது, பூச்சிக்காக வழக்கத்தில் படும் இரக்கம் பல்லி மீதேறி நின்றிருக்கும்.

வளர்ந்த பின்னால் பல்லியின் சாதுர்யமாய் அதை அவள் புரிந்தாள். அப்போதும் பல்லிக்குப்போல் வாலுக்கு வலிக்குமா என்பதோ, பல்லிக்கு வால் மறுபடி முளைக்குமா என்பதோ தெரிந்ததில்லை.

அதுபோல் கழலைக்கு வலிக்கும் / வலிக்காதது தெரியாமலேதான் அப்போதும் இருந்தாள். ஆனாலும் நீக்கிவிடுகிற திண்ணம் நெஞ்சில் விழுந்துவிட்டிருந்தது. கழலைக்கு வலிக்காமல் இருக்கவேண்டும் என்பதுதான் அவள் அவதானம்.

இரண்டு வருடங்கள் சென்னை வராமலிருந்தாள். பின்னால் ராஜகருணாவுடன் கூடிக்கொண்டு சென்னை வந்தபோது அவன் தேடிவந்து தன்னைச் சந்தித்து விடக்கூடாதென்ற அவதானம் கொண்டிருந்தாள் தான். அதுவே பிறகு நினைப்புகளுக்கிடமாகி கஜுராஹோ ஆசைகளை வளர்த்தது. ஆனாலும் தன் இடம்பற்றிய தகவலெதையும் அவள் அவன் அறியக்கூடிய இடத்தில் விட்டுவைக்கவில்லை. அந்தமுறை வந்தபோதில் அவளின் மகாவிதி, அவள் எழும்பிவரக் காத்துக்கொண்டிருந்ததுபோல் அதிகாலையிலேயே வந்து கமலாவோடு பேசிக்கொண்டிருந்தது.

அவளைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டான். அவ்வளவு நேரமாகியும் அவள் வந்துள்ள விஷயத்தைச் சொல்லாமல் தன்னை விரைவில் அனுப்பிவிடுவதற்குப்போல் காலையில் அடையாறு போக வேண்டியிருக்கிறது எனச் சொல்லிக்கொண்டிருந்தாளே என்பதுபோல் கமலாவைப் பார்த்தான் யோகேஷ்.

அவளின் இக்கட்டான நிலையைத் தீர்ப்பதற்குப் போல, "எனக்கு தேத்தண்ணி இல்லையா, கமலாக்கா?" என்று கேட்டு வைத்தாள் ராஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரு, எடுத்துக்கொண்டு வாறன்" என்று குசினிக்கு விரைந்துவிட்டாள் கமலா.

யோகேஷ் அவளைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும், பின்னால் தொய்ந்த முகமும் ஏக்கமான பார்வையும் விரக்தியான முகபாவமும் கொண்டு இயல்பிலாகி விட்டான்.

அவளுக்கு எரிச்சலாக வந்தது.

ஏதோ அவள் காதலிப்பதாகக் கூறி கடைசியில் ஏமாற்றிவிட்டதுபோல....

அவள் அதைத் தெளிவுபடுத்திவிட வேண்டும்.

அவனுக்கு. தனக்கும்.

அவள் ஒரொரு பொழுதில் பாவனை செய்திருக்கிறாள்தான். பாவனை, நிஜமில்லை. அவள் அவனைச் சேர எண்ணியதில் அவள் அவனை ஏற்றுக்கொண்ட வாக்குறுதி இருக்கிறதா, என்ன?

கழலைக்கு நோகாமல் கழலையைக் கழற்றுவதுதான் அவள் எண்ணம்.

அதற்கும் அவள் அவனோடு பேசித்தான் ஆகவேண்டியிருந்தது. அதனால் சுமுகநிலை ஏற்படுத்த, 'காலையிலதான் வந்தியா, யோகேஷ்?' என்றாள்.

'ம்...!'

'உண்மையில பாத்தால், நான்தான் நீ இப்ப இருக்கிற மாதிரியான நிலைமையில விரக்தியோடயும், வெறுப்போடயும், கோபத்தோடயும் இருந்திருக்கவேணும். ஒரு மாசத்தில வந்திடுறன் எண்டு சொல்லியிட்டுப் போய் நீதான் வராமலிருந்தாய்.'

'நான் வந்து தேடினன்.' சேலையில் அவளின் தோற்றம் காட்டிய வசிகரத்தில் சற்றே சலனம் பதித்தபடி அவன் சொன்னான்.

'அது ஒரு வருஷத்துக்குப் பிறகு...'

'அதுக்கு முதல் வர அம்மா விடேல்லை.'

'பிறகு விட்டாதானே?'

'அப்ப அவ உயிரோட இல்லை.'

அவள் திடுக்கிட்டாள்.

'மாமி...?'

அவன் தலையசைத்தான்.

'எப்பிடி...?'

'வருத்தம்தான்.'

அவள் அவனது சோகத்தை நினைத்து கவலைப்பட்டாள். அவளை நட்டாற்றில் விட்ட பாவம் அவனுக்கில்லைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அப்படியே அவள் விட்டுவிடக்கூடாது. அவன், அவளறிந்தவரையில் அற்புதமான படகோட்டி. அப்போதுகூட காயம்பட்டிருந்த ஒரு முக்கியமான போராளியை அங்கே வைத்திய சிகிச்சைக்காகக் கொண்டு வரவே வந்ததாகத்தான் அவன் கமலாவுக்கும் சொல்லிக் கொண்டிருந்தான். அவனை அவள் காப்பாற்றவே வேண்டும்.

அவள் வழி யோசித்தாள்.

அவளுள் இழத்தலில் அடைதலின் இன்னோர் சாத்தியத்துக்கான கதவம் திறந்தது தெரிந்தது.

அது ஒருவகையில் கழலையை அகற்றுதலும் ஆகும்.

அவள் கேட்டாள்: 'யோகேஷ்... நீ மகாபலிபுரம் போயிருக்கிறியா?'

'ஓ... போயிருக்கிறனே!'

'நான் பாத்ததேயில்லை. வாறியா ஒருநாளைக்குப் போய் வருவம்?'

'எப்ப?'

'உனக்கு நேரமிருந்தா... இண்டைக்கே!'

அவன் யோசிக்க ஏதுமில்லை.

அவர்கள் மகாபலிபுரம் புறப்பட்டபோது பதினொரு மணி.

சிற்பத்தின் அதி கலா நேர்த்திகளில் ராஜி மனந்தோய்ந்து நின்றாள். பஞ்சரதம், கற்கோயில், நடராச நடனம் என்று ஒவ்வொரு சிலைகளிலும் வெகுநேரம் செலவிட்டாள். சூரியன் விழுந்தான். அப்போதும் அவள் தாகம் தணியாமல். அவளின் கலாமோகம் மட்டுமா அது? அவள் மனத்தில் ஏதோ திண்ணம் வளர்ந்து கண்களின்வழியே அது புலப்படுகிறதா?

அவள் கடற்கரையில் நடக்கத் துவங்கினாள்.

அவன் துணையாய் அவள் பக்கத்தில்.

கடன் மல்லை வெகு தொலைவான தோற்றம்.

'இதில கொஞ்சநேரம் இருப்பமா, யோகேஷ்?'

அவனும் கூட அமர்ந்தான்.

இருள இருள கடலையே பார்த்துக்கொண்டிருந்தாள். அலை அசைவது தெரிந்தது.

சற்றுத் தூரத்தில் மாளிகைக் கணக்கிலுள்ள பெரிய பெரிய வீடுகள் எல்லாம் ஒளிவெள்ளத்தில். வீதியில் கனரக வாகனங்கள் இரைந்து சென்றன. சிறிய வாகனங்களின் வெளிச்சப் புள்ளிகள் ஓடின.

ஒரு பகுதியில் வெளிச்சப் புழக்கம்; மறுபகுதியில் இறுகும் இருள்; இடையில் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பில் சூதலேறிற்று.

'கிட்ட வா, யோகேஷ். பேசவேணும்.'

அது கழலையைக் கழற்றுகிற திடம் மட்டுமில்லை.

வாழ்ந்துவிட்டு தபஸ்வினியாகிற கனலும்.

அதை அவன் உணர்ந்தானா?

'இப்ப போனால்தான் பஸ் பிடிக்கலாம், ராஜி. இல்லாட்டி கடற்கரையில படுத்திட்டு காலமைதான் போக வேணும்' என்றான் அவன்.

அவள் பேசாமலிருந்தாள் வெகுநேரம்.

பின் மெதுவாக, 'லொட்ஜில றூம் எடுக்கலாம்தானே?' என்று கேட்டாள்.

'எடுக்கலாம்.'

'அப்ப பேசாமலிரு. இந்த இருட்டு எனக்குப் பிடிச்சிருக்கு. இருட்டலை பிடிச்சிருக்கு. அலை தழுவப் போய் நிக்கவேணும்போல இருக்கு. என்னைப் பிடிச்சுக்கொண்டு வா, யோகேஷ்' என்று அவள் எழுந்தாள்.

அவன் அதிசயம் மேவ மேவ அவள் சொன்னபடியே செய்தான்.

அவன் வலிமைக்கு அவள் சிறிதுசிறிதாய் ஆளாகிக் கொண்டு போய்...

லொட்ஜ் அறையினில் ஜன்னலூடாக விடிந்து வருவது தெரிந்தது.

அவள் தன்னை உடுத்திக்கொண்டு வந்து படுத்தாள்.

அவன் சிகரெட் புகைத்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தான்.

அவள் மெல்ல அவன் தோளில் கைபோட்டு, 'திருப்தியா, யோகேஷ்?' என்றாள்.

அவன் திடுக்கிட்டான்.

என்ன அர்த்தம் இதற்கு?

'ராஜி...' அவன் குரல் வழிந்து சரிந்தது.

அவள் சிரித்தாள். கிணுகிணுப்பாகத்தான். பின் சொன்னாள்: 'நீ எவ்வளவோ உதவி செய்திருக்கிறாய் எனக்கு. அதுக்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்ய ஏலும்? என்னை உனக்குத் தாறது எனக்கும் விருப்பம்தான். இப்ப என்ர வாழ்வில ஒருத்தரும் இல்லை. சுதன்... நீ... ஒருத்தரும்தான் இல்லை.'

அவன் தான் கல்லாகி வருவதாக உணர்ந்தான்.

அவள் தொடர்ந்து கொண்டிருந்தாள்: 'நீ கமலாக்கா விட்ட சொன்னது சரிதான். நான் எனக்குப் பயந்துதான் ஒழிச்சுத் திரிஞ்சன். எனக்குள்ளயும் கசடு இருந்தது அப்ப. இப்ப இல்லை. என்னை எரிக்கிறதுமூலமாய் அதையும் நான் எரிச்சிருக்கிறன். அதைப்போல நீயும் உன்ர கசடுகளை எரிச்சிருப்பாயெண்டு நினைக்கிறேன். இதுவரையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்காட்டி..... இப்ப எரிச்சிடு. இந்த நொடியிலயிருந்து நாங்கள் புதிதாய்ப் பிறந்திருக்கிறம், யோகேஷ். மறந்திடாத. போ..... போய்க் குளிச்சிட்டு வெளிக்கிடு.'

சென்னை வந்து சேரும்வரை அவனுக்கு பேச்சு வரவில்லை.

அன்று மதியமளவில் யோகேஷ் விடைபெற்றுவிட்டான்.

மறுநாள் அவள் ஈழ ஏதிலியர் தலைமை அலுவலகம் போனாள். தன் ஒப்புதலைச் சொன்னாள்.

இப்ப... ஒரு முகாம் முழுவதற்கும் மருத்துவ வசதியில் இலுப்பைப்பூச் சர்க்கரையாய்.

தன்னையெரித்து ஆசையை எரிப்பதென்பது லேசில் சாத்தியப்படக் கூடியதில்லை.

அவள் மெல்ல தூங்கத் தொடங்கினாள்.

## 27

கனகாவின் தாய் பாண்டிச்சேரி ஜிப்மேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

வயிற்று வலிக்குக் காரணமான கட்டி கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அதை அகற்றுவதற்கான சத்திர சிகிச்சை நடந்திருந்தது. கட்டியில் புற்று நோய்க் கூறுகளேதும் உளதாவென அறிய ஆராய்ச்சிக்காக அதை பம்பாய் ஆய்வு கூடத்துக்கு அனுப்பியிருந்தார்கள்.

சத்திர சிகிச்சை சுகமாக முடிந்திருப்பினும் ஆய்வுகூட அறிக்கை எப்படியிருக்குமோ என்ற கவலையிலும் பயத்திலும் பூரண மகிழ்ச்சி கனகாவினதோ தாயாரினதோ முகத்தில் பெரிதாய் விகாசம் காட்டவில்லை. இன்னும் இரண்டு மூன்று நாளில் அவளை வீடு போகலாமென்றிருந்தார்கள். நோயாளியின் நடமாட்டத்தை அதுவரை குறைக்கச்சொல்லியிருந்தார்கள். அதனால் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கான பொழுது தவிர படுக்கையிலேயே கிடந்தாள் கனகாவின் தாய். அவளுக்கு உதவ ஒரு நாளுக்கு ஒருவராக ராஜியும் கனகாவும் மாறி மாறி ஆஸ்பத்திரியில் தங்கினார்கள்.

ராஜி கூடத் தங்கிய ஒருநாள் காலை கோப்பி வாங்க கன்ரீன் போன இடத்திலே, முந்திய முந்திய நாட்களில் பார்வையில் அறிமுகமாகியிருந்த வேறொரு பெண்ணோடு விரிந்த உரையாடலில், யாரோ தீவு மனிசனாம், கூட்டணிச் சுந்தரலிங்கமாமே, அவருக்காகவே தான் அப்போது தேத்தண்ணி வாங்க வந்ததாக அவள் தெரிவிக்க நேர்கையில், கேட்ட ராஜி திடுக்கிட்டுப் போகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டணிச் சுந்தரலிங்கமா?

ஓ, அப்பிடித்தான் சொல்லிச்சினம்.

என்ன அவருக்கு?

அம்மாவுக்கு போலத்தான், இதய வருத்தம்.

தானும் வருவதாக இதய நோயாளிகள் பிரிவுக்குக் கூடிச் சென்றாள் ராஜி.

கட்டிலில் தொலைவை வெறித்தபடி அமர்ந்திருந்தார் சுந்தரம்.

ஏக்குற்றிருத்தல் என்பது அதுதானா?

பார்த்த கணத்திலேயே நெஞ்சை உருக்கிக்கொண்டு குபீரென ஓடிவந்த கண்ணீர் அவள் விழிக்கோளங்களை நிறைத்தது.

சுந்தரலிங்கம் மெலிந்துபோயிருந்தார். மேனியெங்கம் ஒரு வெளிறல் பாரித்திருந்தது. ஒன்று ஒன்றரை மாத தாடி. அவரை அந்தக் கோலத்தில் என்றும் பார்த்ததில்லை அவள்.

"மாமா!" என்றாள்.

தன்னையாக இருக்காது என்று நிச்சயமுடன்போல் மெதுவாகத் திரும்பினார்.

திடுக்கிட்டுப் போனார். "ராஜீ...!"

கண்கள் கூர்ந்து, நெற்றி சுருங்கி.... உன்னிப்பு கவிந்து நம்பவியலாத்தனத்தைக் காட்டிற்று. எங்கே இருந்தாள் இதுவரை? எப்படி அறிந்தாள்? நிறைய பேச அவர் துடித்தார். ஆனாலும் அமரச்சொல்லி மௌனமாய் கட்டிலின் ஓரத்தைக் காட்டினார்.

அமர்ந்தவாறே அவரது சுகவீனம் பற்றி விசாரித்தாள்.

இருதய வருத்தமென்றார்.

மேலும் அவள் விபரம் கேட்க, ஒருநாள் மயங்கி விழுந்துபோன தன்னை ஆஸ்பத்திரி கொண்டுசென்றதாகக் கூறினார்; இதயத் துடிப்பு வெகுவாய்க் குறைந்து நின்று விடுமோவென்று அச்சப்படும்படி ஆகிவிட்டிருந்ததைத் தெரிவித்தார்; பின்னொரு நாளில் படுவேகமாய் இயங்கி வெடித்துச் சிதறும் நிலை ஏற்பட்டதென்றார்; இதயத் துடிப்பை நெறிப்படுத்தும் 'பேஸ் மேக்கர்' என்ற கருவி பொருத்தவேண்டியிருப்பதைச் சொன்னார்.

அலைபோல ஓய்வறியாதவர் சுந்தரம். அவருக்கும் நோய் வரலாமென்பது.... வாழ்வின் வெருட்டுதலாய்ப் பட்டது அவளுக்கு.

'பேஸ் மேக்கர் பொருத்த வேணுமாம்!'

காலத்தின் மூஞ்சியில் சிரிப்பதுபோலத்தான் விச்சிராந்தியாயிருந்து கடைவாயில் ஒரு எள்ளல் இழையோட அதைச் சொல்லியிருந்தார். அது எவருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துவதாயுமில்லை; அவருக்கே அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டுவதாய்க் காணப்படவில்லை. அதில் அவருக்கு வருத்தமில்லை என்பதே உணர்வுகளின் தொகுப்பைச் செய்ய மீதியாய் வந்தது.

"எப்ப பொருத்துவினம்?"

"அதை நாங்கள்தான் வாங்கிக் குடுக்கவேணும்."

"அதுக்கு இங்கத்திய காசு அம்பதாயிரமாவது வேணுமாம். ம்ச்....!" என்று சலித்தார் ஒருமுறை. "அது அவ்வளவுதான். பேசை மேக் பண்ணி இன்னும் கொஞ்சக்காலம் வாழுற பெரிய ஆசையொண்டும் எனக்கில்லை. ரத்தாசயம் ஒருநாளைக்கு நிக்கத்தான் போகுது எல்லாருக்குமே. அது மெல்ல மெல்லமாய் என்ர விஷயத்தில வரும். சாவை எதிர்பாத்துக்கொண்டு நான் நாளைக் கழிக்க வேணும். அதுதான் வித்தியாசம். அதாலயென்ன? அவதி.... அவஸ்தை.... ஆசை.... எதுவும் எனக்கு இல்லை."

அவர் உடைந்து போனார்தான்.

பேஸ் மேக்கரும் பொருந்த தயங்கும்.

அவரில் வாழ்வை நீட்டுவது கடினமென்று அதற்கும் தெரிந்துவிடும்.

உடைவு அவ்வளவு வெளிப்படையாய் இருந்தது.

அவர் உடைவின் காரணம் பழைய நீதவான் சொல்லி அவளுக்குத் தெரியும்தான். ஆனால் இப்போது தெரிந்தது அது தாண்டியும் ஒரு தோல்வியின் வலி அவருக்குள் இருந்தமை. அதைச் சுற்றிச்சுற்றி அடுக்கப்பட்டவையே அவரின் ஏனைய சோகங்கள். ஆனால் அந்த மைய சோகம் / தோல்வி எது?

பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் அவருக்கு ஆர்வமேற்பட்டிருந்ததாய்த் தோன்றியது.

தேநீர் குடிக்கச் சொன்னார்.

பிளாஸ்க்கிலிருந்து வார்த்து அவருக்கும் கொடுத்து தானும் குடித்தாள்.

குடித்த பின் கேட்டார்: "எப்பிடியிருக்கிறீர், பிள்ளை?"

"நல்லாயிருக்கிறன், மாமா."

"இப்ப எங்க இருக்கிறீர்?"

சொல்லலாமாவென்று யோசித்தாள். பிறகு.... இனி ஒழிய காரணமேதுமில்லை. கழலையைக் கழற்றியாகிவிட்டது. தானுமே ஒரு புனர்ஜென்மமாய் தீக்குளித்தாயிற்று. இனி யாருக்கும் ஒழியவேண்டியதில்லை. மேலும் அவர் அவள்போல சிந்திக்கக்கூடியவர். பொய்க்கப்படக் கூடாதவர்கூட.

"கீழ புதுப்பட்டு முகாமில, மாமா. இஞ்ச.... கிட்டத்தான்."

பெருவலி பெற்றுள்ள ஊனைழ அப்போது அவர் நினைத்திருக்கக் கூடும். அந்த நிலைமைக்கு வேறு பதில் இல்லை. புருஷனாய் ஆகியிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவன் வெளிநாட்டில்; தாய் வெளிநாட்டில்; தங்கையும் அவள் கணவனும் வெளி நாட்டில்; அவள் அகதி முகாமில்! அவளுக்கேன் இந்தக் கதி? விரும்பியே ஏற்றாள் என்பது தக்க சமாதானமா?

அதை அவர் சொன்னார். சொல்லிவிட்டு, "எண்பத்தேழில நானும் அம்மாவுமாய் உம்மைப் பாக்க வந்தது தெரியுமோ?" என்று கேட்டார்.

"தெரியும், மாமா. சுதனோட கூடிக்கொண்டு ஜேர்மனி போறதில்லையெண்டு தீர்மானிச்சவுடன ராமேஸ்வரம் போனன். அங்க தெரிஞ்சுது. நீங்கள் இன்னும் இஞ்ச நிக்கிற விஷயம் எண்பத்தொன்பதிலதான் தெரியும். ராஜநாயகம் சேர் சொன்னார். ஆனால் சுகவீனம்பற்றி ஒண்டும் அவர் சொல்லேல்லை."

"போன வருஷம்தானே சுகமில்லாமல் வந்தது. அதுசரி.... ராஜநாயகத்தாரைத் தெரியுமோ உமக்கும்?"

"தெரியும்."

"எப்பிடி ஆஸ்பத்திரிக்கு வந்தது...?" கேட்டார்.

விரிவாகச் சொன்னாள் எல்லாம்.

நிமிர்ந்து அவளது கண்களைப் பார்த்தார். அவர் அவளைப் பார்த்தார் என்பதைவிடவும் தன் கண்களை அவள் பார்க்கும்படி காட்டினார் என்பதே உண்மையில் நிகழ்ந்தது. அவர் கண்கள் பனித்து மின்னலடித்தன. அது மகிழ்ச்சியா, பெருமிதமா அல்லது இரண்டுமேயா என்ற வரையறைத் தெளிவின்மையாயிருந்தது.

அவரால் முடியாது போனமை விபத்து. அந்த எண்பத்தேழு மே மாத பிற்பகுதியில் ஈழ ஏதிலியர் கழகத்தின் பொறுப்பாளரோடு பேசவென சென்றவர், அவர் வெளியூர் போயிருப்பது தெரிந்துகொண்டு மறுபடி வருவதாகக் கூறித் திரும்பினார். பின், சரஸ்வதி வீட்டில் மகேஸ்வரி தங்கிக்கொள்ள திருச்சி செல்லப்போவதாகக் கூறிக்கொண்டு சென்றார். அது ஒரு ஓகஸ்டு மாத மாலை வேளை. ரேடியோச் செய்தி கேட்டுக் கொண்டிருந்தவருக்கு குலைப்பன் காய்ச்சலாகி உடம்பை உலுப்பத் துவங்கியிருந்தது. திருச்சி மருத்துவ மனையில் வெகுகாலம் கிடந்து அழுந்தினார். நட்பு காரணமாய் கணேசலிங்கம்தான் எல்லாம் பார்த்தார். அவர் வீடு திரும்பியும் உடம்பு தேற வெகுகாலமாயிற்று. பாண்டிச்சேரியிலிருந்த மகளின் கணவன் எப்படியோ இங்கிலாந்து போய்ச் சேர்ந்துவிட, தனியேயிருந்த மகளுக்கும் குழந்தைகளுக்கும் துணையாக இருக்கவும் அவருக்கே மருத்துவ வசதி பெறவும் உடல் நலத்தைத் தேற்றவும் உதவியாயிருக்குமென்று கூறி இங்கே கூட்டிவந்துவிட்டார்.

அவருக்கு அந்த இடம் பிடித்திருந்தது. கடலும் கரையும் வெளியும் காற்றும் நீலமும் குருவிகளும் தீவை உணரவைத்தன. ஆனாலும் உள்ளுள்ளாய் அவர் தேய்ந்துகொண்டு போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தைந்து வருஷமாய் அரசியலில் நேரடியாய்க் கலந்துபோயிருந்தவர் அந்த மூன்று வருஷ காலத்தில்தான் பார்வையாளராக தன்னை சுயநியமனம் செய்து கொண்டது.

சொல்லிவிட்டு அவர் முடித்துக் கொண்டார்.

நாட்டு நிலைமைபற்றி அவர் அதிகம் பேச முனையவில்லையென்பதை அவள் கண்டாள்.

அவரைத் தேற்ற அவள் முனைந்தாள் : "ஒண்டையும் யோசிச்சு வருத்தப்படாதயுங்கோ, மாமா. அரசியும் மாமியும் சுகமாய் இருப்பினம். எல்லாத்துக்கும் அம்மாள் இருக்கிறாள். எங்கட கையில என்ன இருக்கு? நாங்கள் சூத்திரதாரிகளில்லை; பாதிப்பாளர்கள்தான்."

அவர் அதற்கும் 'ம்ச்!' என்றார்.

மறுநாள் மதியச் சாப்பாட்டுடன் வருவதாகச் சொல்லிக்கொண்டு கனகாவின் தாயார் வார்ட்டுக்கு நடந்தாள்.

## 28

கனகாவின் தாயார் முகாம் சென்ற பிறகும் வாரத்தின் பெரும்பாலான நாட்களிலும் வந்து சுந்தரலிங்கத்தைப் பார்த்து தேவையான உதவிகளைச் செய்துகொடுத்துப் போய்க்கொண்டிருந்தாள் ராஜி. அவற்றுள் முக்கியமாக அவர் கருதியது, அவள் பிளாஸ்க் நிறைய தேநீர் போட்டு வந்து கொடுத்துப் போவதைத்தான்.

அவர் தடைசொல்லிக்கொண்டிருப்பார் என்பதால் முக்கியமான ஒரு காரியத்தை அவர் அறியாமலேதான் நிறைவேற்றிக்கொண்டிருந்தாள். நலிந்தோருக்கான இலவச சிகிச்சைத் திட்டத்தில் அவருக்கு இதயத் துடிப்பைச் சீர்செய்யும் கருவி கிடைப்பது நிச்சயமானதன் பின்னர்தான் அவருக்கு அவள் விஷயத்தையே சொன்னது. கருவி விரைவில் பொருத்தப்படவிருந்தது.

ஒருநாள் ராஜி சொன்னாள்: "பேஸ் மேக்கர் பொருத்தின பிறகு உங்களைக் கூட்டிக்கொண்டு போய் முகாமில வைச்சு நான்தான் பாக்கப்போறன், மாமா. ஆனால்.... அங்க கொஞ்சம் வசதிக் குறைவுகள் இருக்கும்.... நீங்கள் கொஞ்சம் சமாளிச்சுக்கொள்ளவேணும்."

"இல்லை, பிள்ளை. இதுக்கு மேலயும் நான் உமக்குப் பாரமாய் இருக்கக்கூடாது."

"இதையெல்லாம் பாரமெண்டு சொல்லக்கூடாது, மாமா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி, அப்பிடியெண்டாலும் இப்போதைக்கு வேண்டாம். நான் வந்தால் என்னோட உமக்கு பாதி நேரம் கழிஞ்சிடும். நீர் எங்கட மக்களின்ர சேவையில கவனம் பிசகாமல் ஈடுபடுகிறதுதான் எனக்கு விருப்பம். நான் என்னைக் கவனிச்சுக்கொள்ளுவன்."

சிறிது பொறுத்து கேட்டாள்: "ஊருக்குப் போனால் என்ன, மாமா?"

கேட்கக்கூடாததையா கேட்டாள்? ஏன் அவரிடத்தில் அந்த ஸ்தம்பிதம்?

அவருக்குத் தெரியும், ஏறக்குறைய பத்தாயிரம் பேர்வரையிலான அகதிகள் நாடு திரும்பிவிட்டிருந்தமை. இன்னொரு ஐயாயிரம் பேர்வரையில் மண்டபம் நாடு திரும்புவோர் முகாமில் தங்கியிருந்தனர். விரைவில் அவர்கள் நாடு திரும்ப ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. நிர்ப்பந்தங்களினால் அவர்கள் வெளியேறுவதாக ஒரு சர்ச்சை அப்போதும் இருந்துகொண்டிருந்தது. ஆனால் அதிகமானவர்கள் விரும்பியே நாடு திரும்பிக்கொண்டிருந்தனர். அவர்கள் புனர்வாழ்வுக்கு உதவும் வசீகரமான இரு அரசுகளினதும் உத்தரவாதம் அந்த விரும்பத்தை அவர்களில் விளைத்திருந்தது.

போன ஆண்டு தையில் இந்திய அமைதி காப்புப் படை திரும்பிவிட்டிருந்தது. படை விலக்கம் ஆரம்பிக்கிறவேளையிலேயே முகாங்களை அமைக்க விடுதலைப் புலிகள் இயக்கம் தொடங்கியிருந்தது. தீர்க்கமாய் அவர்கள் அமைதிப் படையிடம் இழந்த பகுதிகள் மீளப்பட்டிருந்தன. ஆனால் படை விலகல் யுத்த முடிவின் அம்சமாய் இல்லாமல் யுத்த சக்திகளின் மாற்றமாய் இருந்ததையே அங்கு அவதானிக்க முடிந்திருந்தது. யாருக்கும் அது உவப்பில்லாத நிலை. அதை அப்போதும் கலையாத மோனமும், அப்போதும் கலையாத ஸ்தம்பிதமும் நிரூபணமாக்கிக்கொண்டிருந்தன. அமைதியும் சமாதானமும் சுதந்திரமும் இன்னும் தொலைவிலானதாய். கந்தகப் புகை மணம் காற்றில் விரவாத கணம் இன்னும் அபூர்வமாய். அமைதிப் பேச்சின் முன்னேற்பாடுகள்தான் ஸ்தம்பித்தன. இரு தரப்பாரும் தத்தம் ஆதிக்கப் பிரதேச எல்லைகள் அத்துமீறப்படாத வகையில் புதைத்த கண்ணி வெடி கணக்கிலடங்காது என்றும், தென்னாசியாவிலேயே அதிக அளவிலானதாய் முதலிடத்தைக் கொண்டிருந்ததென்றும் சர்வதேச மனித உரிமைக் கழகமும், சர்வதேச மன்னிப்புச் சபையும், செஞ்சிலுவைச் சங்கமும் கூறிக்கொண்டிருந்தன. அந்த மண்ணில் வாழ்வுக்காகத் திரும்பிவிட முடியுமா?

காலத்தின் கேள்வியொன்றுக்கு அரசியல் அவதானி ஒருவன் பதில் சொல்லினான்:

ஒன்று : ஜெயவர்த்தனா அரசியலிலிருந்து ஒதுங்கி அதுவரை பிரதமராயிருந்த பிரேமதாச நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகியிருந்தார். அவர் மண்ணின் புதல்வர்கள் என்ற தீவிர அமைப்பின் குரலுக்கு செவி சாய்ப்பவராய் இருந்தார். போர் நிறுத்தம் / சமாதானம் போன்ற அம்சங்களுக்கும் மண்ணின் புதல்வர்கள் குரலுக்கும் நிறைய முரண் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்தொன்பதில், புலிகளை எதிர்கொள்ளும் பிரச்னை / அவசியம் அற்றிருந்த சிறீலங்கா படையினரின் ஒரே கைங்கர்யம் தெற்கின் தீவிரவாத அமைப்பான ஜே.வி.பி.யைச் சேர்ந்த சுமார் அறுபதினாயிரம் சிங்கள யுவர்களையும் யுவதிகளையும் கொன்றொழித்தமைதான். இவ்வகையில் பெருவல்லமை பெற்றுவந்த ஜனதா விமுக்தி பெரமுன அரசியலதிகாரத்துக்குப் போட்டியிடக்கூடிய மாற்றுச் சக்தியாக உருவாகும் வாய்ப்பு முற்றாக இல்லாதொழிக்கப்பட்டது. அதன் முக்கிய தலைவரான விஜேவீரவும் படையினரால் கொல்லப்பட்டார். இது இரண்டாவது.

மூன்று : முனஸின் பயங்கரவாதம் இதே காலப் பகுதியில் கிழக்கிலங்கையில் பயங்கர தாண்டவமாடிக்கொண்டிருந்தது. எஸ்.ரி.எஃப் என்கிற படையின் முகாமையான முனஸின் பயங்கர நடவடிக்கைகளால் சித்திரவதைக் கூடங்கள், கொலைகள், ரயர் போட்டு எரித்தல்கள் நாட்டின் பிரத்தியேக அடையாளங்களாகின.

நான்கு : மாற்று இயக்கத்தினர் அமைதிப் படை இந்தியா திரும்பும்போதே கூடிச் சென்றுவிட்டிருந்தனர். வடக்கு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர்களும் இன்னும் முக்கிய தலைவர்களின் குடும்பங்களும் கொழும்பில் தஞ்சமாகியிருந்தனர்.

ஐந்து: வங்கிக்கு பணமெடுக்கவென்றும், உறவினரைப் பார்க்கவென்றும் காரணம் கூறிக்கொண்டு புலிகளிடம் அனுமதி பெற்று கொழும்பு வருவதும் தங்குவதும் திரும்புவதும் என பல் நிலைப்பட்ட இயங்குதல்கள் நடந்து கொண்டிருந்தன கிளாலி படகேரி மூலமாக.

ஆறு: பவுண் திட்டம் நடைமுறையிலிருந்தது. போராட்ட இயக்கத்துக்கு பவுண் கொடுத்த ரசீது வைத்திருப்போரின் விண்ணப்பம் பரிசீலனைகளில் முன்னுரிமை பெற்றிருந்தன. பவுண் கொடுத்த ரசீதும் உணவு அட்டையும் உயிருக்கு அடுத்தபடி மதிப்பு வாய்ந்தவையாய் மக்களால் அப்போது கருதப்பட்டிருந்தன.

ஏழு : கால காலமாய் வறுமையில் உழன்றுகொண்டிருந்த சில குடும்பங்கள் கொழும்பிலும் வவுனியாவிலும் இருந்து மிக்க செல்வச் செழிப்பான வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருந்தன. அவற்றின் பின்னணியில் பல பயங்கர உண்மைகள் இருந்தன. வெளியில் பேச பலரும் பயந்திருந்தனர்.

எட்டு: இத்தனைக்கிடையிலும்.... ஆறு லட்சம் தமிழர் வடக்கில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

கேட்டு, காலம் ஏங்கி, பின் சிரித்து நழுவியது.

இந்த நிலைமையிலும் அவரால் அங்கு போய் வாழ்ந்து விட முடியும். அரசியும் வாலாம்பிகையும் இன்னும் அங்குதான் இருந்து கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும்....

அவர் கண்கள் கலங்கின.

தெரிந்திருந்தும் அவள், "ஏன், மாமா?" என்றாள்.

அவர் நிமிர்ந்து அவளைப் பார்த்தார். தன் மௌனத்தை உடைக்கப் பிரயத்தனப்பட்டார். அவரது பற்களின் கிட்டுகையில், தாடையின் இறுக்கத்தில், எச்சிலைக் கூட்டி விழுங்கி குரல்வளையை ஈரலிப் பிக்க முயல மிடறு உயர்ந்து தாழ்ந்து தடுமாறியதில் உணர்வெறிகையின் வீச்சை உணர்ந்தாள் அவள். நினைத்தால் அவள் அவரின் அந்த நிலைமையை மாற்றலாம். ஆனால் அவரின் ஆழ்மனத்தில் இருக்கும் அந்தத் தோல்வியை, அதன் காரணத்தை அவளுக்கு அறியவேண்டியிருந்தது. பேசாமலே இருந்தாள்.

"ம்ஹூம்...!" என்று பெருமூச்செறிந்து ஆசுவாசப்பட்டார் அவர்.

சூழலில் வெகு குறைவான சலனங்கள். பலர் தூங்கினர். சிலர் ஆழ் யோசனைகளில். வெளியிலும் அந்தப் பொழுதுக்கு இயல்பில்லாத நிசப்தம் ஏகமும் விரிந்திருந்தது.

அவர் தனக்கே சொல்வதுபோலத்தான் சொன்னார்: "இஞ்சயே நிக்கிற எண்ணத்தோட நான் வரேல்லை. வந்த இடத்திலதான் நிக்கும்படியாய்ப் போச்சு. ஏதாவது விதத்தில எங்கட மக்களுக்குப் பயன்பட வேணுமெண்டுதான் இஞ்ச நிக்கிறதுக்கு பிறகு விருப்பப்பட்டன். ஆனால் காலம் விடேல்லை. மனத்தால.... உடம்பால.... நான் நோயாளியாகிப்போனன். நான் வந்தபோதேக்கயிருந்த நிலமை இப்ப இஞ்ச இல்லை. பெருமளவில மாறியிட்டுது. தலைகீழாய் மாறியிட்டுது எண்டும் சொல்லலாம். இலங்கைச் சனமெண்டால் கலாட்டாக்காறர், ஊதாரியள், கொழுப்புப்பிடிச்சவை எண்ட ஒரு எண்ணம் இங்கத்தச் சனங்களின்ர மனசில வந்திட்டுது. ஞாயமாயும் ஞாயமில்லாமலும்தான்இது. இத ஏன் சொல்லுறனெண்டால்.... இந்த நிலைமையில கூட எனக்கு போறதுக்கான மனநிலை வருகுதில்லை."

நேரம் நொடி நொடியாய் நகர்ந்து கொண்டிருந்தது.

அவரை அதிகம் உணர்ச்சிவசப்பட விடுவதற்கு அவள் விரும்பவில்லைத்தான். ஆனாலும் உணர்ச்சிகளை அடக்கிவைத்துப் பொருமுகிற ஆபத்து அதைவிட அதிகமென்பதை அவள் தெரிந்திருந்தாள். அதுவரை அவருக்கு வடிகாலாய் அமையக்கூடிய நபர் கிடைக்காதிருந்திருக்கக் கூடும். அதுவே இதயப் பாதிப்பாய் வெளிப்பட்டிருப்பதும் சாத்தியம்தான். அவள் மௌத்தில் கணங்களைக் கழித்தாள்.

அவர் மேலே அதிகம் பேசியதாகச் சொல்லமுடியாது. ஒருவகைப் புலம்பலாக அது இருந்தது. அவர் பட்ட மன உபாதையை, சித்திரவதையை அவரது முகபாவத்திலும் அவர் கையாண்ட மொழியிலும் தெளிவுறத் தெரிந்தாள் ராஜி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னால அங்க போக ஏலாது...”

“போகமாட்டன்...”

“ஆனால் இஞ்சயும் இருக்க என்னால முடியாது...”

“இருக்கமாட்டன்...”

அவள் பரபரப்படைந்து, “மாமா...!” என்றாள்.

அவர் கவனித்ததாய்த் தென்படவில்லை.

“என்ர விருப்பமெல்லாம் கெதியில போய்ச் சேர்ந்திடவேணும் எண்டதுதான். போயிடுவன்.” சொல்லிவிட்டு படுக்கப்போவதாகக் கூறிக்கொண்டு படுத்தார்.

சிறிதுநேரத்தில் உறங்கிவிட்டிருந்தார்.

## 29

இதயத் துடிப்பைச் சீர்செய்யும் இயந்திரம் சுந்தரலிங்கத்துக்குப் பொருத்தப்பட்டு முடிந்தது. அவரை வீட்டுக்கு கூட்டிச் செல்லலாமென்று ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள்.

எங்கே போவது என்ற கேள்வி எழுந்தது.

கணேசலிங்கத்தின் மகள் மல்லிகா வீட்டுக்கே போகலாமே என்றாள் ராஜி. யாரோவின் வீட்டுக்கு ஏன் போகவேண்டுமென்பதுபோல் ஏதோ முணுமுணுத்தார். அதிகம் வருத்தப்பட்ட மாதிரியும் இருந்தது. பின்னே எங்கே போக நினைக்கிறார்? தனிவீட்டுக்கா? கணேசலிங்கம் வீடும் யாரோ வீடுதான் என்பதையும் மறந்து, அங்கே போகலாமென்றார். திருச்சி போவதாக இருந்தால் தன்னோடு முகாமுக்கு வந்துவிடும்படி சொல்லிவிட்டாள் ராஜி. அங்கே நின்றால் தன்னால் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ள முடியும் என்பது அவள் தெரிவித்த காரணம்.

சரி, மல்லிகா வீட்டுக்கே போகலாமென்றார். கூட்டிப் போனாள்.

அங்கே போனபிறகும் கணேசர் வரவில்லையோ, ஏன் இன்னும் வரவில்லையென்று வாய்க்கு வாய் கேட்டுவிட்டார். வீட்டின் அந்நியம் அவரை உறைத்துவிட்டது தெரிந்தது. எது உறைக்க வைத்தது? அந்த வீட்டின் மிகுவசதிகளா? செழிப்புகளுடன் என்றாலும் அவை பிறத்தியாரதாய் இருக்கிறவகையில் சிலரால் ஒத்துப்போக முடிவதில்லை என்பதை அப்போது மனங்கொண்டாள் ராஜி.

மல்லிகாவுக்கு அவர் அப்பாபோல. அவள் குழந்தைகளும் தாத்தா என்றே அழைத்தன. ஆனாலும் அவர் அங்கு பொருந்திக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமப்பட்டார். அவரது வீடு இல்லை என்றதுமே எவர் வீடும் அந்நியமாதல் இயல்புதான். அது பெரும்பாலும் வசதி / வசதியின்மைகளில் தங்கியிருப்பதில்லை. அப்படியொரு கதி அவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடாது.

ராஜி முகாம் போனாள்.

மறுபடி ஒரு வாரத்தில் வந்தாள்.

சுந்தரலிங்கம் வெகுவாய் இளைத்திருந்தார்.

நன்றாகச் சாப்பிடுவதில்லை, மருந்தில் ஒழுங்கில்லை, எழுந்து நடமாடுவதில்லை, எப்போதும் படுக்கைதான் என்று அவர்பற்றிக் குறைசொன்னாள் மல்லிகா.

அவர் குறி எது? மரணமா?

மல்லிகா நன்றாகத்தான் அவரைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அவர் நிலை கவலை அளிக்க, இரண்டு நாட்களுக்கு முன் கார் வைத்துக்கொண்டு ஜிப்மேர் மருத்துவமனை கொண்டு போய்க் காட்டிவந்திருந்தாளாம். இருந்தும் அவர் உடல்....

உதவிக்கென்று வந்து உபத்திரவமாகிவிட்ட சோகம் அவர் முகத்திலிருந்தது. அங்கேயிருந்து நோய்வாய்ப்பட்டாரே என்ற எண்ணத்தின் கிலேசம் இருந்தது அவளிடத்தில்.

கணேசலிங்கத்தை உடனே வருமாறு தந்தியடிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் தன்னை ஒப்புக்கொடுக்கத் தயாராகிவிட்டது தெரிந்தது ராஜிக்கு. 'இனி யோயிடவேணும். போயிடுவன்' என்று அன்றொருநாள் ஆஸ்பத்திரியில் கூறியதற்கேற்ப ஒரு இணக்கமான மனநிலையில்தான் அவர் இருந்தார்.

அவரின் உடைவுக்குப் பல காரணங்கள் இருந்தன. ஆனாலும் பொறுத்துப் பொறுத்து வந்து இறுதியான ஒரு காரணம்தான் அந்த உடைவைச் செய்கிறது.

அது என்ன என்பதுபற்றி ஒரு இரவு பூரா யோசித்தாள்.

மறுநாள் மாலையாயிற்று கணேசலிங்கம் வந்து சேர.

கட்டிலின் ஓரத்தில் அமர்ந்து அவர் நெஞ்சை நீவி, "என்ன சுந்தரம், என்ன செய்யுது?" என்று ஆதூரத்துடன் வினவினார்.

அறை முழுக்க துளாவிய விழிகளை ஒருநிலைப்படுத்தி அவரை நோக்கினார் சுந்தரம். "கணேசு.... எனக்கு ராஜியைவிட்டா இஞ்ச வேற சொந்தமில்லை; உன்னைவிட்டா வேற சிநேகிதம் இல்லை.... எல்லாத்தையும் இழந்திட்டன்.... ஆதாரமில்லாதவனாய் நிக்கிறன்.... என்ர சாவீட்டை மரியாதையானதாய் நீதான் செய்து முடிக்கவேணும்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைப்பற்றியெல்லாம் இப்ப ஏன் கதைக்க வேணும்..."

அவரை கையால் ஒதுக்கிவிட்டு சுந்தரம் தொடர்ந்தார்: "எனக்கு நிலைமை நல்லாய்த் தெரியுது, கணேசு. பெரிய துரோகியாகியிட்டன்... என்ர மக்களைப் பிரிஞ்சு வந்து; என்ர பெண்சாதி பிள்ளையை தனியனாய் விட்டிட்டு வந்து. எல்லாத்தையும்... எல்லாத்தையும்தான்... தாங்கிக்கொண்டு இருந்திடுவன். ஆனால் என்ர தோல்வியை....? அண்டயிலயிருந்து நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற வேளைதான் இது..."

மூச்சு இழுத்தது.

"ராஜி...!" என்றார்.

"மாமா" என்றபடி கிட்டே போனாள்.

கண்கள் நீர் தளும்பியிருந்தன. வெகுவாய்ப் பிரகாசித்தன. சடுதியில் ஒரு மலர்வு முகம்பூராய்.

என்ன சொல்ல எண்ணினாரோ, பிறகு சொல்லவில்லை. கையைப் பிடித்து சிறிது அழுத்தினார். அவ்வளவுதான். போய்விட்டார்.

ராஜி மட்டும் சிறிதுநேரம் கண்ணீர் வடித்தபடி நின்றாள். இரவுப் போது ஒருவாறு கழிந்தது. அதிகாலையில் முகாமுக்கு ஒருவரை அனுப்பி தன் மாமன் இறந்துவிட்ட செய்தியைத் தெரிவிக்கச் செய்தாள் ராஜி. பெட்டி எடுத்து... பாடை கட்டி... இறுதிக் கிரியைகள் மல்லிகாவின் மூத்த மகன் மூலமாய் செய்துமுடிந்தன. மரண ஊர்வலத்தில் பதினைந்துபேர் இல்லை. அதில் பத்துப் பேர் வரையில் முகாமிலிருந்து வந்தவர்கள். யாழ்ப்பாணத்தில் நடந்திருந்தால் ஆயிரமாயிரமாய் மக்கள் கூடியிருப்பார்கள். ராஜிக்கு அதை நினைக்க அப்போதும் கண்ணீர் வடிந்தது.

மகன்... மகன்... என்று அவர் மாய்ந்ததின் மர்மம் அப்போது புரிந்தது: மண்... மண்... என்ற தாரகத்தின் மையமும்கூட.

எல்லாம் முடிந்தது.

அன்று மாலை.

எல்லாருமாய்ப் பேசிக்கொண்டிருந்த இடத்தில் ராஜி கணேசலிங்கத்தை நோக்கிக் கேட்டாள்: "எப்பிடி..... திடீரெண்டு....? ஊரிலகூட சாப்பாட்டை, ஓய்வையொண்டும் கவனிக்காமல்தானே திரிஞ்சவர்? இதுவரை காலத்தில தடிமனையும் தலையிடியையும் தவிர வேறெதுகும் அவருக்கு வந்ததில்லை."

"தெரியும். சுந்தரமே அடிக்கடி சொல்லும். ஒரு மனிசனுக்கு எதுவும் வரலாம். மலேரியா, டயேரியா எண்டுகூட வரலாம். ஆனால் நம்பிக்கைகளில தோல்விமட்டும் வரக்கூடாது. குறிப்பாய் சுந்தரம்போல உணர்வு கூடின மனிசருக்கு வரவே கூடாது. அதுதான் சுந்தரத்தை விழுத்தியிட்டுது" என்றார் கணேசலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளங்கேல்லையே" என்றாள் ராஜி.

"செல்வநாயகத்தாரை பெருந்தலைவராய் எண்ணி வழிபட்டது சுந்தரம். அவருக்குப் பிறகு.... கட்சியில அதுக்கு நம்பிக்கை இல்லாமல் போச்சுது. கட்சித் தலைமை மூலக்கொள்கையை அடியழுக விட்டிட்டதாய்ச் சொல்லிக்கொண்டு ஒதுங்கியிருந்தது கொஞ்சக்காலம். அதுக்கிருந்த தொடர்பெல்லாம் பண்டிதரோடதான் இருந்தது. அப்பப்ப அவரோடயும் வாக்குவாதப் பட்டுக்கொண்டு அந்தப் பக்கமே போகாமலும் இருந்திருக்கு. அப்பிடி ஒரு கொள்கை வைராக்கியம் பிடிச்ச மனிசன் சுந்தரம்."

"அதாலதானா அவர்..."

"அதுதான் ஆரம்பம். ஆனால் இன்னுமொரு காரணமும் இருக்கெண்டதுதான் என்று அனுமானம்."

"என்ன அது?"

"சுந்தரம் நேரடியாய் அதைப்பற்றி என்னிட்டச் சொல்லேல்லை. எல்லாம் என்ர அனுமானம்தான். ஆனாலும் சரியாயே அனுமானிச்சிருப்பதாய்த்தான் இப்பவும் எனக்குப் படுகுது" என்ற கணேசலிங்கம் சிறிதுநேரம் மௌனமாய் வெளியைப் பார்த்தபடி இருந்துவிட்டு சொன்னார்: "இலங்கை - இந்திய ஒப்பந்தம் கையெழுத்தானவுடன பெரிய எதிர்பார்ப்போட இருந்தது சுந்தரம். எல்லாருக்கும்தான் அந்த எதிர்பார்ப்பு இருந்தது. நாங்களும் ஊருக்குத் திரும்ப ஆயித்தம் பண்ணியிட்டம்."

"அந்தளவுக்கு நம்பிக்கை இருந்துதா?"

"இருந்தது. விடுதலைப்புலிகள் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டு ஆயுத ஒப்படைப்புக்குச் சம்மதிச்சு.... முதல் கட்டமாய்க் கொஞ்ச ஆயுதங்களையும் அமைதிப்படையிட்ட ஒப்படைச்சிட்டுது. இந்த நிலையில நம்பிக்கைப் படுகிறதுக்கு என்ன தடை? ஆனால் ஏதோ சில நடைமுறைப் பிழைகளால திலீபன்ர சத்தியாக்கிரகம் துவங்கிச்சுது. அதுக்குப் பிறகு சுந்தரத்துக்குக் றேடியோச் செய்தி கேக்கிறதும் பேப்பர் பாக்கிறதும்தான் வேலை. நாங்களும் என்ன நடக்குதெண்டு கவனிச்சுக்கொண்டுதான் இருந்தம். உண்ணாவிரதமிருந்த திலீபன்ர உடம்பு நிலை நாளுக்கு நாள் மோசமாகி வந்துகொண்டிருந்தது. இந்தா.... சத்தியாக்கிரகத்தால - உண்ணாவிரதத்தால - அகிம்சை வழியால ஒரு பெரிய படையையே தன்ர கருத்தை ஏற்கும்படி திலீபன் செய்திட்டான் எண்டு வெகு சந்தோஷத்திலயிருந்த சுந்தரத்துக்கு.... ஒரு செப்டம்பர் மாதம் 26ம் தேதியெண்டு நினைக்கிறன்.... பெரிய இடியான செய்திதான் கிடைச்சுது. பதினொரு நாளாய் தண்ணிவென்னி இல்லாமல் கிடந்த திலீபன் செத்திட்டான் எண்ட செய்திதான் அது. அதை ஒரு தனி ஆளின்ர மரணமாய்ச் சுந்தரம் பாக்கேல்லை. அது ஒரு அரசியல் வழிமுறையின்ர மரணமாய்.... தன்ர அடிமனத்திலயிருந்த சத்தியாக்கிரகத்தின்ர வலிமையின்மீதான நம்பிக்கையின்ர மரணமாய்ப் போச்சுது சுந்தரத்துக்கு. அடுத்த நாள்தான் சுந்தரம் மயங்கி விழுந்ததும், டொக்டரிட்ட கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதும். அதுவரையும் சுந்தரம் நல்லாய்த்தான் இருந்தது. திலீபன் செத்த அண்டைக்கே சுந்தரமும் செத்திட்டுது எண்டதுதான் என்ர எண்ணம்.'"

யாரும் பேசவில்லை.

அவரவர் சிந்தனைகளில் ஆழ்ந்து அவரவரும்.

ராஜிக்கு அப்போதும் அழுகை வந்தது.

மூண்டு வருஷத்துக்கு முந்திச் செத்தவருக்கு இண்டைக்குப் பெரிசாய் அழவேண்டியதில்லைத்தான்.

அவள் கண்களைத் துடைத்தாள்.

வெளியே நன்கு இருட்டிவிட்டிருந்தது.

## 30

யுத்தம் முடிந்துவிட்டதென்று அவன் நினைத்தான். அவசியமிருக்க வில்லையெனினும் சிலரைக் கேட்டான். அவர்கள் அவன் நினைத்தது சரி, இப்போது போர் நிறுத்தம்தான் என்றார்கள். ஒரு அமுக்குவிசை விடுபட்டதுபோல் அவன் நெஞ்சு இயல்புக்கு விரிந்தது. அன்று கோயில் வீதியில் வந்து நிமிர்ந்து நின்றவனின் முகமும் மலர்ந்து விரிந்திருந்தது. சில பெண்களும் சிறுவர்களும் கோயிலுக்கு வந்தார்கள். சில முதுமைகள் கோயிலினுள்ளே, வெளிவீதி மருதமர நிழல்களில், கோயில் வாசல் படிக்கட்டிலென்று உட்கார்ந்திருந்தன. அப்போது வள்ளம் அதிக தடவை ஓடிற்று. தீவு பழையபடி ஆகிக்கொண்டிருந்ததை இயங்குதலில் ஏற்பட்ட மாற்றத்தின் கீறுகள் மூலம் உணர அவனுக்கு பெரும் சாமர்த்தியம் தேவையாயிருக்கவில்லை. அவன் தீவின் குழந்தை.

நேரம் அப்போது பத்து மணி இருக்கும்.

நான்கு பெண்கள் அப்போதுதான் கோவிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். குடுமி, இரட்டைப் பின்னல், ஒற்றை ஜடை, கிரைப் பிடிக்கட்டு கூந்தல் என வெவ்வெறு ரகமாயும் விதமாயும் தலையலங்காரங்கள். அவன் உற்றுப் பார்த்தான் ஒரு கணம். அதில் அவனது சிந்தாமணி இல்லை. அவளின் அமிசங்கள் அவளுக்கென்றே பிரத்தியேகமானவை. கூர்த்த பார்வை அவசியமில்லை. ஆனாலும் அவனால் தவறவிட்டுவிட முடியாது. அவளுக்கு சராசரிப் பெண்ணின் உயரத்துக்கு மேலே தலையிருக்கும். அதிலே அடங்காத பரட்டை முடி கெம்பி விரிந்து எந்நேரமும் பறந்துகொண்டிருக்கும் காற்றில். மஞ்சள்போன்ற ஒரு உமிக் கலர்த் திரேகம். துண்டு துண்டாய்ச் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தினமாதிரி உடலில் ஒரு வஜ்ரத் தன்மை. நெஞ்சில்தான் என்ன ஒரு திமிறும் திரட்சி! ஆனாலும் அவள் அவனை மயக்கியது அந்த அசத்தும் உடல் லாவண்யங்களினாலல்ல. முகத்தினால்தான். எத்தனை குழந்தைகளின் சிரிப்பு அது! கண் மூக்கு இதழ் கன்னங்கள் யாவும் சிரிக்கிற சிரிப்பு அது. எப்போதும் அவள் நீலம் அல்லது பச்சையில் தோற்றங்காட்டியதாகவே அவனுக்கு ஞாபகம். ஏனெனில் இந்த இரண்டு நிறங்களும்தான் சிந்தாமணியின் தாயார் வள்ளிப்பிள்ளை தொட்டாட்டு வேலை செய்த மாப்பாணர் வீட்டிலே அவர் மனைவிக்குப் பிடித்த நிறங்கள். தாயாரின் சேலையில் வெடிப்பு / கிழிசல் பெரிதாய் விழ, அதிலிருந்து வாகாக வகிர்ந்து முண்டுபோல் கட்டிக்கொள்வாள் சிந்தாமணி. இடுப்பில் ஒன்றரைச் சாண் வெளி இருக்கும். வயிற்றின் மையக் பொக்குண்ணி பெரும்பாலும் மறைந்திருப்பதில்லை. பின்புறப் பளுவில் ஒரு மிளகளவு கழலை. சின்னக் காம்பினைப்போல் துருத்தி நிற்கும் அதை தட்டி அல்லது அகப்பட்டால் சுதியோடு மெதுவாக நெருடி அவளைச் சீண்டிவிடுவான்அவன். அவனுக்குப் பிடித்த அவளம்சங்களில் அதுவும் ஒன்று. ஆனால் ஒரு பொழுதில் எரிச்சலைடைந்து பக்கத்து வீட்டுச் செல்லீ சொல்லிக்கொடுத்தபடி தலைமயிர் சுற்றிவிட்டு கழலையை அறுந்துபோகவைத்துவிட்டாள் சிந்தாமணி. ஒரு சின்னத் தழும்புதான் ஏழாற்றுப் பிரிவில் படகு கவிழ்ந்து அவள் மூழ்கிப்போன அந்தக் கடைசி நாளில் அவளுடம்பில் இருந்தது.

யுத்தத்தினாலான மன நெருக்கடியும், சிந்தாமணியின் தவனமுமாய் அவன் மனம் வேகிய நாட்கள் அவை. அப்போது ஒரு முனையின் நெருக்கடி தீர்ந்திருக்கிறது. சிந்தாமணித் தவனம் மட்டுமே பாடாய்ப் படுத்திக்கொண்டிருந்தது. தன் ஆசைகளை இழப்புகளைப் பகிர அவனுக்கிருந்த ஒரே மனிதன் சுதன்தான். அவனோ அங்கிருந்து சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வெகுகாலம். அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்த திரவியும் வருவதை நிறுத்திவிட்டான். சிவா மட்டும் சிலவேளை வருவான். ஏனோ அவனுக்கு சிவாவை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. சுதன்பற்றிக் கேட்டால் சொல்கிறானில்லை; திரவியம்பற்றியும் சொல்வதில்லை; ராஜியைப்பற்றிக்கூடச் சொல்வதில்லையே! உணர்வுகளைப் பகிர்வதற்கு ஆளில்லாத நிலை அவனை உன்மத்த நிலைக்கு இழுத்தது. அவனும் அதன்பக்கம் சரிந்துகொண்டிருந்தான் என்னலாம்.

இந்த ஒரேயொரு கடல்தான் அவனை அவர்களிடமிருந்து பிரித்து நிற்கிறதென்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. கடல் வற்றி அக்கரை போதல் சாத்தியமே இல்லை. ஆனால் நீந்திப் போகமுடியும். ஒருமுறை திரவியம் கேட்டதற்கும் அவன் சொல்லியிருந்தான், நீந்திப் போவேன் என்பதாக. இன்னொருமுறை சிவாவே சொன்னான், அதோ கடல்.... நீந்தினால் அக்கரை போய்விடலாம்... அங்கே சுதனும் ராஜியும் இருக்கினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று. அவனுக்கு ஞாபகமிருந்தும் ஏனோ அப்படிச் செய்ய அவன் முனையவில்லை. இப்போது மனம் கிளர்ச்சிபெற்றிருக்கும் இந்த நிலையில் நினைவு வந்தது.

மேலே பறவைகள் சில பறந்துசென்றன. அவை, அந்தத் தீவின் பறவைகளல்ல. அடுத்தடுத்த தீவுப் பறவைகளாயிருக்கலாம். அவனுக்குத் தெரியும். அவற்றை அவன் பெருவியப்போடும் ஆசையோடும் பார்த்தான். அப்போது அவை பறக்கவில்லை; உணர்ந்துகொண்டிருந்தன; இறக்கையடிக்காமல் போவது அந்நிலையில் தான் சாத்தியம். உணர்வு நிலையில் பறவை, விலங்கு, மனிதன் எல்லாம் ஒன்று. அப்போது எல்லைகள் இருக்காது. இருந்தால் உணர்வு நிலை ஏற்படாது.

கோவில் வீதி கடந்து தெருவுக்கு வர அப்போது தான் பிக்குவின் உருவம் முடுக்கில் திரும்பி மறைவது தெரிந்தது. சங்கரானந்த தேரராயிருக்கலாம். அல்லது வேறு தேரராயுமிருக்கலாம். வேறு தேரர்களையும் அவன் அங்கே கண்டிருக்கிறான்.

மாசிப் பனிக்கான வெய்யில் உறைக்கத் துவங்கியிருந்தது. அவன் பிக்கு சென்ற திசையில் நடந்தான். விஹாரை தாண்டி கடற்கரைக்கு வந்தான். ஒரு மரவள்ளம் கரையேற்றி விடப்பட்டிருந்தது. அதையும் தாண்டி நடந்தான்.

காற்று, குளிர் வாரி வீசியது.

மேலும் நெடுங்க, மேலும் இதமாயிருந்தது.

அலை கோபமின்றி அடித்துக் கொண்டிருந்தது.

சுரிமண் கரையைக் கடந்து அலை ஒதுக்கிய மணல் திரையில் ஏறினான்.

வெய்யிலின் தகிப்புக்கு கடற்காற்று என்னமாய் இதம் செய்கிறது!

மேலும் முன்னேறினான்.

கடல் விளிம்பு தெரிந்தது.

அங்கேதான்.... சுதன், ராஜி எல்லோரும்.

திடீரென மனத்தில் ஒரு வெளிச்சப் பாளம் பெயர்ந்து வந்தது. ஒருவேளை.... ஒருவேளை சிந்தாமணியும் அங்கே....

கழிசான் பையில் புகையிலைக் காம்பு இருந்தது. எடுத்து முறுக்கி திரணையாக்கி வாயில் அதக்கினான்.

புகையிலைக் காம்பின் சாறு உள்ளே இறங்க இறங்க, அவனது மனம் வேகம் பெற்றது. உடல் முறுகியது. பெரிய பெரிய கால்களுடனும், பெரிய பெரிய கைகளுடனும் விஸ்வரூபம் பெற்றதுபோல் மனத்தில் ஒரு பேருவகை. யாவும் அற்பமாகிப் போனதுபோல் ஒரு கர்வ அலை. தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றைக்குமே அவனுக்குப் பெரிய அச்சம் செய்ததில்லையே எனுமாப்போல் அடங்கிக் கிடந்து தன்னுள் நுழையும்படி கடல் அவனை மருட்டியது.

அவன் நடந்தான் மேலே மேலேயாய். மேலும் நடக்க முடியாதபடி நீர் வெகுத்த இடத்திலிருந்து அவன் நீந்தினான்.

ஆசையாக இருந்தது நீந்த. நீந்தி வெகுகாலமாயினும் நீச்சு அவனுக்கு கஷ்ரமாயிருக்கவில்லை. வெகுநேரமாய் கையும் காலும் வலிக்க வலிக்க நீந்தினான். 'ஆனந்தம்.... ஆஹா ஆனந்தம்....!' என்று நீந்தினான்.

களைப்பு அவன் கவனமான பொழுதில், சூரியன் அவனது முகத்துக்கு நேரேயாய் இறங்கத் துவங்கியிருந்தது. நீரில் படிந்த ஒளிப் பாளங்கள் எங்கும் சூரிய ரச்மித் திரள்களை அடித்தன. களைப்பு மறந்து அவ்விந்தையில் தனை முற்றாய் இழந்தான்.

அலைகளில் மிதந்தபடி இளைப்பாறிக்கொண்டு மறுபடி சூரியத் திசையைக் குறிவைத்து நீந்தினான். கண்கள் உப்புநீர்க் கரிப்பால் எரியத் துவங்க கண்களை மூடிக்கொண்டு நீந்தினான்

மறுபடி அவன் கண் விழித்தபோது சூரியச் செம்பாகம் அக்கரை மணலுள் மூழ்கியிருந்தது. மீதிப் பாதி நெருப்புத் துண்டமாய்த் தகதகவென்று சிவந்து கிடந்தது.

வெள்ளி பூத்திருந்த அலையெங்கும் செம்மைப் படிவு.

இருளப் போவதன் அவ் அடையாளங்களில் அதுவரையில்லாத துணுக்கமொன்று பிறந்தது அவனிடத்தில். கடல் மகா பெரியதென்பது கூடவே கிளர்ந்தது வேறொரு பிரக்ஞையாய்.

துணுக்கம்.... மேலுமொரு துணுக்கம் சின்னதொரு அச்சமாய்ப் பரிணாமம் பெறலாயிற்று.

தக்க சமயத்தில்....சின்ன வயதிலே அவனது நீச்சல் குருவான தியாகனின் குரல் மனசுக்குள்ளிருந்து வெடித்துக் கிளர்ந்தது: 'மாட்டுப்பயலே.... களைச்சுப் போனால் என்ன செய்யவேணும்? ம்....? புறநீந்தல் போடவேணும். நீந்த ஏலாமல்ப் போனால் அப்பிடியே மிதந்துகொண்டு கிடந்தாப் போதும். அலை கொண்டுபோய் எங்கயாவது ஒரு இடத்தில ஒதுக்கும்.'

அவன் கவிழ்ந்து புறநீந்தல் போடத் துவங்கினான். கைகளினதும் கால்களினதும் வித்தியாசமான அசைவு உடலிறுக்கத்தையும் தளர்த்தியது. தொடர்ந்து இயக்கம் சுலபமடைய, வெளியினில் பார்வையைப் பதித்தான்.

மேலே வெளிர்நீலம் மறைந்து கருமை வியாபித்தது. பின் ஒரு நட்சத்திரம் புலனாயிற்று. தொடர்ந்து பத்து.... நூறு.... ஆயிரமாய்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே நீந்தியபடியிருக்க கீழ்த் திசையிலிருந்து ஒரு அம்புலிக் குழந்தை பிரசவமாயிற்று. வலு கிட்டவாய் அதன் பிரசன்னத்தை உணர்ந்தான்.

அவன் ஒருபோது திரும்பிக்கொண்டு பார்த்த காலை திசையழிந்திருந்தது. வடக்கெது? தெற்கெது? மேற்கெது? எங்கே, எந்தப் பக்கமாய் நீந்த என்றொரு இருண்மை கவிந்தது. மேல் கீழ் தவிர திசையழிந்த அந்நிலையில் மேலும் ஓர் இருண்மைப் படிவு மேலெது? கீழெது? நீருள் அமிழத் துவங்கினான். "அம்மாளே....!" ஓங்கிக் கூவினான். பிரக்ஞை சற்றுத் தெளிந்தது. அம்மாளே காட்டியதுபோல் சில வெளிச்சப் புள்ளிகள் தொலை தூரத்தில் மின்னுவது தெரிந்தன. அத்திசையைக் கவனிக்க ஒளிப் பிரவாகத்தெறிப்பு வானம்வரை வியாபித்திருந்து கரையின் திசையை அவனுக்குக் காட்டிற்று. அவன் நீந்தினான். சிறிதுநேரத்தின் பின் உடல் நீந்த மறுத்ததுபோல் உணர்ந்தான். உடல் நீந்தவில்லைப்போல.... குளிர் தெரியவில்லைப் போல.... கையை வீசி நீரை வலிக்க முடியவில்லைப் போல.... ஒரு மரத்த உணர்வு. வாய் சொலிசன் பூசியதுபோல் பிசுபிசுத்தது. தொண்டை உலர்ந்து ஒட்டியிருந்தது. கிர்.... ரென்று தலை சுற்றியது ஆச்சி பூச்சி ஆட்டம் ஆடியது போல.

அக்கணம் கீழ்ப் பதிந்த காலில் தரை தட்டியது.

உடலை ஒரு உசுப்பு உசுப்பிக்கொண்டு அவன் எழுந்து நின்றான். நடந்தான். எதிலோ தடுக்கி கரையில் வீழ்ந்தான். மண்ணில் மோதுமுன் மனம் இருளில் மூழ்கியிருந்தது.

மறுபடி கண் விழித்தபோது லேசாய் விடிந்து கொண்டிருந்தது. அப்படியே கிடந்தான்.

திடீரென.... காதில் பேச்சுக் குரல்கள்.

தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

பார்வை மங்கலாயிருந்தது. ஆனாலும் எதிரே சிறிது தூரத்தில் சுமார் முப்பது நாற்பது பேர்வரையிலான ஆண்கள் பெண்கள் குழந்தைகளின் கூட்டம் தெரிந்தது. சிலரோடு பெட்டிகள். சிலரோடு பைகள்.

களைப்பை உதறிவிட்டு எழுந்து நடந்தான்.

எல்லோரும் அந்த ஒற்றை உருவத்தின் பக்கம் திரும்பி வியப்போடு பார்த்தனர்.

"படகு தாண்டு போச்சா....? எப்பிடி....? நேவிக்காறன் சுட்டதில தாண்டுதா?"

கேள்விகளின் துளைப்பு

தியாகுவால் பேச முடியவில்லை. தலையை அசைத்தான். சிறிதுநேரத்தில் மறுபடி மயங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

அன்று அந்தக் கோப்பினை எடுத்ததும், ஏதோ அது தான் சார்ந்த கோப்புப்போல் அவர்மீது ஞாபகமாய் வந்து கவிந்தாள் ராஜி. அவர் மெல்லச் சிரித்தார். அதில் ஒருவகை வியப்பும், அனுபவ அந்நியங்களின் குதூகலமும் கலந்திருந்தன. 'பிடிவாதக்காரப் பெட்டை!' அவரது மனம் செல்லமாய்த் திட்டியது.

வெகுகாலமாய் அந்தக் கோப்பினை அவர் எடுக்கவில்லை. நினைவு வரவில்லை. அதற்கான அவகாசம் வரவில்லை. எண்பத்தேழு ஆவணி வரை அவர் சுய அடையாளமின்றியும் சுய இழப்புகளின் பாதிப்புடனும் நசிந்துபோய் இருந்தவர். தான் ராஜநாயகம் என்பதற்கோ, இலங்கைத் தமிழ்ப் பிரஜை என்பதற்குமோ எதுவித அடையாளமுமின்றி பரதவித்திருந்தார். அமைதி காப்புப் படை இலங்கை சென்ற பின்னர், இலங்கையிலிருந்து அகதியாய் வந்திருந்தோரின் பதிவுக்கு அரசு ஆணை பிறப்பித்தது. ராஜநாயகமும் மகளோடு சென்று பதிந்துகொண்டார். தம்மை அகதியாகப் பதிவதற்கு அவரிடமிருந்த ஆகக்கூடுதலான அடையாளம் அவரது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதிதான். ஆனால் பதிவின் பின் அரசு தலைமைச் செயலகம் அவருக்கு படத்துடன் கூடிய அகதி அடையாள அட்டை வழங்கியது. தான் எங்கோ தொலைந்து போய்விட்டதாகத் தவித்துக் கொண்டிருந்தவருக்கு அது மீட்சியைத் தந்தது. தன்னைக் கண்டடைதல் பௌதீகார்த்தமாயேனும் ஆனந்தமே! பிறகு அகதி அட்டையுடன் இலங்கைத் தூதரகம் சென்று இலங்கைக் கடவுச்சீட்டு பெற்றுக் கொண்டார். ஒருமுறை கொழும்பு போய்வந்தார். போன வருஷம் லண்டன் போய்வந்தார். அவரது எச்சங்களின் அழிவும், அவல வாழ்வும் அவரை வெகுவாய்ப் பாதித்திருந்தன. அதை மறக்கவே அவர் அதிகமான தோட்ட வேலைகளில் ஈடுபட்டது. ரம்யம் சொட்டச் சொட்ட தோட்டத்தைப் பராமரித்தார். இன்னொருவர் சொத்து என்று அதைச் சொல்லவும் மனம்பிடிக்காதிருந்தவர் லண்டனிலிருந்து திரும்பியதும் அந்த வீட்டை சொந்தமாக வாங்கிக்கொண்டார். தோட்டமளவு ஈர்ப்பு அவருக்கு நவீன இலக்கியத்திலும் ஏற்பட்டது. ஆகக் கூடுதலான ஈடுபாடு படைப்பிலும் அவரைக் கவனம் கொள்ளச் செய்தது. வெகுகாலம் பூர்த்தியாக்காமல் குறையாக விட்டுவைத்திருந்த மனவேக்காட்டுப் பதிவுப் பக்கங்களை அன்று அவர் எடுத்ததே, படைப்பின் அவதிக் கணங்களுடன் அன்றைய காலை மலந்திருந்ததேயாகும். அந்தக் கோப்போடு அவளுக்கு என்ன அத்தனை தொடர்பு? அவள் அவரது தீவாளை வாசித்த முதல் வாசகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதினாலா? 'தீவாவா? என்ன அது? ஒரு மரமா? ஒரு பொருளா? ஒரு உணர்வா? என்ன அர்த்தம் அதற்கு?' என்று அவள் திகைத்திருந்தவள். ஆனாலும் அதைப் பாராட்டவும் செய்திருந்தாள். அந்தக் கோப்போடு அவள் நினைவு கலந்தது.

எழுதி வைத்திருந்த பக்கத்தை வாசித்தார்.

அது அவர் மொழிநடை இல்லை. ஒரு மன எழுச்சி மிகுந்த தருணத்தில் எழுதியது. கடாட்சத்தில் எழுதியதுபோல் வார்த்தைகளும் அர்த்த வீறும் அருமையாய் வந்து வாய்த்திருந்தன.

திருப்தியோடு தேநீரை எடுத்து அருந்தினார்.

தாள்கள் பேனாவுடன் வெளியே வந்து தியானத்தில் போல் போர்டிக்கோ பிரம்பு நாற்காலியில் அமர்ந்து வீதியையும் வானத்தையும் விசிறி வாழையையும் பப்பாசி மரத்தையும் பார்த்தபடி சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

நினைவுகள்தான் புரட்டிக்கொண்டு வந்தன.

எழுத்து வரவில்லை.

மறுநாளும் அப்படியே.

ஆரம்பிக்க முதல் சொல்... அதுவே முடிவுவரை மின்னலாய்ப் பாய்ந்து செல்லக்கூடிய பேராற்றலோடு.... தேவை. அடியெடுத்துக் கொடுத்த பேரண்டக் கடவுளின் கடாட்சத்தை வேண்டினார். பிறிதொரு நாளில் அந்த வேளை வந்தது. அவர் தன் மனவூற்றை வேகவேகமாய் எழுத்தில் பதித்தார்.

*மகீதலத்தில் இருந்த சொல் இறுதியில் மன்னனால் புதைக்கப்பட்டது.*

*மங்கல விளக்குகள் மாளிகையில் அழுது வடிய அந்தப்புரம் ஏகினான் அரசன். அறுபத்து நான்கு விநோதங்களிலும் அற்புத அனுபவம் அடைந்தான்.*

*சில நாட்களின் பின் அரசவை கூடிற்று. அங்கே வந்த மந்திரி பிரதானிகளும் மக்களும் அதிர்ச்சியடைந்தனர். சிம்மாசனத்துக்கு அடுத்த ஸ்தானத்தில் தவிசொன்று போடப்பட்டிருந்தது.*

*யாருக்கு அது?*

*வித்தையும் பக்தியும் நித்தமும் பழக்கிய ஞான குருவுக்கல்ல அது, ராஜகுருவுக்கே என்பது பின்னர் தெரிந்தது. போகங்களில் ஊறிய மலையாய் அரசனைத் தொடர்ந்து வந்து ராஜகுரு தவிசேறினான்.*

*ராஜ்ய நிர்வாகம் ராஜகுரு வசமாயிற்று. அரசன் மஞ்சமே கதியெனக் கிடந்தான். சிவந்த கண்கள், துடிக்கும் இதழ்கள், புடைக்கும் நரம்புகளாயன்றி அரசனைக் காணமுடியாதிருந்தது. அரசனின் சிற்றின்ப அவாவை ஊதி ஊதி வலுப்படுத்தினான் ராஜகுரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வாரங்களின் பின்னால்.... போக வேட்கை மேலும் மேலுமாய் அதிகரித்த வேளையில், உடல் பலஹீனத்தில் துவள ஆரம்பித்தது. தீவாக் கனிக்காய் அரசன் காத்திருக்கத் துவங்கினான். தீவாவின் விசேஷ பலன்களை விவரித்து அரசனை உற்சாகப்படுத்தினான் ராஜகுரு.

ஒருநாள்.... இரவுக் கதைகள் சொல்ல வந்த கிழவியைப் புணர்ந்துவிடுகிறான் அரசன். அன்றைய நாள் காலையில் தான் அரசன் பேரழகு வாய்ந்த கனியொன்றை மறைவில் உண்டுகொண்டிருப்பதைப் பார்த்ததாய் அரசியின் தோழியொருத்தி ஞானகுருவிடம் தெரிவித்தாள். மாயக் கதை சொல்லும் கிழவி பயித்தியமானதற்கான காரணத்தை ஊகித்துக் கொண்ட அவர் தான் துறவு மேற்கொள்வதாகத் தெரிவித்துவிட்டு காடேகினார் மறுநாள். மாதங்கள் நகர்ந்தன. ஒரு நாள்.... மேனியில் பல இடங்களிலும் சருமம் படைபடையாய்க் கிளம்பி அரிப்பெடுத்தது ராஜாவுக்கு. நீர் உணவு உடை படுக்கை யாவும் பொற்பமாய்க் கவனிக்கப்பட்டன. ஆனாலும் அரிப்பு அதிகரித்ததே தவிர குறையவில்லை. நாளடைவில் அரிப்பெடுத்த இடங்களில் கொப்புளங்கள் தோன்றி, பேருபாதை செய்யத் தொடங்கிவிட்டன. மெல்ல மெல்லவாய் அவை வலியிலும் அளவிலும் இரட்டிப்பாகி அரசனை தன்னிலையிழக்கச் செய்தன. இரகசிய மாளிகையொன்றின் இருட்டறையிலே கிடந்து அவன் அலறி ஆர்ப்பரித்தான். தானே தன்னைப் பார்க்கப் பிரியப்படாதிருந்தான். கூடவிருந்து பணிவிடை செய்தான் ராஜகுரு. அரண்மனை வைத்தியன் ஒருவன் இரகசியமாய் வைத்தியம் செய்தான். கொப்புளங்கள் வெடித்து காயத் துவங்கின. அரசன் அரண்மனை திரும்பினான்.

மோகம் துறக்கப்படலாம், தணிக்கப்பட முடியாதது; நெய்யால் எரி நுதுப்பது போன்றது அது என்று ஞானகுரு சொன்னது நிஜமாகும்படிக்கு அரசனுக்கு மறுபடி தீவாக்கனியின் இச்சிப்புத் தோன்றிற்று. பட்ட இம்சையெல்லாம் மறந்து மறுபடி தீவாக் கனிமீது இச்சை தோன்றும்படி செய்தாள் மகாமாயை. அன்று ராஜகுருவும் ராஜாவுமாகவே கிடைத்த கனியைத் தின்று தீர்க்கின்றனர். மறுநாள் அரண்மனைக்கருகேயுள்ள ஆற்றில் இரண்டு சேடிப் பெண்களின் சடலங்கள் கரையொதுங்கின.

ராஜா மேனியில் மறுபடி அரிப்பும், கொப்புளங்களும். அப்போது ராஜகுருவின் மேனியிலும் அவை. ராஜகுரு திகைக்க, வலியில் நெளிந்தபடி ராஜா ராஜகுருவைப் பார்த்துச் சிரித்தான்.

அவசர அவசரமாய் இருவரும் வைத்தியனை அழைத்துக்கொண்டு இரகசிய மாளிகைக்கு ஓடுகிறார்கள். அங்கே ஒருநாள் ராஜா உடம்பில் போட்டிருந்த கொப்புளமொன்றினைப் பிளந்துகொண்டு வண்டு ஒன்று வெளிவருகிறது. அது எலியளவாகி, பூனையளவாகி எதிர்நின்று ராஜாவைப் பார்த்துச் சீறிவிட்டு சொன்னது: 'ஆண்டிக்கு எதிர் அரசன்; கெட்டதின் எதிர் நல்லது; அரூபத்தின் எதிர் அழகு; துக்கத்தின் எதிர் மகிழ்ச்சி. வறுமையும், கேடும், அவலட்சணமும், துக்கமும், இருண்மையும் அதனதன் எதிர்நிலைகளிலிருந்து தோற்றம் பெற்றவை. அதனால் தம் எதிர்நிலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பது அவற்றின் தர்மம். அதுபோல் மீறல்களிலிருந்து உருவானவர்கள் நாங்கள். அதிகார மையங்களை புனிதங்களை அழிப்பது எங்களின் தர்மமாகும்.'

சொல்லிவிட்டு பாய்ந்தோடி மறைந்தது அது. ராஜாவால் அதன் கூற்றைப் புரிய முடியவில்லை. ராஜகுருவினிடம் சொன்னபோது அவனாலும் அதைப் புரிந்து கொள்ள முடியாமலே இருந்தது.

ஒருநாள் தீவா எழுதப்பட்ட தாள்களை எடுத்து வாசித்து விட்டு கோப்பினுள் அடுக்கி வைத்துக்கொண்டிருந்தபோது இரும்புக் கதவு திறபட்ட சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தார். மாலாவும் தங்கை பூபதியும் வந்து கொண்டிருந்தனர்.

வெளியே வந்தார்.

ஏனோ பூபதியை அவருக்கு மெத்தப் பிடித்திருந்தது. அவளது கலீரென்று சிரிக்கத் துவங்கி சட்டென அடக்கிக் கொண்டு லஜ்ஜை பூக்கும் அந்தப் பெண்மையின் பிஞ்சுத்தனம் அவர் மனதில் படமாய்ப் பதிந்து போயிருந்தது. அவ்வண்ணம்தான் அவரின் இன்னொரு பேர்த்தியின் எண்ணிக்கை அதிகமாகியது.

இருவரும் கிட்ட நெருங்கினர். உட்காரச் சொன்னார். சாய்வு நாற்காலிக்குக் கிட்ட இரும்புக் கதிரைகளை எடுத்துவந்து போட்டுக்கொண்டு அவரெதிரில் அமர்ந்தனர்.

மாலாவின் முகம் பொலிந்திருந்தது. பூபதியும் சிரித்த முகத்துடனிருந்தாள். கையிலே அழைப்பிதழ் வைத்திருந்தாள் மாலா. அவளின் கல்வயாண அழைப்பிதழாய் இருக்கலாமெனத் துணிய அந்த முக விலாஸமே போதும்.

"கலியாணமா....? எப்ப....?" என்றார்.

"சித்திரை பதினெட்டு தமிழுக்கு" என்றாள்.

"ஆர் மாப்பிள்ளை? வெளிநாடோ?"

"சங்கானை ஆக்கள். இஞ்சதான் இருக்கினம்" என்று சிரித்தாள். "கலியாணம் முடிஞ்சவுடன வெளிநாடு போக இருக்கிறம். முதலில அவர் போவார். பிறகு நான் போவன்."

"ஓ... உன்ர தங்கச்சி ஒருத்தி பிரான்சிலயெல்லே இருக்கிறா?" என்றார் அவர். அது பதில் வேண்டிய கேள்வியல்ல.

அந்த வகைப் பேரங்களை அவரால் புரியமுடியும். ஷீலா வெளிநாட்டிலிருப்பது 'அவர்' வெளிநாடு செல்வதற்கான உத்தரவாதத்தைச் செய்யும். அது ஒருவகையில் மாற்றுருப் பெற்றிருக்கும் இலங்கைத் தமிழரின் தற்போதைய சீதன முறைமை.

அவளுக்காகவே கண்டிப்பாய் திருமணத்துக்கு வருவதாகக் கூறி அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுநேரமாய் ஒரு சஞ்சலப் படர்கை உள்ளத்தில். பின்னாலேதான் அதன் காரணத்தை அவர் இனம் கண்டது.

சிவந்தன்.... லக்சோ....

லக்சோவையும் ஒருவகையில் அவர் இழந்திருக்கிறார்தானே!

இது என்ன மகாவிதி!

அவரெங்கே, அவரது குடும்பமெங்கே, சமூக பொருளாதார அந்தஸ்து தளங்களெங்கே? இருந்தும் அவரின் பேரக் குழந்தைகளின் நிலைமை என்னவாயிற்று? அவர் மகளின் நிலை எப்படியானது? ஒரு கருமேகம் படிந்தாற்போன்றல்லவா அந்தக் குடும்பத்தின் இருப்பு ஆனது?

விசுவலிங்கமெங்கே? நயினாதீவிலிருந்த அந்தக் குடும்பத்தின் சமூக பொருளாதார அந்தஸ்து தளங்களெங்கே? இருந்தும் அந்தக் குடும்பத்தின் வாழ்முறை மாற்றம்.... மகிழ்ச்சி.... குதூகலம்.... பூரிப்பு....?

மனத்தில் ஒரு எரிவு வந்து விழுந்தது.

பின்னர் அது ஒரு சிலரின் இழப்பில் ஒரு சிலர் பலனடைவதான எண்ணத்தின் கோபமாய்ப் பரிணமிக்கப் பார்த்தது.

லண்டனில் நிகழ்ந்த ஒரு சந்திப்பில் பேராசிரியர் சற்குணம் சொன்னதை அப்போது ஞாபகமாக்கினார்.

அவர் சொல்லியிருந்தார்: 'இது ஒரு மகா பிரளயம்! அடியொட்ட ஆட்டங்காணாமல் இது அடங்கப்போவதில்லை. பழைய அற விழுமியங்கள், பழைய சிந்தனைகளெல்லாம் வெடித்துச் சிதறத்தான் செய்யும். விடுதலைப் போராட்டம் கூட ஒரு தக்கவிலை குறிக்கப்படும்போது திசைமாறிப் போக வாய்ப்புண்டு. நாம் நெருப்பின் துளிபோன்ற பரிசுத்தத்துடன், பிடுங்கினது ஆதாயம் என்ற கணக்கில் இல்லாமல், இருப்பதுதான் செய்யக் கூடியது. நெல்லுக்குப் போல புல்லுக்கும் பொசியும்தான். இதன் ஒழுங்குபடுத்துதல்களை காலம் செய்யும்.'

நிதானம் வந்தது.

## 32

அரசியும் தாயார் வாலாம்பிகையும் முற்றத்தில் அமர்ந்திருந்தார்கள். அரசி சம்மணமிட்டு உட்கார்ந்து குனிந்த தலையோடிருந்தாள். கை மணல் கிளைந்துகொண்டிருந்தது.

பகலில் நெருப்பு வெய்யில் எறித்தது. வற்றாப்பளை அம்மன் கோவில், பற்றித் தலைச்சி அம்மன் கோவில், நுணாவில் கண்ணகை அம்மன் கோவில், கச்சாய் எரிந்த ஆலடி அம்மன் கோவில் என்று அம்மன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் கொடியேறி திருவிழா நடக்கிற காலம் அது. வெய்யில் கொளுத்தட்டும்; ஆனால் அம்மன் சினக்காவிட்டால் சரிதான் என்பதே ஒரு சேர்ந்த எண்ணமாயிருந்தது எங்கணும். இரவு எட்டு மணி ஆகிற அந்த நேரத்திலும் நிலச்சூடு தணியவில்லை. வேறு சமயங்களில், சலக்கடுப்பாக்கப் போகிறது, எழும்பு பிள்ளையென்று அதட்டியிருக்கக்கூடிய வாலாம்பிகை அன்றைக்கு அப்படிச் செய்யாததோடு தானுமே மணலில் குண்டிகுத்தியிருந்தாள். நாடியில் கை முட்டுக்கொடுத்திருந்தது.

அது சுமுகமான சூழ்நிலையில்லை.

அவள் தன் பேச்சில் புண்பட்டுப் போனாளென்பதை அரசி தெளிவாய்ப் புரிந்தாள். அவர்களுக்குள் அப்படியான விரிசல்கள் பெரும்பாலும் விளைவதில்லை. அன்று சின்னதாய்த் துவங்கின விஷயம் பெரிதாகி முரண்படு நிலை ஏற்பட்டுவிட்டது.

காலையில் இவ்வாறுதான் துவங்கிற்று அந்த விவகாரம்.

'ஐயா போய் இந்தளவு மாதமாச்சு, ஒரு கடுதாசி கூட எழுத மனமில்லாமல் நிக்கிறாரே!' என்று ஒரு அங்கலாய்ப்புடன் கூறினாள் வாலாம்பிகை.

கொஞ்ச நாட்களாகவே அவள் மனத்தை அறுத்துக் கொண்டிருந்த விஷயம் அதுதான் என்பது அரசிக்குத் தெளிவாயிற்று. நாடு அந்தளவு அழிவினைத் தாங்கியும், அவலம் நீங்க இன்னுமே முடியாதிருந்த நிலையிலும் இருக்க, இந்தியா போனவர் திரும்பி வரவில்லையென்று மனவருத்தப்பட ஏதுமில்லையென்று அவள் நினைத்தாள். எதிர்வீட்டில் இருந்தவள் ராகினி. தலையாட்டி காட்டிக் கொடுத்து ராணுவம் கைதுசெய்துகொண்டு போனது. ஒரு மாதமாய் அப்பப்ப வீடு வந்து போய்க்கொண்டிருந்த புவனேந்தி இன்றுவரை போனவந்த இடம் தெரியாது. அவை இழப்புக்கள். அவை விசனத்துக்குரியவை. அவையே ஒருவரின் அக்கறைக்குமுரியனவாகும். இந்தியாவில் பாதுகாப்பாய் இருக்கிற ஒருவருக்கு அதுமாதிரி இரக்கங்கள் வியர்த்தம்.

அதனால் அசிரத்தையோடும் ஒருவகைக் கிண்டலோடும் பதிலளித்தாள்: 'இப்ப அவரின்ர காயிதம் வரேல்லையெண்டு தான் உங்களுக்கு தவனமாயிருக்கோ?'

தவனம்.... தாகத்தில் வருவது.

வாலாம்பிகையின் மனது சட்டெனக் குறண்டியது. ஆனாலும் அந்த வார்த்தையைக் கவனியாதவள்போல சொன்னாள்: 'உனக்கு ஐயாவின்ர ஞாபகம் வாறதில்லையோ, பிள்ளை?'

'வரும், எப்பவாவது இருந்திட்டு. ஆனால் கவலைப்படுகிறதில்லை. அதைவிடக் கவலைப்படுகிறதுக்கான எவ்வளவோ விஷயங்கள் இஞ்சயிருக்கு. அடுத்த வேளை அரிசிக்கு என்ன செய்யிறது.... அடுப்பு மூட்ட நெருப்புக்குச்சிக்கு எங்க போறது.... ஊரில நாட்டில உலகத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்குதெண்டு தெரியேல்லை; செய்தி கேக்கலாமெண்டால் றேடியோவுக்குப் பற்றி முடிஞ்சு மூண்டு மாசம்; வெய்யில்ல வைச்சு சூடாக்கி சூடாக்கி எத்தனை நாளைக்குத்தான் போட்டுக் கேக்கேலும்? உலகம் வேகமாய் முன்னேறிக்கொண்டிருக்காம். எனக்கெண்டால் அப்பிடித் தெரியேல்லை. இதுகளை யோசிக்கவே பொழுது போதாமலிருக்கு. வேற யோசினையள் எப்பிடி வரும்?'

சிறிதுநேரம் பேசாமல் தூரத்தின் இருளையே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு திரும்பி, 'நான் இஞ்ச இருக்கிறது.... உனக்குப் பாரமாயிருக்கா, அரசி?' என்றாள் ஒரு ஏக்குற்ற பார்வையோடு.

'அதைப்பற்றி ஆரம்மா இப்ப பேசினது? ஏன் எதையும் எதையுமோ முடிச்சுப்போட்டு கதைக்கிறியள்? இந்த மண்ணிலயிருந்து நிர்ப்பந்தமாயுமோ நிர்ப்பந்தம் இல்லாமலுமோ வெளியில போய்விட்ட மனிசரைப்பற்றி எனக்குக் கவலையில்லை எண்டதைத்தானே நான் சொன்னது. நானும் நீங்களும் சேர்ந்து பாடுபட்டுத்தான் எங்கட வயித்துப்பாட்டுக்கு ஏதாவது செய்யவேணும். மரவள்ளிக் கிழங்கையும் முட்டுக்காய்த் தேங்காயையும் திண்டுகொண்டு எத்தினை நாளைக்கம்மா இருக்கேலும்? இதுதானே இப்ப எங்கட அக்கறை. ஐயா இந்தியாவில.... தம்பி பிரான்சில.... ஏனம்மா அந்தக் கதையளெல்லாம் இப்ப? அதைத்தானே வேண்டாமெங்கிறன்.'

'என்னமோ.... மனது அடிக்கடி ஐயாவை நினைச்சு அவதிப்படுகுது. இப்பவெல்லாம் கனவு வருகுது. இடையில குழம்பிக் குழம்பிப் போகுது. சஞ்சலமாயிருக்கு, அரசி. வேற ஆரிட்ட நான் போய்ச் சொல்ல ஏலும்? அதுதான் கடுதாசிகூட வரேல்லையெண்டு ஏக்கமாயிருக்கிறத உன்னிட்டச் சொன்னன். மற்றப்படி தவனத்தினாலயில்லை.'

அம்மா சுடுபட்ட இடம் தெரிஞ்சது.

அவளுக்கும் கவலைகளுண்டு.

அரசி சமாளித்து சிரித்தாள்.

'நான் சும்மா சொன்னன், அம்மா.'

'உனக்கு ஒண்டு கவனமிருக்கோ?'

'என்ன?'

'அய்யா இந்த முப்பத்தஞ்சு வருஷ காலத்திலை சொல்லாமல் ரண்டு நாளுக்கு மேல எங்கயும் போய் நிண்டதில்லை. நாலஞ்சு நாளைக்கு மேல வேலணையில நிக்கப்போறதெண்டாலும் உடன போஸ்ற் காட் எழுதிப் போட்டிடுவார்.'

மெய்தான். அவர் எழுதி அறிவிக்காமல் நின்றதில்லைத்தான்.

காலைப்போதுப் பேச்சு அந்தளவோடு அடங்கியது.

மாலையில் கிளைகளோடு அது முளைத்தெழுந்தது மறுபடி.

'அரசி...!' என்று குழைந்தாள் வாலாம்பிகை.

'என்னம்மா?'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒண்டு கேப்பன், கோவிக்கமாட்டியே!'

'ஏனம்மா சும்மா நான் கோவிக்கப்போறன்? சொல்லுங்கோ.'

'ஒருக்காப் போய் பாத்துக்கொண்டு வந்தா என்ன, அரசி?'

'எங்க போய்ப் பாக்கிறது?'

'இந்தியாவில.'

'என்னம்மா பேச்சு இது! உங்களுக்கு இஞ்சயிருந்து தனியாய் நயினாதீவு போகவே வழி தெரியாது. நீங்கள் எப்பிடியம்மா இந்தியாவுக்குப் போய்...'

'இப்பதான் கனபேர் போய்கொண்டிருக்கினமே! கூடிக்கொண்டு போய்வந்திடுவன்.'

'அப்ப... போறதெண்டு முடிவே பண்ணியாச்சா?'

'நீங்களெல்லாம் மறந்திட்டு இருப்பியள். நானும் அப்பிடி இருந்திட ஏலுமே?'

அம்மா தீர்மானித்துவிட்டாளென்று தெரிந்தது. எரிச்சலாக வந்தது. ஆனாலும் அடக்கிக்கொண்டு சொன்னாள்: 'கறுப்புச் சட்டைக்காறன் தனிய இருக்கிற பொம்பிளயளயெல்லாம் கெடுத்துக்கொண்டு திரியிற விஷயம் தெரியுமெல்லோ?'

'அது கிளிநொச்சியிலதானே!'

'இஞ்ச நடக்காதெண்டது என்ன நிச்சயம்? கச்சாயும்தான் வயலும் தோட்டமும் பத்தையும் வெளியுமாய் இருக்கு!'

'சின்னாச்சியை... இல்லாட்டி பவளத்தை கூடவந்து நிக்கிறதுக்கு ஒழுங்கு பண்ணியிட்டுத்தானே போவன்?'

'ம்!'

மீண்டும் அந்த விவகாரம் விளக்கு வைத்த சமயத்தில் தொடங்கிற்று.

'நீ அதுக்கு ஒரு பதிலும் சொல்லேல்லையே, பிள்ளை!'

'சொல்லாட்டி விடமாட்டியள். சரி, காசுக்கு என்ன செய்வியள்?'

'சுதனுக்கு எழுதலாமெண்டிருக்கிறன்.'

'அந்த நாய் அனுப்புமெண்டு நினைக்கிறியள்?'

'ஏன் பிள்ளை அந்தமாதிரிப் பேசுறாய்?'

'பின்னை....? இவள் வராட்டில் போகட்டும், எவளாவது வந்தால் சரியெண்டு நினைச்சுக்கொண்டு விசுவரின்ர பெட்டையை இழுத்துக்கொண்டு போய் வைச்சு அங்க குடும்பம் நடத்துகிறவனை.... வேற என்னமாதிரிச் சொல்லவேணும்? இப்பவும் தேள்வை இருக்கு.... அதால... எந்த நாயின்ர கால்ல விழுந்தாவது காசு கேப்பியள் போய்ப் பாக்க. ஆனால் நான் ஏன் மரியாதை குடுக்கவேணும்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தொடர்ந்துதான் அந்த மௌனம் வந்து அம்மாவில் கவிந்தது.

தான் அந்த மாதிரிக் காட்டமாய்ச் சொல்லியிருக்கக் கூடாதென்று நேரமாக ஆக அரசிக்குப் புலனாயிற்று. தான் எதற்காக அப்படி ஒரு வெடிப்பிலிருந்து வார்த்தைகளை உதிர்த்தாளென்று நினைக்க அவளுக்கே வியப்பாயிருந்தது. தன் மனத்தின் குரூர பக்கங்கள் அந்த வசவில் வெளியாயினவோ என்றும் நினைத்து உள்ளே அதிர்ந்தாள்.

அம்மா அது மாதிரியான / எது மாதிரியான சுடுசொல்லையும் தாங்கக்கூடியவளில்லை. அவளால் வன்சொல் பொறுக்க முடியாது. வேறு போக்கிடமின்மைதான் அவளை அந்தளவு நேரம் வரைக்கும் தங்க வைத்தது அங்கே.

அது அரசியை வெகுவாக உலுப்பியது.

தாயாரை மெல்ல அழைத்தாள்.

"என்ன...?" என்றாள் வாலாம்பிகை.

"நாங்கள் தனித்தனி மனித உறவுகளைக் கவுரவப்படுத்துறமே தவிர மனிதத்தைக் கவனத்திலயே எடுக்கேல்லையெண்டது இப்ப எனக்கு விளங்குது. வாழுறதுக்காக இஞ்ச ஓடுறம், அங்க ஓடுறம்... அதை இதைச் சொல்லுறம்... எல்லாம் எனக்கு எரிச்சலாயிருக்கம்மா. இதெல்லாம் எங்க போய் முடியப்போகுதெண்டு நினைச்சு உண்மையில எனக்கு கவலையாய் இருக்கம்மா. நாங்கள் எங்கயோ தவறு செய்யிறமெண்டு எனக்கு மனசுக்குள்ளயிருந்து எதுவோ சொல்லிக்கொண்டிருக்கு. நான் அமைதியே இல்லாமல் இருக்கிறனம்மா."

வாலாம்பிகை மௌனமாயிருந்தாள். பிறகு திரும்பி, "அதுதான் அந்தமாதிரி எழுதினியோ?" என்று கேட்டாள்.

"எந்த மாதிரி...?"

"நீ எழுதினது எதுவோ கொழும்புப் பேப்பர் ஒண்டில வந்திருக்காமே!"

"ஓ...! கவிதை வந்திருக்கு. உங்களுக்கு ஆர் சொன்னது?"

"பவளம்."

"ம்... போதும்... இனியாவது நாங்கள் வாழவேணும்... தயவுசெய்து கந்தகப் புகையை நிறுத்துங்கள்... தம்பி... முதலில நீ அந்த ஆயுதத்தைக் கீழ வை... அக்கா சொல்லுறன் எண்டு எழுதியிருக்கிறன்."

"அந்த மாதிரியெல்லாம் இனிமே எழுதவேண்டாமெண்டு பவளம் சொல்லச் சொன்னா."

"ஏன், பெரிசுக்கு பிடிக்காதாமோ?"

"அந்த மாதிரியெல்லாம் ஏன் எழுதுறாய்? ஆபத்தெல்லே?"

"வந்தால் வரட்டும். இது என்ர நாடும்தான். எனக்கும் அக்கறையிருக்கு. அதுக்கு எது நன்மையெண்டு நான் நினைக்கிறனோ, அதை நான் எங்கயும்... எப்பவும் சொல்லுவன். என்ர கையைக் கட்டிப்போட ஆராலயும் ஏலாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடி மௌனமானாள் வாலாம்பிகை.

இருட் திணிவுகளில் பார்வை பதிந்திருந்தது.

வெகுநேரத்தின் பின், "வேற ஆருக்குப் போய் நான் எழுத ஏலும்? பெத்த பிள்ளையிட்டத்தான் கேக்கலாம். நாளைக்கே காயிதம் எழுதுறன் அவனுக்கு" என்றாள்.

அதிசயம் வந்து மூடியது அரசியை. மௌனத்துள்ளிருந்து அவளடைந்த தெளிவா அது?

அரசி பதிலளித்தாள்: "பாஸ்போர்ட் எடுக்க.... பிளேன் ரிக்கற் எடுக்க.... எல்லாத்துக்குமாய் இருபத்தஞ்சாயிரமாவது வேணும். கொஞ்சம் கூடுதலாயே கேட்டு எழுதுங்கோ. ஐயா திரும்பி வாறதாயிருந்தால் அதுக்கும் தேவை தானே!"

வாலாம்பிகை எழுந்து உள்ளே சென்றாள்.

"அரசி, தேத்தண்ணி குடிப்பியா?"

"ம்! நானே வைக்கலாமெண்டிருந்தன். வையுங்கோ."

அவளுக்கு விழித்திருக்கவேண்டியிருந்தது.

கையில் ஊடுருவி விரல்களூடாய்க் கசிவதற்கென்று மனத்திலிருந்து ஏதோ உணர்வு உளைந்தது.

அது கருத்தாக / கவிதையாக எப்படியும் வரலாம்.

சிரசுதயம்மட்டுமே ஆண் / பெண் தெரிவித்து விடுவதில்லை.

ஜெயம் என்பது என்ன?

அதுதான் அவள் மனத்தில் சுழித்து நின்றது.

தேநீர் அருந்திய பின், விளக்கை அணைத்து வைத்துவிட்டு வந்து பழையபடி முற்றத்து முருங்கையோடு வசதியாக சாய்ந்தமர்ந்தாள்.

முருங்கையின் முள்கள் மழுங்கியிருந்தன.

அது அவள் கல்யாணமாகி வந்த பின்னால் வைத்த மரம்தான். அதுபோல அவளது நயினாதீவு வீட்டு முற்றத்திலும் கன்னிக்காலாய் நட்ட முருங்கு நிற்கிறது. வேலாயுதம் மறைந்த பிறகு வந்த அம்மாவிடம், கன்னிக்கால் மரம் எப்படி நிக்கிறதம்மா என்று கேட்டதற்கு, அம்மா அழுதாள் பதிலை. வாழ்வின் வளத்தை நட்ட கன்னிக்கால் காட்டிவிடும் என்பார்கள் ஊரிலே. ஆனால் மரம் நல்லாயிருக்கிறபோதே வாழ்வு சிதைந்துவிட்டதேயம்மா என்ற அர்த்தமே அதிலிருந்ததை அரசியால் சுலபமாய்ப் புரிய முடிந்தது. அப்போதும் கன்னிக்கால் மர நினைவு வந்தது. பின் வேலாயுதத்தின் நினைவாக அது பரிணமித்தது.

நட்சத்திர விகசிப்பைப் பார்த்து தன்னைச் சுதாரித்தாள்.

மனத்தில் சுழித்து நின்ற கேள்விக்கான பதில் மெல்லச் சுரந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெற்றி - தோல்வி என்பவை போட்டி அல்லது பந்தயம் போன்றவற்றின் முடிவு குறிக்கும் சொற்களாகும். அது ஒரு யுத்தத்தின் இறுதி ஸ்திதிகளைக் குறிப்பன அல்ல. யுத்தத்தின் முடிவு ஒன்றே ஒன்றுதான். அதுதான் அதன் விளைச்சல். அது... அழிவு! ஒரு பகுதிக்கு கூடிய அழிவு, மறுபகுதிக்கு குறைந்த அழிவு என்று வேண்டுமானால் கொள்ளலாம். போட்டியின் பெறுபேறாய் அழிவு கருதப்படுவதேயில்லை. அழிவு... யுத்தத்துக்கானது.'

அந்த வகைப்பாடு கவிதையாய் ஜனிக்காவிடினும் அவளுக்கு அதில் ஒரு திருப்தி இருந்தது.

## 33

ஒரு காலை நேரத்தில் பருத்தித்துறையிலுள்ள ஒரு மனிதர் கடிதமொன்றைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனார். கொழும்பிலிருந்து சோமசுந்தரம் என்பவர் கொடுத்தனுப்பியிருந்த கடிதம் அது. அவளிடம் கொடுக்கும்படி ரூபா இருபத்தையாயிரத்தை சுதந்திரன் என்கிற தன் மகனின் சிநேகிதன் அனுப்பியிருக்கிறதாகவும், அவளே நேரில்வந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சுருக்கமாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்குறிப்பிட்டு, அவசியம் அடையாள அட்டை கொண்டுவரும்படியும் எழுதியிருந்தார்.

"என்ன செய்ய, அரசி?" என்று கேட்டாள் வாலாம்பிகை.

"போயிட்டு வாருங்கோ."

"நீயும் வா."

"நான் எதுக்கு?"

"கூட வந்து பாஸ்போர்ட் எல்லாம் எடுத்து என்னை அனுப்பிப்போட்டாவது திரும்பி வாவன்."

"ரண்டு பேரும் போக இஞ்ச விடமாட்டினம். நீங்கள் மட்டுமாயிருந்தால், மகள் இஞ்ச இருக்கிறாவெண்டும் சொந்தக்காறரைப் பாத்திட்டு திரும்பி வந்திடுற தாயும் பிணை சொல்லியிட்டுப் போகலாம். இந்தியாவுக்குப் போற விஷயம் தெரியக்கூடாது. ஏரியாத் தலைவரிட்ட இஞ்ச துண்டு வாங்கிக்கொண்டு போனால்தான் வவுனியாவில பாஸ் கிடைக்கும்."

"வவுனியாவில என்ன பாஸ் பிறகு?"

"வவுனியாவில புலிகளிட்ட பாஸ் எடுத்துக் கொண்டு போனால்தான், அங்கால போக ஆமிக்காறன் பாஸ் தருவான். ஆமிக்காறன்ர பாஸ் இல்லாமல் கொழும்பு போக ஏலாது. வழியில கேட்பாங்கள். அப்ப காட்ட வேணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலாம்பிகைக்கு புரியவில்லை. அவள் அறிந்தவரை கொழும்பிலே கடவுச் சீட்டு எடுத்தால் விமானமூலம் தமிழ்நாட்டுக்குப் போயிடலாம். அண்மைக் காலம்வரை கூட நடைமுறை அந்தமாதிரித்தான் இருந்து வந்ததாக மற்றவர்கள் சொன்னது அவளுக்கு ஞாபகம். சண்டைக்குப் பிறகுதான் எல்லாம் ஒழுங்கில்லாமல் போயிற்று. அதுவும் விசித்திரமாக, கொழும்பு வேறு நாடுபோல! அவளுக்கு அப்படித்தான் புரிந்தது. இந்த நிலையில் விபரம் புரிந்த ஒருவர் கூட இல்லாமல் தன்னால் எதுவும் செய்துவிட முடியாதென்று அவளுக்குத் தோன்றிற்று. எப்படியாவது அரசியைக் கூட்டிக்கொண்டு போய்விடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அவள் மறுத்துவிட முடியாதபடி அமையும் ஒரு தருணத்துக்காகக் காத்திருந்தாள்.

இரண்டு மூன்று நாட்களின் பின் தோட்டத்தில் இருவரும் நின்றிருந்தபோது மிகத் தாழப் பறந்துசென்ற ஒரு விமானத்தைப் பார்த்து கூ...வென்று கூவி அடுத்தடுத்த தோட்டங்களில் நின்ற சிறுவர்களெல்லாம் ஆரவாரம் செய்தார்கள். திடீரென்று ஏற்பட்ட ஒரு குதூகலத்தில் அரசியும் கூவிக் குதூகலித்தாள். பின் தன் செயலுக்காய் விழுந்து விழுந்து சிரித்தாள்.

வாலாம்பிகையும் சிரித்தாள்.

அந்தநேரத்தில் அரசியோடு பேசலாம்.

"அரசி!"

"என்னம்மா?"

"துண்டெடுக்க நாளைக்கு நீயும் வாறியா?"

"வாறனம்மா."

"சந்தைக்குப் போயிட்டு அப்பிடியே இயக்க ஒபீஸ் போகலாம்."

"சரி."

"ரண்டு பேருக்குமே துண்டு கேப்பம்."

"தரமாட்டினம், அம்மா. எங்களிட்ட பவுண் குடுத்த துண்டும் இல்லை..."

"கேட்டுப் பாப்பம். தந்தால் தரட்டும். இல்லாட்டி எனக்குமட்டுமாவது எடுப்பம்."

"நான் வந்து திரும்புறதெண்டாலும் மூவாயிரம் நாலாயிரம் ரூபா வேணும். வீண் சிலவுதானே!"

"அதொண்டும் வீண் சிலவில்லை."

"காசு... நீங்கள்தான் தரவேணும்."

"தாறன். தம்பி அனுப்பின காசுதானே!"

"எனக்கு அவன்ர காசு வேண்டாம். உங்கட காசில தாருங்கோ, வாறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் உள்ளடங்கிக் கிடக்கும் ஆத்திரத்தைக் கிளறவேண்டாமென்று அவ்வளவில் நிறுத்திக்கொண்டாள் வாலாம்பிகை.

மறுநாள் இயக்க அலுவலகம் போனபோது, அவர்கள் எதிர்பாராதவிதமாய் அரசிக்குத் தெரிந்த ஒரு இளைஞனே அலுவலகப் பொறுப்பாளியாக இருப்பது தெரிந்தது. அப்பகுதிப் பொறுப்பு வகித்த இளைஞனும் அப்போது அங்கே நின்றிருந்தான். அவர்களை அமரச் சொல்லி வந்த விஷயம் என்னவென்று கேட்டுக்கொண்டு உள்ளே சென்றான் அலுவலகப் பொறுப்பாளி.

சிறிதுநேரத்தில் பகுதிப் பொறுப்பாளி இளைஞன் வெளியில் வந்தான். வாசலில் நின்று அவளைத் தீர்க்கமாக ஒரு சில கணங்கள் பார்த்தபடி நின்றான். அவள் கண்கள் எதேச்சையாய் வந்து சந்திக்க சிரித்தான். கிட்ட வந்து அவளோடு பேசினான். படிப்பு.... அவளது சிநேகிதியான ராகினி.... கவிதை எழுதுதல்கள்பற்றி.... அண்மையில் மேடையேறிய நாடகங்கள் பற்றி.... எல்லாம் கேட்டான். சொன்னாள். வீரகேசரியில் வெளிவந்த கவிதைபற்றி குறிப்பாக அவன் கேட்கவில்லையென்றாலும் அவன் அதைத் தெரிந்திருந்தானென்றே அவளுக்குத் தோன்றியது. உடனடியாக அவன் புறப்பட விருந்ததைக் காரணம் சொல்லி மறுநாள் விட்டு மறுநாள் வரும்படி கூறி அனுப்பினான். என்ன செய்வதென்பதைத் தீர்மானிக்க அந்தக் கால அவகாசம் தேவைப்பட்டிருந்ததென்பதை அரசி சுலபமாக தெரிந்தாள். அம்மா.... அக்கா.... என்றெல்லாம் அன்பாகவும் மரியாதையாகவும் அவர்கள் பேசியிருந்தாலும் மனத்தின் இறுக்கம் அரசிக்குத் தளரவில்லை. தனக்கு அனுமதி கிடைக்குமென்ற நம்பிக்கை துப்புரவாக அவளிடத்தில் இல்லை. தாயாரைப் பொறுத்தவரையும் பாதிக்குப் பாதி நம்பிக்கைதான் இருந்தது.

இரண்டாம் நாள் காலை மறுபடி புறப்பட்டார்கள்.

காற்று, அந்தளவு காலையிலேயே கொதிப்பேறத் தொடங்கிவிட்டிருந்தது.

அல்லாரை வெளியின் பசுமைகளினூடு.... குழிகளில் மட்டுமே மிச்சமாய்த் தேங்கிநின்ற நீர் வட்டங்களினூடே.... அதற்குமப்பால் தோட்டங்களும் வடலிப் பனைக் கூடல்களுமென்று காட்சி ரம்மியங்களினூடு நடந்தார்கள் அவர்கள்.

வாலாம்பிகை ஏதோ முணுமுணுத்தாள்.

"கரையெல்லாம் பொட்டல் வெளியாயிருந்தாலும் தீவில இந்த மாதிரி வெக்கை அடிக்காது இந்தளவு காலம்புறத்திலயே!" என்றாள் என்னம்மா என்று அரசி கேட்டதற்கு.

"நீங்கள் தீவை விட்டுக் குடுத்துப் பேசமாட்டியளே!"

"பின்னையென்ன? இஞ்ச பார், இப்பவே மொசமொசவெண்டு வேர்க்கத் துவங்கியிட்டுது."

இருவரும் சிறிதுநேரம் பேசாமல் நடந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைக்கிள் ஓடப் பழகவேணும்" என்றாள் அரசி இருந்தாற்போல.

வாலாம்பிகை சிரித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறியள்?"

"ஒண்டுமில்லை. பழகு, நல்லதுதான். உன்னைவிட வயசுபோன மனிசிகளே இப்ப சைக்கிளோடுதுகள். எங்கட ஒழுங்கைக்க ரண்டாவதாய் இருக்கிற ஒழுங்கையில ஒரு தடிச்ச மனிசி இருக்கே தலையெல்லாம் நரைச்சுப் போய்...."

"தவமணி...."

"ம். அந்த மனிசிக்கு என்ர வயசிருக்கும். அதுவே சைக்கிள் ஓடுது. அதுமட்டுமோ.... மனிசி அந்தளவு உயரத்துக்கு விறகு கட்டி ஓடுறதைப் பாக்கவேணுமே!"

"பாவம்! மனுசிக்கும் புருஷன் இல்லை. விறகு வெட்டிக் கட்டிக்கொண்டுபோய் வித்துத்தான் வயித்துப் பாட்டைப் பாக்குதுகள்."

"அந்தமாதிரிக் கனபேர் இப்ப செய்யினம்போல? பாத்தன்."

"ஓம். புவனா, அல்லி அக்கா எல்லாரும் அந்த மாதிரித்தான் உழைச்சுப் பிழைக்கினம்."

"அவ்வளவு விறகையும் கொண்டுபோய் எங்க விப்பனம்?"

"சாவச்சேரிச் சந்தையில. வேற ஆக்கள் அதை வாங்கிக்கொண்டு போய் யாழ்ப்பாணப் பக்கத்தில விப்பனம். விளக்குகளுக்கே எண்ணை இல்லை. அடுப்புகளுக்கு ஊத்த எங்க போறது? அதால.... இப்ப எல்லா இடத்திலயும் விறகு அடுப்புத்தான் எரிக்கினம்."

"இப்பிடி நிலைமைபோனால்.... கெதியில வடமாகாணமே பொட்டல்வெளியாய்ப் போகுமே, அரசி....!"

"மெய்தானம்மா" என்றாள் அரசி ஓர் அச்ச அதிர்வு உள்ளத்துள் கிளர.

"சைக்கிளும் பயங்கரமான விலையாயிருக்குமோ இப்ப?"

"புதுச் சைக்கிள் ஐயாயிரம் ஆறாயிரம் ரூபாய் விக்குதாம்."

வெய்யில் உச்சமடைந்திருந்த நேரத்தில் இருவரும் இயக்க அலுவலகம் அடைந்தனர்.

ஆச்சரியப்படும்படிக்கு இருவருக்குமே கொழும்பு போய்வர அனுமதிச் சீட்டு கிடைத்தது.

புலிச் சின்னமிட்ட அந்த அனுமதித் துண்டையே சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்தாள் அரசி. பின் நன்றி சொல்லிக்கொண்டு தாயாருடன் அலுவலகத்தை விட்டு வெளியேறினாள்.

கொழும்பு போய்வந்த யாரையாவது சந்தித்து போய் வருவது தொடர்பான விஷயங்களை கேட்டறிந்துகொண்டு புறப்பட ஆயத்தமாக வேண்டியதுதான். இனி அம்மா சும்மா இருக்கமாட்டாள். இன்னும் ஒரு பத்து நாளில் புறப்படுகை தவிர்க்கமுடியாதிருக்குமென அரசி எண்ணினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34

வெகுவான ஆரவாரமின்றி அவர்களது புறப்பாடு இருந்தது. அரசியிடத்தில் ஒரு பயணப்பை. வாலாம்பிகையிடத்தில் ஒரு பழைய சூட்கேஸ். சுந்தரலிங்கம் பாவித்ததுதான். நாகபூஷணியம்மன் கோவில் திருவிழாவுக்கு அல்லது வழிபாட்டுக்குக்கூட அதைவிட நல்லமாதிரி வெளிக்கிட்டுப்போன அனுபவம் அவர்களுக்குண்டு. ஆனால் அன்றைக்கு....

நடநடவென்று நடந்து.... மரநிழலில் இளைப்பாறி.... டிராக்டர் பெட்டியில் நெரிபட்டு.... எங்கெங்கோ தண்ணீர் வாங்கிக் குடித்து.... எவரெவரோ கொடுத்ததைச் சாப்பிட்டு.... திறந்தவெளிதனில் படுத்துறங்கி.... பற்றை மறைவுகளில் இயற்றையுபாதை கழித்து.... முகம் கழுவியோ கழுவாமலோ நாளைத் துவக்கி.... பயணத்தில் சிரமங்கள் கொள்ளை. அவர்கள் அவற்றை அறிந்திருந்தார்கள். பிரயாணம் இனிமையாக இருந்த காலமில்லை அது. எதிலும் நிறுதிட்டமான கணிப்பு, திட்டம் முன்னேற்பாடுகள் சாத்தியமில்லாமல் இருந்ததே காரணம்.

அதனால் புறப்பாடுகளில் விடைபெறுதல்கள் இல்லை; ஆடம்பரங்கள் அலங்காரங்கள் இல்லை; சந்தோஷங்களுமில்லை. அவை இயல்பில் பயணம் / பிரயாணம் எனப்படும். காலத்தின் வலிய கர நெரிப்பில் அவை யாத்திரை எனப்படுதலே தக்கன.

சுமார் இருபது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு வரையில்கூட வைகாசி பிறப்பது நெடுஞ்சாலைகளுக்கு சிறப்பெடுத்த காலமாயிருந்தது. முருக பக்த கூட்டமாய்ப் பக்தர்கள் கதிர்காமம் நோக்கி கால்நடையில் புறப்படுவர். போக வர அறுநூறு மைல்களுக்கு மேலே. அவ்வளவு தூரத்தை 'அரோகரா.... முருகா....!' என்ற முழக்கத்தில் படை கஷ்டம் கடக்கும். அதைக் கதிர்காம யாத்திரை என்றனர்.

கதிர்காம யாத்திரையிலுள்ள காட்டு யானைப் பயம், மலேரியா நுளம்புக் கடி, வேறு விஷ ஜந்துகளின் அச்சம், அதுபோல் வேறுவேறு நோய்நொடிகளின் அவலத்தினதும் நிகரம் கொண்டது தொண்ணூறுகளில் அங்கே தொடங்கப்படும் ஒரு நெடுந்தொலைவுப் புறப்பாடு. அதை அதனால் கொழும்பு யாத்திரை என்றும் சொல்லலாம். ஆனாலும் கொழும்பு செல்பவர்களில் வியாபாரிகளும் இருந்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆனாலும் வாலாம்பிகையினதும் அரசியினதும் புறப்பாட்டை ஊர் அக்கறையோடு கவனித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாப அலைகளில் தாண்டித் தாண்டி நடப்பது சிரமம்தான்.

அந்த நடை கடினப்பட்டதுக்கு மேலும் காரணம் இருந்தது.

முதல்நாள் வெள்ளிக்கிழமை.

கொழும்புப் புறப்பாட்டுக்கு எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டாகிவிட்டன.

கதிர்காமச் சாமி கச்சாய்க் கோவில் வந்திருக்கிறாரென்று தெரிந்து அருள் வாக்குக் கேட்டுவரலாமென அரசியையும் வற்புறுத்தி அழைத்துக்கொண்டு வாலாம்பிகை சென்றிருந்தாள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் மகேஸ்வரியுடன் குறி கேட்கச் சென்றதை அப்போது நினைத்துக்கொண்டாள் அரசி. அன்று அவர் கூறிய சொற்களும் அவற்றின் அர்த்த பூடகமும் பின்னால் அவை நிஜமாகிய தன்மையும் அவளை, நினைத்த அப்போது கூட நடுக்குறச் செய்தது.

சுவாமியின் அருள்வாக்கைக் கேட்காமல் விடலாமே என்பதற்காக தாயாரிடம் ஏதேதோ சாக்குகள் சொல்லிப் பார்த்தாள். ஆனால் வாலாம்பிகை கேட்கவில்லை. மையிருட்டில் கௌபீனமணிந்தோ அணியாமலோ வாக்கருளும் கதிர்காமச் சாமியில் அவளது உள்மன வெறுப்புகளையும் மறுப்புகளையும் மீறியே மெல்லமெல்ல ஒரு ஆதர்ஷமும் அபிமானமும் உண்டாகியிருந்தன. எனவே கூடிக்கொண்டு சென்றாள்.

வாலாம்பிகையிடத்தில், இருட்டுக் கோயில் உள்ளூர ஒரு பயத்தைக் கிளர்த்தியது.

கோவிலடியில் கூட்டம் குறைவு.

சாமியார் வந்திருப்பது பரவலாகத் தெரியவராதிருக்கலாம்.

அவர் கதிர்காமம் மட்டுமில்லை சிவனொளி பாதமலை, பழனி, திருச்செந்தூர், கோணமலை, காசிச் சஞ்சாரி.

அவர் வாக்கு அனுபவரீதியானது என சிவா அசட்டையாய்ச் சொல்லியிருந்தான்.

சொல்களின் திருஷ்டாந்தமான விளைவுகளின் பின், அவள் அவர் திருஷ்டியை நம்பினாள். தனக்குள்ளே அது விளைக்கும் முரணை உணர்ந்துகொண்டும்தான் அவ்வாறு செய்தாள்.

பக்தர்கள் சிலர் வாசலில் நின்றிருந்தனர்.

திடீரென உள்ளே விளக்கின் கொழுந்து தெரிந்தது.

கோயில் பண்டாரம் அவர்களை உள்ளே வரச்சொன்னார்.

விளக்கின் முன் இருள் தெரிந்தது; இருளாய் மட்டுமே தெரியும் கதிர்காமச் சுவாமி அங்கே அமர்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலாம்பிகை முன்னே. அவளோடு அணைந்து பக்கத்தில் அரசி.

மூடப்பட்டிருந்த இமைகள் விரிய அனல் துண்டங்கள் சுவாலித்தன. அவை சுவாமியின் கண்களெனச் சிறிதுநேரத்தில் இனங்கண்டாள் வாலாம்பிகை.

சுவாமியின் விழிகளில் விழிவெண் படலங்களே இல்லையோ? அதிசயித்தாள் அரசியும். ஆனாலும் ஒருவகை நீர்க் கசிவின் பளபளப்புத் தெரிந்தது அவளுக்கு.

சுவாமி கண் கலங்கிற்றா?

மறுபடி அவ்வனல்த் துண்டங்கள் மூடுண்டன.

'முருகா.... முருகா.... முருகா.... நல்ல வாக்காய் வரப்பண்ணுயிடு....!'

முன் வளைந்து தாயாரைப் பார்த்தாள்.

இதழ்கள் அசைய கண்கள் மூடியிருந்தாள்.

அரசி தோளிலே கைவைக்க நடுங்கினாள். கண் திறந்து அரசியை ஆறுதலுக்காய்ப் பார்த்துக்கொண்டு மறுபுறம் திரும்ப சுவாமி சொன்னது: 'அவள்.... என் தாய்.... சக்தி.... விளையாடுகிறாளடி! ம்....! சின்னத்தங்கம்.... பயணம் புறப்பட்டிருக்கிறாயா? தேள்வையென்று நீ நினைக்கிறாய்; தேள்வையில்லையென்று என் தாய் நினைக்கிறாளேயடி....! நீ நினைத்ததைச் செய்யப் போகிறாயா; தாய் நினைத்ததைச் செய்யப்போகிறாயா? நீ நினைத்ததையே நீ செய்யப்போகிறாயென்றால்.... சின்னத் தங்கம்.... அரிசிப் பொரியோடு போ!.... ம்.... போ!'

கூப்பிய கரங்களுடன் இருவரும் வெளியே வந்தனர்.

ஒழுங்கையில் இறங்கியதும் வாலாம்பிகை, 'அரசி!' என்றாள்.

'என்னம்மா?'

'சுவாமி என்ன சொன்னவர்?'

'தெரியேல்லையேம்மா.'

மெல்ல மெல்ல ஊகங்களை அவர்கள் அடைந்து கொண்டிருந்தனர். அரிசிப் பொரி அமங்கலத்தின் குறியாக வாலாம்பிகைக்கு தெரியவாரம்பித்திருந்தது. அதற்கும் மேலே, அதைத் திருவாரூரோடு சேர்த்து நினைத்து சலனமடைந்து கொண்டிருந்தாள் அரசி.

அன்றிரவு படுக்கையில் கிடந்து வெகுநேரமாகியும் தூக்கம் பிடிக்கவில்லை இருவருக்கும். பேசவும் மனம் பிடிக்கவில்லை. தமக்குள் ஆழ்ந்து ஆழ்ந்து சுயஇன்பப்படுமாப்போல் ஒரு பிரயத்தனம்.

சிறிதுநேரத்தில் விசும்பி தன்னைக் காட்டிக்கொடுத்தாள் வாலாம்பிகை.

தட்டிவானுக்குக் காத்துநின்ற வேளையில் முதல் நாளைய நிகழ்வுகளை நினைத்தாள் அரசி. ஒரு கறுப்பு மேகம் வந்து கவிந்ததுபோல் துக்கமொன்று விரிந்தது மனத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35

மதியத்துக்கு மேலாயிற்று. சிறிதுநேரத்தில் மேற்கு நோக்கி வெய்யில் சாயவும் துவங்கிவிட்டிருந்தது. இனி எப்படிப் பயணத்தைத் துவக்கினாலும் தாமதம்தான். திரும்ப வீடு போய் மறுநாள்க் காலை மறுபடியும் புறப்பட்டுவர இருவருக்குமே பிடிக்கவில்ல.

பஸ் நிலையத்திலிருந்து சிறிது தொலைவிலேயே மிருசுவில் நோக்கிய திசையில் வேலாயுதத்தின் உறவுக்காரர் வீடு இருந்தது. பிள்ளைகள் மருமகள்களெல்லாம் வெளிநாடு போய்விட, கண்டி வீதியோரமுள்ள அந்தப் பெரிய பழைய கல்வீட்டில் செல்லாக் கிழவிமட்டும் தனியே இருந்துகொண்டிருந்தாள். வேலாயுதம் இல்லாது போன பின்னாடியும் இரண்டு மூன்றுமுறை அங்கே போய் வந்திருக்கிறாள் அரசி. அங்கே போனால் நின்றுவிட்டு காலையில் வான் எடுத்துக் கிளாலி போய்ச் சேரலாம் என்று யோசனை வந்தது. தனியேயாயிருந்தால் அந்தளவு யோசனைகூடச் செய்யாமலே போயிருக்க முடியும். கூட வேறொருவரோடு அங்கே போனால் செல்லாகிழவிக்குப் பிடிக்காது. ஏனோ பிடிக்காது. ஆனாலும் அந்த வேறொருவர் தாயாராக இருப்பதால் போகலாமென்றும் எண்ணிக்கொண்டு தாயாரிடம் அதைச் சொன்னாள்.

"அங்கேயா?""

செல்லாக் கிழவிபற்றி பலமுறையும் அவர்கள் முசுப்பாத்தியாகப் பேசியிருக்கிறார்கள். அந்த வகையில் அவள்பற்றி வாலாம்பிகைக்கும் தெரிந்திருந்தது.

"வீட்டை திரும்பிப்போறதைவிட இதுதான் நல்லது. அதோட..... நீங்களெண்டபடியால் மனுஷி ஒண்டும் சொல்லாது."

வாலாம்பிகை சம்மதித்தாள்.

நடக்கத் தயாராக, டிராக்டர் ஒன்று புகை கக்கியபடி வந்தது. மறித்து ஏறிக்கொண்டார்கள்.

"என்ன பிள்ளை, இப்பிடிப் புகையடிக்குது நையமடிச்சமாதிரி?"

"டீசல் கிடைக்காது. மண்ணெண்ணையில வேலை செய்தால் இப்பிடித்தான்" என்றாள் அரசி.

வாலாம்பிகையைக் கண்டதும் எதிர்பார்த்தது போல முகம் கோணி, பின் அறிமுகமாக்க தெளிந்து முகம் மலர்ந்தாள் செல்லாக் கிழவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசத் தவித்திருந்தவள்போல் விடாது பேசிக்கொண்டிருந்தாள் அவள். வாலாம்பிகைதான் அகப்பட்டது. அரசி அவள் பாடு கண்டு மனத்துக்குள் சிரித்தாள்.

நான்கு மணிக்கு மேலேதான் அங்கே சாப்பாடாயிற்று. எங்கும் பொதுவாக அதுதான் சாப்பாட்டு நேரம். மாலை முற்றிய வேளையில் தேநீர் குடிப்பார்கள். இருண்டதும் விளக்கை நூர்த்துவிட்டுப் படுப்பார்கள். சில இடங்களில், நிலாவிருந்தால் விழித்திருக்கும் நேரம் அதிகமாகும்.

இருள் சூழ்ந்து வந்தது. மூவரும் விறாந்தை விளிம்பில் வரிசையாய் அமர்ந்து பேசியபடி வீதியை நோக்கிக் கொண்டிருந்தனர். வீதியில் வெறுமை. அமைதி உறைந்து போய்க் கிடந்தது. ஒரு காலத்தில் கண்டி வீதி பேரார வாரத்துடனும் வீதி விளக்குகளின் ஒளி வெள்ளத்திலும் என்னவாய் மூழ்கியிருந்திருக்கும் என்று ஒரு கணம் எண்ணினாள் அரசி. சிறிதுநேரத்தில் மோட்டார்ச் சைக்கிளொன்று வீதியின் ஒரு முனையில் இரையத் தொடங்கி, நடுவிலே அவர்கள் காதை அடைத்து, மறுமுனையில் சென்று மறைந்தது. இருளுக்குள் அவ்வளவு விரைவாய்ச் செல்ல முடிந்த அதிசயத்தை அன்றுதான் பார்த்ததுபோல் திகைத்துப்போயிருந்தாள் வாலாம்பிகை.

அரசி கேட்டாள்: "ஆச்சி, இப்பதான் நிலமை மாறியிருக்கு, பறவாயில்லை; முந்தி எப்பிடி இஞ்ச தனிய இருந்து சமாளிச்சியள்?"

"ஏன்?"

"இல்லை.... மூண்டு பேராய் இருக்கிற இந்த நேரத்திலயே இந்த இரைச்சலுகளைக் கேக்க எனக்குக் கதிகலங்குது...."

"ஓ.... அதைச் சொல்லுறியா?"" என்று அட்டகாசமாய்ச் சிரித்தாள் செல்லா. அரசிக்கு அதுவே பயத்தை விளைப்பதிாயிருந்தது. செல்லா சொன்னாள்: "உங்களுக்கெல்லாம் சத்தத்தைக் கேக்கப் பயமாயிருக்கு. எனக்கெண்டால் மௌனத்துக்குள்ள இருக்கத்தான் பயம். சத்தம் இயற்கை; பயப்பிடவேண்டியதில்லை. மௌனம் இயற்கையில்லை; அது பயமூட்டும்."

பேசிக் களைத்த பிறகுதான் பாய் விரிப்பமா என்று கேட்டாள் செல்லா. அவர்கள் படுத்தபோது எப்படியும் பத்து மணியாவது இருக்கும்.

ஒருபோது அரசி கேட்டாள்: "ஏன் ஆச்சி, உங்கட பிள்ளையள் மருமக்களெல்லாம் வெளிநாட்டில. தனிய இஞ்ச இருந்து கஷ்ரப்படுகிறதவிட, அவையளோட போய்ச் சேர்ந்தால் நல்லதெல்லே?"

"நானோ....? அயிரோப்பாவுக்கோ....? இஞ்ச இருந்து இதுகளைக் கட்டியாளுறதுக்கே ஆக்களில்லாமல் கிடக்கு.... நானும் போயிட்டால்.... நல்லாய்த்தான் இருக்கும்."

மிக மெதுவாக.... தனக்கே போன்ற குரலில்தான் செல்லா கூறினாள்.

அந்த மாற்றத்தை, தடுமாற்றத்தை மிக மெலிதாய் உணர்ந்தாள் அரசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே அவர்கள் பேசவில்லை. வெகுநேரம் அவரவர் சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள்போல் தோன்றியது.

முதலில் குறட்டைவிட்டது செல்லாதான். அரசி தூங்கிவிட்டதை சீரான மூச்சிழைவு, ஸ்திதி யாவும் தெரிவித்தன. வாலாம்பிகைமட்டும் விழித்தபடியே படுத்திருந்தாள். எரிந்து வெகுகாலமாகிப் போயிருந்த ஒரு மின்குமிழ் தூசியும் ஒட்டடையும் போர்த்தி உள் கூரையில் தொங்கிக்கொண்டிருந்தது. பார்த்தபடி படுத்திருந்தாள்.

சுந்தரம் சத்தியாக்கிரக போராட்டங்களில் கலந்துகொண்டது அவளுக்குத் தெரியும். பின்னாலும் சிங்கள ஸ்ரீ அழிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டும், தமிழரசுக் கட்சியின் தோட்ட தொழிற்சங்கம் சார்பான ஊர்வலங்கள் நடத்தியும் மறியல்கள் நடத்தியும் சிறை சென்றிருக்கிறார். அவரூடாகவே வாழ்வையும் வெளி அரசியலையும் அவள் புரிந்தது. அது எப்போதும் இப்போதுபோல் இருந்ததில்லை. இப்போது வாழ்வு, அதன் அடியொட்ட நடுக்குற்று இருக்கிறது. மாற்றத்தின் கதியை அது ஏற்குமா? அல்லது நொருங்கிப்போகுமா? அவளுக்குத் தெரியாது. தெரிகிறதற்கான விபரங்களும் அவளுக்குக் கொஞ்சம். ஆனால் ஒன்றை அவள் தீர்க்கமாய்த் தெரிந்தாள். ஒரு பெரிய அழிவு இன்றி, அக்குளத்தின் கலங்கல் தெளிவடையத் துவங்காது.

வீதியில் சைக்கிள் ஒன்று கடகடத்தபடி ஓடியது.

சைக்கிளில் சென்றவர்கள் பேசிய சத்தம் வேலி மேலால் தாழ்பூமியிலுள்ள வீட்டை சுலபத்தில் வந்தடைந்து ஒலித்தது.

எல்லாவற்றையும் யோசித்தபடி படுத்திருந்த வாலாம்பிகை எப்போது தூங்கினாளென்று தெரியாது. ஏதோ ஒரு பொழுதில் ஓர் அவதியில்போல் விழிப்பு வந்தது அவளுக்கு. கனவா அல்லது தூக்கத்தில் நினைவின் மீட்சியா? பகுத்துணரச் சிரமமாயிருந்தது. ஆனால் தொடர்ந்தும் சந்தோஷமான மனநிலையை அது ஏற்படுத்தவில்லை.

வானத்தில் விடிகோலம் ஏற்பட இனி படுக்க வேண்டாமென்று நினைத்துக்கொண்டு எழுந்து முற்றத்துக்கு வந்தாள். சீமைக் கிளுவையோரமிருந்த கல்லில் அமர்ந்தாள். திடீரென்று அடிவளவில் தீக்குச்சி கிழித்ததுபோல் வெளிச்சம் அடித்தது? கூனிய முதுகு, முடமான அசைவு, தடியூன்றிய உருவெளித் தோற்றம் யாவும் செல்லாக் கிழவியே அது என்பதைத் தெளிவுறத் தெரிவித்தன. இந்தநேரத்தில் அங்கே என்ன செய்கிறாள் கிழவி? கக்கூஸ்கூட அடுத்த மூலையில் இருந்தது.

ஓ...! அவளுக்கு ஞாபகமாகிவிட்டது! அரசி அதுபற்றிச் சொல்லி சிரித்திருக்கிறாள் ஒருமுறை.

'இவருக்குச் சொந்தமான கிழவியொண்டு மிருசுவில்ல இருக்கு, அம்மா. அம்பது அறுபது பவுணுக்கு மேல மனுஷியிட்ட நகையாய் இருக்குதாம். எங்க மனுஷி அதையெல்லாம் வைச்சிருக்குத் தெரியுமோ? நிலத்தில தாழ்த்துத்தானாம். இதில என்ன விசேஷமெண்டால்... அப்பப்ப எடுத்துப் பாத்திட்டு வேறவேற இடத்தில கிடங்கு வெட்டி தாழ்த்துத் தாழ்த்து வைக்குமாம். மனிசர் சிலபேர்... செத்தாப் பிறகு மட்டுமில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரோட இருக்கேக்கையும் பேயாய்த்தான் நடமாடுவினம் எண்டதுக்கு இது ஒரு நல்ல சாட்சி. இல்லையே, அம்மா?'

மெல்ல விடிந்து வந்தது.

வீசிய மெல்லென்ற காற்றில் எங்கிருந்தோ தேத்தாப்பூ வாசம் கமகமத்தது. பின்னால்.... இலுப்பைப் பூ வாசம் வந்தது. காலம் தப்பிப் பூத்த மரமாயிருக்கும். அது, பூ காயாகி கனிந்துகொண்டிருந்த காலம். வெளவால்களின் காலமும் அதுதான். இரவில் கிரீச்சிட்டு வெளவால்கள் விழுந்து சப்தமெழுப்பியதை அப்போது நினைத்தாள். ஒருவேளை அதுவேகூட இடையிடை கலைந்த தூக்கத்துக்குக் காரணமாயிருக்கலாம். எனினும் அது இப்போது முக்கியமில்லை.

கிணற்றடியில் வாளிச் சத்தம் கேட்டது.

செல்லாக் கிழவி வந்தபோது பலபலவென விடிந்திருந்தது.

கிழவி எதுவும் பேசவில்லை. பார்வையில் மட்டும் ஒரு சந்தேக வலை, எப்போது எழும்பினாளோ என்பதுபோல. நேரே விறாந்தையில் ஏறி, கட்டித் தொங்கிய திருநீற்றுக் குட்டானில் திருநீறெடுத்து முருகா.... நல்லூர் கந்தா.... என்ற அழைப்புகளோடு அண்ணாந்து நெற்றியில் பூசினாள்.

அன்று காலை எட்டு மணிக்கெல்லாம் பஸ் நிலையம் போய்விட்டார்கள் வாலாம்பிகையும் அரசியும்.

அவர்கள் வான் ஏறி கிளாலியைச் சென்றடைந்த போது உச்சிவேளை. அன்று காலை ஏரியில் துவக்குச் சூடு நடந்ததால் படகோட்டம் நிறுத்தப்பட்டிருந்தமை அங்கே சென்ற பிறகுதான் தெரியவந்தது. தாற்காலிகமானதுதான் என்றாலும் அது சிரமங்களை மேலும் சிரமமாக்கும். முதல்நாள் மாலை சென்றவர்களே போக வகையின்றி நிறைந்துபோய் இருந்தனர் துறையிலே. வாயாடித் தனமுள்ளவர்கள் குடிமனைப் பகுதிக்குச் சென்று தங்க இடம் கேட்டுப் பெற்றுக் கொண்டனர். மற்றவர்கள் வெளி இடத்தில்தான் தங்கினார்கள். காற்று மட்டும் இதம்பட வீசியென்ன? அனுபவிக்கிற நிலையில் யாருமில்லை. ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு திசையில்; ஒவ்வொரு நோக்கில். பக்கத்தில் தன்னோடிருந்த மூவருக்கும் முதுகு காட்டிச் சரிந்து படுத்துத் தூங்க முனையும் இளம் பெண் மூழ்கியிருப்பது நிச்சயமாக கல்யாணக் கனவுகளில்தான் என்பது தெரிய பெரிய யூகம் தேவையில்லை. உள்ளுள் வெடித்த சுக மத்தாப்பூ முகமெங்கும் பூவானம் தூவியிருந்தது. அப்பால் சுமார் பதினாறு வயது மதிக்கத் தக்க வாலிபனுக்கு மேற்குலகின் வாழ்வு வசதிகளின் கனவுக் கனதியே கண்களில். சற்றுத் தள்ளி இன்னொரு வாலிபன் பார்வையில் வெறுமையோடு அவனது தந்தைபோன்ற ஒருவருடன் அமர்ந்திருந்தான். கூட இருந்தவர் முகத்தில்தான் கெலிப்பின் வெளிச்சம். அவர்களை அங்கேயே அறிமுகமாகிச் சேர்ந்து பயணிக்கவிருந்த ஒரு பெண்ணின் கண்ணீரோடு கூடிய முகம் அண்மையில் ஒரு தமர் சாவினால் அடைந்திருந்த அவலத்தைக் காட்டிக்கொண்டிருந்தது. ஒரு குழந்தை மட்டும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டு. குழந்தைகள் மட்டும் தூங்க விதிக்கப்பட்ட / சபிக்கப்பட்ட காலமா அது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசி படுத்திருந்தாள். காலைப் பின்னிக்கொண்டு நிமிர்ந்துதான். விரிவானம் முழுப் பார்வையிலும். மனத்தில் அங்கே கூடியிருந்த பயணிகள் பற்றிய நினைப்பு. இவர் வாழ்வின் அர்த்தம் என்ன? எதைத் தொலைத்தார்கள், எதைப் பெற போய்க்கொண்டிருக்கிறார்கள்? யோசித்த வேளையில் ஒரு அகண்ட காலப் பரப்பில் எதையோ இழந்து கொண்டும், எதற்காகவோ அலைந்துகொண்டுமிருந்ததே நிஜமெனப்பட்டது. எப்போதிருந்து அது? சுதந்திரமடைந்த காலத்திலிருந்தா? யாழ்ப்பாண அரசை இழந்த காலத்திலிருந்தா? பிற்காலச் சோழர் ஜனநாதமங்கலத்தில் ஆட்சியைக் கைவிட்ட காலத்திலிருந்தா? விஜயன் வருகையிலிருந்தா? கடலூழி தீவுகளைச் சமைத்ததும், பனியூழி கீழது மேலாய் மேலது கீழாய்ப் புரட்டியதுமான காலங்களிலிருந்தா? நெடு நெடுங்காலமும் வாழ்க்கை அப்படியேதான் இருந்ததாக யோசிக்க பட்டது. மனித சரித்திரமே அதுதான். பின்னர் தாயாரை யோசித்தாள். அவள் தன் கணவரைத் தேடி ஓடுகிறாள். அவர் காணாமல் போயிருக்கிறார். பதில் / தகவல் இல்லாவிட்டால் அங்கே அதுதான் அர்த்தம். தேடுவது இயல்பான விழைச்சல்தான். தேடவே வேண்டும்தான். இல்லாவிட்டால் உறவுகளுக்கு அர்த்தமில்லை. பற்று பாசம் என்பவைகளுக்காகவே ஆற்றப்படவேண்டிய சில கடமைகள் இருக்கின்றன.

கதிர்காமச் சுவாமி சொன்னதை நினைக்க அவளுக்கே மனத்தை என்னவோ செய்தது. அம்மாவுக்கு அவர் சொன்னதின் அர்த்தம் புரிந்திருக்குமா? மேலே அவளோடு அரசி அதுபற்றிப் பேசவில்லை. வாலாம்பிகையும் அதுபற்றிய பிரஸ்தாபத்தை எடுக்கவில்லை. விரும்பாத அர்த்தம் விரிவாகிவிடக்கூடாது என்பதுதான் அதன் ஒரே நோக்கம். ஒருவேளை அதற்கு அவள் அனுமானிப்பதே பொருளாயிருந்து, முந்திய குறியுரைப்புக்கள்போல் அதுவும் நிஜமாகிற வேளையில் அம்மாவால், அந்த இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியுமா? போன இடத்திலேயே அழிந்துபோகாமல் திரும்பிவருவாளா? அரசியை வேதனை கவிந்தது.

வானப் பரப்பில் உடுக்கள் சொன்னது கவிதையாகி ராகினியின் நினைப்பைப் பிறப்பித்தது. கவிதையை அவளுக்குள் பெருக்குவித்தவள் அவள். அவள் உயிர்த்தது மெய்மையாயிருந்தது. சுதந்திர உணர்வையே அவள் மூச்சாயும் கொண்டிருந்தாள். சுதந்திரத்துக்கான யுத்தத்தில் சுதந்திரமே பலியிட்டுவிடப்படக்கூடாது என்று சொன்னவள். அவள் வழி தனிவழியாயிருந்தது. அவள் எவரோடும் இணக்கத்துக்குத் தயாராயிருக்கவில்லை. அதனாலேயேகூட அவளுக்கேற்பட்ட அந்த நிலைமை தவிர்க்கப்பட முடியாததாய்ப் போயிருக்கக்கூடும். அரசியே சில கவிதைகளை நெருப்பென எழுதியிருக்கிறாள். அவளைப் பார்த்தே இவளும் துணிச்சல் கற்றுக் கொண்டாள். பாவம், ராகினி! என்ன நிலையில் இருப்பாளோ? விசாரணை.... சித்திரவதை.... இன்னும் மரணமேகூட. ஓ!

ஆனாலும் ஒருவர் எத்தனைக்காகத்தான் அழுவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் திரும்பி அம்மாவைப் பார்த்தாள்.

அம்மா, குந்தியபடி விடியும்வரை இருப்பேன் என்பது போல் ஒரு உக்கிரத்தில்.

ஒரு தூக்கம்போட்டு விழித்தபோதும் அம்மா அப்படியேதான் இருந்தாள். மீண்டுமொரு தூக்கத்தின் பின்பும்கூட அம்மா அப்படியேதான் இருந்தாள். கிளாலிவி ஏரியில், அதன் மின்னல் அலைகளில் ஒருபுறத்து இருளில் பார்வை பதித்திருந்தாள். கிழக்கு மூலையில் ஒரு வெளிர்ப்பு விரிவாகிக்கொண்டிருந்தது.

குருவிகள் கிலுகிலுத்தன.

வான நீலம் விகசித்தது.

சூரியன் சிவந்து மஞ்சளாகி அழகடைந்தது.

ஏரிக்கரை விடியலாயிற்று.

ஆவல்கள், ஆவலாதிகள், அவதிகள், கோபங்கள், சந்தோஷங்கள், கவலைகள்... எத்தனை வகையான உணர்வுகள் முகங்களில்!

பத்து மணியளவில் படகுகள் வந்தன.

இரண்டாம் படகில் அரசிக்கும் வாலாம்பிகைக்கும் இடம் கிடைத்தது.

ஏரிக் கடப்பு மிக உற்சாகமாக நடந்தது. ஏனெனில் அன்றைக்கு படகு ஓடுமென யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஹெலி அடிக்குமென்று ஒரு பயம் இருந்தது. ஆனாலும் 'டொங்கா'னை தோளில் வைத்துக்கொண்டு இறுமாப்பில்போல் தலை உயர்த்தி வான் மூலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த போராளியின் கம்பீரம் அச்சத்தை அவர்களிடமிருந்து விரட்டியது.

ஒருவித விக்னமுமின்றி ஒருவாறு அவர்கள் தாண்டிக்குளத்தை அடைந்தனர்.

அரசியின் ஆச்சரியத்தைக் கிளர்த்திக்கொண்டு, தாண்டிக் குளத்தில் கிளாலி ஏரிக்கரை வர ஒரு கூட்டம் பயணிகள் காத்திருந்தனர்.

அவசரப்பட்டுவிட வேண்டும், முண்டியடித்தேனும் முந்திவிடவேண்டும்.... இவைகளை அமுலாக்கியிருந்தது இருத்தலின் ஊக்கவிசை. மக்கள் முண்டியடித்து இறங்கினர். அரசியும் தாயாரும்கூட தட்டுத்தடுமாறிக்கொண்டு இறங்கி தமது அடையாள அட்டைகள், பிரதேச அனுமதித் துண்டுகள் யாவற்றையும் சரிபார்த்துக்கொண்டு மற்றவர்களோடு சேர்ந்து இயக்கத்தின் கட்டுப்பாட்டு எல்லைக்கு நடந்தனர். அங்கேயிருந்து அவர்கள் புலிச் சின்னம் பொறித்த அனுமதிக் கடிதம் பெற்றுக் கொண்டு, சுமார் அரை மைல் தூர முக்கிய தளத்தைக் கடந்தனர். ஒவ்வொரு அடியையும் எடுத்துவைக்கும் தருணம் ஈயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டின் சுவையை எதிர்பார்த்த கணமாய் நகர்ந்தது. அது அதிகார வரம்பற்ற நிலப் பிரதேசம். எதிர்ப்புறத்தில் கூர்த்த பார்வைகளுடன் மாற்றியக்கத்தினர். கூட சிறிலங்கா ராணுவம். காய்ந்து இறுகிக் கிடந்தது அந்த நில வெளி. மழை பெய்தால் சதுப்புநிலமாகிவிடும் வாகான மண் அதற்கு. தொலைவில் மாரி வெள்ளம் இன்னும் முற்றாகக் காய்ந்துவிடாமல் சதுப்படைந்து கிடந்தது.

சுமைகளுடனாய், நடக்க முடியாதவர்களைத் தூக்கிக்கொண்டும் தாங்கிக்கொண்டுமாய் மக்கள் பட்ட அவஸ்தை...! வசதியானவர்கள் பணம் கொடுத்து சுமைகளையோ நடக்க முடியாதவர்களையோ சைக்கிளில் பாரம் இழுப்பிகள் மூலம் கொண்டுபோய்ச் சேர்ப்பித்துக் கொண்டனர். அதற்கான ஒரு கூட்டமும் சைக்கிள்களில் பெரிய கரியர்களைப் பூட்டிக்கொண்டு காத்திருந்தது.

ராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள எல்லையை அரசியும் தாயாரும் அடைந்தனர். அனுமதிப் பத்திரம், அடையாள அட்டை, பெட்டி, பைகள் யாவற்றையும் பரிசீலனை செய்து புலிகள் கொடுத்த அதே அனுமதிப்பத்திரத்திலேயே பிரவேசமுத்திரை அடித்து பயணிகளை உள்ளே அனுப்பியது ராணுவம். புலிகளோ புலி ஆதரவாளர்களோ ஊடுருவி விடாது கவனித்தபடி மாற்றியக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயுதபாணிகளாக.

வெளியே வவுனியா பஸ் நிலையத்துக்குப் போவதற்கான பஸ்களும் வான்களும் நின்றிருந்தன. அரசியும் தாயாரும் சென்று ஒரு பஸ்ஸில் ஏறினர். அங்கிருந்து அவர்கள் வவுனியா போய்விடலாம். அங்கிருந்து உசிதப்படி பஸ் அல்லது ரயில் ஏறலாம். இவ்வாறாக அவர்களின் வவுனியாப் பிரவேசம் நிகழ்ந்தது.

பஸ்ஸுள் அமர்ந்ததும் ஆசுவாச நெடுமூச்செறிந்தாள் அரசி. அது காலத்தைப் பார்த்தான ஒரு சாபத்தின் உக்கிரத்துடன் இருந்தது.

## 36

அது இயல்பான கொழும்பு நகரமா என்று அவர்களுக்குத் தெரியாது. ஆனால் கொழும்பைச் சென்றடைந்ததும் இயல்பலாதவிதமாக உள்ளம் விறைத்துவருவதை இருவரும் உணர்ந்தனர். அது உணர்வுகளின் குமைச்சலால் மட்டுமில்லை; அவர்கள் பிறத்தியாராய் நோக்கப்படுவதினாலும் நடத்தப்படுவதினாலும் ஏற்பட்டதாகும்.

தனியார் பஸ்ஸானதால் மருதானை, கோட்டை, கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி என்று சுழன்று வந்து வெள்ளவத்தையில் நிறுத்தம் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியும் வாலாம்பிகையும் பஸ்ஸைவிட்டு இறங்கி பிரதான வீதிக்கு வந்து தமிழ்க் கடை ஒன்றிலே முகவரியைக் காட்டி இடத்தைத் தெரிந்துகொண்டு சோமசுந்தரம் வீட்டைச் சென்றடைந்தனர்.

அன்று சோமசுந்தரம் வீட்டிலே தங்கினார்கள். மறுநாள் பணத்தையும் கொடுத்து, வீட்டுக்காரரே கூட்டி வந்து பாதுகாப்பான நல்ல ஒரு லொட்ஜிலே தங்கவைத்தார்கள்.

சோமசுந்தரம் வீட்டைவிட இருவருக்குமே லொட்ஜ் வசதியாக இருந்தது.

அந்நியரையோ ஆபத்து விளைக்கக் கூடியவர்களையோ வீட்டில் வைத்திருப்பதுபோல் நினைத்து சோமசுந்தரத்தின் மனைவிதான் மிகவும் பதட்டமடைந்துவிட்டாள். அவள் பட்ட பதட்டத்திலும் பயத்திலும் அவர்களுக்கே பயமாகப் போய்விட்டது. அவளது சிங்களச் சிநேகிதிகள் அங்கே வந்து பார்த்தால் அவளைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று வெகுவாக அங்கலாய்த்தாள். கொழும்புச் சூழ்நிலையில் அவர்களோடு பேசவும் செய்யாமல் அவள் ஒதுங்கியதில் நியாயம் இருக்கத்தான் இருந்தது. எந்த ஒரு கொழும்புத் தமிழர் வீட்டிலும் அந்த நிலைமையே நிலவுவதை அவர்கள் விரைவில் அறிந்தார்கள். அந்த நிலைமையில் அவளது சகஜத்தன்மைதான் இயல்பில்லாததாக இருந்திருக்கும்.

அவர்கள் தங்கியிருந்த லொட்ஜ் ஆட்டுப் பட்டித் தெருவில் இருந்தது. முஸ்லீம்கள் அதிகமாக இருந்த பகுதி அது. 10 x 8 அடியில் கூடு போன்ற பலகைச் சுவர் அறை. ஒரு தனிப் படுக்கைக் கட்டில் போடப் பட்டிருந்தது. கீழே பாய் விரித்து ஒருவர் படுத்துக்கொள்ள முடியும். இருவருக்கான அந்த அறைக்கு நாள் வாடகை நூறு ரூபா. அது வாடகைக்கு மட்டுமில்லை, பக்கத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவதற்கும், அடிக்கடி பரிசோதனையென்ற பெயரில் ஆக்கினைகள் புரியப்படுவதிலிருந்து விலக்குப் பெறுவதற்கும் மாதா மாதம் கொடுக்கப்பட்ட அன்பளிப்புத் தொகையும் அதனுள் அடக்கம். குழந்தைகளுட்பட சுமார் ஐம்பது பேர் அங்கேயிருந்த பதினெட்டு அறைகளிலும் தங்கியிருந்தனர். அறைக்கு ரூபா இருபது வீதம் மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபா பொலீஸ் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்குக் கொடுபட்ட அதேநேரத்தில், கட்சி/கட்சிசார்பற்ற குண்டர்களுக்கும் வாரத்துக்கு இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாவரை தண்ணிச் செலவு கட்டப்பட்டதும் அதே வாடகைத் தொகையிலிருந்துதான். அதனால்தான் அங்கே தங்கியிருந்த பெரும்பாலான யார்ப்பாணத்துத் தமிழர்களும் நிம்மதியாக மூச்சுவிட்டிருந்தனர்.

கொழும்பு நிலபரங்கள் ஊர் நிலபரங்கள்பற்றித் தெரியவும், கடவுச் சீட்டு எடுக்க இந்திய விசா பெற செய்யவேண்டிய வழிமுறைகளை அறியவும்கூட அவர்கள் வெளியே செல்லவேண்டியிருக்கவில்லை. ஒரு குட்டிச் சந்தையின் பரபரப்புடனும் சந்தடியுடனும் சுமார் பதினாறு பதினேழு மணி நேரத்துக்கு போக்கும் வரவும் பேச்சும் சிரிப்புமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் அச்சுப் போல் அது இருந்தது. அந்த இடத்தின்மீது பாதுகாப்புக் காரணத்துக்காய் விருப்பமும், மனிதர்களின் ஆவலாதிகள் தன்னிலை மறப்புக்கள் உல்லாச வாழ்க்கையின் அம்சங்கள் காரணமாய் வெறுப்பும் கொண்டிருந்தாள் அரசி.

அம்மா ஒருவாறு அங்கே தங்கிவிடுவாள் என்பது தெரிந்தது. சூழ்நிலைக்குத் தக அமைந்துகொள்ள அவளால் முடியும். அவளுக்கு அந்தத் தன்மை இருந்ததை கடந்த சில நாட்களிலேயே அவள் அவதானித்திருந்தாள்.

கடவுச் சீட்டு கிடைத்த பின்னர் ஒரு ஏஜன்ஸி மூலமாக இந்திய விசாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் தான் அங்கே நிற்பது தேவையில்லையென்பதோடு வீணான செலவு என்பதாலும் வடக்கு திரும்பத் தயாரானாள் அரசி. யாழ்ப்பாணம் போக ஒரு துணை கிடைத்துவிட்டால் அவள் புறப்பட்டுவிடுவாள். வாலாம்பிகைக்கும் சரியென்று சொல்வதைத் தவிர வேறு உபாயம் தெரியவில்லை. அற்புதராணி, ஜெயக்கோடி போன்றவர்களின் உதவியுடன் அவள் தன் மீதிப் பயண அலுவல்களைப் பார்த்துவிடுவாள்தான்.

அன்று வெள்ளிக்கிழமை. அரசியையும் வாலாம்பிகையையும் கோயிலுக்கு அழைத்துச் சென்றிருந்தாள் ஜெயக்கொடி.

வானொலியில் தமிழ்ப்பாட்டு எங்கிருந்தோ இழைந்து கொண்டிருந்தது. வாசல்கள் சிலவற்றில் கோலங்கள் மின்னின. விபூதி சந்தனம் குங்கும முகத்தோடு தமிழர்கள் பலர் கதிரேசன் வீதியில் நடமாடினர். கோயிலினுள் மணிக் கிணுகிணுப்புக் கேட்டது. மிக்க சகஜ நிலை நிலவுவதாகத் தவிர வேறு அபிப்பிராயம் எவர் மனத்திலும் ஏற்படமுடியாது. அது வெடிப்பதற்கு முன்னான ஊமைத்தனம் என்பதாகவே பட்டது அரசிக்கு. மற்றவர்களுக்கு அவ்வாறு ஏற்பட்டிருக்குமா? அது ஒரு போலியான நிலமையெனினும் எவ்வளவு இனிமையாக இருந்தது!

விடுதி திரும்பிய பிறகு வெளிப்படையாகவே தன் கருத்தை அற்புதராணியிடம் தெரிவித்தாள் அரசி.

"நீர் சொல்லுறது சரிதான், அரசி. இது ஒரு போலியான நிலமைதான். உள்ள குமைஞ்சுகொண்டு, வெளியில அமைதிபோல இருக்கிற கடல்மாதிரி இது. பெரும்பாலும் பகல் நிலமை இதுதான். இருட்டி, கதவு சாத்தினால் போதும். ராவு ராவாய் கொழும்பு லொச்செல்லாத்துக்கும் ஆமி வரும்; இல்லாட்டி பொலிஸ் வரும். இளந்தாரிப் பெடியளையும் பெட்டையளையும் பிடிச்சுக்கொண்டு போகும். விடிய விடிய விசாரணையெண்ட பேரில பேரம் பேசுவினம். இருபத்தையாயிரத்தில துவங்கி பத்தாயிரத்தில வந்து நிக்கும், குறைந்த தொகை. சங்கிலியை தாலியை வித்துக்கொண்டு வந்து கட்டி பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு போவினம் தாய் தேப்பன்மார். எப்பவும் இப்படித்தான். எல்லாம்.... கண்டு கண்டு அலுத்தும் வெறுத்தும் போச்சு" என்றாள் அற்புதராணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அற்புதம் சொன்னதில கொஞ்சமும் மிகையில்லை" என்றாள் ஆரோக்கிய மேரி.

ஆரோக்கிய மேரி ஆசிரியையாக நாற்பதாண்டுகள் கடமைசெய்து அப்போது ஓய்வுபெற்றிருந்தாள். சொந்த இடம் கொழும்புத் துறை. கொழும்பிலே இரண்டு வருஷங்களாக அதே விடுதியில் தங்கிவருகிறாள். அக்கம்பக்கத்து இடங்களிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்த அரச அலுவலர்களாயிருந்தவர்கள் பலரையும், வீடுகளில் தங்கியிருந்த அரச அலுவலர்கள் பொதுத்துறையில் ஈடுபட்டு உள்ளவர்கள் கணிசமானவர்களையும் தெரிந்திருந்தாள். அன்று மாலை முக்கியமான ஒரு இடத்துக்குப் போவதாகக்கூறி அரசியையும் வரும்படி கேட்டாள் ஆரோக்கியம். மறுக்காமல் கூடிச்சென்றாள் அரசியும்.

ஒருவரைச் சந்திப்பதற்கு என்றே சொல்லியிருந்தாலும் அவர்கள் நாரகேன்பிட்டியிலுள்ள அடுக்குமாடிக் கட்டிட குடியிருப்புப் பகுதியிலுள்ள அந்த வீட்டுக்குச் சென்றபோது ஆறேழு பெண்கள் இருந்தனர். பின்னர்தான் முழு விபரம் அரசிக்குத் தெரிந்தது. சகல இன பிரதிநிதித்துவமும் உள்ள பெண்கள் அமைப்பான விடுதலைக் குயில்கள் பெண்கள் அமைப்பின் வழமையான ஒரு மாதாந்திர சந்திப்புக்காக அவர்கள் அங்கே அன்று வந்திருந்தனர். அவ்வாறு மாதந்தோறும் ஒவ்வொரு அங்கத்தினர் வீட்டிலும் அச்சந்திப்பு நிகழ்ந்துவந்ததாம். அவளைப் பார்வையாளியாக எல்லோரும் வரவேற்றனர்.

உரையாடல் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருந்தது. சிங்களமும் செந்தமிழும் அவ்வப்போது பேசப்பட்டன. ஆனாலும் அரசியும் கலந்துகொள்வதற்கான வாய்ப்பேதும் அவ்வுரையாடலில் ஏற்படவில்லை. பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்கும் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து ஒரு கோபத்தோடு அற்புதமாக சொல்லிக் கொண்டிருந்தாள் மாலினி குணரத்ன. பெண் விடுதலையென்பது தனியே பெண்களின் விடுதலையில் மட்டுமே உண்மையில் தங்கியிருக்கவில்லையென்றும், சகலரதும் விடுதலையிலும் சமுதாய விடுதலையிலும் அது தங்கியிருக்கிறதென்றும் சொன்னாள். ஜனநாயகத்தின் செழிப்பு, விடுதலை வெற்றிக்கான முதல் வாய்ப்பைத் திறந்துவிடுகிறதினால் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமான கருத்துநிலையை நசுக்கும் எந்தவொரு முயற்சிக்கு எதிராக குரல் கொடுப்பதும் பெண்கள் அமைப்பொன்றினது கடமைதான் என்றாள் அவள்.

அப்போதுதான் அரசி தலையிட்டது.

அவள் கருத்தை அழகான ஆங்கிலத்தில் சகலருக்கும் புரியவைத்தாள் ஆரோக்கியம்.

'ராகினியின் 'கறுத்த மேக'த்தை வாசித்தபோதே ராகினியின் பாதுகாப்புப்பற்றிய அச்சம் எனக்குத் தோன்றிவிட்டது. மனிதர் எவர்க்கும் முழு விடுதலை கோரித்தான் அந்த ஆத்மா பாடியது. அவள் ராணுவத்தால் பிடிக்கப்பட்டாலும் கைதிகளின் பொறுப்பை ஏற்றிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்கமே அதற்குப் பதில்கூறவேண்டிய நிலையிலிருக்கிறது. அவள் பெண் என்ற முறையில், பெண் விடுதலைக்காக வன்மையாகக் குரல் கொடுத்தவள் என்றவகையில் அவளின் தற்போதைய நிலைபற்றி அறியவும், அவளின் விடுதலைக்கு நீதிமன்றம் மூலமான நடிவடிக்கைகளெடுக்கவும் பெண்கள் அமைப்பு என்ற வகையில் இந்த விடுதலைக் குயில்கள் முயற்சியெடுக்குமா?'

அதற்குமேல் அவள் பற்றி விரிவாக விசாரித்து தகவலறிந்தார்கள் அரசியிடமிருந்து. நெல்ஃபா குறிப்பெடுத்துக் கொண்டாள். அவ்விஷயம் குறித்து அவர்கள் பலகோணங்களிலும் ஆலோசனை செய்தார்கள்.

பின்னர் மாலினி கேட்டாள்: "அரசி மறுபடி உங்களால் இங்கே வரமுடியுமா?"

"கஷ்ரம்தான். ஆனால்.... ராகினிக்காக அவைகளை நான் தாங்கிக்கொள்வேன். அவசியமெனில் வரமுடியும்."

"ராகினியின் வெளிவந்த அல்லது வெளிவராத கவிதைகளாயினும் பரவாயில்லை, சிலவற்றை, குறிப்பாக அவளின் கறுத்தமேகம் கவிதையை எங்களுக்கு அனுப்பிவையுங்கள். அவற்றை மொழிபெயர்த்து சிங்கள மக்களுக்கும் தெரியவைப்பது நல்லது."

"கண்டிப்பாக அதைச் செய்யுங்கள், அனுப்பிவைக்கிறேன்."

அவர்கள் விடுதி திரும்ப பத்தும்மணிக்கு மேலாகியிருந்தது. ஆரோக்கியமும் அரசியும் ஒன்றாக இருந்தே சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிகிறபோது ஆரோக்கியம் சொன்னாள்: "போர்... எப்பிடிப் பாத்தாலும் கொடுமைதான். அதில் இரண்டாம் அபிப்பிராயம் எனக்கு இல்லை. ஆனாலும்... மூடுண்டிருந்த இந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு மேலயும், இந்த நாட்டுக்கு மேலயும் அது ஒரு வெளிச்சத்தை ஏற்படுத்தியிருக்கெண்டதையும் மறுக்க ஏலாது, அரசி. குறிப்பாய் பெண்கள் சமூகம் பெரிய மாற்றமடைஞ்சிருக்கு. வெளிப்படையாய் தளைகள் உடைஞ்சது தெரியேல்லைத்தான். ஆனால் இயங்குகிற நேரத்தில அதை என்னால உணர முடியுது. இது ஆரம்பம்தான். பெண்களுக்கு முன்னால இப்ப விரிஞ்சிருக்கிறது ஒரு பெரிய தளம். அவை முன்னேறவும் போராடவும் இப்ப இருக்கிற மாதிரியான ஒரு தளம் முந்தி இருக்கேல்லை."

மறுநாள் விடுதியில் தங்கியிருந்த நவரத்தினமும் குடும்பமும் ஊர் திரும்புவது தெரிந்து தானும் கூடிச் செல்லத் தயாரானாள் அரசி.

யோசித்த வேளையில் நவரத்தினம் கூட கொஞ்சம் சலிப்போடுதான் ஊர் நிலைமைபற்றிச் சொன்னது ஞாபகம் வந்தது அரசிக்கு. அவரே இப்போது தன் மனைவி நவரத்தினத்துடன் ஊர் திரும்புகிறார்.

போர்... அவர்களது வாழ்க்கையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எவர்களதும் வாழ்க்கையில்லை.

அதனால் புலம்புவார்கள்.

ஆனாலும்.... வீடு போர் நிலத்தில்தானே இருக்கிறது!

அன்றிரவு வீடுநோக்கி பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தாள் அரசி. ராகினியின் 'பிடித்த'லைக் குறித்து திட்டமான சில காரியங்களை எடுக்க முடிந்திருந்ததில், ஆரம்பத்தில் அநாவசிய பயணமாய்த் தோன்றி அலுப்பும் வெறுப்பும் செய்த மனநிலைமை அப்போதிருக்கவில்லை. ராகினி திரும்ப காணப்பட முடியாதவளாய்க் கூட போயிருக்கலாம். யாருக்குத் தெரியும்? ஆனாலும் குறைந்தபட்சமாய் அவள் ஒரு மகா அழிவின் சாட்சியமாகவாவது ஆக்கப்படவேண்டும்.

பஸ் போய்க்கொண்டிருந்தது.

வெகுநேரத்தின் பின் அருட்செல்வி முந்தாநாள் நாரகேன்பிட்டி வீட்டில் நடந்த சந்திப்பின்போது சொன்னது ஞாபகம் வந்தது. 'தமிழ்ச் சமூகத்தின் புதிய நிலைமைகள் பிறப்பித்த பெண் விடுதலை அம்சங்களின் வெளிப்படையான புலப்பாடுதான் இக்காலத்திய பெண் கவிஞர்களின் தோற்றம். அதி உயர்ந்தபட்ச கவிதைச் சாத்தியங்கள் ஈழக் கவிதையுலகில் நிகழ்ந்தியிருப்பது அதனால்தான்.'

அவள் சொன்னது மெய்போலவே தெரிந்தது.

பயணம் தொடர்ந்தது.

## 37

அன்றாட அலுவல்களையே கெடுக்கிற அளவுக்கு சுவர்ணாவின் மனத்திரையில் விரிந்து அச்சுறுத்தல் செய்யலாயிற்று புஞ்சிபண்டாவின் காமாந்தகார முகம். அவ்வப்போது பிரமை பிடித்தவளாய் போனபோன இடங்களிலே திகைத்துப்போய் நின்றிருந்தாள். உள்ளே அவள் மனது நடுங்கியது. எவ்வளவு ஆசையோடும் சிரமத்தோடும் அந்தச் சின்னஞ்சிறு குருவிக் கூட்டை அவள் கட்டிக் காத்து வந்திருந்தாள்!. புஞ்சிபண்டா கல்லெறிந்து அதைக் கலைத்து விடுவானோ? அவ்வளவுக்கு கொடூரத்தின் தீவிரத்தன்மை அவன் பார்வையில் இருந்தது.

திரவியத்துக்கு சுவர்ணாவின் போக்கு சில நாட்களாகவே கவனம். அவளாகவே சொல்லட்டும் என்று எதிர்பார்த்திருந்தான். அதில் அதிக அக்கறை காட்டாத அளவுக்கு அவனே ஒரு சோர்வில் வீழ்ந்துகிடந்தானோ? அவளாகவே சொல்லட்டும் என்ற எண்ணம் அதனால்தான் எழுந்திருந்ததுபோலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தெளிவில்லாத விஷயங்களை அவள் அவனுக்குச் சொல்வதில்லையென்றது பின்னால்தான் அவனுக்கு ஞாபகமாயிற்று. அதனால் அதுவாய் வெளிவர ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்குப்போல முதல்நாள் மாலையில், 'ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்? யோசனையும் அதிகமாயிருக்கு' என்று கேட்டுவைத்தான்.

அவள் சிரித்தாள் அதே அழகின் சிரிப்பை. பின் 'ஒன்றுமில்லையே' என்றாள். தக்க பதில் சொல்ல அவளால் முடியாது. அது அவனையும் கலவரப்படுத்தும் அவளைப்போல்.

புஞ்சி பண்டாவுக்கு இப்போது குணாநந்தா என்று பெயர். கூடவே தேரர் என்பதும் சேர்ந்திருந்தது. முண்டிதம், துவராடை எல்லாம் புனிதமான சின்னங்கள்தான் அன்றுவரையிலும். இருந்தும் அந்தக் கோலத்தில்கூட குணாநந்தாவை அவளால் மரியாதையோடு பார்த்துவிட முடியாது.

அவள் சின்னப் பெண்ணாய் இருந்தபோது அம்மாவின் கண்ணீர்க் கதை தெரிந்து ஓடத் தொடங்கினவள். அன்றுவரையும்தானே ஓடிக்கொண்டிருக்கிறாள்!

அவள் திரவியத்திடம் வந்த பிறகு இரண்டு தடவைகள் புஞ்சிபண்டாவைப் பிக்கு வேடத்தில் பார்த்திருக்கிறாள். போன வருஷத்தில் ஒருமுறை தூரத்தில்.... அவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவள் உள்ளுணர்வுபட்டுத் திரும்ப சட்டெனத் திரும்பிக்கொள்ளுமுன்னான சில துகள்ப் பொழுதுகளில்.... சந்தையில் கண்டிருக்கிறாள். அவள் கண்டது அவன் கண்களைத்தான். ஆனால் அதனூடாக அவன் பூதாகார உருவமே தோற்றமாகியிருந்தது. இரண்டாவது முறை போன வாரத்தில். அதுவும் அவளது வீட்டுச் சுற்றாடலில். அப்போதும் உருவத்தைவிட அந்தக் கண்களே இன்னாரென இனங்காட்டியிருந்தன.

என்றோ ஒருநாள் பாய்ந்து கடித்து உன்னைக் குதறிவிடுவே'னென்று அந்தக் கண்கள் கனவிலும் நினைப்பிலும் வந்து அவளை அச்சுறுத்தின.

திரவியத்திடம் சொல்ல அவள் இஷ்டப்படவில்லை. அந்த உடையில் - வேஷத்தில் - பிக்கு கோலத்தில் - புஞ்சி பண்டா ஏதும் செய்யக்கூடுமென்பதை அவன் நம்பக்கூட மாட்டான். மனிதர்களை அவன் வெகுவாக நம்பத் தொடங்கியிருந்தான் அப்போது. தன் பயத்தை அவன் அவ்வாறுதான் வென்றுகொண்டிருந்தான். அவளால் அதைப் புரியமுடிந்தது.

அன்று காலையிலும் வெகுநேரமாய் அவளையே கவனித்துக்கொண்டிருந்தான் திரவியம். அவளது மன இம்சையை அவன் புரிந்தான். ஆனால் அதற்கு மேலும் அவளை அவன் வற்புறுத்திவிடமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எழுந்து வெளியே செல்ல ஆயத்தமாகி வந்தான். அன்று ஞாயிற்றுக் கிழமையென்பதும் மாலையில் வீட்டுக்கு வரும்படி அனில் அய்யா சொல்லியிருந்ததும் ஞாபகமாகி, அன்றைக்கு அவசரமாக இயங்கி ரியூஷன் வகுப்புக்களை சீக்கிரமே முடிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தின.

பாணும் சம்பலும் தயாராக இருந்தன. சாப்பிட்டு முடிகிறவரையில் தேநீர் கொண்டுவந்தாள் சுவர்ணா. குடித்துவிட்டு சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

சைக்கிளில் போய்க்கொண்டிருந்தபோதும் வவுனியா வெகுவிரைவாக மாறுதலடைந்து வருவதை உணர்ந்தான் திரவியம். மாற்றம் பௌதீகம் சார்ந்ததாயே இருந்தது. பஸ் நிலையத்துக்கருகேயிருந்த புத்த விகாரம் மேலே உயர முடியாததனால்போலும் விஸ்தீரணத்தில் அதிகரித்துக்கொண்டிருந்தது. சிங்கள மொழியின் தாராளமான உதிர்வுகள் கடையெங்கும் வீதியெங்கும் வெகுத்திருந்தன. வீதிகளில் ஒரு வன்முறையே நகர்ந்ததுபோல் குழுக்களாய் இயங்கும் ஆயுததாரிகளின் நடமாட்டம் இருந்தது. அவ்வப்போது ட்றக்குகள் ஜீப்கள் உறுமியபடி போய் வந்துகொண்டிருந்தன. கொழும்பு நிலைமையிலிருந்து வவுனியா நிலை வெகுவாக மாற்றமடைந்துவிடவில்லை. கொழும்பில் தமிழர் இரண்டாந்தர பிரஜைகள்.

வவுனியாவில் நிறைந்துவரும் சிங்கள இனத்தாரில் பாதியளவு பேர் தங்கள் சொந்தப் பிரச்னைகள் தவிர பேறு பிரச்னைகளில் பிரக்ஞை இல்லாதவர்களாய் இருந்தனர். அங்கே அவர்கள் புதிதாய்த்தான் வந்திருந்தனர். ஆனால் அது தொழில் நிமித்தமாயே இருந்தது வெளிப்படையாய்த் தெரிந்தது. வடபகுதி மக்களைப்போல் நாட்டின் யுத்த நிலைமை வீசிய வறுமைத் திரை அவர்களையும்தான் மூடியிருந்தது. விலக்க அவர்கள் பட்ட பிரயத்தனத்தின் திசை வடக்காக ஆகியிருந்ததுதான் நடந்தது. மீதிப்பேர் மண் விழுங்கும் திட்டத்தின் அங்கத்தவர்களாயிருந்தனர். சகாரா ஆண்டு தோறும் தன்னைச் சூழவுள்ள வளமான தேசங்களிலெல்லாம் கிலோ மீற்றர் கணக்கில் மண்ணை விழுங்கிக் கொண்டிருப்பதாய் எங்கோ படித்த ஞாபகம் வந்தது அவனுக்கு. அவர்களும் பொசுக்கும் சகாராவாகவே அவனுக்குத் தென்பட்டனர். ஆனாலும் அவர்கள் அம்புகள் மட்டுமே என்பதையும் அவன் உணர்ந்தான். ஆம்!

அவர்களுக்கு குடியிருக்க நிலம்... அரசாங்கம் ஒதுக்கிக்கொடுத்தது.

அவர்களுக்கு வீடு கட்ட, தொழில் தொடங்க கடன்... அரசாங்கம் அளித்தது.

அவர்களுக்கு துப்பாக்கிகள் தோட்டாக்கள்... அரசாங்கம் வழங்கியது.

வடக்கையும் கிழக்கையும் அதன் இனத் தொடர்ச்சி அற பிரித்துவிடும் அரசாங்கத்தின் திட்ட நிறைவேற்றத்தின் செயல்வடிவமே மணலாறு குடியேற்றத் திட்டமென்பதை அவன் அறிந்திருந்தான். சமாதான காலம், யுத்த காலம் என்று எப்போதும்தான் தமிழ்நிலங்களை அபகரிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் செயல்பூர்வமாகிக்கொண்டிருந்தது. அரசாங்கம் தன் நிர்வாகத் துறைகள் மூலமாகவும், புத்த சங்கங்கள் மஞ்சளாடைப் பிரச்சாரகர்கள் மூலமாகவும் அதை நிறைவேற்றிக் கொண்டிருந்தது. அண்மைக் காலத்தில் அதன் தீவிரம் வெகுத்திருந்தது. அது அவனுக்கு கசப்பான உணர்கைதான்.

பிக்குகள் புத்தம் சரணடைதல் அவனுக்குச் சம்மதம்.

சங்கரானந்த தேரரை அவன் அங்கீகரித்தவன்.

ஆனால் அவர்களது புத்ததேசக் கோட்பாடு அவனுக்கு ஒப்புகையில்லை.

வவுனியாவைச் சூழ்ந்த குடியேற்றங்களில் அவ்வப்போது பௌத்த சின்ன கண்டு பிடிப்புக்களைப்பற்றிக் கேள்விப்படுகிறபோது சரித்திரப் புரட்டின் எத்தனங்களைக் கண்டு அவன் கொதித்தான். அந்தக் கொதிப்போடுதான் போன வார இதழொன்றிலே அதுபற்றிய கட்டுரையொன்றை அவன் எழுதியிருந்தான்.

அதன் சாரத்தை விரும்பிய அனில்'லுக்கு காரத்தை ஒத்துக்கொள்ள முடியாமலிருந்ததென்று சோமாவதி சொல்லியிருந்தாள். அவனை வெளியே பார்த்தால் ஞாயிற்றுக் கிழமை மாலை வரச்சொல்லு, பேசவேண்டும் என்று அவர் சொன்னதைத் தெரிவித்ததும் அவள்தான்.

ரியூஷனுக்குப் போய்க்கொண்டிருந்தபோது அவன் தன்னையே பல கேள்விகளாலும் குத்திப்பார்த்துக்கொண்டான். தம் மண்ணில் அந்நியப் படைகளை வரவேற்காமலிருப்பது அவர்கள் சுதர்மம். ஆனால் அமைதிப்படை தங்கியிருந்த பிற்காலத்தில் அவர்கள் அதற்குக் காட்டிய ஆக்ரோஷமான எதிர்ப்பு... துவேஷிப்பின் எல்லை சென்றிருந்ததே! அதை, அவர்கள் அரசியலின் வளர்ந்துள்ள இன்னொரு முகம் என அவன் அடையாளப்படுத்தியது எவ்வகையில் விவாதப்படுத்தப்படலாம்?

அவன் கருத்தை அனில் மறுப்பாரேல் அவரோடு வாதம் செய்ய அவன் தயாரானான். அவசியமெனில்... காரமாக.

## 38

ராஜி அன்று அதிகாலை திருச்சி கொட்டடப்பட்டு அகதிகள் முகாமுக்கு தனியாகவே புறப்பட்டிருந்தாள்.

அவ்வப்போதும் வேலைக்குச் செல்லாத நாட்களிலும் அவளுக்கு உதவியாயிருக்கிற தோமஸ், முதல் நாள் இரவு அவள் அதுபற்றிச் சொன்னபோது வேண்டாமென்றுதான் சொன்னான். ராஜகருணா அங்கே இருந்தபோது சென்ற ஒரு தருணத்தில் நடந்த சச்சரவுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமதிப்புக்களையும் சுட்டிக் காட்டினான். அதனால்தான் தான் தனியாகச் செல்வதாகவும் தனியாகச் சென்றால் பெண் என்பதாலேயே பிரச்னைகள் பெரிதாக எழுந்துவிடாதென்றும் தன் புறப்பாட்டை உறுதி செய்தாள் ராஜி. "தோமா, குறைநினைக்காத தடுக்கத் தடுக்கப் போறனேயெண்டு. விவாதம் பிறந்தால்தான் தீர்வு பிறக்கும். இது இயக்கம் சாராத அமைப்பு எண்டதை இப்பிடித்தான் நாங்கள் உறுதிப்படுத்தவும் ஏலும்."

முகாமுக்கு ராஜகருணாவுடன் போய்வந்த பழக்கமிருந்தது. நேரே உள்ளே சென்றுகொண்டிருந்தவளை வாசலில் பொலிஸார் தடுத்தனர். வெளிநாட்டிலிருந்து அகதிகளுக்கென்று கிடைத்துள்ள சில குறிப்பிட்ட வகையான பொருள்களின் பகிர்வைப்பற்றி ஆலோசிக்கவும், சுகாதார சம்பந்தமான விஷயங்கள்பற்றி பேசவுமே தான் வந்துள்ளதாக அவள் சொன்னபோதும் பொலிஸார் அனுமதிக்கவில்லை. மாவட்ட ஆட்சியாளரின் எழுத்துமூலமான அனுமதி பெற்று வரும்படி சொல்லி திருப்பியனுப்பப்பட்டாள்.

அப்படியொரு நிலைமையை அவள் எதிர்பார்த்ததில்லை. வெளியிலே ஒரு பேச்சிருந்தது, ஈ. பி. ஆர். எல். எஃப் தலைவர் பத்மநாபா கொலையின் பின் முகாம் காவல்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், முகாமிலுள்ளவர்களின் நடமாட்டம் தீவிர கண்காணிப்புக்குட்படுத்தப் பட்டிருப்பதாகவும். அவள்தான் அதைப் பெரிதாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

திரும்ப திருச்சியிலுள்ள தங்கள் அலுவலகம் சென்று அங்குள்ளவர்களுடன் போய் மாவட்ட ஆட்சியாளரிடம் கடிதம் பெற்று வந்தாள்.

அதுவரையில் மதியமாகியிருந்தது.

முதலாவது வீட்டிலேயே அவளுக்கு ஆதரவான குரல் இருந்ததில் அவள் தன் களைப்பை மறந்தாள். அந்த வீட்டுப் பெண்ணோடு இன்னும் ஐந்தாறு வீடுகளுக்குப் போய் அவர்களோடும் பேசி குறிப்பெடுத்துக்கொண்டாள். முகாமின் நிலைமை வருந்தத்தக்கதாகவே இருந்தது. அவர்களின் முறைப்பாடு முழுவதையும் அவளால் கேட்க முடியாதிருந்தது. சில குடும்பங்கள் மனம்விட்டுப் பேசிவருகையில் இவர்களுக்குச் சொல்வதால் என்ன ஆகிவிடப்போகிறது என்ற ரீதியிலும், இவர்களெல்லாம் அமெரிக்காவின் ஏவல் நாய்கள் என்பது போலவும் சில இளைஞர்கள் தலையிட்டு உரையாடலைத் தடுத்தனர். சிரித்துக் கொண்டே விலகினாள் ராஜி. அது அவள் இயல்பாயிருந்தபோதும் அங்கே பெரும் உத்தியாகவே தொழிற்பாடாற்றியது. விவாத முயற்சிகள் களைப்படைந்தன.

இரண்டு மணி ஆகிக்கொண்டிருந்தது.

நிழல் மரமேதுமற்ற முகாம் முற்றத்தில் வெப்ப அலை அடித்தது. அவள் முகாமும் அப்படித்தான். பெரு மரமற்ற வெளி. ஆனாலும் கடற்காற்று எந்த அனலையும் ஆற்றும் அங்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுநேரம் இளைப்பாறிக்கொண்டு அவள் புறப்படத் தயாரானாள்.

அப்போதுதான் அவசர அவசரமாக மலர் என்கிற பெண் அவளைத் தேடிவந்தாள். "நீங்கள்தான் ஒபரிலயிருந்து வந்திருக்கிற ஆளோ?" என்றாள்.

"ஓம். ஏன்?"

"உங்களோட கொஞ்சம் தனியாய்ப் பேசவேணும்."

புருவ நெரிப்போடு கூடிச் சென்றாள்.

வீதியோர மரங்களால் முகாம் எல்லைக்குள் நிழல் விழுந்திருந்த இடத்துக்கு நடந்தனர் இருவரும். அங்கே தனிமையும் இருந்தது.

தன்னைப்பற்றி சுருக்கமாகச் சொன்னாள். தானும் தாயாரும் இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் எண்பத்தொன்பதில் அங்கே வந்ததாகவும், தகப்பன் கொழும்பிலேயென்றும், ஊரிலே தன் பாட்டி மட்டுமே தனியாய் இருப்பதாகவும் தெரிவித்தாள்.

"நாங்கள் இந்தியாவுக்கு வந்தது பாட்டிக்கு விருப்பமில்லை. நாங்கள் இஞ்ச வந்த பிறகு பாட்டிக்கு மனநிலை சரியில்லாமல் போச்சு. முந்தியும் அந்த மாதிரி அவவுக்கு வந்திருக்கு. தாத்தாவுக்கு ரண்டு சம்சாரம். அந்தப் பிரச்சினையால துவங்கி, அப்பப்ப வந்து மருந்தெடுக்க குணமாகிக்கொண்டிருந்தது. பாட்டிக்கு ஆறு பிள்ளையள். அதில அம்மாவிலதான் நேசம் அதிகம். பேரப்பிள்ளையளில நேசமெண்டால் என்னில. தன்னைப்போல இருக்கிறமெண்டு சொல்லிச் சொல்லி அன்போடயிருந்தா. நாங்கள் இஞ்ச வந்தபிறகு திடீரெண்டு பாட்டி ஒருநாள் வீட்டிலயிருந்து காணாமல் போயிட்டா. அது எங்களுக்கு ஊராக்கள் மூலம் தெரிஞ்சு, நாங்கள் கொழும்பில நிக்கிற அப்பாவுக்கு எழுத, அவரும் கஷ்ரத்தைப் பாக்காமல் போய்த் தேடிப் பாத்தாராம். ஆனால் பாட்டியைப்பற்றி ஒரு தகவலும் தெரியவரேல்ல.... அப்பிடி அந்த மணலில இருப்பமோ?"

"வாரும்."

இருவரும் அமர்ந்தனர்.

மலர் தொடர்ந்தாள்: "பாட்டி அங்க இயக்கக் காம்ப்புகள், ஆமிக் காம்ப்புகளெல்லாம் போய் எங்களைக் காணேல்லை, பிடிச்சு வைச்சிருக்கிறியளோ எண்டெல்லாம் கேட்டு தொந்தரவு பண்ணிக்கொண்டு திரிஞ்சிருக்கிறா. பிறகு கிளாலிப் பக்கம் போயிட்டாவாம். அதுக்குப் பிறகு என்ன நடந்தெண்டு தெரியா."

"சரி, இப்ப பிரச்சினை என்ன?"

"பாட்டி செத்திட்டா எண்டதுதான் எங்கள் எல்லாரின்ரயும் முடிவு. அப்பாவும் நல்லாய் விசாரிச்சிட்டு அப்பிடித்தான் எழுதியிருக்கிறார். அதைக் கேட்ட நாளிலயிருந்து அம்மாவின்ர மனநிலைதான் ஒரு மாதிரி ஆகியிட்டுது. இருந்திருந்திட்டு வெளியில வந்து வானத்தைப் பாத்துக் கொண்டு நிக்கிறா. வெய்யிலெண்டும் பாக்கிறதில்லை; மழையெண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கிறதில்லை. கேட்டால், ஒண்டும் சொல்லமாட்டா. தானாய்ப் பேசிக்கொள்ளுறதிலயிருந்துதான் அவவின்ர மனத்தில இருக்கிற விஷயம் எங்களுக்குத் தெரியவந்தது. அம்மா செத்திருக்கமாட்டா.... எனக்குச் சொல்லாமல் சாகவேமாட்டா.... அவ்வளவுக்கு என்னில அவவுக்கு நேசம்.... அப்பிடியே அவமிருத்தாய் ஒரு சாவு வந்திருந்தாலும் எனக்குக் கனவிலயாவது வந்து சொல்லியிருப்பா.... எண்டு நிக்கிறா. அந்தாள் சரியான பயந்த மனிசன்.... நல்லாய்த் தேடியிருக்க மாட்டுது.... ஆமிக் காம்ப்பெல்லாம் போய்த் தேடவேணும்.... நான் போனால்தான் சரிவரும் எண்டு எந்தநேரமும் புறுபுறுத்தபடி. அப்பப்ப வெளிக்கிட்டும் போயிடுகிறா."

"வெளிக்கிட்டு எங்க போவா?"

"எங்க போவாவோ? ரவுணுக்குள்ள நிண்டு சுத்துவாவெண்டு நினைக்கிறன். நாங்கள் ஒருநாளும் தேடிப் போகேல்லை. எப்பிடிப் போறது? எங்க போயெண்டுதான் தேடுறது? ஆனால் எந்த நேரத்துக்கு வெளிக்கிட்டுப் போயிருந்தாலும் பொழுதுபட்டு ஏழு எட்டு மணிக்கெல்லாம் திரும்பி வந்திடுவா வீட்டுக்கு. அந்த நேரத்தில அம்மாவைப் பாக்கவே பயமாயிருக்கும்."

"ஏன்?"

"அவவின்ர கண்தான் அப்பிடிப் பயத்தைத் தாறது. அறிமுகமான பாவனை கண்ணில இருக்கவே இருக்காது. ஆரையோ பாக்கிறமாதிரித்தான் எங்களைப் பாப்பா. அந்தப் பார்வையில அப்ப இருக்கிறது கோபமா... வெறுப்பா.... இல்லை ஒரு வெறியா எண்டு சொல்லத் தெரியாமல் இருக்கும்."

"சரி..."

"ஊருக்குப் போறதெண்டால் போய்வரட்டுக்குமன்; போய்த் தேடியிட்டு தாயார் இல்லைத்தான்.... செத்துத்தான் போயிட்டா.... எண்டு தானே தீர்மானிச்சுக்கொண்டு திரும்பிவந்தால் மனம் தெளிஞ்சிடுவா எண்டு சிலபேர் சொல்லுகினம். எங்களுக்கு விருப்பமில்லை. அங்க போய்.... பாட்டிக்கு நடந்தமாதிரியே அம்மாவுக்கும் ஏதாவது நடந்திட்டால்...?"

"இந்த நிலையில ஊருக்கு அனுப்பியிடாதயுங்கோ. முதல்ல ஆஸ்பத்திரியில காட்டி மருந்தெடுக்கவேணும்!!"

"ஆஸ்பத்திரியிலயோ.? அய்யய்யோ. வேண்டாம். அங்க கறண்டு பிடிப்பாங்களாம். ஆளாய்க் கொண்டுபோய் சாவாரைப் போலத்தான் கொண்டுவரவேண்டியிருக்குமெண்டு இஞ்ச தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம்" என்று பதைத்தாள் மலர்.

ராஜி லேசாய்ச் சிரித்தாள். தேற்றுகிற சிரிப்புத்தான். "படிக்காத ஆக்கள்மாதிரி நீரும் நினைச்சிடாதயும். எனக்கு சரியாய்ச் சொல்லத் தெரியேல்லை. நான் அறிஞ்ச வரையில.... இது முழுக்க முழுக்கப் பயித்தியமான நிலையில்லை. மனம்.... ஒருமாதிரிப் பேதலிச்சிருக்கெண்டுதான் இதைச் சொல்லவேணும். இப்பவே வைத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்விக்கிறது புத்திசாலித்தனம். இந்தமாதிரி ஒரு கேஸ் எங்கட காம்ப்பிலயே இருந்தது. திடீரெண்டு ஏதாவது பெரிய சத்தம் கேட்டால் குழறிக்கொண்டு பேதலிச்சமாதிரி நிண்டிடும் ஒரு பொம்பிளைப்பிள்ளை. வயசு பன்ரண்டுக்கு மேல. உணர்விழந்த அந்த நிலையில சிலவேளை சலமும் போயிடும். இதுவும் ஒருவகையான மனக் கோளாறுதானாம். ஆஸ்பத்திரியில காட்டி மருந்தெடுத்ததில இப்ப நல்ல சுகம். முந்தி நடந்ததுகளைச் சொன்னா வெட்கப்பட்டுக்கொண்டு இப்ப ஓடும். கடலூர்க் காம்ப்பிலயும் பங்கருக்கு ஓடுங்கோ... பங்கருக்கு ஓடுங்கோ எண்டு கத்திக்கொண்டு கண்ட இடமெல்லாம் ஓடி.... விழுந்து.... அட்டகாசம் பண்ணித் திரிஞ்சுது ஒரு வயசான ஆள். ராத்திரியில அந்த ஆள் எப்ப கத்திக்கொண்டு வெளிக்கிட்டு ஓடுமோவெண்டு எல்லாருக்கும் பயம். ஆஸ்பத்திரியிலதான் காட்டி மருந்தெடுத்தது. இப்ப தெளிஞ்சு நல்லாயிருக்கிறார். நீங்கள் பயப்பிடாமல் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டலாம்'' என்றாள் ராஜி.

சிறிதுநேரம் யோசித்துவிட்டு மலர் சொன்னாள்: "சரி. ஆனால் உங்களுக்குத் தெரிஞ்ச அந்த ஆஸ்பத்திரியிலயே கொண்டுபோய்க் காட்டுவம்.''

"அதுக்கு பாண்டிச்சேரிக்குப் போகவேணுமே!''

"போகலாம்.''

"சரி. இஞ்ச காம்ப்பில சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு அடுத்த ஞாயிற்றுக்கிழமை பின்னேரம்போல என்ர காம்ப்புக்கு வாருங்கோ. அங்க ராவு தங்கியிட்டு, திங்கட்கிழமை வெள்ளணப் போய் காட்டிவரலாம். அதுசரி.... காம்ப்புக்கு வரவழி தெரியுமோ?''

"விலாசத்தை வடிவாய் எழுதி தந்திட்டுப் போங்கோ. கேட்டுக் கேட்டு வந்திடலாம்.''

ராஜி விலாசத்தை எழுதிக் கொடுத்தாள்.

"வீட்டுக்கு ஒருக்கா வந்து அம்மாவைப் பாத்திட்டுப் போங்கோ. நாங்கள் அவவைப்பற்றிப் பேசினதாய்க் காட்டிக்கொள்ளவேண்டாம். பிறகு ஆறுதலாய் எல்லாம் பேசி நான் அங்க வாறதுக்கு அவவை சம்மதிக்க வைச்சிடுவன்.'' மலர் கேட்டுக் கொண்டாள்.

சரியென்று கூடிச் சென்றாள்.

வாசலில் பார்த்தபடி நின்றிருந்தாள் நாகம்மா.

பார்வை கூர்த்திருந்தது - தமரையும் பிறரையும் இனங்காணும் கூர்மை.

பிறர் என்று தெரிந்தவுடன் முகத்தில் ஒரு வைரம் பாரித்தது, இளகுமென்ற நம்பிக்கையும் தராதபடிக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல்போல ஒரு உறுதி தெரிந்தது, நிலையில் கைபிடித்து நின்ற தோற்றத்தில்.

போகும்போது மலர் சொன்னாள்: "அம்மா எங்களை அங்கால இஞ்சாலையும் போக விடமாட்டா. ஒருதரோட பழகுறதுக்கும் விடுகிறதில்லை. ஏதோ ஒரு பயம்போல... என்னெண்டு சொல்லுறது... ம்..."

"எனக்கு விளங்குது."

ராஜி நெருங்கியும்கூட நாகம்மா வாசலைவிட்டு நகரவில்லை. "ஆர் பிள்ளை நீர்? ஆரைப் பாக்கவேணும்?" என்றாள் எடுத்தவுடனேயே.

"நான் ஒபரில வேலை செய்யிறன்..."

"பிள்ளையள் படிக்கிற விஷயமாய் வந்து கதைச்சு உதவிசெய்யினமே..."

"ஓ... அதுதானம்மா" என்று முந்திக்கொண்டு பதில் சொன்னாள் மலர்.

"தனியாயோ வந்திருக்கிறீர்?" என்று ஆச்சரியத்தோடும் ஒருவகை குற்றவுணர்வு தோன்றும்படியும் கேட்டாள் நாகம்மா.

"ஓம்" என்று தயங்கியபடியே சொன்னாள் ராஜி.

"வீட்டில தனிய விடுவினமோ வெளியில போய்வர."

"எனக்கு ஒருத்தரும் இல்லை. நான் காம்ப்பில தனியத்தான்."

சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு என்ன நினைத்தாளோ, "உள்ள வாரும்" என்று வாசலிலிருந்து நகர்ந்தாள்.

பாய்த் துண்டை எடுத்து விரித்து அமரச் சொன்னாள். ராஜி உட்கார தானும் எதிரே வெறுநிலத்தில் அமர்ந்தாள். "தனியாய்ப் போய்வர உமக்குப் பயம் வராதோ?" என்று பேச்சைத் துவக்கினாள். "மலர், தண்ணி வை" என்றாள் திரும்பி.

தாயார் யாருக்கேனும் அப்படி வரவேற்புச் செய்வது அபூர்வம்போலும். ஆச்சரியத்தோடு அடுப்பை மூட்டினாள் மலர்.

தேநீர் குடித்து முடியும்வரை பேசிக்கொண்டிருந்தாள்.

தனியே போய்வராதே... தனியே பெண்பிள்ளைகள் போய் வருவது ஆபத்து... ஆமிக்காரன் வருவான், தண்டல்காரன் வருவான். கவனமாய் இருக்கவேண்டும்... என்பதுமாதிரியான பேச்சுத்தான் எல்லாம்.

அவளுக்கு ராஜியைப் பிடித்திருந்தது.

தன்னுடைய முகாமுக்கு அடுத்த ஞாயிற்றுக் கிழமை ராஜி வரக்கேட்க மகிழ்ச்சியோடு சம்மதித்தாள்.

மூன்று மணிக்கு மேல் ஆகியிருந்தது.

பசித்தது. ஆனால் அவள் மனம் நிறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடுத்தமுறை வருவன். கலெக்டரிட்ட துண்டு வாங்கமாட்டன்" என்று வாசலில் நின்ற பொலிஸாரோடு கேலியாப் பேசிக்கொண்டு அவள் வீதியிலேறி நடக்கத் துவங்க, பின்னால் தொம்.... தொம்.... மென்று பாதப் பேரொலி கேட்டது. சிறிதுநேரத்தில், "ராஜீ.... ராஜீ...." என்று கூவிக்கேட்டது. ராஜி நின்று திரும்பினாள்.

தியாகு!

எப்ப, எப்படி வந்தான். கேட்டாள்.

சொன்னான்: "நீந்தித்தான்..."

திகைத்துப் போனாள். "என்ன அவ்வளவு அவசரம்? என்னவும் ஆகியிருந்தால்.... நீந்தி வரலாமெண்டு ஆரும் வெளிக்கிடுவினமோ.... ஆர் சொன்னது உன்னை நீந்திப் போகச் சொல்லி....?"

"சிவாதான்."

"அதுசரி.... எதுக்கு இஞ்ச வந்தாய்?"

"உன்னையும் சுதனையும் பாக்கத்தான்."

கண்கலங்கிற்று அவளுக்கு.

"நீ இப்ப எங்க இருக்கிறாய்?" கேட்டான் தியாகு.

சொன்னாள்.

அப்போதே அவளுடன் கூடிவரப்போவதாக நின்றான்.

அடுத்தமுறை அங்கே வரும்போது அனுமதி பெற்றுக்கொண்டு அவனைக் கூட்டிப்போவதாக உறுதிசொன்னாள்.

"கட்டாயம் கூட்டிப்போகவேணும்."

"சரி."

"சுதனும் அங்கதான் நிக்குதோ?"

"இல்லை."

"பின்னயெங்கை?"

"வேற இடத்தில. அது சரியான தூரம். போகேலாது."

"வெளிநாட்டிலயோ?"

"ம்!"

அவனுக்கு அது துக்கமாக இருந்தது. அவனுக்கு சிந்தாமணியைப்பற்றிப் பேசவேண்டியிருந்தது. அதற்கு அவனுக்கு சுதன் வேண்டும். சிந்தாமணி பற்றிச் சொன்னால் ராஜி கேட்பாளா? அடுத்தமுறை வரும்போது பார்க்கலாம்.

அவள் சொல்லிக்கொண்டு நடக்க அவன் திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

## 39

ஓர் அதிவிடிகாலையில் வாசலில் அழைப்புக் கேட்டது.

"சுவர்ணே....! சுவர்ணே....!"

திரவியம் எழுந்து சென்றான்.

"ஆர்?"

"அது நான்..... சுவர்ணாவின் பெரியம்மா -" என்றவாறு முன்னே வந்தாள் ஒரு சிங்களக் கிழவி.

அப்போதுதான் பஸ்ஸிலிருந்து / ரயிலிலிருந்து இறங்கி வந்திருப்பாள் போலத் தோன்றினாள். கையில் ஒரு பிளாஸ்ரிக் வயர்க் கூடை இருந்தது. வெள்ளைச் சட்டையும் வெள்ளை முண்டும் கட்டியிருந்தாள். நரைத்த தலை. மெலிந்த தோற்றம். சராசரி சிங்களக் கிராமத்து ஓர் முதியவள். அதனால்தான் போலும் முகமெல்லாம் ஓர் அப்பாவித்தனச் சிரிப்பு அப்பியிருந்தது.

திரவியம் ஒதுங்கி நின்றான். அவள் உள்ளே வரவும் படலையைச் சாத்திவிட்டுச் சென்று சுவர்ணாவை எழுப்பிவிட்டான்.

கிழவியைக் கண்ட சுவர்ணா கூவியே விட்டாள். "பெரியம்மா....!"

ஓடிப்போய் கைபிடித்து அழைத்துவந்து திண்ணையில் உட்கார்த்தி பேசிக்கொண்டிருந்தாள்.

அவள் மறந்திருந்த மொழி நெஞ்சுக்குள்ளிருந்து பிரவாகித்தது. அந்தப் பேச்சும் அணைப்பும் உறவுகள்பற்றிய விசாரிப்பும் வாத்ஸல்யத்தின் எல்லையை அவனுக்குக் காட்டின. நிகழ்ந்த தவறின் தனது பங்கை அப்போது அவன் உணர்ந்தான். அவள் அசிரத்தையாய்/ மறுதலிப்பாய் விட்டிருந்தபோதிலும் அவள் உறவுகளுடனான தொடர்பைப் பேண அவன் வற்புறுத்தியிருக்கவேண்டுமென்று அப்போது தோன்றிற்று.

உறவுகள் எங்கிருந்தாலும் பேணப்படவேண்டியவை.

தேநீரெல்லாம் குடித்து முடிந்து நிதானமாக தான் வந்ததின் காரணத்தை எடுத்துச் சொன்னாள் கிழவி. சிங்களத்திலேயே சொன்னாள். கிராமத்துச் சிங்களம். எந்த மொழியின் கிராமீயத்துக்குமிருக்கும் பகட்டின்மையும் விஸ்தாரமும் ஓசையமைதியும் அவள் பேச்சிலும் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு சிங்களம் ஓரளவு தெரியும்.

அவள் சொன்னதின் சாரம் இதுதான்.

கிழவியின் மகன் எக்கநாயக்க இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்புதான் சிறீலங்கா ராணுவத்திலே சேர்ந்துகொண்டான். அந்த முறையில் மட்டும் அந்தக் கிராமத்திலிருந்து பதினைந்து இளைஞர்கள் புத்தபிக்குவின் தூண்டுகையில் ராணுவத்திலே சேர்ந்திருந்தனர். ஆறு மாத பூர்வாங்க பயிற்சியோடு அவன் வடக்குப் போர்முனைக்கு அனுப்பட்டிருக்கிறான். அங்கேயிருந்தபோது அவ்வப்போது கடிதம் எழுதினான். முல்லைத் தீவில் ஒரு அதிகாலை நடந்த தமிழ்ப் புலிகளின் தாக்குதலில் ராணுவ முகாம் அழிக்கப்பட்டுவிடுகிறது. பலர் மடிந்தும் சிலர் தப்பியோடியும்விட காயமடைந்த ராணுவத்தார் சிலர் சரணடைந்துவிடுகிறார்கள். மரணமானவர்களின் உடல்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஆனால் அதில் எக்கநாயக்கவின் உடல் இல்லையென்றதும் கிழவி ஆசுவாசப்பட்டாள். ராணுவ தலைமையலுவலகம் தக்க பதில் சொல்லாது விட்டுவிடுகிறது. இந்நிலையில், கிழவியின் முடிவு அவன் தப்பியோடியிருக்கவேண்டும்; இல்லையேல் கைது செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பதே. ஓராண்டுக்கு மேலாகக் காத்திருந்தாள், அவன் தப்பியோடியிருப்பின் ஒரு தகவல் அனுப்புவதற்காய். இப்போது அவள் தீர்மானம் அவன் கைதாகியுள்ளான் என்பது மட்டுமே. கிழவியின் வடபகுதி வருகையின் நோக்கம் மகனின் விடுதலையைக் கேட்பதற்காக புலிகளைச் சந்திப்பது.

கிழவியின் பேச்சு இரக்கத்தை விளைத்தது அவனிடத்தில்.

கிழவிக்கு அவன் ஒரே மகன். கல்யாணமாகி வெகு காலத்தின் பின் பிறந்தவன். கணவன் நோயில் காலமாக, விதவையாய் அவனைப் படிக்கவைத்து வளர்த்தெடுத்தவள். அவள் பேச்சில் தனிமரமாய் நிற்கும் அவலம் தெரிந்தது.

"எனக்கு புலிகளைச் சந்திக்கவேண்டும். உன்னுடைய புருஷன் தமிழன்தானே! அவரால் இந்த உதவியைச் செய்ய முடியுமா?" என்று சுவர்ணாவைக் கேட்டாள்.

சுவர்ணா திரும்பி அவனைப் பார்த்தாள்.

திரவியம் சொன்னான்: "இதுபற்றி விசாரிக்க அவர்களில் பொறுப்பானவர்கள் யாரையாவது அவள் சந்திக்க முடியுமா முடியாதா என்பதுபற்றியெல்லாம் எனக்கு இப்பவே சொல்லத் தெரியவில்லை. ஆனால் எக்கநாயக்கவின் போட்டோ இருந்தால் ஆள் எங்கே, என்ன நிலைமையில் இருக்கிறார் என்பவைகளைப் பற்றி அறிந்துசொல்ல முடியும்."

கிழவி கண்கள் கலங்கி நீரிலாட போட்டோவை எடுத்துப் பார்த்து மார்போடணைத்து, முத்தமிட்டு..... அவனிடம் கொடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது இருபதுதான் இருக்கும். கண்களிலும் முகத்திலும் கிழவியிடத்துள்ளது போன்ற அப்பாவித்தனம்.

அவனும் ஒரு பலிகடாதான்.

புத்தமதத்தின்மீது வளர்க்கப்பட்ட வெறியும், பணத்தாசையும் அவனைப் போர் வாரிதியில் தள்ளியிருக்கின்றன. அரச பேரினவாதத்தை வெறுத்த திரவியத்தால் அந்தச் சிங்கள இளைஞனை வெறுக்க முடியவில்லை.

அவன் போட்டோவைப் பார்த்துக்கொண்டிருக்கையில் கிழவி சொன்னாள்: "அவன் உயிரோடிருப்பது தெரிந்தால் போதும். அவனை விடுவிக்கச்சொல்லி நான் பிரபாகரனை வேண்டுமென்றாலும் போய்ப் பார்த்துக் கேட்பேன்."

கிழவியின் உறுதி ஆச்சரியம் விளைத்தது திரவிக்கு

"என் பிள்ளையை என்னிடம் கொடு என்று கேட்பேன். என் மகனோடு காட்டுக்காவது ஓடிப்போய் வசித்துக்கொள்கிறேன், இனிமேல் அவன் உங்களுக்கெதிராக ராணுவத்தில் சேரமாட்டான், அரச பயங்கரவாதத்துக்கு உதவியாக சிங்கள இளைஞர்கள் யாரும் ராணுவத்தில் சேரக்கூடாது என புலிகள் விடுத்த அறிவிப்பைப் புறக்கணித்தது என் மகனின் தவறுதான், நானும் உனக்குத் தாய் மாதிரித்தானே, என்மீது இரக்கம்வைத்து என் மகனை என்னிடத்தில் கொடு என்று கேட்டால் அவர் மனமிரங்கமாட்டாரா.....?"

"சரி அம்மா, முதலில் எக்கநாயக்க பற்றி விசாரிப்போம். பிறகு..... பிரபாகரனைச் சந்திப்பதுபற்றி யோசிக்கலாம்" என்று அவள் உணர்வுகளைச் சாந்திப்படுத்தினான் திரவி.

## 40

கொள்கை ஈடுபாடு, சமுதாயத் தொண்டு ஆகியவற்றின் அற்புதமான வெளிப்பாட்டுப் புலம்தான் சிவசாமியின் வாழ்க்கை.

சிவசாமி பதினைந்து வயதில், பெரியார் உயிரோடிருந்த காலத்தில் அவர் சீடர்போலவே, இயக்க ஈடுபாடு கொண்டவர். இப்போது அவருக்கு வயது அறுபத்தைந்து. அம்பதாண்டுக்காலம் சுயநலம் கருதாத சேவை. முப்பத்தைந்து வயதில் அவருக்குத் திருமணம் நடந்தது. பகுத்தறிவுத் திருமணம்தான். திருமாவளவன் என்று ஒரு மகன் மட்டும். வள்ளியம்மைதான் அவனைப் பெற்றது, வளர்த்தது, படிப்பித்தது எல்லாம். கால்நடை மருத்துவராக அரசாங்கத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். கல்யாணமாகி இரண்டு குழந்தைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தமிழ், தமிழ்நாடு, தமிழினம் ஆகியவற்றின் தற்காலத் தாழ்நிலை கண்டு நெஞ்சு கொதிப்பவர். பொற்காலத்தை கற்பனைச் சரித்திரங்களில் கண்டு நெஞ்சு பூரித்துப் பூரித்திருந்தவர் சமகால நிலைமைகளால் நெஞ்சில் துக்கம் நிறைத்துப்போனார். அதையே தன் உடையில் ஓர் அடையாளமாக்கிக்கொண்டு தமிழ்நாடெங்கும் திரிந்தார்.

மூட நம்பிக்கைகளை மூர்க்கமாய்ச் சாடியவர் பெரியார் ஈ.வே.ரா. தெய்வ மறுப்பு திராவிட இயக்கத்தின் அடிநாதம். அடிமரம், மரம், கிளை, இலை எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் மூலம் இருப்பதுபோல், சமூகத்தின் சகல சீர்கேட்டுக்கும் மதமும் அது சார்ந்த நம்பிக்கைகளுமே ஆதிமூலமென்று அவர் அடித்துச் சொன்னவர். அவரையே தெய்வநிலைக்கு உயர்த்தி வழிபாட்டு மனப்பான்மையோடு வாழ்ந்தவர் சிவசாமி. தன் உணர்வுகளை வெளிப்படுத்த அவர் என்றும் லஜ்ஜைப்பட்டதும் இல்லை. பெரியாரோடு நாடெங்கும் அலைந்துதிரிந்து கழக மறவனாய் இருந்த தனக்கு, தந்தைபோல் அவரை மதிக்கும் வணங்கும் தார்மீக உரிமையுண்டென்று, கேட்டால் அவர் சொல்வதுண்டு.

ஆனால் அவரது முழுக் கவனமும் 1979க்குப் பின்னர் ஈழத் தமிழர் போராட்டக் குழுக்களின் பக்கம் திரும்பிவிட்டது. 1983க்குப் பின்னர் அவர் தம்மை முழுவதுமாய் ஈழத் தமிழர் போராட்டத்திலும் அவர்களது நலவுரிமைகளோடும் பிணைத்துக்கொண்டார். தமிழன்..... தமிழீழம் என்று மூச்சுவிட்டார். உமாமகேசுவரன், ஸ்ரீசபாரத்தினம், பத்மநாபா, பிரபாகரன் என்று பலபேரை அவருக்கு நேரில் தெரிந்திருந்தது. அக்காலகட்டத்தில்தான் சிவசாமி என்ற பெயரை அவர் சிவசாமித் தமிழன் என்றாக்கிக்கொண்டது.

1987ல் இலங்கை - இந்திய உடன்படிக்கை ஏற்பட்டு இந்திய அமைதிப் படை இலங்கை சென்ற பின்னர் சகல இயக்கங்களின் நடவடிக்கைகளும் முடக்கப்பட்டன. இயக்கங்களின் ஆயுதத் தரிப்பு முற்றாகத் தடைசெய்யப்பட்டது. விடுதலைப் புலிகளென / புலிகளுக்குச் சார்பானவர்களென இனங்காணப்பட்டவர்கள் சிறப்பு முகாங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆனாலும் அந்த இயக்கம் சார்ந்தவர்களின் நடமாட்டம் இன்றும் தமிழ்நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்துகொண்டிருந்தது. அது, 1990ல் நிகழ்ந்த பத்மநாபாவின் கொலையோடு மேலும் குறைக்கப்பட்டுவிட்டது. அந்தளவில் ஈழ விடுதலைப் போராட்ட ஆதரவாளர் என்ற பொதுமனிதராயிருந்த சிவசாமித் தமிழன் தமிழீழ விடுதலைப் புலிகளின் முழு ஆதரவாளனாக மாறிக் கொண்டார். தமிழனுக்கொரு தனிநாடு - தமிழீழம் - என்பதே அவர் மூச்சும் பேச்சுமானது. திராவிட இயக்கச் சிந்தனைகூட மெல்ல எட்ட நின்றுவிட்டது. கழகம் மேலும் எட்டிப் போனது.

வள்ளியம்மையின் தேகாபிலாசைகளைப் போலவே அவளின் அக்கறையான கேள்விகளுக்குரிய பதிலை, இடர் பட்டுவிடாத படிக்கான எச்சரிக்கைகளையும் அவர் நிராகரிப்புச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரத்தில் எப்போதோ ஓரிரு நாளில் அவர் வீடு வரும்வேளையில் சாப்பிடும்போது வள்ளியம்மை மெல்லச் சொல்லுவாள்: "நீங்க செய்யிறதொண்ணும் எனக்குப் புடிக்கல. ஆனா செய்யாதீங்கன்னு சொல்லிட முடியுமா? அதால.... எதினாச்சும் செய்யுங்க. கவனமாச் செய்தாச் சரிதான். அதைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கில்ல."

"ம்!"

அவருக்கு வருத்தமாய்த்தான் இருக்கும். அவள் நகை வேணும் புடவை வேணுமென்றுகூட அவரைக் கேட்டதில்லை. ஆனாலும் அவளைவிட, தமிழ் அரியணையேறுவதற்கு ஒரு தனிநாடு வேண்டுமென்பது முக்கியமல்லவா?

"போற போற இடத்தில சாப்பிடாம கிடந்திடாதீங்க?"

"அதுக்கு குறை வைச்சிடமாட்டன். உடம்பைப் பார்" என்பார் அவர்.

சிவசாமிக்கு இன்னும் நாற்பது வயது உடம்புதான். முண்டு வைத்த உடம்பல்ல. மெலிந்ததுதான். ஆனாலும் பிரம்புபோல் ஒரு நளினமும் வலிமையும் இருந்தது அதில்.

பாரதி மீசை வைத்திருந்தார். மனுஷன் சிலவேளைகளில் தோளிலுள்ள துண்டை பாரதிபோல முண்டாசுகூட கட்டுவதுண்டு. பொட்டில்லாத பாரதியென்று கழகப் பெரிசுகள் முன்பு கேலி செய்திருக்கின்றன.

நீண்ட முடி. பாதி நரைத்திருந்தது. படிய அழுந்தவாரி பின்னால் தாழ விட்டிருப்பார்.

வேட்டியும் துண்டும் பனியனும் பளீரென்று இருக்க வேண்டும் அவருக்கு. அவர் ஆகக் கூடுதலாய் எதிர்பார்க்கிற சுகவாசம் அதுதான். குளிக்காமல் நாலு நாள்கூட திண்ணைகளில் பஸ்நிலையங்களில் படுத்தெழும்பிக்கொண்டு இருந்துவிடுவார். ஆனால் குளித்தால் பளீரென்று உடுப்புகள்வேணும். கறுப்புத்தான் என்றாலும் சட்டை சலவையின் வாசம், இதத்துடன் இருக்கவேண்டும். அதைத் தொடர்ந்து ஒரு நாளுக்கேனும் ருசியான சாப்பாடு.

வேலையென்று வந்துவிட்டால் மனிதர் அதற்குப் பின் பம்பரம். தூக்கம் அன்ன ஆகாரமின்றி அலையக் கூடியவர். பீடியும் ரீயுமிருந்தால்போதும், தென்பகுதிக்காடு மேடெங்கும் கரைவழியெங்கும் வாரக் கணக்கில் அலைந்துவிடுவார். அவருக்கு அவர்போலவே கொள்கைத் தீவிரமுடைய ஒரு கூட்டத்தைத் தெரிந்திருந்தது. தேவைக்கேற்ற அளவு பயன்படுத்திக்கொள்வார். ஒரு வேலையின் பல்வேறு கட்டங்களில் ஒரு கட்ட வேலைதான் எப்போதும் அவரதாய் இருக்கும். அதை படுசுத்தமாய் முடித்துவிட்டு அவர் திருப்தியடைந்து பேசாமலிருந்துவிடவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கட்டளையல்ல, நியமம்.

சுயகட்டுப்பாடுதான் அங்கே பிரதானமாய் எதிர்பார்க்கப்பட்டதென ஆரம்பத்திலேயே அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மருந்து டீசல் யார்ப்பாணத்துக்கு தடுக்கப்பட்டிருந்த தீப்பெட்டி மெழுகுதிரி பற்றி போன்ற பொருட்கள் அங்கிருந்து அனுப்பப்பட்ட வேளையில் இந்தியக் கடல் எல்லையில் பிடிபட்டதுண்டு. ஆனால் அவரது கட்டத்துள் அதுபோன்ற எந்த விக்னமும் அதுவரை ஏற்பட்டதில்லை. எங்கிருந்தோ கிடைக்கும் அந்தப் பொருட்களையெல்லாம் சேமித்து கரைவரை எடுத்துச் சென்று மீன்பிடி படகில் ஏற்றுபவர்களிடம் ஒப்படைக்கிறது வரை அவர் பொறுப்பெடுத்துச் செய்த கட்டமாகும். அந்த வழி அவரது எஃகுக் கோட்டை. அந்த மண் அவரது வாழ்வோடு இணைந்தது. பாதங்களே அந்த மண்ணிலும் கல்லிலும் காட்டிலும்தான் தேய்ந்தன.

இயக்க வேலைகள் ஏது காரணத்தாலோ கடந்த சில வாரங்களாய் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

அன்று சிவசாமி வீட்டிலிருந்து புறப்பட்டபோது மாலையாகியிருந்தது.

மழைக்கான அறிகுறிகள் யாவும் வானத்திலே கோலங்கட்டியிருந்தன.

நகர பஸ்நிலைய எதிர் மைதானத்தில் தி. மு. க. கூட்டணியினரின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இருந்தது.

வங்கங் கடலின் காற்றமுத்தத்தில் 'தாழ்வு மண்டலப்படும் கார்மேகங்கள் வடக்கே அல்லது வடமேற்காய் விரைந்து செல்கையில் தெற்கிலும் வர்ஷிப்பு செய்யும். கடற்கரையையொட்டிய பிரதேசமெங்கும் குளிர்மை கட்டித் தொங்கும்.

அந்தத் துளிகளின் விசிறலுக்கு யாரும் ஓடி ஒதுங்குவதில்லை.

அந்தத் தூவல் சுகமானது.

தூறல்களில் நடப்பதில் பேரானந்தம் பெறுபவர் சிவசாமி.

அன்று நனைந்து மகிழ்வெய்த மனம் விண்டுகொண்டிருந்தது.

ஆனால் மழைமேகம் காற்றினிழுப்பில் வடக்கே வேகமாய் ஓடிச்சென்று கொண்டிருந்தது தூறச் செய்யாமல்.

அவர் ரீக்கடையை அடைந்தபோது சிவம் ரீ குடித்துக்கொண்டிருந்தான். அவரைக் கண்டதும் எழுந்து கிட்ட வந்தான்.

சிவச்சாமியின் புருவங்கள் ஏறின.

நெற்றிப் பரப்பின் ரேகைகளில் மடிப்புகள் விழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அவர் பார்த்து, பேசி மூன்று வருடங்களுக்கு மேலே. எங்கேயிருந்தான் என்ற தகவலும் தெரியாமலிருந்தது. அவர் மறந்தே போயிருந்தார் அவனை. அப்படி நடப்பது இயல்புதான். மாவீரனாகியிருக்கலாம்; தற்கொடை(ல)யாளியாகியிருக்கலாம். ஏதாவது ஒரு நாளில் நினைக்கலாம். எப்போதும் நினைக்க அவகாசம் ஏது? அதனால்தான் அவனது திடீர்ப் பிரசன்னத்தில் அவர் ஆச்சரியப்பட்டது.

நெருங்கி வந்ததும், "என்ன, சிவம்?" என்றார்.

"உங்களோட பேசவேணும்."

"அவசரமா? டீ சாப்பிட்டுட்டு வந்துடறனே!"

"சாப்பிட்டுட்டே வாருங்கோ."

ரீயை அவசரமாய்க் குடித்துவிட்டு சிவசாமி வர, "ரண்டு நாளாய் உங்களைத் தேடுறன்" என்றான் சிவம்.

"பெரியபாளையத்துக்குப் போயிருந்தேன். ஏன்... என்ன விஷயமாய்த் தேடினே?"

"யோகேஷைத் தெரியுமெல்லோ?"

"தெரியும்."

"உடனடியா அவரைப் பாக்கவேணும்."

"யோகேஷ் நாட்டிலயோ என்னமோ...?"

"இல்லை. இஞ்ச வந்து நாலஞ்சு நாளாகுது. ஆள் இன்னும் திரும்பிப்போகேல்லை."

"நிச்சயமாய்த் தெரியுமா?"

"நிச்சயமாய்த் தெரியும்."

"தேடிப் பாக்கணும். பிடிச்சிடலாம்."

"தேடிப் பாருங்கோ. எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் ஆளைக் கண்டுபிடிக்கவேணும். தலைமையிடத்திலயிருந்து தகவல் வந்திருக்கு. பெரிய ஒப்பறேஷன். தம்பியே நேரடியாய்த் தலையிட்டிருக்கிற விஷயம் இது."

இனி அவர் எதையும் கேட்கக் கூடாது.

சிவசாமி சரியென்று தலையாட்டினார்.

"எங்கை நிண்டாலும் உடனடியாய் யோகேஷை வேதாரணியம் வரச்சொல்லவேணும். ஸ்ரீநிவாஸ விலாஸில சாப்பாட்டை வைச்சுக்கொண்டிருக்கட்டும். முக்கியமான ஒரு ஆள், முக்கியமான ஒரு விஷயத்தோட யோகேஷை வந்து சந்திக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி.

பணம் கொடுத்தான் சிவம்.

சிவசாமி தஞ்சை போனார்; கும்பகோணம் போனார்; திருச்சி போனார்; அன்றே பஸ் எடுத்து பாண்டி போனார். அங்கேயும் இல்லாது போக மறுநாள் அதிகாலை சென்னை பஸ் ஏறினார். சில குறிப்பிட்ட இடங்களில் விசாரித்ததில் யோகேஷின் இருப்பிடம் தெரிந்தது. அதன்படி அன்று மாலையே சாலிக்கிராமத்திலுள்ள ஒரு வீட்டில் அவனைச் சென்று சந்தித்தார்.

"சிவசாமித் தமிழன்!" குதூகலமாய் வரவேற்றான் யோகேஷ்.

சுகவிசாரிப்பெல்லாம் முடிய மெல்லிய குரலில் சிவசாமி சொன்னார்: "தம்பி, நீங்க அவசரமா வேதாரணியம் வரணும்."

"தகவல் வந்திருக்கோ?" என்று சிலிர்த்தபடி கேட்டான் யோகேஷ். இரை கண்ட மிருகம் அப்படித்தான் சிலிர்த்தெழும். அவன் அவரைத் தகவல் தெரிவிப்பவராகவே அறிந்திருந்தவன்.

"ஆமா. ஸ்ரீநிவாஸ விலாஸ் தெரியுமா?"

"தெரியும்."

"சாப்பாட்டை அங்க வைச்சுக்குங்க. முக்கியமான ஆள் ஒண்ணு வந்து உங்களைச் சந்திக்கும்."

"ஆள் சந்திக்குமா? ஆர்...?"

"அதொண்ணும் எனக்குத் தெரியாது, யோகேஷ். ஏதோ முக்கியமான அசெய்ன்மென்ட்போல இருக்கு. தம்பியே நேரடியதாய்த் தலையிட்டிருக்குதாம்."

"எப்ப நான் போகவேணும்?"

"இப்பவே."

மறுநாள் விடிவிடியென்று காலையில் தஞ்சையில் இறங்கினான் யோகேஷ். தான் வழக்கமாய்த் தங்கும் வீட்டில் போய்த் தங்கிக்கொண்டு, சொல்லப்பட்டபடி மதியச் சாப்பாட்டுக்கு ஸ்ரீநிவாஸ விலாஸ் சென்றான். ஆனால் வழியிலேயே அவன் எதிர்பாத்திருந்த அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

தெரியாத பெடியனாகவே இருந்தான். சின்னா எங்கேயென்று கேட்க, "இப்ப சின்னாவையோ மற்ற தெரிஞ்ச ஆக்களையோ தொடர்புகொள்ள முயற்சிக்க வேண்டாம். வெளியில கொஞ்சம் பிரச்சினையாயிருக்கு. விளங்குதுதானே? நீர் செய்யவேண்டியதெல்லாம்... ஒவ்வொரு நாளும் இரவு பத்து மணிக்கு மேல படகோட கடற்கரையில மறைவாய்க் காத்திருக்கிறதுதான். காலமை ஆறு மணிக்கு மேல எங்கயும்போகலாம். திரும்ப ராத்திரிக்கு பத்து மணிபோல படகோட கரைக்கு வந்திடவேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசெய்ன்மென்ட் முடிஞ்சவுடன நாட்டுக்குத் திரும்பவேண்டியிருக்கும்.... பிளானில ஏதாவது மாற்றமிருந்தால் நான் வந்து சொல்லுவன்'' என்றான் சந்தித்தவன்.

சரியென்று கூறி, "அவ்வளவுதானா?'' என்றான் யோகேஷ்.

"அவ்வளவுதான். காசு....?''

கொடுக்க வாங்கினான்.

மறுகணம் பெடியன் விறுவிறுவென நடந்து முடுக்கில் திரும்பி மறைந்தான்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இயக்கவேலைகளில் ஈடுபடுவதற்காக எப்போதுமே அவ்வளவு பணம் அவனுக்குக் கொடுபட்டதில்லை. இன்னும்.... கொடுத்த பணத்துக்கு செலவுக் கணக்கு கேட்டு மீதிக் காசுக்கு நச்சரிக்கப்பட்டுத்தான் பழக்கம்.

சாப்பிடச் சென்றான். போகும்போது அங்குள்ள தியேட்டர்களில் என்ன படம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை சுவரொட்டிகளில் கவனிக்க அவன் மறக்கவில்லை. மே 21 முதல், கமலாவில் ரஜினியின் படமொன்று திரையிடப்படவிருந்தது. ஆனால் அதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. சரி, ஏதாவதொரு படத்தைப் பார்த்து மாலைப் பொழுதைக் கழிக்கலாம் என்ற நினைப்போடு சென்று சாப்பிட்டான்.

எட்டு மணிக்கு படகை எடுத்துக்கொண்டு பத்து மணிக்கெல்லாம் வழக்கமான இடத்தில் சென்று காத்திருந்தான். யாரும் வரவில்லை. காலை ஆறு மணியளவில் படகை எடுத்துப்போய் உரிய இடத்தில் சேர்த்து, 'வோக்கி ரோக்கி'யையும் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றான்.

மறுநாளும் அப்படியே நிகழ்ந்தது.

மூன்றாம் நாள் அவன் போர்ட்டோடு காத்திருக்கையில் நள்ளிரவளவில் தூரத்தே கடலில் படகொன்று இரைந்து கேட்டது. அமானுஷ்யத்தில் அந்த இரைச்சல் அச்சத்தைக் கிளர்த்திற்று. எல்லைக் காவல் படையினதாய் இருந்தால்....? கரைக்கு ஓடி சவுக்கு மர அடர்த்திக்குள் தன்னை மறைத்துக்கொண்டு கவனிக்க, வந்து கரை சேர்ந்த படகிலிருந்து சின்னா இறங்குவது தெரிந்தது.

யோகேஷ் மனம் குழம்பினான்.

எங்கோ தவறு நடந்திருக்கிறது என்று உள்மனம் சொல்லிற்று

ஓடிப்போய் சின்னாவிடம் விபரம் சொன்னான்.

"உங்களிட்ட ஆர் வந்து சொன்னது?'' சின்னா கேட்டான்.

"சிவசாமித் தமிழன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆள் நம்பக்கூடியவர்தான். ஆனால் அவரே ஏமாறியிருந்தால்.... தீர விசாரிக்காமல் எதுவும் செய்ய ஏலாது. முதலில போர்ட்டைக் கொண்டுபோய் ஒப்படைச்சிட்டு வாருங்கோ, யோகேஷ். இந்தப் போர்ட் இப்பவே திரும்புது. இதை அனுப்பியிட்டு நிக்கிறம், கெதியாய் வாருங்கோ."

யோகேஷ் திரும்பிவந்தபோது கடற்கரை மணல் மேட்டில் இருந்து சின்னா மற்றவர்களோடு அதுபற்றித்தான் பேசிக்கொண்டிருந்தான். "இஞ்சயிருந்து போர்ட் போற விஷயமாயிருந்தால் எனக்கு இல்லாட்டி கதிருக்கு கண்டிப்பாய்த் தெரிஞ்சிருக்கும். தெரிஞ்சிருக்கவேணும். எங்களுக்குத் தெரியாமல்.... அதுவும் தெரியாத ஆளின்ர கதையை நம்பி.... எனக்கு என்னவோ சந்தேகமாயிருக்கு. வாருங்கோ, நாளைக்கு சிவசாமித் தமிழனைப் பாத்துப் பேசின பிறகுதான் எதையும் தீர்மானிக்கவேணும் என்று எழுந்தான் சின்னா. மற்றவர்களும் எழுந்தனர்.

அப்போது தூரத்தில் ஏழெட்டுப் போர் படகு நிறுத்துமிடத்துக்கு அசுர வேகத்தில் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. சட்டென அமர்ந்து புதர்களோடு மறைந்தனர். யார் அவர்கள்? அவர்கள்தான் அக்கரை செல்ல படகோடு காத்து நிற்க யோகேஷிடம் சொல்லிவைத்த ஆட்களா? படகு இல்லையென்றதும் திட்டுக்கள் சில கேட்டன. மறுகணம் வந்த வழியே திரும்பி நடந்தனர்.

சின்னா ஆகியோர் தங்களிடம் சேர பஸ்ஸுக்கு செல்ல, மறுநாள் மதியம் வருவதாகச் சொல்லிக்கொண்டு தனது அறைக்கு நடந்தான் யோகேஷ்.

"ஆர்.... யோகேசுவோ?"

வீட்டிலிருந்த முதியவள் கேட்டாள்.

"ஓம், பாட்டி."

"விடியப் போகுதே எங்கயிருந்து வாறாய், தம்பி?"

"செக்கண்ட் ஷோ படம் பாத்திட்டு கூட்டாளிகளோட பேசிக்கொண்டு நிண்டிட்டன்."

"பின்னேரம் ராசன் வந்து கனநேரமாய்க் காத்திருந்திட்டுப் போறான். காலமை வருவானாம். ஒரு இடமும் போகவேண்டாமெண்டு சொல்லச் சொன்னான்."

"சரி, பாட்டி. மொட்டை மாடியிலதான் படுப்பன். வந்தாச் சொல்லுங்கோ."

வேலைகள் இல்லாமலிருந்தால் வெய்யில் சுடத்தான் அவனுக்கு விழிப்பு வரும். அன்றைக்கு விசித்திரமாய் அதிகாலையிலேயே வந்திருந்தது. விழிப்பில் ஒரு வசதியீனம். இதயம் சோகமாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பதுபோல் ஒரு உணர்வு. படுத்தபடியிருந்து பார்க்க, சூழ புகைமண்டலமாவதுபோல் ஒரு தோற்றம். இயல்பான சந்தடிகள் கடைத் தெரு, பஸ் நிலையப் பக்கத்தில் இல்லை. அதை அமைதியென்றும் சொல்லிவிட முடியாதிருந்தது. புயலுக்கு முன் கடலில் அவ்வாறான உள்குமைவு நிலைகளை அந்தப் படகோட்டி பலசமயங்களில் தரிசித்திருக்கிறான். அப்போதும் அப்படியானதொரு நிலையையே அவனால் உணர முடிந்திருந்தது.

## 41

அது ஒரு அர்த்த ராத்திரி மழை நாள். சோவென மாரி பொழிந்துகொண்டிருந்தது. தூர கிழக்கின் அற்புதமான அழகு பொருந்திய நகர் அது.

ஜன்னலூடு பார்வை, வெளிச்சம்பட்டு தங்க இழைகளென மின்னிய மழைக்கோடுகளில், பின்னால் அதையும் தாண்டி மனவெளி விரித்த உலகிலென்று படிந்திருந்தது.

அந்தக் கனவு வெளியில் அவள் மண் நிர்மாணமாகிற்று.

சின்னது என்றாலும் அற்புத அழகு பொருந்திய தீவு அது. அது தீவுபோலவும் தோன்றாது. கடலின் குழந்தை போலவே சரியாக. இந்து மாகடலின் அலைகள் அடிப்பது அதைத் தாலாட்டத்தானே!

அங்கே.... அம்மா, அப்பா, தம்பி என்று அன்பு நிறைந்த குடும்பம். அக்கறையுள்ள அயல். எந்த இடத்தையும்விட தீவில் தனிமனிதர்களுக்கிடையிலான அணுக்கங்கள் அதிகமானவை. அந்த அன்பை, அக்கறையை அனுபவிக்க அவளுக்குக் கொடுப்பனவு இல்லை. அங்கே இப்போது அந்தக் குடும்பம், அவள் அதனைப்போல், அவளை எண்ணி வதைபடுமா?

எதிரே அவள் மேலே தொடர்வதற்குக் காத்திருந்தாள் லேக்.

லேக் அவள் வீட்டுக்கு எதிர் வீட்டில் தனியே வசிக்கிற இளம் பெண்.

ஆயிரம் பாத் பணத்துக்கு அது மாதிரி பழைய கட்டிடமொன்றின் மூன்றாவது தளத்தில்தான் வீடு அகப்படும்.

அது வறியவர்களின் அடுக்குமாடிக் குடியுருப்புப் பகுதி. ஆனாலும் வறுமை அணுகாமல் வாழ்ந்துகொள்ள அவர்களால் முடிந்திருந்தமை நேசமலருக்கு ஆச்சரியம்.

ஒரு குடும்பத்தாரோடு இன்னொரு வீட்டாருக்கு பெரிய தொடர்பு இருப்பதாய்த் தெரியவில்லை அவளுக்கு. தனியுலகங்களாக அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனம் நடத்திக்கொண்டிருந்தனர். அதனால்தான் தன் எதிர்வீட்டு இளம் பெண்ணின் நீண்டகாலமான அந்நிய பாவனை அவளைப் பெரிதாக வருத்தவில்லை.

படிப்பதாகத் தெரிந்தது. என்ன வகுப்புப் படித்தாளோ? பகல்பூராத் தூங்கினாள். எந்தக் கல்லூரியிலோ இரவு படிக்கப்போனாள். நள்ளிரவிலும், சிலவேளை விடிந்த பிறகும் வீடு திரும்பினாள். வண்டிக் கடைகளிலேயே அவள் சாப்பாடு அதிகமாக முடிந்துவிடுகிறது. நேசமலர் அங்கே குடிவந்து ஏறக்குறைய ஒரு வருஷமாகப்போகிறது. இருந்தும் கடந்த இரண்டொரு மாதமாகத்தான் அவர்களுக்குள் பேச்சும் பழக்கமும் உண்டாகியிருந்தன.

கடந்த இரண்டு நாட்களாக பாங்கொக்கில் நல்ல மழை. அத்துடன் வருத்தம் பிடித்துவிட்டது நேசமலருக்கு. வெளியே தெரிந்த நோய் காய்ச்சல்தான். ஆனாலும் எழும்பி நடக்க, வைத்தியரிடம் போகக்கூட முடியாதுபோய்விட்டது அவளால். லேக்தான் வந்து பார்த்து அவளை வைத்தியரிடம் கூட்டிப் போய் வந்தாள். கடந்த இரண்டு நாட்களாகவும் அவள்தான் அடிக்கடி வந்து வேண்டியதைக் கேட்டு செய்துகொடுத்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

அன்று வெள்ளிக் கிழமை. வெள்ளிக் கிழமைகளில் வெளியே எங்கும் லேக் போவதில்லை. காலையிலெழுந்து குளித்து, மழையில் தோய்ந்த ரோஜாவாய் புதிய ஜனனத்தின் பரிமளிப்புடன் புத்தவிகாரம் செல்கிறாள். மானசீகமாய் வணக்கத்திலீடுபடுகிறாள். திரும்பி வருகிறாள். வாசிக்கிறாள்; தொலைக்காட்சி பார்க்கிறாள்; விருப்பமான உணவைச் சமைத்துச் சாப்பிடுகிறாள். கடந்த சில வெள்ளிகளாக மாலைகளில் நேசமலரையும் வற்புறுத்தி அழைத்துக்கொண்டு மாரியம்மன் கோவிலுக்குப் போகிறாள். குழந்தையோடு செல்வதிலுள்ள சிரமம் அவள் வருவதால் ஏற்படுவதில்லை நேசமலருக்கு. பஸ்ஸிலும் பெரிதான ஜனநெரிசல் இருப்பதில்லை.

அன்றும் வெள்ளிக் கிழமையானதால் நேசமலரோடு கூடவே இருந்துவிட்டாள் அவள் தன் கதை கூறக் கேட்டுக்கொண்டு.

நேசமலரினதும் லேக்கினதும் பழக்கம் எதிர்பாராதவிதமாய்த்தான் ஏற்பட்டது. வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்த நேசமலரின் கையிலிருந்த குழந்தையின் ஒரு காலிலிருந்து சப்பாத்து கழன்று விழுந்துவிட அதை எடுத்துக் கொடுப்பதோடு சிரித்து, 'கடைக்கா?' என்று லேக் கேட்டதோடுதான் அந்தப் பழக்கம் முதன்முதலில் ஏற்பட்டது.

அன்றுவரை லேக் தன்னைப்பற்றித்தான் கொஞ்சம் கொஞ்சம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இன்று எப்படியோ நேசமலர் தன்னைப்பற்றிச் சொல்கிற சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது.

அவள் எதையும் மறைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இன்பமயமான தீவு வாழ்க்கை, சின்ன பிஞ்சுகளுக்குப் போதிக்கும் ஆசிரியத் தொழில், இனக் கலவரம், வெளிநாடு செல்லும் வேட்கையில் இந்தியா வருதல், ஏஜன்ரிடம் பணத்தை ஏமாறுதல், பணத்தைத் திரும்பப் பெற இயக்கமொன்று உமிழ்ந்த ரவுடி ஒருவனை அணுகுதல், அவன் அவளையே வெந்து தணிந்த காடாக்கி மறைதல், பின் குழந்தையொன்றுக்குத் தாயாகிவிடும் அவளை காதல்பேசி வந்து ஒருவன் டெல்லி, பம்பாய் என்று இழுத்துக்கொண்டு திரிந்துவிட்டு அலுத்துப்போக கைகழுவி நீங்குதல், டெல்லியில் அறை வாடகை கொடுக்க சாப்பிட குழந்தைக்கு பால் வாங்கவும் வழியில்லாமல் பட்ட துன்பம், அந்த நேரத்தில் கனடாவிலிருந்து ஏஜன்ஸி தொழில் நடத்தி லட்சங்கள் சம்பாதிக்க வந்திருந்த ஒரு யாழ்ப்பாணத் தமிழன் அவள் கதையைக் கேட்டு கண்ணீரே வடித்து அவளுக்கு உதவ முன்வருதல், அவளை போலிக் கடவுச் சீட்டு ஒன்றில் டெல்லியிலிருந்து சிங்கப்பூருக்கும், பின் அங்கிருந்து தாய்லாந்துக்கும் கொண்டுவந்து சேர்த்தல், அவன் தன்னை கனடா கூட்டிச் செல்வான் என்ற நம்பிக்கையிலும் தானே தன்னுள் வளர்த்த மோகத் தீயினாலும் அவனின் அணைப்புக்கு ஆட்படுதல் என்று எல்லாம் சொன்னாள். ஏறக்குறைய மூன்று வருடங்களில் ஐந்து முறை கருச்சிதைவு செய்ததைக்கூட அவள் மறைக்கவில்லை. அவன் கைவிட்டதிலும் தனக்கு ஏமாற்றமோ வருத்தமோ இல்லையென்பதையும் அவள் தெளிவாய்த் தெரிவித்தாள். தன் விதியையே அவள் நொந்தாள். அழுதாலும், பிள்ளை அவள்தான் பெறவேண்டும் என்பதுபோல், நொந்தாலும் அவளே தாங்கவேண்டியதுதான் விதி. மாரியம்மன் கோவிலில் வெள்ளிகளில் அங்கு கொடுக்கும் மதியச் சாப்பாட்டுக்காகவே பெரும் பக்தைபோல் திருநீற்றுப் பூச்சுடன் அங்கு போய் வழிபாடாற்றிய அவலம் அந்த விதியின் ஒரு கணு. கடைசியில் எப்படியோ தாய்லாந்திலுள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகள் புனர்வாழ்வு மையத்தில் கணவனை இழந்த விதவை, ஒரு குழந்தையின் தாய் என்ற அடிப்படைகளில் அவள் அகதியாக ஏற்கப்பட்டாள். மாதாமாதம் உதவித் தொகை கிடைக்க வழி ஏற்பட்ட பிறகுதான் அந்தப் பல மாடிப் பழைய கட்டிடத்தில் அவள் வாடகைக்கு வீடு எடுத்தது. எல்லாவற்றையும் சொல்லி ஒரு விரக்திச் சிரிப்போடு முடித்தாள் நேசம்.

கறுத்து, இரைத்துக்கொண்டு மறுபடி மழைபெய்ய ஆரம்பித்தது.

லேக், உலக வாழ்வின் சபலங்கள் ஆசைகள் சுழல்கள் எல்லாம் தெரிந்த அதிர்வுகளில் ஆடிப்போயிருந்தாள்.

லேக்குக்கு அல்ல, தனக்கே தன் கதையைச் சொல்வதான பாவனைதான் நேசமலருக்கு இருந்தது. கடைசியில் ஒரு விரக்திச் சிரிப்பை உதிர்த்திருந்தாலும் அவள் பலமுறை பெரிதாக விசும்பாமல் கண்ணீர் சிந்தியிருந்தாள்.

கதை சொல்லி முடிந்தபோது அவள் களைத்துப் போனாள்போல் தோன்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கான சிதையில் மேலும் சில விறகுகள் அடுக்கப்பட்டதான கற்பிதம். ஒவ்வொரு ஆயாசப்படும் பெரும் களைப்பின் பின்பும் மனத்தில் ஒரு தோற்றம் அவ்வாறுதான் உருவாகிக்கொண்டிருந்தது. அதில் ஒரு பயம்தான் விளைந்துகொண்டிருந்தது அதுகாலவரையில். அப்போதோ வித்தியாசமான உணர்வு தோன்றிக்கொண்டிருந்தது.

தன்னை - தன்னின் அழிவுகளை - தனியொருத்தியின் அழிவாகவே அவள் எண்ணிச் சாம்பி வந்தாள். லேக்குக்கு தன் கதையைச் சொன்ன பிறகு, அது அப்படியல்ல என்று தெரிந்தது. அதனால் தன் பாவங்கள் அக்னி பிரவேசம் போன்ற தனது சுயத்தின் ஒழிவுமறைவற்ற வெளிப்பாட்டால் கரைந்திருக்குமென்று அவளுக்கு நம்பிக்கை வந்தது. இனி அவள் சாவதாயிருந்தாலும் பாவத்தை ஓரிடத்தில் போட்டுவிட்டு, பழியை எடுத்துக்கொண்டு செத்துவிடலாம். ஒரேயொரு கவலையைத் தவிர வேறு கவலை அவளுக்கில்லை.

அவள் குழந்தை.

அதற்காக அவள் வாழலாம்தான்.

ஆனால் வாழ்வு அவள் கையிலில்லையே! வாழ்வின் முறைகளே அவள் கையில் இல்லாமல் போனபோது, மரணம்மட்டும் அவள் விருப்பத்தில் கட்டுப்பட்டுவிடுமா?

அவள் அப்போது எடுத்திருப்பது ஒரு புதிய பிரசவம். ஆனால் பாவத்தின் சம்பளம் எப்போதும் மரணமாயே இருக்கிறது. அவளின் ஜீவனின் தளர்ச்சியை லேக் புரிந்தாள்.

மழை இன்னும் பெய்துகொண்டிருந்தது.

நேசமலர் வெளியே எட்டிப் பார்த்தாள்.

வெள்ளம் அடித்துப் பாய்ந்து பாதாளக் கிடங்குகளுள் மறைந்துகொண்டிருந்தது.

ஒருவித வெளிர்நீலப் புகார் எங்கும் விரிந்திருந்தது. தீவில்தான் அப்படிப் பாத்திருக்கிறாள். அதிகாலை வேளையில் பனியா / அடுப்பின் நெருப்புப் புகையா என்று தெரியாதபடிக்கு ஒரு மெல்லிய நீலப்புகையின் விரிவு எங்கும் விரவியிருக்கும்.

தெருவின் ஒரு ஓரத்தில், மடோனா றெஸ்ரோறன்ற் முன்னால் திடீரென கூச்சல். சந்தடி. நான்கு ஐந்து தாய் வாலிபர்கள் சண்டை பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஒருவன் ஓடினான். மற்றவர்கள் துரத்தினார்கள்.

மெல்ல ஜன்னலிலிருந்து திரும்பினாள்.

களைப்பு தீர்ந்தமாதிரி இருந்தது

சிரித்தாள் லேக்கைப் பார்த்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேக்குக்கு வெடித்து வந்தது அழுகை.

கிட்ட வந்து பலஹீனமாய் லேக்கின் பக்கத்தில் அமர்ந்தாள்.

கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

தன் நிஷ்களங்கத்தை லேக்கின் கண்ணீர் காட்சிப் படுத்தியதான ஒரு நம்பிக்கையின் பொலிவு முகத்தில் ஊர்ந்தது.

"அதுசரி, எனக்கு வேலை ஏதோ பார்த்திருப்பதாகச் சொன்னாயே, என்ன வேலை அது? எப்போது போகலாம்? எனக்குத்தான் குணமாகிவருகிறதே. சொல்லேன், என்ன வேலை அது?"

'ஏறக்குறைய இது மாதிரி வேலையைத்தான் கடந்த ஐந்து வருஷங்களாக நீ செய்துவந்திருக்கிறாய். இனிமேலும் உன்னால் முடியாது' என்று மனத்துள் நினைத்துக்கொண்டு அவளையே பார்த்தபடி மௌனமாயிருந்தவள் பேச்சை வேறு திசைக்கு இழுத்தாள்.

"அதுக்கு இப்ப என்ன அவசரம்? உனக்கு உடம்பு பூரண குணமாகட்டும், அதுபற்றிச் சொல்கிறேன். இப்போது இதற்குப் பதில் சொல்லு. மாரியம்மன் கோவிலிலே போன இரண்டு வெள்ளிகளிலும் உன்னோடு வந்துநின்று வெகுநேரம் பேசிக்கொண்டு நின்றாரே ஒரு நடுத்தர வயது மனிதர், யார் அவர்?"

"ஓ.... அவரா? வீரபாகு. அவரும் இலங்கைத் தமிழர்தான். என் கதையில் பாதி தெரிந்தவர். முழுதும் தெரிந்த உன்னைப்போலவே இரக்கமும் அன்பும் காட்டுகிறவர். சிலருக்கு எப்போதும் மனிதர்களில் எரிச்சல் வந்துகொண்டிருக்கும். ஆம், நான் பார்த்திருக்கிறேன். வீரபாகு போன்றவர்களுக்கு கோபமே வராது. கோபிக்க, சினக்க, வெறுக்கத் தெரியாத மனிதர்களும் இருப்பது விந்தைதான். அவரது ஆதரவும், நம்பிக்கையான வார்த்தையும் இல்லாவிட்டால்.... நானும் என் பிள்ளையும் இந்தத் தாய்லாந்து மண்ணிலேயே செத்து வீழ்ந்திருப்போம் பட்டினியாலேயே" என்றாள் நேசமலர்.

"அவர் எதற்காக பாங்கொக்கில் நிற்கிறார்? அவரும் உன்போல ஏமாறியவர்தானா பணத்தைக் கொடுத்து?"

"என்போல ஏமாறினாரா தெரியாது. ஆனால் அவரும் ஏமாறியவர்தான். நதியின் பிரவாகத்தில் அடிப்புண்டு சென்று கடல்சேர நினைத்தவர்தான் அவரும். ஆனால் காலத்தின் விசையில் வித்தையில் நிகழ்ந்தது மயங்குதலும் ஏமாறுதலுமேயாகும்."

"நீ சொல்வது மெய்தான்" என்றாள் லேக். "காலநதி விசையானது. அதில் திசைவேறுபட்ட மனிதர்கள் எத்தனைபேர்! நான் இப்போதெல்லாம் கரிசனையோடு கவனித்துக்கொள்கிறேன். போர் கலைத்த உன் மனிதர்கள் எங்கெங்கெல்லாமோ சென்று வீழ்ந்திருக்கிறார்கள். தாய்லாந்தில்.... ஹாங்காங்கில்.... வியட்னாமில்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவோசில்கூட. இங்கெல்லாம் அவர்களுக்கு என்ன வேலை? அல்லது இன மத மொழியாக என்ன தொடர்பு இருக்கிறது? இருந்தும் இலங்கையிலிருந்து வந்து இங்கெல்லாம் திசைகெட்டலைகிறார்கள்! யுத்தம் கொடியதுதான், நேசா."

லேக் சிறிதுநேரம் மௌனமாயிருந்தாள்.

தன்னுள் எதையோ தேடும் தீவிரத்தில்போல் தலைகுனிந்திருந்தாள்.

மழை விட்டிருந்தது.

துமிகளை உமிழ்ந்து கொண்டிருந்தது மேகம்.

மின்னல் இழையின் மிகச் சிறிய துண்டுகளாய் மண்நோக்கி அவை.

நேசமலர் பார்வையில் தெளிவு உண்டாகியிருந்தது.

லேக் நிமிர்ந்துகொண்டு தொடர்ந்தாள்: "இங்கே பர்மாவிலிருந்து... கம்பூச்சியாவிலிருந்து... இன்னும் வடகொரியாவிலிருந்தெல்லாம் அகதிகள் வந்தார்கள்; இன்னும் வந்துகொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஒரு சம்பவமாய்த் தெரிந்திருந்தேனேதவிர வன்முறையினதும் அடக்குமுறையினதும் கொடூரங்களாய்த் தெரிந்திருக்கவில்லை. இப்போது போரின் கொடுமையை நான் உணர்கிறேன், நேசா. தன்னைச் சூழ கொடுமையே நிறைந்திருக்கிற நிலைமையில் பூமி வாழ்க்கையில் இன்பப்பட ஏதுமில்லை. என்னோடு படித்த ஒரு கிராமத்துப் பையன் இப்போது மொட்டை போட்டு மஞ்சளாடை கட்டிக்கொண்டு பிக்குவாய் ஆகி இருக்கிறான். ஆனால் இந்த வாழ்வைப் பயனுள்ளதாய்க் கழிக்க எனக்குள் ஒரு தீர்மானம் எழுந்திருக்கிறது. இது மன்னராட்சி நாடு என்பது உனக்குத் தெரியும். ஆனாலும் இங்கே யுத்தத்துக்கெதிரான அமைப்பு வலிமையாகச் செயற்படுகிறது. மனிதத்துவத்துக்கான இதன் குரலோடு என் குரலை இணைக்கப்போகிறேன் நான்."

"உன் படிப்பு...?"

"உலகத்தைப் புரிந்தாகிவிட்டது. இனி இந்தப் படிப்பு வேண்டாம். எனக்கு ஊரிலே கொஞ்சம் விவசாய நிலமிருக்கிறது. அப்பாவும் தங்கச்சியும் அதில விவசாயம் பண்ணுகிறார்கள். அவர்களோடு சேர்ந்து உழைப்பேன். விவசாயம் எனக்கு சாப்பாடுபோடும். மீதி நேரத்தை நான் அமைப்புக்காய்ச் செலவிடுவேன்."

அவள் குரலில் தென்பட்ட தீர்க்கம் நேசமலரின் உடம்பில் புல்லரிப்பை ஏற்படுத்தியது.

ஒரு விடிபொழுதில் லேக் தன் வீடு சென்றாள்.

வெகுநாட்கள் ஆகவில்லை, மறுபடி நேசமலருக்கு காய்ச்சல். கூட, ரத்தப் போக்கு. வரவர மோசமாகி வந்தது. குழந்தை பசியில் அழுத சத்தம் கேட்டுத்தான் லேக் வந்து பார்த்து மயங்கிக் கிடந்த நேசமலரைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியில் முழுநாள் தாக்குப்பிடிக்கவில்லை. அன்று கருக்கலில் அவள் ஆவி பிரிந்தது.

அது, தாய்லாந்து பூமியில் ஒரு இலங்கைத் தமிழ் அநாதையின் தொடக்கமாகிப்போனது.

அடுத்த வெள்ளிக் கிழமை லேக் மாரியம்மன் கோவில் சென்று வீரபாகுவைக் கண்டு நேசமலரின் மரணச் செய்தியைச் சொன்னாள்.

வீரபாகு மேற்கொண்டும் அங்கே நிற்கவில்லை. சுக்கும்வித்திலுள்ள தன் அறைக்குத் திரும்பிவிட்டார்.

அறைக் கூட்டாளி தாசன் மாலையில் வந்து, கோவிலில் சாப்பிடாமலே திரும்பிவிட்டதன் காரணம் கேட்டான்.

"நேசமலர்.... காலமாகிவிட்டாவாம்."

"ஓ! எப்ப....?"

"போன ஞாயிற்றுக் கிழமை."

"தெரியாமல்ப் போச்சே! ம்.... இப்ப பிள்ளை எங்கயாம்?"

"அநாதை இல்லத்திலயாம்."

"எப்பிடி அண்ணை தெரிஞ்சுது? ஆர் சொன்னது?"

"எதிர் வீட்டில இருக்கிற தாய்ப் பெட்டை."

"இஞ்சயெல்லாம் கூடிக்கொண்டு வந்துதே?"

"அதுதான்."

தாசன் பேசாமலிருந்தான்.

வீரபாகு சொன்னார்: "எங்கட வாழ்க்கையை என்ன சொல்லுறது, தாசன்? அழுகிறதா சிரிக்கிறதா எண்டே தெரியேல்லை. உயிரோட இருக்கிறதும் தெரியுதில்லை; செத்துப்போகிறதும் தெரியுதில்லை. எங்கயெங்கயோ உள்ள சொர்க்க பூமிக்குப் போகவெண்டு வந்து.... நினைப்புக்கெதிரான வாழ்க்கைதான் வாழவேண்டியிருக்கு. எப்பிடியெல்லாம் செத்துப்போக நேருது பார்....!"

"இந்த விதியை ஆரும் விரும்பிக் கேட்டதில்லை, வீரபாகு அண்ணை. இது எங்களுக்குமேல திணிக்கப்பட்டிருக்கு. சிலபேர் சொர்க்கத்துக்கு ஆசைப்பட்டது நிஜம்தான். ஆனால் பலபேரின்ர அவலம் நிர்ப்பந்தத்தால நேர்ந்ததண்ணை."

"இருக்கட்டும். அதுக்காக.... வந்த இடத்திலகூட ஒருவரை ஒருவர் தெரியாதமாதிரியும், வேண்டப்படாத மனிசர்மாதிரியும் ஏன் இருக்கவேணும்? பாங்கொக்கிலயே நூறு பேருக்கு மேல இலங்கைத் தமிழர் இருக்கிறம். ஒரு மரணம் சம்பவிக்கிற நேரத்தில, குறைஞ்சபட்சம் ஒரு மரியாதையான சவ அடக்கத்தையாவது ஏன் செய்ய ஏலாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது? நாங்கள் சொர்க்கத்தை மட்டும் நினைச்சுக் கொண்டிருக்கிறோமோ, என்ன? சொர்க்கத்துக்குத்தான் தனியப் போறதெண்டு சொல்லுகினம்."

ஒரு யோசிப்புடன் சொல்லத் துவங்கினான் தாசன்: "பொதுவான ஒரு நிலைமையில நாங்கள் இப்பிடி தனித்தனியாய் சிதறிய நெல்லிக்காய்போல இருக்கிறது தப்பெண்டு சொல்லலாம்தான். இப்ப பாருங்கோ... இந்தியாவில நான் மூண்டு வருஷம் இருந்தன்... இலங்கை ஆக்களிட்ட தனித்தனி அறிமுகம் இருந்தது மெய்தான். ஆனால் அங்ககூட அமைப்பு ரீதியான ஒற்றுமை இல்லை. அமைப்பானால்... எங்க, போராட்டக் குழுவெண்டு நினைச்சிடுவினமோ எண்டு பயம். கலை இலக்கியக் குழுவாய்க்கூட இணையேல்லை எங்கட ஆக்கள். ஆனால் இஞ்ச இருக்கிற எங்கட நிலைமை வித்தியாசமானதண்ணை. இஞ்சயிருக்கிற பாதிப்பேருக்கு விசா இல்லை. மீதிப் பேருக்கு பாஸ்போர்ட்டே இல்லை. அதில சிலபேர் இந்திய பாஸ்போர்ட்டை வைச்சுக்கொண்டு இந்தியாக்கறார்மாதிரி நடிச்சுக்கொண்டிருக்கினம். இந்த நிலைமையில கூடிப் பழகிறது எப்பிடி ஏலும்? ஒண்டை நிச்சயமாய் மனசிலை வைச்சுக்கொண்டுதான் நாங்கள் இஞ்ச இருக்கவேணும்தொடர்ந்து. நீங்களோ நானோ இஞ்ச செத்தால்... கொள்ளியுமில்லை, காடாத்துமில்லை, அண்ணை."

"மெய்தான்."

இரவு நீண்டுகொண்டிருந்தது.

வெகுநேரத்தின் பின் வீரபாகு தாசனை அழைத்தார்.

"என்னண்ணை?"

"ஊருக்குத் திரும்பியிடலாமாவெண்டு யோசினையாயிருக்கு."

"ஊருக்கா...?"

"ம். நான் எங்கயும் செத்துப்போகலாம், தாசன். ஆனால் என்ர சரியான அடையாளத்தோட சாகவேணும். செல்லப்பா மகன் வீரபாகுவாய்ச் சாகிறதிலதான் என்ர அடையாளம் நிலைக்க ஏலும். இப்ப நான் போலிப் பாஸ்போர்ட்டில இருக்கிறன். உனக்குத் தெரியுமேல்லே?"

"தெரியும். நான்மட்டுமென்ன, சொந்தப் பாஸ்போர்ட்டிலயே நிக்கிறன்?" என்று சிரித்தான் தாசன்.

அப்போது கூடச் சிரித்தது வீரபாகு அல்ல, காலம்.

சில பொழுதுகள் மௌனமாயிருந்த தாசன் ஒரு உள்ளடங்கிய சோகத்தில்போல் சொன்னான்: "ஒரு மனிசன்ர சா ஊர்வலத்தை, இறுதிச் சடங்குகளை கண்ணியமாய் நடத்துற சமூகம்தானண்ணை எங்கட யாழ்ப்பாணச் சமூகமும். இருந்தாலும் வெளியில வந்த இந்தமாதிரி இடங்களில அந்தமாதிரியான கரிசனங்களை ஆரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகிறதில்லையெண்டது உண்மைதான். ஆனால் அதுக்கு அலட்சியம் காரணமில்லை; வழியில்லாததுதான் காரணம். பணம்கூட ரண்டாம்பட்சம்தான். முதல் காரணம், அவைக்கு சரியான விசா, பாஸ்போர்ட் இல்லையெண்டதுதான். சிலபேர் இந்தியப் புத்தகத்தில கூட நிக்கினம். இப்பிடி.... இலங்கைத் தமிழராய் ஒண்டு சேருறதுக்கான நிலைமை இஞ்ச அழிஞ்சு போயிருக்கு. எங்கட சோகங்களில இதையும் ஒண்டாய் எடுக்கவேணுமே தவிர, எங்கட பண்பாய் இதை எடுக்கக் கூடாதண்ணை.''

வீரபாகு வெகுநேரம் பேசாமலிருந்தார். பிறகு, "அதாலதான் ஊருக்குத் திரும்பியிடலாமெண்டிருக்கு. தாசன், மனிசத்தன்மையளை எல்லாம் அழிச்சுக்கொண்டு உயிர் வாழுகிறதில, இல்லாட்டி.... சொர்க்கத்துக்குப் போறதில எனக்குப் பிடிப்பு குறைஞ்சிட்டுது. அனேகமாய் நான் போகும்போது நேசமலரின்ர குழந்தையையும் கொண்டுதான் போவன்'' என்றார்.

அந்த தீர்க்கமான முடிவில் அவர் தீரயோசித்திருந்தமையும் தாசனுக்குத் தெரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1993**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42

வேலியோர பூவரசு மரங்களினதும் முள்முருங்கைகளினதும் அகன்ற இலைகளில் ஆங்காங்கே நுரைப் பனி அப்பியிருந்தது. அதுவே புற்றலைகளில் பளிங்குத் துளியாய் ஒட்டியிருந்தது. மண்ணில் உதிர்ந்து அழிந்துவிடுவோமோ என்று காற்றில் புல்லிதழ் அசைந்தாடும் போதெல்லாம் அவை ஏங்குவதுபோல் பட்டது. பனி நுரை உருகித் துளியாய் மண்ணில் உதிரும்போதெல்லாம் அநித்தியத்தின் தத்துவம் மறுபடி மறுபடி நிரூபணமாயிற்று. மகாமோட்சத்துக்காய் உக்கிரத் தவமியற்றின, புல்லின் பனிநீர்கள். மோட்சம் அப்படியே ஆவியாதலில் அடங்கும்.

கரையடைந்த படகிலிருந்து சங்கரானந்த தேரர் இறங்கினார். வீதியேறி நின்று தலையை உயர்த்தி ஆகாயம் பூமி அளாவியிருந்த வெளியை, பனிக் காலையின் குளிர் காற்றை, அதில் ஒய்யாரமாய் மிதந்த தும்பிகள் வண்ணத்துப் பூச்சிகளை, கோபுரம் அளாவிப் பறந்த குருவிகள் காக்கைகளைப் பார்த்தபடி நின்றார்.

விட்டு ஓடிய காலத்தினை உள்வாங்குபவர் போல் நின்றிருந்தவர் சிறிதுநேரத்தில் புத்தவிகாரம்நோக்கி நடந்தார். அந்த மண் மாறியிருந்த சோகம் அவர் முகத்தில் துல்லியமாய்த் தெரிந்தது.

பிக்குவும் வெகுவாக மாறியிருந்தார். வெய்யிலில் திரிந்துபோலும் கறுத்திருந்தார். அலைச்சலின் மெலிவும் இருந்தது. சுமார் பத்தாண்டுகளில் இருபதாண்டு வயோதிபத்தின் பதிவு அவரில் தென்பட்டது. வெண் மயிர், அறுவடை முடிந்த வயலின் நெற்பயிர் ஊரிக் கட்டைபோல் ஐதாய் தாடை கன்னங்களில் முளைவிட்டிருந்தது. தலையில் காதடியிலும் பிடரியிலும் சில முளைப்புக்களின் வெளிப்பாடு இருந்தது. மேலே பளீரென்றிருந்த பகுதி முண்டிதம் இயல்பில் அமைந்துகொண்டிருந்ததைத் தெரிவித்தது. தோளில் ஒரு பயணப் பையைத் தொங்கவிட்டிருந்தார். ஒரு துவராடை, ஒரு துவாய், ஒரு பிளாஸ்ரிக் குவளை, ஒரு அலுமினியத் தட்டு ஆகியன அதில் அடங்கியிருந்தன. அவரது பயணத்தின் நீட்சி அவற்றில் தெரிந்தது. முகத்தில் விளங்கிய அலைகள் தேடலுக்கான மனச் சலனத்தின் பிரதிபலிப்பாய் விளங்கின. துக்கமல்ல; சலனம். சலனம்கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையில் ஒரு மகாதுக்கத்தின் மூலத்தில் உற்பவமாவதுதான். ஆனால் பணியில் இறங்கிவிட்ட பிக்குவுக்கு துக்கம் பொருளல்ல. துக்கத்தை விழுங்க விழுங்க உத்வேகம் அடைகிற பணி அது. பணிக்கான முன் படியில், தேடலாயே இன்னும் விரிந்திருந்த துக்கம் அது என்பதுதான் அங்கே காணக்கிடந்த பேதம்.

நெடுங்காலம் ஆகியிருந்தது அவர் அங்கே - நயினா தீவில் - நாகதீபத்தில் - காலடி பதித்து. அங்கே ஏன் வந்தாரென்றும் அவருக்குத் திட்டமாகத் தெரியவில்லை. அந்த மண், அந்தக் காற்று, அந்த வெளி, அந்த மனிதர்களுடன் அவருக்கு அத்யந்தமான பழக்கம் இருந்தது. அந்தத் தீவின் பௌதீகம் அப்போது மாறிப் போயிருந்ததுபோல் ஒரு பிரமை தட்டிற்று. அவரறிந்த பலர் அங்கே அப்போது இல்லை. ஆனால் அவரின் வருகை, தெரிந்த மனிதர் எவரின் சந்திப்புக்காகவுமல்ல. ஒரு தேடலில் விளைந்த பயணம் அது. அந்த அற்புதத் தீவில் அடையக்கூடுமென நம்பிய தரிசன வேட்கை அவரை அங்கே துரத்தியிருந்தது. தேடல்....? தரிசன வேட்கை...? வேட்கை தீர்க்கும் குறும்பிரபஞ்சம்...?

சங்கரப்பிள்ளை வாத்தியார் வீட்டு வாசல் திறந்திருந்தது. அவர் திரும்பிப் பார்க்கவில்லை, சங்கரப்பிள்ளை வாத்தியார் இன்னும் அங்கே இருந்து கொண்டிருக்கக்கூடும் என்று உள்மனது சொன்னபோதும். அவர் மனிதர்களைத் தேடி அங்கே வரவில்லை.

விகாரை அவர் இருந்த காலத்தில் இருந்ததுபோலவே இருந்தது. மரங்கள் சில வளர்ந்திருந்தன. சில பட்டுப்போயோ தறித்தோ இல்லாமல் போயிருந்தன. அவர் பிரியமாக வளர்த்த நந்தியாவெட்டை அந்தப் புற்றரை நடுவில் அப்போது இல்லை. வெள்ளரசு ஒன்று பட்டது போல் ஒரு இருள் மனத்தில் கவிந்து இறுகியது. புதியது வைக்க அங்கே உள்ளவர்களுக்கு ஏன் எண்ணம் / விழைச்சல் இல்லாமல் போனது?

ஓரமாகச் சென்று திண்ணையில் ஏறி அந்த வட்ட அமைப்பில் மேற்றிசை பார்த்து அமர்ந்தார்.

அந்த இடம்.... அவரால் மறக்கப்பட முடியாதது.

அந்த முக்கிய நிகழ்வுக்கு வயது பத்து.

ஆனாலும் அப்படியே பசுமையுடன்.

அன்று அவன் - அப்போது அவர் சந்திக்கத் துடித்துக்கொண்டிருக்கும் அந்த இளைஞன் - அங்கே உட்கார்ந்திருந்தான். அவனது கோபத்தை அப்போது அவர் மனத்துக்குள்ளாகவேனும் சிலாகித்தவர். அரண்மனை மனிதரும் நகர மக்களும் அழ அழ துறவுபூண்டு சென்ற சித்தார்த்தன் கோபம் கொண்டு சென்றிருந்தால் அப்படித்தான் தோன்றியிருப்பானோ என அன்று அவர் எண்ணியிருந்தார்.

இன்று... எவ்வளவோ நடந்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எவ்வளவோ பட்டுவிட்டார்.

தெளிவுக்கு முன்னான குழப்பத்தின் இறுதிப் படிதான் அது எனினும் குழப்பத்தின் கலக்கம் ஏக்கம் அலைச்சல்கள் அவரை வருத்திக்கொண்டிருந்தன.

நினைப்புக்களால், நெஞ்சில் ஆழப் பதிந்திருந்த ஊசி அசைந்து கறள் நொருங்கக் கரகரத்தது.

போன வாரமோ போன மாதமோ அல்ல, இரண்டு வருஷங்களுக்கு முன் சொருகப்பெற்ற ஊசி அது. ஏற்றியவர் வேறு யாருமல்லர், அவருக்கு ஒரு காலத்தில் சிஷ்யம் பிக்குவாக இருந்த குணாநந்த தேரர்தான்.

அவரால் பொறுக்க முடியும்.

இயல்பிலேயே பொறுதி கூடிய அவருக்கு கடந்த பத்தாண்டுகள் அவசியங்களினூடவும் அந்தப் பொறுதியை ஆகக் கூடுதலான எல்லைவரை கொண்டுசெல்ல அவரைப் பழக்கியிருந்தன.

பொறுப்பதுகூட இல்லை, மறப்பதே அவர் சிந்தையாக இருந்தது.

மறப்பதும் சுளுவில் இயன்று வந்தது.

ஆனால் அதற்கு மட்டும்தான்... பொறுப்பதற்கு முரண்டு பிடித்தும், மறுப்பதை மறுதலிப்புச் செய்தும் கலகம் பண்ணிக் கொண்டிருந்தது மனது.

பதினொரு மணிக்கே உணவு ஆனது. நடந்து பயணித்த உடம்பு வலி நீங்க மடத்துக்குப் போய் சிறிது நேரம் நீட்டி நிமிர்ந்து படுத்து ஓய்வெடுத்தார்.

அந்த உடையில் தான் பயணிக்க முடியுமா என்று அனுராதபுரத்தைவிட்டுப் புறப்பட்டபோதே யோசனை எழுந்ததுதான். அந்த உடையை நீங்குவது / மாற்றுவது வேஷம் போடுவதுபோலாகும் அவருக்கு. அவர் போகாமலும் விட்டுவிட முடியாது. அங்கேதான் தன் தேடலின் கண்டடைவு சாத்தியமென்பதை கனவு தோன்றி உறுதி செய்தது போன்ற திடத்துடன் புறப்பட்டிருந்தார்.

அவர் எதிர்பார்த்த இடைஞ்சலேதும் அந்தப் பயணத்தில் இருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரவேசிக்க இலகுவில் முடிந்திருந்தது. தான் நாகவிகாரையில் பொறுப்பாகவிருந்த தேரரென்றும், எண்பத்து மூன்றின் பின் அங்கே சென்றதில்லையென்றும், மன அமைதிக்காக அப்போது நாகதீபம் சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவிக்க தடையின்றி அவருக்கு அனுமதி கிடைத்தது. அவரது கண்களையே சிறிதுநேரம் ஏறிட்டு நோக்கியபடியிருந்த ஒரு போராளி அனுமதித் துண்டைக் கொடுக்கும்போது, 'உங்கள் பாதுகாப்புக்காகவே உங்களைக் கண்காணிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது; அதனால் தவறாக நினைத்துவிடக்கூடாது. ஆனாலும் உங்கள் நடமாட்ட சுதந்திரத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான குந்தகமும் இருக்காது' என்று பணிவோடு சொல்லி அனுப்பினான். உண்மையில் அவர் யாழ்ப்பாணம் சென்றதைத் தடுத்தது ராணுவம்தான். அந்த இடத்து ராணுவ அதிகாரியைச் சந்தித்து தனது பாதுகாப்பு தன் சொந்தப் பொறுப்பென்று எழுதிக் கொடுத்த பிறகே பிக்குவால் அங்கே அனுமதி பெறக் கூடியதாகவிருந்தது. அங்கே நீ செத்துப்போனால் புலிகளுக்கெதிரான எங்கள் பிரச்சாரத்துக்கு நன்மைதான் விளையும் என்ற ஒரு கள்ளத் திருப்தியோடுதான் தன் சுய பாதுகாப்பின் உத்தரவாதத்தை அந்த ராணுவ அதிகாரி வாங்கிக்கொண்டானென்பதை உணர அவர் தவறவில்லை.

அவர் அதற்காகச் சிரித்திருக்கலாம். ஆனால் சிரிக்கவில்லை. அவரது மனத்திலிருந்த கேள்விகளதும் சிந்திப்புக்களதும் சுமைக்குள் அப்படியொரு இளக்கம் சாத்தியமில்லாதிருந்தது

வெகுநேரம் படுத்திருந்துவிட்டதான நினைப்போடு திடீரென எழுந்தார்.

மாலை வெய்யில் மஞ்சள் கொளுத்தியிருந்தது.

பையை மடத்தில் வைத்துவிட்டு வயல்களை ஊடறுத்து தென்கரைக்குச் சென்றார்.

மணல் தாண்டி சதுப்புக்கரை அடைந்தாயிற்று. பக்கப்பாட்டில் சூரியன் விரைவாய் அராபிக்கடலுள் அமிழ்ந்துகொண்டிருப்பது தெரிந்தது. மறுபுறத்தில் முஸ்லீம் குடியிருப்பிலுள்ள வீடுகள் வெறித்துக் கிடந்தன. அவர் கேள்விப்பட்டிருக்கிறார் அதற்கான காரணம் பற்றி. அவருக்கு அது வருத்தம். வடக்கு சந்தித்த முதல் மகாபுலப்பெயர்வு அது. ஆயிரமாயிரமாய் முஸ்லீம்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறினார்கள். தம் குழந்தை குட்டிகளோடும் சாமான் சக்கட்டைகளோடும் அந்த நகர் நீங்கு படலம் நிகழ்ந்திருந்ததை அவர் பத்திரிகையில் படங்கள் மூலமும் செய்திகள் மூலமும் அறிந்திருந்தார். வெகுகாலத்துக்கு முன் அல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன் 1991ல் நடந்த நிகழ்வுதான் அது.

அது ஒரு சம்பவமல்ல, சரித்திரம். பயிற்சிக் களத்தில் நடத்திப் பார்த்த ஒரு பரீட்சார்த்தமே.

ஆபூபக்கர்... அப்போது அந்தப் பெயர் ஞாபகமாயிற்று தேரருக்கு. தொடர்ந்து அந்தப் பெயருக்குரிய உருவம். அவர் மிகவும் தெளிவான மனிதர். அதனால்தான் வாழ்க்கையை வெகுத்த ஆசாபாசங்களோ அவற்றை நிறைவேற்றுவதற்கான பிரயத்தனங்களோ இன்றிக் கழிக்க முடிந்திருந்தது அவரால்.

அவர்போல எல்லோரும் இல்லை. ஆனால் எல்லார் நெடுமூச்சும் ஒன்றாகவே இருந்திருக்கும். தம் தாய் மண் நீங்கிய ஏக்கத்தில்தானே இன்றும் காற்றில் கலந்துள்ளது அந்த ஊமைப் புலம்பல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க மனதில் மேலும் கனதி ஏறியது.

திரும்ப கரைவழி நடந்து மேற்கு வந்தார்.

சூரியன் முழுவதுமாய் அராபியாவில் மூழ்கிவிட்டிருந்தான்.

பூமி இருள் கவியத் துவங்கிற்று.

கடற்கரைத் தாழ்வில் இறங்கி சொரி மணல் பார்த்து மண்ணைத் தீற்றிவிட்டு அமர்ந்தார்.

கால்கள் அலுத்திருந்தன.

மடித்து அமர்ந்திருக்க இதமாயிருந்தது.

கால்கள் அலுத்தாலும், மனம் ஆசுவாசம் பெற்றது போல் தோன்றிற்று.

அது அவர் மண்ணா? அவர் மக்களா அவர்கள்? அவர் மொழியா அங்கு இசைவது?

இல்லை. ஆனாலும் அவர் பேதங்கள் எல்லாவற்றையும் மறந்து தனது என்ற எல்லையில் நின்றிருந்தார். அந்தப் பிரவேசம் ஒரு கால் நூற்றாண்டுக்கு முந்தியது. அது மானிடத்தின் மகோன்னத கற்பிதம். பேதம் மற என்பதுதான் அது கிளர்ந்த வேதம்

இருள் குளிர்ந்தது.

வானம் நட்சத்திரங்கள் ஏற்றிற்று.

பிறையொன்று மங்கி மறைந்து கொண்டிருந்தது அப்போதுதான் தெரிந்தது.

மண்ணூடாக சக்தியேதும் சுவறுதல் கூடுமோ?

தேரர் ஒருவகைப் புத்துணர்வு பெற்றார்.

அது, பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததுபோல இல்லாவிடினும் அந்த உணர்வை அவர் ஆசுவாசமாய் அனுபவித்தார்.

பத்தாண்டுகள்... பொதுமக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் இனி என்ற உத்தரவாதமில்லாமல் திரும்பமாட்டேன், ஜனாதிபதியைச் சந்தித்து அல்லது பிரதமரையேனும் சந்தித்து உறுதிமொழி வாங்குவேன் என்று 83 ஆடி மாதத்தில் சின்ன சுவாமி குணாநந்தவோடு புறப்பட்ட நாள் வெகுதெளிவாய் சங்கரானந்தருக்கு ஞாபகமாயிற்று.

அது ஒரு காலை வேளை.

சுவாமி கேட்டிருந்தபடி சொன்ன நேரத்துக்கு முன்பாகவே வந்துவிட்டிருக்கின்றனர் சுந்தரலிங்கமும் சங்கரப்பிள்ளையும். கூட, திரவியம். கோபக்கார இளைஞனாய் கடுகடுவென்றிருந்தான். அவனுக்கு அவன் கண்கள் பிடித்திருந்தன. உயர் லட்சியமொன்றின் கனவு அதில் படிந்திருந்தது. அதனால், ஆகர்ஷமாகியிருந்தார் என்றே சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே... தெளிவு. தெளிவுதான் அது. வெளியே கலங்கல். மேலே ஆயிரம் கலங்கலாகத்தான் இருக்கட்டுமேன், உள்ளே தெளிவிருந்ததை அவர் திர்க்கமாய்க் கண்டார். அது ஆறுதல் சொல்லக் கூடியது. நம்பிக்கை வரட்சியோடு சென்றால் நம்பிக்கை தரக்கூடியது. ஆயிரக்கணக்கான பேருக்குக் கூட அவன் தன் ரெளத்திரத்தை அடக்கத் தெரிய, அந்தத் தெளிவு இன்னும் துல்லியப்படும் என்று புரிந்தார். அன்றுதான் அந்த இளைஞனுக்கும் குணாநந்த தேரருக்கும் வாக்குவாதம் நடந்தது. அது அடங்க, தன் சஞ்சலத்தைக் கூறி விகாரையைக் காபந்து செய்து தரவேண்டுமென்ற உறுதிமொழி கேட்கிறார் சுந்தரலிங்கத்திடமும் சங்கரப்பிள்ளையிடமும். விகாரைக்கு ஆபத்தா என்று கேட்டு சுந்தரலிங்கம் துடிக்கிறார் வார்த்தைகளில். 'இது எங்கட கோயில், சுவாமி' என்று கண்கலங்குகிறார். அத்தனை அவரின் உணர்வுகளையும் அவன் வார்த்தைகளில்லாமல்.

காட்சி அங்கே இயங்குதலற்று ஸ்திரம் அடைகிறது.

ஒரு புத்தகோயிலை இது எங்கட கோயிலென்று எது அவரைச் சொல்லவைத்தது?

அந்த மண் மகத்துவம் நிறைந்தது.

அலையடித்தது அவர் மனக் கண்ணில் தெரிந்தது.

அதில் மிதந்து ஒரு ராஜஹம்சம். அது கிட்டேவர படகெனப் புலப்பாடடைகிறது.

அதனுள் வெள்ளரசு மரக் கிளையோடு ஒரு ராஜகுலப் பெண். அவள் பெயர் சங்கமித்தையென்று சரித்திரம் சொல்கிறது.

வெள்ளரசங் கிளையின் இலைகள் வாடிப்போயிருக்கின்றன. ஆனாலும் ஒரு ஜீவ களை அந்த வாட்டத்தினூடும். ஆயிரமாயிரம் வருஷங்களுக்கு மழையும் புயலும் வெய்யிலும் தாங்கும் வைரத்தின் நம்பிக்கையாய் அது ஜொலிக்கிறது. அடரவும் பரடரவும் உயரவும் முடிந்த மரம் வெள்ளரசு. அது, அதுவரை காலம்தான் இலைகளைக் காற்றிலசைத்து சப்தம் எழுப்பியது. இனி வரும் காலங்களில் அது போதம் செய்யும். அது... புத்த பகவான் ஞானோதயம் பெற்ற அதே போதி மரத்தினது கிளை ஆகும்.

அந்தத் தீவகத்தில் புத்தவிகாரை எழுந்தது பின்னாலே. அங்கே புத்த கடிகை, மலர்ப் பொய்கை, அமுத சுரபி, மணிமேகலா தெய்வமிருந்தன காவிய காலத்துக்கும் முன்னால். விகாரை எழுந்த காலத்திலிருந்து அங்கே வழிபாடு நடந்தது. வழிபாட்டுக்கு வந்தவர்கள் தமிழ்மொழி பேசியவர்கள். தீவில், வடபகுதிக் கரையோரங்கள்போல் புத்த மதத்தை அனுட்டானம் செய்தவர்கள் இருந்திருக்கிறார்கள். காஞ்சியில் காவிய காலத்தில் இருந்தார்களே, அதுபோல். பின்னால் அருகி அருகி பெளத்தம் அங்கே அழிந்து போனது. அவ்வாறு செய்தது எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரர் யோசித்தார்.

சைவ, வைஷ்ணவ சமயங்களின் எழுச்சி அந்நிலையை உருவாக்கிற்றென்று சொல்லமுடியுமா?

மனம் குழம்ப, எண்பத்து மூன்றின் நிகழ்வுகளுக்கு மறுபடி மனத்தைத் திருப்பினார்.

ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திக்க அவரெடுத்த முயற்சிகள் தாமதப்பட்டுக்கொண்டு போக, களனி சென்று தனது எண்ண ஈடேற்றத்துக்கு பௌத்த பீடத்தின் மகா தேரரது அனுசரணையைப் பெற்றாலென்ன என்றொரு யோசனை எழுகிறது. மகாதேரரிடம் தன் கருத்தைச் சொல்லப் போக, அவரது அக்கறையையே அவமதித்து அனுப்புகிறார் பீடாதிபதி. இதனாலெல்லாம் நான் சோர்வடைந்து விடமாட்டேன் என்று சொல்வதுபோல மறுபடி கொழும்பு திரும்பி பெருமுயற்சியில் பிரதமமந்திரியைச் சந்திக்கிறார். தன் வழக்கை எடுத்துச் சொல்கிறார். பிரதம மந்திரி 'ஜேஆரைச் சந்தித்துக் கேளுங்கள், அவராயிருந்தால் எழுத்திலேயே உத்தரவாதம் தருவார்' என்று விடுகிறார்.

இலங்கை எரிந்த தணலின் வெம்மை இன்னும் தீரவில்லை. சாம்பர்த் துகளின் பறப்பு முழுதுமாய் நிற்கவில்லை. பிரதம மந்திரி சிரித்துக்கொண்டு சொல்கிறார், ஜேஆரைக் கேளுங்கள் என்று. ஒரு தோல்வி.... தூரத்தே கொழும்புத் துறைமுகத்தின் ராட்சத பாரம் தூக்கி பெரிய பொட்டலமொன்றைத் தூக்கி தலைமீது போட்டதுபோல ஒரு நசிவு.

அவருக்கு அப்படியே நயினாதீவு செல்கிற எண்ணமில்லை அங்கே நின்றும் என்ன செய்ய? எங்காவது ஓடவேண்டும் போலிருந்தது. அதனால் ஓடினார்.

தெற்கே வளவை கங்கைக் கரையில் அந்த ஓட்டம் நின்றது.

அங்கே காடும் மலையும் ஆறுகளும் சூழ்ந்த ஒரு புத்தவிஹாரத்தில் படுத்திருந்துவிட்டு மறுநாள் காலை கண்விழிக்க அவரையே பார்த்துப் புன்னகைத்தபடி ஒரு பிக்கு.

அப்படிச் சிரிக்க யாரால் முடியும்?

கோடி இளஞ்சூரியப் பிரகாஸம் செய்தது இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னால் மகதத்தில் சுத்தோதன மஹாராஜாவுக்குப் பிறந்த சித்தார்த்தக் குழந்தை.

மாயாதேவியின் மகவும் அது.

ஆசியா விழித்தது அதனால்தான்.

மத்திய ஆசியாவிலிருந்து தூர கிழக்காசியா வரை அதன் ஒளிப் பிரவாகம் இருந்தது. அது இன்றும்கூட உள்ளுள்ளும் இருள் விலக்கும் புத்த ஞாயிறு அது. 'பகவன் நீயே! பரமன் நீயே! புனிதன் நீயே! புராணன் நீயே! தருமன் நீயே! தலைவன் நீயே!' என்று அசித மாமுனியே வணங்கிய ஞாயிறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜயன் மண்ணில் தோன்றும் வேளை நன்னிமித்தமெல்லாம் நிறையப்பெற்று வருவது தெரிந்து பஞ்சபூதங்களும் பேருவகை கொள்கின்றன. உலகு புரக்க வருபவனின் உற்பவம் நிகழும் காலத்தின் ஒவ்வொரு துகளும் கௌரவம் பெறும்.

அன்று பூரணை வரும் நாள்.

பூரண வேளையில் கோயில் கொடிமரம்போல வளரும் ஓர் அசோகமரத்தின் கீழ் ஓர் உச்சியம் பொழுதில் வந்து நிற்கிறாள் மாயாதேவி.

பன்னீர்க்குடம் உடைந்து பங்கப்படும் வேளையில் அசோக மரம் தழை வீடாகக் கவிந்து அரண் செய்கிறது. பன்மலரும் சொரிந்து பஞ்சணையாகின்றன. பக்கத்துப் பாறையொன்று பிளந்து மதலையை நீராட்டும் மஞ்சன நீரை ஒழுகவிடுகிறது. நோவு நொம்பலம் நோக்காடின்றி உலக உத்தாரணனின் ஜனனம் நிகழ்கிறது.

அவர் புலன் விறைப்ப, மெய் விதிர்ப்ப காட்சியா கற்பனையா கனவா என்று பிரித்தறிய முடியாத உக்கிரத்தில் அப்பிறவி நாளைக் கண்டிருக்கிறார். ஏறக்குறைய அதுபோன்ற ஓர் குஞ்சுப் பிரகாஸ முகம் அது.

நெருங்கி வந்து ஏதோ கேட்க துறவி முயலும்போது மயங்கி வீழ்கிறார் சங்கரானந்தர்.

உடல் நோய்.... மன முறிவு.... தேற நாளாயிற்று.

தேறிய பின்னரும் அங்கிருந்து விலக எட்டாண்டுகள் ஆயிற்று.

கந்தர்வப் பேரெழில் பூத்ததாயிருந்தது தென்னிலங்கையின் அத்திருவிடம். புராதன பெருமை பெற்றிருந்த புத்த கோவிலொன்று. கருங்கல்லில் செதுக்கிய ததாகதரின் அமர்ந்த நிலைத் திருவுருவம். இந்தியாவிலிருந்து கூலிக்கு வரவழைக்கப்பட்டிருந்த அந்த ஆயிரக்கணக்கான சிற்பியரில் ஓர் அதியற்புதத் திறமை வாய்ந்த கலைஞன் இருந்திருக்கிறான். அதனால்தான் அத்தனை பொற்பம் வாய்ந்ததாக அந்தச் சிலை வடிந்திருக்கிறது. தன் வாழ்நாளைச் சாசுவதமாக்கவென்ற உன்மத்தத்தில் அது அவனிடத்தில் பிறந்திருக்க வேண்டும் என நிச்சயமே பட்டார் சங்கரானந்தர். சிலையின் சாந்தம் சொல் இகந்தது. லோகத்தின் மொத்த துக்கங்களுக்கும் வருந்தியவர் முகத்தில் அத்தனை சாந்தி எப்படிச் சாத்தியம்? பாவபேத குற்றத்தில் விழுந்தானா அச்சிற்பி? இல்லை. சிற்பியும் பக்தனாகி உணர்ந்தே வடித்திருக்கிறான். துக்க நிவாரண மார்க்கத்தின் பின் சாந்தி வரும். சங்கரானந்தார் தெளிந்தார்.

சூழல் பிரமிப்பை ஏற்படுத்தியது.

சலசலத்த ஓடைகள்....

மரகதப் பச்சை பூண்ட மலைகள் குன்றுகள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுகட்டு இலவங்க வாசம்....

காடுகளின் அபூர்வ தருக்களின் பட்டைகள் பூக்கள் இலைகளின் கந்தங்கள்....

தேசற்ற காற்று....

வெளியுலக ஆசாபாசத்தின் மூச்சுக் காற்றும் அங்கே எட்டவில்லை.

அவற்றினாலே மட்டுமில்லை. முது துறவியின் காண்டம் காண்டமான மகாசரித்திரம்பற்றிய பேச்சும்தான் அவரது எட்டாண்டுக் காலத்தை அங்கே இலகுவில் கடக்க வைத்தது.

வேறு பிரபஞ்சம் அவருக்குப் பிரக்ஞையில்லாததாயிற்று.

புத்த பிறப்பிலிருந்து முது துறவி கதை சொல்லத் துவங்கினார். சேனன், உத்திக்கன் கதை சொன்னார். நாகர், லம்பகர்ணர், புளிந்தர் கதை சொன்னார். விஜயன், சிங்கபாகு, கைமுனு கதையும் கஜபாகு, விஜயபாகு, பராக்கிரமபாகு, நிசங்கமல்லன், செகராசசேகரன், பரராசசேகரன், சங்கிலியன், பண்டாரவன்னியன், ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கதையும் சொன்னார். ராகுலதாச பியசேன போன்றோரின் கதை சொன்னார். புத்த பிக்குகள் கதையும் சேன நாயக்காக்கள் பண்டாரநாயக்காக்கள் கதையும் சொன்னார். நகுல முனி, மாருதப்புரவீகவல்லி, அந்தகக் கவி அதிவீரராகவன், ஆறுமுகநாவலர் கதையும் சொன்னார். நாகவிகாரை, வல்லிபுரக் கோவில், கதிர்காமக் கோயில் கதைகளில் நடப்புச் சரித்திரம் உடைபடக் கண்டார் சங்கரானந்தர். முதுதுறவி சொன்ன சரித்திரம் வித்தியாசமானதாய் இருந்தது. இதுவரை எழுதப்பட்டிருந்த எந்தச் சரித்திரத்தையும்விட ஏதோ வகையில் அது வேறுபட்டதாய்த் தோன்றிற்று. அது எழுதப்பட வேண்டுமென்று தன் விருப்பத்தைத் தெரிவிக்க முதுபுத்த துறவி தடுத்து அவசியமில்லையென்றுமட்டும் சொல்லித் தடுத்தார். அதற்குமேல் சலனம் காட்டாமல் சரித்திரம் கேட்டுக்கொண்டிருந்தார் சங்கரானந்தார்.

ஒப்பறேஷன் லிபறேஷனும், இலங்கை - இந்திய உடன்படிக்கையும் பற்றி முதுதுறவியானவர் சொன்னபோது சங்கரானந்தர் உண்மையிலேயே பேரதிசயப்பட்டார். 'எத்தனை வருஷங்களாக இங்கே இருக்கிறீர்கள்?' என்றார் ஒருபோது.

'வருஷங்களா? உனக்குத்தான் வருஷங்கள். எனக்கு வெளி.... யுகவெளி. நான் கௌதமர் காலத்திலும் வாழ்வேன். கெமுனு.... எல்லாளன் காலத்திலும் வாழ்வேன். 1915ன் முஸ்லீம் - சிங்கள கலவர காலத்திலும் வாழ்வேன். பின்னால் நிகழ்ந்த கிறித்தவ - சிங்கள யுத்த காலத்துக்கும் சாட்சியாவேன். அதுபோல் தமிழ் - சிங்கள கலவர காலத்திலும் வாழ என்னால் முடியும். நான் வாழ்வது ஒரு யுகவெளியில். இங்கே நாள்கள் கிடையாது. நான் காலாதீதன். என்ன விழிக்கிறாய்? புத்த போதகம் மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறேன் என்றா? இல்லை. என் மரணம் புரிதல்களோடு நிகழ்ந்துவிடுகிறது. இப்போது நான் அசலனத்தில் இருக்கிறேன்.... தியானத்தில் இருக்கிறேன். அடுத்த பிறப்பு தோன்ற நான் சலனமாவேன். பிறப்பழிதலே தவம். புத்த மயமாதலே விளைவு. என் உடல் பழுத்து ஒருநாள் விழும். அப்போது நான் அழிந்துவிடுவதில்லை. ஞானமாய்த் தேங்குவேன்.'

'சமீப காலத் தகவல்களெல்லாம் எப்படிக்கிடைத்தன? அரசியல் நிகழ்வுகளின் அந்தரங்கங்கள் எப்படித் தெரிந்தன? நீங்கள்தான் அம்பதாண்டுகளுக்குக் கிட்ட இங்கே இருக்கிறீர்களே....!'

'ஆமாம். அம்பதாண்டுகளுக்கு மேலாகவே. ஆனால் தகவல்கள் நகரும். எந்தத் தகவலும்தான். அதைப் பகுத்துணர்வது ஞானம். தகவல்களை அவ்வாறு தாரதம்மியப்படுத்துவது அதன் சின்ன ஒரு தொழிற்பாடுதான். அது உண்மையில் முன்னதாகவே ஒரு தகவலைச் சிருஷ்டிக்கும் வல்லபம் வாய்ந்தது. அது தளத்தில் நிகழ்ந்து ஒருநாள் சரித்திரமாயே ஆகும்.'

'தகவலைச் சிருஷ்டிப்பதா....?'

'ஆமாம், சங்கரானந்த. மகாசரிதம் எழுதுவதில் நடப்பவைகள் - சமகாலச் சரித்திரம் - தான் மையமாகியிருக்கும். அதின் மூலமாய் நடந்ததாய்ச் சொல்லப்பட்டவைகளின் உண்மையைக் கண்டடைய முடியும். மேலே.... வருங்காலத்தில் நடக்கப் போபவைகளை அனுமானிப்பதில் பெரிய கஷ்டமொன்றுமில்லை. அவ்வாறு அனுமானித்து நான் எழுதியுள்ளதுதான் மகாசரிதம். அது சமகால அரசியலை இருபது ஆண்டுகளுக்கு முன் தீர்மானித்தது.'

'தீர்மானித்தவை....?'

'தீர்மானித்தபடியே நடந்தன.'

சங்கரானந்தர் மேலும் ஏதோ கேட்க உன்னும்போதே துறவி எழுந்துவிட்டார். கையசைப்பில் மீதி நாளை எனத் தெரிவித்தார். களைப்போடு தன் முழைஞ்சில் நோக்கி மெல்ல நடந்தார்.

கேள்வி.... பின்னொரு கேள்வி.... அடுத்தொரு கேள்வி.... கேள்விகளை மனத்தில் அடுக்கி விடைக்காகக் காத்திருந்தார் சங்கரானந்தர்.

இருள் நன்கு கவிந்திருந்தது பிரக்ஞை மீள.

கடற்காற்றில் கூதல் மிகுத்திருந்தது.

மௌனத்தின் குரல் கேட்டது.

எழுந்து செருப்பைக் கொழுவிக்கொண்டு விகாரைக்கு நடந்தார். 'மகா சரித்திரம் இப்போது எங்கே?' புதிய கேள்வி பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43

அன்று இலவங்கத்தின் மணம் அதிகமாயிருந்தது. அதிகாலையின் குளிரில் அப்பியிருந்த அந்நறுமணத்தை காற்று மெல்ல மலையடிவாரத்துக்கு இறக்கி வந்தது. நாசியில் புகுந்து செல்லும்போதே உயிரை வருடுகிற சுகம்.

உடல் குணமாகி, மனம் மெல்லமெல்லவாய்த் தெளிவாகிக் கொண்டிருந்தது சங்கரானந்தருக்கு.

ஒரு வருஷம் ஆகியிருந்ததென்பதைத் தெரிந்த அளவில் அவர் லேசான அதிர்ச்சியடைந்தார். காலம் கடக்கும் வேகம்தான் என்ன?

முது துறவி வருகிறார். தளத்துக்கு வரும் படிக்கட்டுகளில் ஏறுகிறார். பீடத்தின் புத்த சொரூபத்தின் முன்னால் அமர்கிறார். தியானத்தில் ஆழ்கிறார்.

அண்மைக் காலமாய் அவரை நாடி அப்பகுதி வாழ் மக்கள் சிலர் வரத் துவங்கியிருக்கிறார்கள். முது துறவியின் முகத்திலும் ஒரு திருப்தி, ஒரு வகையான நம்பிக்கை பெருகத் துவங்கியிருப்பது தெரிகிறது. வாழுகின்ற ஆசையினாலல்ல, கடமைகளைப் பூரணப்படுத்தக் கிடைத்த அவகாசத்தினால் அவர் பொலிந்திருக்கிறார். அவரது உணர்வுகளதும் அறிவினதும் வடிகால் நிலமாய் சங்கரானந்த தேரரே அமைந்ததில் அவர் திருப்தியும் பெருமையும் பட இடமிருக்கிறதுதான்

இலவங்கத்தின் சுகந்தத்தில் மெய்ம் மறந்திருந்த சங்கரானந்தர் திரும்பிப் பார்த்து குரு வந்துவிட்டதைக் கண்டு கொண்டு விரைந்து வருகிறார். வணங்கியபடி எதிரே அமர்ந்து, குரு விழிப்பதற்குக் காத்திருந்தார்.

கண் திறந்த குரு எதிரே அந்த முது சிஷ்யனில் பார்வையைப் பதிக்கிறார். மனத்துள் கருத்துக்களின் பிரவாஹிப்பு. குரு சொல்கிறார்: 'புத்த துறவிகள் ஐந்நூற்றுவர் சொன்ன மஹாவம்சத்தைவிட ஜாதகக் கதைகளில் உண்மைத்தனம் நிறைய. ஜாதகக் கதைகள் நிஜத்தில் நடக்காதவையாகவே இருக்கட்டும். இருந்தும்தான் அவற்றின் உண்மைத்தனத்தை நான் நம்புகிறேன். முன்பொரு பொழுதில் நிகழ்வுகளை முன்னனுமானம் செய்து தகவல்களை சிருஷ்டிக்க முடியுமென்று சொல்லியிருந்தேன், சிஷ்யா!'

'ஆம், குருவே!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஜாதகக் கதைகள் அதை நிறுவுகின்றன. எப்படியென்பதைச் சொல்கிறேன் கேள். வருங்காலத்தில் இன்னது இன்னது இன்னபடி நடக்குமென்று ஜாதகக் கதை சொன்ன ஆருடமெல்லாம் இன்றுவரையிலும் மெய்யாலுமே நடந்துவிட்டிருக்கின்றன. மாயக் கனவு பதினாறு என்கிற ஜாதகக் கதையை அறிந்திருக்கிறாயா?'

'ஞாபகமாகவில்லை, குருவே.'

'நல்லது. அதை இப்போது சொல்கிறேன் கவனி.

'ஓர் அதிவிடி காலையில் தொடர்ந்தேர்ச்சியான பதினாறு கனவுகளைக் காண்கிறான் கோசல நாட்டு மன்னன். கனவுகளின் பூடகமே அவனை நடுங்க வைத்து விடுகிறது. மறுநாள் பொழுது புலர்ந்ததும் மந்திரிகளையும் புரோகிதர்களையும் அழைத்து தான் கண்ட கனவைக் கூறி அவற்றின் அர்த்தம் கேட்கிறான். பதில் கூறத் தயங்கி நின்று புரோகிதர்கள் கைகளைப் பிசைய, மேலும் பயங்கொண்ட மன்னன், கனவுப் பலனை அக்கணமேயுரைக்க ஆணையிடுகிறான். உயிருக்கு ஊறு அல்லது ராஜ்ய அழிவு அல்லது பொருள் நஷ்டம் இப்படி ஏதும் நேரக்கூடுமென்று பதில் கிடைக்க, பரிகாரம் கேட்கிறான். நான்கு தெருக்கள் கூடுமிடத்தில் குற்றமற்ற மிருகங்களும் பறவைகளுமாய்ப் பலியிட்டு பெருயாகம் செய்தால் தக்க பரிகாரம் கிடைக்குமென்கிறார்கள். வேண்டிய பொருள் அளித்து யாகத்தை உடனேயே தொடங்கச் சொல்கிறான் மன்னன்.

'மன்னனின் பதற்றத்திற்கும், அரண்மனையிலேற்பட்டுள்ள சந்தடிக்கும் பட்ட மகிஷி காரணம் கேட்க தான் கண்ட கனவுகள்பற்றிக் கூறுகிறான் அவன்.

'அப்படியானால் நீர் பிராமணர்களிலே பெரிய மகானான போதிசத்துவரைச் சந்தித்து பலன் கேட்டீரா? என்கிறார் மகிஷி.

'அப்படியான மகானும் இருக்கிறாரா, எங்கேயிருக்கிறார் என்று அரசன் கேட்க, ஜேத்தவனா நந்தவனமே அவரிடம் என்கிறாள் அரசி.

'உடனேயே ஜேத்தவனா சென்று புத்தரை வணங்கி தன் கனவுகளுக்குப் பலன் கேட்கிறான் மன்னன்.

'மன்னனின் கனவுகள் பதினாறாவன முறையே ஒன்றுடன் ஒன்று பொருதும் நான்கு காளைகள், புஷ்பிக்கும் சிறிய மரங்கள், கன்றுகளின் பாலைக் குடிக்கும் பசுக்கள், கலப்பைகளில் கலைமான்கள் பூட்டப்படுதல், இருபுறங்களில் வாய் கொண்ட அதிசயக் குதிரை, தங்கத் திருவோடுகளில் ஜனங்களின் பிச்சையேற்பு, முட்டி வழிய வழிய கலசத்தில் நீர் ஊற்றுதல், ஐந்து வகைத் தாமரைகளுடைய தடாகம், ஒரே தரத்தில் வடிக்கப்படும் பல தரமான சோறு, மோருக்குப் பண்ட மாற்றாகும் சந்தனக் கட்டைகள், தண்ணீரில் மூழ்கும் பூசணிக்காய், மிதக்கும் மலைப்பாறைகள், கருநாகங்களைத் துரத்திச் சென்று கொன்றுதின்னும் தவளைகள், தீய குணம்கொண்ட காக்கைக்கு பொன்னிறக் கழுகுகள் பரிவாரமாய் வருதல், வெள்ளாடுகள் சிறுத்தைகளைக் கடித்துத் தின்னுதல் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அத்தனை கனவுகளும் மாயத் தன்மை வாய்ந்தவை. மன்னனின் கனவுகள் பதினாறினுக்கும் புத்தர் தனித்தனி பலன் உரைத்தார். பதினோராவது கனவினுக்கு புத்தர் உரைத்த விளக்கத்தை உதாரணத்துக்கு இப்போது சொல்கிறேன். ஆயிரமாயிரம் பொற்காசுகளுக்கிணையான சந்தனக் கட்டைகள் மோருக்குப் பண்டமாற்றாகும் கனவை அரசன் கூறியதும் புத்தர் கூறுகிறார்: இந்தக் கனவும் இனிவரும் தூர காலமொன்றில்தான் நிறைவேறும். என் போதனைகளுக்கான மதிப்பு குறைகிற காலமாயிருக்கும் அது. அப்போது பொறாமையும் அகௌரவமான குணங்களும் கொண்ட சகோதரர்கள் தோன்றுவார்கள். ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்ற என் அருமருந்தன்ன போதனைகளை அவர்கள் தம் வயிற்றுப் பிழைப்புக்காகவே போதம் செய்யப் புறப்படுவார்கள். அப்போதும் நிர்வாண நிலை அடைவது வரையான என் போதனைகள் அனைத்தையும் செய்யமாட்டார்கள். மேலெழுந்த வாரியாக உபதேசங்களை எடுத்து இனிப்பாகப் போதிப்பார்கள். உண்மையானதாக அது இருக்கவே மாட்டாது. அவர்களது நோக்கமெல்லாம் பணமும் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களுமாகவே இருக்கும். என் உயர்ந்த போதனைகளைப் பணத்துக்கு விற்பதனையே வாசம் நிறைந்த சந்தனக் கட்டைகளை புளித்த மோருக்குப் பண்டமாற்றுச் செய்வதான கனவு தெரிவிக்கிறது.

'கனவுக்குப் பலனாக போதிசத்துவர் சொன்னது போலத்தானே இப்போது நடக்கிறது? ஆடை ஆபரணங்களுக்குப் பதிலாக இப்போது நடப்பது அதிகாரத்துக்காக நடக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். இவ்வாறு.... ஜாதகக் கதைகள் சொல்வதை தீர்க்கதரிசனமென்று சொல்லலாமில்லையா? அதுதான் அவ்வாசிரியரின் ஞானம்!'

மீண்டும் கண்மூடி முதுதுறவி மௌனியாக, இனி உபதேசம் இல்லை, அன்றைக்கு அவ்வளவுதான் என்று தெரிந்துகொண்டு சங்கரானந்தர் எழுகிறார்.

ஞானம்.... ஞானம்.... ஞானம்....!

கௌதமர் கண்ட ஞானத்துக்குமப்பால் ஒரு வெளி இருக்கிறதா? அல்லது இவற்றுக்கான விளக்கமும் புரிதலும்தான் ஞானமா? இயங்கு தளத்தில் நடைமுறைப்படுத்தலே ஒருவேளை ஞானமார்க்கமோ?

ஞானம்பற்றிய தேடல் அவருள் ஒரு வெறியாக முகிழ்க்கிறது.

தளமேடையை விட்டிறங்கி குன்றின் அடிவாரம் செல்கிறார்.

ஓடையொன்று சலசலத்து ஓடுகிறது.

பாறையொன்றில் அமர்ந்து பக்கப் பாட்டில் தெரியும் புத்த சுருவத்தை நோக்குகிறார்.

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாயிருக்கலாம் அச்சிலையின் நிர்மாணம். சைத்தியத்தின் நடுவில் வடிக்கப்பட்ட சிற்பம் மட்டுமே அப்போது எஞ்சியிருந்தது. ஆதாரம் எனப்படும் அடித்தளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர கட்டிடத்தின் வேறு பாகம் யாவும் அழிந்திருந்தது. கட்டிட அமைப்பும் கட்டிடக் கலை நாகரம் எனக் கூறும் வடவிந்திய அமைதி சார்ந்ததாய் இருந்தது. கல்யாணி நதிக்கரையோரமிருந்த அரசு பின்னாளில் அழிந்தபோதிலும், அதன் மிச்சம் மீதியாய் இருந்திருக்கக் கூடிய ராஜவம்சம் கட்டுவித்த விகாரையாக இருக்கலாம். அல்லது அரசுரிமையை எதிரிகளிடம் இழந்து ஓடிய அரசன் ஒழிந்திருந்த இடமாக அது இருந்து, பின் அவன் அரசுரிமையை மீளப்பெற்ற காலத்தில் தான் மறைந்து வாழ்ந்த வாழ்க்கையின் ஞாபகார்த்தமாக கட்டிய சைத்தியமாகவும் அது இருக்கலாம். எப்படியிருந்தாலும் கட்டிய காலத்துக்குப் பிறகு அது பெரும் பராமரிப்பைப் பெற்று விடவில்லை. அதை அடைவதற்கு இருந்த இயற்கையின் தடைகள் அதன் முக்கிய காரணமாய் இருந்திருக்கலாம். காற்றும் மழையும் வெய்யிலும் சீறித் சினந்து படுமோசமான தாக்குதலைச் செய்திருந்தமை வெளிப்படையாகத் தெரிந்தது. தளம் பிளவு கண்டு, மண் வெடிப்பை நிரப்பியிருந்தது. அவ்விடுக்குகளில் அரசங்கன்றுகள் முளைத்திருந்தன. பக்க வெடிப்புகளில் வேறு புதர்களும் ஆல் முளைப்புகளும் வளர்ந்திருந்தன.

ஏன் அந்த நிலை ஒரு விகாரைக்கு?

அதுவும் தென்னிலங்கையில்....?

அவரிடத்தில் ஒரு ஊகமுண்டு.

குருவின் வரலாற்றுபதேசம் அந்த முடிவுக்குத்தான் அவரைக் கொண்டு செலுத்தியது.

ஒரு ஊகத்தின் சாத்தியம் / அசாத்தியம்தான் அவரது கரிசனையாயிருக்க முடியும். பலன் / அபலன் அல்ல. அது அரசியல்வாதியினுடையது.

தென்னிலங்கையில், புத்த ஆண்டு ஆயிரமளவில் தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்திருக்கின்றன.

சிலாபத்தில் தமிழர் இருக்கிறார்கள். புத்தளத்தில் இருக்கிறார்கள். நீர்கொழும்பில் பரவர் இருக்கிறார்கள். தென்கீழ் மூலையில் கதிர்காமக் கோயில் இருக்கிறது. சூழ தமிழ்க்குடியிருப்பு இல்லாமல் தமிழ்க் கடவுளின் கோவில் மாணிக்க கங்கைக் கரையில் சாத்தியம் இல்லை. இது தர்க்கத்துள் அடங்குகிற விதிதான். இதுவே வடபகுதியில் அக்காலகட்டத்தில் தமிழ்ப் புத்த சமயிகள் இருந்தார்கள் என்பதற்குமான விதி.

குரு அதுபற்றி முன்பு விரிவாகவே உரைத்திருக்கிறார்.

சங்கரானந்தருக்கு இப்போதுதான் புரிகிறது.

அழிந்துபோன வல்லிபுரக் கோவில் பிரமாண்டமானது ஸ்ரீரெங்கத்தைவிடவும் பிரமாண்டமாயிருந்தது அது. ஆழியில் பாம்புப்படுக்கையில் சயனிக்கும் விஷ்ணு, வேறு யாருமல்ல, கௌதமரின் இன்னொரு அவதாரமென்றே பௌத்தாகமங்கள் கூறுகின்றன. இலங்கை இந்துக்களிடையே வைஷ்ணவத்துக்கு எப்போதுமே செல்வாக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததில்லை. இந்த நிலையில் பிரமாண்டமான வல்லிபுரக் கோவிலின் தேவை, தமிழ்ப் பவுத்தர்களின் வழிபாட்டுக்காகவே ஏற்பட்டிருக்க முடியும்.

ஆக, தென்னிலங்கையில் தமிழ்க் குடிகள் அழிந்ததற்கும் அல்லது மாறியதற்கும், வடவிலங்கையில் பௌத்தம் அழிந்ததற்கும் ஒரு பொதுக் காலவிதி இருந்திருக்கிறது.

அது மெய்யேயென்று தெளிகிறார் சங்கரானந்தர்.

நாகவிகாரை மடத்தில் உறக்கம் வராமல் கிடந்த சங்கரானந்தர், அன்று மாலையில்கூட அக்கேள்வி தன்னுள் தோன்றியிருந்ததை அப்போது நினைத்தார்.

அந்த பொதுக் காலவிதி எதுவென்று, வெகுநேரமாய் யோசித்தும் சங்கரானந்தருக்குப் புரியவில்லை.

சிறிதுநேரத்தில் தூக்கம் வந்தது அவருக்கு.

## 44

காத்திருப்பின்போது கணங்களுக்கு கனதி அதிகம். அன்றைக்கு முடிவுரையாக ஆற்றவேண்டிய சில விபரங்களைச் சொல்வதாக இருந்தார் வளகை கங்கை முதுதுறவி. ஆவல் அலைமோதிக் கொண்டிருந்தது சங்கரானந்தர் மனத்தில். வெய்யில் எழுந்து வெகுநேரமாயிற்று. இன்னும் முதுதுறவி வந்துசேரவில்லை. அது இயல்பில்லாத காரணத்தால் குன்றக் குடிசைநோக்கி நடந்தார் சங்கரானந்தர்.

நார்க் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்த குருவைக் காண துண்ணென்றது அவர் மனது.

விரைந்து சமீபித்தார்.

வரவு தெரிந்து அருகே வந்து அமர சைகை செய்தார் குரு.

கலக்கத்தோடு அமர்ந்து, என்றும் எப்போதும் பிரகாசித்திருக்கும் அவர் முகத்தில் இருள் கவிய ஆரம்பித்திருப்பது கண்டு குருவின் அந்திம காலம் நெருங்குகிறதென்பதைப் புரிந்துகொண்ட சங்கரானந்தர் தானும் இதயத்தில் துக்கம் கவியப் பெறுகிறார்.

குரு, அவரின் துக்கத்தைக் கண்டு மெல்ல உள்ளுக்குள்ளாகவே சிரித்தார். மரணம் எவரால் கடக்கப்படக் கூடும்? பிறப்பெனும் புள்ளியிலிருந்து வளர்வது மரணம். அது முடிவு எனும் ஒரு புள்ளியாகி விழுவதில் என்ன துக்கம் இருக்கிறது? மகனை இழந்த தாய்க்கு கவுதமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத்தானே சாவு நிகழாத வீட்டிலிருந்து உப்பும் மிளகும் கொண்டு வரும்படியும், இறந்த அவள் மகனை உயிர்பித்துத் தருவதாகவும் சொன்னதின் மூலம் நிரூபித்தது?

குரு மரணம்பற்றிய உள்ளலை மாற்றினார். அவர் தன் சிஷ்யனிடம் சொல்லவென்று அத்தனை வருஷங்களாகவும் கட்டிக் காத்துவந்த விஷயங்களைச் சொல்லி அவற்றின் இரகசிய நிலையை மரணத்தின் முன் உடைத்தாகவேண்டும். அவர் தன் இயலாமையை அடக்கிக்கொண்டு பேசத் துவங்கினார்: 'குருவைத் தேடிக்கொண்டிருந்த சிஷ்யர்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் சிஷ்யனைத் தேடிக்கொண்டிருந்த குரு நானாக மட்டும்தான் இருக்கமுடியுமென்று தோன்றுகிறது. நாம் இருவருமே ஒரு வயதின் எல்லை கடந்தவர்கள். இருந்தும் குரு - சிஷ்ய பாவனையோடுதான் பழகியிருக்கிறோம். கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அந்தப் பாவனை அவசியம். மீன் தன் குஞ்சுகளை பாவனை மூலமே வளர்க்கிறது. அதுபோல ஞான அடைவிற்கும் அந்தப் பாவனை அவசியம்.'

குரு நிறுத்தினார்.

விரைந்து மூச்சு வாங்கியது.

நெஞ்சு விரிய மறுத்து அடங்கிய போதெல்லாம் உயிர் துடித்தது தெரிந்தது.

ஒரு கட்டளையை நிறைவேற்றுகிற உக்கிரத்தோடு அவர் தொடர்ந்தார்: 'முதல் நான்காண்டுகளில் பவுத்தம் போதித்தேன். போதித்தேன் என்பதைவிடவும், நான் தெரிந்தவைகளைச் சொல்லி, அது குறித்த என் சந்தேகங்களை உன்னில் பதிய வைத்தேன் என்பதே சரியாகும். மகாவம்சம் புத்த ஆண்டு ஆயிரத்து நூறுடன் முடிவடைகிறது. அதன் மேலான வரலாற்றைச் சொல்வது சூள வம்சம். தீப வம்சமும் இலங்கைச் சரித்திரம் சொல்கிறது. இவற்றின் கதையாடல்களிலுள்ள முரணை நான் உனக்கு உணர்த்தியிருக்கிறேன். உலகின் பலநாடுகளில் அவற்றின் சரித்திரம் இப்படி இல்லை. இப்படியான கதைகள் அங்கே தொல்கதைகள் அல்லது தேவதைக் கதைகள் என்றே புரியப்பட்டிருக்கின்றன. ஆனால் இலங்கையில் நிலைமை அவ்வாறு நிலவவில்லை. தேவதை / தொல்கதைகளின் அத்திபாரத்தில் சரித்திரத்தைச் சொல்வதே இங்குள்ள தொல்பொருள் ஆய்வாளர்களும் சரித்திரவியல் அறிஞர்களினதும் பணியாக இருந்திருக்கிறது. ஆதாரங்களின் அடியில் சரித்திரத்தை நிறுவாமல், சரித்திரத்தை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இங்கே நிர்மாணம் பெற்றன. அரச பரிவாரத்தை மறித்து ராஜகுமாரியை சிங்கம் தூக்கிச் செல்வதும், ராஜகுமாரியின் அழகில் மயங்கி கொன்று தின்பதற்குப் பதிலாக புணர்ந்து குடும்பம் நடத்துவதும், ராஜகுமாரி ஆண்மகவொன்றைப் பெறுவதும், சிங்கபாகுவென நாமகரணம் பூணுவதும், வளர்ந்த மகன் தந்தையாகிய சிங்கத்தைக் கொன்று தாயைக் கூடி தாரமாக்கி அவள் ஜென்மத்துக்கு விமுக்தி கொடுத்தலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவான கதை சிங்கள இனத்தின் சிங்க வமிசத்தை நிறுவுவதற்காக ஒரு மேதைமையான பிக்குவினால் புனையப்பட்டதே தவிர வேறல்ல. உண்மையான மகாவம்சம் இனிமேல்தான் அறியப்படவேண்டும். அப்புதிய சரித்திரம்தான் இன்றைய தேச இருளை விலக்கி வாழ்வினை ஒளிரவைக்கும் பெரும் சூரிய கோளமாய் விளங்கும். என் காலத்தில் அது இயலவில்லை. உன்னால் அது முடியுமா, உன் காலம் அதற்குத் தக இடம்விட்டு நகருமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அது உனக்கு அடுத்த தலைமுறையிலாவது நடந்தாகவேண்டும். நீ என் அவாக்களின் கொள்கலனாய் இருக்கிறாய். நீயே என் அவாக்களில் சிலவற்றையேனும் இயல்பில் பெற்றிருக்கிறாய். அதனால் எனக்கு அதுபற்றிய ஐயம் இல்லை. இனி நான்... விடைபெறலாம்.'

'குருவே!'

'என்ன?'

'புதிய மகாசரிதம் எழுதியுள்ளதாகச் சொன்னீர்களே முன்பொருமுறை!'

'ஆமாம்.'

'அது... எங்கே இருக்கிறது இப்போது?'

'காற்றில். இனியும் அது காற்றில்தான் இருக்கும். ஏனெனில் நான் எழுதியதே காற்றில்தான். ஒவ்வொருவர் உட்சுவாசத்திலும் அது உணரப்படும். நான் காற்றில் கலந்த பின்னால்.... என்னையும் கூட உன்னால்.... சுவாசத்தில் உணரமுடியும்.'

காற்று வெளியே மெல்ல இழைந்தது.

சரசரவென சருகுகள் நிதானமாய் உருண்டன; உதிர்ந்தன.

மது மாந்திய தும்பிகளின் ரீங்காரம் பெரிதாயே கேட்டது.

மேலும் பிரகாசம் குறைந்திருந்தது குரு முகத்தில். அதேயளவு இருள் சிஷ்யன் முகத்திலும்.

'சமகால அரசியலைத் தெரிந்த காலம் கசப்பானது. ஆனால் அதிலும் ஒரு சுவை இருந்தது. உண்மையின் சுவை, இல்லையா?'

'ஆம், குருவே.'

'மொழிகளின் வரலாறு பற்றிய பூரண அறிவை அடைய பின் வந்த இரண்டாண்டுகள் போதுமானவையல்ல. ஆனால் அது தொடர்பான வேறு விஷயங்களைப் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு அவைபற்றி நான் சொல்லியிருக்கிறேன். இடைக்காலத்தில் மகாயானமே செல்வாக்குப் பெற்றிருந்திருப்பினும் மகாயான இலக்கிய மதநூல்களில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த சமக்கிருத மொழி, அரசியல் சமூக அளவில் ஒரு எல்லையிலேயே நின்றுவிட்டது. தேரவாத இலக்கிய மத எழுத்துக்களில் செல்வாக்குப் பெற்றிருந்தது பாளிமொழி. அதன் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் பாதிப்பு கணிசமானது. சமக்கிருதமும் பிராகிருதமும் பாளியும் மூன்றுமே நான் கற்றிருந்தாலும் பாளி எனக்குப் பிரியமான மொழி. சிங்களத்துக்கு அடுத்துத்தான். ஆனாலும் அதுவே இலக்கிய வளமான மொழி. அது தன்னுள் இலக்கியத்தைக் கொண்டிருக்கவில்லைத்தான் சமக்கிருதம்போல். அது அடிச்சொற்களில் கொண்டிருந்த நெகிழ்வு, பல உணர்வுகளையும் வெளிப்படுத்தக் கூடிய மொழியாகப் பரிணமித்ததுடன் தமிழ்மொழி போலவே சிங்களமொழியின் ஆக்கத்துக்கும் பெருந்தொண்டாற்றியது. ஆதி சிங்கள இலக்கியமெனக் கருதப்படுவது சியாபஸ்லகர. அது காவ்யதர்சத்தின் அடியொற்றியதுதான். ஆனாலும் பாளி பதப்படுத்திய அளவுக்கு சமக்கிருதம் சிங்கள மொழிக்கு உதவவில்லை. இவை பற்றியெல்லாம் நான் நிறையவே சொல்லியிருக்கிறேன்; இல்லையா, சிஷ்யா?'

'ஆம், குருவே.'

மொழிப் போதகத்தின் பின்னாலான கடந்த இரண்டு வருஷங்களில் இலக்கியங்கள்பற்றிப் போதித்தேன். கட்டிடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள்பற்றி விஸ்தாரமாகச் சொன்னேன். அது என்னால் முடிந்தது ஆச்சரியமில்லை. நாற்பதாண்டுகளை நேரடியாக இந்தக் கலைக் கோவில்களிலேயே நான் கழித்தேன். அனுராதபுரம், பொலனறுவா, தம்புள்ள, சிகிரியா என்று எந்த இடமும் நான் மீதி வைக்கவில்லை. அவையும் சொல்லப்படாத சரித்திரங்களைச் சொல்லின. நாற்பதாண்டுக் காலம்.... ம்ஹூம்.... காலம் என்ன வேகமாய்ப் பறந்து சென்றது? காலத்தை நான் உணராத காலம் அது. என் வாழ்வைப் பயனுள்ளதாக்கியதும் அதுதான்.

பலஹீனத்தை மேவிக்கொண்டு சிஷ்யன் பக்கம் திரும்பினார் குரு.

அந்த இருள் அவரைத் திடுக்கிட வைத்தது.

'சங்கரானந்தா! என் முடிவு நெருங்குவதெண்ணிக் கவலைப்படுகிறாயா? உன் அனுபவம், உன் கற்றல் யாவும் உன்னைப் பெரும் பெரும் சோகங்களுக்கும் பக்குவம் செய்திருக்கவேண்டும். ஜனனம் உண்டேல் மரணம் உண்டல்லவா? ஒவ்வொன்றும் மாறிக்கொண்டிருக்கின்றன, நிலையானதெதுவும் இந்நிலவுலகில் இல்லையென்று இயக்கவியலின் ஆதிச் சுலோகத்தைச் சொன்ன மதம் இது. மரணத்தை ஏன் அஞ்சவேண்டும்? அதற்குத் துக்கப்படுதல்தான் ஏன்? அதுவும் இந்த எண்பத்திரண்டு வயதில் மரணம் ஏன் துக்கப்படுவதாய் இருக்கவேண்டும்? நான் தெளிந்திருக்கிறேன். நான் ஒருவகையில் சங்கம் சாராத புத்த துறவி. ஆனாலும் நல்ல புத்த துறவியாக வாழ்ந்தேன். சீலமே என் ஆதார மதம். அதனால்தான் நான் என் தளைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு என் முப்பத்திரண்டாவது வயதிலே ஓடியதும். அடுத்து வந்த அம்பதாண்டுக் காலம் தேசசஞ்சாரியாய் இருந்தேன். கிராம மக்களோடும் காடுகள் மலைகளிலுள்ள இனக் குழுக்களோடும் நெருக்கமாய் உறவாடினேன். அவர்களை நான் திருத்தியதுபோல், அவர்களும் என்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தினார்கள். இயற்கையோடு இயற்கையாய் வாழ்கிற கலையை நான் கற்றது அவர்களிடமிருந்துதான். என் வாழ்வு பூரணமானது. பிறகு எனக்கேன் வருத்தம்? உனக்கேன் என் மரணத்துக்குத் துக்கம்? நான் களைத்துப் போயிருக்கிறேனே தவிர, துக்கித்திருக்கவில்லை. என் மரணித்த முகத்திலும் புன்னகை மறையக்கூடாதென்பதே என் விருப்பம். என்னை, சிஷ்யா, சலனப்படுத்திவிடாதே! நான் இறுதி மூச்சை இந்தப் பிரபஞ்சத்தில் கலக்கிறபோது, என் பார்வை எல்லையில் துக்கம் தென்படக்கூடாது. புத்தர் - ஆனந்தர் சிலையில் புத்தர் சிலை பற்றிச் சொல்லியிருக்கிறேன், ஞாபகமாயிருக்கிறாயல்லவா?'

'ஞாபகமாயிருக்கிறேன், குருவே.'

'அப்படியொரு சிலையை என் வாழ்நாளில் எங்குமே நான் பார்த்ததில்லை. அத்தனை அழகு. அத்தனை கலாநேர்த்தி. அத்தனை படைப்பாற்றலின் விகசிப்பு. சயன தோற்றத்திலுள்ள சிலை. அது உண்மையில் பரிநிர்வாணத்தின் பின்னான வடிவம்தான். இருந்தும் முகத்தில் அப்படியொரு அமைதி கவிந்திருக்கும். கருங்கல்லில் அத்தனை உயிர்த் துடிப்பை ஏற்ற முடியுமென்பதை, அந்தச் சிலையைப் பார்த்திராவிட்டால் நான் நம்பியிருக்கமாட்டேன், சங்கரானந்தா. நாற்பத்தாறடி நீளத்தில் இருபத்தாறடி உயரத்தில் வடிவமைந்திருக்கிறது அந்தச் சிலை. நித்திய சாந்தத்தின் அடையாளம் அது. அந்த அமைதியை நான் அடையமுடியாதுதான். ஆனாலும் இந்தளவு அமைதியாவது எனக்குப் போதும்.'

'கவுதமரின் தலைமாட்டில் ஆனந்தர் நிற்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்....?'

'ஆமாம்.'

'சிஷ்யராகிய ஆனந்தரின் முகத்தில் குருவின் மரணத்துக்கான தாங்கவொணாச் சோகம் படிந்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள்....?'

'_'

குரு பேசவில்லை. சிஷ்யன் செல்லும் திசை தெரிந்திருந்தது.

'அதுகூட சிலையில் வடிக்கப்படமுடியாத பேரதிசயத்தை உடையதென்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். இன்னும்.... நித்திய துக்கத்தின் அடையாளமாக அச்சிலை நின்று விளங்கி வருவதுபற்றிச் சொன்னதும் நீங்கள்தான். குருவே, அவராலேயே ஆகாதது.... என்னால் எப்படி....?'

சீடன் விசும்புவது தெரிந்தது.

குரு புன்னகைத்தார்.

குருவாய் அது அவரின் வெற்றிதான்.

'சிஷ்யா, கலங்குவதில் நேரத்தைக் கழிக்காதே. இறுதிக் கணங்கள் கழிந்துகொண்டிருக்கின்றன. உனக்கு என்னிடத்தில் ஏதாவது கேட்கவிருக்கிறதா? வேளை வருமுன் கேட்டுவிடு.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு கேட்க நிறையக் கேள்விகள் உண்டு கேளாமலே பதில்களைத் தானே தெரிய முயன்று கொண்டிருந்தார் அவர். இப்போதும் அவருக்கு அந்த தீர்மானம் தான் இருக்கிறது. ஆனாலும் ஒரு கேள்விக்கான பதிலை அவர் கேட்டேதான் தெரிந்துகொள்ளவேண்டியிருந்தது.

'முப்பத்திரண்டு வயதில் தளைகளை அறுத்துக்கொண்டு நீங்கள் ஓடுவதற்கு முன்னால் என்னவாக இருந்தீர்கள்?'

சங்கரானந்தர் கேட்டார்.

அது முக்கியமான கேள்விதான்.

அவரது அடையாளமே அதில் இருந்தது.

அவர் பெரும்பாலும் அந்த அடையாளத்தை இதுவரை காலமும் மறைத்தே வைத்திருந்தார்; அல்லது மறைவிலிருக்க விட்டுவைத்திருந்தார். இனி அந்த அவசியம் இல்லை.

அவர் சொன்னார்: 'இலங்கை தொல்பொருள் ஆய்வுக் கழகத்தில் தலைவராக இருந்தேன். பேராதனையின் சரித்திர மாணவன். கேம்பிரிஜ்ஜில் தொல்பொருளியல் ஆய்வில் கலாநிதிப் பட்டதாரி. ஆனந்த குமாரசுவாமியின் ஏகலைவ சீடன். சரித்திரப் புரட்டுக்கான நிர்ப்பந்தத்தில் அதிகாரத்துக்கெதிராக பதவியைத் துறந்துவிட்டு காணாமல் போனவன்.'

'பேராசிரியர் அத்தபத்து....?'

குரு தலையசைத்தார்.

'அவர் இறந்து போனதாய்....'

'அப்படியொரு கதையை உருவாக்கியது நான்தான்.'

'அப்போது தேசம் அழுதது...'

'தேசத்துக்காக நானும் அழுதேன்.'

சங்கரானந்தர் பிரமை பீடித்திருந்தார்.

பேராசிரியர் அத்தபத்துவினது உடலின் சகல இழையங்களும் ஒரு நித்திய ஓய்வுக்குத் தயாராவதுபோல் நீட்டி நிமிர்ந்தன.

வெகுநேரம் கழித்துத்தான் சங்கரானந்தருக்குத் தெரிந்தது, தன் குருவினுயிர் குருவிபோல் கூட்டைவிட்டுப் பறந்துபோய்விட்டதென்பது.

இனி தானேதான் அவர் தேறவும் வேண்டும்.

'பிரகீத்ய சமுத்பாதம் என்றொரு விழுமியம் உண்டு. அதன் அருத்தம், ஒன்றின் அழிவுக்குப் பின்னரே மற்றொன்று தோன்றுகிறதென்பது.'

குரு எப்போதோ சொன்ன வாசகத்தைப் பொருத்தம் கருதி அப்போது நினைத்தார் சங்கரானந்தர்.

அன்று மாலையில் ஈமம் அடுக்கி குருவின் உடலைத் தகனம்செய்து முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள்.... ஒரு வாரம்.... ஒரு மாதம் ஆகிற்று.

குருவில்லாத நிலையில் தனிமை அழுத்திற்று. அவரில்லாத சோகம் மனத்தை அழுத்திற்று.

சிந்தனைகளும் புடைத்துக் கிளர்ந்துகொண்டிருந்தன.

அவர் தன் யாத்திரையைத் துவக்கினார்.

பொலனறுவ, அனுராதபுரம், தம்புள்ள, சிகிரியா, தம்பதேனியா சென்றார். ஒவ்வொரு ஸ்தலங்களிலும் மாதக் கணக்கில் நாட்களைக் கழித்தார். திடீரென நிகழ்வின் பிரக்ஞை, குருவின் ஆணைகள் ஞாபகமாயின. வெளியிலிருந்து இறங்கிவந்து பூமியில் கால் தரித்ததுபோல் ஓர் அதிர்வு மேனியெங்கும். எவ்வளவு சோகத்தோடும் பூமியின் இருப்பு சுகமானது; அதன்மேலான அக்கறை நலமானது.

விறுவிறுவென வவுனியா வந்தார்.

ஒரு சிஷ்ய தேவை அவரை அங்கே செல்ல வைத்திருந்தது. ஆனாலும் திரவியத்தைச் சந்திக்க முடியாது போகிறது.

மீண்டும் வெறிபிடித்தவர்போல் சிகிரியா சென்றார்.

மேக சஞ்சார அப்ஸரஸ்களில், அமைப்பின் உறுதியில் தன்னை மறந்திருந்தார்.

ஆனால் சாந்தி கிடைக்கவில்லை.

புதிய வரலாற்றில் சிறிது காலம் புலத்தை எறிந்திருந்தார்.

அப்போது அரசியலும் பூகம்பமாய்க் குமுறாது ஓர் அமைதியைத் தந்தது.

தெளிந்து மறுபடி சென்றார்.

புதுப் புதுக் குடியேற்றங்களும், சிங்கள ஜனப் பெருக்கமும் தெளிவாய்ப் புலனாகின. அந்த முரண் விளைச்சலை வளர்ப்பது போல் குடியேற்றங்கள் தோறும் புத்த குருமாரின் விஜயங்கள் வெகுத்தன.

அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனால் ஏதாவது செய்யவேண்டும் போல இருந்தது.

அப்போதுதான் எதிர்பாராத அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

இன்னும் கொழுத்து.... இன்னும் வெறியேறினது போன்ற பார்வை, தோற்றத்துடன்.... குணாநந்ததேரர்.

சிரித்தபடி நின்றார் சங்கரானந்தர்.

அது எட்டாண்டுகளுக்கு முந்திய சங்கரானந்தரல்ல.

ஜெயத்துக்கான அக்கம்பீர்யத்தில் பொசுங்கி, உள்ளே சினந்து வித்வம் காட்டத் துவங்கினார் குணாநந்ததேரர். அதை எதிர்கொள்ளும் ஞானத் தெளிவு சங்கரானந்தரிடம் இருந்தது.

அதுதான் அப்போது, அந்த அதிகாலைப் பொழுதில், சங்கரானந்தர் நெஞ்சுள் புரளத் துவங்கியிருந்த மறக்க முடியாத சம்வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45

சங்கரானந்த தேரர் நாகவிகாரை வந்திருப்பதே மறுநாள் மதியமளவில்தான் விகாரைக்குப் பொறுப்பாகவிருந்த தேரருக்குத் தெரியவந்தது. திகைத்துப்போனார். அவரில் பெரும் கவுரவம் கொண்டிருந்தவர் அவர். ஊர் மக்கள் சொல்லியதில் அந்தக் கவுரவம் மேலும் வளர்ந்திருந்தது. உடனேயே யாத்திரீகர் மடம் சென்று சங்கரானந்தரை நேரில் தரிசித்தார். உள்ளே வந்து சகல மரியாதைகளும் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால் சங்கரானந்தரோ தான் சங்கத்தில் மறுவாக்குக் கொடாத பிக்குவென்றும், வாழ்க்கையில் சத்திய ஆக்கிரஹிப்புக்கும், ஜீவகாருண்யத்துக்கும், சகலருக்குமான சுபீட்சத்துக்கும் வழி தோன்றாதவரை தன் தேடல் பயணம் தொடரும் என்றும் கூறி வசதிகளை மறுத்து விட்டார்; தான் ஒரு பௌத்த யாத்திரீகன்மட்டுமாகவே அங்கே கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். விகாரையின் தேரர் மறுக்கவில்லை. சங்கரானந்தரளவு வயது அவருக்கில்லாவிட்டாலும், அவரது மனநிலையைத் தேரரால் புரிய முடிந்திருந்தது. செல்வதற்கு முன் ஒரேயொரு கேள்வி கேட்க அவரிடம் அனுமதி கேட்டார்.

'கேளுங்கள்.'

தேரர் கேட்டார். சங்கரானந்தர் காணாமல் போயிருந்த பத்து ஆண்டுகளைப்பற்றிய கேள்வியாகவே இருந்தது அது.

லேசாக சிரித்துவிட்டு சங்கரானந்தர் சொன்னார்: 'ஞானம் பெற்றுக் கொண்டிருந்தேன்.'

'எங்கே?'

'தென்னிலங்கையில். வளவை கங்கைக் கரையில். '

'தவஞ் செய்தீர்களா? அது வைதீக சமயங்களின் நெறிமுறையல்லவா?'

'குறியெதிர்ப்பை உடையவை அந்நோன்புகள். இது தன்னையிழத்தலின் ஆவேசத்தில் இயற்றப்படுவது. இதில் வைதீகம் இருப்பதில்லை. ஆனாலும் தென்னிலங்கையில் நான் பெற்ற ஞானம் ஒரு சித்தனிடத்தில். அவரும் புத்தநிலை பெறக்கூடிய மேதகைமை உள்ளவர்தான்.'

தேரர் குழம்பியிருப்பார். மேற்கொண்டு எதையும் கேட்காமல் அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குகள்மீது விதிக்கப்படும் பஞ்சசீலம், குறிப்பாக பிரமச்சாரியம் ஒருவகைச் சமூக ஒதுக்கம் உள்ளவர்களாக அவர்களை மாற்றி பிற்காலத்தில் அவ்வாறான தனிமையுழல்வில் அவர்களை ஆழ்த்திவிடுகிறதோ என்று தேரரின் உள்ளத்தில் சரியாகவோ தப்பாகவோ ஒரு எண்ணம் உருவாகிக் கொண்டிருந்தது அப்போது.

சங்கரானந்தர் பகற்பொழுதை நியமங்களிலும் தியானத்திலும் கழித்தார்.

மாலை மங்குகிற நேரத்தில் வெளியே புறப்பட்டார்.

அறிமுகமான முகங்களிலிருந்து ஒதுங்கிக்கொள்ள அந்த ஏற்பாடு.

அவர் எண்ணாதிருக்கவும் கால்கள் அவரை அன்று தீவின் மேலைக் கரைநோக்கி இழுத்துச் சென்றன.

விண்வெளிச்சத்தில் அலைகள் இருளில் மின்னின.

காற்று எழுந்தும் வீழ்ந்தும் சுழன்றுமடித்தது.

இயற்கை அவரோடு எதாவது பேச முயன்றதா?

புத்த ஞாயிறு எழாத காலங்கள் மண்ணில் ஏன் தோன்றின என அவரை விசாரணை செய்யச் சொல்லியதா?

ஒரு பெருங் காலவெளியில் உருண்டோடிய இரண்டாயிரத்து ஐந்நூற்றுச் சொச்ச ஆண்டுகள், கால விரயத்தின் சாட்சிகளா? அவையா தம் அழிவின் அவமாய்ப்போனமையை உணர்த்தி புத்துலகின் உத்தாரணத்துக்கான மார்க்கத்தை மேற்கொள்ள யாசிக்கின்றன அவரை?

அவருக்கு அது தணியாத ஆசை.

ஆசையை அவர் துறந்தவர், ஒரு பெரு விருப்பினாலும் திட்டமிட்ட பயிற்சியினாலும்.

அவருக்கே ஆசை வந்துவிட்டதே!

அது அவருக்கு வரலாம் என்கின்றனவா வானும் காற்றும் கடலும் புவியும்?

அவர் மணலில் அமர்ந்தார்.

நெஞ்சுள் சுழித்து கேள்வி எழுந்தது.

ஏன் அந்த காலப் பெருவெளியில் புத்த ஞாயிறு இலங்கையில் தோன்றவில்லை?

மதம் அரசுமயப்பட்டதின் விளைவா அது?

அப்படித்தான் தோன்றியது அவருக்கு.

என்றும் அது அரசின் பிடியிலிருந்து விடுபட்டிருந்ததில்லைத்தான்.

இந்தியாவிலும் இலங்கையிலும் வைதீக சமயங்கள் பவுத்தத்தை தீவிரமாய் எதிர்த்தன. கீழ்த்திசை நோக்கி அது தன் கொள்கைகளைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்துகொண்டு பயணித்தது அதனால்தான். ஒருவகையில் இந்திய உபகண்டத்தில் ராஜகுலத்தவர்களின் பௌத்தத்தின் மீதான ஆழ்ந்த ஈடுபாட்டையும் இதன் ஒரு உபகாரணமாகச் சொல்லலாம். ஆரம்பத்திலேயே புத்த மதம் ராஜ மதமாகத்தான் பரம்பிற்று. மக்களைவிட, அரசகுலத்தாரையே அது சீக்கிரம் பற்றிப்பிடித்தது. அரசகுலத்தாரும் அதற்கிசைவான மனநிலையோடு இருந்திருக்கிறார்கள். அது விசித்திரமானதுதான். ஆசையும் ஹிம்சையும் ஜீவஹத்தியும் நீக்கு என போதம் சொன்ன ஒரு மதத்தை அதனுள்ளேயே உழன்று கொண்டிருந்த அரசகுலம் உண்மையில் வெறுத்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை தலைகீழாக இருந்தது.

என்ன காரணம்?

அது ஒன்றேயொன்றாகத்தான் இருக்கமுடியுமென்று அவருக்குத் தோன்றிற்று. அது: புத்தபகவானின் உபதேசங்கள் திரிக்கப்பட்டிருக்க வேண்டும், புதிய வியாக்கியானங்கள் மூலம். திரிபிடகத்திலிருந்த போதனைகளும் சீலங்களும் கவிழ்த்துக் கொட்டப்பட்டு, இசைவான போலிப் போதனைகளும் சீலங்களும் கலந்து அவை மறுபடி நிரப்பப்பட்டிருக்க வேண்டும்!

ஒரு மஹாயானி அல்லது சில மஹாயானிகள் சேர்ந்து செய்தது அது என்று வளவை கங்கைக்கரைத் துறவி சொன்னது ஞாபகமாயிற்று அப்போது.

அது மெய்யாயே இருக்கும். ஏனெனில் புத்த பரிநிர்வாணத்தின் ஒரு நூற்றாண்டின் பின்னரே உபகுப்தர், ஆனந்தர் போன்ற பத்தாயிரம் பிக்குகளால் புத்தர் உபதேசங்கள் தேடியெடுத்து விவாதித்துத் தொகுக்கப்பெற்றிருந்தன.

ஆரிய சத்தியம் ஆணி வேராயிருந்தது பவுத்தத்துக்கு. துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கினையுமே ஆரிய சத்தியமென்றது மகதமொழியான பாளி. 'ஓ.... பிக்குகளே! இப்போது நான் சொல்லப்போகும் வசனங்களே நால்வகை உபாயங்களில் இரண்டாவது சத்தியமாகும். இது துக்கத்தின் காரணம் எது என்பதைக் கூறும். அது உயிர்த் தாகம் பற்றியதாகும். உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் ஆசையே அது. அதுவே பிறப்பு நீட்சியின் மூலம். அது இன்ப விளைச்சலைத் தரும்; அதிகார இச்சையை வெகுப்பிக்கும்; பொன் பொருள் பூ தனங்களில் சொக்கிப்போக வைக்கும். இச்சைகள் ஒரு சுழல் வட்டத்தில் இயங்குவன என்றறிவீர். அவை என்றும் முடிவடைவதில்லை.' இவ்வாறு ஆசையின் தன்மைபற்றி பேராசானால் விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. அந்த ஆசையை, அதனால், அரசபீடம் வெகுவாகச் சிலாகிக்கும்தான். உபாக்யானங்கள் விருப்பத்துக்கு ஏற்பச் செய்யப்பட்டதன் காரணத்தை அவர் சிரமமில்லாமல் புரிந்தார். அதனால்தான் புத்த போதனைகள் தொகுக்கப்பட்டுக்கொண்டிருந்த பொழுதிலேயே கொள்கை மாறுபாடுகள் கொண்ட மஹாசங்கிகள் சங்கத்திலிருந்து வெளியேறியிருக்கின்றனர்.

இது ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின், பின்தொடர்ந்தன பல்வேறு பிரிவுகள்.

மஹாசங்கிகளைப் பின்பற்றி சங்கத்திலிருந்து வெளியேறியவர்கள் மஹாயானத்தைத் தோற்றுவித்தனர். புத்தர், கடவுளானது அவர்களால்தான். பௌத்தத்தின் இறுக்கத்தைத் தளர்த்தி மக்களிடத்தில் எடுத்துச் செல்வதற்காக அவ்வாறு செய்யப்பட்டதென்பர். ஆனால் புத்தரின் வரலாற்றுப் பாத்திரம் மறுக்கப்படும் மகா தவற்றைச் செய்ய காரணஸ்தர்களானார்கள். அவர்மேல் அமானுஷ்ய சக்திகள் ஏற்றப்பெற்றன. லோகோத்தார புத்தர் என்று அவர் அற்புதமயப்படுத்தப்பட்டார்.

.... முதுதுறவியின் போதனைகள் புற்றீசலாய்க் கிளர்ந்து கொண்டிருந்தன சங்கரானந்தரிடத்தில்.

'மெய்.... மெய்....!' என்று முனகி தனக்குத்தானே தலையாட்டிக்கொண்டார்.

காசியபன்பற்றி ஆசான் சொன்னவற்றையும் அப்போது இணையாக எண்ணிப்பார்த்தார் சங்கரானந்தர்.

தந்தையாகிய தாதுசேன மகாராஜாவை உயிரோடு சமாதிவைத்த பின் தமிழகத்துக்குத் தப்பியோடிவிட்ட தம்பி மொகலனுக்கும், பொதுமக்களுக்கும் பயந்து சிகிரியாக் குன்றை, மகா அரணின் கூறுகள் கருதி தலைநகராய்க் கொண்டுவிடுகிறான் காசியபன். எந்தவொரு வலிய படையையும் அடிவாரத்திலேயே தடுத்து நிறுத்தக் கூடியதுதான் சிகிரியாக் குன்று. ஆனாலும் தந்தையை கொடூரமான முறையிலே கொன்ற பாவமும், குடிகளின் அதிருப்தியும் அவனைப் பேரச்சப்பட வைத்துக் கொண்டிருந்தன. அதிலிருந்து மீளுவதற்கான ஒரு உபாயமாய் மஹாயான பௌத்தத்தைப் பின்பற்றத் துவங்கினான். மஹாயானம் மன்னனுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. மன்னன் தெய்வ நிலைக்குச் சமதையாக உயர்த்தப்பட்டான். அதை உறுதிப்படுத்தும் சடங்குகள், சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்பட்டன. சீயகிரி குகைச் சித்திரங்களின் புனைவு அது சுட்டியே எழுந்தது. அரசனை ஒரு குடிமகன், ஒரு போர்வீரன், ஒரு தூதுவன், ஒரு மந்திரி என்று எவர் அணுகவும் எல்லையளவுகளே விதிசெய்யப்பட்டிருந்தனவாம். குடிமக்களும் அவனை அந்தளவில் ஏற்கத் துவங்கியிருந்தனர்.

அபரிமிதமான அரசியல் அங்கிகளாய் மஹாயானிகள்.

மதவாதிகளாய்த் தேரவாதிகள்.

குணாநந்த, மஹாயானி சிந்தனைப்போக்கிலேனும். சங்கரானந்தரோ தேரவாதி.

சங்கரீதியான பிரிவு அவர்களுக்கில்லை அப்போது. அபயகிரியும், ஜேத்தவனாராம கூடமும், களனி விகாரையும் ஒரே சிந்தனைப் போக்குள்ளனவாய்க் கருதப்பட்டிருந்தாலும், குணாநந்தவுக்கும் சங்கரானந்தருக்குமிடையே ஒரு சித்தாந்தப் பிளவு இருக்கிறது துலக்கமாகவே தெரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைச் செயற்பாட்டு பிளவின் அந்த நம்பிக்கையூடாக அவர்களுள் விவாதம் விரிந்த அந்த நாளை நினைக்க சங்கரானந்தர் தயாரானார்.

இருப்பினால் தோன்றிய நாரி உளைவை மாற்ற கைகளைப் பின்னே ஊன்றி சரிந்து பாரம் சுமத்தி தலையை மிண்டினார்.

பார்வையில் வான வெளிர்ப்பு... சில நட்சத்திரங்கள்...

## 46

அது ஒரு கோடை வெப்பம் மிகுந்த நாள்தான். என்றாலும் எந்தப் பெரிய கோடையும் அங்கே வெகு உக்கிரம் பண்ணிவிட முடியாது. வன்னியின் மர வளம் - பசுமை, அப்படி. பகலிலே தணலிலிருந்துபோல் அனல் அலைகள் கிளம்பிக்கொண்டிருந்தாலும், இருண்ட மரக் கூடல்களிலிருந்து வரும் தென்றல் அவற்றை விழுங்கிக்கொண்டு பதிலியாக அங்கே நிறைந்து அம்முறைமையைச் சக்கரத் தொடர்ச்சி செய்யும். உயிர் தளிர்ப்பத் தீண்டும் தன்மையது அங்கத்தய தென்றல்.

ஆனாலும் ஒதுங்க நிழலற்றவர்போல் வெய்யிலில் அலைந்து அலைந்து களைத்துப் போயிருந்தார் சங்கரானந்தர். அவரது மனம் ஆனந்தக் களிப்பிலிருந்தது. எவனை அவசியம் சந்திக்கவேண்டுமென எண்ணிக்கொண்டிருந்தாரோ, அவனது முகவரியை மதியமளவில்தான் பெற்றிருந்தார். அவசரமாக அங்கே ஓடினார். அவனின் பிரதிபோல் ஒரு பெண் குழந்தைதான் வாசலில் நின்று விளையாடிக்கொண்டிருந்தது. அழைத்தார். ஒரு பெண் உள்ளேயிருந்து வந்தாள். அவரைக் கண்டதும் வணங்கினாள். சிங்களப் பெண் என்பது பார்வையிலேயே தெரிந்தது. அவள் அந்தக் குழந்தையின் தாயானால், அவள் நிச்சயமாக அவனது மனைவியாகவே இருக்கமுடியும். அவர் மனத்துள் சிரித்துக் கொண்டார். அவனால் அப்படித்தான் செய்ய முடியும்.

தமிழிலே கேட்டாள் அவள் : 'ஆரைப் பாக்கவேணும்?'

'திரவியம்...?'

'அவர் வீட்டில இல்லை.'

'அவசரமாய்ப் பாக்கவேணுமே!'

'எங்க போனாரெண்டு தெரியேல்லை. எப்ப வருவாரோ...?'

'என் பெயர் சங்கரானந்தன். நாகவிகாரையில் பிக்குவாக இருந்தவன். திரவியத்தை எனக்குத் தெரியும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்பிடி இருங்கோ' என்று பாயை எடுத்து உதறி திண்ணையில் விரித்துவிட்டாள்.

அவர் உட்காராமல், 'திரவியம் வர நேரமாகுமோ?' என்றார்.

'சாப்பாட்டுக்கு இத்தனைக்குள்ள வந்திருக்கவேணும். வரேல்லை. இனி பெரும்பாலும் எட்டு மணிக்கு மேலதான்...'

'ஓ.... என்னால் அதுவரை காத்திருக்க முடியாது. நான் புறப்படப் போகிறேன். திரவியம் வந்ததும் நான் வந்ததாய்ச் சொல்லவேணும். நான் இப்போது அனுராதபுரம் போகவேண்டியிருக்கிறது அவசரமாக. திரும்ப வவுனியா வரும்போது வந்துபார்ப்பேன். அதுசரி.... நீ அவருக்கு....?'

'சம்சாரம். முந்திக்கூட நீங்கள் ஒருமுறை இஞ்ச...'

அவர் சிரித்தார் பின் திரும்பி நடந்தார்.

ஜனதா பேக்கரியில் அப்போது கூட்டமில்லை. பசியாயிருந்ததால் பிளெய்ன் ரீ ஒன்று குடிக்கலாமென உள்ளே நுழைந்தார்.

விருப்பம் / விருப்பமின்மை, மகிழ்ச்சி / மகிழ்ச்சியின்மை எதுவென்று தேரமுடியாத அந்தச் சந்திப்பு அங்கேதான் நிகழ்ந்தது.

குணாநந்த அங்கே இருந்தார். புறப்பட்டுக்கொண்டிருந்தார். பார்ப்பதற்கு பணக்காரப் பிக்குபோல் இருந்தார். உடம்பு பெருத்திருந்தது. மஞ்சளாடை புதுக்கோலம் காட்டி பளீரென்று இருந்தது. புதிதாக கண்ணாடி போட்டிருந்தார். ஆனாலும் அடையாளம் தெரிவது சிரமமாயிருக்கவில்லை.

'குணாநந்த!'

தான் அவ்வாறு அழைத்ததை விரும்பவில்லையா அவர்? எதிர்பாராதவிதமான சந்திப்பு, எதிர்மறைகளின் சந்திப்பாகவா இனங்காணப்படவேண்டும்? ஒரு சிறிய பின்னமளவு பொழுதில் சுதாரித்துக்கொண்ட குணாநந்தர் லேசான ஒரு புன்னகையை முகத்தில் விரித்துக்கொண்டு, 'ஸ்தவீர நலமாயிருக்கிறீர்களா?' என்றார்.

'ஸ்தவீர!' தேரர் என்ற சொல்லுக்கான பாளி மொழியின் வேர்ச்சொல்! அவரின் அணுகுதல் வித்துவத்தோடு இருக்கப்போகறிதென்பதன் அறிகுறியா அது? ஆனாலும் சங்கரானந்தர் யோசிக்க எதுவுமில்லை.

'நலம்தான்' என்றார்.

கையிலிருந்த பெரிய காகித உறையொன்றிலிருந்து ஒரு நோட்டீஸை எடுத்துக்கொடுத்தார். மறுநாள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றுக்கு வவுனியாப் பகுதி சிங்கள மக்களை அணிதிரண்டு வருமாறு விடுக்கப்பட்டிருந்த அறைகூவல் அச்சாகியிருந்த துண்டுப் பிரசுரம் அது. விட்டிருந்தவர்கள் பூமிபுத்திரர்கள்.

துண்டறிக்கையை வாசித்த சங்கரானந்தரின் நெற்றியில் அலைகள் விழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சாதாரணமான விண்ணப்பமில்லை.

மனித மனங்களில் துவேஷத்தைப் படரவைத்து அதை எரியவைக்கவென வீசிய நெருப்பாயும் இருந்தது அது. **இந்தியர்கள் முன்னே வந்தார்கள் - இந்தியப் படை பின்னே வந்தது - புனிதபூமியைவிட்டு அமைதிப் படை உடனடியாக வெளியேற வேண்டும் - இல்லையேல் வெளியேற வைப்போம்** என்று முடிந்திருந்தது அது.

'எல்லாமே அரசியலாகிவிட்டதா?' என்று ஏங்கினார் சங்கரானந்தர்.

'ஸ்தவீர, எதில்தான் அரசியல் இல்லை? இன்னும்.... எதில்தான் அரசியல் இருக்கக்கூடாது? சொல்லுங்கள்.'

'இது அரசியல்கூட இல்லை. வெறும் துவேஷ பிரச்சாரம். ஜனங்களைத் தவறான மார்க்கத்தில் இது இட்டுச் செல்வதாகும்.'

'அப்போ.... என்ன நடக்கும் என்கிறீர்கள்?'

'அப்பாவிகளான இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளரும், இந்திய வம்சாவழி வர்த்தக சமூகத்தினரும் பெரும்பான்மை ஜன சமூகத்தால் துவேஷிக்கப்படுவார்கள். அவர்களையும் அவர்களது சொத்துக்களையும் அழிக்கக் காத்திருப்பார்கள். சமூக நிலைமையில் அமைதி குலைகிறபோது, அவர்கள் நெஞ்சுக்குள் இருக்கக்கூடிய தீ, வெளிவந்து சகலதையும் தீய்த்துவிடும்.'

'என்கிறீர்கள்?'

'ஆம்.'

'மெய்யாகவே?'

'மெய்யாகத்தான்.'

'அதுதான் உண்மையில் என் விருப்பம் நோக்கம் திட்டம் எல்லாம்.'

'அது அரசாங்கத்தின் உடன்படிக்கையையும் மறுதலிக்கிறது.'

'ஆமாம். ஆனால்.... அது எங்களுடைய அரசாங்கமாக எப்போது இருந்திருக்கிறது? தேர்தலில் வீறாப்பு பேசி ஆட்சி ஏறுகின்றன; ஏறிய பின்பு ஜனநாயகத்தைச் சொல்லிக் கொண்டு தமிழ்ச்சாதிக்காக வளைந்து கொடுக்கிற / விட்டுக் கொடுக்கிற அரசாங்கங்களாக மாறிவிடுகின்றன. இன்று கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைக்கிறதுக்கான திட்டத்தை முன்மொழிகிறது இந்திய - இலங்கை உடன்படிக்கை. கலாசார அமைப்புக்களெல்லாம் வெறுமனே பார்த்துக்கொண்டு அல்லது தலையாட்டிக்கொண்டு இருந்துவிடுகின்றன. புத்த சங்கங்களும் பார்த்துக்கொண்டு இருந்துவிடலாம் என்கிறீர்களா? நம்முடைய உத்வேகமான எதிர்ப்புகளால்தானே பல அழிவுகளிலிருந்து நமது லங்காபூமி காப்பாற்றப்பட்டிருக்கிறது! அதுபோல்தான் இப்போதும் லங்காவின் நலங்கள் காப்பாற்றப்படவேண்டியதிருக்கிறது. இல்லாவிட்டால் அம்பாறை போகும்.... திருகோணமலை போகும்.... மணலாறும் போய்விடும்.... நம் நாளதுவரையான திட்டமிட்ட குடியேற்ற முயற்சிகளெல்லாமே வியர்த்தமாகிவிடுமே, சுவாமி!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அமைதிப்படை போகவேண்டியதுதான். நம் நாட்டுக்காக அது தன் சுய அழிவிலிருந்துகொண்டு உடன்படிக்கையைப் பூரணப் படுத்திவிட்டுப் போக முயன்றுகொண்டிருக்கிறது. தன் கடமை பூரணமாகியதும் அது போய்விடும். நீங்கள் கிளர்ச்சிக்காகவே தான் கிளர்ச்சியை நடாத்த முயற்சிக்கிறீர்கள். கிளர்ச்சிகளிலேதான் உங்களுக்கு ஆதாயம். கிளர்ச்சிகள் மூலமாகக் கூட அதை அடைய நீங்கள் முயற்சிக்கவில்லை. கிளர்ச்சிகள்.... கிளர்ச்சிகள் மட்டுமேதான் உங்கள் ஆதாயம். நீங்கள் புத்ததுறவியாக வேண்டாம், மனிதனாகக்கூட இயங்கவில்லை.'

'பெரிய வார்த்தை சொல்கிறீர்கள், சுவாமி. அப்படி சங்கம்கூட சொல்லவில்லையே! அது என்னை ஓய்வு ஒழிவற்ற ஊழியனாகவல்லவா கருதுகிறது; பாராட்டுகிறது!'

'மிகவும் அலுப்பாக இருக்கிறது. நான் உட்காரப் போகிறேன்' என்று அவரெதிரே உட்காரப் பிரியப்படாதவர்போல் அடுத்த மேசையில் சென்று அமர்ந்தார்.

குணாநந்தா சிரித்தார். 'நான் போகவேண்டும். ஆனாலும் உங்களுக்காக சிறிதுநேரம் உட்கார முடியும்' என்று சங்கரானந்தருக்கெதிரே அமர்ந்தார். அவருக்குப் போகிற உத்தேசமில்லை.

'சங்கத்தைச் சரணடைவது என்பது நல்ல துறவியாக வாழ்வதான அர்த்தமாகாது. நான் ஒரு உண்மையான புத்த பிக்குவாகவே வாழவிரும்புகிறேன், சங்கத்தை நீங்கிக்கூட. புத்த சரணத்துக்கும் தர்ம சரணத்துக்கும் அடுத்ததானதே என் சங்க சரணம்' என்றார் சங்கரானந்தர்.

'வாழுங்கள். குறைந்தபட்சம் தேரவாதியாகவாவது வாழுங்கள். நீங்களோ அதையும் தாண்டி மாத்யமிகவாதியாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மையில் எதார்த்தத்துக்கு வெகு அப்பாற்பட்ட ஒரு மோசமான நிலைமை. கவனம்!'

'நாகார்ஜுன வாதத்தில் எனக்கு உடன்பாடில்லை. திறந்த கைகள்போல் என் இயக்கம் பரிசுத்தமானது. அப்படியே என் சித்தாந்தங்களும். நான் ஒரு நல்ல தேரவாதி. அதற்கு மேலே கீழே இல்லை. ஆனாலும் எனக்கு மாத்யமிக வாதத்தின் தத்துவ விசாரம் பிடிக்கும்.'

'சுவாமி.... கடந்த ஏழு எட்டு ஆண்டுகளில் வெகுவாக வளர்ந்திருக்கிறீர்கள்' என்று குணாநந்த சொன்னதற்கு சங்கரானந்தர் சிரித்தார். குணாநந்தர் தொடர்ந்தார்: 'இத்தனை காலமும் மத விசாரத்தில்தான் ஈடுபட்டிருந்தீர்களோ?'

'ஆமாம்.'

'அதுசரி.... அன்று என்னை கொழும்பு ராஜகிரிய விகாரையில் நிற்கச் சொல்லிவிட்டுச் சென்ற தாங்கள் எங்கே போய் மறைந்தீர்கள்? வெகுநேரம் தங்களுக்காகக் காத்திருந்தேன்.'

'திரும்ப வந்து பார்த்தேன்; நீங்கள்தான் அங்கே இல்லை. மறுநாள்கூட தேடி வந்தேன்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்படியா? நான்தான் தங்களைத் தவறவிட்டிருக்கிறேன்போலும். சரி. பிறகு....?'

'வளவை கங்கை வரை போனேன்.'

'ஏனோ?'

'அமைதி நாடித்தான்.'

'வளவை கங்கைக் கரை வாழ்வு வெறுத்தவர்களின் கடைசி இடம் எனப்படுகிறது, சுவாமி.'

'அங்கேதான் மஹாஞானிகளும் இருந்திருக்கிறார்கள்.'

'யாரையாவது அங்கே சந்தித்தீர்களா?'

'ஆம். ஞானவான் ஒருவரைச் சந்தித்தேன். வளவை கங்கைத் துறவியென்று தென்னிலங்கை அவரை அறிந்திருந்தது. பேராசிரியர் அத்தபத்து என்று ஒருகாலத்தில முழு இலங்கையும் அறிந்திருந்தது அவரை.'

'அவரா....? அவர்தான் வெகுகாலத்துக்கு முன்னரே தற்கொலை செய்துகொண்டதாய்....?' குணாநந்தவின் புருவம் நெரிந்தது.

'இல்லை. போன ஆண்டுதான் அவரது மரணம் நிகழ்ந்தது. ஈமம் அடுக்கி தீ மூட்டியதும் நான்தான்.'

குணாநந்த மேலே பேசவில்லை. அவரின் ஆர்வம் அடைபட்டுப் போயிற்று. புதிய சரித்திரமெழுத முனைந்த பேராசிரியர் அம்பது ஆண்டுகளாக வாழ்ந்து ஒரு ஞானவாரிசையும் விட்டுச் சென்றிருப்பதான சேதி சாமான்யமானதல்ல. சிறிது நேரமாயிற்று அவர் தெளிய. தெளிந்து மலினமான குரலில் கேட்டார்: 'பிறகு என்ன செய்தீர்கள்?'

'அலைச்சல்தான். தம்புள்ள, அஸ்கிரியா, சிகிரியா, பொலனறுவா, அனுராதபுரம் எல்லாம் சென்றேன்.'

'ஏன் இந்தமாதிரி கலா சேஷத்திரங்களாக....?'

'மனது சொன்னது.'

'ஆறுதல் கிடைத்ததா?'

'ஓரளவு.'

சங்கரானந்தர் தேநீரைக் குடித்து முடித்து எழுந்தார். கல்லாவில் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்து பஸ் நிலைய பக்கத்தில் நின்றார். குணாநந்த தேரர் வர நிழல்களிலே நடந்து எதிர்ப்புறமிருந்த புதியவிகாரைப் பக்கம் நடந்தார். ஊசியைப் பின்தொடரும் நூல்போல் குணாநந்த பின் தொடர்ந்தார். அவர் மனது குறுகுறுத்தது, தன்னைப் பின்தொடரச் செய்யும் சங்கரானந்தரின் சக்தியில்.

சங்கரானந்தர் ஒரு பெருமர நிழலில் நின்று குணாநந்தர் பக்கம் திரும்பினார். 'செயலூடாகத்தான் சிந்தனை உரசிப் பார்க்கப்படுகிறது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரர் சொன்ன காரணத்தைத் தெரியாவிட்டாலும், 'மெத்தச் சரியானது' என்று சொல்லி சிரித்தார் குணாநந்த தேரர்.

'அதனால்தான் சொல்கிறேன், நீங்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தாமல் விடுவதே நல்லதென்று. இந்த துண்டுப் பிரசுரங்களையும் விநியோகிக்காதீர்கள். அது, லங்காவ... லங்காவ என்று மூச்சுக்கொரு தரம் சொல்கிறீர்களே, அதற்குக்கூட நிச்சயம் நன்மை பயப்பதாக இருக்காது.'

பேச்சடங்கியதுபோல் சில கணங்கள் நின்றுவிட்டு, 'நீங்கள் நாடு துண்டாடப்படுவதை விரும்புகிறீர்களா? ஒப்புக்கொள்ளவாவது செய்வீர்களா?' என்றார் குணாநந்த.

'நிச்சயமாக இல்லை.'

'வடக்கும் கிழக்கும் ஒன்றாகி தமிழ்ப் பெருநிலம் ஏற்படுவதை ஆதரிக்கிறீர்களா?'

'அதற்கும் நாடு துண்டாடப்படுவதற்கும் எவ்வகையில், எங்கே தொடர்பிருக்கிறதென்று என்னால் எதையும் காண முடியவில்லை. இந்த நாட்டின் ஒவ்வொரு அடி மண்ணிலும் ஒவ்வொரு சிங்களவனுக்கும் போலவே ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமை இருக்கிறது என்பதே என் கட்சி. இது அவர்களுடைய நாடும் ஆகும்.'

'இந்த தேசத்தில் இந்திய பெருமுதலாளிகள் லாபமீட்டி கோடிகோடியாய்க் கொண்டுபோச் சேர்ப்பதை அங்கீகரிக்கலாம் என்கிறீர்களா?'

'சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்கியிருப்பது நாங்கள்தான்.'

சுள்ளென்றதுபோல் முகம் மாறிற்று குணாநந்தவுக்கு. 'இனி உங்களோடு பேசுவதில் அர்த்தமில்லை. நீங்கள் ஒரு சார்பை ஏற்கனவே எடுத்துவிட்டீர்கள். நான் புறப்படுகிறேன்' என்று திரும்பத் தயாரானார்.

'நில்லுங்கள். நீங்கள் என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் போகக்கூடாது.' கட்டளையாய் அதிர்ந்தன சொற்கள்.

அதை ஒரு பலத்தின் தொனியாகப் புரிந்தார் குணாநந்த தேரர். பேராசிரியர் அத்தபத்து அந்த வயதிலேயே ஞானவான் எனப் பெயர்பெற்றவர். கலாயோகியின் ஆழ்பன்முகப் பார்வையை சுவீகாரமாய்ப் பெற்றவர். அவரில் ஒரு ஞானச் செருக்கு இருந்தது என்பதே அவர் துறையில் அவர்மீது சாட்டப்பட்ட எதிரிகளின் குற்றச்சாட்டு. அவர் இணங்க மறுத்ததையே அரசு கடமை தவறினார் என்பதாக குற்றஞ்சாட்டியதையும் குணாநந்த தேரர் அப்போது நினைத்தார். அவரின் ஞானத்தில் கரும்புள்ளி இல்லை. அந்த ஞான நெருப்பில் ஏற்றப்பட்ட விளக்கா இது? இவ்வாறான எண்ணம் எழுந்ததும், தன் இயல்பின் கர்வம் தலையெடுத்தது குணாநந்தவில். ஜாதகக் கதையில் வரும் ஓநாய்போல் சீறினார்: 'நாளை மறுநாள் மாலை இங்கே வாருங்கள். உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன். அது விவாதமளவு வளர்வதாயிருந்தாலும் எனக்குச் சரிதான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்போது அது தாமதமான பதிலாயிருக்கும்.'

'இல்லை' என்று கூறி குரோதமாய்ச் சிரித்தார். 'அப்போது உங்களுக்கு பதிலே கிடைத்திருக்கும், என் செயற்பாடு மூலமாக. அந்நிலையில் என் செயற்பாடு குறித்தே உங்கள் விவாதத்தை நீங்கள் ஆரம்பிக்க வேண்டியிருக்கும். நீங்கள்.... வருவீர்களல்லவா?'

'வருவேன். கண்டிப்பாக வருவேன். தர்மம் எவ்விதமேனும் ஸ்தாபிதமாகவேண்டும்.'

குணாநந்த தேரர் போய்விட்டார்.

சங்கரானந்தரின் கண்களில் நீர் ஆடியது.

சிறிதுநேரத்தில் வழிந்து உதிர்ந்தது.

தெருவோடு சைக்கிளில் போய்க்கொண்டிருந்த ஒரு மனிதன் குதித்து இறங்கினான்; ஸ்ராண்டு போட்டு அதை நிற்கவைத்தான். அதிசயம்போல் பிக்குவைச் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு கைகூப்பி அவரை வணங்கினான். பிறகு சைக்கிளை எடுத்துக்கொண்டு ஏறிச்சென்று மறைந்தான்.

அன்று.... அந்த மனிதன் ஏன் அவ்வாறு செய்தான்?

அன்றும் அது புரியவில்லை; இன்றும்கூட அது புரியவில்லை.

மேற்கொண்டும் அமர்ந்திருந்து யோசிக்க கடற்கரைக்குளிர் தடுத்தது

எழுந்து விகாரைக்கு நடந்தார் சங்கரானந்தர்.

தெருவிலே நாய்கள் சில படுத்திருந்தன. தெருச் சந்திகளைச் சுவீகரித்துள்ள அமானி நாய்கள்தான்.

அவை குரைக்கத் துவங்கினால் ஊரே புரண்டுவிடும். ஏனோ அப்போது அவை குரைக்கவில்லை.

பிக்கு நிசப்தத்துள் நடந்தார்.

## 47

பகல் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருந்தது. தியானத்திலிருந்தார் சங்கரானந்தர். அப்படியே பரிநிர்வாணம் அடைந்துவிடும் உக்ரம் அதில் தென்பட்டது. அவர் பக்குவப்பட்டவரில்லை. அவர் தகுதியெல்லாம் பண்பட்டிருந்தது மட்டும்தான். அவர் பெருவெளிச்சம் - விடியல் - செய்யும் சக்தி பெற்றவரில்லை. ஒரு அகலின் சுவாலை மட்டுமே அவர். எந்தவொரு பண்பட்ட உயிரும் சுவாலையளவுதான். அவர் தன் பலம் தெரிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் அதிகபட்சமான இச்சை பிறருக்குப் பயன்பட்டுக்கொண்டே வேளைவரும்காலை அகலின் சுவாலைக் கணக்கில் சுளுவாய் அணைந்துவிடுவதுதான்.

மாலையாகியும் வெளியே செல்ல ஆயத்தமாகவில்லை அவர்.

ஒரு அலுப்போடு முன்னிரவு வேளையில்தான் வெளியே சென்றார்.

அவர் எண்ணாமலே அவர் சென்றிருந்த இடம் கிழக்கின் கரையாக இருந்தது. மணிமேகலை அரங்கு தாண்டி, மொட்டை ஈஞ்சு தாண்டிச் சென்ற பிறகுதான் தான் வந்திருந்த இடத்தின் பிரக்ஞை தோன்றியது அவருக்கு. அதிசயித்துக்கொண்டுதான் மணலில் உட்கார்ந்தார்.

படகொன்று நீரைத் தீற்றிக்கொண்டு பறந்துசென்றது. போராளிகளினது படகாய் இருக்கலாம். கரும்புலிகள் என்கிற அவர்களது கடற்படை பெரும்பலம் பெற்றுவருவதை பல சிங்களப் பத்திரிகைகளும் சுட்டிக் காட்டி கட்டுரைகளும் படங்களும் வெளியிட்டிருந்தன. அவருக்கு அதுபற்றி அக்கறையில்லை. சிறீலங்கா கடற்படை. எப்படியோ, அப்படியே அதுவும். இரண்டும் விரும்பாத அம்சங்கள்.

யாழ் நகருக்கு மேலே வெளியில் வானம் கறுத்துக் கிடந்தது. முன்பெல்லாம் அப்படி இருப்பதில்லை. பெருநகரின் ஒளித் தெறிப்பு வானத்தில் ஒளித்திரையாய் விரிந்திருக்கும். இருளின் காரணம் மின்சாரமின்மை என்பதை உணர வெகுநேரம் ஆகவில்லை அவருக்கு. ஐந்து ஆண்டுகளாவது இருக்கும் அது மின்சார விநியோகம் பெற்று.

அன்றொருநாள்.... குணாநந்த தேரர் சந்திப்பதாகச் சொன்ன நாளின் மாலைப் பொழுதிலும் வவுனியா நகரில் மின்சாரத்தடை ஏற்பட்டிருந்தது ஞாபகம் வந்தது அவருக்கு.

மின்தடை ஏற்பட்டதும் அவரது மனம் துண்ணென்றது. எங்காவது ஒரு கண்ணி வெடி, எங்காவது ஒரு சைக்கிள் குண்டு, எங்காவது ஒரு அநாமதேயப் பார்சல் குண்டு, எங்காவது தூர இருந்து செலுத்தப்பட்ட ஷெல்.... வெடித்துச் சிதறி தசைகளைப் பிய்த்தோடும் அவலமும், உயிர்களை வகிரும் ஓலக் கிளர்வும் எழலாமென்பதான ஓர் அச்சம் மனத்தின் அடியில் எப்போதும்தான் இருக்கிறது. எது திடீரென்று நிகழ்ந்தாலும் மனம் திடுக்கிட்டுப் போகிறது. இருதயம் வேக உச்சத்தில் படபடக்கிறது. அந்தக் காலகட்டத்திய வாழ்வு கடவுளாலேயே சபிக்கப்பட்டிருக்கிறதோ?

ஆனால் அவதி அவசியமில்லையென்பதுபோல் மின் விநியோகம் சீக்கிரமாகவே வந்துவிட்டது.

சங்கரானந்தர் விகாரைநோக்கி நடந்தார். விகாரத்தில் ஒளிவெள்ளம் சீறிப் பாய்ந்துகொண்டிருந்தது.

ஏனோ, அச்செயற்கையொளியில் கண்போல் மனம் ரம்யம் காணவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவை கங்கைக் கரையின் புராதன புத்த கோவிலின் இடிபாடுகளுடனுமான புனிதத்தை அப்போது அவர் நினைத்துப் பார்த்தார். வெளிச்சம் ஒரு கருவியென்பார் அவர் குரு.

பின்புறமாய், செயற்கைச் சுனையிருந்த பளிங்குக் கல் பீடத்திலேறி சங்கிலி வளைய எல்லையின் சீமெந்துக் குற்றியோடு அமர்ந்தார்.

பிரதான வீதியிலிருந்து பிரிந்து விகாரையோடு பக்கமாய் ஓடிய தெருவில் ஜனநடமாட்டம் தெரிந்தது. சிங்களவராய்.... தமிழராய்.... அவர்கள். யார் யாரிலும் துவேஷம் கொண்டிருந்திருக்க முடியுமா அக்கணத்தில்? தாம் தம்மை மட்டுமே நினைத்து இயங்கும் அந்தப் பொழுதுதான் இயல்பானவை. ஜனங்கள் இயல்பில் நல்லவர்கள்; மிருகங்களும் அப்படியே. மழைநீர் விண்ணிலிருந்து மேகம் கசிய இறங்குகையில் மாசற்றதாயே இருப்பதுபோன்றது மனிதர்களின் இயல்பான சுபாவநிலை என்பார் வளவை கங்கைத் துறவி. அது மெய்யே என்பதை தம் அனுபவத்தால் சங்கரானந்தரும் உணர்ந்தவர்தான்.

நிமிர்ந்தவர் பார்வையில், குணாநந்தர் பக்கத் தெருவில் விறுவிறுவென நடந்துவந்துகொண்டிருப்பது விழுந்தது.

சிறிதுநேரத்தில் சங்கரானந்தரின் எதிரே நின்று, 'தாமதமாகிவிட்டதா?' என்று வருத்தப்படாமலே கேட்டுக் கொண்டு, ஏதும் பேசாமல் புன்னகையுடன் சங்கரானந்தர் கைகாட்டிய இடத்தில் பளிங்குத் தளத்தில் அமர்ந்தார் குணாநந்தர். களைப்பாறக்கூடச் செய்யாமல், 'சொல்லுங்கள், ஸ்தவீர' என்றார் அவசரமாக.

சங்கரானந்தர் சாவகாசமாய் இருப்பின் விறைப்பை மாற்றி அமர்ந்தார். அவரிடத்தில் அவசரமில்லை; உணர்வுச் சலனங்கள் இல்லை. 'காலம் கடந்துபோனால் சில கேள்விகளுக்கான பதில்கள் தாமாயே உருவாகிவிடுகின்றன. சில கேள்விகள் தாமே பதில்களாய் மாறிவிடுகின்றன. முந்தாநாள் கேட்டது உண்மையில் கேள்விகூட அல்ல, வேண்டுகோள்தான். அதற்குமே உங்கள் பதிலை இப்போது நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் என்னிடத்தில் வேறு விசாரிப்புகள் உண்டு' என்றார் நிதானமாய்.

'கேளுங்கள்.'

'உங்களுடைய ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு என்னவாயிற்று என்று முதலில் கூறுங்களேன்?'

'பொலிஸ் அனுமதி கிடைக்கவில்லை. அவசர காலச்சட்டம் அமுலிலிருக்கிறதாம் இன்னும்.'

'ஓ...! உங்கள் முயற்சிகள் வீணாகிவிட்டன...!'

'அப்படியும் சொல்லமுடியாது. முயற்சியளவுக்கான பலன் கிடைத்திருக்கிறது. அமைதிப்படை முற்றாய் வெளியேறிவிடுவதற்கான காலக்கெடு விதிக்கப்படவிருக்கிறது. அதை விரைவுபடுத்துவதற்காகவே கொழும்பிலே ஒரு மாபெரும் ஊர்வலத்துக்கு முயற்சி செய்யப்போகிறேன். மகாசங்கங்களின் ஆதரவில் பிரமாண்டமானதாய் நடப்பதாயிருக்கும் அவ்வூர்வலம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரானந்தர் சோகமாய்ச் சிரித்தார். 'நீங்கள் திருந்தவே மாட்டீர்களா?' என்றார் அலுப்போடு.

'ஏன், நான் தவறு செய்கிறேனா, சுவாமி?'

'உங்களுக்கே தெரியவில்லையா?'

'தெரியவில்லையே, ஸ்தவீர. காலகாலமாய் தேரர்கள் பலரும் இந்த மாதிரித்தானே இயங்கியிருக்கிறார்கள். போர்க்குணம் பவுத்தத்துக்கு அவசியமென்றே நானும் சொல்லப்பட்டிருக்கிறேன். அதைப் பூரணமாய் நம்பி சிரமேற்கொண்டிருக்கிற பிக்கு நான்.'

'பேதங்கள் கலக்கக்கூடாது. பவுத்தமும் தீவிரமும் இருவேறு குண விஸ்தாரங்கள்.'

'இருத்தலுக்கான தத்துவம் அதை மறுக்கிறது, ஸ்தவீர. நெருப்பாய் இரு என்பதே போதகம். நெருப்பில் சகல பேதங்களும் எரிந்து தீய்ந்துவிடுகின்றன. நெருப்பே எஞ்சுகிறது. அதுவே குறி. சுதந்திர பாராளுமன்றம் தொடங்கிய காலத்தில் புத்த மடாலயங்கள் மார்க்ஸீயரைக் கூட தேர்தலில் ஆதரித்தன என்பதை அறிவீர்களல்லவா?'

'அறிவேன். 1949ல் அப்படி ஒரு அலை அடித்தது.'

'அதுவொன்றும் கம்யூனிஸத்தின் மீதோ, மார்க்ஸீயத்தின் மீதோவான புத்த மகாசங்கங்களின் சாய்வு அல்ல. நம் மத மார்க்கத்தை, நம் மொழியை, நம் இனத்தைக் காப்பதற்கான அரசியல் தந்திரோபாயமாகவே அது கைக்கொள்ளப்பட்டது. ஜேவிபியின் முதலாம் பிரளயம் என வரலாறு வர்ணிக்கும் 1972ம் ஆண்டுப் புரட்சியில், யதேச்சையான விருப்பார்வத்துடன் பெருவாரியான பிக்குகள் கலந்துகொண்டார்கள். அதுவும் அரசியல் காரணங்களுக்காய் அல்ல; எமது இருப்பை இன்னும் உறுதிப்படுத்தும் நடைமுறைத் தந்திரோபாயமாகவே அதுவும் மேற்கொள்ளப்பட்டது.'

'மிக அழகாகப் பேசி உண்மைகளை அழித்துவிடக் கூடாது, குணாநந்த. இந்தத் தீவில் இன்னும் சிங்கள இனம் பெரும்பான்மையாக இருக்கிறது. பெரும்பான்மைச் சிங்களவர் பின்பற்றும் மதமாக பவுத்தமே இருக்கிறது. இதில் எங்கிருந்து வந்தது நம் இருத்தலுக்கான அச்சுறுத்தல்?'

'அப்படியானதொரு அச்சுறுத்தல் எக்காலத்திலும் வந்துவிடக்கூடாது என்பதுதான் நமது அக்கறையாக இருக்கவேண்டும், சுவாமி. வேறு எந்தத் தேசத்திலும் மருந்துக்குக்கூட சிங்கள சமூகம் சிறிய அளவில்கூட இல்லையென்பது உங்களுக்குத் தெரியாததா? இல்லாதவகையில் இதை முழுக்க முழுக்க ஒரு சிங்களத் தீவாகவே காப்பாற்றி வைத்திருக்க வேண்டிய கடமை நமக்குத்தான் உண்டு. யோசித்துப் பாருங்கள், ஆயுதப்போராட்ட இயக்கமான புலிகள் அமைப்பு முழுக்க முழுக்க சைவர்களைக் கொண்ட இயக்கமாகும். அவர்களிலே கிறித்தவர்கள் மிகமிகச் சின்ன ஒரு வீதத்தினர். தமிழர்களில் பௌத்தர்கள் என்றுமே இருந்ததில்லையே, சுவாமி. அவர்கள் மீதான ஒரு நம்பகத் தன்மைக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நம்பகத்தன்மையென்பதே இன்னொருவரை நம்புவதன்மூலம் பிறப்பதுதான். அது இல்லையென்றால் எத்தனை ஆதாரங்களிருந்தும் பிரயோசனப்படாது. ஆனாலும்.... இந்த விஷயத்தில் தெளிவாக நாம் ஒன்றைக் குறித்துக்கொள்வது நல்லது. ஒருபோது.... தமிழ்ப் பவுத்தர்கள் இந்தத் தீவிலே இருந்திருக்கிறார்கள்தான்.'

'என்ன கதை இது!' வியந்தார் குணாநந்த தேரர்.

'கதையல்ல, சுவாமி. இது வரலாறு' என்றார் சங்கரானந்தர்.

ஏனோ சுவாமி என்கிற அந்த விளி குணாநந்த தேரரைச் சுட்டது. ஆனாலும் வெளிக்காட்டிக்கொள்ளாமல், 'நானறிந்ததில்லையே!' என்றார்.

'இந்த வரலாறும் எழுதப்பட்டதில்லை, பல நல்ல விஷயங்கள் போல்.'

'எழுதப்படாதது வரலாறில்லை.' குணாநந்தவின் குரல் ஆக்ரோஷமாய் எழுந்தது.

சங்கரானந்தர் சிரித்தார். அடக்கித்தான். வரலாறு பற்றிய அவர் போதம் பெரிது. 'நிகழ்வின் சாத்தியம்தான் வரலாறு. இரண்டு காலங்களை.... இரண்டு எல்லைகளை.... இரண்டு நிகழ்வுகளை வெகு அநாயாசமாய் இணைக்கக்கூடிய காரணங்களின் சாத்தியம் அது. இந்தச் சாத்தியத்தினூடாக வரலாற்றில் முன்னனுமானமே நிகழ்ந்திருக்கிறது. எழுதிய வரலாற்றின் ஓரங்களில் இதுபோல் மறைக்கப்பட்ட சம்பவங்களுக்கான ஆதாரத்துணுக்குகள், எச்சங்கள் ஒட்டியிருக்கின்றது உண்மையில் கண்டடையப் பட்டிருக்கிறது.'

'எக்காலகட்டத்தில் நிகழ்ந்தது அது?'

'கிறித்து சகாப்தம். புத்த காலத்தின் ஐந்நூறு வருஷங்கள் கழிந்து. தென்பகுதியில் கல்யாணி ஆறு தொடங்கி மாணிக்க கங்கை ஈறாகவும், வடபகுதியில் நயினாதீவிலும் வல்லிபுரப் பகுதியிலும் தமிழர்கள் புத்தசமயிகளாக இருந்தார்கள். ஏறக்குறைய அன்றைய தமிழ்நாட்டு நிலைமையை இலங்கை பிரதிபலித்தது. ஆனால் பிற்காலத்தில் அனுராதபுரத்திலிருந்து தெற்கு நோக்கிய நம் நகர்வு வடபகுதிப் புத்த சமயத் தமிழர்களைத் தனிமைப்படுத்திற்று. மேற்கொண்டு எமது அரசியல் நடப்புகள் தமிழ்ப் பவுத்தர்களை இழக்கச்செய்தன.'

'தெற்கிலுள்ள தமிழ்ப் பவுத்தர்களுக்கு என்ன ஆனது?'

'அவர்கள் சிங்கள பவுத்தர்களாக மாறியது நடந்தது. அதனால்தான் இந்துசமய சடங்காசாரங்கள் நம்பிக்கைகள் புத்தசமயத்திலே வந்து கலந்தன மிகுதியாகவும்.'

'அப்படியானால் அந்தத் தவறையும் தமிழர்கள் செய்தவர்களாகிறார்கள்!'

'அது அவர்கள் தவறல்ல.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பின்னே...?'

'நமது தவறுதான். அனாத்மவாதமென்று சொல்லிக் கொண்டோம். வேதங்களை மறுதலித்தோம். ஆனாலும் பிரம்மமென்ற அம்சத்தின் அடையாளமாய் நின்றிருந்த விஷ்ணுவை புத்தரின் அவதாரமென்று சொல்லிக்கொண்டோம். இந்த முரண் ஏன் வந்தது? நம் நிலைப்பாட்டின் தளும்பலால்தானே? மதம் பூடகங்களினதும் தெய்வீகங்களினதும் எல்லைக்கே விரட்டப்பட்டது. மகானுபாவராய் இருந்திருக்கவேண்டிய கௌதமரையே உலகோத்தாரணராய் ஆக்கினோம். அதனால் விஷ்ணுபுரங்கள் இங்கே வெகுத்தன. வடக்கேயும் தெற்கேயும் மேற்கேயும் பிரமாண்டமான விஷ்ணு கோயில்கள் நிர்மாணம் பெற்றன. நாம் தமிழர்களைச் சகித்துப் போக முடியாதவராய் இருக்கிறோம். ஆனால் இந்துக் கடவுளர் தத்துவங்களை நம்மோடு இணைத்துக்கொண்டோம். இந்தத் தளும்பலால், ஊடாட்டத்தால் நேர்ந்த வரலாற்று மாற்றம்தான் அது. அதற்கு நாமே காரணம். வேறு யாருமல்லர்.'

குணாநந்த தேரர் ஸ்தம்பிதமடைந்தவராய்க் கேட்டுக் கொண்டிருந்தார். மௌனம் நிலைகுத்தி நின்றிருந்தது அவரில்.

சிறிதுநேரமாயிற்று அவர் பிரக்ஞை மீள.

ஒரு தோல்வியிற்போல் துவண்டிருந்தாலும், பிரக்ஞை மீண்டு சங்கரானந்தரை ஏறிட்டு நோக்கியபோது அவர் மனத்துள்ளிருந்த தீச் சுவாலைகள் கண்களினூடு சுடர்விரித்துக்கொண்டிருந்தன. அவர் சிரிக்க முயன்றார். முடியாது போக விட்டுவிட்டார். ஞானத்தின் முன் நிமிர்ந்து நிற்க கடைசி முயற்சியொன்றை மேற்கொண்டார்: 'நீங்கள் விபரகாரராய் ஆகியிருக்கிறீர்கள்தான். ஆனால் விவகாரங்களை மிகுந்த பிரச்சினைக்குரியவற்றைத் தீர்க்க அது போதுமானதல்ல என்பதே தெளிவாகியிருக்கிறது. விஷ்ணு அவதாரமான புத்தர் பற்றிய கற்பனை அவசியமான அரசியல் காரணம்பற்றியது, சுவாமி. தேரவாதம் மதத்தில் சீலத்தையும் போதனைகளையும் கட்டிறுக்கத்துக்கு வற்புறுத்திய அதே வேளையில், சாந்தியும் அஹிம்சையும் பிரதானப்படுத்தப்பட்ட பௌத்த கிளையாகிப்போனது. அது வெகுஜன செல்வாக்குப் பெறப்பெற சிங்கள இனத்தின்மீது ஒரு மந்தமே வந்து கவிந்துவிட்டது. அந்த மந்த குணத்தைப் போக்கி அவர்களைப் போர்க்குணமுள்ள ஒரு இனமாக மாற்றுகிற ஒரு எத்தனத்தின் விளைச்சல்தான் விஷ்ணு கதை. விஷ்ணு அவதாரி. ஒன்பது அவதாரங்களை எடுத்தவர். மீதி ஒரு அவதாரத்துக்காய்க் காத்திருப்பவர். அந்த ஒன்பது அவதாரங்களும் பெரும்பாலும் அரசியல் காரணம் பற்றியவையே. ராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், நரசிம்மாவதாரம், வராகவவதாரம் யாவுமே மூலத்தில் ருத்திரம் நிறைந்தவை; மூர்க்கமும் குயுக்தித்தனமும் உடையவை; அரச ஸ்தாபகங்கள் அவற்றில் நிகழ்ந்துள்ளன. அதனால்தான் விஷ்ணு வணக்கம் பவுத்தத்தில் புகுத்தப்பட்டது. வடக்கே வல்லிபுரத்தில் மகா கலைச் செழுமையுள்ள பிரமாண்டமான விஷ்ணு கோவில் இருந்ததை அகழ்வாராய்ச்சி கூறுகிறது. அது, தமிழ்ப் பவுத்தர்கள் இருந்ததற்கான ஆதாரமென்று நீங்கள் கூறுகிற கருத்துத்தான் மாறுபாடானது. அதன் உண்மையான காரணம் என்ன தெரியுமா, சுவாமி? அப்போது அங்கே சிங்கள பவுத்தர்கள் இருந்தார்கள் என்பதே அது.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அது உண்மையல்ல.'

'இருக்கட்டுமேன். ஆனால் அதைத்தான் இனிமேல் நான் சொல்லப்போகிறேன். இதையே மக்களிடமும் போதமாக்கிச் சொல்லுவேன்.'

'உங்கள் பேச்சு இனி எடுபடாது. அச்சொட்டான ஆய்வு முடிவுகளைப் பெறுவதற்கான முறைகளும், அதை வெகு விரைவிலேயே வலிமை வாய்ந்த ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டுவிடும் வாய்ப்பும் இப்போது அதிகம் என்பதை மறந்துவிடாதீர்கள்.'

'அதை நீங்களே சொல்லக்கூடாது.'

'உங்கள் வழி பாபமானது.'

'தெற்கே கடல்; வடக்கே தமிழர் ராஜ்யம்; எப்படி நான் நீட்டி நிமிர்ந்து படுக்கமுடியுமென்று கேட்டானாம் துட்ட காமினி. அதையே சிங்கள மக்களிடத்தில் ஊர் ஊராய்ச் சென்று கேட்கப்போகிறேன்.'

'துவேஷம் வளர்ப்பது காலகாலத் துயர் தரும்.'

'மகாவம்சத்தின் இருபத்தைந்தாம் அதிகாரம் என்ன சொல்கிறது? பவுத்த மதத்தில் நம்பிக்கையில்லாதவர்களையும், துஷ்டர்களையும் கொல்வது பாபமில்லை என்கிறது, சுவாமி.'

'மதத்தின் அரசியல்தான் நாட்டில் இத்தனை காலம் விளைந்த அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் காரணம். இதனால் வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்ல அழிவுகள் நிகழ்வது. நாடு தழுவி நடக்கிறது அது. சிங்கள மக்களுமே பாதிக்கப்படுகிறார்கள், குணாநந்த. அவர்கள் அரசியல் சிந்தை இல்லாதவர்கள். ஏன், பெரும்பாலானவர்களுக்கு பவுத்த மத சிந்தனைகூட இல்லை. வெறுமனே உணர்வுகளுள்ள மனிதர்களாயே இருக்கிறார்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா? கரையோரச் சிங்கள கிராமமொன்றில் பிள்ளையார் கோவில் ஒன்று இருக்கிறதாம். தமிழ்ப் பூசகர் பூஜை வைக்கிறாராம். அந்தக் கோவிலில் வந்து வணங்கிக் கொண்டுதான் அந்தக் கிராமத்தைச் சூழ வசிக்கும் சிங்கள இளைஞர்கள் ராணுவத்திலே போய்ச் சேர்கிறார்களாம். காத்தலுக்கு வல்லமையான தெய்வமென்று சிங்களவர் நம்பிக்கை கொண்டிருப்பது, சாதாரண மக்களின் மதபேதம் கடந்த மனநிலைக்குச் சான்றாகிறது. ஆதாயம் காண்பவர்களே துவேஷங்களைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். இதை... நானுமேதான் மக்கள் மத்திக்கு எடுத்துச் செல்லப் போகிறேன். கிராமம் கிராமமாய்ச் செல்வேன். பாதசாரியாய்ச் செல்வேன். மதத்தின் மூலம் இனி யாரும் அரசியல் நடத்த முடியாது. நடத்தக் கூடாது. இனி நான் உங்களோடு பேசவேண்டியது எதுவுமில்லை. மக்களிடமே நான் பேசிக்கொள்கிறேன். நீங்கள் போவதற்கு அவசரப்பட்டீர்களல்லவா?'

இப்போது சிரித்தது குணாநந்த.

சங்கரானந்தர் கோபப்பட்டுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணாநந்த எழுந்தார்.

படியிறங்கி நடந்து தெருவில் ஏறினார்.

சங்கரானந்தர் நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

அவர்கள் இனி சந்திக்கப்போவதில்லைத்தான். ஆனால் வெவ்வேறு துருவங்களில் அதிர்வு தரும் கைங்கர்யங்களை நிகழ்த்தப் போகிறார்கள்.

மகாயானி யுத்தத்துக்குப் போய்விட்டான்.

அவர் தேரவாதி. இன்னும் அமைதியும் சாந்தியும் நினைத்துக் கொண்டு.

அன்றிலிருந்து மேலும் சில ஆண்டுகள் அவர் அலைச்சலோடும், நல்ல முடிவுகள் வெளித் தெரியாத அவதியோடும் கழித்தார்.

ஆனால் இன்னும்தான்...

இருள் இறுகியிருந்தது.

அலை சலசலத்தது.

சேவலொன்று ஊர்ப்புறத்தில் கூவியது.

சிறிதுநேரத்தில் விடியலின் கீறு பார்வை விளிம்பில் பட்டது.

சங்கரானந்தர் எழுந்தார்.

## 48

ஏறக்குறைய மூன்றாண்டுகளுக்கு முன் குணாநந்த தேரருடன் ஏற்பட்ட விவாதிப்பு உண்மையில் வெற்றியா தோல்வியா என்று வெகுகாலம்வரைக்கும் அவரால் தீர்மானிக்கப்படமுடியாமலே இருந்தது. கருத்தில் வென்று உணர்வில் தோற்றதாக அதைக் கொள்ளலாமென்று கொஞ்சகாலம் யோசித்துக்கொண்டிருந்தார். பின்னால்.... அதைத் தோல்வியென்று மொத்தமாகவும் எடுத்தாலென்ன என யோசித்ததும் உண்டு. அதன்மூலம் உணர்ச்சிகளை இன்னும் முற்றுமுழுதாய்க் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத தன் பலஹீனங்களைக் களைவதற்கான ஒரு அவசியமாய்க் கொள்ளமுடியலாம் என்பது அவர் எண்ணம். அது சிந்தனையிலிருந்தபோதே புறவுலகில் பெரும் பெரும் மாற்றங்கள் நிகழத் துவங்கியிருந்தன. குணாநந்த போன்றோர் உக்கிரமாய் எதிர்த்துக்கொண்டிருந்த இந்திய அமைதி காப்புப் படை திரும்பச் சென்றுவிட்டிருந்தது. யாழ் நகர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்திருந்தது. யுத்த நிறுத்தம் அமுலிலிருந்தது. யுத்த நிறுத்த மீறலைக் கண்காணிக்க கல்விமான்கள் சமூகநலவாதிகள் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. இருதரப்பு சமாதான பேச்சு வார்த்தைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வாங்க ஏற்பாடுகளின் வெற்றியாக நிலைமை கொள்ளப்படக்கூடியதாகவிருந்தது. ஆனாலும் அந்த நிலைமையின் தாற்காலிகத்தனத்தை சங்கரானந்த தேரர் அறிந்தே இருந்தார். அந்த மாயமான் வலையைக் கிழித்துக்கொண்டு ஒருநாள் பூகம்பம் வெடிக்குமென்பது அவருக்குத் தெரியும். அதற்கிடையில் ஜனங்களின் அரசியல் சமூக விழிப்புணர்வுக்கான மகாபயணங்களை அவர் மேற்கொண்டார். அப்போதுதான் தனியொருவனாய் தான் ஒதுங்கிப்போனதையும், பெருந்திரளாய் குணாநந்த தேரர் போன்றோர் திரண்டிருப்பதையும் அவரால் உணர முடிந்தது. நாடு தழுவிய நற்பிரச்சாரத்தை தன் ஒற்றைக் குரலால் நிறைவேற்றிவிட முடியாதென்பது அவருக்குத் தெரிந்தது. திட்டமே பலஹீனப்பட்டிருப்பதை அவர் உணர்ந்தார். அந்த நிலைமையில்தான் மிக்க ஆதர்ஷம் கொண்டிருந்த நாகதீபம் நோக்கி அவர் ஓடிவந்தது.

ஒரு வாரமாயிற்று.... இரண்டு வாரங்களாயின.... தீவெங்கும் அலைந்ததும் நினைவுகளைக் கிண்டிக் கிண்டி சம்பவங்களின் மறு தரிசிப்பைச் செய்ததும்தவிர, நம்பிக்கை தரக்கூடிய வேறெதையும் அந்த நாட்களில் அவர் சாதித்துவிடவில்லை. அந்த நினைப்பு அவர் மனத்தில் கிடந்த துக்கத்தை வெகுப்பித்தது. எண்ண எண்ண அந்தத் துக்கம் இன்னும் ஆழ்ந்துகொண்டும், இன்னும் நீண்டுகொண்டும் போவதாகத் தோன்றிற்று.

அன்று நிம்மதியற்ற மனத்தவராய் அவர் நாகபூஷணியம்மன் புறவீதி மணல்வெளியில் நின்றுகொண்டிருந்தார்.

வெளி வெறுமைதட்டிக் கிடந்தது.

காற்றும் அவர் மனத்தைப் பிரதிபலித்தது.

எதிர்பாராதவிதமாக செல்லத்தம்புவை அவர் சந்தித்தது அங்கேதான்.

சில வருஷங்களுக்கு முன் குண்டடிப்பட்டதில் கை சற்று ஊனமாகிப்போயிருந்தது அவருக்கு. பாதிப்புகளினால் ஏற்படுகிற ஒருவித ஆத்திரத்தை அவர் கொண்டிருப்பது அவரோடு பேசத் துவங்கிய சிறிதுநேரத்திலேயே தேரருக்குத் தெரிந்துவிட்டது.

ஆனாலும் பேசத் துவங்கிய பிறகு இட்டல் இடைஞ்சல்களைச் சொல்லி மனஆறுதல் தேடுவது எவரினதும் இயல்புதானே? தன் மனக்குறையை வெளிப்படையாகவே சொல்லித் தீர்த்துக்கொண்டார் தேரர்.

விளக்கமாகக் கேட்டுக்கொண்டு செல்லத்தம்பு சொன்னார் : 'உடம்பால தீங்கு செய்யிறவையைவிட, மனத்தால செய்யிறவைதான் சரியான ஆபத்தான ஆக்கள். ஒரு நல்லது நடக்குமெண்டால் ஒன்பது அந்தமாதிரி ஆக்களை நான் கொல்லத்தயார், சுவாமி. சுவாமி கோவிக்கக்கூடாது, இப்பிடிச்சொல்லுறானேயெண்டு. சொல்லுங்கோ.... போட்டிடலாம். வவுனியாவிலயே அதுக்கு ஆக்கள் இருக்கினம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்தம்புவினது பாமரத்தனமான பேச்சு.

ஆனாலும் ஆள் காரியகாரன்.

அதனால்தான் அது அறுதியான ஒரு செய்தியைக் கொண்டிருந்தது. நல்லதுக்காக அல்லதை அழிப்பது பாபமில்லை!

தேரருக்கும் இப்போதே சம்மதித்துவிடலாம் போலத்தான் இருந்தது. ஆனாலும் பதில் சொல்லாமலே வந்துவிட்டார்.

சிறிது தூரம் வந்து திரும்பிப்பார்த்தபோது சிரித்துக்கொண்டு செல்லத்தம்பு போனவாறிருந்தார்.

வெகுநேரம் சிந்தனையில் கிடந்து உழன்றார் சுவாமி அன்று. அடுத்த நாளிலும் அவருக்கு அதே சிந்தனைதான். நினைக்க நினைக்க தன்மீதே அவருக்கு வெறுப்பு வந்தது. ஒரு நிமிஷத்தில் எப்படியான ஒரு அழிவுக்குள் விழப் பார்த்தார்!

அப்போது அவருக்கு ஒரு ஜாதகக் கதை நினைவுக்கு வந்தது.

மாய மந்திர வித்தைகள் தெரிந்த ஒரு அந்தணருக்கு அந்த ஜென்மாவில் போதிசத்துவர் சீடராக இருந்தார்.

விண்வெளியில் குறிப்பிட்ட கிரகங்கள் சிலவற்றின் உச்சபட்ச நெருங்குகை நேர்கோட்டில் வரும் சமயத்தில் ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை உச்சாடனம் பண்ணுவதன்மூலம் வெள்ளி, தங்கம், முத்து, பவளம், கோமேதகம், கெம்பு, வைரம் முதலாய ஏழு வகை ரத்தினங்களையும் வானத்திலிருந்து மழையாக வர்ஷிக்கச் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவராயிருந்தார் அந்த அந்தணர்.

அத்தகைய அந்தணரும் சீடனும் அடுத்த தேசமான சேதிக்குச் செல்லும் வழியில் ஆள்விடுப்பிகள் என்றழைக்கப்பட்ட கள்வர் கூட்டத்தால் வழிமறிக்கப்படுகிறார்கள். வழக்கம்போல் உயர்ந்த ஸ்தானத்திலுள்ள குரு பணயமாக வைத்துக்கொள்ளப்பட்டு விடுதலைப் பணம் கொண்டுவருவதற்காய் சீடர் விடுவிக்கப்படுகிறார். குருவைக் கட்டி வைத்து கள்வர் சிலர் காவல் இருக்கிறார்கள்.

அன்றைய இரவில் கீழைவானில் பூரண நிலா உதயமாகிக் கொண்டிருந்தது. வானத்தை அண்ணாந்து பார்த்த குரு திகைத்துப் போகிறார். மந்திரத்தை உச்சாடனம் பண்ணி ரத்தின மழையை வருவிப்பதற்கான கிரகங்களின் சேர்க்கை நிகழ் காலமாயிருந்தது அது. அவ் மனவெழுச்சியில், 'நான் விடுதலைப் பணம் தேடிவருவேன். நீங்களாகவே ரத்தின மழையை வருவித்துக் காட்டிவிடாதீர்கள். அதனால் உங்கள் உயிருக்கே ஆபத்து நேரலாம்' என்று சீடரான போதிசத்துவர் சொல்லிச்சென்றதையும் மறந்தார். 'ரத்தின மழை வருவித்துத் தருகிறேன், என்னை விட்டுவிடுவதானால்' என்று சொல்லி விடுகிறார் கள்வர்களிடம்.

கள்வர்கள் சம்மதிக்க மந்திரத்தை உச்சாடனம் பண்ணி ரத்தின மழை பெய்யச்செய்து குரு விடுதலை பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தின மூட்டைகளோடு கள்வர் படை வந்துகொண்டிருக்கும் வேளையில் வேறொரு ஐந்நூற்றுவரைக் கொண்ட கள்வர் கோஷ்டியொன்று வழிமறிக்கிறது. 'உங்களுக்கு ரத்தினம்தானே வேண்டும்; ரத்தின மழையையே வருவித்துத் தரக்கூடிய அந்தணர் பின்னால் வருகிறார்; சென்று அவரிடம் கேளுங்கள்' என்றுவிட்டு மேலே நடக்கிறார்கள்.

ரத்தின மழை வருவித்துத் தரும்படி கேட்கும் புதிய கள்வர் குழுவுக்கு அந்தணரால் ரத்தின மழையை வரவழைக்க முடியாது போய்விடுகிறது, கிரகங்களின் சேர்க்கைக் காலம் கடந்து போயிருந்ததினால். ஆத்திரமடைந்த கள்வர்கள் அந்தணரை அக்கணமே வெட்டிப் போட்டுவிட்டு ரத்தின மூட்டைகளோடு சென்றுகொண்டிருந்த கள்வர் படையோடு பொருதி அவர்களைக் கொன்று ரத்தினங்களை அபகரிக்கிறார்கள். பின்னால் அதே கள்வர் கோஷ்டிக்குள்ளேயே சண்டை நடந்து இருவர் மட்டுமே எஞ்சி மீதி அனைவரும் இறந்து போகிறார்கள்.

அந்த இருவரில் ஒருவன் வாளோடு ரத்தின மூட்டைகளுக்குக் காவலிருக்க, மற்றவன் உணவு தேடிவரப் புறப்படுகிறான். திரவியம் அனைத்தையும் தாம் தாமும் தனியே அடைய எண்ணிய கள்வர்கள் இருவருமே இறுதியில் மரணமாகிறார்கள். உணவு தேடிவந்தவனை காவலிருந்தவன் சடுதியில் வெட்டிக் கொல்கிறான்; காவலிருந்தவனைக் கொல்ல மற்றவன் உணவில் விஷம் வைத்துக் கொண்டு வந்திருந்தானாகையால் அந்த உணவை உண்டவனும் மரணித்துப் போகிறான். இவ்வாறாக ஆசை காரணமாய் ஆயிரம் கள்வர்களும் மாண்டொழிகின்றனர்.

விடுதலைப் பணத்துடன் திரும்பிவந்த போதிசத்துவர் பிணங்களையும் ரத்தின மூட்டைகளையும் பார்த்து நடந்தவைகளை ஊகித்தறிந்துகொண்டு சொன்னார் : 'தவறான முயற்சிகள் அழிவிற்கே வழிவகுக்கும் தனதும் பிறரதும்.'

தனக்கே அது சொல்லப்பட்டதுபோல் ஒரு திடுக்காட்டத்தோடு நினைத்துமுடித்தார் சங்கரானந்தார்.

தவறான முயற்சிகள் அழிவிற்கே வழிவகுக்கும்.... ஆம், அதை குணாநந்தர் செய்யலாம்; அவரே செய்யலாமா? அவர் சத்திய ஆக்கிரஹிப்புச் செய்பவர்; சத்தய நாசம் பண்ணமுடியாது. ஒன்பது நல்லதுக்களுக்காகக் கூட ஒரு கெட்டதை அவர் செய்துவிடக்கூடாது.

அன்று மாலை சுவரில் பதிக்கப்பெற்றிருந்த சாளரத் துவாரங்களினூடு வெளியேயுள்ள புற்றரையைப் பார்த்தபடி சோம்பலோடு அமர்ந்திருந்தார் சங்கரானந்தர். தரையில் கோரைப் புற்கள் மண்டி வளர்ந்திருந்தன. புற்றலைகள் காற்றில் அசைந்தாடுவது தெரிந்தது. தாள் தாளான கோரையின் பசிய கீறுகள் சரிந்து மண்ணை முத்தமிட முயல்வதான கற்பிதம் எழுந்தது அவர் மனத்தில். கோரையும் அறுகுபோல்தான், இலகுவில் அழிக்கப்பட முடியாதது. மண்ணுள் ஆயிரம் கோரைகளோடு வேர்த்தொடுப்பினை கொண்டிருக்கும். வேர்களில் கிழங்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்ப்பித்து புதிய புதிய கோரைகளை மண்ணில் ஈரப் பதம் கண்டதும் முளைப்பிக்கும். கிழங்கு, எந்தக் கோரையின் கிழங்கு எனத் தெரிய முடியாத படிக்கு வேர்கள் குமைந்து பிணைந்திருக்கும் அவற்றுக்கு. ஏதோ ஒருவகையில் தன் பலஹீனத்தை அவை காட்டியதாக உணர்ந்தார் சங்கரானந்தர். அவரது பலஹீனமே அவர் தனியன் என்பதுதான். எதிரிகள் கோரைக் கணக்கில் நிறுவன மயப்பட்டிருந்தனர்.

முன்னிரவாகிற்று. அவர் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. வானத்தில் வட்டநிலா அசையாது நின்றிருந்தது.

தன் பலஹீனத்தாலேயே குணாநந்த தேரரை ஹிம்சை வழியில் அழித்துவிடுவதற்கான சபலத்தில் சில கணங்களேனும் அவர் மனம் வீழ்ந்ததோ? அவர் பலமடைய வேண்டும்.

சத்தியத்தின் ஆக்கிரஹிப்பே அதற்கான வழி.

சங்கரானந்தர் மேலே நோக்கியபடி சலனமற்றிருந்தார். சூழ்நிலை அவருக்கு மறந்திருந்தது. காலமும் அவர் அழிந்தார். மகாமேக நந்தவனத்தில் புத்த போதனை கேட்க சிஷ்யர்களோடு சிஷ்யனாக பவ்யமாய் அமர்ந்திருப்பதான ஒரு பாவனை. எதிரே ஞாயிற்றுப் பிரகாசம். பிரகாசத்திலிருந்து போதம் பிறந்தது. புத்த பகவானின் கருணைமயமான குரல் செவிப்பறையின் அதிர்வின்றியே உள்ளே நுழைந்தது. 'சத்தியத்தின் கண்டடைவு அதன் பிரயோகத்திலேயே பூரணப்படுகிறது!' அது அவரின் தவறான நினைவுக்கான மருந்தாகவே சொல்லப்பட்டதா? ஆம். ஆனால் அது ஞானமும்தான். அவரை பிரயோக சத்தியகாரனாக்கும் ஞானம். சிறிதுநேரத்தில் திடுக்கிட்டு பிரமை மீள... மேலே வெண் மேகமொன்று விலகிப் போய்க்கொண்டிருந்தது. கடல் மேனி சலனம் காட்டியது. காலம் பிரக்ஞையானது. அவர் கண்டது கனவா, தோற்றமா? மேலே நகர்வது கௌதம புத்தர் கால மேகமில்லையா? ஆனாலும்... உள்ளே 'சத்தியத்தின் கண்டடைவு அதன் பிரயோகத்திலேயே பூரணப்படுகிறது' என்ற வார்த்தைகளின் அதிர்வு இன்னும் பசுமையாய் இருந்தது.

திடீரென்று அவர் மனப் பிரகாசமடைந்தார். 'நீ தெளிந்திருந்தால் ஒவ்வொரு நிழலிலும் போதிமரம் காணலா'ம் என்ற குருவின் வாக்கும் அதேபோதில் ஞாபகமாயிற்று. நெடுங்காலத் தேடலின் பின் அக்கண்டடைவு நிகழ்ந்திருந்தது. மனத் தளை விடுப்பட்டாயிற்று. மாலையும் இரவும் அதிகாலையுமாய் ஏகாந்தப் பெருவெளியில் மிதப்பதுபோல் தீவைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

அவரளவில் அது ஒரு ஞானோதயம்.

மணிபல்லவமான அந்நாகதீபத்தில் இன்னும் மணிமேகலா தெய்வம் குடியிருக்கிறதுதான் என நினைக்க அவர் உடம்பெல்லாம் மயிர்க்கூச்சம்.

ஞானோதயத்தின் மூன்றாம் நாள் அங்கிருந்து புறப்பட்டார் சங்கரானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.



வைகாசி விசாகத்துக்கு சரியான மூன்று வாரங்கள் இருந்தன. கண்டி பெரஹரா விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும், கொண்டாட்ட ஆயத்தங்களும் முந்திய வாரத்திலேயே தொடங்கிவிட்டிருந்தன. கண்டியிலுள்ள தலதா மாளிகையில்தான் புனித புத்த தந்தம் வைத்து வணங்கப்பட்டு வந்தது. அதன் பாதுகாப்பு சாதாரண காலங்களிலேயே இறுக்கமானது. விழாக் காலமெனில் அது இருமடங்கு மும்மடங்கு ஆகிவிடும். வாகனப் போக்குவரத்து நிறைந்த வீதிகளும், மக்கள் நடமாட்டம் வெகுத்த கடைத்தெருக்களும் சூழ இருப்பதால் அதன் பாதுகாப்பு மிகுந்த சாதுர்யத்தையும் சிரமத்தையும் கோரி நின்றது.

இவை எதுவுமே இல்லாமல், மக்கள் திரளின் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கான பொலிஸ் உதவியோடுமட்டும் கண்டி பெரஹரா விழா விமரிசையாக நடந்த காலங்கள் இருந்தன. யானையின் மீதேற்றிய தந்த ஊர்வலத்தின் வரிசையையும், கண்டி நடனத்தையும் கண்டு களிக்க இனமத வேறுபாடற்று தேசமெங்குமிருந்து மக்கள் கூடிய காலத்தை சரித்திரம் இன்னும் மறந்துவிடவில்லை. அப்போது இலங்கை முழுதுமுள்ள பள்ளிகள் தோறும் 'நமோ நமோ மாதா! நம் சிறீலங்கா!' என்ற தேசியப் பாடல் ஒலித்தது. 'தாயே, எங்கள் இலங்கை மாதாவே, உனக்கு வணக்கம்! ஞானத்தில் புகழ் அளாவியவளும், வயல்கள் தீங்கனிச் சோலைகள் புஷ்பவனங்கள் நிறைந்த திருவிடத்தவளுமான இலங்கை மாதாவே! உன்னை வணங்குகிறோம்' என்ற அர்த்தம் பொதிந்தது அந்தத் தேசியப் பாடல். அப்போதும் இனத் துவேஷமும் அதன் காரணமான கொடுமையிழைத்தல்களும் இருந்தன. ஜனநாயகம் வளர வளர அவை மறையும், பாரபட்சம் நீதியின் முன் நிமிரும் என்று நம்பப்பட்டது. சட்டத்தின் முன் அனைத்துக் குடிமக்களும் சமமென்ற காலம் உறுதியாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது. அனைத்து நம்பிக்கைகளும் உத்தரவாதங்களும் எதிர்பார்ப்புக்களும் சமாதியாக சமர்க்காலம் தோன்றியது. அது மேலது கீழாய், கீழது மேலாய்ச் சமூக அரசியல் நிலைமைகளை தாறுமாறாய்ப் புரட்டிப் போட்டது.

அண்மையில் நடந்த கொலைகளால் தேசம் அதிர்ந்து போயிருந்தது.

முதல் அதிர்வு: பலாலி ராணுவ விமானத் தளத்திலிருந்து பிரதம ராணுவத் தளபதியுடனும், வேறு நான்கு உயர் அதிகாரிகளுடனும் புறப்பட்ட ஹெலிகொப்டர் ஓடுதளத்திலேயே வெடித்துச் சிதறுகிறது.

இரண்டாம் அதிர்வு: நாட்டின் பாதுகாப்பு அமைச்சரே வெடிகுண்டு வைத்துக் கொல்லப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை கட்சி உள் முரண்களின் விளைவென்று கருதப்பட்டன. ஆனாலும் கட்சித் தலைவர்கள், உயர் அதிகாரிகள், படைத் தளபதிகளைச் சுற்றி ஒரு மாயக் கொலைக் கரம் நகரத் தொடங்கியிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

ஆளும் கட்சியின் அந்த அழிநிலையை வெகுவாகக் கொண்டாடிய ஒரு தீவிரவாத நோக்குக் குழு, அரசியல் காய் நகர்வுகளை வெகு உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தது. வடக்கும் கிழக்கும் பறிபோய்விட்டதான எண்ணம் அதன் தீவிரத்தின் மூலமாயிருந்தது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான பூர்வாங்க முயற்சிகள் தொடங்குவதும், போர் நிறுத்தம் ஏற்படுவதும், அதன் மீறுகையில் முயற்சிகள் குலைவதும், பின் நடுநிலையாளர் சிலரின் கூட்டு முயற்சியால் மறுபடி தொடர்வதுமாய்ச் சுழன்றுகொண்டிருந்தன ஒரு வட்டத்தில். அதைக் கூட விரும்பாத இனமத மொழிவாரியான தீவிர சக்திகள் இருந்தன என்பதே அக்காலத்தின் மோசமான நிலைக்கான முதல் அடையாளம். அவர்கள் முனைப்பாய்ச் செயற்பட தகுந்த காலத்துக்காய்க் காத்திருந்தார்கள்.

பெரஹரா விழாவுக்காய் கண்டி புறப்படவிருந்த ஒரு கும்பல் அந்த ராத்திரிப்போதில் களனி கங்கைக் கரையின் பரந்த புல்வெளியில் அமர்ந்து அரசியலும் வம்பும் பேசிக்கொண்டிருந்தது. அரசியல் பேச்சு சிலவேளைகளில் வெறித்தனத்துடன் விவாத நிலைக்கும் சென்றது. அறிவார்த்தமில்லாத வெறும் முரட்டுத்தனமான விவாதமே அது என்பது விவாதத்தில் ஈடுபட்டிருந்த குரல்களின் அடர்த்தி - சப்தம் - தெரிவித்துக்கொண்டிருந்தது. பின் தணிந்து சகல மனித மதிப்பீடுகளையும் கேலியும் கிண்டலும் செய்கிற அளவுக்கு தாழ்ந்து வம்புப் பேச்சாய்த் தொடர்ந்தது.

அந்த ஐவரைக் கொண்ட சிறுகுழுவில் மூவர் பிக்குகளென்பது அவ்வம்புப் பேச்சு இருந்த தரத்தினால் பேரதிசயம் பிறப்பிக்கச் செய்தது.

அந்த ஐந்து பேரும் குணாநந்த தேரரின் வரவுக்காக அங்கே காத்திருந்தனர். வெகுநேரமாகியிருந்தது. ஆனாலும் காத்திருப்பின் களைப்பு அவர்களிடத்தில் காணப்படவில்லை.

அவர்களின் பேச்சைக் கேட்டுத்தான் களனி கங்கை பொங்கியது; கரை மீற முடியாத காரணத்தால் பாய்ந்தடித்து நுரைபொங்க கடுகதியில் ஓடிக்கொண்டிருந்தது; கரை நெடுக நின்ற மஞ்சள் பச்சை நிற மூங்கில் கூட்டங்கள் தலையசைத்து நடுங்கின.

கரையெங்கும் அமானுஷ்யம்.

நதியின் இரைச்சல் தவிர வேறு சப்தம் அற்றிருந்தது.

மேலே சில நட்சத்திரங்கள்.

அச்சமேதுமற்றவராய் ஒரு முது பிக்கு அட்டகாசமாய்ச் சிரித்தார். அவரது பற்கள் கறுத்திருந்தன. சில கழன்றும், சில உடைந்தும் காணப்பட்டன. மிக்க அருவருப்பாய் இருந்தது அவரின் சிரிப்பு. களனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை தீரத்தில் அவ்வாறான பேய்ச் சிரிப்புகள் அவ்வப்போது நிசப்தம் கிழித்தெழுவதை சூழல் நன்கறியும். அண்மைக் காலங்களில் கொழும்பிலிருந்து இழுத்துவரப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் அந்த கங்கைக் கரைப் புல்வெளியில்தான் கற்பழித்துக் கொலைசெய்யப்பட்டார்கள். அவ்வப்போது முகம் சிதைக்கப்பட்ட ஆண் சடலங்கள் கங்கையில் மிதக்கும். கரையின் நாணற் புதர்களுள், சம்புப் புதர்களுள், மூங்கில் மர வேர்களுள் ஒதுங்கிக் கிடந்து அழுகி மணப்பதில் களனி கங்கை பெயர் பெற்றது.

ஆற்றின் இருகரைகளிலும் ஆங்காங்கே வறிய சிங்களவர்களின் பலகை வீடுகள் இருந்தன. அவை ஆழ்ந்த உறக்கத்தில், அல்லது அவ்வாறான பாவனையில் அமுழ்ந்திக் கிடக்கும். சகல கொடுமைகளுக்கும் கேவலங்களுக்கும் சட்ட விரோத காரியங்களுக்கும் பேர் பெற்ற கரை அது. அங்கு அச்சம்தான் அஞ்சும். அதுதான் களனி. அத்தகு ஆற்றின் கரையிலிருந்துதான் முதுபிக்கு சிரித்தது.

சிரித்துவிட்டு சொன்னார்: "அரசாங்கம் வெகு கச்சிதமாய்த்தான் நடக்கிறது. உனக்கேன் அதுபற்றிய சந்தேகம் வந்தது, சில்வா? எங்கேயும் தந்திரி பிழைத்துக் கொள்வான். அரசியலிலும்தான்."

"மெய். தந்திரமே ஆதாரம் அரசியலுக்கும் எதற்கும்" என்றார் பக்கத்திலிருந்த இன்னொரு பிக்கு.

முதல் பிக்கு மேலே சொன்னார்: "சுபா கதை தெரியுமா, சில்வா, உனக்கு?"

"தெரியாது, சாமி."

"அரண்மனையில் எடுபிடி வேலைகாரனிடம் மகாராஜா தோற்ற கதை அது."

"சொல்லுங்களேன் கேட்போம்."

"இப்பவே நாக்கு தொங்கத் துவங்கிவிட்டது உனக்கு. இதுவொன்றும் அனுலா கதை இல்லை. இது தந்திரம் வென்ற கதை. சமயோசிதத்தின் சன்மானமாய் ராஜ்யமே கிடைத்த கதை."

"குணாநந்த தேரர் திரும்பிவர இன்னும் எவ்வளவு நேரமாகுமோ? ராஜபக்ஸ சொல்கிற உணுப்பிட்டிய தேவடியாள்கள் பற்றின கதையை எவ்வளவு நேரம்தான் கேட்டுக்கொண்டிருக்க முடியும்? நீங்கள் சுபா கதையைச் சொல்லுங்கள்."

"கதையைத் தொடங்கு முன்.... குணாநந்த தேரர் எங்கே போனார் என்று சொல்லுங்கள், சுவாமி" என்றான் ராஜபக்ஸ.

"யாருக்குத் தெரியும்? ஒரு ஊத்தைப் பிக்கு வந்து கூட்டிக்கொண்டு போகிறார்."

"அந்தப் பயித்தியத்தையா சொல்கிறீர்கள்? அவன்தான் எந்தச் சங்கத்திலும் இல்லை; பிக்கு என்று சொல்லிச் சொல்லியே தேவையானதையெல்லாம் பெற்றுக்கொள்கிறான்; அதற்கிடையில் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிப் பொம்பிள வியாபாரம் வேறு. அவன் இந்த விஷயத்தில் மகாநிபுணன். ஏன்தான் இப்படி பிக்குகளினதும் பவுத்தர்களதும் பெயரைக் கெடுக்கிறவனை விட்டுவைத்திருக்கிறார்களோ?"

ராஜபக்ஸ சொல்லி முடிய இன்னொரு பிக்கு அதுவரை பூண்டிருந்த தன் மவுனத்தை உடைத்துக்கொண்டு சொன்னார் : "மகேந்திர பல்லவன் இப்போது இருந்திருந்தால் இன்னொரு மத்ஸ விலாஸ பிரகஸனம் இயற்றியிருப்பான்."

"முந்திய காலமில்லை இது. இன்னொரு மத்ஸ விலாஸ பிரகஸனம் தோன்றினால், தனக்கே தான் நாமம் போட்டுக் கொள்ளுகிற, தனக்கே தான் குறி போட்டுக் கொள்கிற இந்து சமயத்தாரைப்பற்றி நாமும் நையாண்டி இலக்கியம் செய்ய வேண்டியதுதான். ஆனாலும் அந்த சூதகத் துணிப் பிக்கு மீது நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும்" என்றார் முது பிக்கு.

"சரி, நீங்கள் கதையைச் சொல்லுங்கள்" என்று மேலே அவர் ஏதும் சொல்லுமுன் தலையிட்டுச் சொன்னான் சில்வா.

கோபம் தணிந்து பிக்கு கதை சொல்லத் துவங்கினார். "மன்னன் நன்றாகத்தான் ஆட்சி புரிந்தான். ஆனாலும் விதூஷகத்தில் பிரியம் அதிகம் அவனுக்கு. தன் எடுபிடி வேலைக்காரனுக்கும் தனக்கும் உருவ ஒற்றுமை இருப்பதைக் கண்டுகொண்ட மன்னன், ஒரு நாள் பெரிய விதூஷகமொன்று செய்ய நினைக்கிறான். சுபா என்ற அந்த வேலைக்காரனுக்கு ராஜ உடை அணிவித்து, முடியும் உடைவாளும் தரிக்கச் செய்து அரசவைக்கு அனுப்பிவிட்டு தான் அவ்வேலைக்காரனின் உடையினை அணிந்துகொண்டு குடிமக்கள் பகுதியிலே போய் நின்றுகொள்கிறான். மந்திரி பிரதானிகளும் படைத் தலைவர்களும் எழுந்து வணக்கம் தெரிவித்தும், மன்னா என விளித்தும் வழக்குகளை நடத்தத் தொடங்கியிருப்பதைக் கண்டு வெடித்து வரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு ரசித்து நிற்கிறான் நிஜமான மன்னன்.

"சிம்மானத்தில் அமர்ந்திருந்த வேலைக்கார சுபாவின் மூளை சமயோசிதமாய் வேலைசெய்கிறது. எல்லாரையும் கையமர்த்திவிட்டு, சுபா என்ற வேலைக்காரனைக் கைதுசெய்து கொண்டு வரும்படி கட்டளை பிறப்பிக்கிறான். வேலைக்கார வேஷத்திலிருந்த மன்னன் கைதுசெய்யப்படுகிறான். பொய்க்குற்றம் சாட்டி உடனடியாகவே அவனை கொதிக்கும் எண்ணெய்க் கொப்புரையில் வீசும்படி தண்டனையளிக்கிறான் போலி மன்னனான சுபா.

"உண்மையான மன்னன் கோபத்திலும் அவலத்திலும் அலறுகிறான். தானே உண்மையான மன்னனென்றும், சிம்மாசனத்திலிருப்பதே சுபா என்கிற வேலைக்காரனென்றும் கூவுகிறான். யாரும் அவன் பேச்சைக் கேட்பதாயில்லை. அரச ஆணை நிறைவேற்றப்படுகிறது. தந்திரத்தால் வேலைக்காரன் ராஜாவான கதை இதுதான், சில்வா."

சில்வா, தேசப் பிரேம ஜனதா வியாபாரய என சிங்களத்தில் அழைக்கப்பெற்ற தாய்நாட்டில் பற்றுள்ள மக்கள் இயக்கம் சார்ந்தவன். ஒரு கணம் ஆடித்தான் போனான். மன்னனின் விதூஷகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரனை ராஜாவாக்கிய கதை அவனுக்குப் பிடிக்கவில்லைப்போலும்! தன் நகைச்சுவையெல்லாம் அடங்கி மௌனமானான். இளவரசியை சிங்கம் புணர்ந்து பிறந்த குழந்தைகளிலிருந்து பெருகிய இனமே சிங்கள இனம் என்ற மகாவம்ச கதையில் ஒருகாலத்தில் அவன் பெரு அருவருப்படைந்திருந்தவன்.

அவன் மௌனம் பூண்டதால், மல்பிம சுரகீமே வியாபாரய எனப்படும் தாய்நாட்டைப் பாதுகாப்போர் சங்கத்தைச் சார்ந்த முனசிங்க நிசப்தத்தைக் கலைக்க கேட்டான்: "அதுசரி.... குணாநந்த தேரர் என்றீர்களே, இந்தப் பெயரை இதற்கு முன்பு எங்கோ கேள்விப்பட்டது மாதிரித் தோன்றுகிறதே!"

அதற்கு பக்கத்திலிருந்த சிங்கள பல மண்டலய இயக்கத்தைச் சேர்ந்த மூன்றாவது பிக்கு ஒருவர் பதிலளித்தார்: "இருக்கலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பவுத்த மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து வைத்த இரண்டு பிக்குகளில் ஒருவரின் பெயரும் குணாநந்த தான்."

"ஆ.... இப்போது ஞாபகம் வந்துவிட்டது. அவரது முழுப்பெயர்.... மிக்கெட்டுவத்த குணாநந்த தேரர்....!" என்றான் முனசிங்க.

"சரிதான். அதோ.... குணாநந்த தேரரும் வருகிறார். இனி நாம் புறப்பட ஆயத்தமாகலாம்" என்றார் முதுபிக்கு.

அவசரமாக வந்த குணாநந்த தேரர் சொன்னார்: "இந்த கண்டிப் பயணத்தை நிச்சயமாக நாம் மேற்கொள்ளப்போவதில்லை."

"அதென்ன.... திடீரென்று....?" என்றார் அவர்களில் ஒருவர்.

"திடீரென்றுதான் செய்தியும் வந்தது. இலங்கை அரசியலில் முக்கியமான சம்பவங்கள் சில விரைவில் நடைபெறப் போகின்றன. அதற்குத் தக நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக நாம் கொழும்பிலேயே தங்கவேண்டியுள்ளது. இந்த நிகழ்வுகளில் நாம் பங்குதாரர்கள் இல்லை. அதேபோல் பார்வையாளர்களும் இல்லை."

"பின்னே....? பயனாளர்கள்?"

"சரியாகச் சொன்னீர்கள்."

"அரசியல் மாற்றமா?" முதுபிக்கு கேட்டார்.

"அப்படித்தான் தெரிகிறது."

"இதில் நமக்கு எவ்வகையில் லாபம் வரக்கூடும்?" என்று முதுபிக்குவே தொடர்ந்து கேட்டார்.

"நிறைய வழிகளில். வடக்கிலே கொட்டியாக் கும்பல் அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழன்களுக்கு ஒரு பெருமையும் கவுரவமும் புதிதாய் ஏற்பட்டுவிட்டது. அதை அழிக்க இந்த அரசாங்கம் முனையாது. முனைந்தாலும் இதனால் முடியாது. நாம் கஷ்ரப்பட்டு கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களை ராணுவத்திலே சேரவைக்கிறோம். அவர்களில் பாதிப்பேர் செத்து வருகிறார்கள். மீதிப் பேர் ஓடியே போய்விடுகிறார்கள். புதிது புதிதாக ராணுவத்தில் ஆட்களைச் சேரவைப்பதும் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் எனக்குத் தெரியும். எங்களிலேயே அதற்கெதிரான ஒரு சக்தியாயிருந்து ராணுவத்தில் சிங்கள இளைஞர்ளைச் சேரவைக்கும் முயற்சிகளைத் தடுக்கிறமாதிரி விடாப்பிடியான ஒரு பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார் ஒது மனிதர்...."

"ஒரு மனிதரா....? ஒரு மனிதரா அவ்வளவு சக்தியோடு நம் முயற்சிகளையெல்லாம் அழிக்கக்கூடிய மாதிரியான பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்? யார் அவர்....?"

"அது இப்போது வேண்டாம். அவரைத் தகுந்த சமயத்தில் நான் பார்த்துக்கொள்கிறேன். ஆக.... தமிழ்ப் புலிகளை அழிக்க இந்த அரசாங்கம் முன்வராதது மாத்திரமில்லை; தெற்கிலே அதற்கு இணையாக வளர்ந்திருக்கக்கூடிய ஜேவிபியை அழித்த மகா தவற்றையும் செய்தது. அதை அதன் மூலத்தோடு அழிக்கிற மாதிரித்தான் ரோகண விஜேவீரவையும் அது இல்லாமற் பண்ணியிருக்கிறது. இப்போது அதன் ஆரம்ப தலைவர்கள் ஐவரில் ஒருவரான சோமவன்ச அமரசிங்க தான் மீதமாயிருக்கிறார். ஆனால் அவர் எங்கேயென்று யாருக்குமே தெரியவில்லை. ஜேவிபி சகல நம்பிக்கைகளும் அழிந்துபோய் நிற்கிறது. அதனால் இப்போதைய அரசாங்கத்தின் போக்குகளுக்கு எதிரிடையான முடிவுகளை எடுக்கக் கூடிய அரசாங்கமொன்று பதவிக்கு வருவது முக்கியம். எமக்கு எம் இன மத மொழி ஆகியவற்றை உச்சபட்சமான அதிகார மையத்தில் வைப்பதற்கு நாயகர்கள் அல்லது நாயகிகள் தேவை."

முதுபிக்கு சிரித்தார். லேசாகத்தான். அதைக்கூட வேறு சமயங்களில் குணாநந்தவுக்கு முன்னால் அவர் செய்திருக்கமாட்டார். அன்றைக்கு - அப்போது - தன் கருத்தில் உயர்ந்தபட்சமான நம்பிக்கையை அவர் அடைந்திருக்க வேண்டும். "நீங்கள் சந்திரிகா குமாரணதுங்கவைக் குறிப்பிடுகிறீர்கள் போலும்! ஸ்ரீலங்கா மக்கள் கட்சியிலிருந்து அவர் ஒருபோதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் போகமாட்டார், போகவேமாட்டார், பாருங்கள்."

குணாநந்த தேரர் கோபப்படவேயில்லை. "போவார்" என்றார் நிதானமாக. "போவார்; வேண்டுமானால் நீ இருந்து பார். அவரை மக்கள் கட்சியிலிருந்து விலகி சுதந்திரக் கட்சிக்குப் போகவைக்க எந்தக் கயிற்றைப் பிடித்திழுக்கவேண்டுமென்று தெரிந்து சரியாக இழுத்தால்.... போவார்."

பாராளுமன்றம் எங்கோ இருந்தது.

அரசியல் கட்சிகள் என்னென்னவோ முனைப்பில் இருந்தன.

அரசியல் சதுரங்கத்தின் காய்கள் ஒரு அர்த்த ராத்திரியில் களினி கங்கைக் கரையில் நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50

திரவியம் அனில் வீடு சென்றுகொண்டிருந்தபோது, அங்கிருந்து குசுமாவதி அப்போதுதான் வெளியேறிக்கொண்டிருப்பது தெரிந்தது. திரும்பி கேற்றைச் சாத்த எடுத்த பொழுதில் அவள் அவன் தூரத்தில் வருவதைக் கண்டிருக்க முடியுமாயினும் அவனைப் பார்க்கவோ ஒரு அறிமுகப் புன்னகையைக் காட்டவோகூட அவள் தாமதிக்கவில்லை. அவளது நடத்தையின் காரணத்தை அவனால் புரிந்துகொள்ள முடியும். அவளது சோகம் பெரியதுதான். நிமால் பெரேரா மரணமாகிய விஷயம் கடந்த ஒரு வருஷத்துக்கு முன்னர்தான் வெளியே தெரியவந்திருந்தது. எண்பத்தொன்பதின் நடுப்பகுதியில் அவனது கைது நிகழ்ந்திருப்பினும் எந்த சரக பொலிஸ் அவனைக் கைது செய்ததென்பதோ அல்லது பொலிஸா ராணுவமா கைதுசெய்ததென்பதோ எதுவும் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவனை உறவினர்களும் நண்பர்களுமாய் மூன்றாண்டுகளாகத் தேடினார்கள். அவனது மரணம்கூட அவன் எங்குமே இல்லை என்பதிலிருந்து அவர்களால் பிரித்துணரப்பட்ட முடிவாகவே இருந்தது. இன்னும் குசுமாவதி சோகத்தின் உச்சத்திலிருந்து இறங்கவில்லை. அது, எண்ணுகிறபோதெல்லாம் அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. நகர்ப்புறத்து சிங்களவரிடையே நகர்புறத் தமிழரைவிடவும் கூடுதலான மேற்கத்தியச் சாயல் வாழ்முறை இருந்தது. வீடுகளிலேயே மதுபானப் பாவிப்பும், வார இறுதிநாள் விருந்தும் நடனமும் என்று ஒருவகைக் கேளிக்கை விருப்பு அதிகம் கொண்டிருந்தவர்கள் அவர்கள். நகர்ப்புறங்களில் ஆண்-பெண் ஒழுகலாறு கட்டிறுக்கமற்று இவர்களிடையே இருந்தது. பாலியல் உறவுகளில் இவ்வகையிலிருந்த சுதந்திரம் நாகரீக விழைச்சலின் தாக்கத்தால் ஏற்பட்டதுதான். மேலும் பறங்கியர் எனப்படும் போர்த்துக்கீசியர் சிங்களவர் கலப்பினத்துடன் அவர்களுக்குப் பெருகிவந்த மணவினைக் கலப்பு அத்தகு நிலைமையை உருவாக்கிய காரணங்களுள் ஒன்றெனக் கொள்ளவும் முடியும். ஒரு மரணம் பெருஞ்சோகமாயிருக்க அவர்கள் வாழ்முறை அனுமதிப்பதில்லை. மரணமானது எவருக்கும்தான் தாளவியலாச் சோகமெனினும் நகர்ப்புறத்தில் அது மெல்ல மெல்லச் க்ஷீணமடைய தயக்கத்தோடாயினும் சம்மதிக்கும். இரண்டாவது திருமணத்தை வெகு இயல்பானதாய் சுலபமாகச் சம்மதித்தது அச்சமூகம் மட்டுமில்லை. சடங்காசாரங்களையும் அதிகமாய்க் கொண்டிருக்கவில்லை அது குறித்து. ஒரு திருமணம் ஒரு தமிழ்ப் பெண்ணில்போல் மாற்றத்தை அல்லது சுமைகளைச் சுமத்துவதில்லை ஒரு சிங்களப் பெண்ணின்மேல் என்பது அவர்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் பழகினால் புரிகிற சங்கதி. இருந்தும் குசுமாவதி குறைக்கவியலாச் சோகம் பூண்டிருந்தாள். சதி வழக்கம் பௌத்தர்களிடையே இருந்ததற்கு ஆதாரமேதுமில்லை. ஆனால் மானசீகமாய் அவள் அவன் சிதையில் தன்னை எரித்துக்கொண்டாளென்று நடத்தையில் தெரிந்தது. அப்போது குசுமாவதி தன் தாய்தந்தையரோடு நுகேகொடையில் வாழ்ந்து கொண்டிருந்தாள். நிமால் பெரேராவின் வீடு கேகாலையில். ஒரு வாரம் விடுமுறை எடுத்துக்கொண்டு குசுமாவதியோடு அங்கு சென்றிருந்த போதுதான், அவனது கைது நிகழ்ந்தது. இலங்கை ராணுவம் ஜேவிபி அழிப்பில் மும்முரமாய் முடுக்கிவிடப்பட்டிருந்த காலப் பகுதி அது. அறுபத்தையாயிரம் யுவதிகளும் இளைஞர்களும் கொல்லப்பட்டதாக அரசு சாரா செய்தி நிறுவனமொன்று பின்னால் தகவல் வெளியிட்டிருந்தது. அது மேலும் ஒரு செய்தியை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 'எங்களுக்கு இன்று ஏற்பட்ட நிலை, இன்னொரு நாள் சிறீலங்கா மக்களுக்கும் ஏற்படும். அன்றைக்கு ஆனையிறவு வதை முகாம் ஹம்பாந்தோட்டைக்குக் கொண்டு செல்லப்படும்; குருநகர் வதை முகாம் குருநாகலுக்குக் கொண்டுசெல்லப்படும். இன்றைய தமிழ் இளைஞர்களுக்குப் பதிலாக அன்றைக்கு சிங்கள இளைஞர்கள் வதைபுரியப்படுவார்கள்' என்று 1982ல் குட்டிமணி நீதிமன்றத்தில் கூறிய தீர்க்கதரிசன வாசகத்தை அதே இதழில் பெட்டிச் செய்தியாய் வெளியிட்டதின்மூலம் அவ்வதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது அச்செய்தி நிறுவனம். குசுமா நுகேகொடையில் தங்குவதாக முடிவெடுத்த பின்னர் இரண்டு முறை வவுனியா வந்து போயிருக்கிறாள். போன ஆண்டில் ஒன்று. இப்போது ஒன்று. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே அவனைச் சந்திக்க அவள் முனையவில்லை. இத்தனைக்கு நிமால் பெரேராவின் நெருங்கிய சிநேகிதன் அவன். நேசிப்பின் உச்சமடைந்திருந்தது நிமால் பெரேராவினதும் குசுமாவதியினதும் கணவன்-மனைவி உறவு. அதை அவன் அவர்களது அந்நியோன்யத்தில் இல்லை, அக்கறையிலேயே கண்டிருந்தான். அந்த உறவின் அழிவில் அவன் அதிகம் மன அவதிப்பட்டது அதனால்தான்.

அவன் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே சென்றபோது அனில் அய்யாவும் சோமாவும் விறாந்தையில் உட்கார்ந்திருந்தனர். அவன் உள்ளே வருவது தெரிந்து சோமா 'ம்ச்...!' என்றாள் ஒரு மைய மாற்றம்போல். திரவியத்தைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். ஆழ்ந்த யோசனையில் கேற்றுக்கு முதுகு காட்டியிருந்த அனில் அய்யாவைத் தட்டி திரவியம் வருவதைச் சொல்லிவிட்டு முன்னால் கட்டை மேசையில் கிடந்த தேநீர்க் கோப்பைகளை எடுத்துக்கொண்டு அசைந்து அசைந்து உள்ளே சென்றாள். வழக்கம்போல் அபயனை, மேகலையை அன்று அவள் விசாரிக்கவில்லையென்பது ஞாபகமாக சூழ்நிலையின் கனதி அவனுக்குப் புரிந்தது.

அனில் அவனை உட்காரச் சொன்னார். "குசுமா வந்திருந்தாள். இப்போதுதான் போகிறாள்" என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போகும்போது தூரத்தில் பார்த்தேன்" என்றான் அவன்.

"இந்த ஜென்மத்தில் இந்தத் துயரத்தை அவளால் வென்றுவிட முடியுமென்று நான் நினைக்கவில்லை" என்றார். சிறிது நேர மௌன ஊடாட்டத்தின் பின், "உன்னைப் பார்க்க விருப்பமாயிருக்கிறது என்றும், பார்த்தால் அழுதுவிடுவேன் போலிருக்கிறது, அதனால் இந்த முறையும் பார்க்காமலே போகப்போகிறேன், அடுத்தமுறை வரும்போதாவது உன்னைச் சந்திக்கிற சக்தியைப் புத்தபெருமான் தனக்குத் தரவேண்டும் என்றும்விட்டுப் போகிறாள்" என்று தொடர்ந்து கூறினார்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

சோமாவதி திரவியத்துக்குத் தேநீர் கொண்டுவந்தபோதுதான் மறுபடி இருவரும் தம் நினைவுகளின் ஆழ்ச்சி கலைந்தது.

அனில் கேட்டார்: ""உனக்கும் சிவாவுக்கும் இன்னும் தகராறு தீரவில்லையா?"

திரவியம் இல்லையென்று தலையசைத்தான்.

"சிவாவை அண்மையில் பார்த்தேன். கேட்டதற்கு, எனக்கு அவனிலே என்ன கோபம், அவன்தான் கோபித்துக்கொண்டிருக்கிறான் என்றான்" என்றார்.

அவன் மௌனமாயிருந்தான்.

அவன், சிவா தன் வியாபாரக் கூட்டினை விட்டு விலகாதவரை மனமிளகமாட்டானென்பதும், அவனாகவே வலிய வந்து அதற்காக மன்னிப்புக் கேட்காதவரை பழைய நிலைக்கு ஒருபோதும் அவன் திரும்பமாட்டான் என்பதும் தெரிந்திருந்த அனில் வேறு விஷயத்துக்கு மாறினார். "போனமுறை வந்தபோது திசையன் வந்திருப்பதாகச் சொன்னாய். பார்த்து நிரம்ப நாளாகிவிட்டது. கூட்டிவந்திருக்கலாமே!"

"அடுத்தடுத்த நாளே திரும்பிப் போய்விட்டான்."

"அந்தளவு விரைவிலேயா?"

"வந்த வேலை முடிந்தது போலும், போய்விட்டான்."

"என்ன, திரவி, பட்டும்படாமலும் பேசுகிறாய்?"

"அவனும் பட்டும்படாமலும்தானே இப்போது பழகிக்கொள்கிறான்!"

"திரவி...!"

"உண்மைதான், அனில் அய்யா. அவன் ஒரு அரசியல் நோக்கத்தோடுதான் இங்கே வந்திருக்கிறான், எங்களோடெல்லாம் பழகியிருக்கிறானென்று இப்போதுதான் வலுவான சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது."

"ஏய்... ஏய்... திரவி, நிப்பாட்டு!" இடைமறித்தார் அனில். "சந்தேகம்தான் படுகிறாய். இருந்தும்... அதென்ன அவன் அரசியல் நோக்கத்தோடு இயங்கியதாய் அத்தனை தீர்மானமான கருத்து...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் சந்தேகங்களுக்குக் காரணமிருக்கு. அவை ஆதாரமில்லைத்தான். ஆனாலும் அதை நான் ஒதுக்கிவிட முடியாது."

"என்னதான் அது? அவனது அரசியல் நோக்கம்தான் என்ன?"

"அதைத் தெளிவாகச் சொல்ல காலம் செல்லும். நானே சந்தேகங்களின் பின்னணியில்தான் இதைச் சொல்கிறேன். ஆதாரம் கிடைக்கிறபோது... நிச்சயமாக இதுபற்றி நாங்கள் பேசலாம்."

திசையன்பற்றி திரவியம் சொன்னதை அவரால் ஏற்கமுடியாதிருந்தது. ஆனாலும் அதுபற்றி அவர் மேலே பேசவில்லை. "சரி, விடு. ஒரு விஷயம் உனக்கு வந்தவுடனேயே சொல்லவிருந்தேன்..."

"என்ன?"

"ஆனி மாதத்திலிருந்து பிரபலமான சர்வதேச செய்தி நிறுவனமொன்று தன் கொழும்பு அலுவலகத்துக்கு பொறுப்புள்ள நிர்வாக அதிகாரியக என்னை நியமித்திருக்கிறது. உன்னைப்போன்ற சில இளைஞர்களை மனத்தில் நினைத்துக்கொண்டுதான் துணிந்து அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன் திரவி, எனக்கு உதவியாக இருப்பாயல்லவா?"

"நான் புதிது புதிதாய்த் தெரிய, மேலும் மேலுமாய்க் குழம்பிக்கொண்டு போகிறேன். முதலில் என்னைத் தெளிவுபடுத்துங்கள். நான் உதவிசெய்வதுபற்றி பிறகு யோசிக்கலாம்."

அவன் காரியார்த்தமாய்த்தான் பேசுகிறான் என்பது அவருக்குத் தெரிந்தது. இனி அவர் அனில் அய்யா இல்லை. அவனது ஆசான். "எது தெளிவில்லாமலிருக்கிறது உனக்கு?" என்றார்.

அவன் சொன்னான் : "பெரும்பாலும் எல்லாமேதான். திருஷ்டாந்தத்தில் நான் அறிபவையெல்லாமே என்னைக் குழம்பிப் போகத்தான் செய்துகொண்டிருக்கின்றன. நான் யார் என்பதுபோன்ற ஆன்மீகக் குழப்பமில்லை இது. ஆனாலும் நான் யார் என்பது மாதிரியான ஒரு கேள்விதான் என்னைக் குடைந்துகொண்டிருப்பதும். நான் யார்? தமிழனா, இலங்கையனா, இல்லை மனிதனா? நான் யாராகச் சிந்திக்கவேண்டும்? ஒவ்வொரு பொழுதில் ஒவ்வொருவராக நின்று சிந்தித்து நான் குழம்புகிறேன், அனில் அய்யா."

அனில் மௌனமாயிருந்தார்.

மனைவியிடம் சிகரெட் கொண்டுவரச் சொல்லி வாங்கிப் பற்றவைத்தார்.

மௌன வெளியில் யோசனை ஊடாடியது.

அதற்கு ஓரளவு சரியானதும் மேலெழுந்த வாரியானதுமான ஒரு பதிலைச் சொல்ல முடியும் அவரால். அவருக்கு அது ஒப்பில்லை. அவர் பதில் ஆழமாயிருக்கவேண்டும். முக்கியமாக, அது அவனைத் தெளிவிக்கிற பதிலாய் இருக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைத்து சிகரெட்டை பாதியிலே வீசிவிட்டு பதில் சொல்லத் தொடங்கினார் அனில். "அது அப்படித்தான் இருக்கும். அதுதான் இயல்பு. அந்த மூன்று தளங்களிலிருந்தும் ஒருவர் சிந்திக்கவேண்டும் என்பதுதான் நியதி. வேறு வேறு சமயங்களில் இந்த மூன்று நிலைகளில் ஒரு நிலையை எடுத்து நின்று அபிப்பிராயம் சொல்லிவிடுகிறது சுலபம். இம்மாதிரி உள்நாட்டுப் போராட்ட காலத்தில் இம்மூன்று நிலைகளிலும் சிந்திப்பதை அவசியமாக்கிக்கொண்டு சந்தர்ப்பங்கள் புதிது புதிதாகத் தோன்றும். அந்தக் குழப்ப நிலையை வெல்ல முடியும். இதோ பார், திரவியம். பிறப்பிலிருந்து உன்னில் வளர்ந்துவந்த தமிழ்த் தேசியத் தன்மையை உன்னால் முன்றுமுழுதாக ஒதுக்கிவிட முடியாது. நீ ஒருபோது தெளிந்திருக்கையில், நான் யாராகச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டு உன் மனம் கலகம் செய்வது அந்த தமிழ்த் தேசியத்தின் அத்துமீறலின் விளைவுதான். ஆனால் அது தவறென்றும் எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட முடியாது. அது வெல்லப்பட வேண்டியது மட்டும்தான். அப்போது நீ இலங்கைத் தேசியம் பேசுவாய். அது உன் சிந்தனையை இடைஞ்சல் செய்கிறபோது, நீ சர்வதேச மனிதனாகும் பக்குவம் பெற்றிருக்கிறாயென்று அர்த்தமாகும். அதை எல்லையாகக்கொண்டே உன் சிந்தனையின் முயல்வுகள் இருக்கவேண்டும். அதேவேளை நீ தமிழ்த் தேசியவாதியாகவும், இலங்கைத் தேசியவாதியாகவும்கூட இருப்பாய். அவை உன்னில் முற்றும் மறைந்துவிடுவதில்லை. அவை உன் தளமும் களமுமாக அப்போதும் இருக்கும். இதை ஒரு பயிற்சியிலும் படிப்பினாலும் மட்டுமே அடைய முடியும். நீ அந்தத் திசையில் உன் கவனத்தைக் குவிக்கவேண்டிய காலம் இது. அப்போதுதான் செய்திகளின் பின்னாலுள்ள உண்மை விளங்கும். நீ ஒரு செய்தியாளனாய் / பத்திரிகையாளனாய் வெற்றிபெற இந்த நிலைமை அவசியம்.

திரவியம் புரிந்துகொண்டானா என்பதைப் பார்ப்பதற்குக் கூட அவர் அவனைப் பார்க்கவில்லை. மேலே தொடர்ந்தார்: "நம் அடையாளங்கள் தெளிவாய் விழுந்துவிட்டன, திரவி. நான் சிங்களவன், நீ தமிழன், அவன் முஸ்லீம் என்பவை நாமே விரும்பிப் போட்டுக்கொண்ட அடையாளங்களில்லை. ஆனாலும் நம் விருப்பம், எப்படியோ அதைச் சுற்றி வளர்ந்து விடுகிறது. ஆனாலும் அதை வெல்ல நாம் தயங்கக்கூடாது. அறிவென்பது வேறு என்ன என நினைக்கிறாய்? குழம்புவதுபற்றி நீயே சொல்வது சந்தோஷம். ஆனால் நீ குழம்பக் கூடாது. அறிவுறுத்துபவன் குழம்பினால் அறிவுறுத்துகை குழம்பும். பின் அறிபவன் குழப்பம் தீர்வது எப்படி?"

"எப்படி அனில் அய்யா முடியும்? நான் மனிதம் பேசிக் கொண்டிருக்கையிலேயே என் வீடு கொளுத்தப்பட்டுவிடுகிறது. என் எதிர் வீட்டில் கொலைகள் விழுந்து விடுகின்றன. என் பக்கத்து வீட்டுப் பெண் கற்பழிக்கப்படுகிறாள். நான் ஓடுகிறேன்... எல்லோரும் ஓடுகிறார்கள்... நான் மறந்த தமிழனை என்னுள் மீண்டும் அடையாளப்படுத்தியது எது? எப்படி நான் இந்தக் குழப்பத்திலிருந்து தப்பமுடியும்?" என்று கேட்டான் திரவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கோபிக்கவில்லை.

ஆனாலும் ஒரு கோபம் அதில் இருந்தது.

"புதிய காலத்தின் துவக்க ஆண்டுகளில் மதச் சீர்திருத்தவாதிகளுக்கு என்ன கதி நேர்ந்ததென்று உனக்குத் தெரியுமல்லவா? ஏராஸ்மஸ் போன்றோர் எரியூட்டவும்பட்டார்கள். ஒரு புதிய சிந்தனையின் அடைதல் அத்தனை எளிதானதல்ல. தானே பலியாகிற நிலையும் ஏற்படலாம். உண்மை அவ்வாறு உண்மையானவனையே இரையாய்க் கேட்கும். சாக்கிரடீஸ் கொடுத்தது, யேசு கொடுத்தது.... அந்த மாதிரி இரைதான்." அவர் அதை மெதுவாகச் சொன்னார்.

திரவியம் நிமிர்ந்து அவர் கண்களை ஒரு புரிதலோடு ஏறிட்டான்.

அவர் கண்கள் திருப்தியோடு சிரித்தன.

## 51

திரவியம் வந்தபோது லாம்பு நன்கு தணிய எரிந்து மேலே தொங்கிக் கொண்டிருந்தது.

அவசரத்துக்குத் திரியைத் தூண்டி வெளிச்சம் செய்வதற்கு லாந்தரை அடையாளம் காண அது உதவியாக இருந்தது என்பதைத் தவிர அது எரிதலின் முகாந்திரம் வெளிச்சம் சம்பந்தப்பட்டதாய் இருக்கவில்லை.

தாழ் கூரையுள்ள வீட்டுத் திண்ணையில் இருள் நிறைந்து வழிந்துகொண்டிருந்தது.

அப்போது சுவர்ணா உறங்குவது / விழித்திருப்பதென்ற எந்த நிலையும் தெரிந்துவிடாது. படுத்திருக்கக்கூடும்; இல்லையேல் சுவரோரமாய் ஒதுங்கி சாய்ந்தமர்ந்திருக்கவும் கூடும்.

அவள் அனுபவிக்க விரும்பாத பொழுதும் பிரதேசமும் அது. அவளுள்ளும் குழம்பிய மனநிலைதான். அச்சத்தினால் இருளில் ஒழிந்துகொண்டு, இன்பங்களை துன்பங்களை ஏக்கங்களை எதிர்பார்ப்புக்களை அடைந்தது அடைந்தபடி விஸ்தாரமாய் அவள் எண்ணிக்கொள்வதில் எந்த உணர்வை அவள் அடைந்தாளென்று திட்டப்பட்டுவிட முடியாது தான். ஆனாலும் அந்தப் பிரக்ஞை - அந்தக் கரிசனை - இல்லாமல் அவள் எல்லாவற்றையும் நினைத்துக்கொண்டிருந்தாள் அப்போது.

அவள் தொழும் மனிதன்...

அவளுக்காய்க் கவலைகளை நிறைத்து கண்ணீர் சிந்தி வாழும் அம்மா....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தலுக்கு இழப்பு விதியாகிப்போன சுது அக்கே....

ஊர்ப் பன்னசாலை....

அதன் எதிர்ப்பக்கமாய் அமைந்திருந்த பாடசாலை....

பள்ளிவிட்டுப் பாடிப் பறந்துவரும் மேடும் பள்ளமுமான பசிய இலை மறைப்புக்களுள் கிடந்த வழிகள்....

துண்டு துண்டான வயல்கள்....

அவற்றில் சேறடித்து விளையாடிய நாட்கள்....

ஊர் எல்லைக்கப்பால் மரக்கூடலுள் அரக்கு வடிசாலை....

குடித்துப் போதையேறி நள்ளிரவிலும் புலம்பிவருகின்ற ஆண்கள்....

அனைத்தையும் விழுங்கி வாழ்வின் அவசரமும் அவதியும் காட்டும் விடியல்கள்....

அவள் நினைக்காதது இல்லை.

அதை அவன் அறிவான்.

அவன் கேட்டு அவள் சொல்லியிருக்கிறாள்.

அவன் கேட்டும் சொல்லாத பல சிந்தனைகள் அவளது மனமூலையில் கிடந்து அரிப்பாய் அப்போது கிளர்ந்துகொண்டிருந்தன.

திரவியம் சைக்கிளை நிறுத்திவிட்டு திண்ணையில் பார்வையைக் கூர்மையாக்கிப் பதிக்க, சுவரோரத்தில் அவள் புறவுரு கோடாய்த் தெரிந்தது.

விசனமா? ஏன்? அவன் லாம்பைத் தூண்டிவிட்டு அவள் எதிரே அமர்ந்து கேட்டான்: "என்ன, சுவர்ணா?"

"ஒண்டுமில்லை."

அவள் மனத்தை ஏதோ அரிக்கிறது.

அவர்களுள் நேரடிப் பூசல் ஏதும் இருக்காததால் அவன் நிதானமாய் எழுந்து உள்ளேபோய் சாரத்தைக் கட்டிக்கொண்டு வந்தான். மறுபடி பக்கத்தில் அமர்ந்தான். "என்ன, ஒண்டுமில்லை! அதுதான் முகம் இப்பிடி வறண்டுபோய்க் கிடக்குதோ? சொல்லு, என்ன நடந்தது, சுவர்ணா?" என்று கேட்டான்.

அவள் கண்கள் பளபளத்துக்கொண்டிருப்பதை அவன் கண்டான். அது ஆவலிலல்ல, அவசத்தில் விளைந்ததென்பதை அவனால் புரியமுடிந்தது. "சொல்லு, சுவர்ணா" என்று அவன் அனுதாபம் காட்டினான்.

"அபயனையும்.... மேகலையையும் நினைக்க.... பயமாயிருக்கு."

"ஏன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொன்னாள்: "தாயோ தேப்பனோ சிங்களவராய் இருக்கிற பிள்ளையை புலியள் கொண்டுபோயிடுகினமாமே....!"

"ஆர் சொன்னது உனக்கு? மதியா? அவள்தான் அரைப் பயித்தியமெண்டு எல்லாருக்கும் தெரியுமே.... நீயேன் அவளின்ர கதையைக் கேட்டாய்....?"

"ஆர் சொன்னதெண்டது இருக்கட்டும். விஷயம் பொய்யா.... மெய்யா....? முதலில அதைச் சொல்லுங்கோ."

"அப்பிடி ஒரு கதை இருக்குதுதான். ஆனால் அதை உண்மையெண்டு நான் நம்பேல்ல."

"ஏன்?"

"ஏனெண்டால்.... நம்பக்கூடிய இடத்திலயிருந்த அந்தக் கதை வரேல்லை. தாயோ தகப்பனோ சிங்கள ஆளாயிருக்கிற குடும்பத்துப் பிள்ளையைக் கொண்டுபோய்.... ஒரு மாதிரிச் சிங்களக் கிராமமமைச்சு அந்தக் கிராமத்தில அந்தப் பிள்ளையை சிங்களம் நல்லாய்ப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் பழக்கி.... சிங்கள ஆளாய் சிங்கள நகரங்களுக்கு அனுப்பி அழிவுவேலையளைச் செய்யிறதுக்கும் விஷயங்களை அறியிறதுக்கும் புலியள் பயன்படுத்துகினமெண்டது அஞ்சாறு வருஷத்துக்கு முந்தியே நான் கேள்விப்பட்டதுதான். அதை மெய்யெண்டு இண்டைவரையிலும் நான் நம்பேல்லை. ஆதாரமும் கிடைக்கேல்லை."

"அப்ப.... அது உண்மையில்லையா?"

"நிச்சயமாய் உண்மையாய் இருக்காது."

அவள் மௌனமாயிருந்தாள்.

ஆனாலும் அவளது அச்சம் இன்னும்தான் முற்றுமாய் அகன்று விடவில்லை. அவள் தன் குழந்தைகளை எவ்வளவு நேசிக்கிறாளென்பது அவன் அறிந்ததுதான். அதனால்.... அவள் வாழ்வு அச்சத்துக்குள்ளாகியிருக்கிறது.

நடைபெறும் யுத்தம் அவளுக்கு உகப்பில்லை. அவள் சிங்களத்தியாகவோ தமிழச்சியாகவோ வாழ்வதையேதான் விரும்புகிறாள். ஆனால் எந்த இனத்தவளாக வாழ்ந்தாலும் அவளது வாழ்க்கை அச்சத்துக்குள்ளாக்கப்படுகிறது.

தன் மகன் எக்கநாயக்க பற்றி அறியவேண்டுமென்று சுவர்ணாவின் பெரிய தாய்க்காரியான அந்த முதியவள் அங்கே வந்து இரண்டு மாதங்கள் தங்கினாள். அந்த முதியவளின் துடிப்பில் பெருவேதனைப்பட்டவள் சுவர்ணா. உயிர் எங்கும் ஒரே விதமாகவே உறவுகளுக்காக வதைபடுகிறது. எதிர்பாராதவிதமாக ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் கைதாகியிருந்த ஆறு பேர் தமிழ்ப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படுகிறார்கள். அதில் எக்கநாயக்க ஒருவன். அதை திரவியத்தின் பெருமுயற்சியென்று எண்ணி தன் மகனையும் அழைத்துக்கொண்டு கட்டுடைத்த வெள்ளமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவந்து, தன் உணர்வை வெளிப்படுத்த மொழியின்றி அவலித்து, கடைசியில் தன் தாய்மொழியிலேயே அவள் தன் எண்ணங்களைக் கொட்டியதை நேரடியாய்க் கண்டிருந்தவள் அவள்.

வாழ்வு மீது ஒரு நுண்மையான பார்வையை இவையெல்லாம் அவளிடத்தில் ஏற்படுத்தியிருக்க முடியும்.

எந்த உயிர்தான் உறவுகளை அறுத்துக்கொண்டு செத்துப்போக விரும்பும்.

அவன் கையில் அவளது சில வெப்பக் கண்ணீர்த் துளிகள் விழுந்து சிதறின.

மெல்ல வாஞ்சையோடு அணைத்து அவளது கண்களைத் துடைத்துவிட்டான் அவன். "அழாதே" என்றான்.

மேனி துவண்டு அவன் மார்பில் அடங்கிற்று.

மாலையில் குளித்திருந்தாள். குளியல் சவர்க்காரத்தின் வாசம் மெல்ல இழைந்தது. லேசான வியர்வை கசிந்திருந்தது. புது வியர்வைக்கு போதை இருக்கிறது. அவனுள் தீ எழும்பிற்று.

இணங்குதல் இன்பம். இணங்குதல் பணிதலுமாகும். பணிந்தது யாரென்று அச் சம்ரோக்ஷண களத்தில் முக்கியமில்லை.

காற்று அடங்கிக் கிடந்தது.

இரண்டு மேனிகள் மூசி மூசி வியர்த்து... புயல் மையம் கடந்ததுபோல அடங்கி.... ஆசுவாசித்தன.

## 52

தாமதமாக விழித்து, குழந்தைகளோடு பாயில் கிடந்து நேரங்கடத்தி, வெய்யில் மேலே நன்றாய் ஏறிய பிறகு எழுந்து போய்க் குளித்துவிட்டு திரவியம் வரவும் படலையைத் திறந்துகொண்டு அவசரமாக உள்ளே வந்தார் அனில்.

அவர் அவனது வீட்டுக்கு வருவது அபூர்வம். அத்தனை வருஷ காலத்தில் இரண்டோ மூன்றோ முறை வந்துபோயிருக்கிறார். இரண்டொரு சமயங்களில் யாரையோ பார்க்க வந்த இடத்தில் படலையில் நின்று அவனோடு பேசிவிட்டுப் போயிருக்கிறார். அவ்வளவுதான். அவர் அங்கேயென்றுதான் அன்று வந்ததுபோலிருந்தது. அவன் கண்டுவிட்டு விரைந்து வந்து, "வாருங்கள், அனில் அய்யா" என்று வரவேற்றான். அவரை சுவர்ணாவுக்கும் தெரிந்திருந்தது. அவளும் வந்து சற்று எட்டநின்றபடி புன்னகைத்து வரவேற்றாள். பின் குசினிக்குத் திரும்பி தேநீர் தயாரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனில் திண்ணையில் அமர்ந்தார் வெறும் நிலமென்ற கரிசனமின்றி. திரவியம் அவசரமாய் உள்ளே ஓடிப்போய் பாயை எடுத்துவந்து விரித்து அமரவைத்தான்.

அவர் நெற்றியில் வியர்வைத் துளிகள் ஊறி வழிந்துகொண்டிருந்தன. துடைத்தார். அவர் பதற்றமடைந்திருப்பது தெளிவாய்த் தெரிந்தது.

"செய்தி தெரியுமா?" என்றார் நிமிர்ந்து.

"என்ன... செய்தி? எதைப்பற்றி...?"

அவர் குரலை அவசியமில்லாமலே தணித்து விஷயத்தின் கனதியை உணர்வித்தார். "ஜனாதிபதியை... சைக்கில் குண்டில்... போய்விட்டாராம்... இப்போதுதான் மேமன் போனில் கூறினான்."

திரவியம் உறைந்துபோனான்.

"எப்ப...?" குரல் உடைந்து வந்தது.

நம்பகத் தனம் அதில் இருந்தது. காலம் கொலையுதிர்ப்பதாய் இருக்கின்றது. ஆனாலும் பெரும் கொலைகளின் பின்விளைவுகளை எண்ண பொறிகள், புலன்கள் அழியும்.

அவன் கதிகலங்கியது அது இன்னொரு கொலை என்பதிலிருந்து அல்ல. இனி.... என்பதிலிருந்து கெழுமியது.

மரணப் பிசாசு மகாவன்மையோடு அந்த சின்ன இலங்கைத் தீவை நசுக்கிவிடத் தீர்மானித்திருக்கிறதா? உய்வில்லையா இதற்கு இனிமேல்? இத்தொடர் மரணங்களின் மூலம் எங்கிருக்கிறது? இரண்டுபட்ட ஊரில் கூத்தாடிகளின் கைவரிசையா இது?

கேள்விகள் மழைகால மாலைப்புற்றின் ஈசற் கிளர்வாயின.

"எப்ப?" கேள்வி மறுபடி ஒலித்தது.

"காலையில் மேதின ஊர்வலத்தில் போய்க்கொண்டிருக்கும்போது. ஸ்தலத்திலேயே மரணமாகியிருக்கிறார்."

"செய்தியில் அறிவித்துவிட்டார்களா...?"

"இன்னும் இல்லை. ஆனாலும் வதந்தியாய் அது விரைந்து பரவிக்கொண்டிருக்கிறது."

"இப்போதைய கொழும்பு நிலைமை...?"

"தெரியவில்லை. ஸ்தம்பித்திருக்கிறது என்றுமட்டுமே மேமன் சொன்னான். திரவி, உனக்கு மேமனைத் தெரியுமல்லவா? போன வருஷம் வீட்டுக்குக்கூட வந்திருந்தானே! அந்த சினிமா விமர்சகன்...."

"ஆம், ஞாபகமிருக்கிறது. உங்களுடைய மாணவர்..."

"ஆமாம், பெரதேனியாவில் என்னிடம் படித்தவன்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சரி... யார் செய்திருக்கக் கூடும்?"

"யாருக்குத் தெரியும்? ஆனால் எடுத்தவுடனே தமிழ்ப் புலிகளைத்தானே நினைக்கிறார்கள்! அப்படித்தான் தலைநகரிலே அபிப்பிராயம் இருக்கிறதாம்."

"நீங்கள் அப்படி நினைக்கவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகாவது புலிகளின் அரசியல்க் கொலை நிலைப்பாடு மாற்றமடைந்திருக்குமென்று நான் நம்புகிறேன். ராஜீவ் காந்தி கொலைக்கு அவர்கள் கொடுத்த விலை அதிகம். திருந்தினால்தான் தங்களுக்கு எதிர் காலமென்பது அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்காது. அந்த நம்பிக்கையில்தான் சொல்கிறேன்."

"பின்னே யார்...?"

"லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு புலிகள் காரணமென்று பொலிஸ் விசாரணையிலும் தெரியவில்லை. இன்னும்.... ஆதாரம் கிடைக்காமற்போனாலும் உள்கட்சிப் பூசலின் விளைவென்றே பரவலாக அது அப்போது நம்பவும்பட்டது. அதனால்.... அத்துலத் முதலியின் விசுவாசிகளால் தூண்டிவிடப்பட்ட கொலையாகவே இது கொள்ளப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதுவே உண்மையில்லாதபட்சத்திலும் இப்படி எண்ணப்படுவது அவசியம்."

"ஏன்?"

"இல்லாதுபோனால்... கொழும்பிலே ஒரு மிகப்பெரிய கலவரத்தை தடுப்பது கஷ்டமாகிப்போய்விடும்."

"மெய்தான். தமிழர்கள் கொழும்பிலே மறுபடியும் தாக்கப்படுவதற்கான வாய்ப்பைத் தடுக்கவாவது அது அவ்வாறு எண்ணப்படுதல் அவசியம்."

திரவியம் சொல்ல ஏதுமிருக்கவில்லை.

அனில் தொடர்ந்தார்: "இப்ப.... ஜனாதிபதி இல்லாமலிருக்கிற நிலையில் அடுத்த அதிகாரமுள்ளவரிடத்தில் பாரிய பொறுப்பு வந்துவிடுகிறது. துணிகரமாகவும் திடசித்தத்தோடும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காவிட்டால்.... நாம் பயப்படுகிறபடி நடப்பதை எதனாலும் தடுத்துவிட முடியாது."

"ஜனாதிபதி பொறுப்பு இப்போது யாரிடத்தில் வந்திருக்கிறது."

"பிரதமரிடத்தில்.... அதாவது ரணில் விக்கிரமசிங்கவிடத்தில்."

"விக்கிரமசிங்கவினால் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க முடியுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடுக்கக் கூடியவர்தான். அத்துடன் அனுபவசாலி வேறு. ஆனால் கட்சியில் இருக்கக்கூடிய உள்ளெதிர்ப்புகள் காரணமாய் கைகள் கட்டப்பட்ட நிலையில்தான் அவர் நடவடிக்கைளை எடுக்கவேண்டியிருக்கும்."

அனில்'லின் கவலையை, பதட்டத்தை, அந்தரத்தை அவன் உணர்ந்தான்.

அவனே அப்படியொரு மனநிலைக்குத்தான் ஆளாகியிருந்தான்.

அனில் ம்ஹூம்... என்று நெடுமூச்செறிந்தார்.

சாராய வாடை அடித்தது.

வரும்போது குடித்துவிட்டு வந்திருப்பார். தன் பதட்டத்தைத் தணிக்க அவருக்கு வேறு வழி இல்லைத்தான்.

அனில் தொடர்ந்தார்: "அரசியல் எங்கேயும் பெரிய சுத்தமில்லை. ஆனால் இங்கேயுள்ள அளவு அசிங்கம் வேறு எங்கேயும் இல்லை. 1959 செம்ரெம்பரில் இங்கே ஒரு அரசியல் கொலை நிகழ்ந்தது, திரவி. துரோகமும் சூழ்ச்சியும் மிக்க ஒரு படுகொலைக்கு வேறு உதாரணமில்லை உலக சரித்திரத்திலே. அந்த மகாகொலைச் செய்தியில் ஆசியா அதிர்ந்தது. உலகம் திகைத்தது. தல்துவே சோமராம ஹாமி என்ற ஒரு ஹாமத்துரவகோ பிரதமர் இல்லம் சென்றதும், முண்டிதத்தையும் சீவர ஆடையையும் கண்டு எழுந்து எதிர்வந்து குனிந்து வணங்கிய பண்டார நாயக்கவை இடுப்பில் மறைத்துவைத்திருந்த துப்பாக்கியை எடுத்து பிக்கு சுட்டுக்கொன்றதுமான சம்பவத்தை முதலில் உலகம் நம்பவே மறுத்துவிட்டது. ஒரு பிக்குவா... ஒரு புத்த மத துறவியா... அஹிம்சா மூர்த்தியின் போதனைகளில் வாழ்வின் அர்த்தம் கண்டவரா... என்று அது கேள்விகள் கிளர்த்திற்று. கொலைக்கு உடந்தையாய், திட்டம் தீட்டியோராய் இருந்தார்கள் எனக் கைதுசெய்யப்பட்டோர் பற்றிக் கேட்டதும் அது மூர்ச்சையே போட்டுவிட்டது. கைது செய்யப்பட்டவர்கள் யார்யாரென்று உனக்குத் தெரியுமல்லவா? களனி ராஜமகாவிகாராதிபதி மாப்பிட்டிகம புத்தரகித தேரோ, ஹேமச்சந்திர பியசேன, ஜயவர்த்தன... நம்பமுடியுமா? ஆனால் அது உண்மையாய் இருந்தது. இங்கே மதம் அத்தனை தீவிரமானது; வலிமையானது. இலங்கை அரசியல் சக்கரம் அதன் அச்சில்தான் சுழன்றுகொண்டிருக்கிறது."

சிறிதுநேரம் பேசாமலிருந்தார் அனில், பண்டாரநாயக்க கொலையின் உட்காட்சித் தரிசனத்தில் கவனம் குவித்தவர்போல்.

சுவர்ணா தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள்.

அவர் மறுக்கவுமில்லை; உடனடியாக எடுத்துக் குடிக்கவுமில்லை.

திரவியம் கோப்பையை எடுத்து மெல்ல உறிஞ்சினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனில் சொன்னதை மெய்தான் என்று அவனும் நம்பினான். மதம் இங்கே வலிமையானதுதான். ஆனாலும் அதற்கு மதவிசுவாசமே காரணமென்பதில் அவனுக்கு ஐயுறவு இருந்தது. ஒரு புராதன இனத்தின் இருத்தல்பற்றியும், ஒரு நவீன சிங்கள ஜனசமுதாயத்தின் பொருளியல் வாழ்வு குறித்தும் சந்தேகங்களும், அதனடியில் அச்சங்களும் எழுந்த காரணத்தால் மதக்குறியீடு சகலரோக நிவாரணியாய் கையாளப்பட்டது என்பதே அவன் தீர்மானமாய் இருந்தது. ஆனாலும் முன்புபோல் அது குறித்து அவன் அவரோடு வாதாடப் போவதில்லை.

சிறிதுநேரம் மௌனமாய் இருந்துவிட்டு அனில் சொன்னார்: "அரசியலுக்கும் மதத்துக்குமிடையே இங்கு விழுந்திருக்கிற அடம்பன்கொடித் தொடுப்பினை நாம் அறுத்தேயாகவேண்டும், திரவி. இது சாமான்யமான விஷயமில்லையென்பது எனக்குத் தெரியும். அம்மாதிரியான மத அதிகார நிறுவனங்களைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் முதலில் அவற்றின் புனிதங்களையும், அதன்மூலம் அதன் அதிகாரப் பிடிப்பைப் பின்னரும் தகர்த்துவிட முடியுமென்று நான் நினைக்கிறேன். ஊடகங்கள் மூலமாய் நீ.... அதுபோல் கல்வித்துறை சார்ந்து நான்.... அத்தகர்ப்பு வேலையை இப்போதே துவக்கலாமென்பது என் அபிப்பிராயம். ஒரு போர்.... அறிவின் சகல சக்திகளையும் திரட்டி, கலை இலக்கியத்தின் கூரிய முனைகளை நெறிப்படுத்தி...."

அவரால் முடியுமென்று அவன் அப்போதே நம்பினான்.

அனில் அறிவுஜீவிதத்தின் சிலாகிப்புக்குரியவர்.

அவர் கருத்தறிய மாணவர்களாய் வாசகர்களாய் நிறையப் பேர் காத்திருப்பதை அவன் அறிவான்.

அவர் ஒடுங்க நினைத்தவர்.

இலக்கிய வாசிப்பு.... அறிவார்த்தமாய்ச் சிந்திக்கத் தெரிந்த நண்பர்களுடனான உரையாடலும் பொழுது போக்கும்.... ஓய்வு.... என்று இறுதிநாட்களைக் கழிக்க நினைத்துத்தான் வவுனியா வந்தார். இப்போது அவர் அவற்றை இழக்கத் தயாராகிவிட்டார். அவரின் சன்னத்தம், நியாயத்தின் பலம் அதிகரிப்பதன் அறிகுறி.

அனில் தேநீரை எடுத்து இரண்டு மிடறில் குடித்து முடித்தார்.

"எப்படியிருந்தாலும் ஒரு வாரத்துக்குள் கொழும்பு போவது நல்லதில்லை. ஆனாலும் தீர்மானித்திருந்ததைவிட விரைவில் போகிற உத்தேசம் இப்போது வந்திருக்கிறது. கொழும்பு நிலைமைபற்றி போன் வந்தாலும் வரும். நான் வீட்டுக்குப் போகிறேன். மாலையில் வா, என்ன ஏது என்பதுபற்றி விரிவாகப் பேசலாம். வரட்டுமா?"

அவர் எழுந்தார்.

சுவர்ணாவிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53

கார்த்திகேசு ஹோலுக்குள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு எதிரே அமர்ந்திருந்தார். வீசிஆரில் ஓடிக்கொண்டிருந்த தமிழ்ச் சினிமாவில் கவனமற்றிருந்தது. கிழவி விழுந்து விழுந்து சிரித்து ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் எதையும் சுலபத்தில் உட்கிரகித்துக்கொண்டு அடங்கிப் போய்விடக்கூடியவள்தான். இப்போதெல்லாம் சுப்பர் மார்க்கெற்றுக்கு அவளே போய்வருகிறாள். கோழி அல்லது மீன், காய்கறி, பழங்கள், மாவு தூள்ப் பைக்கற்றுக்கள் வாங்கிவரத் தெரிந்திருந்தாள். அங்கேயெல்லாம் காய்கறிக் கடையிலே பேரம் இல்லை. இருந்திருந்தால் அதையும் செய்து மலிவு விலையில் எதையும் வாங்கிவரக் கூடியவள் அவள். ஊரிலுள்ள சந்தையிலே ஒரு நொட்டை சொல்லாமல் அவள் ஒரு சாமான் வாங்கி அவர் அறியார். முக்கியமானது, அவளுக்கு சில டொச் மொழிச் சொற்கள் பேசத் தெரிந்திருந்தது. வெற்றிலைப் பழக்கத்தை அவள் மறந்தே விட்டிருந்தாள். கிழவியால் எப்படி அது சாத்தியமானது என்று எப்போது நினைத்தாலும் அவருள் ஆச்சரியம் சுழித்தெழும். அவருக்கு சுருட்டுப் புகைக்கிற பழக்கம் இருந்தது. மென் புகையிலைச் சுருட்டு அங்கே கடையில் கிடைத்தது. ஆனாலும் பாடம் வைத்த சுதுமலைப் புகையிலையை எடுத்து, நரம்பு நீக்கி காப்பிலை வகிர்ந்தெடுத்து, தேவையான காரத்துக்கேற்ப தலைப்பு இடை சோணைப் புகையிலையெனக் கலந்து வைத்துச் சுருட்டிப் பற்றவைக்கிற சுகம் ஜென்மத்திலும் வேறெதிலும் கிடைக்காது. வரும்போது கொண்டுவந்திருந்த நீட்டுக் காம்பு ஐந்து புகையிலையும் முடிந்துபோக கொஞ்ச காலமாய் அங்கே விற்கிற ரபாக் என்கிற புகையிலைத் தூளை வாங்கி, அது சுற்றுவதற்கான கடதாசியில் சுற்றி பற்றவைத்துப் பார்த்தார்தான். தவனம் தணிக்கவில்லை அது. ஆனாலும் இன்றுவரை அவரது ஜீவனைப் பிடித்து வைத்திருப்பதும் அதுதான். ஒருநாள் கிழவியோடு மார்க்கெற்றுக்கு மருமகள் சொல்லியனுப்பிய தமிழ்ப் பட கசெற் எடுக்க கடைக்குப் போனபோது, அங்கே யாழ்ப்பாணப் புகையிலை மடித்து சுருட்டி பொலித்தீன் பைக்குள் போட்டு வைத்திருப்பதைக் கண்டுவிட்டார். கிழவருக்கோ பச்சையுடம்போடு பரலோகம் போன பரவசம். கிழவியை வளைத்து வாரம் ஒரு புகையிலைக்கு வகைசெய்து விடுகிறார். கிழவி இப்போதும் இளகும். பனி காலமாதலால் வெளியே போய் நின்று புகைக்க வாய்ப்பிருக்கவில்லை. தவனத்தில் ஹோலுக்குள்ளிருந்தே ஒருநாள் புகைத்துவிடுகிறார். பின்னர்தான் தெரிந்தது புகை வெளியேற சுலபமான இடம் இல்லாததால் புகையிலை நாற்றம் ஹோலுக்குள்ளேயே அடங்கிவிட்டிருப்பது. கண்ணாடி ஜன்னலைத் திறந்துவிட்டு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்விசிறியைச் சுழலவிட்டு.... ஒருவாறு நாற்றத்தைத் தணித்தார். ஆனாலும் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிய பின்பு விஷயத்தைக் கண்டுபிடித்துவிடுகிறான். சுருட்டுக்கு அன்று விழுந்த தடைதான். இப்போது அவ்வப்போது சிகரெட் புகைக்கிறார். ஆனாலும் பொச்சம் அடங்க மறுத்தே நிற்கிறது. வரவர ஊர்த் தவனம் வெருக்கிறது. வாய் திறந்தால் ஊர்க் கதையாகவே வந்து விழுந்து கொண்டிருக்கிறது. ஒடியல் கூழிலிருந்து மரவள்ளிக் கிழங்கு முறி அவியல் ஊடாக கறுத்தக் கொழும்பான் மாம்பழம் மரைக் கருவாடுவரை தவனம் வெடித்துச் சிதறத் துவங்கிவிட்டிருந்தது. கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய், 'ஊர்த் தவனமிருந்தால் திரும்பிப்போயிடலாம்' என்றே ஒருநாள் பிரபு கூறிவிடுகிறான். அது கண்டிப்புத்தானா உண்மையிலென்று அவருக்குச் சந்தேகம். ஏனெனில் இயல்பில் அச்சொற்களில் இருந்திருக்க வேண்டிய கடுமை இருக்கவேயில்லை. ஏதோ, தனக்கும் அது வந்துவிடக்கூடாது என்று ஒரு தடுப்புப் போடுவது போலத்தான் அதைச் சொல்லிவைத்ததாகத் தெரிந்தது அவருக்கு. ஆனாலும் அவர் அதன் பின் தன் தவனத்தை வெளிப்படையாகப் பேசுவதில்லை. மனத்துள் நினைத்து நினைத்து அழுங்கிக்கொண்டிருந்தார். ஏதாவதொரு பேச்சில் பூடகமாய் வெளிக்கிடுத்தி அவசம் தணிந்துகொண்டிருந்தார். தொலைக் காட்சிச் சினிமாவில் மனம் பதிக்காமல் அவர் பட்ட எண்ண வதையை பிரபுவும் கண்டான். ஞாயிற்றுக் கிழமையாதலால் பிரபு வீட்டில் இருந்திருந்தான் அப்போது. அவனுக்கு அவர் நிலை சிரிப்பாக இருந்தது. ஆனாலும் காட்டிக் கொள்ளவில்லை.

ஏழு மணிக்கு சினிமா முடிய சாப்பாடு நடந்தது.

சாப்பாடு முடிய சோபாவில் வந்தமர்ந்தார் கார்த்திகேசு.

பிரபுவின் மூத்தது வந்து பக்கத்தில் அமர்ந்து அவரது மடியில் சரிந்து படுத்துக்கொண்டு கதை சொல்லு தாத்தா என்றது.

பதினைந்து வயதாகிக்கொண்டிருந்தாலும் செல்லம் கொஞ்சமும் மாறாதிருந்தது. அவளுக்கு அடுத்ததாய் ஒரு பெண்ணும் ஒரு ஆணுமாய் இரண்டு பிள்ளைகள். இரண்டும் டொச் நன்றாகப் பேசும்கள். முக்கியமானது, அதுகளுக்கு தமிழ் பேசவே வராது. தமிழ்ப் படங்கள் பார்க்குங்கள். கமல், ரஜினி, விஜய் படங்களெல்லாம் கிட்டப்போயிருந்து ரசித்துப் பார்த்து அடுத்தடுத்த வீட்டுப் பிள்ளைகளுக்கு கதையும் சொல்லுங்கள். கவுண்டமணி, செந்தில் நகைச்சுவைக்கு விழுந்து விழுந்து சிரிக்குங்கள். மூத்தது மட்டும்தான் தமிழ் பேசும். கொஞ்சம் எழுத்துக் கூட்டி வாசிக்கும். அவ்வளவுதான். ஆனாலும் அந்தளவு தமிழ் தெரிந்திருந்ததனாலேயே தாத்தாவுக்கும் பாட்டிக்கும், இன்னும் சில தமிழ் தெரியாக் குழந்தைகள் உள்ள தமிழ் வீடுகளுக்கும் செல்லப்பிள்ளை ஆகியிருந்தாள்.

தாத்தாவுக்கு என்ன கதை சொல்வதென்று தெரியவில்லை.

அவள் ஏதாவது கேட்டால் அவரால் மறுக்கவும் முடிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கதைக்காக மனத்தைக் குடைந்தார்.

நல்லூர்ப் புறத்தில் அவர் வீடு. சின்ன வயதுள்ளபோது கடலோரக் கிராமத்துக் கதைகளெல்லாம் தவழ்ந்துவரும் அங்கே. கடல்பற்றிய, கடல் தேவதைகள்பற்றிய கதைகள் நிறையக் கேட்டிருக்கிறார். நிலாக் கால முற்றத்தில் மண் அளைந்தபடி கிடந்து கதை கேட்ட காலம்.... அவர் ஆயுளின் அற்புத காலம் ஆகும். அப்போது கதை சொல்கிற, கதை கேட்கிற கலாசாரம் கொடிகட்டியிருந்தது. நூறு நூறு கதைகள்.... இன்னும் அதிகமாகக்கூட. பின்னால் பாடப் புத்தகங்களிலும் அதுமாதிரியான கதைகள் வந்ததில்லை. அவரே ஆசிரியராக வந்தபிறகு, அந்தக் கதைகளை எழுத்துவழி சொல்லவும் யாருமில்லாமல் போனது கண்டு நெஞ்சு வேகியிருக்கிறது. தீவுக்கே உரித்தான கடற்கதைகளை தமிழ் இழந்தது அவருக்கு வெகுகாலம் பெரிய சோகம். பின்னால் கல்யாணம் நடக்க, மனைவியின் ஊரான மானிப்பாய்க்கே போய்விட்டார். அப்போதும் அந்தக் கதைகளை கொண்டே சென்றார். பிரபுவுக்குச் சொன்னார். கதை கேட்ட சின்னக் குழந்தைகளுக்கெல்லாம் சொன்னார். மேலும் நாற்பது வருஷங்கள் ஓடிய பிறகு இப்போது பேர்த்திக்குச் சொல்கிறார். அவர் மனத்தில் உறைந்திருந்த கதையெல்லாம் சொல்லியாகிவிட்டது. மாற்றி மாற்றியும்.... இரண்டை ஒன்றாக்கியும்.... ஒன்றைப் பலவாக்கியும்.... பல கதைகளின் ஆதாரத்தில் சில கதைகளை இட்டுக்கட்டியும்.... சிலவற்றை சுயமான கற்பனையிலும்.... இன்னும் எப்படிச் சொல்ல?

ஆனால் சொல்லாமல் விட்டுவிடவும் முடியாது.

அவள் விட்டுவிட மாட்டாள்.

திடீரென்று அவருக்கு மனத்துள் ஒரு உபாயம் உதித்தது.

தலையைப் பெரிசாக அசைத்து தானே அதை அங்கீகரித்தார். பேர்த்தியின் இடுப்பில் தூங்க வைக்கிற படிக்கான சீரான தட்டுதல் போட்டார். முன்னே அமர்ந்திருந்து தன் கைப்பெட்டியில் எதையோ தேடிக் குடைந்துகொண்டிருந்த பிரபுவைப் பார்த்து, 'மகனே.... ஊர்ப் பேச்சு எடுக்கக்கூடாதெண்டியா.... இப்ப நீயும் அதைக் கேளு....' என்று மனத்துள் ஒரு வெற்றிக் களிப்புடன் எண்ணிக்கொண்டு சொல்லத் தொடங்கினார்.

கதை சொல்வதென்பது நிகழ்வுகளைச் சொல்வது என்பது அல்ல. ஒழுங்காகச் சொல்லப்படும் நிகழ்வுகள் சம்பவமாகுமே தவிர கதையாகாது. அது வேறொரு கலை. கேட்பவர் பாவம் பிரகாசிக்கப் பிரகாசிக்க தானே பாத்திரமாய் மாறும் அற்புதக் கலை அது. அது ஆளை அசத்துவதை மெய்யாகவே முதன்மையாகக் கொண்டது. அவருக்கு அது கைவந்தது. அவரின் சின்ன வயதுக் காலத்திலே அம்மா கதைசொல்வதைக் கவனித்துக் கற்ற வித்தை அது. பலபேருக்கும் சொன்னதெல்லாம் ஏனோ பாட்டிகள் பாட்டன்களாகத்தான் இருந்திருக்கிறது. அவருக்கு அம்மா சொன்னாள் கதை. அவளுக்கே கதை சொல்வதில் இன்பம். கதை சொல்ல ஆரம்பிக்கும்வரைதான் ஆக்கினை பிடிக்கவேண்டும். தொடங்கிவிட்டால்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவி நுகர் கனிகளாய் தொப் தொப்...பென்று காதைகள் சொரியும். சத்தம் போடவேண்டாமென்று தூங்கப்போகிற அப்பா உறுக்குவார். அப்போதும் காதுக்குள்ளாயாவது கதையைச் சொல்லி முடித்த பிறகே நிறுத்துவாள். அப்படியானவளிடம் கற்ற வித்தை அவரது.

ஆக... தொண்டையைக் கனைத்தார். சிறிதுநேரம் கதையில் கவனம் குவித்தார். கதை பிறக்கத் துவங்கிற்று: "நீ பிறந்த ஊரான மானிப்பாயில இருந்ததுதான் மேற்குப் பார்த்த பிள்ளையார் கோயில்..."

"சாமிக் கதை வேண்டாம், தாத்தா. சீலா மீன் கதை சொல்லுங்கோ..."

"எத்தினை முறை சொல்லியாச்சு அந்தக் கதை..."

"பறவாயில்லை, இன்னுமொருக்காச் சொல்லுங்கோ."

"இது சீலா மீன் கதையைவிட நல்லாயிருக்கும். பிள்ளையாருக்கு கோவம் வந்த கதை..."

"பிள்ளையாருக்கு கோவம் வந்ததோ..."

"ம்..."

"அப்ப சொல்லுங்கோ, தாத்தா."

"வெள்ளைக்காறன் அங்க ஆண்ட காலத்தில.... மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில வேதக்கோயில் ஒண்டு கட்டினாங்கள். அது தற்செயலாய்.... ஆஸ்பத்திரிக்கு எதிர்ப்பக்கத்திலயிருந்த பிள்ளையார் கோயிலுக்கு நேர் முன்னால அமைஞ்சு போச்சு. பிள்ளையார் கோயில் சின்னது. அதுக்கு முன்னால வெள்ளைக்காறன் கட்டத் துவங்கின வேதக் கோயிலோ நீள அகலத்தாலயே தன்ர பிரமாண்டம் காட்டி திகைக்க வைச்சிட்டுது. சைவக்காறர் ஒருத்தருக்கும் இது விருப்பமில்லை. எண்டாலும் வெள்ளைக்காறன் ஆதரவோட வேதக்காறச் சுவாமிமார் கட்டுவிக்கிறதால அதைத் தடுக்க ஏலாமல் சும்மா பாத்துக்கொண்டிருக்க மட்டுமே செய்தினம். சரியா?"

"ம்!"

"வேதக் கோயில் விறுவிறுவெண்டு உசந்து பாதிப் பனை உயரத்துக்கு வந்திட்டுது. இது அங்கயிருந்த சைவ ஆக்களுக்கு மட்டுமில்லை, பிள்ளையாருக்குமே பிடிக்கேல்லை. அவரும் சாடைமாடையாய் தன்ர அதிருப்தியைக் காட்டத்தான் செய்தார். எப்பிடித் தெரியுமோ?"

"எப்பிடி, தாத்தா?"

"மேல நிண்டு கட்டிடம் கட்டின மேசன் சாரம் கழண்டு விழுந்து கை முறிஞ்சான்; கட்டிட பூச்சு வேலைக்கு மண் ஏத்தி வந்த மாட்டு வண்டில் றோட்டுக் கானுக்குள்ள சரிஞ்சு விழுந்ததில மாடு ஒண்டு செத்துது; கொன்றாக்ரர் சரவணைக்கு கனவில போதும்.... போதும்.... இதுக்கு மேல போகாத எண்ட சூசகமான குரல் கேட்டுது. ஆனால் ஒருத்தரும் அதைப் பொருள் செய்யேல்லை. சரியா?"

"ம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதால பிள்ளையார் என்ன செய்தாரெண்டால்.... ஒரு நாள் ராவோடு ராவாய் பேசாமல் வேதக்கோயிலுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு திரும்பி இருந்திட்டார். பிள்ளையார் என்ன செய்தார்?"

"வேதக் கோயிலுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு திரும்பி இருந்திட்டார்."

"ம். அடுத்த நாள் காலமை பூசை பண்ண அய்யர் வந்திருந்திருக்கிறார். பிள்ளையார் முதுகுகாட்டிக்கொண்டு இருக்கிறதைப் பாத்து திடுக்கிட்டுப் போனார். அடுத்த நிமிஷமே அலறியடிச்சுக்கொண்டு ஓடிப்போய் அயலில சொல்ல.... ஊரே திரண்டு வந்து பாத்தது. கிழக்கு வாசல் கோயிலில, கிழக்குப் பாத்திருந்த பிள்ளையார் ஏன் வாசலுக்கு குண்டியைக் காட்டிக் கொண்டு மேற்குப் பாத்தபடி இருக்கிறாரெண்டு ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அங்கன அங்கன நிண்டு ரண்டுபேர் மூண்டு பேராய் ஆக்கள் கூடிக்கூடிப் பேசிக்கொண்டிருந்தினம்...."

பேர்த்தியின் ஆர்வம் மெல்ல ஆரோகணித்தது. "பிறகு....?"

"யோசி யோசியெண்டு யோசித்தும் அதுகின்ர காரணம் ஒருத்தருக்கும் தெரியேல்லை. அதால.... தெய்வ சொரூபங்களெல்லாம் கிழக்குப் பாத்திருக்கவேணுமெண்ட ஆகம விதிப்படி.... பிள்ளையார் சிலையைப் பெயர்த்து மறுபடியும் கிழக்குப் பாக்க வைச்சு சுண்ணாம்பு வாழைப்பழம் சக்கரை சமச்சீரில் கலந்த சாந்தால பூசிவைச்சினம். பகல் கழிஞ்சுது. ரா ஆச்சா...."

"ம்!"

"கோயிலைப் பூட்டிக்கொண்டு அய்யர் போயிட்டார். அடுத்த நாள் வெள்ளெண எழும்பி காலைப் பூசை வைக்க ஆயித்தமாய் கோயிலுக்கு வந்திருக்கிறார் அய்யர்...."

"ம்!"

"கதவைத் திறந்துகொண்டு உள்ள போயிருக்கிறார். உள்ள போய்ப் பாத்தா.... திரும்பவும் பிள்ளையார் வாசலுக்கு குண்டிப் பக்கத்தைக் காட்டிக்கொண்டு இருக்கிறார்...."

வெடித்துச் சிரித்தாள் ஆனந்தி - அவரது பேர்த்தி.

முன்னால் அமர்ந்திருந்த பிரபுவும் சிரித்தான் அடக்க முடியாமல்.

"பிறகு என்ன ஐயா செய்தினம்?" பிரபு கேட்டான்.

"பிறகு என்ன? பென்னாம் பெரிசாய் தனக்கு முன்னால வேதக்கோயில் எழும்பி நிக்கிறத விரும்பாமல்தான் பிள்ளையார் திரும்பித் திரும்பி இருக்கிறாரெண்டதை எப்பிடியோ யோசிச்சுப் பிடிச்சினம். ஊரில அது பெரிய அதிசயமாய்ப் போனதால நிறையச் சனம் வந்து வந்து பாத்து கும்பிட்டுப் போச்சுதுகள். ஊர்க்காறரிட்டயும் இனி பிள்ளையார் அந்தப்படியே இருக்கட்டும் எண்ட எண்ணம்தான் வந்துது. அதால கோயிலைப் பிரிச்சு முடிஞ்சளவு பெரிசாய்க் கட்டி மேற்கு வாசல் வைச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிச்சினம். கும்பாபிஷேகத்தையும் சிறப்பாய்ச் செய்விச்சினம். அதிலயிருந்துதான் அந்தப் பிள்ளையார் மேற்குப் பாத்த பிள்ளையார் ஆனார்; கோயிலும் மேற்குப் பாத்த பிள்ளையார் கோயில் ஆனது."

கதை முடிந்தது.

ஆனந்தி படுக்கப் போய்விட்டாள்.

அவரும் கூடத்துள் மெத்தையைப் போட்டுப் படுத்துக் கொண்டார்.

அவர் கதை சொல்லிய தீவிரம், அவருள்ளிருந்து கனன்ற ஊர்ப் பிடிமானம் யாவும் வெகுகாலமாய் அவனுள்ளிருந்து திகைப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

அவரால் தன் மண்ணை மறந்துவிட முடியாது.

தன்னாலேயே முடியவில்லையே!

தன் மகள் ஆனந்தி மறப்பாள். மற்ற இரு பிள்ளைகளுக்கும் அந்த மாதிரியான மறுத்தல் நிலைகூட இல்லை. ஏனெனில் அது அவர்களுக்கு முந்தையர் வாழ்ந்த மண்மட்டுமே. இதுதான் - ஜேர்மனிதான் - அவர்கள் சொந்த மண்.

அவர்களை மிக்க ஒரு சிரமத்தில் தமிழர்களாய் மாற்ற முடியும். ஆனால் ஆனந்தியை மீட்டெடுப்பது சுலபம். அவளால் மொழி, கலாசார, இன உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியும்.

தீவிரமாய்க் கவனம் செலுத்தப்படவேண்டிய அம்சமாய் அது இருந்ததை அவன் கண்டான்.

அதற்கான ஒரு வழிகுறித்து அவன் ஆலோசிக்கவே வேண்டும். தன் நிலைமையிலுள்ள வேறு பெற்றோர்களையும் அவன் சந்தித்துப் பேசத் தீர்மானம் கொண்டான்.

ஜேர்மனி முழுக்க அவன் மாதிரித் தமிழ்ப் பெற்றோர் நிறைய இருப்பார்கள் என்பதில் அவனுக்குப் பூரண நம்பிக்கை இருந்தது.

## 54

தான் தன் குடும்பம் தன் நண்பர்கள் சிலருமென்று அவனுடை வட்டம் மிகவும் சுருங்கியது. பெரிதான வாசிப்புப் பழக்கமும் இல்லை. அதனால் பண்பாட்டு விசயமாக கொஞ்சமேனும் அவனால் சிந்திக்க முடிந்தது பெரிய விஷயம்.

பிரபுவின் பின்புலம் மிக்க விசித்திரங்களும் அதிர்ச்சிகளும் கொண்டது. ஆனாலும் அரசியல் நிலைமைகளின் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிலைகள் அவனுக்கு ஏற்பட்டனவெனச் சொல்வது சிரமம். அரசியலில் ஒரு எதிர்கலாச்சார அங்கமாக அவன் சிந்தனை இருந்ததெனினும் அவனது தப்புகை அதன் செயற்பாடு காரணமாக விளைந்ததில்லை. தரைவழி ஐரோப்பா என்கிற வலுத்த கனவொன்று ஒரு சில பம்பாயிலிருந்த இலங்கைத் தமிழ் இளைஞர்களிடையே இருந்தது. கப்பலில் வேலை பெறுவதற்கான பணமில்லாதவர்களின் ஒரே வழியாகவும் அது இருந்தது. பிரபு ஸ்பெயின் சென்றது பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் ஈரான் பின் துருக்கி முதலிய பல்வேறு நாடுகளூடான பயணத்தில்தான். அந்தக் காலம் இலகுவில் அவனால் மறக்கப்படமுடியாதது.

ஸ்பெயினில் பார்ஸிலோனா நகரிலுள்ள ஒரு பழைய மாடிக் கட்டிடத்தில் ஏழெட்டு தமிழ் இளைஞர்கள் தங்கியிருந்த ஒரு வீட்டில் அவனுக்கு இடம் கிடைத்தது.

பார்ப்பதற்கு சுமாரான உடம்பு என்றேதான் தெரியும். ஆனாலும் அதன் உறுதி ஒவ்வொரு அசைவிலும் எழுதியிருந்தது. இன்னும் ஆழமாக நோக்கினால் அந்த உறுதிக்கு அந்த உடம்புகூட அல்ல, உள்ளத்தின் வலிமையே காரணமாக இருந்ததென்பது விளங்கும். சிரிக்க மறந்தவன்போல் ஒருவகை விறைத்த முக்தோடும் மனத்தோடும்தான் அவன் ஸ்பெயின் வந்திருந்தான்.

அந்த மாடிக் கட்டிடத்தின் பெரும்பாலான அறைகளில் ஆபிரிக்க இளைஞர்கள் தங்கியிருந்தாகள். சில அறைகளில் வறிய ஸ்பானிய குடும்பங்கள். கஞ்சா கசிஸ் விற்பனைகளினதும் விபச்சாரத்தினதும் மய்யமாய் அந்த இருண்ட கட்டிடம் ஆகியிருந்தமை அங்கு சென்ற சில நாட்களிலேயே தெரிந்துவிட்டாலும், அங்கிருந்து உடனடியாகவே வெளியேறிவிட அவனால் முடியவில்லை. பின்னால் சில வாரங்களில் அந்த அழுக்கும், இருண்ட மாடிப் படிகளும், மாடிப்படிகளில் தலைகுத்தியபடியிருக்கும் கறுப்பு வெள்ளையின இளைஞர்களும், ஆங்காங்கே ஸ்பானிய கறுப்பின அராபிய தேவடியாள்கள் வெறியிலும் களியிலும் கிரீச்சிடும் ஆரவாரமும் எல்லாம் பழக்கமாகிப் போய்விட்டது. அந்தக் கட்டிடத்தில் அவனுக்கான ஒரு வசதி அறைகளுக்கான வாடகைக்கு அப்போது நெருக்குதல் குறைவாயிருந்ததுதான். கட்டிடம் இடித்தழிக்கப்பட்டு அந்த இடத்திலே பல்லடுக்கு குடியிருப்பொன்று நிர்மாணம் பெறவிருந்ததாய் கடந்த ஐந்தாறு மாதமாகவே ஒரு பேச்சு இருந்துகொண்டிருந்தது. பின்னால்தான் வௌவால்களும் எலிகளும் அங்கே வந்திருக்கவேண்டும்.

தமிழ் இளைஞர்கள் சிலர் நடாத்திக்கொண்டிருந்த ஒரு கராஜிலே பிரபு வேலை செய்யத் துவங்கியிருந்தான். வேலையென்பது காலையிலே போய் மதியம்வரை அதையிதைச் செய்துவிட்டு பக்கத்து சீனக்காரன் ஒருவனின் றெஸ்ரோறன்ரிலே பியரும் பொரித்த கோழி இறைச்சியும் சோறும் சாப்பிட்டுக்கொண்டு மாலைவரை நேரத்தைக் கடத்துவதைத்தான். மெக்கானிஸத்துக்கும் பிரபுவுக்கும் ஒட்டு உறவு இல்லை. ஆனாலும் கைச்செலவுக்கும் மதியச் சாப்பாட்டுக்குமாக அதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தோடு பயின்றான். அந்த நேரத்திலேதான் கராஜ் முதலாளியான ஆனந்தனோடு அவனுக்கு ஆழமான சிநேகம் ஏற்பட்டது. ஆனந்தன் அற்புதமான மெக்கானிக் மட்டுமில்லை, அதிசிறந்த உலோக ஒட்டுத் தொழிலாளியுமாவான். முன் பின்னாய் மோதி உருக்குலைந்த இரண்டு ரொயாட்டாக்களை, இரும்பு விலைக்கு வாங்கி வந்து, ஒட்சிசன் கொளுந்தில் இரண்டாய் வெட்டி, நசிந்த பகுதிகளை நீக்கிவிட்டு ஒரே காராய் ஒட்டி உருவாக்க அவனால் முடியும். அதுமட்டுமில்லை, காருக்கு லாரி என்ஜினைப் பொருத்தி சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு கூடுதலான விலைக்கு விற்றுக் கொண்டுமிருந்தான். அவன் அவ்வாறு தயார் செய்த வண்டியை அதிநவீன பொலிஸ் வண்டியினால்கூட துரத்திப் பிடிக்க முடியாதிருந்தது. அந்தத் தொழில் நுட்பத்தின் ரகசியம் அனைவரையும் திகைக்கவைத்தது.

ஆனந்தன் ஸ்பெயின்காரி ஒருத்தியை திருமணம் செய்திருந்தான் ஏற்கனவே. அவன் பேசுகிற ஸ்பானிய மொழியும் அற்புதமாயிருக்கும். 'பறவையை எல்லாரும் கல்லால விழுத்துவினம்; நான் சொல்லாலயெல்லோ விழுத்தினது!' என்பான். அவர்கள் இருவருக்குள்ளும் அப்படியொரு காதல் இருந்தது. இவையெல்லாம் அவன்போல் வந்தேறு குடிகளிடம் பொறாமையை விளைத்துவிட்டன என்றுதான் சொல்லவேண்டும். அதன் விளைவுதான் மட்ரிட்டிலிருந்த சண்டியன் இம்தூர் பார்ஸிலோனா வந்தது.

அவன் கூலிப்படைக்காரனென்பது ஆனந்தனுக்கு தெரிந்தபோது சிறிது கலங்கவே செய்தான். ஆனந்தனுக்கு அடங்கிப்போவதே எண்ணமாக இருந்தது. கப்பம்போல் ஒரு தொகையை ஆண்டில் ஒன்று இரண்டு முறை கொடுக்கவும் அவன் தயாராக இருந்தான். இந்நிலையில் ஒருநாள் இம்தூருக்கும் பிரபுவுக்கும் சீன உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட சிறிய நிகழ்வு பெருந்தகராறாக விளைந்துவிடுகிறது. தான் எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தப்பட்டுவிட்டதாய் உணர்ந்த பிரபு, ஆனந்தனைக்கூட யோசிக்கவில்லை. 'சரியான ஆண்பிள்ளையாய் இருந்தால் வா வெளியே' என்று விட்டு வீதிக்கு வந்துவிட்டான். கேட்டு இம்தூர் சிரித்தான். ஆறரை அடி உயரத்தில் கோட்ஸில்லா போன்ற அவன் எங்கே, ஐந்தரை அடி உயரமும் அவனதில் பாதியளவு உடம்பும் பெற்றிருந்த பிரபு எங்கே!

அநாயாசமாக எழுந்துசென்றான் சண்டைக்கு.

உள்ளே சண்டை நடக்காமல் வெளியே அது களம் மாறிவிட்டது உணவக சீனக்காரனுக்கு பெரிய திருப்தி. அதனால் உடனடியாக பொலிஸுக்கும் அது அறிவிக்கப்படவில்லை.

அன்றைக்கு சிலோன்காரர்களுக்குப் பாடம் புகட்டி விடுகிற வீறு இம்தூருக்கு.

பலமும் முரட்டுத்தனமுமே சண்டையில் பிரதான அம்சமென எண்ணியிருந்த இம்தூரியை, வேகமும் சமயோசிதமுமே அதிபிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களென்பதை அன்று அந்தத் தெருச் சண்டையில் நிரூபித்தான் பிரபு. உண்மையில் பலம் என்பது பிரயோகிக்கத் தெரிந்தால்தான் பயனுள்ளதாகிறது.

பத்து நிமிஷங்களுக்கு மேல் நடந்த அச்சண்டையில் மலைபோல் அக்குறுந்தெருவில் விழுந்துகிடந்தான் இம்தூர்.

அதன் பிறகுதான் பிரபு இடுப்பிலே றிவால்வருடன் எந்நேரமும் திரிய ஆரம்பித்தது. உண்மையில் அன்றோடு தகராறும் தீரவில்லைத்தான். இம்தூர் உள்ளூர் மாபியா கும்பலுடன் ஒருநாள் பிரபுவின் அறைக்கே சென்று சண்டை செய்ததும், தொடர்ந்த துப்பாக்கி வேட்டும், யாரோ பயங்கரமாய் அலறியதும், உடைந்த மாடி மரப்படிகளில் தொம் தொம்... மென ஓசை கிளர்த்தியபடி காலடிகள் ஓடி மறைந்ததும் அதன் தொடர் நிகழ்வுகளாயின. பொலிஸ் வந்தபோது பிரபு அறையிலே இருக்கவில்லை. ஓடி மறைந்தது பிரபுவென்று கூட இருந்தவர்கள் அனுமானித்தனர். பின்னால் விசாரணையில் தான் தெரியவந்தது இம்தூரியை றிவால்வரால் சுட்டுக் கொன்றதாலேயே பிரபு அவ்வாறு தப்பியோடினான் என்பது.

இத்தனையும் நடந்தது 1983 ஆடியின் முன்பு.

1981 ஜூனுக்கே முன்பும்.

## 55

மனைவி பிள்ளைகளை ஜேர்மனிக்கு அழைத்துக்கொண்ட பின்னர் நல்ல சில நண்பர்களும் போதிய வருமானம் தரும் வேலையொன்றும் அமைந்துவிட ஜேர்மனியிலேயே அவனது இருத்தல் நிச்சயமாகிவிடுகிறது. அவனது வாழ்க்கை பெரும்பாலும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் கழிந்து கொண்டிருந்து போலவே தோன்றிற்று. ஆனால் உள்ளே ஒரு உள்ளக் குறுகுறுப்பு இருந்துகொண்டிருக்கவே செய்தது. அவ்வப்போது ஜேர்மானிய பிபிசி தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்ட இலங்கைப் போர் நிலைமைகள் பற்றிய செய்தி, செய்தி விவரணக் காட்சிகள் அவனது மனத்தை வெகுவாய்த் தொந்தரவு செய்தன. ஒரு உசுப்பலில்போல் விழித்து மனம் அவ்வப்போது சோகத்திரை விரித்துக் கிடந்தது. ஆனாலும் செயற்பாட்டுக்கான பெரும் உந்துதல் எதனையும் அவன் அதுவரை பெற்றுக்கொள்ளவில்லை.

அதை ஏற்படுத்தியது ஆனந்தியின் மொழி, பண்பாட்டு ஈடாட்டம் பற்றிய அக்கறைதான்.

அவன் சொன்ன பண்பாட்டுத் தேவையின் அவசியத்தை அவன் சென்று பேசிய எல்லாரும் ஏற்றுக்கொண்டார்கள். அரசியல் சேர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கிய அமைப்புக்கள் சில பண்பாட்டுக் கூறுகளைப் பேசின. மொழிக் கல்வி முயற்சிகளும் சில தனி மனிதர்களின் கூட்டு முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஒட்டுமொத்தமாய் தமிழர் அனைவருக்குமான ஓர் கலாச்சாரப் பேரவை அங்கே இருக்கவில்லை.

அதை அமைப்பது குறித்த ஓர் ஆலோசனைக் கூட்டம் ஒருநாள் பிரபுவின் வீட்டிலே கூட்டப்பட்டது. சிறந்த சமூக சேவையாளரான டொக்ரர் மாணிக்கவாசகமும் அதில் கலந்து கொண்டார். கார்த்திகேசு பல நல்ல திட்டங்களை, அபிப்பிராயங்களை முன்மொழிந்து பலரின் கருத்துக்களை தெளிவாய் வெளிக்கொணரவும் உதவினார்.

'பண்பாட்டு விஷயமெல்லாம் நீங்கள் சொல்லுறது சரிதான். புதிய ஜேர்மனியின் அரசியல் கொள்கை அகதிகள் விஷயத்தில் எப்பிடியிருக்குமெண்டு முதலில தெரியவேணும். அதுக்கு மேலதான் போதனா மொழி விஷயம், பண்பாட்டு விஷயங்களைப் பேசுறது நல்லது' என்று யாரோ ஒருவர் கூறினார்.

அதுபற்றி ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் அறிந்தளவுக்கு அபிப்பிராயங்களைச் சொன்ன பின்னர் அக்கருத்தோட்டங்களின் தொகுப்புரையாக மாணிக்க வாசகம் சொன்னார் : 'ஒன்றுபட்ட ஜேர்மனியில் நாஜித்தனமான ஒரு வெறுப்போட்டம் ஜேர்மானியர் அல்லாதார்மீது இருந்தாலும் அது கறுப்பின மக்கள்மீதும், அல்ஜீரிய துருக்கி முஸ்லீம்கள்மீதுமே அதிகமாகக் காட்டப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானியர் இந்தியர் அளவுக்குக்கூட இலங்கைத் தமிழரை அவர்கள் வெறுத்தொதுக்கவில்லையென்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்த துவேஷ எகிறல், பேர்லின் சுவர் தகர்ந்ததின் உடனடி விளைவாகவே இருந்தது. இணைப்பின் பின் துல்லியமாய்த் தெரிந்த கிழக்கு - மேற்கின் பொருளாதார சமமின்மையும், வேலையில்லாப் பிரச்சினையின் கணிசமான புள்ளி விகித அதிகரிப்பும்தான் அவ்வாறான துவேஷத்தைக் கெம்பியெழச் செய்தன என்பதை விளங்கிக்கொள்ள முடியும். தம்முள் வாழ்க்கை வசதிகள்பற்றிய அவா வெகுத்து சுவருடைத்து ஓடிவந்தவர்கள், மேற்கு ஜேர்மனியின் செல்வம் அந்நியர்களால் கொள்ளையிடப்படுவதாக நினைத்துக் கொதித்துவிட்டார்கள். இப்போது அந்தத் துவேஷ அலை பெருமளவு அடங்கிவிட்டது. இன்னுமொன்று.... எங்களில் பலருக்கு நிரந்தர வதிவிட உரிமையும் கிடைத்திருக்கிறது. சில இளைஞர்கள் மணங்களின்மூலம் குடியுரிமையே பெற்றிருக்கிறார்கள். அகதிகளாய் வந்த பலருக்கு ஜேர்மனியிலேயே குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இவர்களையெல்லாம் திருப்பியனுப்பிவிட முடியாது. நேர்வதாயிருந்தால்.... மிகவும் பின்னால் வந்த தனியாட்களுக்குத்தான். ஏதாவது குற்றத்தில் சிறைத் தண்டனை பெற்றோருக்கும் அவ்வாறு ஏற்படக்கூடும். மற்றும்படி யாரும் அதுபற்றி அஞ்சவேண்டியதில்லை. அதனால் நம் பிள்ளைகளின் / பேரப்பிள்ளைகளின் கல்விமொழி எதுவாக இருக்கவேண்டும், தொடர்பு மொழி எதுவாக இருக்கவேண்டும் என்று நாம் தீர்மானிக்க வேண்டியதுதான்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாக ஆக கலாச்சாரப் பேரவையின் அவசியம் அனைவராலும் உணரப்பட்டது.

அதை 93ம் ஆண்டு தமிழ் வருஷப் பிறப்புத் திருநாளில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்கள். தமிழர் கலாசாரப் பேரவையின் தலைவராக மாணிக்க வாசகமும், செயலாளராக குலேந்திரன் என்ற இளைஞனும், பொருளாளராக வே. குருமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபையில் கார்த்திகேசு இடம் பெற்றார். அதிகாரபூர்வமான உத்தியோகத்தனாய் இருக்க பிரபு மறுத்துவிட்டாலும் பேரவைக்கு வெளியே இருந்து சேவை செய்கிற உறுதியை அளித்தான்.

பேரவை இயங்கத் தொடங்கி ஒரு சில வாரங்களிலேயே அதன் உறுப்பினர் தொகை இரட்டிப்பாகியது.

இந்நிலையில் பிரமாண்டமான ஒரு பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு நிர்வாக சபை திட்டம் தீட்டிக்கொண்டிருந்தது.

அதற்கிடையில் பிரான்ஸ் கிளையை அமைக்கிற திட்டத்தின் முதல் நடவடிக்கையாக மாணிக்கவாசகமும் பிரபுவும் பிரான்ஸ் சென்றனர்.

நாந்து நகர் சென்று சுதனையும், சந்திரமோகனையும் சந்தித்து நிலைமைகள் குறித்து ஆலோசித்த பின்னர் சுதனையும் சந்திரமோகனையும் அழைத்துக்கொண்டு பாரிஸ் சென்றனர். பாரிஸில் தெரிந்த ஒரு நண்பனின் வீட்டில் மூவரும் தங்கி, முக்கியமானவர்களைச் சந்தித்து பிரான்ஸ் தமிழர் கலாச்சாரப் பேரவைக் கிளை திறக்கிறது பற்றி ஆலோசனை கேட்டனர்.

பண்பாட்டு விழுமியங்களுக்கான அக்கறை அவசியமென்பதை அவர்கள் உணர்ந்தேயிருந்தனர். முன்முயற்சிகள்தான் செய்யப்படாமலிருந்தன. மேற்கு, குறிப்பிடத்தகுந்த ஒரு விகிதம் இலங்கைத் தமிழரை மொழி பண்பாடு அறியாத குருவிக்கூட்டமாய் ஆக்கிவைத்திருப்பதைத் தடுக்கிறதைவிட, அரசியல் காழ்ப்புகளிலும் இயக்க விரோதங்களிலும் அவர்கள் விழுந்துகிடந்தனர். மொழி, கலாச்சார காபந்து நடவடிக்கையின் அவசியம் குறித்து மாணிக்கவாசகம் விரிவாகச் சொன்ன பிறகு தயக்கம் நீங்கி பேரவைக் கிளை அமைக்க முன்வந்தனர். சுதனைத் தலைவராகக் கொண்ட நிர்வாக சபை அமைத்தாயிற்று, இந்நிலையில்தான் முழு ஐரோப்பிய தமிழரையும், முடிந்தால் சர்வதேச தமிழரையுமே பேரவையின் கீழ் ஒன்றிணைக்கும் சிந்தனை அவர்களிடத்தில் ஏற்பட்டது. விரைவில் கனடா சென்று கிளை அமைக்கிற முடிவோடு மாணிக்கவாசகமும் பிரபுவும் ஜேர்மனி திரும்பினர்.

இது நிகழ்ந்து மூன்று மாதங்களில் பேரவையின் பிரான்ஸ் கிளை கலாச்சார முக்கியத்துவத்தை முன்னிறுத்தி பாரிஸில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்தை நடத்தி முடித்தது. அந்தளவில் நோர்வே, சுவிஸ், டென்மார்க், இங்கிலாந்து முதலிய நாடுகளில் பேரவைக் கிளைகள் அமைக்கப்பட்டு முடிந்திருந்தன. அப்போதுதான் 'தமிழர் பண்பாடு'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காலாண்டிதழ் நோர்வேயின் ஒஸ்லோ நகரிலிருந்து வெளிவரத் துவங்கியது. பேரவையின் நோர்வேக் கிளை சார்பில் வெளிவந்த தமிழர் பண்பாடு சர்வதேச தமிழர் கலாச்சாரப் பேரவையின் கொள்கைகள் செயற்பாடுகள் கலாமுயற்சிகளைப் பேசிற்று. புலம்பெயர் தமிழரின் இலக்கிய ஆக்கங்களின் வெளிப்பாடாய் அது இருந்தது. அதன் ஆசிரியராக கவிஞர் செயந்திரன் என்ற இளங்கவிஞன் இருந்து செயல்பட்டான்.

தமிழர் பண்பாடு சமாதான மலர் வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருந்த அத்தருணத்தில், இலங்கையின் இன யுத்தத்தை முடிவுக்கக் கொண்டு வருவதற்கான அவரவரின் திட்டத்தை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருந்த வேட்பாளர்களிடம் அது வெளியிட அதிகாரத்தோடு சொன்னது. சமாதானத் தீர்வில்லாவிட்டால் தேர்தலைப் பகிஷ்கரிக்க அது இலங்கை மக்களுக்கு அறைகூவல் விடுத்தது.

சர்வதேச அமைப்புக்களின் கவனத்தை பேரவை கவர்ந்தது இப்போதுதான்.

சமாதானத்தை வற்புறுத்திய ஓர் அமைதிப் பேரணியை பிரான்ஸ் கிளை ஏற்பாடு செய்தது. பேரவைக் கிளைகளுள்ள அக்கம்பக்க நாடுகளிலிருந்தும் நிறையப் பேர் வந்து ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஐரோப்பாவில் குளிர் தொடங்குவதற்கு முன்பாகவுள்ள புரட்டாதி மாதத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமை பேரணி நடந்தது. இருந்தும் பல வசதியீனங்களையும் பொருட்படுத்தாமல் பல நூற்றுக்கணக்கான பேர்கள் அதில் கலந்து கொண்டமையை, அப்போது கனடாவில் ஸ்காபரோ நகரில் இருந்த பிரபுவும் மாணிக்கவாசகமும் தொலைக்காட்சிச் செய்தியில் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

அன்றிரவே ஸ்கார்பரோவிலிருந்து சுதனுக்கு போன் எடுத்தான் பிரபு. “சுதன்....!”

“சொல்லு.... ரீவி பாத்தியா?”

“பாத்தன். நம்ப ஏலாத கூட்டம். இப்ப நான் ரெலிபோன் அடிச்சதே உன்னைப் பாராட்டுறதுக்காகத்தான்.”

“எங்களையெண்டு சொல்லு.... இதில எல்லாரும்தான் கஷ்ரப்பட்டு வேலை செய்தது. அதுக்குமேல சூழ்நிலைக் காரணிகளும் இருந்திருக்கு.... அதாவது இதை காலத்தின்ர தேவையெண்டும் சொல்லலாம். தங்கட உணர்ச்சிகளை வெளியிட வாய்ப்பில்லாமலிருந்த எங்கட சனம், நாங்கள்தான் தங்கட குரலை எதிரோலிக்கிற சரியான அமைப்பெண்டு நம்பினவுடன.... ஆதரவு குவியத் துவங்கியிட்டுது. இதில.... பெரிய பங்கு உனக்கும் இருக்கு, பிரபு. Brain Child எண்டு சொல்லுவினமே அதுமாதிரியான உன்ர மூளைக் குளவிதான் பேரவை. அதை சரித்திரம் ஒருநாளும் மறந்திடாது.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைவிடு. ஊர்வலத்துக்கு ஏதோ இடைஞ்சல் வந்துதாமே.... என்ன அது?

"இயக்கங்களின்ர தலையீடுதான்; வேற என்ன? ஊர்வலம் நடத்துறத ஒரு இயக்கமும் விரும்பேல்லை. சுருக்கமாய்ச் சொன்னால் பேரவை உருவானதையே அவை விரும்பேல்லையெண்டுதான் சொல்லவேணும்."

"இருக்கலாம். சாதாரணமான ஒரு அமைப்பாய் பத்தோட பதினொண்டு எண்டமாதிரி இருந்திருந்தால் அவை தலையிட்டிருக்க மாட்டினம்."

"வருங்காலங்களில இன்னும் நல்லமாதிரிச் செய்ய முடியுமெண்ட நம்பிக்கை இப்பதான் எனக்கு வந்திருக்கு, பிரபு."

"ஸ்கார்பரோவில ரீவி பாத்திட்டு இஞ்சத்தக் கிளை ஆக்களும் அதைத்தான் சொல்லுகினம். நல்லது. ஷீலா எங்க? நான் விசாரிச்சதாய்ச் சொல்லு. சந்திரமோகன் அவ்வளவு உற்சாகமாய் இல்லைப்போல இருக்கு... இன்னொரு முறை நேரில சந்திக்கும்போது விரிவாய்ப் பேச இருக்கிறன். நான் கேட்டதாய் சந்திரமோகனிட்டயும் சொல்லு. இன்னும் ரண்டு மூண்டு நாளில ஜேர்மனி போயிடுவன். போனபிறகு எடுக்கிறன். வைக்கட்டே...?"

பேரணி வெற்றியில் பெருமளவு இலங்கைத் தமிழரும் மகிழ்ந்திருந்தனர்.

அது நல்லது என காலம் முனகியதுபோல காற்று வீசியது.

நாளை அது மகாதேவையாகுமென்று, முன்னுதாரணங்களிலிருந்து சரித்திரம் ஓங்கி ஒலித்தது.

இரண்டு வாரங்கள் கழித்து.... அந்தச் செய்தியைப் பத்திரிகையில் பார்த்துவிட்டு இலங்கையின் வடபகுதியில் கச்சாய் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து அரசி தன் கவிதைக் கொப்பி எடுத்து எழுதி இவ்வாறு முடித்தாள் :

உங்கள் தவறுகளின் நேராக்கங்கள்
இப்படியொரு நிர்மாணமும் முயற்சியுமாக....
சரியாகத்தான் செய்திருக்கிறீர்கள்

அப்போது ஐப்பசி பிறந்திருந்தது.

தமிழகத்திலிருந்து வெளிவந்திருந்த ஒரு காலாண்டிதழை மிக்க ஈடுபாட்டோடு வாசித்துக்கொண்டிருந்தான் சந்திரமோகன்.

அவனுள் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது அது.

அது எதுபற்றியதென்று அவனால் தீர்மானிக்க முடியாதிருந்திருப்பினும் அதில் தான் சார்ந்த, தன் நிலம் சார்ந்த அமைப்பு விதிகளின் ஊடாட்டம் இருந்ததை அவன் உணர்ந்தான். அதனாலேயே அவனுள் ஒரு உட்செரிமானம் மெல்ல நிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வரிகள் இவ்வாறு இருந்தன:

தீவா - 3

தீவாபற்றிய அத் தேசத்தின் முதல் பிரஸ்தாபத்தைத் தொடர்ந்து வேறு சில தேசங்களும் தம்மிடத்தில் புதிதாகத் தோன்றியோ, ஆதியிலிருந்து உள்ளடங்கியிருந்து அண்மையில் தோற்றம் காட்டியதோவான தீவா பற்றி பிரஸ்தாபம் செய்தன. மெல்ல மெல்ல.... உலகில் தீவா இல்லாத இடமே இல்லையென்றாயிற்று. திரளும் முகிற் படலத்துக்கு மேல்.... மனித இருப்பின் இப்புவித் தலத்துக்குக் கீழ்.... அவை உளதும் இலதும் மட்டுமே தெரியாதிருந்தது.

ராஜகுருவின் ஆக்ஞையில் அதற்கெதிரான யுத்தம் துவக்கி வெகுகாலமாகியிருந்தது. தீவாவை அழிக்கப் போனவர்களே தீவாவினால் அழிக்கப்பட்டார்கள். ஆனாலும் முன்னேறுதலும் பின்வாங்குதலுமாய், ஓய்வும் முனைப்புமாய் ஒரு யுத்தம் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேயிருந்தது.

இந்த நிலைமையிலேதான் புதிய ராஜாவின் பட்டாபிஷேகம் நடக்கிறது.

அடுத்தமுறை அரசசபை கூடியவேளை ராஜகுரு தவிசில் அமர்ந்திருந்தபடி ராஜாவை அதிகாரத்தோடு கேட்கிறான்: 'யுத்த முனைக்குப் பெருந்தொகையான படைவீரரை அனுப்பு; போதுமான நிதி ஒதுக்கீடு செய். தீவா மீதான யுத்தம் வெல்லப்பட்டாகவேண்டும். அது கௌரவத்தோடும் சம்பந்தப்பட்டது.'

அரண்மனை திரும்பி வெகுநேரம் யோசிக்கிறான் ராஜா. தீர்மானமெடுக்க முடியாதிருக்கிறது. அந்நிலையில் தனக்குத் தெரிந்த முதுபெரும் ஞானி ஒருவரை வரவழைத்து ஆலோசனை கேட்கிறான். ஞானி, ஆதியில் விதிக்கப்பட்ட சொல் மீறப்பட்டதிலிருந்து அன்றைய தீவா யுத்தம்வரையான அனைத்தும் விளக்குகிறான்.

மறுநாள் அரச ஆணை பிறக்கிறது: 'ஆதிச் சொல் எக்காரணம்கொண்டும் மீறப்படக்கூடாது. அரசனாலேகூட. தீவா, ஆதிச் சொல் மீறப்பட்டதன் விளைவே. தொடர்ந்து சொல் மீறப்படாவிடின் தீவா பெருக்கமின்றியே அழிந்துபோகும். உலகில் இல்லாத வகையினமாகிவிடும். எனவே தீவா மீதான போர்ப் பிரகடனம் இத்தால் வாபஸாகிறது. இனி போர்வீரர்கள், தேசவளர்ச்சிக் காரியங்களில் ஈடுபடுவார்கள்.'

சிலநாட்களின் பின் ராஜசபை கூடியபோது திரண்டிருந்த குடிமக்கள் முகத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும். ராஜாவும் வந்தாயிற்று. இரண்டொரு சபை கூடல்களில் வெறுமையாயும், அதுவரை காலம் அச்சத்தோடு பார்க்கப்பட்டதுமான தவிசில் ஞானி அடக்கத்தோடு அமர்ந்திருந்தான்.

அன்று அதே வரிகளை தமிழகத்து அகதி முகாமிலிருந்த ராஜியும் வாசித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 56

இன்னும் பட்டுக்கொண்டே இருந்தாலும் சிலரால் தம்மை மாற்றிக்கொள்ள முடிவதில்லை. திரவியம் அந்த ரகத்தவனாய் இருந்தான். அதனால்தான் தொடர்ந்தும் தொடர்ந்தும் தன் உபத்திரவங்களுக்குக் காரணமான அந்த வட்டத்திலிருந்து வெளியேற முயற்சிதானும் செய்யாது இருந்தான்.

அந்த நாட்கள் மிகக் கடுமையாக இருந்தன.

அனில் கொழும்பு சென்றபிறகு பெரும்பாலும் தான் தனித்துப்போன உணர்வு மேலிட்டு அவன் தவித்துப்போனான். ஆனாலும் ஓரளவு தேறிக்கொண்டு, அதை ஒரு சுயபரிசோதனைக் காலமாய்க் கழித்தான்.

அந்த பத்தாண்டுக் காலத்தில் விரயமான கால அளவு செம்பாகத்தைவிட பெரிதாகத் தோன்றி அவனை மருள வைத்தது. சாதாரண மனிதனின் வாழ்வில் பத்தாண்டுகள் என்பது மிகப்பெரிய காலவெளியாகும். அதுவும் இருபத்தைந்து வயதுக்குப் பின்னர் வரும் பத்து வயதில் வாழ்வின் செல்திசை தீர்மானிக்கப்பட்டு அதில் உறுதியாய் நடப்பதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவனோ தன் பயணத்தை ஒரு வட்டத்தின் கோடுவழியே நிகழ்த்தியது போன்றும், தன் பந்தயத்தை புள்ளியில்லா எல்லை நோக்கி நிகழ்த்தியது போன்றும் அயர்ச்சி அடைந்திருந்தான். பயணத்தை முடித்ததுமில்லை, பந்தயத்தை வென்றதுமில்லை என்ற நிலையில் விசாரம் தலையெடுத்தது.

அவன் தன்னை நிதானமானவனென்றும், அந்த முதிர் பத்துக்கு முந்திய சுமார் ஐந்தாண்டுக் காலத்தில் தவிர மற்றும்படி உணர்ச்சிவசப்பட்டு எதையும் கெடுத்துக்கொள்ளவில்லை என்றுமே கருதிக்கொண்டிருந்தான். இப்போது பன்னீர்க் குடமுடைத்துச் சிரசுதயம் காட்டுகிறது, அது அப்படித்தானா என்கிற கேள்வி. மிகவும் உள்ளார்ந்த காரணத்தோடுதான்.

தன் வழியிலான நியாயப் பிரகாரமும், சுயவிருப்பத்தின் பேரிலும் அவனே அமைத்துக்கொண்டதுதான் அந்த வாழ்க்கை. நண்பனுக்காய்ச் செய்யவேண்டிய கடமையென்று தொடங்கி, அவள் வடிவிலும் பண்புகளிலும் தனையிழத்தல்மூலம் நிகழ்ந்தது அந்தக் கூடல். அதில் சிறிதளவும் முரண் காணவில்லை அவன். ஏனெனில் அதில் முரண் இல்லை. அவன் உள்முரண்கள் உள்ளவனாயும், சபல சித்தமுடையவனாயும் இருந்தான் என்பதே அவன் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழம்பியவனாய் இருப்பதற்குக் காரணமாய் இருக்கமுடியும். பலம்பெறும் கருத்தாக்கங்களின் பக்கம் சாய்ந்தது அவனது சபலசித்தத்தைக் காட்டிற்று. தனிமனித நன்னம்பிக்கைகளினூடாய் அரசியலை அவன் பார்த்ததும் அவன் குறைகளின் ஒரு அம்சமாய் இருந்தது. அவனைப் பெருமளவும் அனில் குழப்பம்நீங்கச் செய்திருந்தார். ஆனால் தனிமனித நியாயங்களையும் அரசியல் நியாயங்களையும் வெவ்வேறாக நோக்குகிற பார்வை அவனுக்கு அமையாதிருந்து இன்னும் அவனைக் குழப்பவாளியாகவே இருக்கப் பண்ணிற்று. சந்தேகவாதியாய் இருந்தளவில் அவனுக்கென்று தீர்க்கமான ஒரு கொள்கைப் பிடிமானம் இல்லாதிருந்தது. அதனால்தான் அவை ஐயுறவுகள் நீங்கிய கொள்கைகளாக உருவாகி ஒரு இயக்கம் ஸ்தாபிதமாகும் நிலை ஏற்படாதுபோனது.

முற்றாயும் முழுதாகவும் அவன் இப்போது தனியன்.

நண்பர்கள்கூட இல்லை.

இந்தப் புள்ளியிலிருந்தும் முளைத்தெழ அவனால் முடியும். ஒருபோது உதயன் இப்படித்தான் புதைவிலிருந்து நிலங்கீறி எழுந்தான். வாழ்வின் இறுதி இழைமட்டுமேயுள்ள கடைசி நிலைமையிலிருந்தும் தப்பிப்பிழைக்கிற சாகசம் உயிரியல்பாய், நிலம் சார்ந்த பண்பாய் ஆகிவிடுகிறதென்பது உண்மை.

தான் ஒரு கலங்கிய காலகட்டத்தின் மோசமான உதாரணமாகி விட்டானென்பது அவன் மனத்தில் தைக்காதிருந்தது. காலத்தின் தவறுகளை தன் தவறுகளாய்ப் பொருத்திப் பார்க்கும் பெருந்தவறுகளின் காரணமாகவே அவன் குழப்பங்கள் நிகழ்ந்தன.

அந்தக் காலைப்பொழுது ஒரு புதிய ஒளியோடு விளங்கியது.

மரக் கிளைகளினூடு வெள்ளைக் கதிர்களாய் சூரிய ஒளிக் கற்றைகள் திண்ணையில் விழுந்து, கிளைகள் அசைவுக்குத் தக சலனம் காட்டின.

வெளி உறைந்து கிடந்தது.

ஆனாலும் தூரத்தில் இயக்கத்தின்அடையாளமாய்ச் சப்தக் கிளர்வுகள். சரியாகவோ தப்பாகவோ அவை. ஜெயங்களுக்கான முயற்சி இனியும் சாத்தியமெனவேபட்டது. அவன் எதையும் இழக்கவில்லை, காலத்தைத் தவிர.

அதனுள்ளும், சாதனைகளில்லாவிடினும் சில குறிப்பிடத்தகுந்த செயற்பாடுகள் இருந்திருக்கின்றன.

ஐந்தாண்டுகள்வரையில் அவன் எழுதியிருக்கிறான். பல நாடு அளாவிய உயிர் கவ்வும் பிரச்சினைகளை விண்டுவிண்டு எடுத்துரைத்திருக்கிறான். அதை, எதுவுமில்லையென சும்மா ஒதுக்கிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் இன்னும் சாமான்யர்களாகவே இருக்கிறார்கள்.

அப்பா இன்னும் நயினாதீவிலேயே இருக்கிறார். அம்மா, தம்பி, தங்கைமார் யாழ்ப்பாணத்தில். பத்து வருஷங்கள் ஆகிவிட்டன, சகோதரர்களில் ஒருவர்கூட வெளிநாடு போகவில்லை. அந்த வகையில் அம்மா தோற்றுவிட்டாள். அப்பாவைத் தேடி இனியாவது செல்வாளா?

ஓடுவதும், திரும்புவதும், மறுபடி ஓடுவதும்....

பலர் உச்சி உச்சி விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். விளையாட்டுகூட அல்ல அது, ஒரு போட்டி - பந்தயம்.

சிறீலங்கா படை, அமைதிப்படை, போராளி இயக்கம் என்று எதனுடன் அந்த உச்சல்?

முள்ளி குத்துவது மரணமாயிருக்கிறது. அதன் விரிந்த களத்தில் அதிகாரவன்மையோடு முள்ளி நிற்கிறது. சிலர் வீழ்த்தப்பட்டார்கள்; சிலர் உட்கார்ந்து விட்டார்கள்; ஆனாலும் சிலர் இன்னும் உச்சிக் கொண்டே.

அவனுக்கு அந்த உச்சல் இல்லை. ஆனாலும் தன் கால இழப்பு ஒரு ஆகர்ஷத்தின் விளைவோ என்று அவனுள் இப்போது சந்தேகம் கிளம்பியிருக்கிறது. சுவர்ணாவின் சௌந்தர்யம் அப்பேர்ப்பட்டதுதான். தேகம் காயாக இருப்பது கொடை. இரண்டு குழந்தைகள் கண்டும் அந்தத் தேகத்தில் இன்னும் பேற்றின் ரேகைகள் பதியவேயில்லை. தேவ களையின் அவ் அமிசங்கள் பெறப்பட்டதெங்ஙனம்? அங்காத்திருக்கும் குழந்தைபோல் தானே தவனம் பெற்ற மார்கள். ஏரி பெருத்திருந்தது. அதில் மஞ்சள் மூங்கிலினதுபோன்ற ஒரு மதாளிப்பு. அதில் மயிரிழைகள் புரள்வது பேரழகு. அது அழைப்பாக அவனுக்குப் படும்.

அது மனிதனுக்கு விதிக்கப்பட்ட சுகம்.

அவள், அவனின் நிழல்.

நிழல் இருக்கவேண்டும்.

இல்லையேல் இருப்பு கேள்விக்குள்ளாகிவிடும்.

அவனுக்கு அன்று எதுவும் செய்யத் தோன்றவில்லை. ரியூஷன் வகுப்பொன்றை முடித்துக்கொண்டு பதினொரு மணியளவில் அந்த இடத்தில் வந்து உட்கார்ந்தவன்தான். அவள் தேநீர் கொண்டுவந்து கொடுக்க குடித்துவிட்டும் அப்படியேதான் இருந்தான். வாசிக்கவும் முனையவில்லை.

அபயனும் மேகலையும் மதி வீட்டிலாய் இருக்கவேண்டும். துணி தோய்ப்பதில் முனைந்து சுவர்ணா.

திரும்பிப் பார்த்தாள். பின் ஒரு பொய்க் கோபத்தோடு கழுத்தை வெட்டித் திருப்பினாள். அது நூற்றோராவது முறை.

அப்போதுதான் அந்த சின்னக் கோபத்தின் காரணம் அவனுக்குப் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொல்லியிருந்தபடி அவன் தாடியை மழிக்கவில்லையாம்.

வளரும்போது அவள்தான் அழகாய் இருக்கிறதென்று சொன்னவள். அவன் அப்போது சந்தோஷமாய் இருந்தானென்றும் அதனால் அழகாய் இருந்ததாயும், இப்போதெல்லாம் விரக்தியாய் எப்போதும் யோசனையுடன் இருப்பதால் நல்லாயில்லையென்றும் விளக்கம் சொன்னாள். அப்படியானால் வெட்டவேண்டியது விரக்தியைத்தானே தவிர தாடியை அல்லவென்றான் அவன். அந்தக் கோபம்தான்.

அவன் அந்த எண்ணங்களை அகற்றினான்.

செயற்படு என்று அவனுள்ளிருந்து ஏதோ ஒன்று சொன்னது.

அவனது மக்கள் கிளாலி ஏரியில், தாண்டிக் குளத்திலென்று மாண்டுபோய்க் கொண்டிருக்கிறார்கள். வவுனியாவில் சந்தேகத்தில் கைதுசெய்யப்படுவோரெல்லாம் கோழிக்கோட்டில் வதைமுகாம் கணக்காயுள்ள காவல் முகாமில் அடைக்கப்படுகிறார்கள். ரயர் போட்டு உயிரோடு கொளுத்தப்பட்டு பாதி வெந்த நிலையில் கொன்றொழிக்கப்படுகிறார்கள் சிலர். பெண்களின் நிலை சொல்லுந்தரமாய் இல்லை. சூதகமாய் இருக்கிறேன் என்றபோதும் கொடுமனத்துடன் இழுத்துப் போனது துச்சாதனன் மட்டுமில்லை.

அவன் இவற்றையெல்லாம் எழுதியிருக்கிறான். ஆனால் அதன் கணிப்பீடு அவனுக்குத் தெரியாதிருந்தது. அனில் அய்யாவால் அதைக் கண்டு சொல்லமுடியாதுபோனது. அவர் எதார்த்தமாய்ப் பேசினாலும் இளகப் பேசமாட்டார். அவருக்கு சரியென்பது எப்போதும் சரிதான். அதுபோலத்தான் பொய்யும். ஆனால் நிமால் பெரேரா அப்படியில்லை. அவன் ரசனையுள்ளவன். அவன் இலக்கியக் கலைஞன். அனில் விமர்சகர்மட்டுமே. அவனாயிருந்தால் இத்தனைக்குள் அவன் செல்லவேண்டிய திசையை துல்லியமாய்க் கணித்து வெகுதூரம் செல்லவைத்திருப்பான்.

அவனது இழப்பின் நட்டத்தை முதலிலும், சோகத்தைப் பின்னரும் அனுபவித்தான் திரவியம்.

அப்போது படலை அரைந்து கேட்டது.

வாசலில் சிவா நின்றிருந்தான்.

திரவியத்துக்கு ஆச்சரியமாய் இருந்தது.

எழுந்து போய், "வா, சிவா" என்றான்.

"உள்ளை வேண்டாம். நான் உன்னோட பேசவேணும் அவசரமாய்."

"என்ன, சிவா...?" புதிராய் இருந்தது திரவியத்துக்கு.

"சுவர்ணா உள்ள இருக்கா?"

"இல்லை, கிணத்தடியில."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லத் தயங்கினானா, தடுமாறினானா? சிறிதுநேரத்தில் சமாளித்துக்கொண்டு சொன்னான்: "ஏன் எதுக்கு எப்பிடியெண்டு ஒரு கேள்வியும் கேக்கக்கூடாது; என்ர கேள்விக்கு பதில்சொல்லவேணும். இப்பவும் என்னை உன்ர சிநேகிதனாய்த்தான் நினைச்சிருக்கிறியா?"

திரவியம் சிரித்தான். லேசாய்த்தான்.

"சிரிக்காத, திரவி. நான் நெருப்பில நிக்கிறது போல துடிச்சுக்கொண்டு நிண்டு பேசுறன். பதில் சொல்லு!"

"நீ என்ன நினைச்சிருக்கிறாய்?"

"நானாகவே இப்ப இஞ்ச வந்ததிலயிருந்து உனக்குத் தெரியேல்லையா?"

"நானும் மாறயில்லை, சிவா. எங்களுக்குள்ள இருந்தது ஒரு வீம்பு மட்டும்தான். அது உள்ள இருக்கிற நட்பை எதுவும் செய்திடாது."

"அப்பிடியெண்டால்... நான் சொல்லுறபடி செய்யவேணும்."

"என்ன...?"

"இப்பவே நீ துணுக்காய்க்குப் போகவேணும். மாமா வீட்டில நில்லு. ரண்டு நாளில நான் அங்க வாறன். என்ன ஏது எண்டதையெல்லாம் அங்க வைச்சுப் பேசலாம்."

"நீ சொல்லுறது ஒண்டுமே விளங்கேல்லை எனக்கு. நான் எதுக்குத் துணுக்காயில போய் நிக்கவேணும்? அதுவும் அவசர அவசரமாய் இண்டைக்கே...! அங்க வந்து நீ என்ன பேசவேணும்? இஞ்சை பேச ஏலாததாய், அங்க பேசக்கூடியதாய் அப்பிடி என்ன விஷயம் இருக்கு?"

சிவா சலிப்போடு நெடுமூச்சுவிட்டான். "இதுக்குத் தான் ஏன் எதுக்கெண்டு எதையும் நீ கேக்கக்கூடாது எண்டு முதலிலேயே நான் சொன்னது..."

ஆனாலும் திரவியம் இளகின அளவுக்கு சம்மதிக்கிறமாதிரித் தெரியவில்லை. காரணத்தைச் சொல்லி விளங்கப்படுத்துவது அவசியமென்பதை சிவா உணர்ந்தான். ஆனால் விரிவாய்ப் பேச அவகாசமில்லாத அவசரமாயிருந்தது அவனது புறப்படுகை. அதனால் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தான்: "உன்ர பேர்.... றிவால்வர் குறூப்பின்ர லிஸ்ரில இருக்கு."

றிவால்வர் குறூப்பின் அட்டவணையில் பெயர் இடம் பெறுதலென்பதன் ஒரே அர்த்தம்.... அந்த நபர் விரைவில் அழிக்கப்பட்டுவிடுவார் என்பதுதான்.

"போட்டோவும் போயிருக்கு."

"எப்பிடி....?" என்று ஆச்சரியப்பட்டான் திரவியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதாவது பேப்பரில வந்ததாய் இருக்கும்!"

"எதுக்கு என்னை...?"

"எழுதுறிறே... அது போதாதோ?"

திரவியம் சிரித்தான்.

அப்போது சிறிது சத்தமாகவே.

"திரவி..." என்று அடக்கினான் சிவா.

"என்ன, சிவா, எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம் இது? இத்தனை வருஷமாய் எழுதி என்ன கிழிச்சன்... ஒரு மயிரைக்கூட என்னால இருந்த இடத்தைவிட்டு அசைக்க முடியேல்லையே எண்டு கொஞ்சக் காலமாய் நான் பட்ட வேதனை உனக்குத் தெரியுமோ....? அப்படி வருந்தாதே... நீ எதுவோ பெரிசாய்ச் செய்திருக்கிறாய்தான் எண்டு ஒரு இயக்கம் தீர்மானிக்கிறதாயிருந்தால்.... அதுக்காக நான் எவ்வளவு சந்தோஷப்பட வேணுமெண்டு கொஞ்சம் யோசிச்சுப் பார்! நீ என்னடா வெண்டால்...."

"சீரியஸா கதை, திரவி. றிவால்வர் குறூப்பைப்பற்றி உனக்கு நல்லாவே தெரியும். படத்தையும் பணத்தையும் குடுத்தால் அவரிவரெண்டில்லாமல் எவரையும் சுட்டுத்தள்ளுற கூட்டம் அது. அது ஒண்டும் இயக்கம் இல்லை."

"எப்பிடியானதாயிருந்தாலும் வரட்டும், நான் கதைக்கிறன்."

"கதைக்கிறதுக்கு எதுவும் இராது. நீ சொல்லுறது முதல்ல அவங்களுக்குப் புரியாது, திரவி. போடுறதெண்டு தீர்மானிச்சு வாறாங்கள். தப்பியோடுறதத் தவிர வேற வழியில்லை இப்ப."

திரவியம் ஒப்புக்கொள்ளுறமாதிரி இல்லை. ஏதேதோ காரணங்களைக் கூறிக்கொண்டு நின்றிருந்தான். "ஏன், எனக்குத்தான் எந்த இயக்கத்தோடயும் தொடர்பில்லையே! நான் ஏன் பயப்பிட வேணும், சிவா?"

"மடையன்மாதிரிப் பேசாத. றிவால்வர் குறூப்புக்கு காரணம் தேவையில்லை."

"செய்விக்கிறவைக்கு காரணம் இருக்குமெல்லோ?"

சிவா சலித்தான்.

பிறகு சொன்னான்: "சுவர்ணாவைக் கலவரப்படுத்த வேண்டாமேயெண்டு பாத்தன். நீ சம்மதிக்காட்டி.... தங்கச்சியிட்ட சொல்லுறதத் தவிர எனக்கு வேற வழியில்லை."

அவன் பயமுறுத்தவென்று எதையும் சொல்வதில்லை. சொன்னால் அவன் செய்வான். திரவியத்துக்கு அது தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரி, எப்ப போகவேணும்?” என்றான் கடைசியாக.

“இப்பவே. இண்டையில் ராவுக்கு நீ இஞ்ச இருக்கக்கூடாது.”

“இனி சாப்பிட்டு... வெளிக்கிட்டு... போய் பஸ் எடுக்கிறது கரைச்சல். மழை வாற அறிகுறியள் இருக்கிறதால ட்ராக்டர்களும் வெளிக்கிடாது...”

“உன்னை மோட்டார்ச் சைக்கிள்ளை துணுக்காய் கொண்டுபோய்ச் சேர்க்க சதாவை ஒழுங்கு பண்ணியிட்டுத்தான் வந்திருக்கிறன்.”

“நான் சம்மதிப்பனெண்டு அவ்வளவு நம்பிக்கை உனக்கு.”

“என்னால ஏலாட்டியும் சுவர்ணாவால ஏலுமெண்டு நம்பித்தான் செய்தன். சரி... வெளிக்கிடு.”

அவனது பதட்டம், திரவிக்கு நிலைமை தீவிரமானது என்பதைச் சந்தேகமறக் காட்டியது.

அவன் போய்விடலாம்.

ஆனால் பிள்ளைகள்...? சுவர்ணா...?

கேட்டதற்கு சிவா சொன்னான்: “குறி நீதான். அவைக்குப் பிரச்சினையில்லை.”

“சரி, உள்ள வந்திரு; வெளிக்கிட்டு வாறன்.”

“வேண்டாம். இப்ப சுவர்ணா கண்டால் லேசில வந்திட ஏலாது. நான் போய் பஸ் ஸ்ராண்டில நிக்கிறன். ஒரு... அரை மணி நேரத்துக்குள்ள வந்து சேர்.”

சிவா அவசரமாய்ப் புறப்பட்டான்.

தான் துணுக்காய் போகவேண்டியிருப்பதாகச் சொல்லிக்கொண்டு திரவியம் வெளிக்கிட்டான்.

அந்தத் திடீர் முடிவு சுவர்ணாவுக்குப் புருவ நெறிப்பை ஏற்படுத்திற்று. ஆனாலும் ஏன் எதற்காகவென்று விடாப்பிடியாய்க் கேட்டு நின்று அவனது மனநிலையைக் கெடுக்க விரும்பவில்லை. கடந்த சில நாட்களாய் அவனது மனநிலையிருந்த இறுக்கத்தைத் தெரிந்திருந்தாளாகையால், அவ்வாறு தெரிந்தவர் வீட்டுக்குப் போய் ஒருநாள் இரண்டு நாள் நின்று வருவது நல்லதென்ற எண்ணத்தில், “எப்ப வருவியள்?” என்று மட்டும் கேட்டுவைத்தாள்.

“நாளைக்கு... இல்லாட்டி நாளையிண்டைக்கு வந்திடுவன்.”

அவள் அவன் கண்களைப் பார்த்தாள்.

அவன் சொல்லவிரும்பாத சங்கதியொன்று இருப்பது தெரிந்து அவள் முகம் கறுத்தது. ஆனாலும் அவன் புறப்பட்ட போது சிரித்தபடி விடைகொடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57

சங்கரானந்த தேரர் தம் நெடும்பயணத்தைத் தொடங்கி மாதங்கள் பல ஆகிவிட்டன.

அவர் தன் பயணத்தில் உத்வேகமாய் உபதேசித்தார். நம்பிக்கையோடு உபதேசித்தார். புனித புத்தரின் இறுதி அவதாரம் நிச்சயம், அதுவும் மரகத எழில் பொங்கும் இந்தத் தீவிலேயே நிகழும், தக இருங்கள்... மனத்தை மாசற்றதாய் வைத்திருங்கள்... பஞ்சசீலம் நோக்கியதாய் வாழ்வை நேர்பட அமைத்திருங்கள் என்று நிலமறைந்து சத்தியத்துடன் போதனை செய்தார்.

அவர் அதற்காகத் தேர்ந்தெடுத்திருந்த களம்தான் அவரை வித்தியாசமானவராய்க் காட்டியது. வடகிழக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் புதிதாயமைந்த சிங்களக் குடியேற்றப் பகுதிகளில் அவர் கால்நடையாய், கால்ப்பட்டினி அரைப்பட்டினியாய்த் திரிந்தார். கையில் கொளுவிய துணிப்பை பறணையாகிவிட்டது. ஆனாலும் அன்றன்றாடக் களைப்பின் வியர்வை தூசி அழுக்குகளோடு புனிதராய்த் திரிந்துகொண்டிருந்தார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து சொச்ச ஆண்டுகளின் முன்னாலும் ஒரு குரல், 'உங்கள் பாவங்களிலிருந்து திரும்புங்கள்!' என்றும், 'இல்லையேல் பெருநெருப்பில் வீசப்படுவீர்கள்!' என்றும், 'மகாபிரளயம் வந்து பிரபஞ்சம் துடைத்தளிக்கப்படும்!' என்றும் போதனை செய்து திரிந்தது. 'காதிருப்போன் கேட்கக் கடவன்!' என்றார் அப்புனிதர். புதிய துறவி, 'செவிகொடுங்கள்' என்று அனைவரையும் வேண்டுதலோடு சொன்னார். பெருந்திரள் ஜனங்கள் அவர் சொல்வதைக் கேட்க கூடினார்கள்.

அவர் செல்வதற்கு முன்பாகவே அவர் வரப்போகிற செய்தி அவ்வக் கிராமங்களைச் சென்றடைந்திருந்தது.

'புனித புத்தரின் முந்திய வருகை உருவெல கிராமத்தில் இருந்தது. அதற்குப் பக்கத்திலேதான் நெருப்பைக் கடவுளாக வணங்கும் ஜத்தில்லா என்ற இனவகுப்பாரின் வனக் குடியிருப்புகள் இருந்தன. அவர்களின் தலைவனாக இருந்தவன் கஸ்ஸப. மாய மந்திர வசியங்களில் கைதேர்ந்தவன். அவனே பகவான் போதனையில் மனம் மாறி சங்கத்தில் சேர்ந்தான். ஆகவே... மகாஜனங்களே... மனம் மாறுங்கள்! போதனைக்குப் புறம்பாக நடவாதிருங்கள்! வன்முறைக்குத் தூண்டப்பட்டால் எழுச்சிகொள்ளாதிருங்கள்! அஹிம்சை ஒரு பவுத்தனுக்கு மகாவாக்கியம்! அனைத்துயிரிலும் கருணை பொழிந்தவர் பகவான் புத்தர். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலானில் அன்பு செலுத்தவாவது செய்யவேண்டும்' என்றெல்லாம் மிக உருக்கத்தோடு அவர் போதனைகள் இருந்தன. அதனால் அவருக்கு உபதேசிப் பிக்கு என்றொரு பெயரும் உள்ளூர்களில் உருவாகிக் கொண்டிருந்தது.

உபதேசிப் பிக்குவின் முக காந்தியை அவர்கள் பார்க்க அவாவினர்.

பேச்சைக் கேட்க குழுவினர்.

பழைய உபதேசம் புதிய ஒளி கலந்து அவர்மூலம் பரவலாயிற்று.

பலர் அவர் நம்பிக்கையைத் தாமும் பகிர்ந்துகொண்டனர்.

ஒருநாள் மகாவலி கங்கை தீரத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு அவர் சென்றார். ஆயுதபாணிகளாக்கப்பட்ட சிங்கள மக்கள் குடியேறிய புதிய பிரதேசம் அது. உபதேசிப் பிக்கு வந்தது தெரிந்ததும் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என்று அனைவரும் வந்து பணிந்தார்கள்.

அன்றும் நிச்சயத் தன்மை மிகுந்ததாக அவர் உபதேசம் அமைந்திருந்தது: 'உயிர்களிடத்தில் எவன் அன்பில்லாதவனோ, உயிர்களை எவன் வதைப்பவனோ, எவன் தன்னுள் வெறுப்பைச் சுமந்து திரிபவனோ அவன் கீழ்மகன். காய்ந்த நாணற் புதரானது தீ பரவும் காலத்தில் விரைந்து எரிந்து சாம்பராகும். அதுபோல் ஹிம்சையாளனும் அறம்தவறி நடப்போனும் அறம் சூழ்ந்தெழும் காலத்தில் அழிந்தே போவான்!'

அவர் பேச்சுக் கேட்டு பலர் நிம்மதியிழந்தார்கள். தங்களிடமுள்ள ஆயுதங்ளை கிடங்கு வெட்டி புதைத்தார்கள். சிலர் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பி ஓடினார்கள்.

இதற்கு ஆயுததாரிகளாக்கப்படும் சிங்களக் கிராமங்கள் தாக்கப்படுவதான செய்திப் பரம்பலும் ஒரு காரணமாகும்.

ஆனால் சங்கரானந்த தேரரின் மனம் நம்பிக்கை கொள்ளும்படியான மாற்றங்கள் அவருக்கு கண்கூடாகவே தெரிந்தன.

அவர் அலைச்சலில் தளர்ந்தே போனார். முதுமை வேறு இயக்கத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த வற்புறுத்திக்கொண்டிருந்தது.

சில நாட்களின் ஓய்வை அவரது நலிந்த உடல் இச்சித்தல் நியாயம்.

அவர் பொலனறுவ வந்தார். வளவை கங்கைக் கரைப் பெரியவரைச் சந்தித்த பிறகு அவருக்கே சிற்பங்களிலும் ஓவியங்களிலும் ஒரு விருப்பு பிறந்திருந்தது. இன்பக் கலைகளை பௌத்தம் மறுக்கும். ஆனாலும் சில கலைகள் மூலத்தில் அன்பையும் ஆனந்தத்தையும் ஆதாரமாக் கொண்டவை.

ஒரு பவுத்த வறிய குடும்பம் தம்மோடு சிலநாட்களேனும் தங்க அவரை வற்புறுத்தியது.

ஓய்வில் உடல் சற்றே தேற, ஒருநாள் மாலை பராக்கிரமபாகு சிலை வடிக்கப்பெற்றிருந்த கலாக்ஷேத்திரத்துக்குச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கமுக மர உயரத்துக்கு வானளாவ நிமிர்ந்து நின்றிருந்தது அக்கருங்கற் சிற்பம்.

சற்று எட்ட இருந்த ஒரு மாவிலங்கை மரத்தோடு சாய்ந்தமர்ந்து, உயிர்த் துடிப்போடு விளங்கிய அதன் கம்பீரத்தில் சிந்தை லயித்திருந்தார்.

ராஜகம்பீரம் என்பது அதுதான்.

பராக்கிரமபாகுவின் காலம் இலங்கையின் பொற்காலம் என்கிறது இலங்கைச் சரித்திரம். ஆனாலும் பராக்கிரமபாகு 1165ல் மரணமானபோது இலங்கை பெரும் நெருக்கடியில் சிக்கியிருந்தது. அதற்குக் காரணமாய் சரித்திராசிரியர்கள் மூன்று காரணங்களைச் சொல்லுகிறார்கள். ஒன்று, உள்நாட்டில் நிகழ்ந்த யுத்தங்களும், அரசுரிமைச் சூழ்ச்சிகளால் ஏற்பட்ட ஸ்திரமற்ற அரசும். இரண்டு, தென்னிந்தியாவின் அரசியல் ரீதியான தலையீடு. மூன்று, பர்மா சியாம் ஆகிய நாடுகள் மேல் அதனின் படையெடுப்புக்கள்.

முதலாம் பராக்கிரமபாகுவுக்கு சிலையெடுத்தது தகும். அவனே எடுத்திருந்தாலும் அதை, அது தகும்தான்.

அவனுக்கே சிறப்பான சரித்திரம் உண்டு.

சிற்பம் அதைவிட சிறம்பம்சம் பெற்றது.

அந்தச் சிற்பத்தின் சிருஷ்டித் திறன் அற்புதமானது.

சிற்பி தன் பெயரைப் பொறிக்காது, வெறும் தொழிலாளியாய் ஆகியிருந்தது துக்கமான விஷயம். படைப்பின் பூரணத்தில் அவன் மனதும் பூரணத்துவம் பெற்றுக்கொண்டுவிட்டது. அவன் சரித்திரத்தை யோசிக்காதவனாய் இருந்தான். தன் இருத்தலின் அடையாளம்பற்றிய அக்கறை இல்லாதவனாய் இருந்தான். இழப்பு அவனுக்குமட்டுமாய் இருக்கவில்லை என்பது அப்போது சங்கரானந்தரின் வருத்தத்தால் உறுதிபெற்றது.

வெகுநேரமாய் அவர் அந்தச் சிற்பத்தின் உயிர்த்துடிப்பில் தன்னை இழந்திருந்தார்.

நேரமாக ஆக.... அவர் மனத்துள் ஒரு குறுகுறுப்பு உண்டாகிக்கொண்டிருந்தது. பின்னர் அது ஒரு கேள்வியாய் வடிவம் பெற்றது. அவர் பார்த்த கேட்ட சிலைகளிலெல்லாமிருந்தும் ஏதோ ஓர் அம்சத்தில் அச்சிலை வேறுபட்டிருக்கிறதா?

பிற்பகலில் வந்தவர் இருளுகிற நேரமாகியும் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

திறந்த வானில் ஒரு பெரு நிலா ஒளி வீசிக்கொண்டிருந்தது.

மாரியின் வருகையை முன்னறிவித்த குளிர் காற்று.

சருகுகள் உருண்டன சப்தித்தபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரென்று.... அந்த வேறுபாட்டின் நுட்பமான அமிசம் அவருக்குப் புலனாயிற்று.

அந்த ஸ்திதி கலாநேர்த்தியின் உச்சம்.

'ஸ்திதி என்பதென்ன? அசையா ஒரு நிலையிலிருந்து அசையும் நிலையூடாக ஒரு தாண்டலாய் இன்னொரு அசையா நிலையெடுத்திருத்தல். ஒரு ஸ்திதி இன்னொரு நிலைக்கான தாண்டலின் விதையையும் கொண்டிருக்கும். நாட்டிய சாஸ்திரத்திலே கரணங்கள் இவ்வகைத்தன. கரணம் எனப்படுவது யாதெனில் அங்ககாரத்தின் ஒரு கணுவே. அதுவே ஸ்திதியுமாகும். சிலைகள் ஸ்திதியைக் காட்டும். ஸ்திதியில் தாண்டல், கரணம் காட்டும் சிற்பங்கள் அற்புத கலா சிருஷ்டிகளாகும்' என வளவை கங்கை ஞானி சொன்னதை அப்போது நினைத்தார் சங்கரானந்தர்.

அவர் ஐயமும் தெளிவும்கூட அந்த ஸ்திதி பற்றியதுதான்.

இலங்கைச் சிற்பங்களும் ஓவியங்களும் கட்டிடங்களும் இந்திய உபகண்டத்தின் கலைமரபு சார்ந்தவை. கட்டுக்குளங்களில் கால்வாய் அமைப்புக்களில் தனக்கென விசேஷித்த சில அடையாளங்களை இலங்கை கொண்டிருப்பினும், நுண்கலை விஷயங்களில் அது இந்திய மரபு சார்ந்ததென்பதை மறுப்பதற்கில்லை. ஒன்றில் திராவிட பாணிக் கலையாக அல்லது வடவிந்திய நெறி சார்ந்த கலையாக அது இருந்திருக்கிறது. இதை கலாயோகி, கலைப்புலவர், பரணவிதான போன்ற பலருமே தெளிவாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இந்தச் சிலைமட்டும்.... இலங்கைப் புராதன சிற்பக்கலையின் ஒரு விசேஷித்த அம்சத்தைக் கொண்டிருக்கிறது!

சரியோ / தப்போ இவ்வண்ணமே அவர் கொண்டார். அதன் விளக்கத்தையும் பின்வருமாறு பின்னினார் : 'தென்னிந்திய திராவிட சிற்ப பாணியும் சரி, வடவிந்திய சிற்ப கலா முறைமைகளும் சரி சிற்பத்தின் வலப்பாகம் உறுதியைக் காட்டும் முறையில் அமைந்ததாயிருக்கும். இடப்பாகமே நளினம் / லலிதம் சேர்ந்ததாய் இருப்பது. இந்துக் கலாசாரத்தின் விளக்கத்துக்குட்பட்டதே இது. இறைவன் தன் மனைவியான சக்தியை இடப்பாகத்தில் கொண்டிருக்கிறானென சைவ சமயம் கூறும். அதனாலேயே அவன் அர்த்தநாரீஸ்வரன் எனப்படுகிறான் என்றும் அது மேலும் சொல்லும். வலக் காலை நிலம் பதித்து இடது காலைத் தூக்கியே இறைவன் ஊர்த்துவ நடன மாடியதை சிற்ப உலகமும் புராண உலகம் போலவே காட்டிற்று. இதுதான் இந்திய சிற்ப விதி.

'ஆனால் பராக்கிரமபாகுச் சிற்பம்...? இடம் உறுதிபெற்றும் வலம் நளினத்தோடு பெண்ணிடை போன்றதாயும் உள்ளது. இலங்கைச் சிற்பங்களுக்கு தனித்துவ அடையாளம் கொடுக்க நினைத்த சிற்பியின் கலா தரிசனமா அது? அவன் தென்னிந்திய ஆசாரியா? தென்னிந்தியாவில் கலைபயின்ற இலங்கை ஆசாரியா?'

அவர் மனது விம்மியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இட - வல விதி மதார்த்தம் பெறாது சிற்ப சாஸ்திர விதியாக மட்டுமே இருப்பதானாலும் கலையழகு எள்ளளவு பாதிப்பும் பெற்றுவிடாது. மேற்கொண்டும் அதிலே அமர்ந்திருந்து இருளிலும் அந்த சிற்ப புறவுருவில் பார்வையைச் செலுத்திக்கொண்டு மனத்தே பதிந்துள்ள அதன் ஜீவகளையில் தனையிழந்திருக்க மனம் அவாவியது. ஆனாலும் துறவிக்கு அந்தளவு சுகிப்பு ஆகாது. மேலும் மறுநாள் அதிகாலை வவுனியா புறப்படுகிற திட்டமும் இருந்தது அவருக்கு.

அவர் மனமின்றியே எழுந்தார்.

மறுநாள் மதியத்திலேயே புறப்பட முடிந்திருந்தது.

அவர் வவுனியாவை அடைந்தபோது நல்ல மழை.

## 58

மழை அழகாயிருந்தது. அதன் துளிகளின் விழுகையின் ஓசை இனிமையாயிருந்தது. எதிர்பார்த்தபோது வராமல் எதிர்பாராத வேளையில் வந்த மழை. திடீரென்று அன்று காலையில்தான் மேகம் கறுத்து வந்து திடீரெனக் கொட்டியது. சடுதியில் கோடை மாறி மாரி பிறந்த அற்புதம் அது. மதியமும் மாலையும் பிசுபிசுத்துக்கொண்டிருந்துவிட்டு எட்டு மணிக்கு மேலே இரண்டு மணி நேரமாய்க் கொட்டித் தீர்த்தது.

அவன் அப்போது அங்கே இல்லாமல்போனது வருத்தமாயிருந்தது அவளுக்கு.

அவனுக்கு மழையென்றால் நிரம்பவும் பிடிக்கும்.

'துணுக்காயிலும் இந்நேரம் மழை பெய்யுமோ?' அவள் யோசித்தாள்.

துணுக்காயிலுள்ள மனிதர்களைப்பற்றி அவள் அறிந்திருந்தாள். ஆனாலும் நேரில் சென்று கண்டதில்லை. அங்கே மாரியில் அடித்துச் செல்லும் கானாறு இருப்பதாக திரவி சொல்லியிருக்கிறான். மகாவலி கங்கைபோலவோ, வளவை கங்கை மாணிக்க கங்கைகள் போலவோ பிரவாகம் அதில் இல்லாவிடினும் நுரை கக்கி ஓசையெழுப்பி சுழன்றடித்துச் செல்லும் அழகு பெரிதுதான் என்று சாதித்திருந்தான்.

பிரதேச ஈர்ப்புகளின் வல்லமையை அப்போது அவள்கூட எண்ணிப் பார்த்தாள். பாலி ஆறு என்று அவன் சொன்ன ஆறு அப்படியொன்றும் பெரிய ஆறாக இருந்துவிடப் போவதில்லையென்று அவளுக்குத் தெரியும். ஏனெனில் அது உலர் ஆறு என்று அவனே பேச்சில் சொல்லிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறான். கோடையில் வண்டல் மணல் வரிவரியாய் நெளிந்துகிடக்கும் அதில். மாரியில்தான் மழைவெள்ளங்கள் சேர்ந்து பேராறாகி ஓடிப் பாய்வது. அப்போது பெருமரங்களைக்கூட அடித்தோடலாம். இருந்தும் ஒரு கர்வத்தோடு அவன் அதைக் குறிப்பிட்டிருந்தான்.

மகாவலி எங்கே? பாலி ஆறு எங்கே? - அவள் நினைத்தாள்.

மதி வீட்டில் ஆட்கள் இல்லை.

இருந்தால் கூட்டிக்கொண்டு வந்து வைத்துப் பேசிக் கொண்டிருக்கலாம். அவனில்லாதது ஏதோபோல் இருந்தது. அவன் நல்ல நண்பன்கூடத்தான்.

திரவியம் சென்று மூன்று நாட்களாயிருந்தன. மறுநாள் அல்லது அதற்கும் மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றிருந்தவன் மூன்று நாட்களாகியும்.... ஆனாலும் முன்பும் சொல்லிச் சென்ற நாட்களுக்கு அதிகமாகவும் அவன் தங்குவதுண்டு. அத்திசை மரங்களும் தளிர்களும் கொடிகளும் நிறங்களும் பூக்களும் பறவைகளின் ஏகாங்கித்த குரலோசையும்.... எல்லாவற்றுக்கும் மேலாய் அவற்றினிடை ஊடாடும் மௌனமும் அவனுக்குப் பிடித்திருந்தன.

மறுநாளேனும் வந்தால் நல்லாயிருக்கும்.

அவன் துணுக்காய் புறப்பட்ட முதல்நாள் இரவில் அவன் நெருங்கி வந்தபோது ஒரு சிணுக்கம் காட்டி அவள் மறுபுறம் புரண்டுகொண்டுவிட்டாள். கொஞ்ச நாட்களாக பெரும்பாலும் அம்மாதிரியான தருணங்களில் அவன் தாடிபற்றியதாகவே அந்தப் பிணக்கம் இருந்து வந்தது. அவன் ஏனோ பிணக்கு நீக்கத் தாமதித்தான். அந்த இடையில் அவள் அருண்டுபோனாள். அப்போது நினைக்க அவ்வாறு பிணக்கேற்படுத்தாமல் இருந்திருக்கலாமென்று அவளுக்குத் தோன்றிற்று.

வெகுநேரத்தின் பின் உறக்கம் கொண்டாள்.

மறுநாள் பத்துமணியளவில் பேரோசையொன்று கேட்டது பஸ் நிலையப் பக்கமாய். குண்டு வெடிப்பு என்று அப்போதே அவளால் அனுமானிக்க முடிந்திருந்தது. மாலைவரை ஒரே களேபரமாய் இருந்ததை வீட்டிலிருந்தே உணரக்கூடியதாய் இருந்தது. சந்தைக்குப் போவாரில்லை; கடைக்குப் போவாரில்லை; ஒழுங்கைகளில், தெருக்களில், வீட்டு வாசல்களில் வேலையிழந்தவர்களாய் நின்று ஜனங்கள் ஊகங்களைப் பேசிக்கொண்டிருந்தனர்.

அன்று பிற்பகலாகியும் அவன் வரவில்லை. மனத்துக்குள் ஒரு சுழற்சி. என்னவென்று தெரியாத துக்கம். அவள் அவ்வாறு உணர்ந்த வேளைகள் அபூர்வம். ஏறக்குறைய பத்து வருஷங்களுக்கு முன்னால் அவ்வாறு அவள் உணர்ந்திருக்கிறாள்.

மாலையாகிக் கொண்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தாள். பின் எதையோ தீர்மானித்துக்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயனை அறிவுறுத்தி மேகலையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு சிவாவைப் பார்த்துவரப் புறப்பட்டாள்.

அறையில் சிவா நின்றிருந்தான்.

வழக்கம்போல பேசினான். இருந்தாலும் தான் அவர்கள் வீட்டுக்கு வந்துபோன விஷயம் வாய்தவறி வந்துவிட்டது. சுதாரித்துக்கொண்டான். வேறெங்கோ போய்விட்டு வந்துகொண்டிருந்தபோது கடைப் பக்கமாய் அவனைக் கண்ட இடத்தில் இரண்டு வார்த்தைகள் பேசினதாய்ச் சொன்னான். ஆனால் அவள் அந்த மையத்தை நோக்கிய கேள்விகளையே கேட்டுக்கொண்டிருந்தாள். திரவியம் துணுக்காய் போனதுக்கும் அந்தச் சந்திப்புக்கும் ஒரு இணைப்பை அவள் கண்டுவிட்டது தெரிந்தது. மறுநாள் காலையே துணுக்காய் போய் அவனை அனுப்பி வைப்பதாக சிவா சொன்னபோதும் உள்ளோடிய ஒரு கோபத்தோடேயே அவள் வீடு திரும்பினாள்.

ராணுவ வண்டிகள் ஜீப்கள் தாறுமாறாய் ஓடின. ஆயுததாரி இயக்க வான்கள் வேறு. இயக்க மோட்டார்ச் சைக்கிள்கள். ஸ்தம்பித்திருந்த போக்குவரத்து ஒரு மந்தத்தோடு தொடர்ந்துகொண்டிருந்தது. வவுனியா நகரத்தில் அன்று சிங்களவரோ தமிழரோ... நடமாட்டம் குறைவாகவே இருந்தது.

சுவர்ணா வீடு திரும்பியபோது மெல்ல இருட்டத் துவங்கியிருந்தது.

தெருக்களின் விளக்குகளிலிருந்து ஊமை வெளிச்சம் வழிந்துகொண்டிருந்தது.

நிலாவே சமமான ஒளி செய்தது.

தெருவிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் ஒழுங்கையில் இறங்குகிறபோதுதான் நிழல்களூடாக ஒரு பின்தொடர்கையை அவள் மனம் உணர்ந்தது. திக்கென்றது அவளுக்கு. விரைந்து நடந்து அடுத்த முகரியில் சடாரென நின்று நேரெதிருக்குத் திரும்பினாள். மஞ்சள் உருவமொன்று மறைந்தது போலிருந்தது. அசப்பில் ஒரு பிக்குபோல் தோன்றியது, அவள் அடி வயிறு கலங்கியது.

பிக்குவா? பிரமையா? நிழலா?

நிழல் பின் தொடருமா?

அவள் விரைந்து வீடு சென்றாள்.

அவளைக் கண்ட பிறகுதான் மேகலை அழுகையை நிறுத்தியது.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு திண்ணையில் வந்து அமர்ந்தாள். நெஞ்சு இன்னும் பொத்.... தென்று துடித்துக் கொண்டிருப்பதுபோல் இருந்தது. செய்வதென்னவென்று தோன்றவில்லை.

வெகுநேரத்தின் பின் எழுந்து குழந்தைகளுக்குச் சாப்பாட்டை போட்டுக்கொடுத்து தானும் மீந்ததைச் சாப்பிட்டு முடித்தாள். இனி குழந்தைகளைத் தூங்க வைக்கலாம். அன்றைக்கு அறையினுள் பாய் விரிக்க அவளுக்கு மனதில்லாதிருந்தது. திண்ணையில் வந்தமர்ந்தாள். இன்னும் கொஞ்சம் பொறுத்து குழந்தைகளைத் தூங்க வைக்கலாம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம். அவளுக்கு அந்தப் பைம்பல் தேவையாய் இருந்தது. அவள் உள்ளரங்கம் நிசப்தத்தில் வெருட்சியடைந்தது. ஊர் அடங்கியிருப்பது மட்டுமில்லை, பக்கத்தில் எந்தநேரமும் காச்சு மூச்சென்று இருக்கிற மதிவீடு அன்றைக்கும் வெறித்திருந்தது. முல்லைத் தீவில் உறவினர் வீட்டுத் திருமணத்துக்குப் போனபோது சொல்லிவிட்டுத்தான் போயிருந்தார்கள். அவ்வாறான மனித அரவங்கள் அற்றிருப்பதே சிலவேளைகளில் நிசப்தமெனப்படுகிறது. சிலவேளை காற்றும் உறங்கும் பூரண அமைதியே நிசப்தமாயிருக்கும். அப்போது முதல்வகை நிசப்தமே உறைந்துகிடந்தது அங்கேயெனலாம். அதனால் பக்கத்து கிடங்குகளில் பள்ளங்களில் மண்டுவன் தவளைகள் எழுப்பிய காட்டுக்கத்தல் அங்கே விழுந்திருந்த நிசப்தத்தை அதிகரிக்கவே உதவின.

மனம் திக் திக்...கென்று அடிக்க நேரம் நகர்ந்துகொண்டிருந்தது.

தன்னை முழுவதுமாக ஏமாற்ற முடியாதிருந்தது அவளால். புஞ்சி பண்டாதான் தன்னைப் பின்தொடர்ந்தான் என்பதை அவள் தீர்க்கமாய் நம்பினாள். அவன்தான் உதயனைக் கொன்றவன். அவன் வடக்கிலிருக்கிற போதுதான் திரவியம் சொன்ன தவணையில் வீடு வராதிருக்கிறான். அதேவேளை அவள் குடியிருக்கும் நகரில் அன்று காலையில் குண்டுவெடிப்பு நிகழ்ந்து சூழ்நிலைமையைக் கஙேபரப்படுத்திருக்கிறது. இவைகளுள் தொடர்பில்லையென்று எப்படிச் சொல்ல?

வியர்க்கத் துவங்கிற்று அவளுக்கு.

நிலவொளி மங்கி வந்ததைக்கொண்டு கறுத்த மேகம் கவிந்துவிட்டதை உணர்ந்தாள்.

மழை வரலாம்போலத் தோன்ற வரக்கூடாதேயென்று அப்போது பிரார்த்தித்தாள்.

காற்று பலமாக குளிர் நிறைத்து வீசியதே பிடிக்காமலிருந்தது. அது கிளைகளை உலுப்பி.... சருகுகளை உருட்டி.... ஓலைகளை அசைத்து.... செய்த அட்டகாசம் என்ன!

மேகலை மடியிலே கிடந்து உறங்க ஆரம்பித்திருந்தது. அபயனும் தூங்கிவிழுந்துகொண்டிருந்தான். அதனால் எழுந்து போய் பாயை எடுத்துவந்து திண்ணையில் விரித்து குழந்தைகளைப் படுக்க வைத்தாள். பின் லாந்தரை எடுத்துப்போய் வெளிப் படலையைச் சாத்தி கொளுவு தடியைப் போட்டு விட்டு வந்தாள். லாந்தரைக் கொண்டுபோய் அறைமூலையில் வைத்து மினுக்கென்று தெரிகிற அளவுக்கு திரியைக் கீழிறக்கி வைத்தாள்.

பிள்ளைகளோடு வந்தமர்ந்தவளுக்கு படுக்கத் தோன்றவில்லை. அன்றைக்கு உட்கார்ந்திருக்கிற முடிவு அவளுக்கு.

உலகம் அன்றைக்கு நேரத்தோடு உறங்கத் துவங்கிவிட்டிருந்ததோ? இல்லையேல்.... அதுவும் அவள்போல் இருளுள், தனிமையுள் ஒழிந்துகொண்டு விடியலை நோக்கிய தவத்தில்....? அவசியமில்லை. ஏனெனில் அதற்கு புஞ்சிபண்டாவின் அச்சுறுத்தல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அழிக்கிற, ரத்தம் கக்க அடித்துச் சாகடிக்கிற யக்கோவாக - பேயாக - புஞ்சி உருவாவதாய் அவள் அரற்றலோடு கற்பிதம் செய்தாள்.

நேரம் துளி துளியாய் கால பிரவாகத்தில் கலந்தோடிக் கொண்டிருந்தது.

திடீரென வெளிப்படலையருகே இயல்பலாது எழுந்த சில அரவங்கள் செவியில் விழுந்தன.

அவள் தேகம் நடுங்கிற்று.

பார்க்காமல் விட்டுவிடமுடியாது. அச்சம் உயர்ந்து உயர்ந்து உச்சமடைந்து நெஞ்சையே வெடிக்கச் செய்துவிடும். மரக்கிளைகளை ஊடறுத்து வந்து மங்கிய தெருவிளக்கின் வெளிச்சக் கதிர்கள் தன்மீது விழுந்துவிடாத அவதானத்துடன், எழுந்து மெல்ல மெல்லவாய் வேலியோரம் அணுகினாள். சந்தடிகள் மெல்லிய பேச்சொலிகள் இன்னும் தெளிவாய் எழுந்துகொண்டிருந்தன. மிக்க அவதானத்தோடு வேலியிலுள்ள பொட்டினூடாக வெளியே பார்த்தாள்.

பார்வையில் முதலில் பட்டதே புஞ்சிபண்டாவின் மஞ்சளாடைதான். கூட இரண்டு மூன்று பேர். அவர்கள் கைகளில் நவீன துப்பாக்கிகள்.

அவள் இரத்தம் உறைய ஆரம்பித்தது.

புஞ்சியின் நோக்கத்தை அனுமானிக்க அவளால் முடிந்தது.

அந்த அச்சத்துள்ளும் நடுக்கத்துள்ளும் அவளுள் ஓர் ஆவேசம்தான் கிளர்ந்தது.

அவளின் நிழலைக்கூட அவனால் தீண்டிவிட முடியாது.

படலை இறுக்கமாகச் சாத்தப்பட்டு உள்ளே தடி போடப்பட்டிருந்தது. அது போதுமானதல்ல. ஆனால் எவர் வரவையும் அது தாமதிக்கச் செய்யும்.

எதிர் வீட்டு நாய் அப்போது குரைக்கவில்லை, அந்தளவு சமீபத்தில் ஆட்கள் நடமாட்டம் இருந்தும்கூட. ஏன்? அதுபற்றியெல்லாம் யோசிக்க இனி அவகாசமில்லை.

குறிவைக்கப்பட்டாயிற்று. அதுவும் ஆயுதங்கள் சகிதம். மழையிருட்டு.... குண்டு வெடித்து களேபரம்மிக்கதாய் படை இயக்கங்கள் உள்ள நாள்.... அது மனிதரில் சிதைவுகளை ஏற்படுத்தப்பொருத்தமான நாள்தான். தப்புகிற வாய்ப்பையும் அவையெல்லாம் வெகு சாத்தியமற்றதாக்கின. அதிசயங்கள் நடந்தால்மட்டுமே அவள் சிதைவடையாமல் தப்புதல் கூடும்.

அதிசயங்கள் நடக்கிற காலமல்ல அது.

அவள் முகத்தில் கண்ணீர் வழிந்தது. அது திரவியத்துக்குப் பெருந்தீங்கு நேர்ந்துவிட்டது என்று துணிந்ததில் விளைந்தது. அவள் மட்டும் தப்பி இனி வாழ்வில்லை. தப்பவும் இனி வழியில்லை. குழந்தைகளை சிவா பார்த்துக்கொள்வான். ஒருவேளை தாத்தா.... படித்தவராமே, அவரிடம் சேர்ப்பிப்பான். இல்லாவிட்டால் இரட்சண்ய சேனையில் சேர்க்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இரையாகிவிடமாட்டாள்.

அதற்கு ஒரே வழிதான் உண்டு.

அவள் அரவமின்றித் திரும்பி திண்ணைக்கு வந்தாள்.

பிள்ளைகள் இரண்டும் தூங்கிக்கொண்டிருந்தன. சிறிதுநேரம் இருளைத் துளைத்து அவர்களைப் பார்த்தபடி, நின்றாள்.

வெளியே.... யாரோ கையை படலை நீக்கலுக்கூடாக நுழைத்து உள்ளே மாட்டியிருந்த தடியைத் திருப்பி படலையைத் திறக்க முனைவது தெரிந்தது.

அறைக்குச் சென்று லாந்தரைச் சிறிது தூண்டி முகட்டை அண்ணாந்து பார்த்தாள். விட்டத்தில பெரிய காட்டுமரம் ஓடியிருந்தது. துணிக் கொடிக்கயிற்றை அவிழ்த்தெடுத்தாள். புட்டுவத்தை வைத்து ஏறிநின்று விட்டத்தில் இழைக் கயிற்றை இரண்டாய் மடித்து வீசிக் கட்டினாள். அதன் மறு தொங்கலில் உருவுதடமிட்டாள்.

கண்கள் நெருப்புத் துளிகளை உதிர்த்துக் கொண்டிருந்தன அப்போதும்.

நெஞ்சில் விழுந்து அவை சுட்டன.

அவளது வாழ்வு அழகானது.

அதைவிட்டுப் போக அவளாக நினைக்கமாட்டாள். ஆனால் சிதைக்க நினைத்து முதல் கட்ட வெற்றிகளை புஞ்சி அடைந்துவிட்டான். இப்போது அவள்மீதான வெற்றியே பாக்கி.

அவனை வென்றுவிட அவள் விட்டுவிடமாட்டாள்.

அவள் உருவுதடத்தை கழுத்தில் மாட்டி புட்டுவத்தை உதறினாள்.

படலையை, அரைந்த சப்தம் எழுந்துவிடாதவாறு மெதுமெதுவாகத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் புஞ்சி. நாய் ஏதும் குரைக்கவில்லை. வீட்டில் நாயில்லையெனச் சொல்லப்பட்டிருந்த தகவல் சரியானதுதான். ஆசுவாசம் பிறந்தது. அது நாய் குரைத்து தன்னை அடையாளம் காட்டிவிடக்கூடாது என்பதிலிருந்தல்ல, வீட்டுக்காரரை உஷார்ப்படுத்தி தப்பவைத்து விடக்கூடாது என்பதிலிருந்து பிறந்தது. திண்ணையில் ஏறி கூர்ந்து பார்க்க குழந்தைகள் தூங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. ஒரு குழந்தை தூக்கத்தில் உருண்டு புரண்டு ஏதோ பிதற்றியது.

சுவர்ணா எங்கே? அன்றைக்கும் ஏமாற்றிவிட்டாளா? முடியாது. தன் வருகைபற்றித் தெரிந்திருப்பது வெகு அசாத்தியம்.

புஞ்சி, வெளிச்சக் கீறு வெளிவந்து கொண்டிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்தான். பார்வை வெறுமை அளாவி மீண்டது. இதென்ன.... தொங்கும் நிழல்...? புரியாத கணங்களாய்ச் சில விலக... பொறி பட்டது போல் நிலைமை தெரிந்து பாய்ந்து உள்ளே சென்றான் புஞ்சி. லாந்தரைத் தூண்டினான். சுவர்ணாவின் உடல் தொங்கிக்கொண்டிருந்தது விட்டக் கயிற்றில். துடிப்பு.... அசைவு.... எதுவுமற்று அது அசலனத்தில் உறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடிப் பாவீ!' மனத்துள் கூவல்.

விழுந்திருந்த புட்டுவத்தை நிறுத்திவைத்து எம்பி ஏறி, உருவு தடத்தைத் தளர்த்தி உடலை தோளில் விழுத்திப் பொறுத்திக்கொண்டு கீழே இறக்கினான்.

கிடக்க வைத்து, மூக்கருகில் கைவைத்துப் பார்க்க, சுவாசம் நின்றிருந்தது தெரிந்தது. குனிந்து நெஞ்சுக் கூட்டில் காதைப் பொருத்தினான். இரத்தாசயம் அதிர்வின்றிக் கிடந்தது.

ஏமாற்றிவிட்டாள்.... அப்போதும் ஏமாற்றிவிட்டாள்.... வெறி மூண்டது புஞ்சியிடத்தில். பளார்.... பளார்.... என அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்தான். இங்குமங்குமாய் தொங்கிய நாக்குடன் தலை சரிந்தது. பயித்தியக்காரன்போல் நாக்கை உள்ளே தள்ளி மிருகம்போல் ஓசை எழுப்பினான். கையை எடுக்க நாக்கு பழையபடி தள்ளிக்கொண்டு வெளியே வந்தது. மீண்டும் ஓங்கி நெஞ்சில் குத்தினான். படபடவெனக் குத்தினான். உடல் கிடந்தபடி துள்ளியது. நெஞ்சுச் சட்டையில் கைவைத்து பறாரெனக் கிழித்தான். கச்சற்ற முலைகள் குத்திட்டு நின்று குலுங்கின. வெண்மையாய்.... தாதுகோபுரம்போல் அகன்று உயர்ந்து கூம்பி.... பதினாறாயே இருக்கும் தவசித்தியின் வடிவம்.

ஆனாலும் அது அவனது தோல்வியின் அடையாளமாய்....!

அவன் மனது தன் தோல்வியில் அடங்க மறுத்தது, அப்போதே வெல்லாவிட்டால் எப்போதும் இனி வெற்றியில்லை. அது முடிந்த முடிவான தோல்வியாவதை ஏற்க அவன் மனம் மறுத்தது. அவன் என்றும் தோல்வியில் அடங்குவதில்லை.

அவளை மூடிக் கவிந்தான்.

உடம்படா மெய்யில் கீழ்மேலாய் அசைந்து, வியர்த்து.... விறுவிறுத்து.... தமனிகள் வெடித்துவிடுவனபோல் விம்மி.... நெருப்புத் துளிகள் சிந்தின.

ஆசுவாச மூச்சுவிட்டு எழுந்தான்.

பைசாசத்தின்மூலம் தன் தோல்வியை அவன் தகர்த்துவிட்டான்.

தன்னில் கிடந்த வேஷத்தை ஒழுங்குபடுத்தினான்.

நெஞ்சை நெருடியது குதித்துவந்த ஒரு நினைப்பு.

அதைப் பழைய சரித்திரம்தான் சொல்லியிருந்தது.

அரசனின் மனைவியது பேரழகுமேல் அரசனின் தம்பிக்குக் காதல் பிறந்துவிடுகிறது. கூடல் இல்லையேல் வாழ்தல் ஆற்றேன் என்று மடலெழுதி புத்த பிக்கு ஒருவர் மூலம் அனுப்புகிறான். அரசி அந்தப் புரத்திலிருந்து அரண்மனை வரும்வழியில் குறுக்கே நடந்துபோகும் பிக்கு மடலைப் போட்டுவிட்டுப் போவது என்பது திட்டம். பிக்கு மடலோடு தயாராக நிற்க, அந்தப்புர வாசலில் அசைவு தெரிகிறது. பணிப் பெண்கள் வருவதும் காணக்கூடியதாய் இருக்கிறது. அரசிதான் வருகிறாளென்ற எண்ணத்தில் குறுக்காக நடந்து நிமிர்ந்து பாராமலே மடலை வீசுகிறார் பிக்கு. எதிர்பாராத விதமாக அப்போது வந்ததோ அரசன். மடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துப் படித்து சீறுகிறான். பிக்கு கைதாகிறார். கண்கண்ட குற்றத்துக்கு விசாரணை என்ன? உடனேயே தண்டனை விதிக்கப்படுகிறது: 'கொதிக்கும் என்ணெய்க் கொப்பிரைக்குள் தூக்கி எறியுங்கள்!' தண்டனை நிறைவேற்றப்படுகிறது. பின்னால்தான் தான் செய்த தவறை அரசன் உணர்ந்தது. தண்டனை நிறைவேற்றப்பட்டபோது பிக்கு சீவர ஆடையுடன் எண்ணெய்க் கொப்புரைக்குள் தூக்கியெறியப்பட்டதை அவனும்தான் பார்த்தான். சுட்டிக்காட்டக்கூட யாருக்கும் தெரியாமல் போய்விட்டது. அன்றிலிருந்து பன்னீராண்டுகள் நாட்டில் மழை பொய்க்கிறது. பஞ்சம் பசி நோய்.... குடிமக்கள் சொல்லொணாத் துயருறுகின்றனர். அரச குடியும் அழிந்து அரசும் அழிந்துபோகிறது.

அந்த மகாவரட்சிபோல....

சரித்திரம் எப்போதும் உண்மை சொல்வதில்லையென்பது குணாநந்தாவுக்குத் தெரியும். அவர் அரசியல் - சரித்திர மாணவர். வித்தியாலங்கார பல்கலைக் கழக எம். ஏ. பட்டதாரிகூட. அது அவ்வப்போது உண்மை போன்றவைகளையே சொல்லியிருக்கிறது.

பிக்கு அவசரமாக வெளியே வந்தார்.

திண்ணையில் அப்போது அபயன் இல்லையென்பதை அவர் கவனித்திருக்க முடியாது.

## 59

'நீ துணுக்காய் போ, இரண்டு நாளில் அங்கு வந்து உன்னைச் சந்திக்கிறேன்' எனச் சொல்லியனுப்பிய சிவா வரவேயில்லை. சிவா அப்படி இல்லை. மனம் குமைந்து கொண்டிருந்த வேளையில், வவுனியா பஸ் நிலையத்தில் குண்டு வெடித்த செய்தியை வானொலி சொல்லிற்று. சிவா வராததின் காரணத்தை சிரமங்கள் மிகுந்த காலத்தினூடாக அவனால் புரியமுடிந்தது. அதற்காக மேலும் தாமதிக்கிற எண்ணம் அவனுக்கில்லை. குமாரசாமியின் மூலமாக அயல்வீட்டு இளைஞன் ஒரவனை மோட்டார்ச் சைக்கிளில் கொண்டுபோய்விட ஏற்பாடு செய்வித்துவிட்டான்.

அன்று அதிகாலையில் புறப்பட்டு பதினொரு மணியளவில் வவுனியா வந்துசேர்ந்தான் திரவியம். மோட்டார்ச் சைக்கிள் ஓடிவந்த இளைஞனை அனுப்பிவிட்டு அவசர அவசரமாக ஒழுங்கைகளினூடு நடந்து வீடு வந்தான். வாசலில் அக்கம்பக்கத்து ஜனங்கள் கூடி பேசிக்கொண்டு நின்றிருந்தனர். அவனுக்கு நெஞ்சு பகீரென்றது. ஓடவேண்டும் போலிருந்தும் முடியாமலிருக்க விரைந்து நடந்துவந்தான். வாசலில் நின்றவர்கள் ஒதுங்கி வழிவிட்டு அவனைச் சோகத்தோடு பார்த்தபடி நின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி, மதியின் தாயார், தம்பி, எதிர்வீட்டு மனிஷியென்று ஐந்தாறுபேர் திண்ணையில் பேச்சற்றவர்களாய். மதி மேகலையை அணைத்திருந்தாள்.

அபயன் எங்கே? சுவர்ணா எங்கே? யாருக்கு, என்ன நடந்தது?

அவனைக் கண்டதும் கதறிக்கொண்டு எழுந்தாள் மதி. 'அண்ணே... எல்லாம் நாசமாய்ப் போச்சு, அண்ணே! அக்கா... அக்கா...!' என்று அரற்றி கையை நீட்டி அறையைச் சுட்டினாள்.

'ஆர் கண் வைச்சினமோ உன்ர குடும்பத்தில? அப்பிடி அவளை அழிச்சிட்டுப் போயிருக்கிறாங்களே, திரவியம்' என்று அலறினாள் மதியின் தாயார்.

அவன் நெஞ்சுக் கூட்டிலிருந்து இதயம் துள்ளி வெளியே விழுந்தது.

வழக்கத்தைவிட இருண்டதுபோல் கிடந்த அறைக்குள் பாய்ந்து நுழைந்தான்.

கொடித் துணிகள் ஒரு பக்கத்தில் சிதறிக் கிடந்தன.

ஒரு பக்கத்தில் சேலையால் நீளப் போர்த்தப்பட்டிருந்தது ஒரு உடல்.

யாரென்று அடையாளம் சொல்லவேண்டியிருக்கவில்லை. ஆனாலும் சேலையைப் படாரென இழுத்து விலக்கினான்.

முலைகளும் நிதம்பமும் தொடைகளும் நிர்வாணமாய்.... சுவாச சலனமின்றி.... மரணத்தின் காரணத்தைச் சொல்லிக் கொண்டு. சுவர்ணா!

சத்தம்கூட வெளியே வரவில்லை.

அப்படியே அவள்மேலே செத்துவிழலாம்போல ஓர் ஆராமை நெட்டிக் கிளம்பியது.

என்ன நடந்தது என்பதற்கு விளக்கம் வேண்டியிருக்கவில்லை. யார் என்பது... பெரிதான அவசியமாய்த் தெரியவில்லை.

யாராவது ஓடிவந்து தன்னை அணைக்கவேண்டும்போல, ஆறுதல் சொல்லவேண்டும்போல, ஈமக் கிரியைகளை முன்னின்று நடத்தி முடித்துக் கொடுக்கவேண்டும்போல.... இருந்தது அவனுக்கு.

மதியின் தாயார் வந்து அவனை வெளியே வலிந்து அழைத்து வந்தாள். திண்ணையில் அமரவைத்தாள்.

சிறிதுநேரத்தில் பாட்டியோடு விட்டிருந்த அபயனை மதி போய் அழைத்துவந்தாள்.

பிள்ளை, பார்க்கக்கூடிய நிலையில் இல்லை. முகம் வெளிறிப் போய் நடுங்கிக் கொண்டிருந்தான்.

ஏங்கிப்போனவன்போல் பார்வை நிலைகுத்தியிருந்தான்.

பத்து மணிக்கெல்லாம் மதி வீட்டார் முல்லைத் தீவிலிருந்து வீடு வந்துவிட்டிருந்தார்கள். உடையை மாற்றிக் கொண்டு இரண்டு நாள் பார்க்காத தவனத்தில் மேகலையைத் தூக்கத்தான் அவசரமாக வந்தாள் மதி. குழந்தை அப்போதும் தூங்கிக்கொண்டிருந்தது திண்ணையில். 'அக்கா!' என்றபடி திறந்துகிடந்த அறைக்குள் நுழைந்தாள். அங்கே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வைத்த சத்தத்தில்தான் அக்கம்பக்கம் கூடியது. அந்தக் களேபரத்தில் அபயனைக் காணவில்லையென்றது பிறகுதான் தெரியவந்தது. பின்னர் தேடி குசினிக்குப் பின்னால் ஏக்கத்தில் நிலைகுத்தியவனாய் குந்தியிருந்தவனைக் கூட்டி வந்தனர்.

தாயாருக்கு நேர்ந்த கொடுமையை அபயன் பார்த்துவிட்டான் என்பதும் அதன் விளைவே அந்த திக் பிரமையென்பதும் அவர்களுக்குத் தெரிந்தன. மதியைக் கண்ட பிறகுதான் அவன் விம்மவாவது செய்தது. மேற்கொண்டு அவனைப் பாட்டியிடம் கொடுத்து தங்கள் வீட்டிலே கொண்டுபோய் வைத்திருக்கச் சொல்லிவிட்டாள் மதி.

திரவியம் வந்த பிறகுதான் திரும்ப அபயனை அங்கே அழைத்துவந்தது.

தகப்பனைக் கண்டதும் ஓரளவு தெளிந்தவனாய் அம்மா என்று ஏதோ சொல்லத் தொடங்கி முடியாமல் அறையைக் காட்டி அழுதான். பின் குழறிய மொழியில், "அம்மாவை.... பிக்கு.... அப்பா.... அடிச்சார்.... அப்பா...." என்றான்.

பிக்குவா? ஒரு பிக்குவா இத்தனைக்கும் காரணம்? யார் அந்தப் பிக்கு? அவள் அவ்வப்போது சொல்லிக் கொண்டிருந்தாளே, அந்த புஞ்சிபண்டாவா?

தன் அச்சங்கள்பற்றி சுவர்ணா அவனிடம் எப்போதும் கூறியதில்லை. புஞ்சிபண்டாவின் திட்டமிடலிலேயே உதயகுமாரின் கொலை எண்பத்துமூன்றில் நடந்தது என்று அவள் சொன்ன போதும் அவன் பேசாமல் கேட்டுக்கொண்டிருக்கவே செய்திருக்கிறான். அது ஒரு இனக்கொலை என்பதுதான் அவனது முடிவாயிருந்தது. இப்போது அபயன் சொல்வதைப் பார்த்தால்....

இரண்டு மணிக்கெல்லாம் சிவா வந்து சேர்ந்தான். நின்றபடியே அறையைப் பார்த்து கண்ணீராய்க் கொட்டினான். திரவியத்துக்கு ஆறுதல் சொல்லவும் முடியாதவன் ஆனான். வேறு பேர்கள்தான் இறுதிக் காரியங்களுக்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

எவர் மரணமும் அங்கே மதிப்பிழந்திருந்தது அப்போது. உற்றார் உறவினர்தான் கொஞ்சம் வருந்தினார்கள். மற்றவர்களுக்கு அது ஆயிரத்திலொன்றுதான்.

பொலிஸில் முறைப்பாடு செய்யவேண்டுமென்று சிலர் சொன்னார்கள். வேண்டாமென்று திரவியம் மறுத்தான். சிலநேரங்களில் அவனது சொந்த நலனுக்கே அது தேவைப்படலாமென்று வற்புறுத்தி அவனைச் சம்மதிக்க வைத்தனர். அபயனின் வார்த்தைகள்மூலமாய் தெரிய வந்த விஷயங்களை பொலிஸில் சொல்லக்கூடாதென்று கண்டிப்பாய்த் தடுத்துவிட்டான் திரவியம். அது காரணமாய் சிவாவுக்கும் அவனுக்கும் சிறிது வாக்குவாதம்கூட நடந்தது. கடைசியில் சிவாதான் இறங்கிவந்தது. அவனே போய் முறைப்பாடு கொடுத்தான்.

விசாரணை பெரிதாய் இருக்கவில்லை. பிரேத பரிசோதனைகூட நடக்கவில்லை. சவ அடக்கத்துக்கு பொலிஸ் அனுமதியளித்துவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை ஆறு மணியளவில் சுவர்ணாவின் உடல் மயானம் எடுத்துச் செல்லப்பட்டது. திரவியம் கொள்ளிவைத்தான்.

அந்த மழைக் காலத்தில் சொல்லிவைத்ததுபோல் வானம் இருண்டிருந்தும் மழைபெய்யாதிருந்துவிட்டது.

சிவா அன்றிரவு அங்கேயே தங்கினான். மறுநாள் காலை வெள்ளென விழித்தபோது திரவியம் ஏற்கனவே விழித்திருப்பது தெரிந்தது. திண்ணைக் கப்போடு சாய்ந்து வெளிநோக்கியிருந்தான். சிவா எழுந்து வந்து பக்கத்தில் அமர்ந்தான். ஆதரவாய்த் தோளில் கைபோட்டான்.

திரும்பிப் பார்த்துவிட்டு, "எல்லாம் கனவாய்ப் போயிட்டுதே, சிவா" என்றான். "நீ சொன்னதைக் கேட்டு நான் துணுக்காய்க்குப் போயிருக்கக்கூடாது."

துயரத்தின் கொடுமுடி அடைந்தவர்கள், இப்படிச் செய்யாதிருந்திருந்தால் இந்தமாதிரி நடவாதிருந்திருக்காதேயென்று அவலத்தில் வெடித்துச் சீறுவது இயல்பு. திரவியத்தின் வெடிப்பை சிவாவால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனாலும் எங்கோ ஒரு இடத்தில் சம்மட்டி அடிபோல் ஒரு அதிர்வு. இருந்தாலும் அதை, துக்க பிரலாபமாய்த்தான் தான் எடுக்கவேண்டுமென்று எண்ணி பேசாமலிருந்தான்.

ஒரு வாரமாயிற்று.

ஒருநாள் படுக்கிற நேரத்தில் சிவா சொன்னான்: "சாமான் லொறிகளைக் கொண்டு போய்ச் சேர்க்கிற வேலையை விட்டிட்டன், திரவி. கணக்கை முடிச்சிட்டு அவங்களிட்ட சொல்லியிட்டும் வந்திட்டன்."

திரவியம் திரும்பி அதிசயத்தோடு பார்த்துக் கேட்டான்: "ஏன்?"

"விருப்பமில்லை. அதால விட்டிட்டன்."

"நல்லது. இனி என்ன செய்யப் போறாய்?"

"உனக்கு உதவியாய் இருக்கப் போறன்."

திரவியம் மெல்லச் சிரித்தான். "அது சாப்பாடு போடாது."

"அதுக்கு... பழைய வேலையைத் தொடர்ந்து செய்ய இருக்கிறன்..."

எனக்கே என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. இந்த நேரத்தில போய்... எனக்கு எதுக்கு உதவி...?"

"இப்ப அனில் அய்யாவும் இல்லை. நீ தனிச்சுப் போனாய். நானாவது உன்னோட கூட இருக்கவேணும். நீ ஏதாவது செய்யத் துவங்கிறவரையாவது நான் கூட இருப்பன்."

சிறிதுநேரத்தின் பின் சிவாவே சொன்னான்: "அனில் அய்யாவுக்கு கடிதம் போடு."

"என்னெண்டு...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ எதையும் கேக்கவேண்டியதில்லை. அவரே உனக்குத் தேவையானதைப் புரிஞ்சுகொண்டு ஏதாவது செய்வார். ஆனால்... இஞ்ச நடந்ததைமட்டும் எழுதாமல் விட்டுடாத."

"அதைமட்டும் எழுத என்னால ஏலாது."

"எழுத வேணும். அதையும் நீதான் எழுத வேணும். நான் எழுதுவன். ஆனால் பாஷை...?"

"சரி, பாக்கலாம்."

"பாக்கலாமில்லை, கண்டிப்பாய் எழுதுறாய். வரச்சொல்லி வந்தால் கொழும்புக்குப் போயிடு."

"கொழும்புக்கா? பிள்ளையள்...?"

"பிள்ளையளை துணுக்காயில மாமா வீட்டில விடலாம். அவை நல்லாய்ப் பாத்துக்கொள்ளுவினம். அபயனை பள்ளியில சேர்க்கிறதும் சுகம். என்ன...?"

"ம்" என்று அனுங்கினான் திரவியம்.

## 60

சங்கரானந்தரின் விழிகள் கட்கோறைகளுள் நிலைத்திருந்தன. மேகம் துமிபோடத் துவங்கியிருந்தது. மின்னொளியில் அது தங்க இழைக் கீறு செய்தது. அவர் பார்வை அதிலே நிலைத்திருந்ததாய்த் தென்படவில்லை. அது அகவயமாகியிருந்தது. அங்கே தற்சுருவ தரிசனம். அப்போதுதான் தசைத் திசுக்கள் யாவும் கற்றிடம் பெறுதல் பூர்த்தியாகியிருந்தது; கல்லாகவே ஆகியிருந்தது.

மிகக் கொடுமையென்று பல நிகழ்வுகளை அவர் அறிந்திருக்கிறார். பிரேமா மன்னம்பெரியின் மரணம் அவற்றிலொன்று. எல்லாவற்றையும்விட, ஜேவிபி என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பெண்களுடன் அவ்வாறு கைது செய்யப்பட்ட பிக்கு தர்மரத்னவை துன்புறுத்தலில் பாலுறவு மேற்கொள்ளவைத்த கொடுமை உச்சமென்பது அவரது எண்ணமாயிருந்தது. அவற்றையெல்லாம் தூக்கி விழுங்கிவிட்டது அவர் அன்று கேள்விப்பட்ட செய்தி.

உயிரற்ற ஒரு சடலத்தில்...

ஒரு காமாந்தகாரப் பிக்குவின்...

எவருக்கும் அந்தமாதிரி நடந்திருக்க முடிந்திராதே!

அவரின் நெஞ்சக் கூட்டுக்குள் தீ எழுந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எரிந்தார்.

அந்த மௌனத்துள் அனைவரும் ஆழ்ந்துகொண்டிருந்தனர்.

மாடியிலிருந்து பார்க்க வீதியும், வீதிக் கானில் அடித்தோடும் வெள்ளமும் தெரிந்தன தெளிவாய். தெரு மின் விளக்குகளின் விரிவில் ஒரு மென்நீலப் புகை கவிந்திருந்தது. வாகனங்கள் சில ஊர்வது தெரிந்தது.

நல்ல மழைதான் பெய்திருந்தது யாரின் கவனத்தையும் கவராமல்.

சிவாவின் அறையில் மூவரும் தங்கள் தங்கள் சிந்தனையில் ஆழ்ந்தும் மேலெழுந்தும் மறுபடி ஆழ்ந்துமாய்....

மறுபடி தன் கிராமங்களை நோக்கிய புறப்பாட்டுக்கு முன்னால், திரவியத்தைச் சந்திக்கவேண்டுமென நிச்சயித்திருந்தார் சங்கரானந்தர். வந்திறங்கியபோதே வவுனியாவில் நல்ல மழை. மறுநாள் விட்டு மறுநாள்தான் திரவியம் வீடு போக முடிந்திருந்தது. வீடு வெறுமையாய்.... இல்லை, ஒரு சோகம் பூண்டிருந்ததாயே தென்பட்டது. அது தன்னையுமே கவ்வுவதுபோன்ற பிரமை. பக்கத்து வீட்டிலே விசாரித்தபோதுதான் தெரிந்தது சுவர்ணாவின் மரணம். அதுவும் தற்கொலையென்று அறிந்தபோது திகைத்துப்போனார். அவரால் நம்ப முடியவில்லை. அவளது முகத்தில் அன்றிருந்த இல்லற வாழ்வின் நிறைவுப் பூரிப்பு அவர் மனத்தில் பசுமையாக இருந்தது. அவள் அவனுக்கு யார் என்று கேட்டபோது அவனது மனைவி என்று அவள் சொன்னபோதிருந்த பெருமிதத்தை அப்போது அவர் நினைத்துப் பார்த்தார். குழந்தைகள் எங்கேயென்று கேட்ட இடத்தில் அவர்கள் துணுக்காயில் என்று சொல்லப்பட்டது. திரவியம் விரைவில் கொழும்பு செல்ல விருப்பதாகவும், அப்போது சிவாவின் அறைக்குப் போனால் சந்திக்கலாமென்றும் மதியின் பேச்சில் தெரியவந்தது. அவளிடமே சிவாவின் அறைக்கு வழி கேட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்.

சிவாவுக்கு அப்போது சங்கரானந்தரைக்கூட பிடிக்காமல் இருந்தது. திரவியத்துக்காகப் பொறுத்திருந்தான். ஆனாலும் ஆறுதலான சில வார்த்தைகளுக்குப் பிறகு, தன்னால் இன்னுமேதான் அவள் தற்கொலை செய்துகொண்டதை நம்பமுடியாதிருக்கிறதென்றும், அத்தனைக்கு வாழ்வு அவளுக்கு சந்தோஷமாயும் நிறைவாயும் பூரணத்துவம் பெற்றதாயுமிருந்தது என்றும் பிக்கு சொன்ன போது சிவா உடைந்து போனான். முதலில் கண்ணீர் விட்டான். பிறகு விசும்பினான். மேலே வார்த்தைகள் வெடித்துப் பிறந்தன: “அது தற்கொலைதான். ஆனால் கொலைவகையும்படும். அதைவிடக் கொடுமை, அவள்மீது புரியப்பட்ட கீழ்த்தரம். பாதகத்திலிருந்து தப்பிக்க தற்கொலை செய்துகொண்டவளை கீழே இறக்கி.... இன்னும் உடற்சூடு தணியாதிருந்த அந்த உடலோடு போகம் செய்தது.... அதுவும் ஒரு பிக்குவினால் இப்படிச் செய்யப்பட்டது மகாக் கேவலம்....!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார்?"

"குணாநந்த."

அந்த நிமிஷத்திலிருந்துதான் அவர் கல்லாகத் தொடங்கினது.

வெகுநேரத்தின் பின் சுயப்பிரக்ஞையடைந்து, "இதெல்லாம் பொலிஸில முறைப்பாடு பண்ணினீங்களா? என்ன நடவடிக்கை எடுத்தாங்க?" என்றார் பிக்கு.

திரவியம் தலையசைத்தான்.

"விளங்கேல்லையே!" என்று புருவம் வளைத்தார்.

"பொலிஸில சொல்லேல்லை."

"ஏன்?"

"அபயனுக்கு குணாநந்தவைத் தெரியாது. இந்த விஷயத்தில குணாநந்த சம்பந்தப்பட்டிருக்கிறது எண்டது எங்கட ஊகம்மட்டும்தானே!"

"சொல்லப்போனா.... குணாநந்தா ஒரு அடையாளம் தான் - நச்சு விதைக்கான அடையாளம். அதை வெளிப்படுத்துறதுதான் எங்க நோக்கம்."

"ஆனாலும் அந்தப் பிள்ளைக்கு பொலிஸ் விசாரணை பெரிய இம்சையாயிருந்திருக்கும். அதுவும் இந்தமாதிரி அவன் கதிகலங்கிப் போயிருந்த நிலைமையில.... அதோட.... பொலிஸ் இந்த விஷயத்தில் நீதியாய் நடந்திடாது எண்டும் தெரிஞ்சுது.... அதுதான் வேண்டாமெண்டு...."

ஒரு தகப்பனாயிருந்து அவன் சொல்கிறபோது மறுப்பாய் எவர், என்ன சொல்ல ஏலும்? ஆனாலும் அதுதான் உண்மை. பொய்யைச் சொல்வதுபோலவே உண்மையை அடக்கிவைப்பதும். அச்செயலுக்கு மௌனம் சாதிக்கிறதும் ஒருவகையில் அதேயளவு குற்றமானது.

அதை அவர் சொன்னார்.

அவன் பேசவில்லை.

சிவா அவர்மீது மீளத் திரும்பிய கௌரவத்தோடு அவரைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"இந்த உண்மை பரவலாகவே வெளிவந்திருக்க வேணும், தம்பி. சத்தியாக்கிரகம் என்பதை நீ எந்தமாதிரிப் புரிந்திருக்கிறாய்? சத்தியத்தைப் பேசுவது அதன் முதல் படி.. மறந்துவிடாதே. நடக்கிற உள்நாட்டு யுத்தத்தில் நிகழ்வுகள் சரித்திரத்துக்கானவை. இவற்றின் மூலமாகவே தள்ளுவன தள்ளி கொள்ளுவன கொண்டு நாளைய சரித்திரம் ஸ்தாபிதமாகிறது. சரித்திரங்கள் ஸ்தாபிக்கவும் படுபவை. அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிக்கவே நீ... நான்... எல்லாரும் பாடுபட்டுக்கொண்டு இருக்கிறோம். வேண்டாத புனிதங்களை உடைக்க நான் பாடுபடுகிறேன். குணாநந்த வேண்டாத ஒரு சக்தி."

அவருக்குள் ஒரு புதிய ஒளிஅலை அடித்தது. வளவை கங்கைக் கரைப் பிக்குவே நேரில் நின்று சொல்வதுபோன்ற தீவிரத்துடன் அது தெளிவாய் இருந்தது. 'சிஷ்யா, சத்தியாக்கிரகத்திலும் ஒரு தற்கொடை இருக்கிறது. புறாவுக்காக தன்தசை அரிந்து கொடுத்த சிபி மன்னனின் கொடை போன்றது அது. தன்னைச் சிதறடித்து விடுவதல்ல, தன்னையே அரிந்து அரிந்து... தியாகவேள்வியில் ஆகுதியாகும் கொடையாளியாதல் மனித பாக்கியம்.'

தன் தேசத்து அரசியலின் தீவிரமும், வன்முறையும் அவர் தெரிந்தவர். தன்னிலைப்பாட்டில் தொடரப்போனால் அதன் விளைவு எப்படியிருக்குமென்பது அவருக்குத் தெரியாததல்ல. பண்டார நாயக்காவுக்கு நடந்தது, குமாரணதுங்கவுக்கு நேர்ந்தது அதுதான்.

எனினும் சத்தியத்தை ஆக்ரஹிக்கிற தீர்மானத்தில் அவர் இளகுவதாயில்லை. முடிந்தால்... இன்னும் இறுகுவார்.

மேலே அதிகநேரம் அவர் தங்கவில்லை.

சிவாவும் திரவியும் பேச எதுவும் இருக்கவில்லை.

இருவரும் படுத்துக் கொண்டனர்.

திரவியத்தின் மனத்தில் ஒரு முதிய பவுத்தரின் பவுத்திரத்தோடு சங்கரானந்தர் காட்சியெடுத்தார். 'நிகழ்வுகள் சரித்திரத்துக்கானவை. இவற்றின் மூலமாகவே தள்ளுவன தள்ளி, கொள்ளுவன கொண்டு நாளைய சரித்திரம் ஸ்தாபிதமாகிறது' என்ற சொற்கள் மந்திரங்களாய் உதிர்ந்துகொண்டிருந்தன.

அவரது உள்ளொளியின் வெளிப்படையான விளக்கம் அவனுக்குக் கிடைக்கவில்லைத்தான். ஆனால் உள் அதை உணர்ந்தது; மகா ஞானத்தின் வெளிப்பாடாய் வணங்கியது.

விட்டிருந்த மழை மறுபடி அடைத்தது.

மின்னல் தூர தூரத்தில் வெட்டிற்று.

முழக்கத்தில் மாதிரம் குலுங்கிற்று.

பஞ்சபூதங்களும் கொதித்து, பொங்கி, திமிறியெழுந்து நின்றனவோ?

வரும் காலத்தின் புதிய தரிசனத்துக்காய் பூமி கழுவப்படுவதாக நினைக்க... அவனுள் வர்ஷித்தது ஆனந்தம்.

● ○ ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


UNIVERSITY OF PERADENIYA
2004-4-27
LIBRARY.

561871

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF
2004-4-27
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org